# தாய்வீடு

224
ISSN 2369-3657

THAIVEEDU | NOVEMBER | 2025

தாய்வீடு | நவம்பர் | 2025

## ஆசிரியர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளின் நியாயம்
- அகமட் பிஸ்தாமி

## தமிழருவி த. சண்முகசுந்தரம்
- கதிர் துரைசிங்கம்

## ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா: இலங்கை மகாவம்சத்துடனான தொடர்பு?
- என். சரவணன்



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

இலங்கையின் புதிய போர்!

போதைப்பொருள் என்ற பெருங்கேட்டுக்கு எதிராக இலங்கை அரசு அதிரடியாக எடுத்துவரும் நடவடிக்கைகள் நாட்டு மக்களின் கவனத்தை மட்டுமல்லாது, உலகின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன. இந்த ஆண்டில் மட்டும் 190,000 பேருக்குமேல் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என இலங்கைக் காவற்றுறையினர் தெரிவித்துள்ளனர். இதே காலகட்டத்தில் 2,500 கிலோகிராமுக்கு மேற்பட்ட கிறிஸ்ரல் மெத் எனும் போதைப்பொருளும் 1,400 கிலோகிராமுக்கு மேற்பட்ட ஹெரோயின் போதைப்பொருளும், 14,000 கிலோகிராமுக்கு மேற்பட்ட, கஞ்சா எனப் பரவலாக அறியப்படும் கனபிஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் காவற்றுறையினர் தெரிவித்துள்ளனர். ஏறத்தாழ 22 மில்லியன் மக்கள் மட்டுமே வாழும் ஒரு சிறுதீவில் இவ்வளவு பெருந்தொகையான போதைப் பொருள் குறுகிய காலத்தில் கைப்பற்றப்பட்டிருப்பதென்பது அதிர்ச்சியளிப்பது. அதேவேளை, கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களைவிட, கைப்பற்றப்படாமல் இருக்கும் போதைப்பொருட்கள் பன்மடங்காக இருக்கலாம் என்பதை நோக்கும்போது, இலங்கை முகங்கொடுத்துள்ள இந்தச் சிக்கலின் தீவிரம் தெளிவாகும். ஆகவே, அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்களிடையே வலுவான ஆதரவு இருப்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

வரலாற்றின் அடிப்படையில் இலங்கையில் போதைப்பொருட் கலாச்சாரம் இருந்ததில்லை. கனபிஸ், ஓபியம் போன்ற இயற்கை மென்போதைப்பொருட்கள் மருத்துவத்தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுவந்த பண்பாடே இருந்துவந்துள்ளது. எழுபதுகளில் உல்லாசப் பயணிகளால் ஹெரோயின் போன்ற வன்போதைப்பொருட்கள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அது கொழும்பு போன்ற நகரங்களில் வாழ்ந்த, அவற்றை விலைகொடுத்து வாங்கிப் பயன்படுத்தக்கூடிய, மேல்தட்டுவர்க்க இளைஞர்கள் மத்தியிலான சிக்கலாகவே இருந்தது. போர் தொடங்கிப் படிப்படியாக உக்கிரம்பெற, நாட்டில் - குறிப்பாகத் தெற்கில் - ஏற்பட்ட, சட்டம் - ஒழுங்கு வெற்றிடத்திலேயே இந்தப் பிரச்சினை பரவலடைய ஆரம்பித்தது. அதைத்தொடர்ந்து, தமிழர் பிரதேசங்களில் அரசும் அதன் முகவர்களும் வலிந்து போதைப்பொருட்களைப் பரப்பி, அதன் பயன்பாட்டைத் தூண்டிய கொடுஞ்செயலும் முடுக்கிவிடப்பட்டது. போர் முடிவுக்கு வந்தபின், தொடரும் தமிழின அழிப்பின் அடுத்த கட்ட நடவடிக்கையாக வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும் காவற்றுறையினரும் தமிழ் இளையோரைப் போதைப்பொருட்களுக்கு அடிமையாக்கும் முயற்சிகளில் வெளிப்படையாகவே ஈடுபட்டனர். தமிழரை அழிக்கவென முன்னைய அரசுகள் கையிலெடுத்த ஆயுதம், தற்போது முழுத்தீவையுமே அழித்துவிடும் ஓர்மத்துடன் கூர்மையடைந்து நிற்கிறது. இதற்கெதிராகத் தற்போதைய அரசு தொடுத்துள்ள போர் வரவேற்கவேண்டியதே.

இதேவேளை, இந்தப் போதைப்பொருளுக்கு எதிரான போர் எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது என்பதை உன்னிப்பாக அவதானித்து, அது தடம்புரண்டு போகாதிருப்பதை உறுதிசெய்வது முக்கியமானது.

'போதைப்பொருட்கள் மீதான போர்' என்ற சொற்றொடரின் பயன்பாட்டை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன். 1971-இல், போதைப்பொருட் பயன்பாடே அமெரிக்காவின் முதன்மையான பொது எதிரி என அறிவித்து, அவர் பிரகடனப்படுத்திய போர், பின்னர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த மக்களுக்கும் எதிராக மடைமாற்றிவிடப்பட்டது. 1960-களின் பிற்பகுதியில் அமெரிக்காவில் இனப்பாகுபாடு, சட்ட அடிப்படையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபின், கறுப்பின மக்களைத் தொடர்ந்தும் குறிவைத்துத் தாக்கி, அவர்களைப் பெரும் எண்ணிக்கையில் கடுழியச் சிறைகளில் அடைத்து, அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்ட காலத்தைப்போலவே சிறைகளில் அவர்களின் உழைப்பைச் சுரண்டியது அமெரிக்காவின் இந்தப்போர்.

இந்தப் பின்னணியில், இலங்கையின் போதைப்பொருளுக்கு எதிரான போரில் இலங்கை இராணுவம் முன்னணியில் பயன்படுத்தப்படுவது கரிசனத்தைத் தோற்றுவிப்பது.

போர்க்காலத்தில் இலங்கை இராணுவத்தின் சித்திரவதை முகாமாக விளங்கிய பொலநறுவையின் கந்தகாடு முகாம் இப்போது போதைப்பொருள் புனர்வாழ்வு மையமாகப் புதுப்பிறவி எடுத்துள்ளது. ஆனால் இது பெயரளவில் மட்டுமே புதுப்பிறப்பு என்றும், அங்கு மறுவாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது முன்னர்போலவே சித்திரவதைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாகவும் ஊடக அறிக்கைகள் வெளியாகியுள்ளன. அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அங்கிருந்து 600-க்கும் மேற்பட்டவர்கள் தப்பியோடியமையும் இவ்வாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்தது.

போதைப்பொருளுக்கு எதிரான இந்தப்போர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையிலும் நடப்பதை அரசு உறுதிசெய்யவேண்டும். அதுவே இந்தப் போரின் உண்மையான வெற்றியைத் தக்கவைக்கக்கூடியதாக்கி, நாட்டின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைத் தோற்றுவிக்கும். இல்லாதுபோனால், இந்தப் போரும் நாடும் தோற்பதைத் தடுக்கமுடியாது.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


இலங்கையின் புதிய போர்!

காற்றாலைகளோடு கம்புசுற்றும் கனவான்கள் 5
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஆபிரிக்காவில் எழுந்துவரும் எதியோப்பியா 10
- சிவா முருகுப்பிள்ளை

சமாதானம்...
ட்ரம்பினால் எழுதப்பட்ட பாலஸ்தீன முடிவுரை 15
- ரதன்

இந்திய உள்துறை அமைச்சக அறிக்கையும்
இலங்கைத் தமிழ் அகதிகளின் எதிர்காலமும் 28
- நெல்லை ஜெயசிங்

விசைப்பலகை விலங்குகளும்
எண்மக் கட்டாரிகளும் 30
- ராணி விக்கிரமதுங்க
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

கத்தியின்றிப் புற்றுநோய்க் கட்டிகளை
அகற்றும் சிகிச்சை முறை 34
- சுப்ரமணியம் ஜெயசீலன்

அந்த மனிதர் 39
- பஞ்சகல்யாணி

ஆசிரியர்கள் மீது முன்வைக்கப்படும்
குற்றச்சாட்டுகளின் நியாயம் 40
- அகமட் பிஸ்தாமி

கல்வி உளவியலின் முக்கியத்துவம் 42
- ச. லக்ஹரன்

கனடாவின் கல்வி அமைப்பு வரலாறும் வளர்ச்சியும் 45
- த. சிவபாலு

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே 50
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

பெண் கல்வியே தலைமுறையை மாற்றும் 57
- தேவசகாயம் சந்தியாகு

மின்சாரப் பாவனையும்
அதிக சேமிப்புக்கான தெரிவுகளும் 60
- வேலா சுப்ரமணியம்

சேமிப்பதா அல்லது முதலீடு செய்வதா? 62
- செந்தூரன் புனிதவேல்

எங்கள் வானத்தில் இரண்டு வால்வெள்ளிகள் 64
- குரு அரவிந்தன்

'அமுத மலராக' வெளிவரும்
'கலைமுகம்' காலாண்டு இதழ்! 67

சர்வதேச மாணவர் நாள்
மாணவர் சக்தி வலுவானது 68
- சி. நற்குணலிங்கம்

சுய மதிப்பீடு 70
- பவானி சற்குணசெல்வம்

உறங்க மறுக்கும் உண்மைகள்
சுசிமன் நிர்மலவாசனின் 'கெத்சமனி' 72
- ஏ.பி.எம். இத்ரீஸ்

படிம அரங்கு:
ஆற்றுகை, நிகழ்த்துமுறை, உத்தி, வடிவம், பயன்பாட்டுத் தளங்கள்
அறிமுகமும் அனுபவப் பகிர்வும் 74
- ரூபன் சிவராஜா

கறுப்பும் வெள்ளையும் சாம்பல் நிறமும் 79
- ஓவியர் ஜீவா

இயல் விருது விழா 2024 82

சுசீலாவதி வில்சனுக்கு ஆத்மார்த்தமான வணக்கம் 86

வேலுப்பிள்ளை கதிரவேலு என்ற பேராளுமை 88
- மா. கணபதிப்பிள்ளை

கல்வியியலாளரான அரசியல்வாதி
ஹன்டி பேரின்பநாயகம் 92
- வே. விவேகானந்தன்

ஙுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி – 5 98
பெண்ணுரிமையின் குரல்
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸும்
கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையமும் 102
- இக்பால் அலி

லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை:
ஹங்கேரியின் உரைநடைச் சிற்பிக்கு நோபல் பரிசு 107
- அருள்கார்க்கி

சிறார் இலக்கிய அழகியலும் அரசியலும்
விஷ்ணுபுரம் சரவணன் ஆக்கங்களை முன்வைத்து... 110
- தென்னவன் வெற்றிச்செல்வன்

சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு – ஒரு பார்வை 114
- கிறிஸ்டி நல்லரெத்தினம்

சிதறடிக்கப்பட்ட ஓர் இனத்தின் துயரக் காவியம்
சயந்தனின் 'ஆதிரை' நாவல் 117
- சு. வேணுகோபால்

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் – 6 122
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

இலங்கை மலையகத் தமிழர் நிலையில்
ஐ.நா. சபையும் அதிகார சபையும் 126
- மல்லியப்புசந்தி திலகர்

மூதூர் சேனையூரின் குடும்ப வேள்விச்
சடங்கான மாரியம்மன் கரையல் 130
- நாகராசா லக்சிகா

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாகக்
காமன் கூத்து – 11 135
- அருணாசலம் லெட்சுமணன்

கூத்துகளில் விளிம்புநிலைச் சமூகமும் மாற்றமும் 140
- கோபிகா நடராசா

மூன்று நாவல்கள் ஒப்பீடு
கங்கைக்கரை ஓரம், சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும்,
ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது 144
- சின்னத்தம்பி குருபரன்

வரலாற்றில் 'ஊடல்'
திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் – 3 152
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழருவி த. சண்முகசுந்தரம் 156
- கதிர் துரைசிங்கம்

நூற்றாண்டு காணும் அறிவொளி
த. சண்முகசுந்தரம் அவர்களின் இடமும் இருப்பும் 159
- சி. ரமேஷ்

காத்திருக்க நியாயமில்லை 171
- கிருங்கை சேதுபதி

ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா:
இலங்கை மகாவம்சத்துடனான தொடர்பு? 174
- என். சரவணன்

புறநிலையும் அகநிலையும் 179
ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – 14 181
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

இனப்படுகொலையின் அரசியல் – 18
நிகழ்ந்தும் நிகழாத இனப்படுகொலை 188
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கம்பனின் கருவூலம் திறந்து... 200
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை!
பெண் துயரப் பெருங்கதை 205
- மா. சித்திவினாயகம்

ஒரு வீட்டில் ஐந்து பக்கங்கள் 208
- செ. டானியல் ஜீவா

காலம்... கலிகாலம்... 214
- உஷாதீபன்

காவியம் பாடடி பெண்ணே! 217
- அ. கந்தசாமி

லொட்டரி ரிக்கற் 220
- அன்ரன் செக்கோவ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# காற்றாலைகளோடு கம்புசூற்றும் கனவான்கள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

tg.theeban@gmail.com

## தொடக்கக் குறிப்புகள்:

மன்னாரில் புதிதாக நிறுவப்படவுள்ள காற்றாலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். அம்மக்கள் மீதான பொலிசாரின் வன்முறை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. போராடுவது மக்கள் உரிமை என்பதைத் தொடர்ச்சியாகப் பாராளுமன்றிலும் அதற்கு வெளியிலும் சொல்லிவந்த ஜே.வி.பி.-யினரே இன்று ஆட்சியில் இருக்கிறார்கள். இந்த மக்கள் போராட்டங்கள் அரசியல் நோக்கங்களுக்காகச் செய்யப்படுகின்றன என அரச ஆதரவாளர் தரப்பு குற்றம் சுமத்துகின்நது. இன்னொரு அரச ஆதரவுக் குழுவினர், இதை கிறீஸ்தவ மதகுருமார்கள் முன்னின்று நடத்துவதாகவும் இது மேற்குலக சதி என்றும் சாடுகிறார்கள். இன்னொரு தரப்பினர் காற்றாலைகள் சூழலுக்குப் பாதிப்பில்லாதவை, அவை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தூய்மையானது எனவே, இதனை எதிர்ப்பவர்கள் சூழலின் எதிரிகள் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். இந்தக் காற்றாலைத் திட்டத்தை அதானி நிறுவனம் செய்யவில்லை, உள்ளூர் நிறுவனமே செய்கிறது, எனவே இதை எதிர்க்கத் தேவையில்லை என இன்னும் சிலர் தெரிவிக்கிறார்கள். இவ்வாறு சமூக வலைத்தளங்களில் மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பில் ஏராளமான கருத்துகள் கொட்டிக் கிடக்கின்றன. அத்தகவல்களின் உண்மைத் தன்மையும் தரவுகளின் பெறுமதியும் ஐயத்துக்குரியது.

காற்றாலைத் திட்டத்திற்கு ஆதரவாக ஒருதொகுதி கனவான்கள் களமிறங்கியுள்ளார்கள். அவர்கள் அறஞ்சார் உயர் நிலைப்பாட்டை எடுப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அதன் அடிப்படையில் காற்றாலைத் திட்டத்தை ஆதரிப்பதோடு மக்கள் போராட்டங்களை இழிவுபடுத்துகிறார்கள். எங்களுக்கு மின்சாரம் தேவை இல்லையா? மன்னாரில் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னைய காற்றாலைத் திட்டத்தை ஏன் எதிர்க்கவில்லை? இப்போது மட்டும் ஏன் எதிர்க்கிறார்கள்? காற்றாலைத் திட்டத்தின் பலன்கள் பற்றி மக்களுக்குத் தெரியாது, மக்கள் பிழையாக வழிநடத்தப்படுகிறார்கள், போன்ற வினாக்களையும் கருத்துகளையும் இவர்கள் தொடர்ந்து முன்வைக்கிறார்கள். இதன் மூலம் அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் தமது ஆதரவை வழங்கி தவறுகளுக்கு வெள்ளையடிக்கிறார்கள்.

மக்கள் போராட்டங்களுக்கு எதிராகக் கம்புசுற்றும் கனவான்கள், இவ்வளவு காலமும் எங்கே போனார்கள்? என்ற கேள்வியை எழுப்புவது முக்கியமானது. போருக்குப் பின்னரான நாட்டின் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து புதுப்பிக்கத்தக்க சக்தி முயற்சிகளும் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது. மக்கள் எதிர்ப்பை வன்முறையாலும் இராணுவ வலிமையாலும் அடக்கியே அத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்ற உண்மையை இங்கே சொல்லியாக வேண்டும். இத்திட்டங்களுக்கு மக்களிடம் ஆதரவைப் பெறுவதற்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். அதை விரிவாகப் பார்க்கலாம். அதேவேளை மன்னாரில் முன்னெடுக்கப்படும் காற்றாலைத் திட்டத்தை வெறுமனே தூய மின்சாரம், தேசிய நலன், மேற்குலக சதி, பிழையான வழிகாட்டல் போன்ற ஒற்றைப் பரிமாண அடிப்படைகளில் அணுகுவது தவறானது.

போருக்குப் பின்னான சமூகங்கள் தொடர்ச்சியாகப் புறக்கணிப்பை எதிர்நோக்கி வருகின்றன. இதற்கு இலங்கையின் வடக்கில் உள்ள மக்களும் விலக்கல்ல. அவர்கள் தாங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நினைக்கிறார்கள். அவர்களது நிலங்கள் சூறையாடப்படுவதாக அஞ்சுகிறார்கள். வாழ்வாதாரங்கள் கேள்விக்குறியாவதாக அச்சப்படுகிறார்கள். இவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும் மக்களுக்கானதே. ஆனால் மக்கள் அதைத் தமக்கானதாக உணர வேண்டும். அந்த எண்ணத்தை உருவாக்கும் பொறுப்பு அரசினுடையது என்பதனை நாம் மறந்து






“

***மன்னாரில் காற்றாலைத் திட்டம் ஒன்று வரப்போகிறது என்று 2016-ஆம் ஆண்டளவில் மக்கள் கேள்விப்படத் தொடங்கினார்கள். மக்கள் அதைப் பயனுள்ள அபிவிருத்தித் திட்டம் என்ற வகையிலேயே நோக்கினர். குறிப்பாக மன்னாரில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுக்கும் மின்தடைக்கும் இந்த அபிவிருத்தித் திட்டம் தீர்வாக இருக்கும் என்று நம்பினார்கள்.***

”

விடலாகாது. இந்தப் பின்புலத்திலேயே மன்னார் காற்றாலை விடயம் தொடர்பான சில விடயங்களைக் கள அனுபங்களின் வழி இக்கட்டுரை பகிர்ந்து கொள்கிறது.

## தம்பபவனி காற்றாலைத் திட்டம்:

இலங்கையின் மிகப்பெரிய காற்றாலைத் திட்டமான தம்ப பவனி காற்றாலைத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் வழி 2020-ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது. இது 100 MW மின்சா ரத்தை உற்பத்தி செய்யவல்லது. இந்தத் திட்டம் தொடர்பில் 2014-ஆம் ஆண்டு முதன்முதலில் அறிவிக்கப்பட்டபோது மன்னாரில் 375 ஆறு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் மூன்று கட்டமாக காற்றாலைகள் நிறுவப்படும் என்றும் முதற்கட்டமாக 100 MW உற்பத்தியும் இரண்டாம் கட்டமாக 150 MW உற்பத்தியும் மூன்றாவது கட்டமாக 125 MW உற்பத்தியுமாகத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அர சாங்கம் அறிவித்தது. இதன் முதற்கட்டமாகக் காற்றா லைகள் நிறுவும் பணிகள் 2016-இல் தொடங்கின. இத்திட் டத்தின் கதையை விளங்கிக் கொள்வது, தற்போதைய மக்கள் எதிர்ப்பை விளங்கிக் கொள்வதற்கு உதவும்.

மன்னாரில் காற்றாலைத் திட்டம் ஒன்று வரப்போகிறது என்று 2016-ஆம் ஆண்டளவில் மக்கள் கேள்விப்படத் தொடங்கி னார்கள். மக்கள் அதைப் பயனுள்ள அபிவிருத்தித் திட்டம் என்ற வகையிலேயே நோக்கினர். குறிப்பாக மன்னாரில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுக்கும் மின்தடைக்கும் இந்த அபிவிருத்தித் திட்டம் தீர்வாக இருக்கும் என்று நம்பி னார்கள். ஆனால் எதிர்பாராத விதமாக அரசு தனியார் காணிகளை காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் கையகப்ப டுத்தியமையானது இத்திட்டம் குறித்த பல கேள்விகளை எழுப்பியது. இத்திட்டத்திற்குத் தேவையான 145.64 ஹெக் டேயர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் பெரும்பான்மை யானவை தனியாருக்குச் சொந்தமான காணிகள். இந்தக் காணிகள் சந்தை விலையில் அல்லாமல் அரசால் நிர்ணயிக் கப்பட்ட விலையிலேயே வாங்கப்பட்டன. இந்தக் காணிச் சுவீகரிப்பில் ஒரு பாரிய சிக்கல் இருந்தது.

இந்த நிலங்களில் இருந்து மக்கள் 1990-களின் நடுப்பகுதி யில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துவிட்டார்கள். கிட்டத் தட்ட இரண்டு தசாப்தகாலத்திற்குப் பிறகு மக்கள் இப்பகுதி களுக்கு மீண்டனர். இந்தக் காணிகளுக்குச் சொந்தக்காரர் களின் மூன்றாம் தலைமுறையே இப்போது இந்நிலங்க ளுக்கு உரியவர்கள். ஆனால் குறித்த நிலங்களிற்கு தனித்த உரிமையாளர் கிடையாது. எனவே காணிச்சொந்தக்காரரில் பலர் உயிருடன் இல்லை. இதனால் காணி சுவீகரிப்பை எதிர்க்கவும் முடியவில்லை. இழப்பீட்டைப் பெறவும் முடிய வில்லை. இந்த நிலங்கள் மக்களுடனான கலந்துரையாடல் இன்றியே கையகப்படுத்தப்பட்டன. குறித்த காற்றாலைகள் இயங்கத்தொடங்கி 5 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையத்தளத்தில் இது தொடர்பாகக் கிடைக்கின்ற ஆவணங்கள் காணிச்சுவீகரிப்பு மக்களைப் பற்றிக் கவலைப்படாத ஒன்றாக இருந்தது என் பதை விளக்கப் போதுமானது. குறித்த காற்றாலைத் திட் டத்தின் மீள்குடியமர்வுத் திட்டம் (Resettlement Plan) 2021 செப்டெம்பரிலேயே இறுதி செய்யப்பட்டது. அதாவது காற்றா லைகள் அமைக்கப்பட்டு அவை பயன்பாட்டுக்கு வந்து 10 மாதங்களின் பின்னர். இது யாருடைய தேவைகள் முன்னி லைப்படுத்தப்பட்டன என்பதை புரிந்து கொள்ள உதவும் ஒரு குறிகாட்டி மட்டுமே.

இந்தத் திட்டத்தின் சூழலியல் சிக்கல்கள் குறித்து ஏராளமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை கணிப்பில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற இலங்கை மின்சாரசபையே இந் தத் தாக்க மதிப்பீடுகள் அனைத்தையும் மேற்கொண்டது. இந்தத் தாக்க மதிப்பீடுகள் மேம்போக்கானவை. இவை உண்மையான கள நிலவரத்தின் பிரதிபலிப்பல்ல. அதேவேளை இந்தத் திட்டத்திற்கு அனுமதியளித்துள்ள அரச நிறுவனங் களும் பிரதேச சபைகளும் இத்திட்டத்தின் ஆழ அகலங் களை அறிந்து அவற்றை வழங்கவில்லை.

இத்திட்டம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இது துரதிஷ்டமானது. குறிப்பாக இவை ஏற்படுத்திய சமூக பொருளாதாரத் தாக்கங்கள், சூழலியல் சிதைவு, காற்றாலையின் ஒலி ஏற்படுத்தும் சிக் கல்கள் ஆழமான ஆய்வுக்குரியனவாக இல்லை. அதேவேளை இந்தக் காற்றாலைகள் பறவைகளுக்கு ஏற்படுத்தும் தாக் கங்கள் விரிவான ஆய்வுக்கு உட்பட்டுள்ளன. அவை

குறித்து இலங்கையின் பறவையியல் ஆய்வாளர்கள் விரிவாகப் பதிவு செய்துள்ளனர். இந்தக் குறிப்புகள் இத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சூழலியல் தாக்க மதிப்புகள் எவ்வளவு அபத்தமானவை என்பதைக் காட்டி நிற்கின்றன.

## முன்னாள் போர் வலயங்களில் புதுப்பிக்கத்தக்க சக்தி:

போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்கில் ஏராளமான புதுப்பிக்கத்தக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளன. ஆனால் அது குறித்து யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. மறவன்புலவில் ஏற்படுத்தப்பட்ட காற்றாலைகள் பலத்த மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் உருவானவை. இன்று பூநகரியில் உருவாகவுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி முயற்சிகளையும் மக்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் இவற்றுக்குத் தேவையான கவனம் கிடைப்பதில்லை. இந்த மக்களைச் சாந்தப்படுத்தி இத்திட்டங்களை மக்களிடம் திணிக்கும் வேலையை துறைசார் பேராசிரியர்கள் முதல் சமூகத் தலைவர்கள் வரை அனைவரும் செய்கிறார்கள். கடந்த பத்தாண்டுகளில் இந்தத் திட்டங்களை மக்கள் ஏன் எதிர்க்கிறார்கள். அதற்கான காரணம் என்ன, போன்ற வினாக்கள் வினவப்படவுமில்லை, ஆராயப்படவுமில்லை. இம்மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள் குறித்த விடயத்தில் தொடர்ந்தும் மௌனம் காக்கிறார்கள்.

இந்தப் பின்புலத்திலேயே புதிதாக அமையவுள்ள மக்கள் எதிர்க்கின்ற காற்றாலைத் திட்டம் குறித்துப் பேச வேண்டியுள்ளது. எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான உரிமை மக்களுக்கானது. அதை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது. ஆரசாங்கமும் அதன் ஆதரவுக் கனவான்களும் சொல்வது போன்று 'மக்களுக்கு விளக்கம் போதவில்லை' என்றால் இந்தக் கனவான்கள் மக்களுக்கு தமது வாதங்களை எடுத்துக்கூறி விளங்க வைக்கவேண்டும். அதைவிடுத்து மக்களைக் குற்றஞ் சொல்வதும், வன்முறைகளை ஏவுவதும் ஏற்கத்தக்கதல்ல. இலங்கையின் வடக்கு மக்கள் கடந்த இரு தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவுடன் 'வடக்கும் எங்களுடன்' என்று கூவித்திரிந்தவர்கள்தான் இன்று இந்த மக்கள் போராட்டங்களைக் கொச்சைப்படுத்துகிறார்கள்.

மக்கள் சில நியாயமான கேள்விகளைக் கேட்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லாமல் கடந்து போவது அடாவடித்தனம், அது ஜனநாயகமான ஆட்சியல்ல. இந்தத் திட்டத்தை இப்போது அதானி முன்னெடுக்கவில்லை, இலங்கை நிறுவனம்தான் முன்னெடுக்கிறது, எனவே ஏன் எதிர்க்கிறீர்கள் என்று கேட்பது அபத்தம். ஒரு திட்டத்தை யார் நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதல்ல பிரச்சினை, அத்திட்டம் எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பதைப் பார்ப்பதே முக்கியமானது.

குறித்த திட்டத்தின் சூழலியல் தாக்க மதிப்பீடு கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. குறிப்பாக சூழலியல் அமைப்புக்கள் அனைத்தும் பறவைகளுக்குப் பாதிப்பல்ல என்று இந்தத் தாக்க மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள கருத்தை வன்மையாகக் கண்டித்து இந்த மதிப்பீட்டை முழுமையாக நிராகரித்துள்ளன. மன்னார் வளமான ஓர் உயிர்ப்பல்வகைமை கொண்ட பிரதேசம். பறவைகளைப் பொறுத்தவரை மன்னார் தீவு முக்கியமான இடம்பெயர்வுத் தங்கல் பகுதியாகவும், மத்திய ஆசிய பறக்கும் பாதையின் (Central Asian Flyway) முக்கிய நுழைவுப் புள்ளியாக பல மில்லியன் பறவைகளை ஆண்டுதோறும் இலங்கைக்கு அழைத்து வரும் பகுதியாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 250 இனங்களைச் சேர்ந்த சுமார் 15 மில்லியன் பறவைகள் இலங்கைக்கு வருகின்றன. மன்னார் பறவைகளின் புகலிடமாக உள்ளது, ஆண்டுதோறும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பறவைகள் இங்கு வாழ்கின்றன, இதில் 175 புலம்பெயர்ந்தோர் மற்றும் 162 இனப்பெருக்க வகைகள் உள்ளன. இது இலங்கையின் பறவை பன்முகத்தன்மையில் 65% ஆகும். மன்னாரில் பதிவுசெய்யப்பட்ட 337 பறவை இனங்களில், 24% அழியும் ஆபத்தில் உள்ளவை. மன்னார் இலங்கையில் மிக முக்கியமான கடல் பறவை இனப்பெருக்க தளமாக அமைகிறது. இவை நீர்ப்பறவைகளுக்கான மன்னாரின் உலகளாவிய முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வளமான பறவை பன்முகத்தன்மை இலங்கையில் மன்னாரை முதன்மையான பறவை சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது.

> **“ மறவன்புலவில் ஏற்படுத்தப்பட்ட காற்றாலைகள் பலத்த மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் உருவானவை. இன்று பூநகரியில் உருவாகவுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி முயற்சிகளையும் மக்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் இவற்றுக்குத் தேவையான கவனம் கிடைப்பதில்லை. ”**



பறவை வாழ்விடங்களுக்கு அப்பால், மன்னார் கடல் புல் படுகைகள், பவளப்பாறைகள், மணல் திட்டுகள், சதுப்புநிலக் காடுகள் மற்றும் அலை சேற்றுப் படுகைகள் உள்ளிட்ட பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள், செழிப்பான மீன்பிடி மற்றும் கடலோரப் பல்லுயிர் பெருக்கத்தை ஆதரிக்கின்றன. அதன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக-பொருளாதார முக்கியத்துவத்தை அங்கீகரித்து, இலங்கை அரசாங்கம் மன்னாரில் ஐந்து பகுதிகளைப் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களாக அறிவித்துள்ளது, அவற்றில் வங்காலை சரணாலயம், விடத்தல்தீவு இயற்கைக் காப்பகம் ஆகியவை அடங்கும். நிறுவப்படவுள்ள காற்றாலைகள் இந்தப் பறவைகளின் பல்வகைமையை முற்றாக அழிக்க வல்லன. படத்தில் காட்டப்பட்டுள்ள படி பறவைகளின் வழித்தடத்திலேயே இந்தக் காற்றாலைகள் அமையவுள்ளன. இந்தப் படம் இத்திட்டத்திற்கான எவ்வாறான தகவல் மறைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை விளக்கும் ஓர் உதாரணம் மட்டுமே.

கடந்த யூன் மாதம் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி Sunday Times பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு சொல்லியிருந்தார்: 'மன்னாருக்கு அருகிலுள்ள காற்றாலைகள் பற்றிய கவலைகளைப் பொறுத்தவரை, நான் இதைச் சொல்ல வேண்டும். பலர் கூறுவது போல் மன்னார் ஒரு சொர்க்கம் அல்ல. காற்றாலைகள் பறவைகளை அழிக்

கும், வனவிலங்குகளை அழிக்கும் என்று சமூகத்தில் உள்ள சில பிரிவினர் கூறுவது, என் பார்வையில், மிகவும் தவறானது. சிலர் தவறாக இவ்வாறு எச்சரிக்கிறார்கள். நான் அந்தப் பகுதியைப் பார்வையிட்டேன், இந்தக் கோட்பாடுகளை ஆதரிக்கும் எதையும் நான் காணவில்லை. நீங்கள் மன்னாரில் இருந்து வடக்கில் பூநகரி வரை செல்கிறீர்கள்; அது வெறும் பழுதடைந்த நிலம். மக்கள் பறவைகளைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் அங்கு பறவைகள் இல்லை, இந்தப் பகுதிகளைத் தேசிய அபிவிருத்தியில் ஒருங்கிணைப்பது நம் கடமை. மன்னாரில் இருந்து மின்சாரம் தயாரிக்க முடிந்தால், நாம் ஏன் அதைச் செய்யக்கூடாது?'

இந்தக் கூற்று மிகவும் முக்கியமானது. அரசாங்கத்தின் பொறுப்புக்குரிய அமைச்சர் உதிர்த்த சொற்கள் என்பதால் மட்டுமல்ல. துறைதோய்ந்த நிபுணர்களையே அமைச்சர்களாக நியமித்திருக்கிறோம் என அரசாங்கமும் அவர்தம் ஆதரவாளர்களும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் நிலையில் அவர்களின் யோக்கிதை தெரியும், வெளிப்படும் இத்தருணத்தில் சிரித்துவிடவே தோன்றுகிறது.

## நிறைவுக் குறிப்புகள்:

கடந்த ஆறு ஆண்டு காலப்பகுதியில் (2018-2024) இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான ஆய்வுக்காகப் பலரை நேர்காணக் கிடைத்தது. கொள்கை வகுப்பாளர்களின் மனநிலை மிகத் தெளிவானது. இன்று இலங்கையின் முழு நிலப்பரப்பும் இலங்கை அரசுக்குச் சொந்தம். எனவே எப்பகுதியிலும் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் செய்யும் உரிமை உண்டு. அதைக் கேள்விக்குட்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. இந்த மனநிலையுடனேயே புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான கொள்கை உருவாக்கம் நிகழ்கிறது. எனவே எதிர்ப்புகள் அதன் நியாயப்பாடுகளுக்கு அப்பால், அரசைக் கேள்விக்குட்படுத்துவதாக, அபிவிருத்தியை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கமுடையனவாக விளங்கிக் கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் அரசியலில் அதன் கொள்கை வகுப்பில், இயற்கை குறித்த அக்கறை மிகக்குறைவு. இயற்கை மீதான குறைந்தபட்ச அக்கறை இருந்திருக்குமாயின் கடந்த இருபது ஆண்டுகளில் இலங்கை எண்ணிலா இயற்கைக்குக் கேடு விளைவிக்கும் செயல்களை அனுமதித்திருக்காது. இலங்கை தூய சக்தி என்ற ஒற்றைப் பரிமாணத்தில் இயங்குகிறது. இது ஆபத்தானது. சுடுகாட்டின் மீது உற்பத்தியாகும் மின்சாரம் யாருக்கும் பயனற்றது. தூய சக்தி மீதான அளவுகடந்த நம்பிக்கை ஆபத்தானது. தூயசக்தி முழுமையானதோ, முழுமையாகத் தூய்மையானதோ அல்ல. அதன் பின்னால் உள்ள சூழலியல் சவால்களை தெரியாதோரே இன்று அரசாங்கத்துக்கும் காற்றாலைகளுக்கும் ஆதரவாகக் கம்பு சுற்றுகிறார்கள். இவர்கள் காற்றிலே கத்தி வீசும் வீரர்கள் என்பதை மக்கள் அறியும் காலம் தொலைவில் இல்லை.



meenilankco@thaiveedu.com




Ring of Fire-இல் இருந்து தயாரிக்கப்பட்ட
உயிர்காக்கும் தொழில்நுட்பம்
வடக்கு ஒன்டாரியோவில் மருத்துவ சாதனங்கள் போன்ற அத்தியாவசிய தொழில்நுட்பங்களை உருவாக்க தேவையான முக்கிய கனிமங்கள் நிறைந்த ஒரு பகுதி உள்ளது.
PROTECT ONTARIO
இது பற்றி மேலும் அறிந்துகொள்ள: ontario.ca/RingOfFire
இது ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.
Ontario




# ஆபிரிக்காவில் எழுந்துவரும் எதியோப்பியா

**சிவா முருகுப்பிள்ளை**

ஆபிரிக்கக் கண்டத்தில் அதிகம் அடையாளப்படுத்தப்பட்ட நாடுகளாக எதியோப்பியாவும் தென் ஆபிரிக்காவும் காணப்படுகின்றன. இந்நாடுகள் பல தசாப்பதங்களாக கடுமையான போராட்டங்களைத் தமது வரலாற்றுப்பாதையில் சந்தித்திருக்கின்றன. இப்போராட்டங்கள் பல முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டு செயற்பட்டமை, இன்று அப்போராட்டங்கள் வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக அமைந்தது என்பது கூடுதலான சிறப்பம்சம். அந்நாட்டுப் போராட்டகாரர்களின் துணிச்சலான செயலும் முற்போக்கான சிந்தனையுமே சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு இந்நாடுகளின் முன்னோக்கிய நகர்வுக்குக் காரணமாகவும் அமைந்துள்ளன.

ஈழ விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருந்த அதே காலகட்டத்தில், ஈபிஎல்எவ் (EPLF) எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்பு எதியோப்பியாவிலிருந்து தனியாகப் பிரிந்து செல்வதற்காக 30 வருடங்களாகப் பல வடிவங்களில் போராட்டங்களை நடத்தியது. போராட்டத்தின் இறுதிக் காலத்தில், சோவியத் யூனியன் அதுவரை எரித்திரியாவுக்கு வழங்கி வந்த ஆதரவை எதியோப்பியாவுக்கு மாற்றிக்கொண்டது. இருப்பினும், எரித்திரியா விடுதலை அமைப்பும் எதியோப்பியாவும் போர்க்காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களைத் தொடர்ந்து பேணுவதற்கான சித்தாந்த வழிநடத்தல்களை அன்றைய சோவியத் யூனியன் தொடர்ந்து ஒழுங்கமைத்து வந்தமை கவனத்துக்குரியது. இந்தச் சித்தாந்தத்தின் தாக்கம் இன்றுவரை எதியோப்பியா, எரித்திரியா ஆகிய இரு நாடுகளிலும் உணர முடிவதாகச் சாதாரண மக்களும் தெரிவிக்கின்றனர்.

1991 முதல் 1993 வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய முன்னணியாகச் செயற்பட்ட எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (EPLF)தான் எரித்திரியா உலக அங்கீகாரத்தைப் பெறவும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவும், இறுதியாகத் தனி நாடு என்ற அந்தஸ்தைப் பெறவும் முக்கிய காரணமாக இருந்தது.

மாற்றம் என்பது ஒரே இரவில் அல்லது ஒரே பகலில் நடைபெறப் போவது இல்லை, அது ஒரு பரிணாம வளர்ச்சிப் போக்கில்த்தான் நிகழும். இது இயங்கியல் தத்துவமும் கூட. இவ்வாறுதான் உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இரு நாடுகளும் தமது எல்லைகளை வகுத்துக்கொண்ட பின்னரும் முறுகல் நிலை தொடர்ந்து காணப்பட்டது. ஆனாலும் பல்வேறு சுமூகமான பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் மூலம் அது தீர்த்துவைக்கப்பட்டது. இதற்கு மறுதலையாக இந்தியாவில் இருந்து பிரிந்த பாகிஸ்தான், பாகிஸ்தானில் இருந்து பிரிந்த பங்களாதேஷ் என்றாக முக்கோண வடிவ முறுகல் நிலை தொடர்ந்து காணப்பட்டு வருகின்றது. ஆனால், அதற்கெல்லாம் முன்னர் மூன்று தேசங்களும் ஒன்றாக இருந்து வந்தமையும் அதன் பண்பாடு, கலாசாரம் ஒத்த இயல்புடையவையாக இருந்தமையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.

இந்த வகையில் எதியோப்பியா, எரித்திரியா என்ற முன்னாள் எதியோப்பியா மாகாணங்கள் ஒரு பண்பான முன்னோக்கிய மனித நாகரீகங்களை, பண்புகளை அந்த சமூகங்கள் தமக்குள் கொண்டிருந்தன என்பதே இங்கு சிறப்பாக நாம் உணர முடிகின்றது.

இவ்விடத்தில் இலங்கையில் நடைபெற்ற தனிநாட்டுக் போராட்டம் வெற்றி பெற்றிருந்தால் முக்கோண இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் என்ற மாதிரியான பகை முரண்பாடுகளாக தொடர்ந்திருப்பதற்கான காரண காரியங்களையே இலங்கையும் தமிழீழமும் அதிகம் கொண்டிருந்திருக்கும்.

இதன் அடிப்படையில் உலகம் இன்று திரும்பிப் பார்க்கும் எதியோப்பியா, எரித்திரியா போன்ற நாடுகளின் வளர்ச்சியை நாம் இலங்கையில் நிச்சயமாக கண்டிருக்க முடியாது.

எனது இந்த கருத்தில் பலருக்கு விருப்பமின்மை இருக்கலாம், ஆனால் இதுதான் எமது மக்களின் உணர்வுகள் அடிப்படையிலான யதார்த்தம்.

நல்ல காலம் நாம் பிரியாது தப்பித்தோம். அன்றேல் கிழக்குத் தீமோர் வரலாறும், தெற்கு சூடான், (வடக்கு) சூடான் வரலாறும், பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா வரலாறு போலவே இலங்கையிலும் நிலமைகள் ஏற்பட்டிருக்கலாம்…? ஆனாலும், மேற்கு ஆப்பிரிக்காவின் புர்க்கினா பாசோவின் தலைவர் தாமஸ் சங்கரா, மற்றும் கியூபாவின் பிடல் காஸ்ட்ரோ போன்ற தீவிரமான சீர்திருத்தவாதத் தலைமைப் பண்புகளைக் கொண்ட தலைவர்கள் தமிழர் தரப்பிலோ அல்லது சிங்களவர் தரப்பிலோ உருவாகி இருந்தால், இந்தச் சூழலை ஒரு முன்னோக்கிய நகர்வாக மாற்றி எழுதி இருக்கலாம். இப்படியான தலைவர்கள் தமிழர் தரப்பில் உருவாக முடியாத அளவுக்கு, முன்னோக்கிச் சிந்தித்த தலைவர்கள் கொன்று குவிக்கப்பட்ட வரலாறே இலங்கையின் வரலாறாகும்.

எரித்திரியா என்ற புதிய நாடு உருவாகும் வரை, எதியோப்பியா தரையையும் செங்கடலையும் எல்லையாகக் கொண்டிருந்தது. 1993-ஆம் ஆண்டில் எதித்திரியா தனிநாடாகப் பிரிந்து சென்றதன் பின்னர், கடற்பரப்பை இழந்த எதியோப்பியா தரையால் சூழப்பட்ட நாடாக உலக வரைபடத்தில் மாற்றியமைக்கப்பட்டது. வளம்மிக்க செங்கடலை எதியோப்பியா இழந்து நின்றது.

செங்கடல், கருங்கடல், வெள்ளைக் கடல், மஞ்சள் கடல் போன்ற நிறங்களின் அடிப்படையில் பெயரிடப்பட்ட உலகின் சில கடல்கள் இருந்தபோதிலும், செங்கடல் தனது கடற் தாவரங்களின் (அதாவது, சயனோபாக்டீரியாக்களின் - Cyanobacteria) பண்பால் சிவப்பு நிறமாகத் தோன்றுவதால் செங்கடல் என அழைக்கப்பட்டது. எரித்திரியா பிரிந்து சென்றதால், செங்கடல் துறைமுகங்கள் உள்ளிட்ட கடல் வளங்களை எதியோப்பியா இழந்த போதிலும், அது சோர்ந்து போகவில்லை. ஆபிரிக்காவின் கொம்பு நாடுகளில் ஒன்றாகத் தன்னைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது. வடக்கே எரித்திரியா, வடகிழக்கில் ஜிபூட்டி, கிழக்கே சோமாலியா, தெற்கே கென்யா, மேற்கே தென் சூடான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ள எதியோப்பியா, பல்லின, பலமத, பல பிராந்திய மக்களைக் கொண்ட நவீன நாடாக ஆபிரிக்காவில் வளர்ச்சியடைந்து வரும் கூட்டாட்சி நாடு.

ஒரு காலத்தில் வறுமையின் அடையாளமாக, வயிறு ஒட்டி எலும்பும் தோலுமாக இருக்கும் மக்களின் படங்களை நாம் பார்த்திருப்போம். அது எதியோப்பியா உட்பட்ட பல ஆபிரிக்க நாடுகளில் எடுக்கப்பட்டவை. இவ்விதம் மிகவும் வறுமையானவர்களாகவும் பசியால் இறந்து போவோராகவும் இருந்த இம்மக்களின் நிலமை இப்போது பல வழிகளிலும் முன்னேற்றகரமாக மாறிவருகின்றது. ஏனைய ஆபிரிக்க நாடுகளிலிருந்து இடம்பெயர்ந்து மக்கள் வரும் நாடாகவும் எதியோப்பியா காணப்படுகின்றது.



எதியோப்பியா 1974-ஆம் ஆண்டுவரை மன்னர் ஆட்சிக்கு உட்பட்டுவந்திருந்தது. ஹெய்லி செலாஸி, மக்கள் போராட்டத்தின் மூலம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு, படுகொலை செய்யப்பட்டதோடு இம்மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்தது. மன்னர் ஆட்சியின் முடிவில் மதச்சார்பற்ற நாடக மாற்றும் பொருட்டு டெர்க் என்று அழைக்கப்பட்ட இடதுசாரி அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனாலும் திருச்சபையின் பலமான ஆதிக்கத்தின் மத்தியில் இம்மதச்சார்பற்ற அரசு நின்று நிலைக்கமுடியவில்லை. 1991-ஆம் ஆண்டு பல இனக்குழுக்களின் கூட்டணியாக உருவாகிய எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி (EPRDF) ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து பல விளிம்புநிலை இனக்குழுக்களும் ஆட்சி அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கினர். இதில் முக்கியமானவராக 2018-ஆம் ஆண்டு அபி அலி அகமது மக்களின் பலத்த ஆதரவுடன் மூன்றில் இருண்டு பெரும்பான்மையுடன் ஆதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். உண்மையில் இவர் அக்காலத்தில் எதியோப்பியாவில் அதிகாரம் செலுத்திய ஓம்ஹாரா அல்லது திகராயன இன சமூகத்தைச் சேர்ந்தவர் அல்லர். அதே வேளை மரபுவழிக் கிறிஸ்தவரும் அல்லர். இவரின் தந்தை ஒரு முஸ்லீம், தாய் கிறிஸ்தவர். இது இவரை எதியோப்பிய மக்களிடம் செல்வாக்கு நிலையை இழக்கச் செய்வதற்குரிய காரணமாக இருந்தாலும், இவர் ஆட்சியைப் பொறுப்பெடுத்தது எதியோப்பியாவின் மிக இக்கட்டான காலத்தில். எதியோப்பியாவில் உள்ளகக் குழப்பங்கள் தீவிரமடைந்திருந்தன. இங்கு மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையில் மோதல் நிலமைகள் அதிகமாகக் காணப்பட்டன. இதனைவிட, எரித்திரியாவுடனான எல்லைப் பிரச்சினை பாரிய நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இவற்றிற்கான தீர்வினை இவர் பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கையின் நிமிர்த்தமே பெரும்பான்மையான மக்கள் இவருக்கு வாக்களித்திருந்தனர். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக இவர் எரித்திரியாவுடனான எல்லைப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்தார்.



இதற்காக இவருக்கு 2019-ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல்பரிசு வழங்கப்பட்டிருந்தது.

இன்று வரை எதியோப்பியாவின் பன்முகத்தன்மையை சரியான திசையில் கொண்டு செல்வதும், அனைத்து இன மற்றும் கலாசார குழுக்களிடையே அமைதி மற்றும் ஒற்றுமையைப் பேணுவதும் நாட்டின் முன் பெரும் சவாலாகவே உள்ளது. பலவேறு மதப்பிரிவுகள், தேசிய இனங்கள், மொழிப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்ட, பலவேறு மாநிலங்கள் சுயாட்சி கொண்டதாக செயற்பட்டு வருவது எதியோப்பியாவின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பதாக அமைந்திருந்தது.

இதற்கு முக்கிய காரணம் சோவியத் யூனியனுடன் இந்நாடு கொண்டிருந்த நட்பு. பல்வேறு தேசிய இனங்களை, சமூகங்களை சமதையாகக் கையாளும் இடதுசாரிச் சிந்தனை அறிவினைப் பெற்று நாட்டினை வழிநடத்திச் செல்லும் திறனை வழங்கியிருந்தமையைக் கொள்ளலாம். இது எதியோப்பியாவிலும், எரித்திரியாவிலும், தென் ஆபிரிகாவிலும் காணப்படும் இயல்பாகக் கொள்ளலாம். பொதுவாக ஐரோப்பிய நாடுகளின் சுரண்டல்களுக்கு எதிராக போராடும் நாடுகளாகவே இந்த ஆபிரிக்க நாடுகள் இன்றுவரை செயல்பட்டு வருகின்றன. பெரும்பாலான நாடுகள் ஐரோப்பிய நாடுகளின் சுரண்டல்களுக்கு உள்ளாகி தமது வளங்களை இழந்து நலிவடைந்து போயிருக்கும் நிலையில், எதியோப்பியா போன்ற ஆபிரிக்க நாடுகள் இத்தகைய சுரண்டலுக்கு உள்ளாகாமல் தப்பித்து இருக்கிறன.

எதியோப்பியாவின் பொருளாதார மேம்பாட்டில் சிறந்த கால்நடைவளம், மீன்வளம், விவசாய நிலவளம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய பொருளாதார மேம்பாடிற்கு அங்குள்ள இயற்கை வளங்களும் இன்னொரு காரணமாகின்றன. குறிப்பாக மலைகள், சமவெளிகள் போன்றவற்றிலிருந்து பாய்ந்துவரும் நீர்வளம் எல்லாவற்றிற்கும் முக்கியமான வளமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இங்கிருக்கும் மலையில் இருந்துதான் நைல் நதியின் பிரதான கிளை நதிகளில் ஒன்றான நீலநதி ஊற்றெடுத்துப் பாய்கின்றது. நைல் நதியின் இன்னொரு கிளை நதியான வெள்ளைநதி உகண்டாவின் விக்ரோறியா ஏரியில் ஆரம்பமாகின்றது. இவ்விரு கிளை நதிகளும் சூடான் தலைநகருக்கு அண்மையாக உள்ள கார்ட்டும் எனும் இடத்தில் இணைந்து உலகின் மிக நீளமான நதியாகப் பாய்ந்தோடி எகிப்தின் நாகரிகத்தை வளப்படுத்திச் செல்கின்றது.

எதியோப்பியா பொதுவாக விவசாய நாடாகவே அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கு காணப்படும் ஐந்து வகையான மண்வளம் விவசாயத்தை மிகவும் மேம்பாடடையச் செய்வதில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது. கோப்பி போன்ற பணப்பயிர்கள் இங்கு அதிகம் பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாயும் புடவை, காலணி ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாயும் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேலும் வலுவடையச் செய்து மூன்றாம் உலக வளர்முக நாடுகளில் முன்னணி நாடாக எதியோப்பியாவை விளங்கச் செய்திருக்கிறது. இதனைவிட இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு சுற்றுலா, வங்கி, காப்பீடு, போக்குவரத்து போன்றவற்றின் வளர்ச்சியின் ஈட்டப்படும் பொருளாதாரமும் தேசிய வருமானத்திற்கு பக்கபலமாகியிருக்கின்றது.

1974 முதல் 1991 வரை ஆட்சி செய்த இடதுசாரி அரசு நிலம், வீட்டுவசதி, பண்ணைகள் மற்றும் தொழில் உள்ளிட்ட அனைத்து உற்பத்தி வழிகளையும் தேசியமயமாக்கியது. தங்கள் நில உரிமைகளில் தனி உரிமையின் நிச்சயமற்ற தன்மையை சமான்ய மக்கள் எதிர்கொண்டதால், எதியோப்பிய விவசாயத்தின் முதுகெலும்பாக இருக்கும் சிறுதொழில் விவசாயிகள் சந்தைக்கு உபரி உணவுப்பயிர்களை உற்பத்தி செய்வதில் தயக்கம் காட்டினர். ஆனாலும் சுய சார்புப் பொருளாதாரத்தில் அவர்கள் தன்நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

நிலம் தேசியமயமாக்கப்பட்டிருந்தாலும், கிராமப்புற எதியோப்பியாவில் நிலைமைகள் சற்று மேம்பட்டுள்ளன. ஏனெனில், அரசாங்கம் கிராமப்புற மக்களின் வளர்ச்சியில் கணிசமானளவு கவனம் செலுத்தி வருகின்றது. இருப்பினும், நில உரிமை பற்றிய கேள்வி சர்ச்சைக்குரியதாக உள்ளதோடு வணிக விவசாயத்தின் வளர்ச்சிக்கு அது தடையாக உள்ளதாக முதலாளித்துவச் சிந்தனையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எதியோப்பியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய வளம் அதன் விவசாய நிலமாகும். மண் அரிப்பு, அதிகபடியான மேய்ச்சல் மற்றும் காடழிப்பு ஆகியவை சுற்றுச் சூழலை கடுமையாகச் சேதப்படுத்தியிருந்தாலும், பயிரிடக்கூடிய நிலத்தில் கிட்டத்தட்ட பாதி இன்னும் பயன்பாட்டிற்காகக் காத்துக்கிடக்கிறது. பாதுகாக்கப்படும் பெரும்பாலான நிலங்கள் தீவிர விவசாயத்திற்குச் சாதகமான பங்களிப்பைச் செய்துவருகின்றன. இதனைவிட கால்நடைகளை ஒப்பிடும் போது, எதியோப்பியா ஏனைய ஆபிரிக்க நாடுகளை விடவும் அதிகளவு எண்ணிக்கையில் முன்னணிவகிக்கிறது. மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கால் நடைகளின் இனப்பெருக்கத்தைச் சிறப்பாக நிர்வகிப்பதன் மூலம், கால்நடை வளர்ப்பால் உள் நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளின் தேவைகளை எதியோப்பியா சிறப்பாகப் பூர்த்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது.

எதியோப்பியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதியை விவசாயம் ஈட்டிக் கொடுக்கின்றது.

### சிறுதானிய உற்பத்தி:

ரெப் எனப்படும் ஊட்டச்சத்து மிக்க சிறுதானியம். கோதுமை, பார்லி, ஓட்ஸ், சோளம் மற்றும் தினை போன்ற பெரும்பாலான முக்கிய தானியங்களையும் கொண்டல் கடலை, பட்டாணி, பயறு, பருப்பு வகைகளையும் உற்பத்தி செய்யும் வாழ்வாதார சிறுதொழில் துறையாகும்.

### பணப்பயிர்:

கோப்பி, எண்ணெய் வித்துக்கள், தேன் மெழுகு, கரும்பு மற்றும் லேசான போதைப்பொருளான காட் ஆகியவை அடங்கும். எதியோப்பியாவைப் பூர்வீகமாகக் கொண்ட கோப்பி, மிக முக்கியமான ஏற்றுமதிப் பயிராகும்.

### கால்நடை வளர்ப்பு:

எதியோப்பியாவின் புற தாழ்நிலங்களில் முக்கியமான தொழில் இதுவாகும். மேய்ச்சல் நிலம் மற்றும் தண்ணீரைத் தேடி ஒவ்வொரு பருவத்திலும் கால்நடை வளர்ப்பு இடம்பெயர்வதால், பெரிய மந்தைகளை இணைந்து இடப்பெயர்வுடன் கூடிய வாழ்வை இந்த மக்கள் குடும்பமாகக் கொண்டுள்ளனர்.

### மீன் பிடி வளம்:

நாட்டின் ஆறுகள் மற்றும் உள் நாட்டு ஏரிகளில் மீன்பிடித்தல் நடை பெறுகிறது. மேலும்,



இது முதன்மையான சிறு குழுத் தொழில் வகையாகவே செய்யப்படுகிறது. உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு இது இருக்கின்றது. மீன்பிடித் தொழில் சிறிய தாக இருந்தாலும், 1990-களில் உற்பத்தி இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. எதியோப்பியாவின் டெனாகில் சம வெளியிலிருந்து நாட்டிற்கு தேவையான உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. எதியோப்பியாவின் பொருளாதா ரத்தில் கனிமங்களின் பங்கு சிறியளவே. தங்கம் மற்றும் பிற தாதுக்கள் முக்கியத்துவம் வாய்ந் தவை. தெற்கில் உள்ள கிப்ரே மெங்கிஸ்டில் தங்கமும், மேற்கில் யூப் டோவில் பிளாட்டினமும் காணப்படுகின்றது.

இரத்தினக் கற்கள், நியோபியம் மற்றும் சோடா சாம்பல் வைப்புகளும் எடுக்கப்படுகின்றன. தெற்கு மற்றும் தென்கி ழக்குப் பகுதிகளான ஒகாடேன் (Ogaden) படுகை பரப்பில் பெட்ரோலியம், இயற்கை எரிவாயு உள்ளிட்ட கனிம வளங்களை எதியோப்பியா அண்மையில் கண்டுபிடித்தி ருக்கின்றது. இதன் ஏற்றுமதி ஆரம்பமாகும் சூழல் ஏற் பட்டும் இருக்கின்றது. டெனாகில் சமவெளியில் இருந்து பாறை உப்பு மற்றும் பளிங்கு போன்ற குவாரி எடுக்கப் பட்டு கட்டுமானப் பொருட்களும் உருவாக்கப்படுகின்றன. ஆனால், இதன் அளவு உள்ளூர் உற்பத்தியின் ஒரு சதவி கிதம் அளவிற்கு குறைவானதாகும். இங்கு தொழிற்சா லைகள் மற்றும் முக்கிய நகரங்களுக்கான மின்சார ஆதாரமாக நீர்மின்சாரம் காணப்படுகின்றது. அவசா நதி, நீல நைல் நதி அல்லது அதன் துணை நதிகளான ஓமோ நதி, கில்கெல் கிபே நதி, ஸெபெலே நதி உள்ளிட்ட இடங் களில் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 2016-இல் திறக்கப்பட்ட ஓமோ நதியின் குறுக்கே மிகப்பெரிய கில் கெல்கிபே அணை மற்றும் மின் நிலையம், 2025-இல் திறக் கப்பட்ட மிகப்பெரிய கிராண்ட் எத்தியோப்பியன் மறும லர்ச்சி அணை, ப்ளூ நைல் நதியின் குறுக்கே உள்ள மின் நிலையங்கள் போன்ற சில நீர்மின் திட்டங்கள் நாட்டிற்குத் தேவையான கணிசமான மின் உற்பத்திகளையும் செய் கின்றன. ஆனாலும், கிராமப்புறங்களில் வீட்டு உபயோகத் திற்கான எரிபொருளாக விறகு, கரி பயன்படுத்தப்படு கின்றன. ஆனாலும் இது நாட்டில் மீதமுள்ள மர வளங் களை அழிந்துவிடும் அபாயங்களை கொண்டுள்ளது என்பதும் கவனத்திற்குரியது.

கூடவே குடிசைக் கைத்தொழில் மூலம் மக்களுக்கான வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதோடு, உள்நாட்டு நுகர்வோருக்கான உற்பத்திகளும் மேம்படுத்தப்படு கின்றது. இது சிறு நிறுவனத் தொழில்துறையின் வளர்ச் சியின் விரிவுபடுத்தலின் முக்கிய அம்சமாகும். எடுத்துக் காட்டாக: தளபாடங்கள், விவசாயம், கட்டுமானக் கருவி கள், பாத்திரங்கள், துணி நெய்தல், கம்பளங்கள் நெய்தல், தோல் கைவினைப்பொருட்கள், காலணிகள், நகைகள், மட் பாண்டங்கள் மற்றும் கூடைகள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அங்குவரும் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்வதோடு, அவர்களால் நுகர்வும் செய்யப்படுகின்றது.

எதியோப்பியாவின் பொருளாதார ஈட்டத்தில் சுற்றுலாத்து றையும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. உள்நாட்டு வரு மானத்தில் ஐந்தில் இரண்டு பங்கை சுற்றுலாத்துறை ஈட் டித்தருகின்றது. இங்கு லாலிபெலாவின் பாறையில் வெட் டப்பட்ட புராதன தேவாலயங்கள், அக்சமில் உள்ள தொல் பொருட்கள், கோண்டர் அரண்மனை போன்ற வரலாற்று அதிசயங்கள், நாட்டின் இயற்கை அழகு, இங்குள்ள மக்க ளின் சிறப்பான கலாசாரம் போன்றன சுற்றுலாப் பயணி களைப் பெரிதும் கவர்ந்திழுக்கின்றன. நாட்டின் ஸ்திரத் தன்மையற்ற அரசியல் நிலைமை, சிறப்பற்ற உட்கட்ட மைப்பு போன்றவை சுற்றுலாத்துறையில் சரிவினை ஏற்ப டுத்தி வரும் நிலையில் அதனைச் சீர்செய்வதற்கான நடவ டிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறு அரசியல், பொருளாதாரம், தொழில்வாய்ப்புப் போன்ற பல விடயங்களில் முன்னேறிவருகின்ற எதி யோப்பியா சில தனித்துவமான அம்சங்களைத் தன்ன கத்தே கொண்டு விளங்குவதனை அவதானிக்க முடிகிறது. பொதுவாக எமது நாடுகளில் இரவு பன்னிரண்டு மணியுடன் நாள் முடிவடைவதாகவும் அதே பன்னிரண்டு மணிக் குப்பின் ஒருநாள் ஆரம்பிப்பதாகவும் கணக்கு வைத்திருக் கிறோம். ஆனால் இந்நாட்டு மக்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமான சூரியன் உதிக்கும் போது நாள் ஆரம்பிப்பதா கவும் சூரியன் மறையும்போது நாள் முடிவடைவதாகவும் நம்பிக்கை கொள்கின்றனர். இது அவர்கள் சூரிய ஆற்றலின் மீது கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

இந்நாட்டின் இன்னொரு சிறப்பம்சம் இலவசக் கல்விமுறை. அதாவது, எல்லா மக்களும் கல்வியைப் பெற் றுக்கொள்ளக்கூடியவகையில் இலவசக் கல்வியமைப்பு முறை உள்ளதால், கல்வி கற்போர் வீதமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதேவேளை, நாட்டில் காணப்படும் 47 வலயங்களில் ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு பல்க லைக்கழகம் என்ற அடிப்படையில் 47 பல்கலைக்கழ கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய கல்வி மேம்பாடு நாட்டில் இருப்பதன் காரணமாக மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளும் முன்னோக்கி நகர்ந்து செல்வது இந்நாட்டின் கூடுதல் சிறப்பம்சமாகக் கொள்ளலாம். அதேநேரம் இங்கு காணப்படும் பல்லின மக்களுக்கிடை யேயும் புரிந்துணர்வுடன் செயற்படக்கூடிய ஆற்றலும் நம் பிக்கையும் காணப்படுகின்றது. இதனால் மக்களுக்கிடை யோயான உள்ளக முரண்பாடுகள் ஒப்பீட்டளவில் மிகவும் நலிவுற்ற நிலையிலேயே உள்ளது. குறிப்பாக இங்கு இஸ் லாமியரும் கிறிஸ்தவரும் ஐக்கியமாகவும் ஒற்றுமையுடனும் வாழ்வது அதற்குத் தகுந்த சான்றாகும்.

பொதுவாக ஏனைய ஆபிரிக்க நாடுகளுடன் ஒப்பிடும் போது தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், கல்வி, சமூகந லனோம்பு போன்றவற்றில் முன்னிலையில் இருக்கும் நாடாக எதியோப்பியாவைக் குறிப்பிடலாம். இந்நாட்டின் ஆரோக்கியமான செயற்பாடுகள் சரியாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதோடு, நாட்டில் நிவர்த்திக்கப்பட வேண்டிய விடயங்கள் மீது கவனமெடுத்துச் செயற்படும் பட்சத்தில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக எதி யோப்பியாவும் மாற்றம் பெறும் காலம் வெகுவிரைவா னதாக இருக்கும்.



James@thaiveedu.com



# சமாதானம்...

## ட்ரம்பினால் எழுதப்பட்ட பாலஸ்தீன முடிவுரை

■ ரதன்

*'காலனித்துவவாதிகள்*
*என் துண்டிக்கப்பட்ட கையைத் திருடி -*
*அருங்காட்சியகத்தில் வைத்தனர்'.*
- Mahmoud Darwish

ஒக்ரோபர் 13-ஆம் நாள், 20 இஸ்ரேலிய போர்க் கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்தது. இது டொனால்ட் ட்ரம்பினால் முன்வைக்கப்பட்ட சமாதான திட்டத்தின் ஒரு பகுதியாக விருந்தது. அதே சமயம், இஸ்ரேல் 2000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியரை விடுதலை செய்தது. இஸ்ரேல் காசாவைத் தரைமட்டமாக்கிக்கொண்டிருந்த வேளையில் சடுதியாக டொனால்ட் ட்ரம்பினால் 20 அம்ச சமாதான திட்டம் வெளியிடப்பட்டது. ஹமாசுக்கு வழங்கப்பட்ட அவகாச எல்லைக்குள் ஹமாஸ், போர்க் கைதிகளை விடுதலை செய்ய முன்வந்தது.

டொனால்ட் ட்ரம்பினால் முன்வைக்கப்பட்ட சமாதான திட்டம் பல கேள்விகளையும் எழுப்புகின்றது.

- ஏன் இந்த அவசர சமாதான திட்டம்? இதன் பின்னால் உள்ள அரசியல் என்ன? இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தல் 2026 ஒக்ரோபர் 27-இல் தான் நடைபெறவுள்ளது.
- டொனால்ட் ட்ரம்பின் சமாதான திட்டத்திற்கு முன்பாக, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளால் முன்வைக்கப்பட்ட இரு நாடு என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா?
- பாலஸ்தீன அதிகார சபையின் எதிர்காலம் என்ன? அதிகார சபையின் தொடர்ச்சியை அமெரிக்காவும், இஸ்ரேலும் ஏற்றுக்கொள்ளுமா? செப்ரெம்பர் 29, 2025-இல் நடைபெற்ற ஐ.நா. சபைத் தொடரில் கலந்துகொள்ள பாலஸ்தீன அதிகார சபை உறுப்பினர்களுக்கு விசா கொடுக்க அமெரிக்கா மறுத்துவிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
- பாலஸ்தீன மக்கள் தனி அடையாளம் கொண்ட பாலஸ்தீனியர்களாக கருதப்படுவார்களா அல்லது அவர்களது அடையாளம் இஸ்ரேலின் ஆளுகைக்குட்பட்ட இஸ்ரேலிய பாலஸ்தீனியர்களாக ஆக்கப்படுவார்களா?
- ஹமாசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் இந்த பேச்சுவார்த்தைகளின் போது பாலஸ்தீன மக்களதும், அவர்களது நலன்கள் மீதும் முழுமையான கவனம் செலுத்தினார்களா? பாலஸ்தீனிய சுய இராச்சியத்தை இவர்கள் கருத்திற்கொண்டார்களா?
- ஹமாசுக்கும், பற்றாவிற்குமான உறவு இறுக்கமாகுமா? அல்லது பிளவு நிலைக்கு தள்ளப்படுமா?
- வட அயர்லாந்தில் 2005-ஆம் ஆண்டு Provisional Irish Republican Army (Pira), 2007-இல் கொலம்பியாவில் Revolutionary Armed Forces of Colombia (Farc) ஆகிய அமைப்புகள் சமாதான உடன்பாட்டின் பின்னர் ஆயுதங்களை கைவிட்டனர். அதே போல் ஹமாஸ் ஆயுத போராட்டத்தைக் கைவிட்டு, அஹிம்சா போராட்டுத்துக்கு மாறுமா? ஆயுதங்களை கைவிட்டபோதும், வட அயர்லாந்து பல வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக இங்கிலாந்து குற்றஞ்சாட்டியுள்ளது.
- சமாதான உடன்பாட்டின் ஓர் அம்சமாக அமைக்கப்படவுள்ள காசாவின் அதிகார குழுவில் ஹமாஸ் தவிர்க்கப்பட்டுள்ளது. இக்குழுவானது காசா மக்களின் அன்றாட விடயங்களை கண்காணிக்கும் மற்றும் தீர்மானிக்கும் குழுவாகும். இதில் பாலஸ்தீனிய புத்திஜீவிகளும், சர்வதேச உறுப்பினர்களும் அடங்குவார்கள். ஹமாசைத் தவிர்த்து இக்குழு முழுமையாக இயங்க முடியுமா?
- சர்வதேச பாதுகாப்பு படை காசாவில் சாத்தியமாகுமா?
- 1948-இல் பிரித்தானியாவால் பாலஸ்தீனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி போன்றதா இப்போது டொனால்ட் ட்ரம்பினால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதான திட்டம்?

இக்கேள்விகளுக்கு விடை தேடும் முயற்சியே இக்கட்டுரை. சகல கேள்விகளுக்கும் பதில் கூறாவிட்டாலும், மிக முக்கியமான விடயங்கள் இங்கே விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பல கேள்விகளே விடையுமாக உள்ளது. உதாரணத்துக்கு ரொனி பிளேயர் - முன்னால் பிரித்தானிய பிரதமர். இவரைப் பற்றி தனியாக ஒரு கட்டுரை எழுதுமளவிற்கு பாலஸ்தீனியப் பிரச்சினையை மேற்கின் கொள்கைகளுக்கு ஏற்ப இஸ்ரேலுக்கு சாதகமாக முடித்துள்ளார்.

> ***2025-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்க புள்ளிவிவரங்கள், 2023 ஒக்ரோபர் 7 தாக்குதல்களுக்குப் பிறகு ஹமாஸ் 15,000 புதிய தன்னார்வலர்களை சேர்த்துள்ளனர் அல்லது ஹமாசுடன் இணைந்துள்ளனர். இது பெரும்பாலும் மோதல் தொடங்கியதிலிருந்து போரில் இறந்த ஹமாஸ் வீரர்களை மாற்றீடு செய்கின்றது.***

## ஆயுதம் - ஆட்சி:

பாலஸ்தீனிய சமாதானத்துக்கும் காசா மற்றும் மேற்கு கரைப் பகுதி பாலஸ்தீனிய மக்களின் அமைதியின்மைக்கும் மிக முக்கியமாக கூறப்படும் விடயங்களுள் ஒன்று ஹமாசும் அதன் ஆயுதங்களும் சுரங்கப் பாதைகளுமாகும்.

## ஹமாஸ் ஆயுதக் குறைப்புச் செய்யுமா?

ஹமாஸின் முன்னணி பேச்சுவார்த்தையாளரான கலீல் அல்-ஹயாவும் (Khalil al-Hayya) காசாவிற்கு வெளியே வசிக்கும் பிற அரசியல் அதிகாரிகளும் பரந்த அமைதி செயல்முறையின் ஒரு பகுதியாக ஆயுதக் குறைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக வோல் ஸ்ரீற் ஜேர்னல் பதிவு செய்துள்ளது. ஆனால், காசாவில் இன்னும் வசிக்கும் மற்ற தலைவர்களும் போராளிகளும் சமரசம் செய்யத் தயாராக இல்லை என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். காசாவில் நடந்த இரண்டு ஆண்டுகாலப் போரில் ஹமாஸ் குறிப்பிடத்தக்க வகையில் மீள்தன்மையுடன் (முற்றாக அழிக்கப்படாமல், புதிய உறுப்பினர்களுடன்) செயற்பட்டு வருகிறது. 2025-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்க புள்ளிவிவரங்கள், 2023 ஒக்ரோபர் 7 தாக்குதல்களுக்குப் பிறகு ஹமாஸ் 15,000 புதிய தன்னார்வலர்களை சேர்த்துள்ளனர் அல்லது ஹமாசுடன் இணைந்துள்ளனர். இது பெரும்பாலும் மோதல் தொடங்கியதிலிருந்து போரில் இறந்த ஹமாஸ் வீரர்களை மாற்றீடு செய்கின்றது. இவர்களில் பலர் போரின் போது தங்கள் குடும்பத்தினரையும் சொத்துக்களையும் இழந்த பிறகு தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயங்கலாம்.

காசாவில் செயற்படும் ஆயுதமேந்திய பாலஸ்தீனக் குழு ஹமாஸ் மட்டுமல்ல. ஒக்ரோபர் 7 அன்று இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ஹமாஸ் தலைமை தாங்கினாலும் தாக்குதல் படையில் பல ஆயுதக் குழுக்களின் போராளிகள் இருந்தனர். பாலஸ்தீனிய இஸ்லாமிக் ஜிகாட் (Palestinian Islamic Jihad (PIJ)), Al-Aqsa Martyrs Brigades, The Democratic Front for the Liberation of Palestine (DFLP), Popular Front for the Liberation of Palestine (PFLP) போன்ற அமைப்புக்கள் இயங்குகின்றன. DFLP காசாவின் சர்வதேச நிர்வாகக் குழுவையும் குறிப்பாக ரொனி பிளேயரின் பிரதிநிதித்துவத்தையும் நிராகரிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஹமாசின் பலம் குறைக்கப்படும் பொழுது அல்லது பலவீனமடையும் பொழுது, டி.எப்.எல்.பி போன்ற மிகத் தீவிர அமைப்புகள் காசாவின் முக்கிய அதிகார சக்திகளாகின்றன. இது இஸ்ரேலுக்கும் ஆபத்தானது.

ஆயுதக் குறைப்பு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்த விவரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. ஹமாஸ் ஒரு சர்வதேசப் படையை நம்புமா என்பது கேள்வியாக உள்ளது. ஒருமுறை தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டால், அவற்றை மீண்டும் ஒருபோதும் கையில் எடுக்க முடியாது என்பதை ஹமாஸ் நன்கு அறிந்திருக்கிறது.

ஆயுதக் குறைப்பு என்பது ட்ரம்ப் திட்டத்தின் மையக் கொள்கையாகும் - ஆனால் சனிக்கிழமையன்று ஒரு மூத்த ஹமாஸ் அதிகாரி ஊடகங்களுக்கு கூறுகையில் ஆயுதக் குறைப்பு ‘கேள்விக்கு அப்பாற்பட்டது’ என்று கூறினார். மேலும் ‘எங்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை பேச்சுவார்த்தைக்கு ஏற்றதல்ல’ என்ற விடயத்தையும் முன்வைத்தார். பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டபோதும் காசாவின் சில பகுதிகளில் ஆயுதம் ஏந்திய போராளிகளின் படங்கள் இருந்தன. இது ஹமாஸ் தனது அதிகாரத்தை மீண்டும் உறுதிப்படுத்த மேற்கொண்ட ஒரு வெளிப்படையான முயற்சியாகும்.

‘வன்முறையைப் பயன்படுத்துவதில் ஹமாஸ் ஏகபோகத்தைக் கொண்டிருப்பதால் இவ்வளவு காலமாக அதிகாரத்தில் நீடித்து வருகிறது. மேலும்,

அவர்களின் ஆட்சியின் வரலாறு அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கும்போது அவர்கள் தங்கள் இராணுவ உட்கட்ட மைப்பை மேம்படுத்த முயற்சிப்பார்கள் என்பதைக் குறிக் கிறது.'

ஒக்ரோபர் 12-ஆம் நாள் ஹமாசிற்கும், Doghmush clan படை களுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் 27 பேர் இறந் துள்ளனர். இதில் எண்மர் ஹமாஸ் படைவீரர்களாவார்கள். Doghmush clan-யின் பின்னால் இஸ்ரேல் உள்ளதாக குற் றஞ்சாட்டப்படுகின்றது.

ஹமாசுடன், உள்ளூர் குழுக்கள் சண்டையிட்டுள்ளன. இஸ்ரேல் காசாவினுள் ஒரு உள்நாட்டு யுத்தம் ஒன்றை தொடங்குவ தற்கு காசாவினுள் உள்ள சிறிய ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களையும் நிதியையும் வழங்கி ஊக்கப்படுத்துகின்றது.

இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகு ஹமாசை முற்றாக அழிப் போம் என்கின்றார். அதனையே டொனால்ட் ட்ரம்ப் கூறு கின்றார். ஹமாசையும் அவர்களது சுரங்கங்களையும், ஆயுதக் கிடங்குகளையும் அழிப்பதாயின் காசா முற்றாகத் தரைமட்டமாக்கப்பட வேண்டும்.

டொனால்ட் ட்ரம்பின் சமாதான ஒப்பந்தத்தின் பின் நடை பெறும் நிகழ்வுகள், மீண்டும் காசாவினுள் இஸ்ரேலின் ஆக் கிரமிப்பு நடைபெறும் என்பதனையே வெளிப்படுத்துகின்றது

பாலஸ்தீன - இஸ்ரேல் சமாதானத்தில் மேற்கு நாடுகள் குறிப்பாக முன்வைக்கும் விடயம் ஹமாஸ் ஆயுதங்களை கைவிடவேண்டும் என்பதாகும். இது சாத்தியமற்றது என்ப தனை மேற்கு நாடுகள் தெரிந்திருந்தும், அதற்கான அழுத் தத்தை அதிகரிக்கின்றன. ஹமாசின் ஆயுதக் களைப்பு என்பது பாலஸ்தீன மக்களின் சுயத்தை அழிக்கும். அது மட்டு மல்லாமல் பாலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் வன்முறை அதிகரிக்கும்.

## இஸ்ரேல் தனது படைகளைத் திரும்பப் பெறுமா?

இதுவரை, காசாவின் முக்கிய நகரங்களிலிருந்து இஸ்ரேல் பின்வாங்கியுள்ளது. இது ஒரு தற்காலிக யுத்தியாகும். ஆனால், இஸ்ரேலின் இலக்கு காசாவை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகும். அதாவது, அது இப்போது சுமார் 53% பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளது. கோட்பாட்டளவில், திரும்பப் பெறுதல் மேலும் இரண்டு கட் டங்களில் தொடரும்: முதலாவதாக, உறுதிப்படுத்தலின் பின்னர் இடம் பெறும். இரண்டாவதாக ஒரு நீடித்த பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெறும். இவையிரண்டுக் கும் சர்வதேசம் உறுதி வழங்கவேண்டும். எனவே இது எழுத்து வடிவிலோ, அல்லது பேச்சுக்காகவே அமையும். யதார்த் தத்தில் இதனை ஒரு பொழுதும் இஸ்ரேல் செய்யாது.

ஆனால், சமீபத்திய நாட்களில் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவின் மொழி மாறியுள்ளது.' இஸ்ரேலிய தற்காப்புப் படை (IDF) காசா பகுதிக்குள் மிக ஆழமாக ஊடுருவி, அங் குள்ள அனைத்து மூலோபாய இடங்களையும் இப்போது தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது,' என்று அவர் ஓர் அறிக்கையில் தெரிவித்தார். 'நாங்கள் ஹமாஸை அனைத் துத் திசைகளிலிருந்தும் சுற்றி வளைத்து வருகிறோம். ஆத லால், இஸ்ரேலியப் படைகளைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றே கூறலாம்' என்ற கருத் தையும் நெதன்யாகு திட்டவட்டமாக வெளிப்படுத்தினார். இஸ்ரேலின் சமீபத்திய நடவடிக்கைகள் ஊக்கமளிப்பதாக இல்லை. உதாரணமாக, 'அவர்கள் சிரியாவில் உள்ள புதிய பகுதிகளை காலவரையின்றி ஆக்கிரமித்துள்ளனர்.' அங்கு போர் நிறுத்தம் இருந்தபோதிலும், அவர்கள் தெற்கு லெபனானைத் தாக்கினர். இஸ்ரேல் தனது சமாதான ஒப்பந் தங்களைச் செயலாற்றும் விதத்தைப் பார்க்கும்போது, அது காசாவிலிருந்து தனது படைகளைத் திரும்பப் பெறாது என்பது தெளிவாகிறது.

> **இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகு ஹமாசை முற்றாக அழிப்போம் என்கின்றார். அதனையே டொனால்ட் ட்ரம்ப் கூறுகின்றார். ஹமாசையும் அவர்களது சுரங்கங்களையும், ஆயுதக் கிடங்குகளையும் அழிப்பதாயின் காசா முற்றாகத் தரைமட்டமாக்கப்பட வேண்டும்.**

tg.theeban@gmail.com



இஸ்ரேல் படைகளை மீளப்பெறுமா என்ற கேள்வி ஒரு புற மிருக்க, டொனால்ட் ட்ரம்ப் ஒரு சர்வதேச பாதுகாப்பு படைத் திட்டத்தை முன்வைக்கின்றார். சர்வதேச பாதுகாப்பு படை காசாவில் சமாதான பாதுகாப்பு படையாகவிருந்தால், அதே சமயம் இஸ்ரேல் படைகளும் அங்கு காசா மக்களை காவல் காக்குமா? அல்லது இஸ்ரேல் படைகளுக்கு பாதுகாப் பிற்காக சர்வதேச பாதுகப்பு படை செயற்படுமா? எது எப் படியிருப்பினும் இஸ்ரேலிய படைகள் முற்று முழுதாக காசாவை விட்டு வெளியேறாது என்பது உறுதி.

### சர்வதேச பாதுகாப்பு படை
International Stabilization Force (ISF):

வெள்ளை மாளிகை திட்டத்தின்படி அமெரிக்கா 'காசாவில் உடனடியாக நிலைநிறுத்த ஒரு தற்காலிக சர்வதேச நிலைப் படுத்தல் படையை (ISF) உருவாக்க அரபு மற்றும் சர்வதேச கூட்டாளிகளுடன் இணைந்து செயற்படும்' என்று கூறுகிறது. அத்தகைய படை 'நீண்ட கால உள்நாட்டு பாதுகாப்பு தீர்வாக' இருக்கும் என்று அது கூறுகிறது. கோட்பாட்டளவில் ஹமாஸை மீண்டும் கட்டியெழுப்ப அனுமதிக்காமல் அதன் படைகளை அகற்ற முடியும் என்ற உறுதியை இஸ்ரேலுக்கு அது வழங்குகின்றது. இது சாத்தியப்படுமா? என்பது மற் றொரு கேள்வியாகும்.

சர்வதேசப் பாதுகாப்பு படை என்ற இத்திட்டத்தின்படி, எகிப்து மற்றும் ஜோர்டானில் பயிற்சி பெற்ற பாலஸ்தீன போலீசாரு டன் சேர்ந்து, காசாவில் அரபு நாடுகள் தலைமையிலான சர்வதேச பாதுகாப்புப் படையை அமைக்க அமெரிக்கா விரும்புகின்றது. அந்தப் படைகள் நிலைநிறுத்தப்படும் போது இஸ்ரேலியப் படைகள் கூடுதல் பகுதிகளை விட்டு வெளியேறும் என்று கூறுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், புதி தாகப் பயிற்சி பெற்ற பாலஸ்தீன காவல் துறையினருடன் சேர்ந்து, எல்லைப் பகு திகளைப் பாதுகாக்க இஸ்ரேல் மற்றும் எகிப்துடன் இணைந்து செயற்படும். அமைதி காக்கும் படையாக செயற்பட ஐ.நா.-வின் பாதுகாப்பு கவுன்சில் அங்கீ காரம் வழங்கியுள்ளது. போர் நிறுத்தத் தையும் அமைதித் திட்டத்தின் ஆரம்ப கட்டங்களையும் கண்காணிக்க சுமார் 200 அமெரிக்க துருப்புக்கள் இப்போது இஸ்ரேலில் உள்ளன. கூட்டாளி நாடு கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை வீரர்களுடன் இணைந்து அவர்கள் அந்தப் பணியை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

> ***"சர்வதேசப் பாதுகாப்பு படை என்ற இத்திட்டத்தின்படி, எகிப்து மற்றும் ஜோர்டானில் பயிற்சி பெற்ற பாலஸ்தீன போலீசாருடன் சேர்ந்து, காசாவில் அரபு நாடுகள் தலைமையிலான சர்வதேச பாதுகாப்புப் படையை அமைக்க அமெரிக்கா விரும்புகின்றது."***

அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் அத்தகைய பெரும்பான்மை கொண்ட படையை உருவாக்கும் என்று தோன்றினாலும் பல முக்கியமான விவரங்கள் இன்னும் உருவாக்கப்படவில்லை. அதற்கு ஐ.நா.-வின் ஆணை கிடைக்குமா?, பங்களிக்கும் நாடுகள் என்ன விலை கேட்கும்? மற்றும் அது என்ன செய்ய வேண்டும்? என்பது போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வில்லை. 'சர்வதேச பாதுகாப்புப் படை ஹமாஸை எதிர்த்துப் போராடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை' என மேற்கத் தேய அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தாலும், அவ்வாறு போரிடின் என்ன விளைவுகள் நடைபெறும் என்பதனையும் அமெரிக்காவும், இஸ்ரேலும் அறியும். இந்த சர்வதேசப் படையின் இருத்தலில், இஸ்ரேல் தொடர்ந்து காசாவை ஆக் கிரமித்தது, அதனை ஹமாசினாலேயே நடைபெற்றது எனத் திசைதிருப்பும். ஆனால், பாலஸ்தீனத்தை ஆதரிக்கும் மேற் கத்தேய நாடுகள் தவிர்ந்த நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இந்த சர்வதேசப் படையில் இடம்பெற்றால், இஸ்ரேல் ஆக்கி ரமிப்பு குறைவாகவிருக்கும். எனினும் இஸ்ரேலும் அமெரிக் காவும் தங்களுக்கு சாதகமான நாடுகளைச் சேர்ந்தவர் களையே படையில் இணைப்பார்கள். இது ஒரு சாதகமற்ற சூழலையே உருவாக்கும்.

சமீபத்தில் லெபனானில் ஐ.நா. அமைதிப்படைக்கு அருகில் இஸ்ரேலிய ஆளில்லா விமானம் எறிகுண்டுத் தாக்குதலை நடத்தியது. போர் நிறுத்த மீறல்கள் அதிகளவு இஸ்ரேலி னாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இஸ்ரேலைச் சுற்றி உள்ள நாடுகளில் உள்ள ஐ.நா. படைகள் தங்களது தளங் களை விட்டு வெளியேறுவது குறைவாகவேயுள்ளது.

### நிர்வாகம் - அதிகாரம் - ஆட்சி:
**காசா சர்வதேச நிர்வாகக் குழு:**

20 அம்சத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய நிர்வா கக் குழு மிக முக்கியமானது. காசா தொழில்நுட்ப ரீதியா கவும் அரசியலற்றதாகவும் இருக்கும். காசா - பாலஸ்தீனியம் தற்காலிக இடைக்கால நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும். இது காசாவில் உள்ள மக்களுக்கு பொது சேவைகள் மற்றும் நகராட்சிகளின் அன்றாட நிர்வாகத்தை வழங்குவதற்கு பொறுப்பாகும். இந்தக் குழு தகுதிவாய்ந்த பாலஸ்தீனியர்கள் மற்றும் சர்வதேச நிபுணர்களைக் கொண்டி ருக்கும். மேலும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையில் அமையும் குழுவில் சர்வதேச உறுப்பினர்கள் அங்கம் வகிப் பார்கள். இது அமைதிக்கான இடைக்கால குழுவாக இயங்கும். இடைக்கால அமைப் பின் மேற்பார்வையுடன் முன்னாள் இங்கி லாந்து பிரதமர் டோனி பிளேர் உட்பட பிற உறுப்பினர்கள் மற்றும் அரச தலைவர்கள் அங்கம் வகிப்பார்கள். உறுப்பினர்களின் பெயர்கள் பின்னர் அமெரிக்க அரசினால் அறிவிக்கப்படும்.

அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட முக்கிய பொறுப்புகளில் பின்வருவன அடங்கும்:

- சட்டபூர்வமாகவும் அரசியல் ரீதியாகவும் முடிவுகளை எடுத்து, திட்டத்தை வெளியிடுதல்.
- முக்கிய சட்டங்கள் மற்றும் நியமனங்களை அங்கீகரித்தல்.
- நீண்டகால மூலோபாய திட்டத்தை வரையறுத்தல்.
- ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலுக்கு நேரடியாக அறிக்கை செய்தல்.

2025-க்கு முன்பாக 2002-இல் The Quartet 2002 என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இதில் ஐ.நா. சபை, ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன

இணைந்தே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இவ்வமைப்பின் நோக்கம் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் செய்வதோடு பாலஸ்தீன பொருளாதார மேம்பாடு மற்றும் நிறுவனக் கட்டமைப்பை ஆதரிப்பதேயாகும். ரொனி பிளேயர் 2017-2020 வரை இவ்வமைப்பின் முக்கியஸ்தராகவும் தலைவராகவும் கடமையாற்றியிருந்தார். இவ்வமைப்பு கடந்த 23 ஆண்டுகளில் எதனையுமே சாதிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கிழக்கு ஜெருசலேத்தில் இதன் தலைமை அலுவலகமுள்ளது.

### பாலஸ்தீன தலைமையிலான ஆட்சிக்கு மாற்றம் ஏற்படுமா?

காசாவில் ஒரு இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று வெள்ளை மாளிகை முன்மொழிந்துள்ளது. ஆனால், இந்தத் திட்டத்தில் பாலஸ்தீன மக்களின் அரசியல் பிரதிநிதிகள் (சிவில் சமூகம்) எவரும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. இந்த இடைக்கால அரசாங்கத்தில் டோனி பிளேயர் இருப்பார், ஆனால் இதுவரை நம்பகமான பாலஸ்தீனத் தலைவர் ஒருவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட பாலஸ்தீன அதிகாரசபைக்கு (Palestinian Authority) நிரந்தரப் பொறுப்பைக் கொடுக்க நெதன்யாகு விரும்பவில்லை. எவ்வாறாயினும், அந்த நிர்வாக அமைப்பும் அதன் தலைவர் மஹ்மூத் அப்பாஸும் காசாவில் அதிக ஆதரவைப் பெறவில்லை (அல்லது செல்வாக்கு இல்லாமல் உள்ளனர்). ‘இந்தச் சமாதான முயற்சியில் பாலஸ்தீனிய மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. முடிவில் ஓர் அரசை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய ஒரு பெரிய சமாதான ஒப்பந்தமும் இதுவல்ல’ என்று மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீன அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் மற்றும் அதனுடன் இணைந்த குழுக்கள், காசாவின் எதிர்காலம் ஓர் இடைக்கால நிர்வாகத்தால் துண்டிக்கப்படும் அல்லது சிதைக்கப்படும் என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றன. இந்தத் திட்டம், ஆரம்பத்திலிருந்தே செயற்படக்கூடிய ஒரு நிர்வாக அமைப்பு (ஹமாஸ்) உருவாகும் அனைத்துச் சாத்தியக்கூறுகளையும் முற்றிலுமாகத் தடுத்துவிட்டது. மேலும், இதன் விளைவு ஈராக் படையெடுப்பிற்குப் பின்னர் நிகழ்ந்ததைப் போன்ற ஒரு பெரும் ‘பேரழிவுக்கு’ இட்டுச் செல்லும் என்ற அச்சத்தையும் இது எழுப்புகிறது. மருத்துவர்கள், பொறியாளர்கள், காவல்துறையினர், செவிலியர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் எனப் பல துறைகளில் பணிபுரியும் பொதுமக்களும் ஹமாஸுடன் இணைந்திருக்கக்கூடும் என்ற யதார்த்தத்தை இந்தக் கொள்கை அங்கீகரிக்கத் தவறிவிட்டது. ஈராக்கில் பரவலாகப் புறக்கணிக்கப்பட்ட இத்தகைய அணுகுமுறை, விரைவில் அராஜகம் மற்றும் பிரிவினைவாத வன்முறைக்கு வழிவகுத்தது.

காசா பல விடயங்களில் வேறுபட்டது. ‘ஆனால் இவை அனைத்திலிருந்தும் காணாமல் போனது, ஒரு அர்த்தமுள்ள நல்லிணக்க செயல்முறையாகும். இது அனைத்து பாலஸ்தீனியர்களும் சிவில் பங்கேற்பில் பங்கேற்க வாய்ப்பளிக்கவில்லை. பாலஸ்தீன சமூகத்திற்கு பயனளிக்கும் ஓர் ஒப்பந்தமாக அதைப் பார்ப்பது கடினம்.’

### பாலஸ்தீனிய அதிகார சபையின் எதிர்காலம்:

தற்சமயம் பாலஸ்தீனிய அதிகார சபையானது மேற்கு கரைப் பிரதேசம் மற்றும் காசாப் பகுதிகளை உள்ளடக்கியது. இதன் நிதித்துறை இஸ்ரேலிடமே உள்ளது. காசாப் பகுதி நிர்வாகச் செலவிற்கு கட்டார் போன்ற நாடுகள் உதவி செய்து வருகின்றன. இனிவரும் காலங்களில் பாலஸ்தீனத்துக்கு வழங்கப்படும் நிதி அனைத்தும் முதலீடுகள் உட்பட இஸ்ரேலினூடாகவே செயற்படுத்தப்படும். இஸ்ரேல் தொடர்ச்சியாகப் பாலஸ்தீன அதிகார சபையை கட்டுப்படுத்தியே வருகின்றது. காசா - இஸ்ரேல் சமாதான பேச்சுவார்த்தைகளின் போதும், பாலஸ்தீன அதிகார சபையின் பிரதிநிதித்துவம் குறைந்தேயிருந்தது. காசாவைத் தொடர்ந்து, மேற்கு கரையில் வாழும் பாலஸ்தீனியர்களையும் முற்றாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவே இஸ்ரேல் விரும்புகின்றது. பாலஸ்தீன அதிகார சபைக்கும் மேற்கு கரைப் பிரதேசத்துக்கும் புதிய தீர்க்கமான செயல் தலைவர்கள் வந்தால் மட்டுமே பாலஸ்தீன அதிகார சபை எழுச்சி பெறும். இல்லையேல் அமெரிக்கா ஐ.நா. சபையில் பாலஸ்தீனத்துக்குரிய விசேட உறுப்பினர் பதவியையும் இல்லாமல் செய்துவிடும். இஸ்ரேல் இதனையே விரும்புகின்றது.

### காசா பகுதியை ஹமாஸ் நிர்வாகிக்கும் சாத்தியம் உள்ளதா?

ஹமாஸுக்கு எந்தப் பங்கும் இருக்காது என்பதுதான் என் கருத்து. ஆனால், ட்ரம்ப் கூட இது குறித்து கலவையான கருத்துக்களைக் கூறிவருகின்றார். காசாவில் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிர்வகிப்பதில் அவர்களுக்கு



> நான் மிகவும் வித்தியாசமான ஒன்றைப் பற்றிப் பேசுகிறேன். நாங்கள் காசாவை மீண்டும் கட்டியெழுப்புவது பற்றிப் பேசுகிறோம். நான் ஒற்றை மாநிலம் அல்லது இரட்டை அரசு அல்லது இரு-மாநிலம் பற்றிப் பேசவில்லை. நாங்கள் காசாவை மீண்டும் கட்டியெழுப்புவது பற்றிப் பேசுகிறோம்.
>
> – டொனால்ட் ட்ரம்ப்



ஒரு பங்கை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்ததாக அவர் கூறினார். குறைந்தபட்சம் தற்காலிகமாக, குழப்பத்தைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக ட்ரம்ப் இதை வடிவமைத்தார். இந்த விஷயத்தில் முரண்பாடு உள்ளது.

ஹமாஸ் ஆயுதங்களைக் களைய ஒப்புக்கொள்ளவில்லை. பொது மன்னிப்புக்கு ஈடாக அதிகாரத்தை கைவிட அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடும் என்று தகவல்கள் வந்தன. ஆனால் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

ஹமாஸை அழிக்கும் அதன் குறிக்கோளில் இஸ்ரேல் வெற்றிபெறவில்லை என்பது நமக்குத் தெரியும். அந்தக் குழு போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது, அவர்கள் காசாவில் சில அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொண்டதைக் காட்டுகிறது. குறைந்தபட்சம் இப்போதைக்கு 'ஹமாஸ்' இன்னமும் தொடரும் உரையாடலின் ஒரு பகுதியாகும்'.

### இரு நாடுகள்:

டொனால்ட் ட்ரம்பின் 2.0 அரசால் சமாதான திட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்பாக, மேற்கின் பல நாடுகள் (பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஸ்பெயின்) இரு நாடுகள் திட்டமே பாலஸ்தீன பிரச்சினைக்கான தீர்வாக அமையும் எனக் கூறி அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். டொனால்ட் ட்ரம்பினால் முன்வைக்கப்பட்ட சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது இந்த நாடுகளின் தலைவர்களும் அங்கிருந்தார்கள். அவர்கள் எவருமே சமாதானத்தின் பின்னர் இந்த இரு நாடுகள் தீர்வுத் திட்டம் பற்றி உரையாடவில்லை. கருத்தும் தெரிவிக்கவில்லை. மாறாக டொனால்ட் ட்ரம்ப் ஊடகங்களுக்கு பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார். 'நான் மிகவும் வித்தியாசமான ஒன்றைப் பற்றிப் பேசுகிறேன். நாங்கள் காசாவை மீண்டும் கட்டியெழுப்புவது பற்றிப் பேசுகிறோம். நான் ஒற்றை மாநிலம் அல்லது இரட்டை அரசு அல்லது இரு-மாநிலம் பற்றிப் பேசவில்லை. நாங்கள் காசாவை மீண்டும் கட்டியெழுப்புவது பற்றிப் பேசுகிறோம்.'

### மீள் கட்டமைப்பு அபிவிருத்தி தொடங்கப்படுமா?

வெள்ளை மாளிகைத் திட்டம் 'பல சிந்தனைமிக்க முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் உற்சாகமான வளர்ச்சி யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு காசாவை 'மீண்டும் கட்டியெழுப்பவும் உற்சாகப்படுத்தவும்' உறுதியளிக்கிறது. இது ஒரு தெளிவற்ற வாக்குறுதி.

இங்கு அபிவிருத்தி என்ற பெயரில் காசாவில் நடைபெற்ற அநீதிகளை சர்வதேசம் மறப்பதற்கான ஒரு வாய்ப்பாக அமெரிக்காவும் இஸ்ரேலும் கருதலாம்.

மீண்டும் முக்கிய விபரங்கள் இல்லாத நிலையில், காசாவிற்கான விரைவான 'மார்ஷல் திட்டம்' சாத்தியமில்லை என்று தோன்றுகிறது. 'பாலஸ்தீனியர்கள் நம்பமுடியாத அளவிற்கு வளமானவர்கள்'. 'எந்த வகையான அமைதியையும் கருத்தில் கொண்டு, அவர்கள் விரைவாக சாலைகளைச் சுத்தம் செய்து மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிப்பார்கள். ஆனால், அழிவின் அளவு நிச்சயமாக மிகப்பெரியது. மேலும், இராணுவ பயன்பாட்டிற்கு எதுவும் திருப்பி விடப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதங்கள் உள்ளன என்பதை இஸ்ரேல் தொடர்ந்து கேட்கும். செயல்பாட்டில் கடுமையான நிபந்தனைகளை வைக்கும். 2014 போருக்கு பின்னரான மறு கட்டமைப்பு அல்லது அபிவிருத்தி என்பது மிகக் குறைந்த வேகத்திலேயே நடைபெற்றது.

### கைதிகள் பரிமாற்றம்:

முன்வைக்கப்பட்டுள்ள 20 அம்ச திட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்களுள் ஒன்றான போர்க்கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது.

- ஹமாசினால் கைது செய்யப்பட்ட கைதிகள் - 251
- 2023-இல் விடுதலை செய்யப்பட்டவர்கள் - 105
- தனிப்பட்ட முயற்சிகளால் விடுதலை செய்யப்பட்டவர்கள் - 05
- இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரால் விடுவிக்கப்பட்டோர் - 08
- தை 2025 போர் நிறுத்தத்தின் போது விடுவிக்கப்பட்டோர் - 20
- ஒக்ரோபர் டொனால்ட் ட்ரம்பினால் விடுவிக்கப்பட்டோர் - 30
- போரின் போதும், பிற காரணங்களாலும் கொல்லபட்டோர் என நம்பப்படுபவர்கள் - 83

இஸ்ரேலினால் கைது செய்யப்பட்ட பாலஸ்தீனியர்களில் சுமார் 2000 பேர் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் மேற்கு கரைப் பகுதியைச் சேர்ந்தோர் கணிசமானவர்கள் ஆவார்கள்.

பயணக்கைதிகள் விடுவிக்கப்பட்டபோது அது இஸ்ரேலின் வெற்றியாகவும், டொனால்ட் ட்ரம்பின் சாதுரியத்துக்கும், பய முறுத்தலுக்கும், அதிகாரத்துக்கும் கிடைத்த வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. அமெரிக்கா தொடர்ந்து பாலஸ்தீன மக்களின் உரிமைகளை மறுப்பதனையும் மறுபுறத்தில் பாலஸ்தீன போராட்டத்தை ஒரு பயங்கரவாத போராட்டமாக மாற்றுவதனையும் காணலாம். சமச்சீரற்ற தன்மையை சம யோசிதமாக மறைத்து, விளைவை இஸ்ரேல் சம்பாதித்த வெற்றியாகக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் டொனால்ட் ட்ரம்பின் உரை யானது பாலஸ்தீன மக்களுக்கான சுதந்திரம் என்பது பெறப் படுவதற்கு பல தசாப்பதங்கள் செல்லும் என்பதனை உறு திப்படுத்துகின்றது. உரையின் ஒரு பகுதி The chamber erupted as Trump declared, ‘This is not only the end of a war, this is the end of an age of terror and death and the beginning of the age of faith and hope and of God’. அதாவது ‘இது ஒரு போரின் முடிவு மட்டுமல்ல, இது பயங்கர வாதம் மற்றும் மரணத்தின் யுகத்தின் முடிவு மற்றும் நம்பிக்கை.

1967 தொடக்கம் இஸ்ரேல் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்களைக் கைது செய்துள்ளது - கிட்டத்தட்ட ஆறு தசாப்தங்களாக ஒரு நாளைக்கு சராசரியாக 47 பேர் கைது செய்யப்பட்டனர். மே 2025 நிலவரப்படி, 10,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய சிறைகளில் அடைக் கப்பட்டனர். அவர்களில் 1,455 பேர் மட்டுமே தண்டனை பெற்றனர். மீதமுள்ளவர்கள் விசாரணைக்காகக் காத்திருக்கி றார்கள் அல்லது குற்றச்சாட்டு இல்லாமல் நிர்வாகக் காவ லில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகள் பரிமாற்றம் நடைபெறும் பொழுது ஊடகங்களின் செயற்பாடுகள் இஸ்ரேலிய அரசால் கட்டுப்படுத்தப்பட்டன. இஸ்ரேலிய இராணுவம் வன்முறையற்றதாகவும், ஹமாஸ் ஒரு வன்முறையானதாகவும் ஊடகங்களினூடாகச் சித்தரிக் கப்பட்டன. விடுவிக்கப்பட்ட இஸ்ரேலிய கைதிகள் காட்சி ஊடகங்களுக்கு வருவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

கைதிகள் பரிமாற்றத்தைப் புரிந்துகொள்வது என்பது ‘பண யக்கைதிகள்’ என்று விவரிக்கப்படும் கைதிகள், பெரும் பாலும் சிறையில் அடைக்கும், கண்காணிக்கும் மற்றும் கொல்லும் ஒரு அமைப்பின் அல்லது அரசின் முகவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களின் கைது ஒரு பிறழ்ச்சி அல்ல - அது ஒரு விளைவு. இஸ்ரேலின் தொடர் நட வடிக்கைகளின் வன்முறைகளின் விளைவால் ஏற்படுத்தப் பட்டது. பயணக்கைதிகள் எனக் கூறப்படுபவர்கள் மீது துக் கப்படும் சமூகத்தின் பாதிக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட பாலஸ்தீனியர்களின் வலிகளை துயரங்களை புறக்கணித் துள்ளது. எனவே இந்தச் சமூகமும் ஒரு குற்றவாளியாகும்.



இஸ்ரேலியர்களின் கடத்தல் ஆயுத மோதலின் பின்னணி யில் நிகழ்ந்தது. சீரான கடத்தல் அல்ல. ஆனாலும், கடத்தல் சம்பவத்தின் பின்னால் காசா மக்கள் பட்ட துயரங்கள், அழிவு கள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை. மறுபுறம், அண்மை யில் விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனியர்களில் பலர் சிறார்க ளாகவும் அரசியல் கைதிகளாகவும் அல்லது குற்றச்சாட்டு அல்லது விசாரணை இல்லாமல் ‘நிர்வாகக் காவலில்’ வைக் கப்பட்ட தனிநபர்களாகவும் காணப்படுகின்றனர். சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மனிதாபிமானமற்ற இச் செயற் பாட்டினை சர்வதேச சட்ட மீறல்கள் என்று கூறிவந்துள்ளன.

ஒக்ரோபர் 13 அன்று கைதிகளின் பரிமாற்றத்தை விவரிக்கப் பயன்படுத்தப்படும் சொற்கள், யதார்த்தத்தின் தலைகீழ் மாற்றமாகும். ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் தொடர்ந்து காசாவில் உள்ள இஸ்ரேலியர்களைப் ‘பணயக் கைதிகள்’ என்று குறிப்பிடுகின்றனர். அதே நேரத்தில் இஸ்ரேலிய சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட பாலஸ்தீ னியர்கள் ‘கைதிகள்’ என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். இந்த கட்டமைப்பு ஒரு தவறான தார்மீக வேறுபாட்டை உரு வாக்குகிறது. ஒரு பக்கம் அநியாயமாகக் கைப்பற்றப்பட்ட அப்பாவி பொதுமக்கள் என்று கற்பனை செய்யப்படுகிறது. மறுபுறம் தண்டனை பெற்ற குற்றவாளிகளின் தடுப்புக்காவல் சட்டபூர்வமானதாகக் கருதப்படுகிறது. உண்மையில், இரு குழுக்களின் வன்முறை மோதலில் வேரூன்றிய ஆதிக்க அமைப்பின் சூழலில் மக்கள் தங்கள் சுதந்திரத்தை இழந்து வருகின்றார்கள்.

‘பணயக்கைதிகள்’ என்று விவரிக்கப்படுபவர்களில் பலர் நடு நிலையான பொதுமக்கள் அல்ல. மாறாக இஸ்ரேலிய பாது காப்புப் படைகளின் (IDF) உறுப்பினர்கள் அல்லது பாலஸ் தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் தொடர்ச்சியான ஆக் கிரமிப்பின் ஒரு பகுதியாக இருக்கும் இராணுவ நடவடிக்கை களில் ஈடுபட்டவர்கள் என்பதை கவனத்தில் கொள்ள

> **“ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் தொடர்ந்து காசாவில் உள்ள இஸ்ரேலியர்களைப் ‘பணயக்கைதிகள்’ என்று குறிப்பிடுகின்றனர். அதே நேரத்தில் இஸ்ரேலிய சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனியர்கள் ‘கைதிகள்’ என்று முத்திரை குத்தப்படுகிறார்கள்.”**

வேண்டியது அவசியம். இஸ்ரேலில் யூத குடிமக்களுக்கு இராணுவ சேவை கட்டாயமாகும். பெரும்பாலான இஸ்ரேலிய யூதர்கள் 18 வயதில் IDF-இல் பணியாற்றுகிறார்கள். இதன் பொருள் பெரும்பாலான இஸ்ரேலிய யூதர்கள் அரசு வன்முறையை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் செயலற்ற பார்வையாளர்கள் மட்டுமல்ல - அவர்கள் அதன் அமுலாக்கத்தில் நேரடி பங்கேற்பாளர்களாகவும் உள்ளனர். இவர்கள் சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்டாலும் கண்காணிப்பு அமைப்புகளில் இயங்கினாலும் அல்லது போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் இவர்களின் சேவை நடுநிலையானது அல்ல; இது கட்டமைப்பு ரீதியாக பாலஸ்தீனியர்களைக் கட்டுப்படுத்துதல், இடமாற்றம் செய்தல் மற்றும் அழித்தொழித்தல் ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

இருபது அம்ச சமாதான திட்டத்தின் சில முக்கிய கூறுகள் மேலே உள்ளன. சமாதான திட்டத்தின் படி கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும், முன்னரும் பல ஒப்பந்தங்கள் இஸ்ரேல்-பாலஸ்தீனத்துக்குமிடையில் மேற்கு நாடுகளால் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள் பிறிதொரு கட்டுரையில் விரிவாக ஆய்வு செய்யப்படவேண்டும். ஆனால், இவ்வொப்பந்தங்களின் பின்னரும் தொடர்ச்சியாக பாலஸ்தீனம் நிலம், கலாசாரம், வாழ்வதாரம், உற்பத்தி, கல்வி, சுகாதாரம், மொழி, மதம் என பல படி நிலைகளில் ஒடுக்கப்பட்டு வருகின்றது. அப்படியாயின் ஏன் இந்த ஒப்பந்தங்கள் என்ற கேள்வி எழுகின்றது.

## முன்னாள் சரித்திர நிகழ்வுகள், இன்றைய யதார்த்தத்தின் எதிரொலி:

1967-ஆம் ஆண்டு ஆறு நாள் போரில் இஸ்ரேல், ஜெருசலேம் மற்றும் மேற்குக் கரை முழுவதையும் கைப்பற்றியது. இஸ்ரேல் தனது படையெடுப்பை ஒரு முன்னெச்சரிக்கை தாக்குதல் என்று தவறாக விவரித்தது. இருப்பினும் அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக படைபலத்தைப் பயன்படுத்தத் தயாராக இருந்தன என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அந்த நேரத்தில் வலிமையான அரபு நாடு எகிப்து ஆகும். அதன் சிறந்த தரைப்படைகள் யமனில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்ததால் இஸ்ரேலைத் தாக்கும் நிலையில் இல்லை. எகிப்திய போர் விமானங்கள் இறக்கைகளுடன் இறக்கைகளாக நிறுத்தப்பட்டிருந்தன. அதாவது தரையில் நிறுத்தப்பட்டிருந்தன. அவை இஸ்ரேலிய தாக்குதலுக்கு ஆளாகக்கூடியவை. எகிப்து போருக்குத் தயாராக இல்லாததற்கான மற்றொரு குறிகாட்டியாகவும் இதனைப் பார்க்கலாம்.

1993-ஆம் ஆண்டு ஒஸ்லோ அமைதி ஒப்பந்தங்கள், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை நிர்வகிப்பதற்கு பாலஸ்தீன அதிகாரசபைக்கு ஒரு பெரிய பங்கை வழங்குவதை கற்பனை செய்தன. இருப்பினும் காசா மற்றும் மேற்குக் கரையில் உள்ள யூத குடியேறிகள் இந்த பிரதேசங்களில் சட்டவிரோத குடியேற்றங்களை உருவாக்க விரைவாக நகர்ந்தனர். சோகமான உண்மை என்னவென்றால் இஸ்ரேல் அதன் இராணுவ வெற்றிகளுக்குப் பிறகு இந்த நிலங்களில் சட்டவிரோதமாகக் குடியேற்றியது. இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு பாலஸ்தீன அரசை உருவாக்க அனுமதிக்கும் திட்டங்கள் எதுவும் இல்லை. மேலும், குடியேற்றங்களை மறைமுகமாக அங்கீகரித்து விரிவுபடுத்தியது. இஸ்ரேலிய அரசாங்கங்கள் பாலஸ்தீன நிலத்தை குடியேறிகள் கைப்பற்ற உதவியது. மேலும் இந்தப் பிரதேசங்களைப் பயன்படுத்தி பிராந்தியத்தில் உண்மையான அமைதியை உருவாக்க ஒருபோதும் அது முனையவில்லை.

2009-ஆம் ஆண்டில் ஐ.நா., காசா மோதல் குறித்த 575 பக்க ஆய்வறிக்கையை வெளியிட்டது. இப்பகுதியில் இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகமான மற்றும் மிகக் கடுமையான மீறல்களை இவ்வறிக்கை வெளிப்படுத்தியது. போர்க் குற்றங்களை மற்றும் இஸ்ரேலின் காசா முற்றுகையை 'இன அழிப்பு வன்முறை' என்றும் இது ஆவணப்படுத்தியது. இஸ்ரேலின் நடவடிக்கைகளை 'பொதுமக்களை இலக்காகக் கொண்ட விகிதாசாரமற்ற படையின் வேண்டுமென்ற கொள்கை' என்று அறிக்கை விமர்சித்தது. சர்வதேச நீதி மன்றம், துன்புறுத்தல் குற்றம், மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் எனக் கூறியது. அந்த அறிக்கையை இஸ்ரேல் நிராகரித்தது. துரதிர்ஷ்டவசமாக இஸ்ரேலின் அனைத்து ஆக்கிரமிப்புக் கொள்கைகளையும் அமெரிக்கா ஆதரித்தது.

முன்னர் ஏற்பட்டது போலவே, மீண்டும் பாலஸ்தீனம் ஏமாற்றப்படுகின்றது என்பதற்கு டொனால்ட் ட்ரம்பின் உரை அமைந்துள்ளது

## டொனால்ட் ட்ரம்பின் உரையில் வெளிப்பட்ட உண்மைகள்:

டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேல் - பாலஸ்தீன சமாதான திட்டத்தை முன்வைத்து இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றினார். பின்னர் ஊடகங்களுக்கும் கருத்து வெளியிட்டிருந்தார். இவை பாலஸ்தீனத்தின் எதிர்காலம் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. 'பாலஸ்தீன எதிர்ப்பு எப்போதும் பயங்கரவாதமாகவும் இஸ்ரேலியத் துன்பம் எப்போதும் புனிதப்படுத்தப்படும் ஒரு கதையாகவும் கட்டமைக்கப்பட்டது. இந்த சூழலில் உயிர் வாழ்வது என்பது ஓர் உயிரியல் உண்மை மட்டுமல்ல - அது ஓர் அரசியல் அச்சுறுத்தல்.' இதனை டொனால்ட் ட்டிரம்பின் உரைகளில் காணலாம்

நெதன்யாகுவின் இல்லாமை தற்செயலானது அல்ல - அது மூலோபாயமானது. உள்நாட்டு பின்னடைவுகள் மற்றும் தொடர்ச்சியான ஊழல் விசாரணைகளை எதிர்கொண்ட அவர் கலந்து கொள்ளாதது, அரசியல் சுமைகளின் சுமை இல்லாமல் இஸ்ரேலின் சார்பாக ட்ரம்பை பேச அனுமதித்தது.

பாலஸ்தீனத்தைப் பொறுத்தவரை, திட்டமிட்டபடி அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் மறுநாள் முற்றுகை என்பது, இடப்பெயர்ச்சி மற்றும் சட்டரீதியான அழிப்பு ஆகியவற்றின் தொடர்ச்சியாகும். ட்ரம்பின் உரையின் கட்டமைப்பு பாலஸ்தீன துன்பத்தை தற்செயலானதாகவோ அல்லது தகுதியானதாகவோ மாற்றுவதன் மூலம் நிவாரணம் பெறுவதற்கான சாத்தியத்தை முன்கூட்டியே மூடுகிறது. இது அதன் அரசியல் தர்க்கத்தின் எதிர்ப்பை அகற்றி, செயலிழப்பு அல்லது விலகலின் அறிகுறியாக அதை மறுவடிவமைக்கிறது. காலனித்துவப்படுத்தப்பட்டவர்கள் வெறுமனே அமைதியாக இல்லை - அவர்கள் அமைதிக்கான அச்சுறுத்தல்கள், முன்னேற்றத்திற்கான தடைகள் மற்றும் கடக்கப்பட வேண்டிய கடந்த காலத்தின் எச்சங்கள் என மீண்டும் எழுதப்படுகிறார்கள்.

ட்ரம்பின் உரை ஒரு தந்திரோபாய பரிமாற்றத்தை மட்டும் கொண்டாடுவதில்லை - இது இஸ்ரேலின் பாதையை ஒரு புனிதமான நாகரிகக் கதையாக உயர்த்துகிறது. இது மேலும் வேரூன்றலுக்கு உரிமம் அளிக்கிறது. பிராந்திய விரிவாக்கம், சட்டரீதியான தண்டனையின்மை மற்றும் நிறவெறி ஆட்சியை இயல்பாக்குதல் என்பன அதிகாரத்தை மறைப்பதற்குப் பதிலாக, ஒளிபாச்சி அதைச் செயற்படுத்துகிறது. அவை கதையை கட்டமைப்பு சக்தியாக மாற்றுகின்றன. இஸ்ரேல் தன்னை ஒரு பாதிக்கப்பட்டவராக, மீட்பராக மற்றும் நாகரிக மாதிரியாகக் காட்டிக் கொண்டு பொறுப்புக்கூறல் இல்லாமல் செயற்பட உதவுகிறது.

வரலாறு உறுதிப்படுத்தும் விஷயங்களைத் திரும்பப் பெற பாலஸ்தீனியர்கள் தொடர்ந்து போராடுவார்கள். இது தெரிவு நிலைக்கான போராட்டம் அல்ல - உலகம் ஏற்கனவே காட்டியது. மில்லியன் கணக்கான மக்கள் ஒற்றுமையுடன் அணிவகுத்துச் செல்கின்றனர். இது நிலம், கண்ணியம், அரசியல் நிறுவனம் மற்றும் தங்கள் சொந்தக் கதையைச் சொல்லும் உரிமைக்கான போராட்டம். இது ஆதிக்கக் கதைகளுக்குள் அடைக்கப்படவோ அல்லது ஏமாற்றும் சொல்லாட்சிகளால் அழிக்கப்படவோ மறுக்கிறது.

மறுசீரமைப்பு என்பது குறியீட்டு ரீதியானது அல்ல. அது பொருள் சார்ந்தது, சட்டபூர்வமானது மற்றும் வரலாற்று ரீதியானது. நீதி என்பது இங்கே ஒரு செயல்திறன் அல்ல - அது காலனித்துவவாதியும் ஆக்கிரமிப்பாளருமான இஸ்ரேலியர் எடுத்ததைத் திரும்பப் பெறுவதாகும். போர்க்கால தலைமைத்துவச் சூழலில் ஊழலை ஒரு முக்கியமற்றது என்று ட்ரம்ப் மறுபரிசீலனை செய்கிறார். இதற்கு ஏன் டொனால்ட் ட்ரம்ப் அழுத்தம் கொடுக்கின்றார் என்பதனை உலகமறியும்.

இந்த சொல்லாட்சிக் கூற்று, பாலஸ்தீன அதிகாரசபை பற்றிய ட்ரம்பின் கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்டது. நெதன்யாகுவின் ஊழல் மிகுந்த தேசபக்தியால் மன்னிக்கப்படுகிறது. அதே நேரத்தில் பாலஸ்தீன நிர்வாகத்தின் செயலிழப்பு பாலஸ்தீன நிர்வாகத்தை முற்றிலுமாக சட்டவிரோதமாக்கும் முயச்சி. ஒன்று மன்னிக்கப்படுகிறது, மற்றொன்று கண்டிக்கப்படுகிறது. தனது உரையில் பணையக்கைதிகள் மற்றும் கைதிகளின் பரிமாற்றத்தை - வற்புறுத்தலின் கீழ் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஆழமான சமரசமின்மையால் வடிவமைக்கப்பட்டது எனக்கூறி இஸ்ரேலின் ஒரு கருணைச் செயலாக இதனை அவர் முன்வைக்கிறார். ட்ரம்ப் கட்டாய சமரசத்தை நல்லொழுக்கத்தின் வெற்றியாக, மேற்கத்திய நாகரிக நல்லொழுக்கமாக மாற்றுகிறார்.

இறுதியாக, ட்ரம்பின் உரை மறைமுகமான 'build on your win - உங்கள் வெற்றியின் மீது கட்டமைக்கவும்' என்ற தர்க்கம் தொடர்ச்சியைக் குறிக்கிறது. இது சாதாரண அழைப்பு அல்ல. மாறாக கோட்டையை வலுப்படுத்துவதற்கான அழைப்பு. பிராந்திய, சட்ட மற்றும் அரசியல் ஆதாயங்களை வலுப்படுத்த இந்த தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ட்ரம்ப் கூறுகிறார். பரிமாற்றம் ஓர் ஊக்கமாக மாறும். சமரசம் அல்லது சமத்துவத்திற்காக அல்ல - ஆனால் மேலும் ஒருங்கிணைப்பதற்கான வழியாகவும் அமையும். சமத்துவத்திற்கான எந்தவொரு பாதையும் ஆதிக்க நிலையைப் பெறுவதற்கான கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் அமைதி என்பது பரஸ்பர அங்கீகாரம் அல்ல - அது காலனித்துவப்படுத்தப்பட்டவர்களை சமாதானப்படுத்துவதாகும். அமைதி என்பது இங்கு அடிமைப்படுத்தலாகும்.

மேற்கத்திய மற்றும் பிராந்திய சக்திகள் தலைமையிலான ஒரு தார்மீக வெற்றியாக ட்ரம்பின் உரை அமைகிறது. 'போர் நிறுத்தத்தை முன்வைத்தது' என ஆரம்பிக்கும் இவ்வுரை 'sacred day' and 'answer to the prayers of millions' எனத் தொடர்கிறது. அதாவது 'புனித நாள்' மற்றும் 'மில்லியன் கணக்கான மக்களின் பிரார்த்தனைகளுக்கு பதில்' போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தி அதன் விளைவை தெய்வீக மற்றும் நாகரிக சாதனையின் தருணமாகச் சித்திரித்தார் ட்ரம்ப். பாலஸ்தீன எதிர்ப்பின் பங்கையும், பரிமாற்றத்தை கட்டாயப்படுத்திய நிலைமைகளையும் புறக்கணித்து, ஒப்பந்தத்தில் மத்தியஸ்தம் செய்த நாடுகளுக்கு இந்த கட்டமைப்பு பெருமை சேர்த்தது. இது போரின் பாதையை வடிவமைத்தவர்களின் அதிகாரத்தை வலுப்படுத்தியது மற்றும் அதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களை விலக்கியது.





> **“போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் எகிப்தும் கத்தாரும் முக்கிய பங்கு வகித்தாலும் பாலஸ்தீன இறையாண்மைக்கான வக்கீல்களாக அல்ல, ட்ரம்பின் தொலைநோக்குப் பார்வையை மேம்படுத்துபவர்களாக இந்நாடுகள் கருதப்பட்டன.”**

பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்கி, இஸ்ரேலிய கைதிகளில் பெரும்பாலோரை வைத்திருந்த ஹமாஸின் பங்கை அல்லது பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் (PIJ) மற்றும் பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி (PFLP) போன்ற பிற பிரிவுகளின் ஈடுபாட்டை ட்ரம்ப் வேண்டுமென்றே அங்கீகரிக்கத் தவறிவிட்டார்.

இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட நாடுகள் துணைப் பாத்திரங்களை வகித்தன. போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் எகிப்தும் கத்தாரும் முக்கிய பங்கு வகித்தாலும் பாலஸ்தீன இறையாண்மைக்கான வக்கீல்களாக அல்ல, ட்ரம்பின் தொலைநோக்குப் பார்வையை மேம்படுத்துபவர்களாக இந்நாடுகள் கருதப்பட்டன. துருக்கியின் இருப்பு சித்தாந்த ஒற்றுமையைக் குறிக்காது, நடைமுறை சீரமைப்பைக் குறித்தது. பிராந்திய ஸ்திரத்தன்மைக்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த வளைகுடா நாடுகள் உச்சிமாநாட்டைப் பயன்படுத்தின. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் இராஜதந்திர இயல்பாக்கம் இஸ்ரேலிய தண்டனையிலிருந்து விலக்கு என அவை தொடர்கின்றன. போருக்குப் பிந்தைய ஒழுங்கை அவற்றின் பங்கேற்பு அங்கீகரித்தது. அதில் விடுதலையை கட்டுப்பாட்டு விடுதலையாக மாற்றுகிறது. மேலும் தெரிவுநிலை என்பது பொறுப்புக்கூறலுக்கு மாற்றாக உள்ளது.

### சமாதானமா? பாலஸ்தீனத்துக்கான முடிவுரையா?

போர்க்களத்திற்கு அப்பால் உடந்தையாக இருப்பது நீண்டுள்ளது. அரசாங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கொள்கைகள் பகிரங்கமாக விவாதிக்கப்படும் ஓர் அமைப்பில், வாக்களிப்பு என்பது ஒரு ஒப்புதலுக்கான வழிமுறையாக மாறுகிறது. நெதன்யாகு அல்லது அவரது அரசியல் போட்டியாளர்களால் வழிநடத்தப்பட்ட அடுத்தடுத்த இஸ்ரேலிய அரசாங்கங்கள், பாலஸ்தீன உரிமைகள் மீது யூத இறையாண்மையை முன்னுரிமைப்படுத்தும் சியோனிச கட்டமைப்புகளை நிலைநிறுத்தியுள்ளன. இந்த அரசாங்கங்கள் குடியேற்றங்களை விரிவுபடுத்தியுள்ளன. காசா மீதான முற்றுகையை ஊக்குவித்துள்ளன. மேலும் 2018-ஆம் ஆண்டின் தேசிய-மாநில சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் நிறவெறி போன்ற நிலைமைகளைச் சட்டமாக்கியுள்ளன. இத்தகைய கொள்கைகளுக்கு வாக்காளர்களின் நிலையான ஆதரவு, பாலஸ்தீன உடைமையை தேசிய பாதுகாப்பு மற்றும் அடையாளத்தின் விலையாக ஏற்றுக்கொள்கிறது மற்றும் பெரும்பாலும் கோருகிறது.

ஒவ்வொரு இஸ்ரேலிய யூதரும் இந்தக் கொள்கைகளுடன் சித்தாந்த ரீதியாக இணைந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தற்போதைய நிலையை சவால் செய்யும் எதிர்ப்பாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் அமைப்புகள் உள்ளன. ஆனால் கட்டமைப்பு ரீதியாக, இந்த அரசியல் - சமூக அமைப்பு அதன் அடிப்படை தர்க்கத்தை மாற்றாமல் எதிர்ப்பை உள்வாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஒரு மக்கள் தொகைக்காக செயற்படும் அதே வேளையில் மற்றொரு மக்கள் தொகைக்கு முறையாக வாக்குரிமையை மறுக்கக்கூடிய ஒரு ஜனநாயகம் உருவாகியுள்ளது. இதனை இலங்கையிலும் காணலாம். ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பாலஸ்தீனியர்கள் தங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தல்களில் வாக்களிக்க முடியாது. அவர்களின் வாழ்க்கை அவர்கள் தேர்ந்தெடுக்காத அரசாங்கத்தால் வடிவமைக்கப்படுகிறது. அவர்கள் அழைக்காத வீரர்களால் கட்டாயப்படுத்தப்படுகிறது. மேலும் அவர்கள் அணுக முடியாத ஊடகங்களால் விவரிக்கப்படுகிறது.

காலனித்துவவாதிகள் அமைதியை உருவாக்குபவர்களாகவும் எதிர்ப்பை பயங்கரவாதமாகவும் சித்தரிக்க யதார்த்தத்தைத் தலைகீழாக மாற்ற எவ்வாறு ஆயுதம் ஏந்தப்படுகிறது என்பதை இது அம்பலப்படுத்துகிறது. ஊடக கட்டமைப்பு, ஊடக கட்டுப்பாடு, ஊடக மொழியியல் போன்றவற்றை அமைப்புரீதியாகவும் கட்டமைத்த இஸ்ரேலிய அரசையும், இராணுவத்தையும் புனிதர்களாக விம்பப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சர்வதேசத்துக்கு வன்முறையை இஸ்ரேல் மறைக்கின்றது. அண்மைய நாட்களில் காசாவில் ஹமாசுக்கு எதிராக ஆயுதக் குழுக்களை ஏவி செயல்படுத்தும் முறையானது, மேலும் இஸ்ரேலை ஜனநாயகவாதியாகவும், பாசிசததுக்கு எதிராக செயற்படும் நாடு என்ற முகத்தையும் பதிவு செய்கின்றது. டொனால்ட் ட்ரம்பும், இஸ்ரேலும் ‘காசா மக்களின் நலனுக்கு’ என்ற சொற்பதங்களை அண்மைக் காலங்களில் அதிகளவு பயன்படுத்துகின்றனர். காசா மக்களுக்கு ‘உங்களுக்கு சொந்தமான

நிலத்தை மீட்டெடுங்கள்' என இஸ்ரேல் தெரிவிக்கின்றது. இது காசாவை ஹமாசிலிருந்து அப்புறப்படுத்தி, தனது கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக கொண்டுவரும் முயற்சி யாகும்.

அரசியலில், ஊடக காட்சியியல் தற்செயலானவை அல்ல - அவை மூலோபாயமானவை. அவை பொதுமக்களின் கருத்தை வடிவமைக்கின்றன. தார்மீக சட்டபூர்வமான தன்மையை வடி வமைக்கின்றன. மேலும், அதிகாரத்தின் வழிமுறைகளை மறைக்கின்றன. ஒக்ரோபர் 2025-இல் பாலஸ்தீனிய எதிர்ப்புப் பிரிவுகளுக்கும் இஸ்ரேலிய அரசுக்கும் இடையிலான கைதி கள் பரிமாற்றம், அதைத் தொடர்ந்து இஸ்ரேலிய பாராளுமன் றத்தில் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பெஞ்சமின் நெதன்யாகு வுக்கு பொதுமக்கள் கொடுத்த பாராட்டுகள் முதலானவை எவ்வாறு 'தீர்மானத்தை' வெளிப்படுத்தப் பயன்படுத்துகிறது என்பது பற்றிய ஒரு ஆய்வை வழங்குகிறது. அதே நேரத்தில், அதன் யதார்த்தத்தை தண்டனையின்மை என்று பெயரிடும் ஒரு நுழைவாயிலாக மறைத்து, எதிர்ப்பை மறுவடிவமைத்து, அமைதியை உடைக்கிறது.

## இறுதியாக:

மத்திய கிழக்கில் அமைதியைக் கொண்டுவர மூன்று காரணி கள் சீரமைக்கப்பட வேண்டும்:

- சமரசம் செய்ய போதுமான வலிமையான - நடுநிலையான இஸ்ரேலிய பிரதமர்.
- பல்வேறு பாலஸ்தீன பிரிவுகளை ஒன்றிணைக்கும் திறன் கொண்ட பாலஸ்தீன தலைவர்.
- இரு சமூகங்களையும் ஓர் ஒப்பந்தத்தில் கொண்டுவர தனது அரசியல் மூலதனத்தை நேர்மையாகவும் நடுநிலை யுடனும் பயன்படுத்தத் தயாராக இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி.

போர் இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் துன்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. முந் தைய நிலைக்குத் திரும்புவது சாத்தியமில்லை.

டொனால்ட் ட்ரம்பினால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதானத் திட்டம், பாலஸ்தீனம் மக்களின் சுய நாடு என்ற கனவையும் அவர்கள் வாழ்வையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் அழிக்கும் திட்டமாகும். இது பெஞ்சமின் நெத்தன்யாகுவின் கனவாகும். இத்திட்டம் காசாவை இஸ்ரேல் அழித்ததைவிட மிகமோசமானதாகும்.

பாலஸ்தீனியர்களின் உரிமைகள் காசாவின் இடிபாடுக ளுக்குள் புதைக்கப்பட்டுவிட்டது. பாலஸ்தீனியர்களின் எதிர் காலத்தை இனிவரும் காலங்களில் இஸ்ரேலும் அமெரிக் காவுமே தீர்மானிக்கும். டொனால்ட் ட்ரம்ப் கூறிய ஒரு விடயம் உண்மையானது. 'மூவாயிரம் ஆண்டுகளில் முதன் முறை யாக பாலஸ்தீனத்தில் அமைதி.' ஆம், மூவாயிரம் ஆண்டு காலப்பகுதியில் முதல் முறையாக அவர்கள் முழுமையாக மௌனிக்கப்பட்டுள்ளார்கள்.

## டொனால்ட் ட்ரம்பினால் முன்வைக்கப்பட்டுள்ள 20 அம்ச சமாதான திட்டம்:

- அமைதியான, அண்டைப் பகுதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற் படுத்தாத, பயங்கரவாதத்திலிருந்து விடுபட்ட பகுதியாக காஸா இருக்கும்.
- அதிகளவிலான துன்பங்களால் பாதிக்கப்பட்டுள்ள காஸா மக்களுக்கு பயனளிக்கும் வகையில் காஸா மீட்டுருவாக் கம் செய்யப்படும்.
- இரு தரப்பும் இந்த முன்மொழிவுக்கு ஒப்புக்கொண்டால், போர் உடனடியாக நிறுத்தப்படும். பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு தயாராகும் வகையில் இஸ்ரேலிய படை கள் திரும்பப் பெறப்படும். இந்த சமயத்தில் வான்வழி மற்றும் பீரங்கி தாக்குதல் உள்ளிட்ட அனைத்து ராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படும். மேலும், திட்டமிடப்பட் டபடி படைகள் முழுவதும் திரும்பப் பெறப்படும் வரை போரிடும் பகுதிகளில் துருப்புகள் நகராது.
- இந்த ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் பொதுவெளியில் ஒப்புக் கொண்ட 72 மணிநேரத்திற்குள் உயிருடன் உள்ள பண யக்கைதிகள் நாடு திரும்புவர், இறந்த பணயக்கைதி களின் உடல்களும் ஒப்படைக்கப்படும்.
- அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்ட பின்னர், இஸ்ரேல் தங்களிடம் உள்ள 250 ஆயுள்தண்டனை சிறை வாசிகள், அக்டோபர் 7, 2023-க்குப் பிறகு தடுப்புக் காவ லில் வைக்கப்பட்ட அனைத்து பெண்கள் மற்றும் குழந் தைகள் உட்பட 1,700 பேரையும் விடுவிக்கும். விடுவிக்கப் படும் ஒவ்வொரு இறந்த இஸ்ரேலிய பணயக்கைதிக்கும், அந்நாடு காஸாவை சேர்ந்த இறந்த 15 பேரின் உடல் களை திரும்பி வழங்கும்.



- அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்ட பின்னர், அமைதியுடன் இணைந்து வாழவும் தங்கள் ஆயுதங்களை கைவிடவும் தயாராக உள்ள ஹமாஸ் உறுப்பினர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். காசாவை விட்டு வெளியேற விரும்பும் ஹமாஸ் உறுப்பினர்களுக்கு, அவர்கள் செல்லும் நாடுகளுக்கு பாதுகாப்பான வழி ஏற்படுத்தித் தரப்படும்.

- இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனேயே, காஸாக்கு அனைத்து விதமான உதவிகளும் அனுப்பப்படும். இந்தாண்டு ஜனவரி 19-ஆம் தேதி ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள மனிதநேய உதவிகளான, மறுவாழ்வுக்கான கட்டமைப்புகள் (தண்ணீர், மின்சாரம், கழிவுநீர் வசதி), மருத்துவமனைகள் மற்றும் பேக்கரிகளை மீட்டுருவாக்கம் செய்தல் மற்றும் இடிபாடுகளை அகற்றுவதற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் சாலைகளை திறந்துவிடுதல் ஆகியவற்றுக்குக் குறையாமலும், இவற்றை ஒத்த உதவிகளும் வழங்கப்படும்.

- காஸாவில் உதவிகளை வழங்குவது, இருதரப்பின் தலையீடும் இன்றி ஐ.நா. மற்றும் அதன் முகமைகளான செம்பிறைச் சங்கம் ஆகியவை மூலமும் இருதரப்புடனும் தொடர்பில் இல்லாத சர்வதேச நிறுவனங்களுடனும் சேர்ந்து வழங்கப்படும்.

- காசா பகுதி சர்வதேசக் குழுவினால் நிர்வகிக்கப்படும். இக்குழுவில் பாலஸ்தீனர்களும் உள்வாங்கப்படுவார்கள். இக்குழு டொனால்ட் ட்ரம்பின் தலைமையில் அமையும். இதன் உறுப்பினர்களில் ஒருவராக ரொனி பிளேயரும் உள்ளார். காசாவின் அன்றாட மக்களின் நடவடிக்கைகளையும், வாழ்வியலையும், பாதுகாப்பையும் இக்குழு மேற்பார்வை செய்யும். காசா மக்களுக்கான நிதியையும் இக்குழுவே கட்டுப்படுத்தும். காசா பகுதி முதலீடுகள் இக்குழுவின் அனுமதியுடனேயே செயல்படுத்தப்படும் காஸா மக்களுக்கு அன்றாட பொதுச் சேவைகள் மற்றும் நகராட்சி நிர்வாகத்தை வழங்கும் பொறுப்பைக் கொண்ட வல்லுநர்கள் அடங்கிய, அரசியல் சார்பற்ற பாலஸ்தீனக் குழுவால் ஒரு இடைக்கால நிர்வாகத்தின் கீழ் காஸா ஆளப்படும். இக்குழுவில் தகுதியான பாலஸ்தீனியர்கள் மற்றும் சர்வதேச வல்லுநர்கள் இடம்பெறுவார்கள். இந்தக் குழுவை ஒரு புதிய சர்வதேச இடைக்கால 'அமைதி வாரியம்' (Board of Peace) மேற்பார்வை செய்யும். இந்த அமைதி வாரியத்திற்கு டொனால்ட் ட்ரம்ப் தலைமை தாங்குவார். இதில் இடம்பெறும் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் உட்பட மற்ற உறுப்பினர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள். ட்ரம்பின் 2020 அமைதித் திட்டம் மற்றும் சவூதி - பிரெஞ்சு திட்டம் உட்பட பல்வேறு முன்மொழிவுகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி பாலத்தீன அதிகார சபை தனது சீர்திருத்தத் திட்டத்தை நிறைவேற்றி பாதுகாப்பாகவும் திறம்படவும் காஸாவின் கட்டுப்பாட்டை மீண்டும் எடுத்துக் கொள்ளும் வரை, இந்த வாரியம் காஸாவின் மறுசீரமைப்புக்கான கட்டமைப்பை உருவாக்கி, நிதி விவகாரங்களைக் கையாளும். காஸா மக்களுக்குச் சேவை செய்யும் மற்றும் முதலீட்டை ஈர்க்க உதவும் நவீன மற்றும் திறமையான நிர்வாகத்தை உருவாக்க இந்த வாரியம் சிறந்த சர்வதேச தர நிலைகளைப் பயன்படுத்தும்.

- காஸாவை மீண்டும் கட்டியெழுப்பவும், புத்துயிர் ஊட்டவும், ட்ரம்பின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்கப்படும். மத்திய கிழக்கில் சில செழிப்பான நவீன நகரங்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்த நிபுணர்கள் அடங்கிய குழுவை அமைப்பதன் மூலம் இந்தத் திட்டம் உருவாக்கப்படும். பல நல்லெண்ணம் கொண்ட சர்வதேசக் குழுக்களால் முதலீட்டு முன்மொழிவுகளும், அற்புதமான மேம்பாட்டு யோசனைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- ஒரு சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கப்படும், இதில் பங்கேற்கும் நாடுகளுடன் வரி மற்றும் அணுகல் விதிகள் குறித்து பேச்சுவார்த்தை செய்து ஒப்புக்கொள்ளப்படும்.

- யாரும் காஸாவைவிட்டு வெளியேற வற்புறுத்தப்பட மாட்டார்கள், அதேசமயம் யாரெல்லாம் காஸாவை விட்டு வெளியேற நினைக்கிறார்களோ அவர்கள் அதை செய்யலாம், மீண்டும் காஸாவுக்கே கூட திரும்பலாம். காஸாவிலேயே மக்கள் இருக்க ஆதரிக்கப்படும். சிறப்பான காஸாவை உருவாக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

- ஹமாஸ் மற்றும் பிற பிரிவினர் காஸாவின் நிர்வாகத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது எந்த வடிவத்திலோ எந்தப் பங்கையும் வகிக்கக் கூடாது என்று ஒப்புக்கொள்கின்றனர். சுரங்கங்கள் மற்றும் ஆயுத உற்பத்தி வசதிகள் உட்பட அனைத்து ராணுவ, பயங்கரவாத மற்றும் தாக்குதல் உள்கட்டமைப்பும் அழிக்கப்படும், மீண்டும் கட்டப்படாது. காஸாவில் சுயாதீன கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் ராணுவ நீக்க (Demilitarisation) செயல்முறை இருக்கும்.

இதில், இணக்கம் காணப்பட்ட வழிமுறையின் மூலம் ஆயுதங்களை நிரந்தரமாகப் பயன்படுத்த முடியாதவாறு அகற்றுவது மற்றும் சர்வதேச அளவில் நிதியளிக்கப்பட்ட மறுசீரமைப்புத் திட்டம் ஆகியவை அடங்கும். இவை அனைத்தும் சுயாதீனக் கண்காணிப்பாளர்களால் சரிபார்க்கப்படும். புதிய காஸா, வளமான பொருளாதாரத்தை உருவாக்குவதிலும், அதன் அண்டை நாடுகளுடன் அமைதியாக சகவாழ்வு வாழ்வதிலும் முழுமையாக உறுதியுடன் இருக்கும்.

- ஹமாஸ் மற்றும் பிற பிரிவினர் தங்கள் வார்த்தைக்கு இணங்குவதையும், புதிய காஸா அதன் அண்டை நாடுகளுக்கோ அல்லது அதன் மக்களுக்கோ எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை என்பதையும் உறுதிப்படுத்த பிராந்தியப் பங்காளிகளால் ஓர் உத்தரவாதம் வழங்கப்படும்.

- காஸாவில் உடனடியாக நிலைநிறுத்தப்பட ஒரு தற்காலிக சர்வதேச ஸ்திரப்படுத்தும் படையை (International Stabilisation Force - ISF) உருவாக்குவதற்கு அரபு மற்றும் சர்வதேசப் பங்காளிகளுடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றும். ISF படை, காஸாவில் பாலஸ்தீனப் போலீஸ் படைகளுக்குப் பயிற்சி அளித்து ஆதரவளிக்கும். மேலும், இந்தத் துறையில் விரிவான அனுபவம் கொண்ட ஜோர்டான் மற்றும் எகிப்து நாடுகளுடன் கலந்தாலோசிக்கப்படும். இந்தப் படையே நீண்ட கால உள்நாட்டுப் பாது

காப்புத் தீர்வாக இருக்கும். ISF படையானது, புதிதாகப் பயிற்சி பெற்ற பாலத்தீனப் போலீஸ் படைகளுடன் இணைந்து எல்லைப் பகுதிகளைப் பாதுகாக்க இஸ்ரேல் மற்றும் எகிப்துடன் இணைந்து செயற்படும். காஸாவில் ஆயுதங்கள் நுழைவதைத் தடுப்பதும், காஸாவை மீண்டும் கட்டியெழுப்பவும் புத்துயிர் ஊட்டவும் பொருட்களின் விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை எளிதாக்குவதும் மிக முக்கியமானது.

- இஸ்ரேல் காஸாவை ஆக்கிரமிக்கவோ அல்லது இணைத்துக் கொள்ளவோ செய்யாது. ISF படை கட்டுப்பாடு மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டும் போது, இஸ்ரேல் ராணுவம் வெளியேறும். இந்த வெளியேற்றம் இஸ்ரேல் ராணுவம், ISF, உத்தரவாதம் அளிக்கும் நாடுகள், அமெரிக்கா இடையே ஒப்புக் கொள்ளப்படும் தரநிலைகள், மைல்கற்கள் மற்றும் காலக்கெடு ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும். இஸ்ரேல், எகிப்து அல்லது அதன் குடிமக்களுக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாத ஒரு பாதுகாப்பான காஸாவை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். நடைமுறையில், இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமித்துள்ள காஸா பகுதியை, இடைக்கால நிர்வாகத்துடன் மேற்கொள்ளும் ஒப்பந்தத்தின்படி ISF படையிடம் படிப்படியாக ஒப்படைக்கும், பயங்கரவாத அச்சுறுத்தல் எதுவும் மீண்டும் ஏற்படாதவாறு காஸா முறையாகப் பாதுகாக்கப்படும் வரை ஒரு பாதுகாப்புச் சுற்றளவு இருப்பு மட்டும் தொடரும்.

- இந்த முன்மொழிவை ஹமாஸ் தாமதப்படுத்தினால் அல்லது நிராகரித்தால், மேலே கூறப்பட்டவை, குறிப்பாக அதிகரித்த உதவிகளை வழங்கும் நடைமுறை, இஸ்ரேல் ராணுவத்தால் ISF-இடம் ஒப்படைக்கப்படும் பயங்கரவாதம் இல்லாத பகுதிகளில் தொடரும்.

- அமைதியால் கிடைக்கும் நன்மைகளை வலியுறுத்துவதன் மூலம் பாலஸ்தீனியர்கள் மற்றும் இஸ்ரேலியர்களின் மனநிலையையும், கருத்துகளையும் மாற்ற முயற்சிக்கும் 'மதங்களுக்கு இடையேயான உரையாடல் செயல்முறை' (Interfaith dialogue process), சகிப்புத்தன்மை மற்றும் அமைதியான சகவாழ்வு ஆகிய மதிப்புகளின் அடிப்படையில் நிறுவப்படும்.

- காஸா மறுசீரமைக்கப்படுவதைத் தொடர்ந்து, பாலஸ்தீன அதிகார சபை (PA) சீர்திருத்தம் நம்பிக்கையுடன் செயற்படுத்தப்பட்டால், பாலஸ்தீன மக்களின் விருப்பமான பாலஸ்தீன தன்னாட்சி மற்றும் சுதந்திரமான நாடு உருவாவதற்கான நம்பகமான பாதைக்கான சூழல்கள் உருவாக்கப்படும். இது பாலஸ்தீன மக்களின் விருப்பமாக நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

- அமைதியுடனும் நல்லிணக்கத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான அரசியல் கட்டமைப்பை உருவாக்க இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்களுக்கு இடையே அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தும்.



rathan@thaiveedu.com



# இந்திய உள்துறை அமைச்சக அறிக்கையும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எதிர்காலமும்

நெல்லை ஜெயசிங்



இந்தியாவில் இரண்டு தசாப்தங்களாக வாழ்ந்து வரும் இலங்கை அகதி மக்கள் தொடர்பான அரசாணை ஒன்றை, இந்திய உள்துறை அமைச்சகம் (MHA) கடந்த செப்ரெம்பர் 7-ஆம் நாள் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இதன் வாயிலாக, 2003-ஆம் ஆண்டு குடியுரிமை திருத்தச் சட்ட அமுலாக்கம் தொடங்கப்பட்ட நாள் முதல், கூறப்பட்டு வந்த 'சட்ட விரோதக் குடியேறிகள்' என்ற நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அரசு கொண்டு வந்துள்ளமை, அகதி மக்கள் மத்தியில் கவனம் பெற்று வருகிறது. சட்ட விரோதக் குடியேறிகள் என்ற வாசகம் நீக்கப்பட்டது வரவேற் கத்தக்க அறிவிப்பாக இருந்த போதும், பயனாளிகளை, 2015-ஆம் ஆண்டினை மையமாகக் (cutoff year) கொண்டு கணிக்க முற்படும் நிலை, விவாதத்திற்கு வழி வகுத்திருக் கிறது எனலாம். இந்நிலையில் குறிப்பிட்ட அரசு அறிக் கையில் காணப்படும் சாதக, பாதக அம்சங்களைப் பின்வ ருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

- ஜனவரி 9, 2015-க்கு முன்பு இந்தியாவிற்குள் வந்த இலங்கை அகதி மக்கள், வரும் காலங்களில் சட்ட விரோதக் குடியேறிகள் எனக் குறிப்பிடப்பட மாட் டார்கள்.
- இது அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த, உடனடியான இந்தியக் குடியுரிமைக்கு வழிவகுக்காது.
- பாஸ்போர்ட் விதிகளின் படி ஆவணங்கள் எதுவும் இல்லாது இருந்தாலும், அவர்கள் மீது குற்றவியல் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படமாட்டாது.
- பதிவு பெற்ற அகதி மக்கள் நாட்டை விட்டு வலுக்கட்டா யமாக வெளியேற்றப்படமாட்டார்கள்.
- சட்ட விரோதக் குடியேறிகள் என்ற கட்டத்துக்குள் வருப வர்களுக்கு நீண்ட கால விசா (LTV) வழங்கப்பட மாட்டாது.
- பதிவு பெற்றவர்கள் தொடர்ந்து இந்தியாவில் வசிக்கத் தடை இல்லை.
- 1955-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் தகுதியான வெளிநாட்டினர் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் இதற்கான வாய்ப்பு இலங்கை அகதி மக்களுக்கு மிகவும் குறைவு அல்லது இல்லை எனறே கூறலாம்.
- தற்போது நடைமுறையில் உள்ள குடியுரிமைச் சட்டதிட் டங்களின்படி அவர்களுக்குக் குடியுரிமை வழங்க வழியில்லை.
- இந்திய உள்துறை அமைச்சின் (MHA )அறிக்கையின் படி ஜனவரி 9, 2015-க்குப் பின்னர் வந்தவர்கள், அதற்கு முன்பு வந்தவர்களைப் போன்று, தங்கு தடை இன்றி இந்திய மண்ணில் வசிக்க அனுமதி இருக்குமா ? என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.
- 2015 ஜனவரி 9-க்குப் பின் வந்து தங்கியிருக்கும் அகதி மக்களுக்கு நீண்ட கால விசா தரப்பட வாய்ப்பு இல்லை என்று கூறப்படும் அதே நேரம், இந்தியாவில் தங்கி இருந்த காலத்திற்குக் கட்டணமின்றி, விசா புதுப்பிக்கப் பட்டு அவர்கள் இலங்கை திரும்பக் கட்டாயப்படுத்தப்ப டுவார்கள் என்றும் அறியப்படுகிறது.

உள்துறை அமைச்சக அறிக்கை, இலங்கைத் தமிழ் அகதி மக்களுக்கு மிகப் பெரும் ஆறுதலையும் நிம்மதியையும் தந்துள்ள போதும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்க ளாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து வந்த மத சிறுபான்மை யினருக்கு அளிக்கப்பட்ட குடியுரிமைக்கான உத்தரவாதம், இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கு வழங்க முன்வராமை கவலை அளிக்கிறது. மேலும் குறிப்பிட்ட ஆறு சமூகங்களும் இந்தியாவில் 11 வருடங்கள் தங்கி இருந்தால், அவர்கள் குடியுரிமைக்கும், நீண்ட கால விசாவிற்கும் விண் ணப்பிக்க வழங்கப்பட்ட அனுமதி போன்று, 35 வருடங்க ளுக்கு மேலாக இந்தியாவில் வாழ்ந்து வரும், இலங்கை அகதி மக்களுக்கு வழங்க அரசு தயாராக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இது அரசின் பாரபட்சமான மனநி லையைக் காட்டுகிறது.

2019-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில், குறிப்பிட்ட மூன்று நாடுகளில் இருந்து 2014 டிசம்பர் 31-க்கு முன்பு வந்த ஆறு மதத்தவர்கள், குடியுரிமைக்கு விண்ணப்பிக் கலாம் என்பது, தற்போது மாற்றப்பட்டு, 2024-க்கு முன்பு வந் தவர்களும் விண்ணப்பிக்கலாம் எனக் கூறப்படுகிறது. இது போன்ற சலுகை, தளர்வு இலங்கை அகதி மக்கள் விட யத்தில், அரசு கடைப்பிடிக்க முன்வரவில்லை என்பது கவலை அளிக்கும் விடயமாகும்.

இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க ஏதுவாக இருக்கும் நீண்ட கால விசா நடைமுறை, 2019-ஆம் ஆண்டு குடியு ரிமைச் சட்டத்தின் கீழ், முன்பு குறிப்பிட்ட மூன்று நாடுகளில் இருந்து வந்த, ஆறு மதத்தவர்களுக்கு மட்டும் பொருந்தும் என வெளிப்படையாகக் கூறும் இன்றைய இந்திய அரசு, அவ்விதி இலங்கை அகதி மக்களுக்குப் பொருந்தாது எனத் திட்டவட்டமாகக் கூறியிருப்பது, இம்மக்களின் குடியுரிமைக்

கோரிக்கையை நிராகரிப்பதாக அமைகிறது. இதன் மூலம், ஏற்கனவே இருக்கும் 1955-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தைப் பின்பற்றி மட்டுமே குடியுரிமைக்கு இவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்பது புலனாகிறது. இது இன்றைய அரசின் பாரபட்ச மனநிலையைக் காட்டுகிறது.

உள்துறை அமைச்சின் அறிக்கையினை, மேலும் கூர்ந்து கவனிக்கும் போது, 2015-க்குப் பின் வந்த இலங்கை அகதி மக்களின் நிலை கேள்விக்கு உள்ளாகி இருப்பதாகவும் தெரிகிறது.

அறிக்கையில் காணப்படும் பாதகமான அம்சங்கள்,

- 2015 ஜனவரி 9-க்குப் பின் இலங்கையில் இருந்து வந்த அகதி மக்கள், நீண்ட நாள் விசா பெறத் தகுதி அற்றவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- விசா புதுப்பிக்காமல் நீண்ட காலம் இருப்பவர்கள் கட்டணமின்றி விசாவைப் புதுப்பித்துக்கொண்டு, இலங்கைக்குத் திரும்ப வேண்டும் என்றும் கூறப்படுகிறது.
- இதனால் கணவன் மனைவி போன்ற நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை விட்டுப் பிரிய வேண்டிய நிலை உருவாகும்.
- இலங்கை சென்று திரும்பி வருபவர்கள் அகதிகளாகப் பதிவு பெற, புதிய சட்டத்தில் வாய்ப்பில்லை. இதனால் குடும்ப உறுப்பினர்களின் பிரிவு நிரந்தரமாகி விடுகிறது.
- குடியுரிமைக்கான வாய்ப்பு 2015-க்குப் பின் வந்தவர்களுக்கு முற்றாக மறுக்கப்படுகிறது.

இவ்வாறு பல சங்கடங்களுக்கு இவர்கள் உள்ளாக வேண்டி வருவதையிட்டு அரசு கவலைப்படவில்லை.

மூன்று நாடுகளின் ஆறு சமூகத்தவர்களுக்குக் குடியுரிமை பெற அளிக்கப்பட்ட வாய்ப்பு, 2015-க்கு முன் வந்த இலங்கை அகதி மக்களுக்கு வழங்கப்படாததன் பின்னணியில், அரசியல் இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தில் சில மாதங்களில் தேர்தல் நடைபெற இருப்பதன் காரணமாக இவ்அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கலாம் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

இன்றைய அரசுக்கு இலங்கை அகதி மக்கள் மீது உண்மையான அக்கறை இருப்பின், செப்டம்பர் 23, 1986-இல் உள்துறை அமைச்சகம், தலைமைச் செயலாளருக்கு ‘இந்திய குடியுரிமை வழங்குவதற்கான இலங்கை அகதிகளின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம்’ என அப்போது அனுப்பிய சுற்றறிக்கையின் வழிமுறைகள், இன்று வரையிலும் உயிரோட்டத்துடன் செயல்பாட்டில் இருக்கிறது. எனவே முதலில் அதனை நீக்க முன்வந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை. இதிலிருந்து இலங்கை அகதி மக்களுக்குக் குடியுரிமை வழங்கும் எண்ணம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அகதி மக்கள் அல்லது எல்லை தாண்டி வந்தவர்கள் தொடர்பாக ஒன்றிய அரசின் எண்ணம் புரியும் படியாக இல்லை. அரசின் கொள்கை ஆளுக்காள், நாளுக்கு நாள் மாறுபடுகிறது. அரசின் அளவுகோள் வேறுபடுகிறது. அனைவருக்கும் ஒரே மாதிரியான நியதி இங்கு இல்லை. திபெத் அகதிகள், தமிழ் அகதிகள், ரோகிங்கிய அகதிகள், இஸ்லாமிய அகதிகள் ஆகியோரின் விடயத்தில் அரசின் நிலைப்பாடு வெவ்வேறாக இருக்கிறது.

இலங்கை அகதி மக்களைப் பொறுத்த வரையில், 2025-செப்ரெம்பர் மாத உள்துறை அமைச்சக அறிக்கை, சற்று ஆறுதலைத் தந்த போதும், குடியுரிமைக்கான நம்பகத்தன்மை அதில் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் இந்தியக் குடியுரிமைக்காகவும் (citizenship), கடவுச் சீட்டுக்காகவும் அரசுடன் முட்டி மோதிக்கொண்டும், நீதியின் கதவுகளைத் தட்டிக்கொண்டும் இருக்கின்றனர். விளைவுகள் பல நேரங்களில் பாதகமாக வருகின்றன. உள்துறை அமைச்சிடமிருந்து குடியுரிமைக்கான சாதகமான சுற்றறிக்கை ஒன்று வந்தது என நம்பப்பட்ட கடந்த செப்ரெம்பர் மாதம், தமிழ்நாடு புதுக்கோட்டை அகதி முகாமில், 1991-ஆம் ஆண்டு, அகதிகளாக தமிழ்நாடு வந்த இலங்கை பெற்றோருக்குப் பிறந்து, சென்னையில் வசிக்கும் 34 வயதான திரு.ஆர். பகிசன், ஒரே இரவில் நாடற்றவராக அறிவிக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட நிலையில், ஜாமினில் வெளிவந்து, சட்டப் போராட்டத்தை தொடங்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இங்கு பிறந்த இளைஞரின் கைதும், தற்காலிக விடுவிப்பும் (bail) அகதி மக்கள் மத்தியில் பெரும் பதட்டத்தையும், அவநம்பிக்கையையும், ஏற்படுத்தி வருகின்றன. தமிழ் நாட்டில் பிறந்த பகிசன் அவர்கள், உண்மையான தகவல்களைத் தெரிவித்தே, இந்தியக் குடியுரிமை உட்பட, ஆதார் மற்றும் கடவுச் சீட்டு பெற்றுள்ளதாகக் கூறுகிறார். ஆனால் தற்போது இவரது இந்திய ஆவணங்களைப் பறிமுதல் செய்துள்ள இந்திய அரசு, இவரைச் சட்ட விரோதக் குடியேறி என்ற கட்டத்துக்குள் கொண்டு வந்து நிறுத்தி, விசாரணை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் பிறக்கும் வெளிநாட்டினரின் குழந்தைகளுக்கு, பிறப்பின் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்பட்டு வருகிறது. அமெரிக்க அதிபர் திரு. ட்ரம்ப், வெளிநாட்டினருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு, அமெரிக்க குடியுரிமை வழங்கும் உரிமைக்குத் தடை விதித்ததற்கு, அமெரிக்க சம்ஸ்டி நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இது உலகின் கவனத்தைப் பெற்றுள்ளதையும், இந்திய அரசு கருத்தில் கொள்ள முன்வர வேண்டும். இந்நிலையில், இந்திய அரசு அகதி மக்கள் குடியுரிமை பெறுவதற்கான தகுதி, உட்பட அனைத்து விபரங்களையும் மிகத் தெளிவாக ஒளிவு மறைவு இன்றி, வெளிப்படையாக வெளியிட்டு அம்மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்க்கையாகும்.

இவ்வாறு அரசியல் நகர்வுகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், இலங்கை அகதி மக்களுக்கு, எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று உறுதிபடக் கூற முடியாதிருக்கிறது.



jeyasingh@thaiveedu.com

# விசைப்பலகை விலங்குகளும் எண்மக் கட்டாரிகளும்





– ராணி விக்கிரமதுங்க
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

## அனுராவின் சீர்திருத்த அரசாங்கத்துக்கு எதிரான பொய்–புரளிகளின் தோற்றுவாய்

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினதும், அவரது கூட்டரசாங்கத்தினதும் எழுச்சி, இலங்கை அரசியலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையாகும்.

எனினும், இலங்கை அரசியலை மாற்றியமைக்க அவரது அரசாங்கம் அளித்த வாக்குறுதியை அனைவரும் வரவேற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியையும், இலங்கை பொதுசன முன்னணியையும் சேர்ந்தவர்கள் உட்பட, எஞ்சிமிஞ்சிய மூத்த கடும்பிடிவாதிகளாலும், அவர்களது ஊடகத் தரப்புகளாலும் செவ்வனே ஒருங்கிணைக்கப்பட்டு, மிகுந்த நிதியுதவியுடன், இடைவிடாது மேற்கொள்ளப்பட்டுவரும் நச்சுத்தனமான பொய்-புரளிகளின் முனைப்பு, புதிய அரசாங்கத்தின் ஒவ்வொரு முன்னெடுப்பையும் களங்கப்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே தென்படுகிறது.

பெரிதும் சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரப்பப்படும் இப்புரளிகளில், பொய்களும் பிழைகளும் நிரம்பி வழிகின்றன. அனைவரும் அறிந்த தந்திரம் ஒன்றில், இப்புரளிச் சூறாவளி மையம் கொண்டுள்ளது: அதாவது அரசாங்கத்தை எள்ளிநகையாடுவது, மானங்கெடுத்துவது, உறுதிகுலைய வைப்பது...

இதில் ஈடுபடும் ஊடகங்கள் பெரிதும் சுயநல அரசியல் தரப்புகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. ஆதலால், ஆதாரத்தை விடுத்து, சொந்த நிகழ்ச்சித் திட்டத்தின்படியே அவை கதையளக்கின்றன. இழந்த மானத்தை மீட்கத் துடிக்கும் அரசியல்வாதிகளே இவ்வூடகக் கூட்டுத்தாபனங்களை நடத்தி வருகிறார்கள்.

Facebook, TikTok, WhatsApp போன்ற எதிரொலிக் கூடங்களை அவை பயன்படுத்தி வருகின்றன. உண்மையை விடுத்து, உணர்ச்சியைத் தூண்டி, துணுக்குளைக் கொட்டி, சீற்றத்தை ஊட்டி விடுக்கப்படும் அஞ்சல்கள் இணைய வாயிலாக விளாசிப் பரவுகின்றன.

இந்த விசைப்பலகை விலங்குகள் ஆற்றும் பணி தெட்டத்தெளிவாகத் தெரிகிறது: அதாவது அரசாங்கத்தின் முன்னெடுப்புகள் அனைத்தையும் எள்ளிநகையாடுவது; அதன் தலைவர்களது காலை வாரிவிடுவது; மக்களிடையே குழப்பத்தை விதைப்பது; மிகைப்படுத்தி, இட்டுக்கட்டி, உருட்டிப்புரட்டுவது...

tg.theeban@gmail.com

> “முன்னாள் அமைச்சர்கள் முதல் மூத்த அதிகாரிகள் வரை கடந்தகாலக் குற்றங்களுக்கு உடந்தையாய் இருந்தவர்களின் நடவடிக்கைகள் தற்பொழுது சல்லடை போடப்பட்டு வருகின்றன. அவர்களுள் பலர் தலைமறைவாகி உள்ளதாக அறியப்படுகிறது. சிலர் பத்திரமாக வெளிநாடு செல்ல முண்டியடிப்பதாகத் தெரிகிறது.”



அரசாங்கத்தின்மீது தொடுக்கப்படும் பரந்துபட்ட, பல்முனைத் தாக்குதல்களுள் ஒன்று, அதன்மீது இடைவிடாது சேற்றை வாரி இறைப்பது. குறிப்பாக ஜே.வி.பி.-க்கும் அதன் கூட்டுக் கட்சிகளுக்கும் இடையே நிலவும் உறவைக் குறிகுவைத்து, ஆளும் கூட்டமைப்பின் உள்ளே பிணக்கைத் தோற்று விப்பது இன்னொரு தந்திரம்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சாகல ரத்நாயக்காவுக்கும் இடையே இரகசியச் சந்திப்புகள் இடம்பெறுவதாகக் கதைய ளக்கப்படுகிறது. ஐயுறவை விதைக்கும் நோக்குடன் அத் தகைய கதைகள் தந்திரோபாயமான முறையில் இட்டுக்கட் டப்படுகின்றன.

ரோகித ராஜபக்சாவின் செய்மதித் தொடர்புத் திட்டம் பற்றி பிரதமர் ஹரிணி அமரசூரிய ஓர் அறிக்கையை விடுத்தார். பிறகு அமைச்சர் வசந்த சமரசிங்க அதற்கு விளக்கம ளித்தார். அரசாங்கம் உள்ளுக்குள் தடுமாறுகின்றது எனப் பொருள்படும் வண்ணம், அத்தகைய விளக்கங்கள்கூடத் திரித்து வெளியிடப்பட்டன.

அத்துடன், மூடநம்பிக்கை மீண்டும் ஓர் அரசியற் கருவியாக மேலோங்குவதும் எம்மைத் துணுக்குற வைக்கிறது. முந்திய ராஜபக்ச ஆட்சிபீடங்களைச் சூழ்ந்த கள்ளத் தேர்தல் களத்தை நினைவுறுத்தும் வண்ணம் செய்வினை பற்றிய முணுமுணுப்புகள் திரும்பவும் காதில் விழுகின்றன.

பற்பல பழிபாவங்களும், அவர்களின் மனக்குறைகளும் கொண்ட பல்லவியே எமது கடந்தகாலம். அரசின் ஆதர வுடன் இழைக்கப்படும் குற்றங்களையும், ஊழலையும், நண் பர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதையும் இன்று நாம் காணவில்லை.

பொருளாதாரத்தை நொடிக்கவைத்த உண்டியல் மோசடி கள், அரசாங்கத்தை 160 கோடி ரூபா நட்டப்படவைத்த சீனிவரி மோசடிகள், ஒழுங்குமீறி வழங்கப்படும் கேள்விப் பத் திரங்கள், பின்கதவுப் பேரங்கள் எதுவும் இடம்பெறவில்லை. முதலீட்டாளர்களிடம் அதியுச்ச தரகுத்தொகைகள் நாடப்படு வதுமில்லை, கேட்கப்படுவதுமில்லை.

கேடுசூழும் வெள்ளை வான்கள் தெருவழியே திரிந்து மாற் றுக்குரல் எழுப்புவோரைக் கடத்திச் செல்வதில்லை; ஊட கர்கள் காணாமல் போக்கடிக்கப்படுவதில்லை; அவர்கள் நடுத்தெருவில் வைத்துக் கொல்லப்படுவதுமில்லை; அரசின் ஆதரவுடன் இன, சமய பதற்றங்களுக்குத் தூபம் இடப்படுவ தில்லை; அரசியல் ‘எதிரிகள்’ சிறையில் அடைக்கப்படுவ தில்லை; சுயாதீனமும் தன்மானமும் கொண்ட காவல்துறை அதிகாரிகள் இடமாற்றப்படுவதில்லை.

காவல்துறையிலும், நீதித்துறையிலும் தலையீடு இல்லை; அரசியல்வாதிகள் காவல்துறை நிலையப் பொறுப்பதிகாரி யின் கதிரையில் அமர்ந்திருந்து உத்தரவு பிறப்பிப்ப தில்லை; சிறந்துவிளங்கும் தலைமை நீதியரசர்கள் மீது




எதிராளர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்படுகின்றன. யானையின் அங்கங்களை வைத்து மாய்மாலச் சடங்குகள் நடத்தப்படுவதாகவும் கதைகள் அடிபடுகின்றன. பலிக்கும் எனும் நம்பிக்கையில் இத்தகைய விழல்கள் புரியப்படு கின்றன.

தமது செல்வாக்குக் குன்றிவிடும் என அஞ்சுவோரின் ஆற் றாமையை இது அம்பலப்படுத்துகிறது. மேற்படி விழல்கள் இன்னமும் ஆட்களைக் கவருகின்றன. மிரட்டி அரசியல் புரிந்த காலகட்டத்தின் எச்சமிச்சத்தை அவை புலப்படுத்து கின்றன.

செயலளவில் முற்றிலும் சரியான திசையில் செல்லும் அர சாங்கத்துக்கு அத்துணை எதிர்ப்புக் காட்டப்படுவது எதற் காக? ஆள்வதாகக் கூறி மக்களுக்கு இழைக்கப்பட்ட

குற்றம் சுமத்தப்படுவதில்லை; உச்ச நீதிமன்ற முடிபுகள் இழித்துரைக்கப்படுவதில்லை.

ஆட்சியாளரும், குடும்பத்தவர்களும், நண்பர்களும் மக்க ளின் வரிப்பணத்தைக் கோடிக்கணக்காகச் செலவழித்து உலகவலம் புரிவதை இப்பொழுது நாம் கேள்விப்படுவ தில்லை; சொந்தக் கிளுகிளுப்புக்காக அல்லது செல்லப் பிராணிகளை ஏற்றியிறக்குவதற்காக விமானங்கள் திசைதி ருப்பப்படுவதில்லை.

அகந்தைக்கு உட்பட்டு, கோடிக்கணக்கான செலவில், வீண் உருப்படிகளை உண்டாக்கி, திறைசேரி வற்றும்படி, மீண்டும் மீண்டும், எதுவித முடிவுமின்றி, கட்டுப்பணம் செலுத்தப்படு வதில்லை.

தறுதலைப் புதல்வர்கள் கள்ளத்தனமாக ஈட்டிய ஆதாயத்தைக் கொண்டு வாங்கிய பந்தயக் கார்களில், மக்கள் திரளையும், மற்றவர்களின் பாதுகாப்பையும் பொருட்படுத்தாமல், வீதித்தடைகளை மீறி, தறிகெட்ட முறையில் சவாரி செய்வதை இப்பொழுது நாங்கள் காண்பதில்லை.

ஜனாதிபதியின் அல்லது அமைச்சர்களின் தறுதலைகள் இரவு விடுதிகளில் துவக்குமுனையில் முகாமிட்டுக் கொட்டமடிப்பதில்லை. நாடாளுமன்றத்தின் 159 உறுப்பினர்களுள் சங்கிலித் திருடர்களோ, போதைமருந்து முதலாளிகளோ, கொலைகாரர்களோ கிடையாது.

எமது முதற் பார்வைக்கு அப்பழுக்கற்ற நிலைமையே இப்பொழுது தென்படுகிறது. எமது வாழ்நாளில் இத்தகைய நிலைமை தோன்றும் என நாம் எண்ணத் துணிந்ததில்லை. எனினும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு நீடிக்கவே செய்கிறது.

மக்களின் மனக்குறைகள் சில புரிந்துகொள்ளத் தக்கவையே. வாழ்க்கைச் செலவும், வன்முறைக் குற்றங்களும் பெருகியிருப்பது கவலை அளிக்கிறது. ஆனாலும் மேற்படி தரப்புகள் அரசாங்கத்தைக் கண்டிப்பதற்கு இவை காரணமல்ல என்பதைப் புரிந்துகொள்ள எவரும் ஒரு விற்பன்னராய் இருக்கத் தேவையில்லை.

தற்பொழுது கிளம்பியிருக்கும் எதிரலைக்கு அச்சமே தலையாய காரணம் என்பதை உணரக்கூடியதாக உள்ளது. முன்னாள் அமைச்சர்கள் முதல் மூத்த அதிகாரிகள் வரை கடந்தகாலக் குற்றங்களுக்கு உடந்தையாய் இருந்தவர்களின் நடவடிக்கைகள் தற்பொழுது சல்லடை போடப்பட்டு வருகின்றன. அவர்களுள் பலர் தலைமறைவாகி உள்ளதாக அறியப்படுகிறது. சிலர் பத்திரமாக வெளிநாடு செல்ல முண்டியடிப்பதாகத் தெரிகிறது.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணி மீண்டும் களைகட்டியுள்ளது. ஊழல்-தடுப்பு புலன்விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பல தசாப்தங்களுக்குப் பின்னர் முதல் தடவையாகத் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி, நீதிபாலிக்கப் பாடுபடும் ஓர் அரசாங்கத்தை உறுதிகுலைய வைப்பதிலேயே அவர்களின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

ஆட்சிக்கு எதிரான இயக்கத்துக்கு முண்டு கொடுத்து வருகிறது.

தம்மை உபசரித்தவர்களால் கொழுக்க வைக்கப்பட்ட ஒட்டுண்ணிகள் போன்ற இந்த அணியினர் இன்று அரசியலதிகாரமும், அரசியலாதரவும் கிடைக்கப்பெறாத அரசியல் அநாதைகளாய் அலைந்து திரிகிறார்கள். முன்பு தாம் துய்த்த சலுகைகளை மீட்கும் வகை தெரியாமல், இவர்களும் அரசாங்கத்தைக் குறைகூறும் கும்பலுடன் சேர்ந்திருக்கிறார்கள்.

பழம்பெரும் கட்சிகளின் கடும்பிடிவாத விசுவாசிகளை உள்ளடக்கிய மூன்றாவது அணி ஒன்றும் அரசாங்கத்தை எதிர்த்து வருகிறது. இது பித்துப்பிடித்த ஓர் அடியார் குழாம். இவர்களுட் சிலர் கடந்த தேர்தலில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவையும் அவரது கூட்டணியையும் ஆதரித்தது உண்மையே.

பலர் ஆதாரத்துக்கோ நியாயத்துக்கோ நெகிழாதவர்கள். பல தசாப்தங்களாக ‘தீமையைக் கண்டுகொள்ளாதவர்களாகவும், தீமையைச் செவிமடுக்காதவர்களாகவும்’ இருக்கும்படி பயிற்றப்பட்டவர்கள். தாம் விரும்பும் தலைவர்கள் தவறிழைத்தமைக்கு மேலதிகமான ஆதாரம் இருந்தும் கூட, தமது குருட்டுத்தனமான விசுவாசத்தை அவர்கள் நிலைநிறுத்தி வருகிறார்கள்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின், அமெரிக்காவை மீண்டும் பெருமைவாய்ந்த நாடாக மாற்றும் இயக்கத்தின் அணிகள் கூட கசப்பான உண்மைகளை எதிர்கொள்ளத் துவங்கியிருக்கின்றன. இலங்கை விசுவாசிகளோ ஆளும்பேருமாக அறிதிறனின்றி, இயங்கும் வலுவற்ற, பொறி ஒன்றில் அகப்பட்டுள்ளார்கள். ஆட்கவர்ச்சிக்கு உட்பட்டு, திறனாய்வுச் சிந்தனையை விடுத்து, நெறிமுறையின் அடிப்படையில் தலைமையைக் கணிக்கும் ஆற்றலோ விருப்பமோ அற்றவர்களாய், குலவிசுவாசத்துள் மூழ்கியுள்ளார்கள்.

ஆளும் கூட்டணிக்குள் ஆதிக்கம் மிகுந்த ஜே.வி.பி. மீது நெடுங்காலமாகக் கடும்பகை பாராட்டுவோரும் இருக்கிறார்கள். 1971-ஆம், 88-ஆம், 89-ஆம், 90-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வன்முறைக் கிளர்ச்சிகளின் விளைவாக நேர்ந்த பாதிப்பிலேயே அவர்களது ஐயுறவு பெரிதும் வேர்கொண்டுள்ளது.

பல தசாப்தகால வரலாற்றில் முதல் தடவையாக சொந்த ஆதாயத்துக்கு அரச யந்திரம் பயன்படுத்தப்படவில்லை. அதுவே ஒரு புரட்சிகரமான மாற்றம் அல்லவா! முன்னைய ஆட்சியில் அரசாங்கப் பதவி சொந்த ஆதாயத்துக்கு வழிவகுத்தது. இன்றைய ஆட்சியில் அரசாங்கப் பதவி சொந்த ஆதாயத்துக்கு வழிவகுக்கவில்லை. இன்றைய ஆட்சியில் தங்களுக்கு இடமில்லை என்பதால், முன்னையவர்கள் இன்றைய ஆட்சியை எதிர்க்கிறார்கள்.

ஒருகாலத்தில் ஊழல் மிகுந்த ஆட்சியில் வளங்கொழித்த அரசியற் கூட்டாளிகள், சந்தர்ப்பவாதிகள், பேரம்பேசுவோர் உள்ளடங்கிய இன்னொரு தனித்துவமான அணியும் இன்றைய

> ***“முன்னைய ஆட்சியில் அரசாங்கப் பதவி சொந்த ஆதாயத்துக்கு வழிவகுத்தது. இன்றைய ஆட்சியில் அரசாங்கப் பதவி சொந்த ஆதாயத்துக்கு வழிவகுக்கவில்லை. இன்றைய ஆட்சியில் தங்களுக்கு இடமில்லை என்பதால், முன்னையவர்கள் இன்றைய ஆட்சியை எதிர்க்கிறார்கள்.”***

அந்தக் காலகட்டத்தில் கிளர்ச்சியாளர்களால் நேரடியாகவோ, பரந்துபட்ட களோபரத்தினாலோ தாக்குண்டு பேரிழப்புகளுக்கு உள்ளாகி வருந்துவோர் பலர் இருக்கிறார்கள். இவை நியாயமான, வேதனை மிகுந்த நினைவுகள். அதே விதமாக அரச ஆதரவுடன் கூடிய கரும் பூனைகள், புரட்சிகர மக்கள் செஞ்சேனை போன்ற துணைப்படைக் குழுமங்கள் புரிந்த கொடுமையை ஒப்புக்கொள்ளாமல், இந்நிகழ்வுகள் பெரிதும் நினைகூரப்படுகின்றன.

அப்போதைய அரசியற் சூழ்நிலை இப்போது மறக்கப்படுகிறது அல்லது திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகிறது: ஓர் அரசியல் உபாயமாகவே ஜே.வி.பி. தலைமறை

வாக இயங்க நேர்ந்தது. அவர்கள் அமைதி வழியில் கருத்து முரண்பாட்டை முன்வைக்க வாய்ப்பளிக்கப்படவில்லை. அந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்த குற்றங்களுக்கு ஆட்சியாளர் மற்றும் ஆட்சியாளரை எதிர்த்தவர்கள் ஆகிய இரு தரப்பினருமே பொறுப்பு.

ஆங்கிலம் பேசும் மேட்டிமைக் குழாம் ஒன்று பல தசாப்தங்களாக இலங்கையை ஆண்டு வந்துள்ளது. கட்டியாண்டோருடன் கொண்ட நெருக்கம் ஒரு பண்பாட்டு மூலதனத்தை அவர்களுக்கு வழங்கியது. அந்தக் நெடுங்கால வர்க்க, பண்பாட்டுப் படிநிலை இப்பொழுது தலைகீழாக மாறியமை மற்றும் சிலரை மிகவும் விசனப்படுத்தியுள்ளது.

**“தன்னலம் நாடாத, பேராசை கொள்ளாத, தெளிந்த நோக்குடைய தலைவர் ஒருவராலேயே, பாரிய ஊறுபாடுகளுக்கு உள்ளான இலங்கையைக் குணப்படுத்தி, வளமும் நீதியும் பண்பும் மிகுந்த ஓர் எதிர்காலத்தை நோக்கி எமது தாயகத்தை வழிநடத்த முடியும்”**

களை விடுத்து, குணவியல்புகள் மீதும், அற்ப விடயங்கள் மீதும் இலக்கு வைக்க நேர்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த ஒரு வினோதமான ஒலியொளி நறுக்கு நினைவுக்கு வருகிறது. அதில் ஓர் ஓய்வுபெற்ற முதிய பாடசாலை ஆசிரியர் தோன்றுகிறார். அவர் கணிதவியலின் அடிப்படையில் தனது ஆரூடங்களை முன்வைப்பவர். ஜனாதிபதியாகுவார் என்று நம்ப முடியாத ஒரு சட்டவாளர் அனுராதபுரத்தில் உதிப்பது பற்றியும், முந்திய பிறவிகளில் அவர் பராக்கிரமபாகு, வலகம்பா மன்னர்களாக அரசாண்டது பற்றியும், அத்தலைவர் 2024-இல் ஆட்சி ஏற்பது பற்றியும், அவர் பல ஆண்டுகளாக இலங்கையை ஆள்வது பற்றியும், அவர் உலகத்தால் மெச்சப்படுவது பற்றியும் அந்த ஒலியொளி நறுக்கில் ஆசிரியர் ஆரூடம் கூறுகிறார்.

பழம்பெரும் தலைநகரமாகிய அனுராதபுரத்தின் எல்லைக்குள், ஓர் ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள தம்புத்தேகமை எனும் கிராமத்தில், கலப்பற்ற சிங்களம் பேசி, பாமர மக்களின் வேட்கைகளை அறுத்துரைக்கும் தலைவர் ஒருவர் தோன்றியமை, தமது அரசியலதிகாரத்துக்கு மட்டுமல்ல, ஆழ வேரூன்றிய சமூக ஒழுங்கிற்கும் ஆபத்து என்று சிலர் கருதுகிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை சிங்களத்தில் கத்தி, பாமரமக்களுக்கு உசுப்பேற்றும் பொடித்தரவழிகளைக் கொண்ட கும்பல் ஒன்று, தேசிய வாழ்வின் செல்நெறியைத் தீர்மானிப்பது ஓர் அபசாரம். தமது தந்தையரைப் பணிந்து, அவர்களைப் பின்தொடர்ந்து வயலுக்குச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நாட்டுப்புற அனுராக்கள் இன்று உலகத் தலைவர்களுடன் தோளோடு தோள் நிற்பது, அவர்களை சீற்றங்கொள்ள வைத்துள்ளது. இத்தகைய புதிய நிலைவரத்தை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள்.

புதிய நிலைவரத்தில் ஏதோ ஒரு பிசகு உறுதியாகத் தெரிகிறது: செல்வச் சீமான்களின் வழித்தோன்றல்கள் அல்லவோ சாள்ஸ் மன்னரிடம் பாசாங்குடன் கூடிய பராமுகத்துடன் பேச்சுக்கொடுக்க வேண்டும்? அல்லது கோடாதிபதி எலான் மஸ்க்குடன் இலங்கைத் தேநீர் அருந்தியபடி, கதையளந்து, முசுப்பாத்தி பண்ண வேண்டும்? அட, அட, உயர்பதவியில் அமரவும், உலகத் தலைவர்களுடன் கைகுலுக்கவும், போக்கிரிகளும் குற்றவாளிகளும் ஊர்வலமாகச் சிறைசெல்வதைக் கண்காணிக்கவும் ஒரு குழைக்காட்டானுக்கு என்ன துடுக்கு?

பிழையான கழுத்துமுடிச்சு, சாதாரண புறவுடை, தவறான ஆங்கிலச் சொற்றொடர், ஜனாதிபதியின் உயரம் கூட அற்பத்தனமாக விமர்சிக்கப்படுகின்றன. மறைந்துறையும் வர்க்கப் பாகுபாடு பெரிதும் அற்பத்தனமான விமர்சனங்களின் ஊடாக வெளிப்படுகிறது.

உருப்படியான விமர்சனங்கள் இல்லை என்பதை மட்டுமல்ல, விமர்சகர்களின் உள்ளார்ந்த பலவீனங்களையும் இத்தகைய அற்பத்தனமான கண்டனங்கள் அம்பலப்படுத்துகின்றன. உண்மையாகவே தவறிழைக்கப்படாவிடத்து, குறைகூறுவோர் அற்பத்தனமாக ஏளனம் செய்யவே நேரும். தவறிழைக்கப்பட்டதை மெய்ப்பிக்க முடியாவிடத்து, முக்கிய விடயங்

2024 தேர்தலில் அனுரா வென்றபொழுது மேற்படி ஆருடத்தை என்னால் நினைவுகூராமல் இருக்க முடியவில்லை. ஆசிரியர் கூறிய ஆருடம் முழுவதும் உண்மையில்லை. எனினும் அனுரா பதவியில் நீடித்து நிலைமையைச் சீரமைப்பார் என்று நான் நம்புகிறேன்.

தன்னலம் நாடாத, பேராசை கொள்ளாத, தெளிந்த நோக்குடைய தலைவர் ஒருவராலேயே, பாரிய ஊறுபாடுகளுக்கு உள்ளான இலங்கையைக் குணப்படுத்தி, வளமும் நீதியும் பண்பும் மிகுந்த ஓர் எதிர்காலத்தை நோக்கி எமது தாயகத்தை வழிநடத்த முடியும் என்பது அடியேனின் தாழ்மையான கருத்து.

அரசாங்கம் அதன் பணியைத் தொடரும் இவ்வேளையில், ஒருசில நியாயமான வினாக்கள் எழவே செய்கின்றன: அனுரவால் முடியாவிட்டால், வேறு யாரால் முடியும்? இந்த அரசாங்கத்தால் முடியாவிட்டால், மாற்றுவழி என்ன? எமது அரசியல்-வர்க்கத்துள் மோசடியால் கறைபடியாது மீந்திருப்போர் யார்? நீதி, நியாயம், நாட்டுநலம் பேணத் தளராது உறுதிபூண்டவர் யார்?

தற்போதைக்காவது விடை தெளிவாகத் தெரிகிறது. புறவுடை, சொற்றொடர், உயரம் பற்றி எல்லாம் தொடர்ந்தும் முட்டையில் முடி பிடுங்குவோரை விளித்து நாம் ஒன்று கூறுவோம்: தலைமை என்பது அங்குலத்தால் அல்லது ஆடைத் தெரிவுகளால் அளக்கப்படுவதல்ல; துணிவு, நேர்மை, பெறுபேறுகள் கொண்டு அளக்கப்படுவதே தலைமை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

அந்த வகைகளில் எல்லாம் வேறு பலரையும் விட ஓங்கி உயர்ந்து சிறந்து விளங்குகின்றார்... ஜனாதிபதி அனுர குமர திசாநாயக்க.

நன்றி:
https://www.colombotelegraph.com/index.php/keyboard-canines-digital-daggers-inside-the-disinformation-war-on-akds-reformist-government/



mani.velupillai@thaiveedu.com

# கத்தியின்றிப் புற்றுநோய்க் கட்டிகளை அகற்றும் சிகிச்சை முறை



**சுப்ரமணியம் ஜெயசீலன்**

விஞ்ஞான உலகின் வளர்ச்சிப் படிகளை நாம் ஒவ்வொரு நொடியிலும் எட்டிப்பிடித்து வெற்றிப் படிகளைத் தொட்டு வருகின்றோம். எனினும் சில நோய்கள் தொடர்பில் மருத்துவ விஞ்ஞானம் எத்தனை வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தாலும் சில நோய்களைக் கண்டு நாம் இன்னமும் அச்சமடையும் நிலைமையே நீடித்து வருகிறது. குறிப்பாக, புற்றுநோய் தொடர்பில் சமூகத்தில் பெரும் பீதி நிலவி வருகிறது. சில வகைப் புற்று நோய்களைக் குணப்படுத்துவதில் இன்னும் இந்த மருத்துவ உலகம் திணறிக்கொண்டிருக்கிறது என்றால் அது மிகைப்படப் போவதில்லை. இவ்வாறான பின்னணியில் சில அரிய மருத்துவக் கண்டுபிடிப்புகள் கொண்டாடப்பட வேண்டியவை. இன்று விளையாட்டாக ஆரம்பிக்கப்பட்ட ஓர் ஆய்வானது புற்றுநோய் சிகிச்சை முறைமையை எவ்வாறு புரட்டிப் போட்டுள்ளது என்பது ஆச்சரியம்மிக்கது. சில நாடு களைச் சேர்ந்த 4 மருத்துவ விஞ்ஞான ஆய்வாளர்களின் அர்ப்பணிப்பும் புத்தாக்க முயற்சிகளும் சத்திரசிகிச்சை இன்றி அதாவது கத்தி இன்றி புற்றுநோய்க் கட்டிகளை முழுமையாக அகற்றக்கூடிய அபரிமித சாதனையை எட்டிப் பிடித்துள்ளது. மருத்துவ உலகின் இத்தகைய மகத்தான கண்டுபிடிப்புத் தொடர்பான ஓர் ஊடாடலாக இந்தப் பத்தி அமையப் பெற்றுள்ளது.



tg.theeban@gmail.com

நோய்களைக் கண்டறிவதற்காக, உடலின் உட்பகுதிகளைப் பார்வையிடுவதற்காக மருத்துவ நிபுணர்கள் மீயொலி (Ultrasound) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்தத் தொழில்நுட்பமானது மருத்துவத்துறையில் மிக நீண்ட கால மாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் ஒருமுகப் படுத்தப்பட்ட உயர் அதிர்வெண் ஒலி அலைகள் புற்று நோயைக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சை முறையாக அறி முகப்படுத்த முடியும் என்பது சற்று விந்தைமிகு தகவலாகவே காணப்படுகின்றது.

அமெரிக்காவின் மிக்சிகன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப் படிப்பைத் தொடர்ந்த ஜென் சூ (Zhen Xu) இந்தத் தொழில்நுட்பம் குறித்த ஆச்சரியமிகு முடிவுகளைக் கண்ட றிந்து உலகிற்கு எடுத்தியம்பினார்.

கலாநிதி பட்டக் கற்கையின்போது தனது ஆய்வக நண் பர்களை எரிச்சலூட்டியிருக்காவிட்டால், கல்லீரல் புற்றுநோய்க் கான ஒரு புதிய புரட்சிகர சிகிச்சை முறையை சூவினால் ஒருபோதும் கண்டுபிடித்திருக்க முடியாது.

2000-களின் முற்பகுதியில் உயிரி மருத்துவப் பொறியியலில் கலாநிதி பட்டம் பெற்ற சூ, மனித உடலில் அறுவைச் சிகிச் சைகளை மேற்கொள்ளாது புற்றுநோயினால் தாக்கப்பட்ட பகுதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் புதிய முறையொன்றை அறிமுகம் செய்துள்ளார்.

புற்று நோயினால் தாக்கமுற்றிருக்கும் உடலின் திசுக்களை அழித்து நோயைக் குணப்படுத்தும் நோக்கிலான ஆய்வுகளில் முனைப்புக் காட்டியதுடன், ஒலி அலைகளைப் பயன்படுத்தி நோயுற்ற திசுக்களை அழிப் பதன் மூலம் நோயாளியைக் குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

அல்ட்ராசவுண்ட் (Ultrasound) என்பது உயர் அதிர்வெண் ஒலி அலைகளை (high-frequency sound waves) பயன்ப டுத்தி உடலின் உள் உறுப்புகள், திசுக்கள் மற்றும் கருப் பையில் வளரும் குழந்தை போன் றவற்றை படம் (image) பிடித்துக் காண்பிக்கும் மருத்துவ நுட்ப மாகும்.

இது எக்ஸ்-ரே போல் கதிர்வீச்சு (radiation) வெளிப்படுத்தாதது என்பதால் பாதுகாப்பான மற்றும்

வலியில்லாத பரிசோதனையாக அடையாளப்படுத்தப்படு கின்றது.

### அல்ட்ராசவுண்ட் எவ்வாறு தொழிற்படுகின்றது?

- சிறப்புக் கருவி (Transducer) ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மேல் வைக் கப்படுகிறது.
- அது உயர் அதிர்வெண் ஒலி அலை களை உடலுக்குள் செலுத்தி, அவை உறுப்புகளிலிருந்து பிரதிப லிக்கும் (echo).
- கணினி அவற்றை நேரடி (real-time) படமாக மாற்றி திரையில் காட்டுகிறது.

### பொதுவாக செய்யப்படும் அல்ட்ராசவுண்ட் வகைகள்:

- கர்ப்ப கால அல்ட்ராசவுண்ட் - குழந்தையின் வளர்ச்சி, இத யத் துடிப்பு, பாலினம் போன்றவற்றைக் காண்பதற்கானது.
- வயிற்றுப் பகுதி (Abdominal) அல்ட்ராசவுண்ட் - கல்லீரல், சிறுநீரகம், பித்தப்பை போன்ற உறுப்புகளைப் பார்ப்பதற் கானது.
- பெல்விக் அல்ட்ராசவுண்ட் - பெண்களுக்கான கருப்பை, முட்டைகோஷம் (blighted ovum), ஆண்களுக்கான சத்தி ரசந்தி (prostate) பரிசோதனைக்கானது.
- இதய அல்ட்ராசவுண்ட் (Echocardiogram) - இதயத்தின் இயக்கம் மற்றும் இரத்த ஓட்ட ஆய்விற்கானது.
- விரைவு / மரபணு அல்ட்ராசவுண்ட் (Doppler Scan) - இரத்த ஓட்டம் மற்றும் நரம்பு செயற்பாடு போன்றவற்றைக் காண்பதற்கானது.

### அல்ட்ராசவுண்டின் நன்மைகள்:

- கதிர்வீச்சு இல்லை, எனவே பாதுகாப்பானது.
- வலி இல்லாதது மற்றும் துரிதமானது.
- உடனடியாக முடிவுகளைப் பெற முடியும்.
- நோய்களை முன்கூட்டியே கண்டறிய உதவுகிறது.

திசுக்களை இயந்திரவியல் ரீதியாக உடைக்க உயர் அதிர் வெண் ஒலி அலைகளைப் பயன்படுத்த முடியுமா? அது வெற்றியளிக்குமா? என்ற ஆய்வில் சூ, இறங்கினார்.

அல்ட்ராசவுண்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தனது பரிசோதனையை மேற்கொள்ளத் திட்டமிட்டார். மேலும் பன்றி இதயங்களில் தனது பரிசோதனை முயற்சிகளை மேற்கொண் டிருந்தார்.

பொதுவாக அல்ட்ராசவுண்ட் மனித காதுகளுக்குக் கேட்கக் கூடாது, ஆனால் சூ தனது சோதனைகளில் மிகவும் சக்தி வாய்ந்த ஒலி பெருக்கியைப் பயன்படுத்தினார், இதனால் அவர் ஆய்வகத்தைப் பகிர்ந்து கொண்ட மற்ற ஆராய்ச்சி யாளர்கள் பலத்த ஒலி தொடர்பில் அதிருப்தி வெளியிடத் தொடங்கினர்.




மறுபுறத்தில் பரிசோதனையில் எவ்வித முன்னேற்றமும் பதிவா கவில்லை. இந்த நிலையில் சக ஆய்வாளர், நண்பர்களை சீண்டும் நோக்கில் சூ, ஆய்வு கூடத்தில் அல்ட்ராசவுண்ட் துடிப்புகளின் விகிதத்தை அதி கரித்துள்ளார். இது ஒலி அளவை மனிதர் கேட்கும் வரம் பிற்கு வெளியே கொண்டு சென்றுள்ளது.

சூவிற்கு அதிர்ச்சியளிக்கும் வித மாக, வினாடிக்குத் துடிப்புக ளின் எண்ணிக்கையை அதிகரித்தது - அதாவது ஒவ்வொரு துடிப்பும் ஒரு மைக்ரோ வினாடிக்குக் குறைக்கப்பட்டது - அவரைச் சுற்றியுள்ளவர்களுக் குக் குறைவான இடையூறாக இருந்தது மட்டுமல்லாமல், முன் னதாக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறையை விட உயிருள்ள திசுக்களில் மிகவும் பயனுள்ள தாக்கத்தை இந்த முறைமை ஏற்படுத்தியது.

அல்ட்ராசவுண்ட் பயன்படுத்தப்பட்ட ஒரு நிமிடத்திற்குள் பன்றியின் இதய திசுக்களில் ஒரு துளை உருவாகியது, ‘நான் கனவு காண்கிறேன் என்று நினைத்தேன்,’ என மிச்சிகன் பல்க லைக்கழகத்தில் உயிரி மருத்துவப் பொறியியல் பேராசிரி யராக தற்பொழுது கடமையாற்றி வரும் சூ தனது அனுப வத்தைப் பகிர்ந்து கொள்கின்றார்.

பேராசிரியர் சூவின் தற்செயலான கண்டுபிடிப்பு பல தசாப் தங்களுக்குப் பிறகு, ஹிஸ்டோட்ரிப்சி (Histotripsy) என்று அழைக்கப்படும், அல்ட்ராசவுண்டைப் பயன்படுத்தி மேம் பட்ட புற்றுநோய் சிகிச்சையின் புதிய சகாப்தத்திற்கு வழிகோ லியுள்ளது.

இது மருத்துவ நிபுணர்கள் அறுவை சிகிச்சைக்குப் பதிலாக ஒலியைப் பயன்படுத்தி புற்றுநோய்க் கட்டிகளை அகற்ற ஒரு புதிய சிகிச்சை முறையை உருவாக்கியுள்ளது. புற்று நோய்க் கட்டிகளை கத்தியினால் ஊடறுத்து சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமிருக்காது என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கல்லீரல் கட்டிகளுக்கான சிகிச்சை முறைகளில் ஒன்றாக ஹிஸ்டோட்ரிப்சி கடந்த 2023-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத் தில் அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீ கரிக்கப்பட்டது. ஹிஸ்டோசோனிக்ஸ் (HistoSonics) என்ற நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் குறித்த சிகிச்சை முறை யின் ஊடாக 95 வீதமான கல்லீரல் கட்டிகளுக்கு எதிராக வெற்றிகரமான சிகிச்சை அளிக்கப்பட முடியும் எனக் கண்ட றிந்துள்ளது.

ஹிஸ்டோசோனிக்ஸ் என்ற நிறுவனம் பேராசிரியர் சூவின், ஒலியைக் கொண்டு சிகிச்சை அளிக்கும் முறையை வர்த்தக ரீதியாக வெற்றியடையச் செய்யும் நோக்கில் உருவாக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வயிற்று வலி முதல் உட் புற இரத்தப்போக்கு வரை சில பக்க விளைவுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்பட்டாலும் இந்த முறை பொதுவாக



> “இந்த சிகிச்சை முறைமை மிகவும் வேகமானது, விசத்தன்மையற்றது. சிகிச்சை மேற்கொள்ளப்படும் காலம் தேவைக்கேற்றவகையில் மாறுபடும். என்றாலும், பொதுவாக ஒன்று முதல் மூன்று மணி நேரம் சிகிச்சைக்கான காலமாக அமையும்.”

பாதுகாப்பானது எனவும் சிக்கல் மிகவும் அரிதானது எனவும் ஆராய்ச்சி கூறுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் ஹிஸ்டோட்ரிப்சி என்ற இந்த அதி நவீன சிகிச்சை முறையை அங்கீகரித்த முதல் நாடாக இங்கிலாந்து கடந்த ஜூன் மாதம் பதிவானது. பரீட்சார்த்த அடிப்படையில் இந்த சிகிச்சை முறை சாதன அணுகலை அங்கீகரித்துள்ளது. பிரித்தானிய தேசிய சுகாதார சேவையில் இந்த சிகிச்சை முறைமை உள்ளடக்கப்பட்டுள்ளது.

நோயாளி மீது கத்தியை வைக்காமல் கட்டிகளை அழிக்கவும், மெட்டாஸ்டேடிக் (Metastatic) நோயை (உடலின் பிற பகுதிகளுக்குப் பரவியுள்ள புற்றுநோய்கள்) கட்டுப்படுத்தவும், பிற புற்றுநோய் சிகிச்சைகளின் செயற்றிறனை மேம்படுத்தவும் முடியும் என ஸ்பெய்னின் ராமென் வை காஜல் மருத்துவ ஆய்வு நிறுவகத்தின் பிரதம ஆய்வாளரான ஜூலி ஏர்ல் (Julie Earl) தெரிவிக்கின்றார்.

‘மக்கள் அல்ட்ராசவுண்டை இமேஜிங் என்று நினைக்கிறார்கள் எனவும் இந்த ஆய்வு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது’ எனவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

## அல்ட்ராசவுண்ட் எவ்வாறு செயற்படுகிறது:

பலருக்கு, ‘அல்ட்ராசவுண்ட்’ என்ற வார்த்தை கர்ப்ப காலத்தில் சோனோகிராம்களுடனான உடனடித் தொடர்புகளை நினைவூட்டுகின்றது. சோனோகிராம் போன்ற மருத்துவப் படத்தை உருவாக்க, ஒரு கையடக்க டிரான்ஸ்யூசர் அதிக அதிர்வெண் ஒலி அலைகளை உடலுக்குள் பாய்ச்சுகிறது, அவை உள்ளே உள்ள திசுக்களை மீண்டும் வெளியேற்றுகின்றன. சாதனத்தில் உள்ள சென்சர் மீண்டும் குதிக்கும் அலைகளை எடுத்து, அவற்றின் செயற்பாட்டை மின் சமிக்ஞைகளாக மாற்றுகிறது, பின்னர் அவை தோலுக்கு அடியில் என்ன நடக்கிறது என்பதற்கான படத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன.




புற்றுநோய் சிகிச்சையில், அல்ட்ராசவுண்ட் அலைகள் கட்டியின் ஒரு சிறிய பகுதியில் குவிக்கப்பட்டு அவை அழிக்கப்படுகின்றன.

‘கல்லீரல் புற்றுநோய் சிகிச்சை மேற்கொள்ளப்படும் போது, ஹிஸ்டோட்ரிப்சி சாதனங்கள் அல்ட்ராசவுண்ட் அலைகளை சுமார் இரண்டு முதல் நான்கு மில்லிமீட்டர்கள் கொண்ட குவிய மண்டலத்திற்குள் செலுத்துகின்றன’ என பேராசிரியர் சூ கூறுகின்றார். மேலும் ‘இது நாம் பயன்படுத்தும் குமிழ் முனைப் பேனாவின் நுனிப்பகுதிக்கு ஒத்ததாக அமையப் பெற்றுள்ளது’ எனவும் குறிப்பிடுகின்றார்.

இந்த அல்ட்ராசவுண்ட், ஒரு ரோபோ கை டிரான்ஸ்டியூசரை கட்டியின் மீது சரியான பகுதியை இலக்காகக் கொண்டு சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. இதன் போது சிறிய ‘நுண் குமிழ்கள்’ உருவாகின்றன, அவை விரிவடைந்து பின்னர் மைக்ரோ வினாடிகளில் சரிந்து, கட்டி திசுக்களைப் போலவே உடைகின்றன. அதன் பின்னர் நோயாளியின் நோயெதிர்ப்பு அமைப்பினால் கழிவுகளை அகற்றக்கூடிய சாத்தியம் உருவாகின்றது. இந்தச் சிகிச்சையை மேற்கொள்ளும் நோயாளி சிகிச்சை பெற்றுக் கொள்ளும் அதே நாளில் வீடு திரும்பக் கூடிய அளவில் மிகவும் எளிமையான சிகிச்சையாக இது அமைகின்றது.

இந்த சிகிச்சை முறைமை மிகவும் வேகமானது, விசத்தன்மையற்றது. சிகிச்சை மேற்கொள்ளப்படும் காலம் தேவைக்கேற்ற வகையில் மாறுபடும். என்றாலும், பொதுவாக ஒன்று முதல் மூன்று மணி நேரம் சிகிச்சைக்கான காலமாக அமையும் எனவும் பேராசிரியர் சூ கூறுகின்றார்.

இந்த சிகிச்சை முறையின் மூலம் பெரும்பாலான கட்டிகள் ஒரே தடவையில் அழிக்கப்படுவதாகவும் சில பெரிய கட்டிகள் மட்டும் பல சுற்று சிகிச்சையின் பின்னர் முழுமையாக அழிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றார்.

ஹிஸ்டோட்ரிப்சி என்ற அதி நவீன சிகிச்சை முறைமை நோயாளிகளுக்கு பெரும் நம்பிக்கை அளிக்கக்கூடியவையாக இருந்தாலும் அவர்களுக்கு இது தொடர்பில் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளுக்கு மீண்டும் புற்று

நோய் வருவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதனை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதோடு இச்சிகிச்சை முறைமை மிகவும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது என்பதனால் நோயாளிகள், குணமடைந்த நோயாளிகள் பற்றிய தகவல்களை பெரியளவில் பெறவும் முடியவில்லை.

இதேவேளை உடைக்கப்படும் புற்றுநோய்க் கட்டிகளின் துகள்கள் உடலின் வேறு பகுதிகளுக்குள் புற்று நோயை கடத்துமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ஆனால் விலங்குகளில் மேற்கொண்ட பல்வேறு பரிசோதனைகளில் அவ்வாறான அறிகுறி எதுவும் தென்படவில்லை என்பதனை மட்டுமே இப்போதைக்குக் கூறிக்கொள்ள முடியும்.

ஹிஸ்டோட்ரிப்சி சிகிச்சை முறைமை அனைத்து புற்றுநோய்களுக்கு எதிராகவும் செயற்படாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அல்ட்ராசவுண்ட்டைப் பயன்படுத்தும் போது தாக்கமடைந்த பகுதியை அடைவதற்கு சில சந்தர்ப்பங்களில் எலும்புகள் தடையாக இருக்கக்கூடும். இதனால் சில இடங்களில் கட்டிகளை அழிப்பதில் சிக்கல் ஏற்படக்கூடும். மேலும் நுரையீரல் போன்ற வாயு உறுப்புகளில் ஹிஸ்டோட்ரிப்சியைப் பயன்படுத்துவது ஆபத்தானது, அருகிலுள்ள ஆரோக்கியமான திசுக்களுக்கு இது சேதத்தை ஏற்படுத்தும். ஆனால் ஹிஸ்டோசோனிக்ஸ் தற்போது சிறுநீரகம் மற்றும் கணையத்தின் கட்டிகளுக்கு சாத்தியமான சிகிச்சையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

புற்றுநோய் சிகிச்சையில் அல்ட்ராசவுண்டின் முதல் பயன்பாடு ஹிஸ்டோட்ரிப்சி அல்ல. அதிதீவிரம் கொண்ட குவிய அல்ட்ராசவுண்ட் (High-intensity Focused Ultrasound (HIFU)), ஒரு பழைய மற்றும் மிகவும் நிறுவப்பட்ட தொழில்நுட்பம் என்பதுடன் கட்டிகளைத் தாக்கவும் பயன்படுத்த முடியும்.

ஒரு கட்டியில் குவிய அல்ட்ராசவுண்ட் வெடிப்பினைப் பயன்படுத்தி திசுக்கள் வெப்பமேற்றப்பட்டு அழிக்கப்படுவதாக அமெரிக்காவின் வர்ஜீனியா பல்கலைக்கழகத்தில் ஃபோகஸ்டு அல்ட்ராசவுண்ட் புற்றுநோயெதிர்ப்பு சிகிச்சை மையத்தின் இணை இயக்குநரான ரிச்சர்ட் பிரைஸ் (Richard Price) கூறுகிறார்.

‘நீங்கள் ஒரு பூதக்கண்ணாடியை எடுத்து, ஒரு வெயில் நாளில் உலர்ந்த இலையின் மீது வைத்திருந்தால், நீங்கள் உண்மையில் இலையை நெருப்பில் எரிய வைக்கலாம்’ என பிரைஸ் விளக்குகின்றார். HIFU முறை அடிப்படையில் புற்றுநோய் திசுக்களுக்கு அதையே செய்கிறது, ஒலி ஆற்றலை மட்டுமே பயன்படுத்துகிறது எனக் குறிப்பிடுகின்றார்.

புரோஸ்டேட் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான ஊடுருவல் இல்லாத வழியாக HIFU அறியப்படுகிறது. இந்த ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின்படி, அறுவை சிகிச்சையைப் போலவே பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நோயாளிகள் எழுந்தவுடன் சில வலி மற்றும் சிறுநீர் சம்பந்தமான பக்க விளைவுகளை அனுபவிக்கலாம், எனினும் அறுவை சிகிச்சைக்கு பின்னரான சிரமங்கள் இல்லாது போகும் எனவும் வேகமாக மீண்டெழ முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஹிஸ்டோட்ரிப்சி மற்றும் HIFU சிகிச்சை ஆகிய இரண்டு வகையான சிகிச்சைகளும் பொதுவாக நோயாளிகளுக்கு மயக்க மருந்து வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எனவே இவ்வாறு சிகிச்சை அளிக்கப்படும்போது நோயாளிகள் அசையமாட்டார்கள். அருகிலுள்ள உறுப்புகள் அல்லது திசுக்களுக்கு தற்செயலான சேதம் ஏற்படுவதற்கான வாய்ப்பை இது வரையறுக்கின்றது.

### அல்ட்ராசவுண்ட் மற்றும் ஏனைய மருந்துகள்:

நடைமுறையில் உள்ள ஏனைய புற்றுநோய் சிகிச்சை முறைகளுடன் அல்ட்ராசவுண்டின் சக்தியை இணைப்பதன் மூலமும் சிகிச்சையின் செயற்றிறனை அதிகரிக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். உதாரணமாக, இரத்த ஓட்டத்தில் நுண்குமிழிகளைச் செலுத்தி, அல்ட்ராசவுண்ட் மூலம் அவற்றைத் தூண்டுவது இரத்த-மூளைத் தடையை தற்காலிகமாகத் திறக்கும் என்று அண்மைய ஆராய்ச்சி கூறுகிறது. இந்தத் தடை பொதுவாக இரத்த ஓட்டத்தில் உள்ள நச்சுகள் மூளைக்குள் நுழைந்து சேதமடைவதைத் தடுக்கிறது. ஆனால் புற்றுநோய் சிகிச்சையின் போது வேண்டுமென்றே அதைத் திறப்பது மருந்துகள், அவை தாக்க வேண்டிய கட்டிகளை அடைய அனுமதிக்கும்.

அந்த நன்மைகள் மூளைப் புற்றுநோயுடன் நின்றுவிடாது என கனடாவின் ஒன்டாறியோவில் உள்ள சன்னிபுரூக் சுகாதார அறிவியல் மையத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி தீபா சர்மா (Deepa Sharma) கூறுகிறார். அல்ட்ராசவுண்ட் மற்றும் நுண்குமிழிகளின் கலவையை புற்றுநோய் வகைகளைக் கொண்டு



“உடலின் இயற்கையான பாதுகாப்புகளிலிருந்து தப்பிக்கக்கூடிய அல்லது மறைக்கக்கூடிய புற்றுநோய் கலங்களை எதிர்த்துப் போராட நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தூண்டுவதில் கவனம் செலுத்தும் சிகிச்சை அணுகுமுறையாக இந்த அல்ட்ராசவுண்ட் சிகிச்சை முறைமை அமைந்துள்ளது.”



அவர் ஆய்வு செய்துள்ளார், இந்த வழிமுறைகள் மருந்து விநியோகத்தை பரவலாக மேம்படுத்தும் என்பதைக் கண்டறிந்துள்ளார்.

அல்ட்ராசவுண்ட்-மேம்படுத்தப்பட்ட மைக்ரோபபிள்கள், கட்டிகளின் குருதிக்கலன்களை சேதப்படுத்துவதன் மூலம் கதிர்வீச்சின் விளைவுகளை அதிகரிக்கக்கூடும் எனவும், இதனால் அதிக கல இறப்பு ஏற்படும் என்றும் சர்மாவின் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. அல்ட்ராசவுண்ட் மற்றும் நுண்குமிழ்களுடன் இணைக்கப்பட்டால், கீமோதெரபி மற்றும் கதிர்வீச்சு போன்ற நச்சுப் புற்றுநோய் சிகிச்சைகளை மருத்துவர்கள் சிறிய அளவில் பயன்படுத்தலாம் என்றும் அந்தக் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன என்று அவர் கூறுகிறார்.

அல்ட்ராசவுண்ட்-தூண்டப்பட்ட நுண்குமிழ்களால் அதன் விளைவுகளை அதிகரிக்க முடிந்தால், மருத்துவர்கள் கோட்பாட்டளவில் குறைந்த அளவுகளைப் பயன்படுத்தி அதே சிகிச்சை விளைவுகளைக் குறைவான ஆபத்துத் தரும் பக்க விளைவுகளுடன் அடையலாம் என்றும் மேலும் அவர் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

அல்ட்ராசவுண்ட் நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு பொருத்தமானது. உடலின் இயற்கையான பாதுகாப்புகளிலிருந்து தப்பிக்கக்கூடிய அல்லது மறைக்கக்கூடிய புற்றுநோய் கலங்களை எதிர்த்துப் போராட நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தூண்டுவதில் கவனம் செலுத்தும் சிகிச்சை அணுகுமுறையாக இந்த அல்ட்ராசவுண்ட் சிகிச்சை முறைமை அமைந்துள்ளது.

ஏனைய புற்றுநோய்களை விடவும் மெட்டாஸ்டேடிக் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பது மிகவும் கடினம் - புற்றுநோய் உடல் முழுவதும் பரவும்போது, ஒரு கட்டியை அகற்றுவதற்கு அது போதுமானதில்லை. மருத்துவர்கள் ஒரு நாள் அல்ட்ராசவுண்டைப் பயன்படுத்தி ஒரு கட்டியைப் பிரித்து, நோயெதிர்ப்பு குணாதிசயங்களை எடுத்துக்கொண்டு உடலில் வேறு இடங்களில் உள்ள புற்றுநோய் செல்களுக்கு எதிரான அமைப்பு ரீதியான தாக்குதலைத் தொடங்க அனுமதிக்கும் என்பது மகத்தான வெற்றியாக அமையும் என பிரைஸ் கூறுகிறார்.

இது முழுமையான அளவில் இன்னமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்படவில்லை, ஆனால் கோட்பாட்டளவில், 'மருத்துவர்கள் ஒரு கட்டிக்கு சிகிச்சையளிப்பதன் மூலம் 10, 15, 20 கட்டிகளுக்கு சிகிச்சையளிக்க முடியும்' என்றும் பிரைஸ் கூறுகிறார். அதாவது, அல்ட்ராசவுண்ட் மற்றும் இம்யூனோதெரபி மீதான சோதனைகள் இன்னும் ஒப்பீட்டளவில் ஆரம்ப நிலைகளில் உள்ளதாக பிரைஸ் எச்சரிக்கிறார்.

அல்ட்ராசவுண்ட் புற்றுநோய்க்கான 'மந்திர சிகிச்சை' அல்ல என பேராசிரியர் சூ கூறுகிறார். எல்லா மருத்துவ சிகிச்சையையும் போலவே, இதுவும் குறைபாடுகளையும் சிக்கல்களையும் கொண்டுள்ளது. ஆனால் பல தசாப்தங்களுக்கு முன்பு தனது ஆய்வகத் தோழர்களை எரிச்சலூட்டும் சத்தத்திலிருந்து காப்பாற்ற முடிந்ததைப் போலவே, தனது கண்டுபிடிப்பு - மற்றும் பிற விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகள் - வரும் ஆண்டுகளில் நோயாளிகள் தேவையற்ற துன்பத்தைத் தவிர்க்க உதவும் என பேராசிரியர் சூ தெரிவிக்கின்றார்.

மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் உயிரி மருத்துவ பொறியியல் பேராசிரியராக தற்பொழுது கடமையாற்றி வரும் ஸென் சூ, ஸ்பெய்னின் ராமென் வை காஜல் மருத்துவ ஆய்வு நிறுவகத்தின் பிரதம ஆய்வாளரான ஜூலி ஏர்ல், அமெரிக்காவின் வர்ஜீனிய பல்கலைக்கழகத்தில் ஃபோகஸ்டு அல்ட்ராசவுண்ட் புற்றுநோயெதிர்ப்பு சிகிச்சை மையத்தின் இணை இயக்குநரான ரிச்சர்ட் பிரைஸ் (Richard Price), கனடாவின் ஒன்டாறியோவில் உள்ள சன்னிபுரூக் சுகாதார அறிவியல் மையத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி தீபா சர்மா ஆகியோர் இந்த ஆய்வு முயற்சிகளை முன்னெடுத்திருந்தனர்.



jeyaseelan.s@thaiveedu.com

# அந்த மனிதர்

– பஞ்சகல்யாணி –

காலையில் வேலைக்குச் செல்லும் போதெல்லாம் அந்த மனிதரைக் காணக் கிடைத்தது. நரை, திரை, மூப்பு எல்லாம் அவரை ஆட்கொண்டிருந்தது. தெருவோர மாகக் கிடந்த தென்னங்குற்றியில் முழங் காலில் முழங்கைகளை ஊன்றி நீட்டியபடி வளைந்து போய் இருந்தார். கைவிரல்களெல் லாம் கும்பிடுமாற்போல பின்னிப் போயிருக் கப் பெருவிரல்களிரண்டும் தனியே மேல் நோக்கி நீட்டியபடி இருந்தன. கழுத்து முன் னோக்கி நீட்டப்பட்டிருக்கக் கண்கள் திறந்த படி எதையோ கனநேரமாகப் பார்த்துக் கொண்டு... ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பார்போல் இருந்தது. மனைவி பிள்ளை களைப் பற்றியோ, தொழில் செய்த இடங் களைப் பற்றியோ, இறந்து போன தாய் தந்தை பற்றியோ, இழந்துபோன பழைய வாழ்க்கை பற்றியோகூட அந்த யோசனை இருக்கலாம். நின்று கேட்கலாம் என்று எனக் குத் தோன்றவில்லை. இருந்தாலும் போய் வரும் போதெல்லாம் அந்த மனிதரை என் கண்கள் தேடின.

ஒருநாள் அதே தெருவில் ஒரு குடிசையி லிருந்து அவர் வெளியே வந்துகொண் டிருந்தார். நான்கு மரக்கால்களில் நின்று கொண்டிருந்த அந்தக் குடிசையின் கூரை தென்னோலையால் வேயப்பட்டிருந்தது. நிச் சயமாக இந்த மழைக்கு அது ஒழுகத்தான் போகிறது. பக்கத்திற்குப் பன்னாங்கோ அன்றி எந்த மறைப்போ இல்லை. கிட்டத் தட்ட ஒரு ஆட்டுக் கொட்டில் போல இருந் தது. பழைய சைக்கிள் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தது. மண்ணிறமாய்ப்போன வெள்ளை வேட்டிகளும் சில சேட்டுகளும் சீலைகளும் கொட்டிலின் குறுக்கே போன கொடியில் தொங்கிக்கொண்டிருந்தன. முற் றத்தில் ஒரு மாமரம். அதற்குக் கீழே மூன்று கல்லு வைத்து அடுப்பு மூட்டியிருந்தது. அடுப்பில் ஒரு பானை. தேநீர் குடிப்பார் போலும். தனிமையில் இருக்கிறார் என்று என்னால் ஊகிக்க முடிந்தது. கைகளில் சில உடுப்புகளுடன் அருகிருந்த குளத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார்.



அன்றும் நான் வேலைக்குச் சென்றுகொண் டிருந்தேன். அந்தக் குடிசை வாசலில் அந்த முதியவர் சைக்கிளில் கெந்தி ஏறும் முயற்சி யில் தோற்றுச் சரிந்து விழுந்துகொண்டிருந் தார். நான் மோட்டார் சைக்கிளை நிப்பாட்டிச் செல்லுமுன் அவர் விழுந்துவிட்டார். நல்ல வேளை சைக்கிள் அவர்மேல் விழாமல் மற் றப்பக்கம் விழுந்திருந்தது. சைக்கிளில் ஒரு மூட்டைகூட இருந்தது. மெதுவாக ஆளைக் கைத்தாங்கலாகப் பிடித்து எழுப்பி உள்ளே கொண்டு சென்றால் இருத்துவதற்கு ஏதும் உயரமாக இல்லை. பிய்ந்துபோன பனம் பாயொன்றில் இருத்தி நான் கொண்டு சென்ற தேநீரைக் குடிக்கக் கொடுத்தேன். நினைவுடன் இருந்தார். தெய்வாதீனமாகத் தலை அடிபடவில்லை. கை கால்களில் சிராய்ப்புக் காயங்கள் சிறிதாக இருந்தன.

'ஆர் பிள்ளை நீ? அந்த காளி வந்தது மாதிரி' என்றார். வேலையிடத்திற்கு அரை நாள் விடுப்புப் போட்டேன். அந்த மனித ருடன் கதைத்தேன்.

'நான் இந்த ஊர்க்காரனில்லையம்மா. இந் தப் பொம்பிளையைக் கண்டு விரும்பிக் கலியாணம் கட்டி ஆறு பிள்ளைகளைப் பெத்தேன். மூண்டு ஆண், மூண்டு பெண். திருக்கணாமலையில கடையொண்டில வேலை செய்தன். வருசத்துக்கு ஒருக்கா ஊர்த் திருவிழா நேரம் வந்து ஒரு கிழமை நிண்டிட்டுப் போவன். சம்பளக் காசை மிச் சம் பிடிச்சு அனுப்புவன். கோவில்களில வீடுகள் வழிய எண்டு சாப்பிட்டு வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச் சேமிப்பு. எனக் கெண்டு உடு துணிகளே எடுக்கிறேல்ல. முப்பது வரியமா இதுதான் நடந்தது. சொந்த பந்தங்களைப் போய் பார்த்ததும் இல்லை. பிள்ளைகள் ஒண்டொண்டாக் கட்டி எல்லா ரும் இங்கதான் இருக்கினம். தொழில் செய் யினம். பேரப்பிள்ளைகளும் இருக்கு.

வயசு போக உடம்பு ஏலாமல் போச்சு. கடை யில மூட்டைகளை அசைக்கவே முடியேல்ல. முதலாளியிட்டைச் சொல்லீட்டு என்ர சைக் கிளோட இங்க வந்தன். இங்க வந்தால் ஒருத் தரும் என்னை ஏற்றுக் கொள்ளேல்லை. வைச்சுப் பாக்கக் கட்டாது எண்டிட்டினம். மனிசி மகளோடை இருக்குது. அதுக்கும் ஏலாது. என்ர இனசனம் எப்படி இருக் கெண்டு எனக்குத் தெரியாது. நான் என்ன செய்யேலும்? ஏலுமானவரைக்கும் இங்க இருப்பமெண்டு நினைச்சன். செத்தாலும் கொள்ளி வைக்க ஆள் வேணுமே! இந்தக் காணி ஐயாட்டைக் கேக்க அவர் தன்ர தேங் காய்க் கொட்டிலைத் தந்தார். புண்ணியவான். விதானை ஐயா பிச்சைச் சம்பளம் போட்டுத் தந்தார்.

ஊரில தேங்காய்ச் சிரட்டைகளைச் சேர்த் துக்கொண்டு ரவுணில கடையொன்றுக்குக் குடுப்பன். காசு தருவினம். இண்டைக்கும் விடிய வெளிக்கிட்டன், இப்பிடியாப் போச்சு' என்று முடித்தார் அந்த மனிதர்.



Panchakalyany@thaiveedu.com

tg.theeban@gmail.com

# ஆசிரியர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களின் நியாயம்



**- அகமட் பிஸ்தாமி**

இன்றைய சமூக சூழல் முன்னைய சமூகங்கள் போல சிந்திப்பதில்லை. எதிர்வினையாற்றுவதில்லை. உடனுக்குடன் விளைவை எதிர்பார்ப்பது போலவே காரசாரமாக மிகக் கடுமையான தொனியில் யாரையும் விமர்சிக்கவும் கற்றுக் கொண்டுள்ளது. விமர்சனங்களில் இருந்து யாரும் தப்பிக்க முடிவதில்லை. அந்தளவு வசதியான கைக்கடக்கமான சமூக ஊடகங்கள் இன்று எம் கைவசம் வந்துள்ளன. நாட்டின் தலைவர் முதல், கீழ் நிலைக் குடிமகன் வரை யாரும் யாரையும் விமர்சிக்கும் நிலை எழுந்துள்ளது. பரவியுள்ளது.

விமர்சனம் என்பதும் ஓர் அருங்கலை. அதற்கென்று பிரத்தியேக ஒழுங்குமுறைகள் உள்ளன. அதனையும் கவனமாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் எல்லோரையும் விமர்சிக்க முடியாது. எல்லா விமர்சனங்களுக்கும் பதில் தர வேண்டிய அவசியமும் இல்லை.

வாயிருப்பதற்காகப் பேச முடியாது. கை இருப்பதற்காக எழுத முடியாது. நியாயங்கள் வேண்டும். அடுத்தவர் உரிமை, தனித்துவம், பிரத்தியேகம் மற்றும் அந்தரங்கம் பேணப்பட வேண்டும். ஒருவரது கருத்தை சிந்தனையை, முடிவை நாம் தாராளமாக விமர்சிக்கலாம் ஆனால் விமர்சனம் என்ற பெயரில் ஒருவரின் அந்தரங்கத்தை பேச்சாலோ எழுத்தாலோ பகிரங்க தளத்துக்குக் கொண்டுவர முடியாது.

அந்த வகையில் கல்வித்துறையில் மிகுந்த அவதானத்துக்கும் விமர்சனத்துக்கும் தொடர்ந்தும் உட்படுகின்ற, ஆளாகின்ற, அகப்படுகின்ற தரப்பாக ஆசிரியர்களைக் காணலாம். (எண்ணிக்கை அளவில் அதிபர்கள் குறைவாக உள்ளதால் அவர்கள் இங்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை, அவர்கள் மீதான விமர்சனங்கள் குறித்து மற்றுமொரு சந்தர்ப்பத்தில் எழுதலாம்)

ஆசிரியர்களின் மகிமை, கண்ணியம், புனிதம், சிறப்புக் குறித்து இங்கு கவனம் கொள்ளப்படவில்லை. எனவே அந்த நோக்கில் தொடர்ந்து வேரூன்றி அப்பணியில் தம்மை இசைவாக்கம் அடையச் செய்வதோடு மாத்திரம் நின்றுக்கொள்ளாமல் காலம் வேண்டி நிற்கும் பிரகாரம் இற்றைப்படுத்திக்

கொண்டு தம் ஆயுளை அர்ப்பணம் செய்துள்ளார்கள். இத்தகைய மேன்மையுடையவர்கள் அற்பர்களின் விமர்சனம் கண்டு கண்ணீர் வடிக்க வேண்டிய அவசியம் இல்லை. மகிமைக்கும் மகத்துவத்துக்கும் சாவு மணி அடிப்போர் குறித்தான சமூகத்தின் பரவலான குமுறல்களின் சில பக்கங்கள் மட்டுமே இங்கு பொத்தாம் பொதுவாக முன்வைக்கப்படுகின்றன என்பதையும் மனங்கொள்க.

பொதுவாரியாக அவர்கள் மீது அடுக்கடுக்காக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்தே இங்கு மேலோட்டமாக சில விடயங்கள் தொடக்கி வைக்கப்படுகின்றன.

இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக தைரியமாக முகம் கொடுத்து முன்னோக்கி வருவது அவர்கள் முன்னால் உள்ள சிறு சவால்களே. புத்தி சாதுரியமும் சாமர்த்தியமும் இருப்பின் அவற்றை சுலபமாக எதிர்கொண்டு வென்று விடலாம்.

## ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுகள்:

- ஆசிரியப்பணியை பொறுப்புடனும், தியாகத்துடனும் முழுமனம் கொண்டு செய்வதில்லை.
- ஆசிரியர் ஆவதற்கான எந்தத் தகுதியும் இன்றி நியமனங்களைப் பெறுவது. (அரசியல் செல்வாக்கு காரணமாக அமையலாம்)
- சம்பளம், வேதனம், ஓய்வூதியம் போன்றவற்றை இலக்கு வைத்து செயற்படுகின்றனர். (ஒரு தொழிலாக பார்க்கும் நிலை)
- கடமை உணர்வு மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது.
- குறிப்பிட்ட பாடப்பரப்பில் ஆர்வமில்லை.
- பழைய முறைமைகளில் தங்கி இருத்தல் (chalk & talk)
- ஆசிரிய வாண்மையில் (professionalism) ஈடுபாடு காட்டாமை.
- காலத்துக்கு ஏற்ப தன்னை (updation and upgrade) இற்றைப்படுத்தாமை.
- தனது ஆளுமையை வளர்க்காமை.
- மாணவர்கள் விரும்பும், எதிர்பார்க்கும் child friendly கற்பித்தல் முறை (pedagogy) பிரயோகம் தாழ் நிலையில் உள்ளமை.
- சார்பியமான மனோநிலை, பாகுபாடு காட்டல், (உறவுகளுக்கு, பிரத்தியேக வகுப்பு வருவோருக்கு முன்னுரிமை)
- மட்டம் தட்டல், ஓரங்கட்டல்.
- சீரற்ற மோசமான பழக்கவழக்கங்கள்.
- பாலியல் பிறழ்வுகள்
- பொறுப்பற்ற, வகைகூறலற்ற (accountability) செயற்பாடுகள், நடவடிக்கைகள்.
- வசதியானவர்களை கவனித்தல்.
- மீத்திறன் வாய்ந்தவர்களை கவனித்தல்.
- மெல்லக்கற்போரைக் கவனிக்காது விடல்.
- கடுமையான தண்டனைகள் வழங்கல்.
- அருவருப்பான வார்த்தைகள் பேசுதல்.
- அவமானப்படுத்தல், பழி வாங்கல், நிந்தித்தல், சாபமிடல், சாடுதல்.
- நேரமுகாமைத்துவம் போதாமை.
- வகுப்பறை முகாமைத்துவம் போதாமை.
- இணைய யுகத்துக்கு (digital era) பொருத்தமற்றவர்களாக உள்ளமை.
- பழைமைவாதம்.
- முரட்டுத்தனமான போக்கு.
- சிறந்த முறையில் ஆசிரியர், பெற்றோர் உறவைப் பேணாமை.
- மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு கற்பித்தலை முன்கொண்டு செல்லாமை.

இப்படியாக இன்னும் அநேகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. பெரும்பாலான பெற்றோர் இவை குறித்து அறிந்திருந்தும்கூட ஆசிரியரிடம் கூறினால் தன் பிள்ளையைத் தண்டிப்பாரோ என்ற அச்சத்தால் அவற்றை மூடி மறைத்து விழுங்கிவிடுகின்றனர்.

இவை பேசவும் அலசவும் ஆராயவும் அவசியமான சமகால விடயங்கள். ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோரிடமும் ஆசிரியர் தொடர்பான எதிர் பிம்பங்கள், குமுறல்கள், விமர்சனங்கள் அதிகமாகக் குவிந்து கிடக்கின்றன.

இங்கு நான் குறிப்பட்டவை, ஆசிரியர்கள் மீதான விமர்சனங்களின் ஒரு சில பக்கங்கள் மட்டுமே. இன்னும் சொல்ல வேண்டியவை பக்கங்கள் ஏராளம் இருக்கின்றன.

இத்தகைய குற்றச்சாட்டுகள் இலங்கை பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்களுக்குப் பொருத்தமானைவை என்பதனை மறுத்துரைக்க முடியாது. அவர்கள் விமர்சனங்களை எதிர்கொண்ட தங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமே எதிர்காலத்தில் சிறந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்க முடியும்.

ஆசிரியர்களின் தரம் தராதரம் மேம்படும்போதுதான் அவர்களால் உருவாக்கப்படும் அடுத்த தலைமுறை பண்பு மிக்கவர்களாக இருப்பார்கள்.

பாடத்திட்டங்கள் வழியாகவும் வகுப்பறைகள் வழியாகவும் எதிர்கால சந்ததிகள் உருவாக்கப்படுகின்றனர் என்பதனை ஆசிரியர்களும் நினைத்துப் பார்க்க வேண்டும். அதன் வழி சிறந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தமக்கும் பிள்ளைகள் உண்டு, தாம் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை அனுப்புவது போலத்தான் ஏனைய பெற்றோர்களும் தங்களை நம்பி பிள்ளைகளை அனுப்புகின்றார்கள் என்பதனை ஒவ்வொரு ஆசிரியரும் உணர வேண்டும்.



bisthamy.ahamed@thaiveedu.com

# கல்வி உளவியலின் முக்கியத்துவம்

## ச. லக்ஹரன்



ஓர் உயிரி சுற்றுப்புறத்துடன் தொடர்புகொண்டு வெளியிடும் நடத்தைகளைப் பற்றிய அறிவே உளவியலாகும் என குர்த் கோப்கா (Kurt koffka) கூறுகிறார். கல்வி உளவியல் என்பது உளவியலின் ஒரு துணைப் பிரிவாகும். இது கல்வி முறைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெறும் கற்றல் மற்றும் கற்பித்தல் நடைமுறைகளில் உளவியல் அம்சங்கள் மற்றும் அதன் விளைவுகள் பற்றி குறிப்பாகக் கவனம் செலுத்துகிறது.

கல்வி உளவியல் என்பது 'கற்பித்தல் பற்றிய ஆய்வு' என பீல் (E.A. Peel - 1963) குறிப்பிடுகின்றார். 'கற்பவர்கள், கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய ஆய்வு' ஆகும் என ஸ்லாவின் (R.E. Slavin - 1986) வரையறுக்கின்றார். 'கல்வியில் உள்ள உளவியல் சிக்கல்களை ஆராய்ந்து, அதன் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பயன்பாட்டு உளவியலின் தன்மையை பற்றிய ஆய்வை மேற்கொள்கின்றது' என சி.வி. குட் (C.V. Good) குறிப்பிடுகிறார். 'கல்வியில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகளிலும், வழிமுறைகளிலும் உளவியல் கோட்பாடுகளையும் விதிகளையும் பயன்படுத்தி, கற்றல் - கற்பித்தல் செயல்முறையை மேம்படுத்துவதே கல்வி உளவியல் ஆகும்' என ரஷ்ய அறிஞர் கோலெஸ்னிக் (Walter B. Kolesnik) வரையறுக்கிறார்.

பள்ளி வகுப்பறை, கல்வி உளவியலாளர்களின் ஆய்வு கூடம், கற்றல், கற்பித்தல், பயிற்சியளித்தல் போன்றவற்றில் எதிர்ப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவதே கல்வி உளவியல். கல்வி உளவியல், துரிதமாக வளர்ச்சியடைந்து தனித்துறையாகத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டுள்ளது. கல்விப் பிரச்சினைகள் யாவும் இத்துறையின் ஆய்வுக்கு உட்படுகின்றன. குழந்தைக் கல்வி, குறையறிந்து தீர்க்கும் முறைகள், மீத்திறன் மிக்கவர்களின் கல்வி, மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி, கற்றலைப் பாதிக்கும் காரணிகள், கல்வி மதிப்பிடுதல், கோட்பாடுகள் போன்றவற்றைத் தன் ஆய்வுக்களமாகக் கொண்டுள்ளதன் மூலம், கல்வி உளவியல் என்பது தனித்தன்மை வாய்ந்த சிறப்புத்துறை என்பது விளங்கும். வகுப்பறை சூழல், நடத்தை மாற்ற உத்திகள், கற்றல் வழிமுறைகள், நுண்திறன் கற்பித்தல், கல்வி நுட்பவியலின் மென் தளபாட அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல், கணினி கொண்டு கற்பித்தல் போன்ற பிரிவுகளை உருவாக்கி வகுப்பறைக் கற்றலில் கற்பவர் - கற்பிப்பவர் இடையேயான இடைவெளியை மேம்படுத்த கல்வி உளவியல் பெரிதும் முயற்சிக்கிறது. உயர் கற்பித்தல் முறைகள் யாவும் முழுக்க முழுக்க உளவியல் அடிப்படையானவை.

கல்வி உளவியல் மாணவர்களது வளர்ச்சிப் படிநிலைகள், அவை ஒவ்வொன்றிலும் மாணவர்களிடம் காணப்படும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், வளர்ச்சிசார் செயல்கள், ஆளுமைக் கூறுகளை வெளிப்படுத்திடும் மாணவர்களது வெளிப்படையான நடத்தைகள், ஆழ்மனத்தினால் இயக்கப்படும் பல்வேறு நடத்தைகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது. கற்றல் அனுபவங்கள் மாணவரது பல்வேறு

வளர்ச்சிப் படிநிலைகளுக்கு ஏற்ற கற்றல் அனுபவங்கள் எவை என்பதைத் தீர்மானிப்பதில் கல்வி உளவியல் உதவுகிறது. இப்பிரிவில் மாணவர்களுக்கு வழங்குவதற்குப் பொருத்தமான கற்றல் அனுபவங்களைத் தேர்ந்தெடுக்க உதவிடும் உளவியல் கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியவை இடம் பெறுகின்றன. கற்கும் முறைகள் கற்போரின் இயல்புகளைத் தெரிந்து கொண்டு அவற்றிற்கு ஏற்றவாறு அளித்திட வேண்டிய கற்றல் அனுபவங்களைத் தீர்மானித்த பின், அவ்வனுபவங்களை மாணவர்கள் எளிதில் அடைந்திடுவதற்கான வழிமுறைகளைத் தேர்வு செய்ய வேண்டும். இப்பணியில்,

- கற்றல் எவ்வாறு நிகழ்கிறது ?
- கற்றலைப் பாதிக்கும் காரணிகள் எவை ?
- கற்றல் தொடர்பான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் என்னென்ன உள்ளன ?

என்பதைக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இப்பிரிவில் இடம்பெறும் பாடப் பொருட்களில் மறத்தல், நினைவிலிருத்தல் (Remembering) கற்றல் - மாற்றம், பொதுமைக் கருத்துகள் உருவாகும் முறை, சிந்தித்தல், ஆராய்ந்தறிதல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற அறிவு சார்ந்த செயற்பாடுகள் ஆகியனவும் இடம்பெறுகின்றன. கற்றல் என்னும் செயற்பாட்டினில் இடம்பெறும் இரு முக்கிய கூறுகளான, கற்பவர், கற்பிப்பவர் இவர்களுக்கிடையே வருபவை கற்றல் சூழ்நிலை, கற்கும் முறைகள், கற்கும் சூழ்நிலைகள் என்னும் பிரிவினில் வகுப்பறைச் சூழல், குழு இயக்கவியல், கவனக் குறைவிற்கான காரணங்கள், கற்றலுக்கு உதவும் வலுவூட்டிகள், கற்றலை மதிப்பிடும் வழிமுறைகள், வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை பகிர்தல் போன்ற கற்றல் செயற்பாட்டினில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

கற்கும் சூழ்நிலையில் ஆசிரியரும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறார். ஆசிரியரது ஊக்கம், மனப்போராட்டங்கள், செயற்றிறன்கள், மனப்பான்மை, மனநலம், தொழில்முறை வளர்ச்சி ஆகியனவும் கல்வி உளவியலின் வரம்புக்குள் அடங்குகின்றன. சிறந்த செயற்றிறன் மிக்க ஆசிரியரின் ஆளுமைப் பண்புகள், ஆர்வங்கள், நாட்டங்கள், கற்பிக்கும் திறன்கள் ஆகியவற்றைப் பற்றி அறிவதன் மூலம், திறமையான ஆசிரியர்கள் உருவாகின்றனர். கீழ்க்கண்டவற்றை கல்வி உளவியலின் உட்பிரிவுகளாக குறிப்பிடுகின்றனர். அவைகள்: குழந்தையும் அதன் வளர்ச்சியும், குழந்தையின் உடல், மன, சமூக வளர்ச்சிகளும், கற்றலில் அவற்றின் தாக்கங்களும் (உ+ம்) குழந்தையின் மொழி வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி, சமூக நெறிப்படுத்தும் முறைகள் ஆகியவை அக்குழந்தையின் கற்கும் திறனை வெகுவாகப் பாதிக்கின்றன. கற்கும், கற்பிக்கும் முறைகள் ஊக்கம், கற்கும் திறன், கற்பிக்கும் முறை, ஆளுமையை வளர்த்திடும் வழிமுறை, நுண்ணறிவை அளந்திடும் முறை, மாணவரது நுண்ணறிவு நிலைக்கேற்ப - கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுத்தல், நினைவாற்றலைப் பாதிப்பவை, மறுப்பதற்கான (அல்லது) எதிர்ப்பதற்கான காரணங்கள் போன்றவை இப்பிரிவில் அடங்கும். வளர்ச்சியை மதிப்பிடுதல் மாணவரை மதிப்பிடும் முறைகள், தனியொரு மாணவரை ஆய்வு செய்து பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டறிதல், கற்றல் குறைபாடுகளைக் கண்டறிந்து சரி செய்தல் வெவ்வேறு கற்பித்தல் முறைகளின் திறன்களையும் பயன்களையும் கணித்தல் போன்றவை இப்பிரிவின் கீழ் வரும்.

கல்வி உளவியலின் முக்கியத்துவமானது, மாணவர்களிடையே காணப்படும் பல்வேறு நிகழ்வுக்கூறு வேறுபாடுகளையும், அவற்றிற்கேற்ப மாணவரது தேவையை நிறைவு செய்யும் வண்ணம் கற்பித்தல் முறைகளை தேர்ந்தெடுக்கவும் ஆசிரியருக்கு, கல்வி உளவியல் துணை புரிகிறது. மாணவர்கள் கற்றலில் சிறந்து விளங்க, ஆசிரியர் கற்றல் கோட்பாடுகள், பல்வேறு கற்றல் வழிமுறைகள், அவற்றின் நிறைகுறைகள், கற்றலில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் அவற்றைப் போக்கும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். மேலும், மாணவர்களின் பொறுப்பற்ற நடத்தையைக் கண்டறிந்து, அதற்கான அடிப்படை உளவியல் காரணங்களை இனங்கண்டு, நீக்குவதன் மூலம், அவர்களின் ஆளுமை வளர்ச்சியைச் செம்மைப்படுத்த கல்வி உளவியல் (Educational Psychology) ஆசிரியர்களுக்கு உதவுகிறது. வகுப்பறை ஒழுங்கை நிலை நாட்டவும், மாணவர்களது மனநலத்தை மேம்படுத்தவும், மாணவர்கள் தங்களது பிரச்சினைக்குத் தீர்வு காண வழிகாட்டவும், அறிவுரை பகிரவும், கல்வி உளவியல் ஆசிரியர்களுக்குப் பயன்படுகிறது. அதேவேளை மாணவர்களது வளர்ச்சி நிலைகளுக்கேற்பவும், அந்தந்த வளர்ச்சி நிலையிலுள்ள மாணவர்களின் கற்றல் போக்குகளுக்கேற்பவும், சமூகத் தேவைகளின் மாறுதல்களுக்கேற்பவும், பாடப்பொருளைத் தேர்ந்தெடுத்து வரிசைப்படுத்தவும் கல்வி உளவியல் ஆசிரியருக்கு உதவுகிறது. மாணவரின் கல்வி அடைவை மதிப்பிட உளவியல் அடிப்படையிலான பல்வேறு சோதனைகளை செயற்படுத்தி அளவீடுகளைப் பெற்று பொருள் உணர கல்வி உளவியல் அறிவு பெரிதும் துணை புரிகிறது.

மாணவர்களது மனப்பான்மைகளைச் சீர்படுத்தவும், குழு நடத்தையின் மூலம் மாணவர்களது நடத்தையை மேம்படுத்தி ஆளுமை வளர்ச்சிக்குத் திட்டமிடும் வண்ணம், பல்வேறு பாடத் துணைச் செயல்கள் அமைத்திடவும் கல்வி உளவியல் வகுப்பறை ஆசிரியருக்குப் பெரிதும் துணை புரிகிறது. ஆசிரியர் தனது வகுப்பறைக் கற்பித்தலில் திறன்மிக்கவராகத் திகழ, மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வழிமுறைகளையும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் புறக் காரணிகளை (External Factors) அறிந்து அவற்றைப் பயன்படுத்தியும், கவனக்குறைவுக்குரிய காரணிகளை இனங்கண்டு நீக்கியும் மாணவர்களது கவனத்தை பாடத்தில் நிலை நிறுத்தும் வழிகளை அறிந்திருத்தல் அவசியம். மாணவர்களது நாட்டங்களை அறிந்து ஊக்குவிக்கவும், பரிசு, பாராட்டு, தண்டனைகளை முறையாகச் செயற்படுத்தி விரும்பத்தக்க கற்றலை மட்டும் வலுப்படுத்தும் வழிமுறைகளை ஆசிரியர் மேலும் அறிந்திருப்பார் என்றால், அவர் எல்லோராலும் பாராட்டப்படும் ஆசிரியராகத் திகழ்வார். எனவே சிறந்த ஆசிரியருக்குப் பாடப் பொருளின் தேர்ச்சியோடு, அதை மாணவர்களுக்கு முழுமையாக சேர்ப்பிக்கப் பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாளும் திறன் மற்றும் அனுபவக்கல்வி பெற்றிருக்கவும் வேண்டும். இதற்குக் கல்வி உளவியல் பெரிதும் துணை புரிகிறது. கல்வி உளவியல்

என்பது பொதுவாகப் பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப் படும், நன்கு அறியப்பட்ட உணர்வு, உள்ளுணர்வு, கவனம், பழக்கம், நினைவாற்றல், கற்றலின் நுட்பம் மற்றும் சிக்கனம் சார்ந்த கருத்தியல் செயல்முறைகளை உள்ள டக்கியது. இத்தகைய இயல்புகளில் காணப்படும் தனிப் பட்ட வேறுபாடுகளாலும், பின்தங்கிய அல்லது முன் கூட்டிய வளர்ச்சியாலும் ஏற்படும் சவால்களுக்குத் தீர்வு காண, அல்லது 'சிறப்பு வகுப்பில்' உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பை அல்லது இடர் நிலையை ஏற்படுத்தும் காரணிகளைக் கண்டறிவதில், கல்வி உளவியல் பின்வரும் போக்குகளில் கவனம் செலுத்துகிறது.

- மனநலத்தின் தன்மை
- மனநலத்தின் அளவு
- மனத்திறனை அளவிடுதல்
- மனச் சோதனைகளின் உளவியல்
- மனத்திறமைகளின் தொடர்பு
- பள்ளி முறைகளில் கையாளப்படும் உளவியல்
- மன சுகாதாரத்தின் முக்கிய இடங்கள் மற்றும் சிக்கல்கள்

இவை அனைத்தையும் ஒன்றுபட விஞ்ஞான அறிவியல் நோக்குடைய பரிசோதனைகள் மூலமாகவும் புள்ளி விபர வியல் மற்றும் இலக்கியக் கண்ணோட்டத்திலும் சிகிச்சை அளித்தல், சிகிச்சை அளிப்பதற்கான வழிமுறைகளையும் அதன் விளைவுகளையும் கல்வி உளவியல் தீவிரமாக பரி சீலிக்கிறது. 1910-இல் கல்வி உளவியல் கோட்பாடு எதுவும் இல்லை. பின்னர் கல்வியின் தேவை முக்கியத் துவம் அறிவுசார் தேடல் வரலாற்று ரீதியாகவும் அனுபவக் கல்வி ஊடான நவீனத்துவப் பாதையில் முன்னோர்கள் தோற்றம் பெற்றதை ஒட்டி மாணவர் நலன்சார் கல்வியை மேம்படுத்துவதில் கல்வி உளவியலின் தூர நோக்குச் செயற்பாடு தொடங்கியது. இதில் மாணவரின் நடத்தை, கல்வி, சூழல், கல்வி சமூகவியல், மாணவநேயக் கல்வி சார்ந்த கல்வி உளவியல் பேசுபொருளானது. கற்றல், அறி வாற்றல், சமூக நடத்தை, தனிப்பட்ட வேறுபாடுகள், நுண்ணறிவு, பகுத்தறிவு, பிரச்சினை தீர்க்கும் திறன், மேம்பாடு, துறை சார்ந்த வாண்மைத்துவம் (திறன்), சூழ்நி லையைச் சமாளிக்கும் திறன் போன்ற முக்கியமான மனித இயல்புகள் அனைத்தும் இணைந்து, தக்கன பிழைத்தல் (Survival of the fittest) என்ற அடிப்படைத் தத்துவத் துடன் கூடிய மனித வளர்ச்சியானது இன்றளவிலும் பெரும திமிக்க முக்கியத்துவத்துடன் முன்னோக்கிச் செல்கிறது.



laksharan.sarawanan@thaiveedu.com

“ மாணவர்கள் கற்றலில் சிறந்து விளங்க, ஆசிரியர் கற்றல் கோட்பாடுகள், பல்வேறு கற்றல் வழிமுறைகள், அவற்றின் நிறைகுறைகள், கற்றலில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் அவற்றைப் போக்கும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். ”





# கனடாவின் கல்வி அமைப்பு: வரலாறும் வளர்ச்சியும்

த. சிவபாலு

tg.theeban@gmail.com

கனடாவின் கல்வி அமைப்பு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதனை அதன் வரலாற்றை சற்றுப் பின்னோக்கிப் பார்க்கும் போது உணர்ந்து கொள்ளமுடியும். ஆங்கில, பிரஞ்சு குடியேற்ற காலத்தில் தான் பாடசாலை முறைமையிலான கல்வி அறிமுகமாகியது. நிரந்தரமாக வாழ்ந்து வந்த பழங்குடியினர் தங்கள் குலக் கல்வியை பெற்றோரிடமிருந்தும் சமூகப் பெரியவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டனர். வாழ்வாதாரத்திற்கான கல்வியாக மட்டுமே அது காணப்பட்டது. ஆனால் ஐரோப்பியர் குடியேறி நாட்டை ஆக்கிரமித்துக்கொண்ட பின்னர் பெருந்தொகையான குடியேற்றவாசிகள் குடியேற்றப்பட்டனர். இதன் விளைவாக அவர்களின் நாட்டில் பின்பற்றப்பட்ட கல்வி முறையை தங்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்தனர். அது குடியேற்ற அரசாங்கத்தின் கடமையாகவும் கருதினர். இதனால் குடியேற்ற நாட்டு அரசாங்கங்கள் இவற்றை நிறைவேற்ற வேண்டும் என்னும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனைவிட இங்கு மதம் மாற்று வேலைகளைச் செய்வதற்காக வருகை தந்திருந்த பிரான்சிஸ்கன், மற்றும் அங்கிலிக்கன் மதப்பிரிவினர் ஆலயங்களை ஆரம்பித்து அவற்றில் வைத்து கல்வியைப் போதிக்கத் தொடங்கினர். கல்வியை மேற்கொள்ளும் பொறுப்பு இத்தகைய சமய நிறுவனங்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான நிதியை அரசாங்கம் சமய சார்புடைய அமைப்புக்களுக்கு வழங்கின. சமயம், மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களே முக்கிமாக இங்கு கற்பிக்கப்பட்டன.

பழங்குடியினரின் மதநம்பிக்கைகளையும் பேசும் மொழியையும் மாற்றுவதன் மூலம் அவர்களின் வாழ்வியலையும் கலாசார பண்பாடுகளையும் மற்றிடலாம் என ஐரோப்பிய குடியேற்ற நாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் நம்பினர். இதனால் சுதேச மக்களின் வாழ்வியலில் பெரும் துயர்மிகு வரலாறாக இது மாற்றம் பெற்றது. சுதேச மக்கள் அதுவரை பின்பற்றிவந்த பண்பாடுகளை, பழக்கவழக்கங்களை, கல்வி முறைகளை இல்லாதொழித்தவர்களுள் முக்கியமானவராக கம்பல் ஸ்கொட் (Gambal Scott) காணப்படுவதால் மிக மோசமான ஆளுநராக வரலாற்றில் இடம்பெறுகின்றார். பிரித்தானிய அரசின் ஆளுநராக அவர் 1913-1932-வரை இருந்தவேளை பிரித்தானிய குடியேற்ற அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'நான் இந்தியரின் பிரச்சினையில் இருந்து விடுபட வேண்டும். நான் இந்தியரின் பிரச்சினையை ஒரு காரணமாக நினைக்கவில்லை, ஒரு வர்க்கத்தினர், தாமாகவே தங்கள் காலில் நிற்கக்கூடியவர்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பளிக்க வேண்டிய தில்லை.' என்று குறிப்பிட்டதோடு, மேலும் அவர் எழுதிய கடிதத்தில் 'எங்கள் எண்ணப்பாங்கு இந்த நாட்டில் ஒரு தனி இந்தியர் இல்லாதநிலை உருவாகவேண்டும். அரசியலில் இந்தியர் ஒருவரும் உள்வாங்கப்படக் கூடாது. இந்தியர் என்னும் கேள்விக்கே இடமில்லை, இந்தியத் திணைக்களம் என்று ஒன்று இல்லாதிருத்தல் வேண்டும், அதுதான் முழுவதுமான எண்ணக்கரு' என ஆளுநரின் கூற்றைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளதோடு (McGillivary 1997 P.143) இந்தியச் சட்டத்தை 1920-இல் இல்லாதொழித்தவரும் இவரே எனவும் குறிப்பிடுகின்றார். சமயம், மொழி, நடைமுறை, பண்பாடு என்பவற்றால் எல்லோரும் ஒன்றாக மாறவேண்டும் என்பதற்காக அந்த இனத்தின் பண்பாட்டையும் மொழிகளையும் கலாசாரத்தையும் கல்வியால் அழித்துவிட முடியும் என்னும் கருத்தியலுடன் செயற்பட்டவர் அவர்.

1564-இல் ஐரோப்பா கல்வி வரலாற்றில் அனைவருக்கும் கட்டாயக்கல்வி என்ற கொள்கையை முதன் முதல் அறிமுகப்படுத்தியவர்கள் ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் குடியேற்ற நாடுகளிலும் இவற்றை நடைமுறைப்படுத்துவது அரசின் கடமை என்பதை வலியுறுத்தினர்.

> **“கனடாவில் கல்விச்சீர்திருத்தம் வேண்டி நின்றவர்களில் பழமைவாதிகள் அரச விசுவாசம் சார்ந்தவர்களாகத் தமது கருத்துகளை முன்வைக்க, சீர்திருத்தவாதிகள் பாடசாலைச் சபைகளில் பிரதிநிதிகள் தெரிவு பெற்றோரால் நிகழ்த்தப்படவேண்டும் என்ற பழமைவாதிகளுக்கு எதிரான கருத்துடையவர்களாக இருந்தார்கள்.”**

வட அமெரிக்காவில் 1840-களில் சமூகப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கான தேவை அதிகரித்தமையோடு அது தொடர்பான வினாக்களும் எழுந்தன. குடியேற்றங்கள் தோறும் சாதாரண பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் பாடசாலைகளின் கல்வித்திட்டம், பாடவிதானம், கல்விமுறை என்பன மிகக் காத்திரமான பங்கைப் பெறத் தொடங்கின. இவை மாணவர்களின் கல்வி அடைவில் பாரிய செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தன. இது தொடர்பில் வரலாற்றாளரும் சமூக விஞ்ஞானியுமான புறூஸ் கேட்டிஸ் (Bruce Curtis - 1998) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ‘கல்விச் சீர்திருத்தம் குடியேற்ற நாட்டின் அரசியல் முறையின் கேள்விகளுடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைப்புத் தொடர்பான அடிப்படைக் கேள்விகளாக யாருக்குக் கற்பிக்கவேண்டும், யார் கற்பிக்க வேண்டும், அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டியவை எவை, அவற்றை அவர்கள் எவ்வாறு கற்றுக்கொள்ளவேண்டும், யார் அதற்குப் பணம் செலுத்தவேண்டும் போன்றன காணப்படுகின்றன. இதனையும்விட அந்த மாநிலந் தொடர்பில் முன்வைக்கப்பட்ட, யார் ஆட்சிச் செயலாளர்கள், எப்படி, எதை ஆட்சிசெய்வார்கள், அது எவ்வாறு நிதியளிக்கப்படும் போன்ற கேள்விகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை. இக்கேள்விகள் உண்மையில் கல்விக்கான போராட்டத்தையும் அதே நேரத்தில் ஆட்சி மீதான போராட்டத்தையும் நிகழ்த்தக்கூடியவையாக இருந்தன.

கனடாவில் கல்விச்சீர்திருத்தம் வேண்டி நின்றவர்களில் பழமைவாதிகள் அரச விசுவாசம் சார்ந்தவர்களாகத் தமது கருத்துகளை முன்வைக்க, சீர்திருத்தவாதிகள் பாடசாலைச் சபைகளில் பிரதிநிதிகள் தெரிவு பெற்றோரால் நிகழ்த்தப்படவேண்டும் என்ற பழமைவாதிகளுக்கு எதிரான கருத்துடையவர்களாக இருந்தார்கள். இந்நிலைமைகளின் அடிப்படையில் ‘போஸ்ரர் கல்விச் சட்டம்-1870’ பிரித்தானியாவால் முன்வைக்கப்பட்டது. இக்கல்விக் கொள்ளை எவ்வித கட்டுப்பாடுகளை, சுமைகளைப் பெற்றோருக்கு வழங்கியது என்பதனை நோக்குவது அவசியமானது’

கனடாவின் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசாங்க நிதி உதவியுடன் பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1867-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரிட்டிஸ் நோர்த் அமெரிக்க சட்டத்தின்படி, மாகாண அரசுகளின் பொறுப்பில் கல்விசார் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டன. இதனால் மாகாணத்திற்கு மாகாணம் கல்விமுறைமைகளில் வேறுபாடுகள் காணப்பட்டன.

1960-களில் பன்முகக் கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. 19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில் உயர் கல்வி நிறுவனங்கள் விரிவுபடுத்தப்பட்டன. இதனால் கல்வி பல்துறை களை நோக்கி வளர்ச்சியடையத் தொடங்கியது. இவற்றை விட கனடாவில் பின்பற்றப்படும் பொதுப்பாடசாலை முறை மையும் தனியார் பாடசாலை முறைமையும் மதக் கட்டுப்பாட்டைத் தகர்த்துக்கொள்ள வழிவகுத்தது. மதக்கல்வி பொதுப்பாடசாலைகளில் கற்பிக்கத் தேவையில்லை எனும் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் மதக்கல்வியைப் பெற விரும்பும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் மதம் சார்ந்த தனியார் பாடசாலைகளில் சேர்த்துக்கொள் ளும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன. 1969-ஆம் ஆண்டில் ‘மொழி உரிமைச் சட்டம்’ ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழியில் கல்வி கற்கும் உரிமையை வழங்கியது.

ஆனால், இந்த நாட்டின் பூர்வீகக் (Indigenous) குடிகளின் கல்வி கலாசாரப் பாரம்பரியங்கள் கல்விமூலம் திட்டமிட்டு அழிக்கப்பட்டன என்பது கனடா வரலாற்றின் இருண்ட அல்லது கறைபடிந்த பக்கமாகக் காணப்படுகின்றது. இதனால் கனடாவின் ஆதிக்குடிகளின் பாரம்பரியங்களை மீளக் கட்டியெழுப்பவேண்டிய தேவை இன்றைய அரசாங்கங்களுக்கு உள்ளது. கடந்தகாலத்தில் நடந்த தவறுகளுக்காக இன்றைய ஆட்சியாளர்கள் மன்னிப்புக் கோரியுள்ளார்கள் எனினும் அவற்றை ஏற்றவகையில் நிவர்த்தி செய்யவில்லை என்பது வெளிப்படை. இக்குறைபாடுகளைக் கருத்திற்கொண்டு கல்வியமைப்பில் அடிப்படை மாற்றங்களை மேற்கொள்ள விளைந்ததன் காரணமாக 1988-ஆம் ஆண்டில் கனடாவின் பன்முகக் கல்விச் சட்டம் நாட்டில் உள்ள பன்முகப் பண்பாட்டுச் சூழலை பிரதிபலிக்கத்தக்கதன் அவசியத்தை வலுப்படுத்தியுள்ளது. இதனடிப்படையில் கல்வி அமைச்சினால் உருவாக்கப்பட்ட கல்விச் சபைகள் பல்வேறு கலாசாரங்கள் சார்ந்த பிரதிநிதிகளை உள்வாங்கியதோடு பாடத்திட்டத்தில் பல்வேறு கலாசார அம்சங்களையும் உட்புகுத்தியுள்ளது (inclusivity).

## அரசியல் அமைப்பு மாற்றமும் கல்விக்கொள்கை மாற்றமும்:

கனடாவில் காணப்பட்ட குடியேற்ற நாட்டு மாகாண அரசுகளிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டும் எனும் எண்ணம் அரசியல்வாதிகளிடையே துளிர்விடத் தொடங்கியது. இதன் பயனாக 1867-இல் நீயுபுறூண்ஸ்விக், நோவாஸ் கோசியா, கியுபெக், ஒன்ராறியோ ஆகிய நான்கு மாகாணங்கள் ஒன்றிணைந்து கனடாவின் கூட்டாட்சி அமைப்பொன்றை ஏற்படுத்தின. வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான இறக்கு மதி வரியினை அரசாங்கம் அதிகரிப்பதன் ஊடாக உள் நாட்டு உற்பத்தியைப் பெருக் கமுடியும் எனக் கருதியது. இதில் அரசு வெற்றியும் கண் டது. இதனைத் தொடர்ந்து பிறின்ஸ் எட்வேட் அயலண்ட், பிரிட்டிஸ்கொலம்பியா, என்பன கூட்டாட்சியால் அங்கத்துவம் பெற்றுக்கொண்டன.

“ குடியேற்ற ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் குற்றச்செயல்கள், ஏழ்மை, வீடற்ற நிலை, தீயவொழுக்கம் என்பனவற்றை அகற்றுவதற்கான கருவியாகக் கல்வி கருதப்பட்டது. இதனால் சமயம் சார்ந்த கல்வி நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ”

குடியேற்ற ஆட்சிக்காலத்தின் ஆரம்பத் தில் குற்றச்செயல்கள், ஏழ்மை, வீடற்ற நிலை, தீயவொழுக்கம் என்பனவற்றை அகற்றுவதற்கான கருவியாகக் கல்வி கருதப்பட்டது. இதனால் சமயம் சார்ந்த கல்வி நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பொதுக் கல்வி அமைச்சினை 1868-இல் கியூபெக் மாநில அரசு ஆரம்பித்தது. ஆனால் கத்தோலிக்க ஆலயத்தின் எதிர்ப்பின் காரணமாக இது 1875-இல் மூடப்பட்டது. 1869-இல் பொதுப் பாடசாலைச் சட்டத்தை பிரிட்டிஷ்

அரசு நிறைவேற்றியதனால் அம்மாநிலத்தில் மத நிறுவனங்களைச் சாராத அரச பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. 1870-இல் மனிரோபா மாகாணம் பிரஞ்சு மொழி மூலமான கல்வியைச் சட்டவாக்கம் செய்தது.

> **“கனடாவின் பழங்குடியின மக்களின் பிள்ளைகள் குடும்பங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு கல்வியூட்டுவதாகக் கூறி பல மைல்கள் தொலைவிலுள்ள வதிவிடப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் அடிமைகளாகவே கருதப்பட்டனர். பல்வேறு தண்டனைகளுக்கு உள்ளாகினர்.”**

ஒன்றாறியோ மாகாணம் 1871-இல் கட்டா யக் கல்வியை அறிமுகம் செய்தது. 1890-இல் கனடாவின் அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு வருகை தருதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டது. எனினும் 1 தொடக்கம் 8 வரையான வகுப்பு மாணவர்கள் அனை வரும் ஓர் அறையில் இருந்தே கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அன் றைய நிலையில் எட்டாம் வகுப்புவரையுமே மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பது நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

1939-இல் ஆரம்பித்த இரண் டாம் உலகப்போர் ஜப்பானியப் பிள்ளைகளைப் பாடசாலைக ளில் இருந்து வெளியேற்றி தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருந் தது. கனடாவின் வரலாற்றில் கரி பூசப்பட்ட வரலாறாகவே இது அமைந்தது. ஜப்பானுடனான போரில் ஜப்பானியர்கள் அனைவருமே பாதுகாப்பிற்கு ஆபத்தானவர்கள் எனச் சுட்டிக்காட்டி அவர்களின் உடமைகளை அரசுடைமையாக்கியதோடு அவர் களை அகதி முகாம்களில் அடைத்து வைத்திருந்தமை வரலாற்றுப் பதிவாகும்.

குழந்தைகள் தடைமுகாம்களுக்குள் அடைக்கப்பட்டதால் அவர்கள் கல்வியைப் பெறமுடியாதவர்களாக ஆக்கப்பட்டனர். குடும்பத் தலைவர்கள் பிரிக்கப்பட்டு ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் வெவ்வேறு முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டனர். எனவே கனடிய அரசாங்கத்தின் கட்டாயக் கல்விச்சட்டம் ஜப்பானியப் பிள்ளைகளின் விடயத்தில் புறமொதுக்கப்பட்டது போலவே இந்நாட்டின் முதற்குடியினரின் பிள்ளைகளுக்கும் ஏற்பட்டிருந்தது. கனடாவின் பழங்குடியின மக்களின் பிள்ளைகள் குடும்பங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு கல்வியூட்டுவதாகக் கூறி பல மைல்கள் தொலைவிலுள்ள வதிவிடப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் அடிமைகளாகவே கருதப்பட்டனர். பல்வேறு தண்டனைகளுக்கு உள்ளாகினர். இதனால் தப்பியோடிய பிள்ளைகள் குளிரில் உறைந்து இறந்துபோயினர். சிலர் மிகமோசமான தண்டனைகளைப் பெற்றனர். வதிவிடப் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டிருந்த பெண் பிள்ளைகள் பிரஞ்சு போர் வீரர்களைத் திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஏற்கனவே காணப்பட்ட 600-க்கு மேற்பட்ட பூர்வீகக் குடிகள் மூன்று பெரும் பிரிவினுள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். ஆதிக்குடிகள், இன்நியூ மற்றும் மெத்தி (Nations, Inuit, and Métis) என்பனவே அப்பிரிவாகும். இப்பிரிவினரின் பிள்ளைகள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். அதற்குப் பல்வேறு காரணிகள் முன்வைக்கப்படுகின்றன.

## கனடியக் கல்வி அமைப்பின் அண்மைக்காலப் போக்குகள்:

கனடியக் கல்வி அமைப்பின் வரலாற்று வளர்ச்சியை ஆய்வு செய்யும் போது, சமீபத்தில் உருவான பல்வேறு போக்குகளை புறக்கணிக்க முடியாது. இவை கற்றல் பரப்பை ஆழமாக மாற்றியமைத்து வருகின்றன. பண்பாட்டு, தொழில்நுட்ப, மற்றும் கற்பித்தல் முறைகளின் தொடர்புகள் கல்வி முன்மாதிரிகளை இடையறாது மறுபரிசீலனை செய்யும் நிலையில் உள்ளது. செழுமையான வரலாற்றுப் பின்னணியில் இருந்து, தற்போதைய நவீன சூழல், தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்குக்கள் கல்வியியலாளர்களை மற்றும் கொள்கை வகுப்பவர்களை மாற்றுவழிகளில் வழிநடத்தும் தன்மைகளை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் இவற்றை உள்வாங்கி புதிய பாடத்திட்டத்தை வகுக்கவேண்டிய நிலை அவர்களின் தலையில் சுமையாக வைக்கப்பட்டுள்ளமை மறுப்பதற்கில்லை.

இன்று கனடாவில் அரச பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் கல்வியைப் புகட்டுவதில் ஈடுபடுகின்றன. தனியார் பாடசாலைகளுக்கும் அரசு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நிதியினை வழங்கி வருகின்றது. கனடாவில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் இலவசக்கல்வியையும் மருத்துவ வாய்ப்புக்களையும் கனடா அரசு தருகின்றது. கல்வியமைப்பில் முன்னிலைப்பள்ளிக் கல்வி, ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என்பன கல்வி முறைமையில் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இவற்றைவிட தொழில்துறைக் கல்விக்கான பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், சமய சார்பான பாடசாலைகள் என்பனவும் மாணவர்களுக்குக் கல்வி வழங்கும் நிறுவனங்களாக நடைமுறையில் உள்ளன.

கனடாவில் கட்டாயக்கல்வி சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும் இது மாகாணங்களுக்கு மாகாணங்கள் வேறுபட்டதாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சில மாகாணங்களில் நான்கு அல்லது ஐந்து வயதாகவும் சில மாகாணங்களில் 6 அல்லது 7 வயதாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக மனிற்றோபா மாகாணத்தில் பாடசாலைக்கான வயது 7 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வியின் வயதெல்லை 16 வயதாக இருப்பினும் சில மாகாணங்களில் 18 வயது வரையும் பாடசாலையில் கல்வி கற்கும் நிலைமைகளும் உண்டு.

கனடாவில் ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கல்வி மொழியாகப் பயன்படுத்த ஒவ்வொரு மாணவருக்கும் உரிமையுண்டு. கியுபெக் மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் பிரஞ்சு மொழியைக் கற்கை மொழியாகப் பின்பற்றுகின்றன. சில பாடசாலைகளில் இரண்டு மொழிகளிலும் கற்கும் வாய்ப்பும் உண்டு.

நவம்பர் 15, 2024-இல் கனடாவின் குடிவரவு, அகதிகள்,

மற்றும் குடியுரிமை அமைச்சினால் வெளியீடு செய்யப்பட்ட அனைத்துலக மாணவர்கள் தொடர்பான நடைமுறைகள் பற்றிய தகவல் வெளியீட்டில் மாணவர்கள் கல்வியில் கூடிய நேரத்தை செலவிடுவதோடு வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் மட்டுமே வேலை செய்யமுடியும் எனவும் வரையறுத்துள்ளது. குடிவரவு, அகதிகள் மற்றும் குடிசார் உரிமைக்கான அமைச்சர் மக் மில்லர் கனடாவில் கல்விக்காக வந்து இங்கேயே தங்கிவிடும் மாணவர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வரையறைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளதோடு எதிர்காலத்தில் மாணவர்களைக் குறைத்துக்கொள்வது பற்றி யும் மாணவர்களின் கல்விக்குக் கூடிய நேரம் ஒதுக்கப்படுவதோடு, கல்வியின் தரமும் உயர்வாக்கப்படவேண்டும் என்பது பற்றியும் கவனம் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கற்கைகளுக்கான நிறுவனங்களின் பொறுப்பளிக்கப்பட்ட அமைப்பு (Designated learning institutions - DLI) உதாசீனம் செய்யப்படுவதற்கு எதிரான செயற்பாடுகளில் கவனம் செலுத்திவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வித்தரத்தைப் பேணுவது பற்றியும் வெளிநாட்டு மாணவர்களை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவது பற்றிய குடிவரவு அதிகாரியொருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘பல்கலைக்கழக வளாகங்களுக்கு வெளியே வேலை செய்வதற்கான கால எல்லையை 24 மணித்தியாலங்களாக மட்டுப்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் மாணவர்கள் தங்கள் கல்வியில் கவனம் செலுத்துவதற்கும் இடையில் சரியான சமநிலையைப் பேணுவதற்கான உண்மைத்தன்மையை காத்துக்கொள்கின்றோம். அனைத்துலக மாணவர்களுக்கும் இன்று மேற்கொள்ளப்படும் முக்கியமான மாற்றங்கள் மூலம் மாணவர் திட்டங்களின் ஒருமைப்பாட்டை அனைத்து நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ளும்’.

கனடியக் கல்வி வரலாற்றில் வெளிப்படும் முக்கிய அம்சங்களில் ஒன்று ஒற்றுமை மற்றும் பல்வகைமைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஆகும். பூர்வீக மக்களின் பார்வைகளை பாடத்திட்டத்தில் உள்ளடக்குதல், கனடாவின் பன்முகப் பண்பாட்டை மதிக்கும் வெளிப்பாடாகக் கொள்ளப்படுகின்றது. இது தவிர்க்க முடியாத ஒன்றாக அரச கொள்கை வகுப்போரின் கைகளுக்கும் விலங்கிடப்பட்டுள்ளமை காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. அத்தோடு, அனைத்து சமூக-பொருளாதார பின்னணியிலிருக்கும் மாணவர்களுக்கும் சம வாய்ப்பு மற்றும் வளங்களை வழங்கும் உறுதிப்பாட்டை அரசு தரவேண்டிய நிர்ப்பந்தம் காலத்தின் தேவையாக மாறிவருகின்றது. உலகத்தோடு ஒத்து ஒழுகவேண்டிய நிலைமையைக் கனடா அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாமைக்கு நவீன கல்வியின் முன்னேற்றம் தவிர்க்கமுடியாததாக அமைகின்றது.

தொழில்நுட்ப தகவல் பரிமாற்றத்தை மறுவடிவமைத்துவரும் இன்றைய உலகில், எண்ணிமத் தொழில்நுட்பத்தை கற்றல் - கற்பித்தலுடன் இணைத்துச் செயற்படுத்தவேண்டியதன் அவசியம் தவிர்க்க முடியாதவாறு உள்ளது. இணையத் தளங்கள் மற்றும் நேரலை வழிமுறைகள், கற்றல் மேலாண்மை அமைப்புகள் பாடத்திட்டத்திலும் பாடச் செய்முறைகளிலும் பயன்படுத்தப்படுவது, தொழில்நுட்பத்தின் திறனை, உலகளாவிய கற்றல் செயற்பாடுகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் பயன்படுத்துவதன் அவசியம் உணரப்பட்டு உள்வாங்கப்படும் நிலையினை வெளிப்படுத்துகின்றது.

மேலும், கற்றல் - கற்பித்தல் முறைகளில் அனுபவப் பாடம் (Experiential learning) அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இது, கோட்பாட்டுக் கல்வியையும் நடைமுறைக் கல்வியையும் இணைக்கும் முயற்சியாக

> **“உலக பொருளாதாரம் மாறிவரும் நிலையில், மாணவர்களை எதிர்காலத்திற்குத் தயார்ப்படுத்தும் சீர்திருத்தங்களில் கனடா கல்வி அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.”**



உள்ளது. மாணவர்களின் கற் றலில் கொண்டுள்ள முன்னேற் றத்தை மறுபரிசீலனை செய்வதோடு சுயமதிப்பீட்டை யும் பெற்றுக்கொள்ள வழி வகுக்கின்றது. 21-ஆம் நூற்றாண்டின் வேலைவாய்ப்புச் சந்தையில் தேவையான திறன்களை வழங்கும் வழியாகவும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கான படியாகவும் இது விளங்குகிறது.

## நவீன தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கு கல்வி அமைப்பில் கொண்டுள்ள தாக்கம்:

நவீன தொழில்நுட்பம் பல்வேறு நிலைகளில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வழிவகுக்கின்றது. பல்வேறுபட்ட தன்மைகளை அறிந்துகொள்ளவும் பன்முகக் கருத்துகளின் ஒருங்கிணை வைப் பெற்றுக்கொள்ளவும் மாணவர் சமூகத்திற்கு பரந்த ஆதரவை நவீன கல்வியியல் மாற்றங்களும் போக்குகளும் கொண்டுள்ளன.

தொழில்நுட்ப ஒருங்கிணைவு கல்வி உள்ளடக்கங்களுக்கான விரிவான அணுகல், பின்பற்றக்கூடிய கற்றல் சூழல்கள், கற் றல்செயற்பாட்டில் அனுபவரீதியான கற்றல் வாய்ப்புகள், உலகளாவிய கற்றல் முறைகளுடனான பொருத்தப்பாட்டு டன் கூடிய கற்பித்தல் முறைகளை கல்வியியலாளர்கள் பெற்றுக்கொள்ளவும், பயன்படுத்தவும் வாய்ப்புகள் காணப் படுகின்றன. ஒருங்கிணைந்த கல்வியை வலியுறுத்துதல், கனடாவின் பல் பண்பாட்டுத் தேவைக்கான பரந்த விருத்தி தரத்தக்க, மதிப்பளிக்கக்கூடிய பாடத்திட்டத்தை உருவாக்கு கிறது.

பாரம்பரிய கற்பித்தல் முறைகளையும், புதுமையான கருவிக ளையும் சமநிலைப்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கும் கல்வி யியலாளர்களுக்கும், பெரும் வரப்பிரசாதமாக உள்ளது. உலக பொருளாதாரம் மாறிவரும் நிலையில், மாணவர்களை எதிர்காலத்திற்குத் தயார்ப்படுத்தும் சீர்திருத்தங்களில் கனடா கல்வி அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுவருவது குறிப்பிடத் தக்கது. வெவ்வேறு நாட்டு மாணவர்களை உள்வாங்குவ தற்கான வாய்ப்பாகவும் இப்புதிய தொழில்நுட்பக் கல்வியின் ஒருங்கிணைப்பு வாய்ப்பினை நல்குகின்றது.

பூகோள ரீதியிலான அணுகலைக் கனடா அரசு ஊக்கு வித்து வருகின்றது. இதற்கு வெளிநாட்டு மாணவர்களை உயர் கல்வியில் பங்குகொள்ள வாய்ப்பளிக்க முனைப்புக் காட்டுகின்றது. இது ஒரு பெரும் வருவாய்த் துறையாகவும் மாறிவருகின்றது. பல்வேறு நாட்டு மாணவர்களும் கனடா பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கற்க வருவ தனால் கல்வித்தரத்தை உயர்த்துவதோடு அவர்களைக் கவ ரத்தக்க பாடத்திட்டத்தை வகுத்துச் செயற்படுத்தவேண்டிய நிலை கனடாவுக்கு உண்டு. தொலைநிலை கற்றல், சமூக அடிப்படையிலான திட்டங்கள், தொழில்நுட்ப முன்னேற்றம் பாடத்திட்ட மாற்றங்கள், ஆசிரியர் பயிற்சி, நிதிக் கட்டுப்பா டுகள், வளப் பங்கீடு, தனியார்-அரசு கூட்டாண்மையுடனான எதிர்காலத் தயாரிப்புகள், கூட்டுக் கல்வித் திட்டமிடல், உலகத் திறன்களில் கவனம் செலுத்துதல் என்பவற்றில் கனடா கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களங்கள், பல்க லைக்கழகங்கள், கல்லூரிகள் போன்ற அமைப்புகளும் முன்னுரிமை செலுத்திவருவது எதிர்கால தேவைகளைக் கருத் திற்கொண்டு செயற்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது.

உலக நாடுகள் கல்வியில் அக்கறை செலுத்துவதற்குக் கார ணம் பொருளாதார வளர்ச்சி, கல்வி வளர்ச்சியில் தங்கியுள் ளது என்பதை உணர்ந்துகொண்டமையேயாம். கல்வியால் முன்னேறிய நாடுதான் பொருளாதார வளத்திலும் முன்னேற முடியும். இயற்கை வளங்களை மட்டும் கொண்டு முன் னேற்றம் காணமுடியாது. கல்வியின் பயன் பாடு பொருளாதார வளத்தின் பயன்பாட்டிற்கு முக்கிய பங்காற்றுகின்றது என்பது தவிர்க்க முடியாதுள்ளது. கல்வி வளர்ச்சிதான் நாகரிகத்தின் ஏணிப் படியாகக் காணப்பட்டுள்ளது. கல்வி விருத்தி பொருளாதார விருத்திக்கு வித்தாக அமைகின்றது. கல்வியில் மூலத னம் இடப்படுவதால் மாணவர்கள் தங்கள் எதிர் காலத்தை சீரிய முறையில் அமைத்துக்கொள்ள கல்வி அடிப்ப டையாக அமைகின் றது. நாட்டின் இயற்கை அமைப்பை ஒட்டி வளர்த் தெடுக்கப்பட்ட கல்வி இன்று தொழில்நுட்பத்தின் அடிப்படை யில் அதற்கான முக்கியத் துவத் தைக் கொடுக்கும் கல்வியாக காணப்படு கின்றது. உலக நாடுகளில் ஏற்பட்டுவரும் மாற்றம் கல்வியின் அடிப்படை யிலேயே இடம்பெறுவ தனால் கல்விக்கு முக்கி யத்துவம் கொடுக்கப்படு வதும் காரணமாக அமை கின்றது. மாணவர்களிடையே நுண்ணறிவை மேம்படுத் தும் கல்விமுறைமையில் செயற்கை நுண்ணறிவின் தாக்க மும் பல்வேறு முன்னேற்றகரமான விளை வுகளையும் எதிர்மாறாக எதிர்விளைவுக ளையும் ஏற்படுத்தும் ஒன்றாக மாறி வருவ தனைக் காணமுடிகின்றது. எந்த ஒரு விளைவிலும் இரு பக்கங்கள் இருப்பது போன்று செயற்கை நுண்ண றிவின் வளர்ச்சியும் ஆக்கிரமிப்பும் கல்வியில் மட்டுமல்ல எல்லாத் துறைகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது. வளர்ந்துவரும் தொழில்நுட் பத்திற்கு ஈடுகொடுக்கவேண்டியது எதிர்கால சமூகமாகும். இதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதும் அத்தியாவசி யமாகின்றது. எனினும் வாழ்வியல் ஒழுக்க நெறிகளையும் பின்பற்ற வைக்கவேண்டி பாரிய பொறுப்பு கல்விக் கட்ட மைப்புக்கு உண்டு.


> “ **கல்வியால் முன்னேறிய நாடுதான் பொருளாதார வளத்திலும் முன்னேற முடியும். இயற்கை வளங்களை மட்டும் கொண்டு முன்னேற்றம் காணமுடியாது. கல்வியின் பயன்பாடு பொருளாதார வளத்தின் பயன்பாட்டிற்கு முக்கிய பங்காற்றுகின்றது என்பது தவிர்க்க முடியாதுள்ளது.** ”



**உசாத்துணை:**

- The news Release letter November 15, 2024 - Ottawa ‘New International Student Program regulations take effect’





sivapalu@thaiveedu.com

7

## பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

# நீ எப்படி உணர்கிறாயோ அதுதான் உண்மையில் உனக்குரியதாக இருந்தது!

- எஸ்.கே.விக்னேஸ்வரன்


tg.theeban@gmail.com

பதினைந்து வயது கோரா 'தன் தங்கை 'ஸ்கேட்டிங்' (பனிச் சறுக்கு விளையாட்டு) போயிட்டாள், தம்பி பந்தடிக்கப் போயிட் டான்' என்று புகார் செய்தாள்.

**கோரா:** அவையள் எப்பவும் ஸ்கேட்டிங் செய்யிறது, பந்தடிக் கிறது எண்டு எல்லாம் செய்துகொண்டுதான் இருக்கினம். ஆனா நான், அவையின்ரை வயசிலை இருக்கேக்கை எனக்கு எதுவுஞ் செய்ய முடியாது. நீங்கள் என்னை 'ஸ்கேட்டிங்'குக்குக் கூட்டிக் கொண்டு போனதே இல்ல.

**அம்மா:** சரி, செல்லம், உன்னுடைய 'டொக்டர்' உன்னை 'ஸ்கேட் டிங்'குக்குப் (skating - பனிச்சறுக்கு அல்லது சறுக்கல் விளை யாட்டு) போக அனுமதிக்கமாட்டார் எண்டு உனக்குத் தெரியுந் தானே ?.

**அப்பா:** நீ உடம்பு சரியில்லாம இருந்ததை மறந்துட்டியா ?. ஆனா, நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து நிறைய விஷயங்களைச் செய்தோம் தானே ?.

**கோரா:** எனக்கு அப்பிடிச் செய்ததாக ஒண்டும் ஞாபகம் இல்ல. நீங்கள் என்னை எங்கையும் கூட்டிக்கொண்டு போனதேயில்லை.

**அம்மாவும் அப்பாவும்** (சேர்ந்து அதை மறுத்து): ஆனால் கோரா, உண்மையில் நாங்கள் போயிருக்கிறம். உனக்கு நாங்கள் போன 'சேர்க்கஸ்', கனடா 'ட்ரிப்' ஒண்டுமே ஞாபகம் இல்லையா ?

இந்த நேரத்தில் அம்மா தன் அணுகுமுறையை மாற்றிக்கொண் டாள். அவள் ஒரே நொடியில், கோராவின் உணர்வுகளைப் புரிந் துகொண்டு, தன் கணவரிடம் 'கோரா கவலைப்படுகிறா... தான் ஒதுக்கப்படுவதாக உணர்கிறா என்று நினைக்கிறேன்' என்று சொன்னாள்.

**கோரா** சத்தமாகவும் உறுதியாகவும் சொன்னாள்: 'ஓம் அதுதான் உண்மை. நான் அப்படித்தான் உணர்கிறேன்.'

**அம்மா:** காரணங்கள் என்னவாக இருந்தாலும் பரவாயில்லை, நீ இப்படி உணர்கிறாயென்றால், அது உண்மையில் உனக்கு அப் படித்தான் இருந்திருக்கிறது' என்று சொன்னாள் அம்மா.

**கோரா** (அமைதியாக): ஓமோம்... அதுதான் உண்மை!

உரையாடப்பட்ட விடயத்திலிருந்து வெளிப்பட்ட சூடு குறைந்து, வாதம் முடிவுக்கு வந்துவிட்டது. பிறகு அம்மா இப்படிக் குறிப் பிட்டார் 'உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலைகளில், பகுத்தறிவும் தர்க் கமும் ஒரு பதின்ம வயதினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது என்பதை இந்தச் சம்பவம் எனக்கு உணர்த்தியது. உரையாடல் களின் போக்கின் இடையில், அணுகுமுறைகளை மாற்ற முடியும் என்பதையும் கூட இது எனக்குக் கற்றுக் கொடுத்தது.'

### இரண்டு நாட்கள் தவறவிடுவதே பெரிய விஷயமாக இருக்கலாம்:

தன் குழந்தையின் கருத்தை மறுப்பதற்குப் பதிலாக, ஒப்புக் கொள்ளக் கற்றுக்கொண்ட ஒரு தாயின் கதை இது.

பாடசாலை விடுமுறை தொடங்குவதற்கு இரண்டு நாட்க ளுக்கு முன்பாகக் குடும்பத்தினர் 'புளோரிடா' (Florida) செல் லத் திட்டமிட்டனர். பதின்மூன்று வயது கேரி, அந்த நேரத் தைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, கவலையுடன், 'பள்ளிக் கூடம் முடிவதற்குள் நான் வெளியேற முடியாது. எனக்கு இருக்கிற வேலைகளில் அதிக வேலை 'மிஸ்' (தவறிப் போய் விடும்) ஆகிவிடும்!' என்று சொன்னான்.

**அப்பா:** சும்மா பகிடி விடவேண்டாம். விடுமுறை தொடங்கவி ருக்கும் நாட்களில் பள்ளியில் அவர்கள் ஒருபோதும் எதுவும் செய்யப் போறதில்லை!

**கேரி:** இல்லை, அது உண்மையில்லை. பள்ளிக்கூடத்தில் ஒரு நாள் கூட 'மிஸ்' பண்ணுவது எப்படி இருக்கும் என்று உங்களுக்குத் தெரியாது!

**அப்பா:** 'ப்பூ... இரண்டு நாட்கள்... பெரிய விஷயம்தான்! ஆசிரியர்களுக்கு, தாங்கள் விடுமுறையில் செல்வதற்காக ஏதா வது சுத்தம் செய்கிற வேலைகளைத்தான் செய்ய வேண்டி யிருக்கும்.'

இந்தப் பதிலுடன் உரையாடல் மேலும் கசப்பாக மாறியது. அம்மா திடீரென்று அங்கு என்ன தவறு நடக்கிறது என்று உணர்ந்துகொண்டாள். தன் மனதிலிருந்து எழுந்த 'ஒரு குழந்தையின் கருத்தை மறுக்காதே.' என்ற உள்ளகக் குரலை அவள் கேட்டாள். கேரியிடம், 'எட்டாம் வகுப்பில் இரண்டு நாட்கள் இல்லாமல் போவது ஒரு பெரிய விஷயம் தான். முடித்துக் கொடுக்க உங்களுக்கு நிறைய வேலைகள் இருக்கும் கேரி. அதற்காக ஒருவேளை நீங்கள் வீட்டிலேயே இருக்க விரும்பலாம், அல்லது பின்னர் விமானத்தில் வந்து எங்களைச் சந்திக்கலாம்.' கேரி உடனடியாக உற்சாகம டைந்து காணப்பட்டான்.

அம்மா தொடர்ந்தாள் 'அல்லது ஒருவேளை நீங் கள் உங்கள் ஆசிரியர்களுடன் இதைப் பற்றிப் பேசிக் கூடுதலாகச் சில வேலைகளை எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் என்ன செய்ய விரும்புகி றீர்கள் என்பதைப் பற்றி யோசித்த பின் எங்களுக் குச் சொல்லுங்கோ. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு சில நாட்கள் விடுமுறைக்காகப் பாடசாலை யில் உங்களுக்கிருக்கும் பொறுப்புகளுக்கு ஆபத்து ஏற்படும் விடயத்தை நாங்கள் செய்யத் தேவையில்லை.' அவன் தேடிக்கொண்டிருந்த தனக்கான அந்தஸ்தைப் பெற்றுக்கொண்ட வுடன், உடனடியாகவே சொன்னான்: 'நான் அதைப் பற்றி யோசிக்கிறேன், நான் இதுக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பேன்!.'

## படுக்கையில் இருந்து எழும்புவது கடினமாக இருக்கிறது – அதுவும் குறிப்பாக குளிர் காலத்துக் காலைப் பொழுதில்!

இங்கே, காலையில், நாளைத் தொடங்குவதற் காகத் தனது வலது காலை எடுத்து வைப்பதில் தன் திறமையைப் பயன்படுத்திய ஒரு தாயின் கதை இங்கு வருகிறது. மணிக்கூடு அலாம் ஒலிக் கிறது. ஆனால் பதினைந்து வயது மகன் சைரஸ், அதை நிறுத்திவிட்டு, திரும்பிப் படுத்து, மீண்டும் தூங்கச் செல் கிறான். தாய் சொல்கிறார்:

'நான் அவனைக் கூப்பிட்டுச் சொன்னேன், கடிகாரம் ஏழு முப்பது என்று சொல்கிறது, சரியா சைரஸ்?'

'எனக்குத் தெரியும்,' என்று அவன் முணுமுணுத்தான்.

'படுக்கையில் இருந்து எழும்புவது கடினம் தான், அதுவும் விசேசமாக இப்படியான குளிர் காலத்துக் காலையில், ஒரு சூடான கோப்பை கொக்கோ தரவா சைரஸ்?'

'இல்லை, நான் கோப்பியும் கொஞ்சம் 'ரோஸ்ட்' உம் சாப்பிட விரும்புகிறேன், வேறு ஒண்டும் வேண்டாம். 'பிளீஸ்'.'

'அவன் எழுந்திருந்தான். நான் அவனை நச்சரிக்கவோ அல் லது அச்சுறுத்தவோ தேவைப்படவில்லை. ஆனால் அவன் இன்னமும் எரிச்சலாகத்தான் இருந்தான்.' 'ஓ... இந்தப் புத்த கங்கள் எல்லாம்... விடிஞ்சு நாள் தொடங்குவதற்கு முன்ன ராகவே எனக்கு அலுப்பாக இருக்கிறது' - இது அவனது புகார்.

'இன்று காலை பள்ளிக்கூடம் போக உனக்குக் கார் வேண் டும் இல்லையா?' நான் கேட்டேன்.

'சரி, ஓமோம்' என்று சொன்ன அவன், பின் என்னிடம் சொன் னான்: 'ஆனால் நான் உங்களை இவ்வளவு வேளைக்கு வீட்டை விட்டு வெளியே கூட்டிக் கொண்டு போக விரும்ப வில்லை. எனக்குக் கார் ஓட்டும் 'லைசென்ஸ்' கிடைக்கும் வரைக்கும்தான் காத்துக்கொண்டு இருக்கிறேன். ஒரு பழைய காரையோ அல்லது ஒரு ஜீப்பையோ வாங்கி நானே ஓட்டுவேன்' - அவன் உடைகளை அணிந்து கொண்டு பாடசாலைக்கு நடந்து சென்றான்.'



## நீங்களே தனியாகப் பயிற்சி செய்வது சோர்வைத் தருகிறது:

இந்த விடயத்தை விரித்தவர் ஒரு இசை ஆசிரியர்.

'பதின்மூன்று வயது கிரெய்க், தனது இசைப் பாடத்திற்கான 'வீட்டுவேலை யைச்' செய்யவில்லை. கடந்த காலங் களில், நான் எப்போதும் ஏன் எதற்கு என்று அதற்கான காரணங்களைக் கேட்பேன். எப்போதும், எனக்கு அருமையான சாக்குப் போக்குப் பதில்கள் கிடைக்கும். இந்த முறை அவமானப்படுத்தல், அச்சுறுத்தல் அல்லது கேள்வி கேட்டல் என்று எதுவுமே செய்யாமல் என் அதிருப் தியை வெளிப்படுத்த, 'கிரெய்க், நீங் கள் தயாராக இருப்பீர்கள் என்று

நான் நம்புகிறேன்' என்று சொன்னேன். 'ஆனால் நான் பயிற்சி செய்தேன்,' என்று கிரெய்க் தன் பதிலை ஒருவகை எதிர்ப் புணர்வோடு தெரிவித்தான். 'உங்களுக்கு வழங்கப் பட்ட வேலை உங்களுக்கிருக்கும் பொறுப்பின் ஒரு பகுதி' என்று நான் அதற்குப் பதிலளித்தேன். என்னுடைய பதில் உறுதி யாக இருந்தது. அதற்கு அவன் சொன்னான்: 'நீங்கள் ஒரு 'மாஷ்மெலோ' (marshmallow) அல்ல என்று நான் நினைக்கிறேன், எனது முந்திய ஆசிரியர் உண்மையிலேயே ஒரு மென்மையான மனிதர்.'

'பாடம் முடிந்த பிறகு, 'பியானோ வாசிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் பயிற்சி செய்வது அவ்வளவு சந்தோசம் தருவதாக இல்லை... பயிற்சி செய்யத் தேவையில்லை என்று இருந்தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.' என்று சொன்னான் கிரெய்க்.

'நீங்களே தனியாகப் பயிற்சி செய்வது, உங்களுக்கு ஒரு வகைத் தனிமை நிலையில் இருப்பது போன்ற உணர்வைத் தருகிறது போல,' என்று நான் குறிப்பிட்டேன்.

'அவனது கண்கள் பிரகாசித்தன.'

'ஆமாம், உண்மையாகவே அப்பிடித்தான் இருக்கிறது. அது எப்படி இருக்கும் என்று உங்களுக்கும் தெரியும்... இல் லையா ?' என்றான் கிரெய்க்.

நான் அவனைப் பார்த்துப் புன்னகைத்தேன். அவன் தன் பயிற்சியைத் தொடர்ந்தான்.'

## தனிநபரும் செயன்முறையும்:

அனுபவத்தைப் புரிந்துகொள்வதும், ஒருவரது உணர்வுகளை வெளிப்படுத்துவதும் நல்ல விளைவுகளைத் தரக்கூடிய தனிப்பட்ட திறமைகள். ஆனால், அவை ஒன்றும் மந்திர தந் திரங்கள் அல்ல. அவற்றை இயந்திரத்தனமாகப் பயன் படுத்த முடியாது. ஒருவர் மீதுள்ள அக்கறை, மரியாதை என் பவற்றோடு இணைந்ததாகப் பயன்படுத்தப்படும்போது மட்டுமே அவை உதவியளிப்பவையாக இருக்கும். மனித உறவுகள் வலுவடைவதற்காக உதவி செய்வதெல்லாம், ஒன்றும் வெறுமனே ஒருவரது கெட்டித்தனத்தில் மட்டும் அல்ல, அவற்றைப் பயன்படுத்துபவரையும் பொறுத்தது. ஆதரவும், நம்பகத்தன்மையும் இல்லாத வகையில் செய்யப்படும் கெட் டித்தனமான முயற்சிகள், எப்போதும் தோல்வியிலேயே முடி வடைகின்றன.

## அமைதிப்படுத்தும் உரையாடல்கள்:

### • பெற்றோர்களும் நியாயவாதிகளும்:

பதினான்கு வயது டானியல், கோபமாக வீட்டிற்கு வந்தான். 'அந்த முட்டாள் பஸ் டிரைவர் 'ஸ்மிட்டி எண்டவன்' என்னை முட்டாள் முட்டாள் என்று மூன்று முறை அழைத்தான்! அவன் என்னைப் பிடித்துத் தள்ளினான்.'

**அம்மா:** மிஸ்டர் ஸ்மித் எந்தக் காரணமும் இல்லாமல் உன்னைத் தள்ளிவிட்டிருக்க மாட்டார். நீ அவர் அப்பிடிச் செய்யுமளவுக்கு ஏதாவது செய்திருக்க வேண்டும். நீ என்ன செய்தாய் ?

**டேனியல்:** நான் ஒண்டுமே செய்யேலை. நான் சும்மா கதைச் சுக் கொண்டுதான் இருந்தனான்.

**அம்மா:** இஞ்சைபார், எனக்கு உன்னையும் தெரியும், மிஸ்டர் ஸ்மித்தையும் தெரியும். அவர் ஒரு நல்ல மனிதர். அவர் உன் னைக் காயப்படுத்த வேணும் எண்டு நினைச்சிருக்கமாட்டார் என்று எனக்குத் தெரியும். அவர் சோர்வாக இருந்திருப்பார். குழப்படி செய்யும் குழந்தைகள் நிறைந்த பஸ் வண்டியை ஓட்டுவது சாதாரணமான விசயம் அல்ல.

அம்மா சொல்லிமுடிக்கவும் கோபம் பொங்கி வெடிக்க உச்ச கட்டக் குரலில் கத்தினான் டானியல்: உங்களுக்கு என்னைப் பற்றிக் கொஞ்சம் கூட அக்கறை இல்லை. நீங்கள் எப்பவும் இன்னொருத்தரைத்தான் காப்பாத்த நிப்பீங்க சொல்லி விட்டுப் புயல் வேகத்தில் வீட்டைவிட்டு வெளியேறினான்.

இந்த விடயத்தில் அம்மா அவனுக்கு உதவி செய்பவராக இருக்கவில்லை.

பதின்ம வயதினர் பிரச்சினையில் இருக்கும்போது, பல பெரி யவர்கள் அவர் மீது குற்றம் சுமத்தவே எப்போதும் தயாராக இருக்கிறார்கள். நமது குழந்தைக்கு, ஒரு பிரச்சினையில் தனது பக்கத்தைச் சொல்வதற்கென தற்காப்பு 'வழக்கறிஞர்' இருக்க வேண்டும் என்பது நியாயமானது அல்லவா ?. குழந் தையின் வழக்கறிஞராக இருக்க, பெற்றோரைத் தவிர வேறு யார் அதிக திறமை கொண்டவர்களாக இருக்க முடியும் ?. பெரும்பாலான பெற்றோர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் எதிர்த்தரப்பு வழக்கறிஞராக நடந்து கொள்கிறார்கள். இம் மாதிரியான எந்தவொரு பிரச்சினையிலும் அவர்கள், தமது மகனையோ மகளையோ விட தமக்குச் சம்பந்தமில்லாத அந்நியரையே நியாயப்படுத்த முனைகின்றனர். ஓட்டுநரின் அநாகரிகம், ஆசிரியரின் கேலி, பணியாளரின் முரட்டுத் தனம், வாயில் காவலாளர் ஏற்படுத்தும் அவமானம், பக்கத்து வீட்டுக்காரரின் நச்சரிப்பு, கொடுமைக்காரரின் மிரு கத்தனம் என்று எல்லாவற்றுக்கும் அவர்கள் விளக்கங்க ளையும் சாக்குப் போக்குகளையுமே பதிலாக வழங்குகி றார்கள்.

சில பெற்றோர்கள், தங்கள் பதின்ம வயதுப் பிள்ளைகள் வெளியுலகத்தில் எதிர்நோக்குகின்ற சிக்கல்களைக் கையாள் வதில் அவர்களுக்குத் துணையாக நிக்க மறுக்கிறார்கள். ஏனெனில், அது அவர்களை வெறும் 'நோஞ்சான்களாக' அல்லது தற்துணிவற்றவர்களாக ஆக்கிவிடும் என்று பயப்ப டுகிறார்கள். 'பட்டுத் தெளிவதன் மூலம்' (The school of Hard Knocks) பிள்ளைகள் தமது எதிர்கால வாழ்க்கையில் சிறப் பாக இயங்குவதற்குத் தயாராகி வருவார்கள் என்று அவர் கள் நம்புவதால், அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற தம்முள் எழும் இயல்பான உந்துதலையும் அவர்கள் அடக்கிக் கொள்கின்றார்கள். இந்தத் தவறான நம்பிக்கை, உண்மையில் பல பெற்றோர்களைத் தங்கள் பதின்ம வயதின ரிடமிருந்து பிரித்து விட்டுள்ளது.

பெற்றோர்கள்தான், தமது பிள்ளைகளின் சட்ட ஆலோச கர்கள். சட்டத்தரணிகளைப் போலவே, அவர்களும் சட்டத் திற்கு உட்பட்டுச் செயற்படுபவர்கள். ஆனால் அவர்கள் தவறான நடத்தையை மன்னிப்பதில்லை, அல்லது தவறான நடத்தையை அனுமதிப்பதில்லை. வழக்கறிஞர்கள் குற்றத்தை

ஊக்குவிப்பதில்லை; பாதுகாப்பான வகையில் தவறு செய்யக்கூடிய ஒருவரின் திறமையையோ அல்லது ஏமாற்றுக் காரரை அவரது புத்திசாலித்தனத்துக்காகப் பாராட்டுவதை யோ அவர்கள் செய்வதில்லை. இருப்பினும், எந்தக் குற்ற மாக இருந்தாலும், அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவரைப் பாதுகாக்கவும், மிகவும் கடினமான சூழ்நிலைகளில், அதைத் தணிக்கக் கூடிய வழிகளைக் கண்டடைவதற்கும், நம்பிக் கையை, உதவியை வழங்குவதற்கும் அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

## ● உணர்ச்சிவசப்பட்ட முதலுதவி:

டானியல் தனது தாயிடம் பாடசாலை பஸ் ஓட்டுனரால் அவ மானப்படுத்தப்பட்டு அதிலிருந்து தள்ளப்பட்டதாகக் கூறிய போது, ஓட்டுநராக இருந்தாலும், ஓட்டுநரின் நோக்கங்களைத் தேடுவதோ அல்லது அவருக்குச் சாக்குப்போக்குகளை வழங்குவதோ அவளுடைய கடமை அல்ல. அவளுடைய பணி, தன் மகனின் கோபம், காயம் மற்றும் அவமானத்தை அவள் புரிந்துகொள்கிறாள் என்பதைக் காட்டுவதாகும். பின் வரும் கூற்றுகளில் ஏதேனும் ஒன்று டானியலுக்கு அவர் என்ன அனுபவித்தார் என்பதை அவரது தாயார் உணர்ந்தி ருக்கிறார் என்பதைக் காட்டியிருக்கும்:

'உனக்கு அது மிகவும் சங்கடமாக இருந்திருக்கும்.'

'அது உன்னை அவமானப்படுத்துவதாக இருந்திருக்கும்.'

'அது உனக்குச் சரியான எரிச்சலை ஏற்படுத்தியிருக்கும்.'

'அது உன்னைப் பெரிய கோபத்துக்கு உள்ளாக்கியிருக்கும்.'

'அந்த நேரத்தில் உண்மையில் அவன் மீது சரியான வெறுப்பு ஏற்பட்டிருக்கும்.'

ஒரு அனுதாபமுள்ள கேட்பவர், அவற்றைப் புரிதலுடன் ஏற் றுக்கொள்ளும்போது வலுவான உணர்வுகள் அவற்றின் தீவி ரத்தன்மை குறைந்து அவற்றிற்கேயுரிய கூர்மையான பக் கங்கள் மழுங்கிப் போகின்ற நிலை உருவாகிறது. உணர்ச்சி பூர்வமான முதலுதவி அளிக்கப்பட்ட பிறகு, அது தொடர் பான மேலதிக நடவடிக்கைகளை ஒத்திவைப்பது பெரும் பாலும் சிறந்தது. ஒருவருக்கு உடனடிப் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற ஆசையைத் தணிக்க வேண்டும். உடனடித் தலையீடு மோதலை அதிகரிக்கக்கூடும். உணர்ச்சிகள் தணிந்து மனநிலைகள் மாறும்போது பிரச்சினைகளைத் தீர்ப்பதும் அமைதியை மீட்டெடுப்பதும் எளிதாகிவிடும். உணர்ச்சிவேகம் நிலவும் சூழ்நிலைகளில், ஒரு பதின்ம வய தினருக்கு, பெற்றோரின் எதிர்வினை வேறு யாரிடமிருந்தும் பெறக்கூடிய ஒன்றைவிட வித்தியாசமானதாக இருக்க வேண் டும். அந்நியர் ஒருவர் தன் மூளையால் தான் பேசுகிறார்; பெற்றோர்களோ இதயத்துடன் பேசுகிறார்கள்.

பதினேழு வயது டேவிட், கோடைகால வேலைக்காக நேர் காணல் செய்யப்பட்டார், ஆனால் நிராகரிக்கப்பட்டார். அவர் மிகுந்த ஏமாற்றத்துடனும் மனச்சோர்வுடனும் வீடு திரும் பினார். தந்தை தனது மகனின் இந்த நிலை குறிந்து அனுதா பப்பட்டார், அதை திறம்பட வெளிப்படுத்தவும் செய்தார்.

**அப்பா:** உண்மையிலேயே நீங்கள் இந்த வேலையை விரும் பினீங்கள், இல்லையா மகன்?'

**டேவிட்:** ஓம், நான் இதை உண்மையாகவே விரும்பினேன்.

அப்பா: அதுக்கு எல்லாவகையிலும் நீங்கள் தயாராக இருந் தீங்கள்?

**டேவிட்:** ஓம் அப்பா. அது எனக்கு நிறைய நல்ல உதவி செய்தது.

**அப்பா:** ம்! என்ன ஒரு ஏமாற்றம்...
**டேவிட்:** ஓம் அப்பா... உண்மையாகவே ஏமாற்றம் தான்.

**அப்பா:** ஒரு வேலையை எதிர்பார்த்து, அது கிடைக்கும் என்று இருந்து. அது கிடைக்காமல் போவதென்பது கடினமான விசயம் தான்.

**டேவிட்:** ஓம் அப்பா, எனக்கு அது தெரிகிறது...

ஒரு கணம் அமைதி நிலவியது.

பிறகு **டேவிட்** சொன்னான்: ம்... போகட்டும்... இது ஒன்றும் உலகத்தின் முடிவு இல்லைத்தானே அப்பா... நான் எப்ப டியும் இன்னொரு வேலையைக் கண்டுபிடிப்பேன்

## ● சிக்கலைத் தீர்க்க ஏழு வழிகள்:

மேலே கூறப்பட்ட சூழ்நிலை, கீழே வருவது போன்ற பல வித் தியாசமான வழிகளில் தவறாகக் கையாளப்பட்டிருக்கலாம்:

**பகுத்தறிவு மூலம்:** 'நீ என்ன எதிர்பார்த்தாய்? நீ விரும்பிய முதல் வேலையையே பெற்றுவிட முடியும் என்று எதிர் பார்த் தாயா? வாழ்க்கை ஒன்றும் அப்படிப்பட்ட லேசான விடையம்



இல்லை. நீ வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முதல் ஐந்து அல்லது பத்து நேர்காணல்களுக்குக்கூடச் செல்ல வேண்டியிருக்கலாம்.'

**பழமொழி மூலம்:** 'ரோம் ஒரே நாளில் கட்டப்படவில்லை என்பது உனக்குத் தெரியும். நீ இன்னும் மிகவும் இளமை யாக இருக்கிறாய், உன் முழு வாழ்க்கையும் உன் முன்னால் இருக்கிறது. எனவே, தலையை உயர்த்து. சிரி, அப்போது தான் உலகம் உன்னுடன் சேர்ந்து சிரிக்கும். அழுதால், நீ தனியாகத்தான் அழுவாய். உன் கோழிகள் குஞ்சு பொரிப்ப தற்கு முன்பு அவற்றை நீ எண்ண வேண்டாம் என்று அது உனக்குக் கற்பிக்கும் என்று நம்புகிறேன்.'

**உதாரணமாக என்னை எடுத்துக்கொள்:** நான் உன்னுடைய வயதுடையவனாக இருந்தபோது என் முதல் வேலையைத் தேடிச் சென்றேன். நான் என் காலணிகளை மெருகூட்டினேன், முடி வெட்டினேன், சுத்தமான ஆடைகளை அணிந்தேன், 'வால் ஸ்ட்ரீட் ஜர்னலை' (Wall Street Journal) என்னுடன் எடுத்துச் சென்றேன். என்னைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிரா யத்தை எப்படி உருவாக்குவது என்று எனக்குத் தெரிந்தி ருந்தது.

**சூழ்நிலையின் அழுத்தத்தைக் குறைப்பதன் மூலம்:** 'நீங்கள் ஏன் இவ்வளவு மனச்சோர்வடைய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் இவ்வளவு சோர்வடைய எந்தப் பெரிய முக்கியமான காரணங்களும் இல்லை. பெரிய விஷயம் என்னவென்றால், ஒரு வேலை பலனளிக்கவில்லை என்றால், இனி அதைப் பற்றிப் பேசுவது முக்கியமான விச யம் அல்ல என்று எடுத்துக் கொள்வதுதான்.'

**உங்களுக்கு உள்ள பிரச்சினைகளிலிருந்து:** உங்க ளுக்கு இருக்கிற பிரச்சினை என்னவென்றால், உங்களுக்கு மற்றவர்களுடன் எப்படிப் பேசவேண்டும் என்று தெரிய வில்லை என்பதுதான். எப்போதும் உங்களுக்கு வாய் முந்தி விடுகிறது. அதாவது யோசிப்பதற்கு முதல் படபடவென்று பேசத் தொடங்கிவிடுகிறீர்கள்.

'உங்களிடம், பேசுவதில் சமநிலை இருப்பதில்லை, பதட்டம டைகிறீர்கள். உண்மையில் நீங்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்றபோதும் உங்களிடம் போதுமான பொறுமை இருப்பதில்லை. அதுமட்டுமல்லாமல் நீங்கள் மெல்லிய இதயம் கொண்டவராக இருக்கிறீர்கள் இதனால், மிக எளிதா கவே காயமடைந்துவிடுகிறீர்கள்.'

**சுய பரிதாபம் காரணமாக:** 'நான் மிகவும் வருந்துகிறேன் மகனே, எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. என் நெஞ்சு உடைந்து போகிறது. வாழ்க்கை என்பது அதிர்ஷ் டத்தோடு சமந்தப்பட்ட விஷயம். சிலருக்கு எல்லா அதிர்ஷ் டங்களும் இருக்கின்றன. அவர்கள் சரியான நபர்களை, சரியான இடங்களை அறிந்து வைத்திருப்பார்கள். ஆனால் எங்களுக்கு யாரையும் தெரியாது, எங்களையும் யாருக்கும் தெரியாது.'

**நம்பிக்கை வாத அல்லது நல்லதே நடக்கும் என்ற அணுகுமுறை மூலம்:** எல்லாம் சிறப்பாக நடக்கும். நீங்கள் 'பஸ்ஸை'த் தவறவிட்டால் விரைவில் மற்றொரு 'பஸ்' வரவே செய்யும், அதில் ஒருவேளை குறைவான சனநெரிசல் இருக் கும். உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கவில்லையென்றால், உங்களுக்கு இன்னொரு வேலை கிடைக்கும் - ஒருவேளை அது இதைவிட இன்னும் சிறந்த வேலையாக இருக்க முடி யும் என்றவகையான நம்பிக்கையூட்டும் பார்வை.

இதுபோன்ற ஆபத்துகளைப் பெற்றோர்கள் தவிர்ப்பதற்குப் பயனுள்ள உரையாடல்களை எப்படி நடத்துவது என்று கற்றுக் கொள்ளலாம். அவர்கள் கவனமாகக் கேட்கவும், சுருக்கமாக அல்லது அனுதாபமாகப் பதிலளிக்கவும் கற்றுக் கொள்ளலாம்.

## ● முன்கூட்டிய மதிப்பீடுகளற்ற பதில்:

பெரியவர்கள் பொதுவாக, தங்கள் பதின்ம வயதினர்களின் கூற்றுகளுக்குப் பதிலாக சொல்லக் கூடிய இரண்டு வழி களில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து எதிர்வினையாற்று கிறார்கள்: ஒன்றில் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கி றார்கள் அல்லது அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இருப்பினும், தங்களது பிள்ளைகளுக்கு அவர்கள் அளிக் கக் கூடிய மிகவும் பயனுள்ள பதில், பெரும்பாலும் தீர்ப்ப ளிப்பாக அல்லாமல் இருப்பதே. அவர்களுக்கு மதிப்பளிக் கிற பதிலில் பாராட்டோ அல்லது விமர்சனமோ இருப்ப தில்லை. மாறாக, அது அவர்களது உணர்வுகள் அடை யாளம் காணப்படுவதை வெளிப்படுத்துகிறது; அவர்களது விருப்பங்களை அங்கீகரிக்கிறது; கூடவே அவர்களது கருத் துக்களை அங்கீகரிக்கிறது.

கீழே தரப்படுகிற, தாய்மார்களின் இத்தகைய கூற்றுகள் உணர்ச்சிகரமான சூழ்நிலைகளின் போது சொல்லக் கூடிய பயனுள்ள பதில்களாக அமைகின்றன:

- **நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருப்பது மிகவும் கடின மானது:**

என் கணவர் எங்கள் குழந்தைகளை ஐஸ் ஸ்கேட்டிங் செய்ய அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தார். ஆனால், பதின் மூன்று வயது டோனாவுக்கு அன்று உடல்நிலை சரியில்லா மல் போய்விட்டது. அதனால் எங்கள் இளைய மகன் மட்டுமே அவருடன் சென்றான். டோனா இதற்காக மிகவும் வருத்தப் பட்டாள். அவளுடைய எதிர்வினையைப் பார்த்தபோது நான் இப்படிச் சொல்ல விரும்பினேன்: 'உங்கள் சகோதரன் வழக் கமாக வீட்டில் இருக்கும்போது எப்போதும் வெளியில் கூட் டிச் செல்லப்படுபவர் நீங்கள்தான். இன்றைக்கு, ஒரு வித்தியாச மாக, அவன் செல்லும்போது நீங்கள் இப்படிக் குறை சொல் கிறீர்கள்.' ஆனால், நான் அப்படிச் சொல்லவில்லை; அதிர்ஷ் டவசமாக, நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.'

அவள் சொல்லும் வழக்குக்கு நியாயம் சொல்வதற்குப் பதி லாக, அவள் எப்படி உணர்கிறாள் என்பதை என் மனதில் என்னால் அடையாளம் காண முடிந்தால், வாழ்க்கை சிறப் பாக இருக்கும் என்று உள்மனதில் எனக்குத் தெரிந்திருந் தது. நான் சொன்னேன்: 'அப்பாவும் தம்பியும் ஸ்கேட்டிங் செல்லும்போது நீங்கள் வீட்டில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பது மிகவும் கஸ்ரமானதுதான். இல்லையா, டோனா ?'. அவள் ஒப்புக்கொண்டாள். நான் கேட்டேன்: 'நீங்களும் போக விரும்புகிறீர்களா ?'

'ஆம்' - அவள் ஒரு வார்த்தையில் பதிலளித்தாள். பின்னர் நீண்ட பெருமூச்சுடன் அவள் மனநிலையில் மாற்றம் ஏற்



பட்டது. அவள் விரைவில் ஒரு புத்தகத்தில் மூழ்கிவிட்டாள்.'

- **நீங்களும் எங்களுடன் வரலாம் என்று ஆசைப்படுகிறீர்கள்:**

'இது எங்களுக்குத் தொடர்ச்சியாக வந்த மாலைப் பொழுதுகளின் மூன்றாவது மாலை, இப்படி வருவது எங்களுக்கு மிகவும் அசாதாரணமான ஒன்று. நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன். என் கணவரை தியேட்டரில் சந்திப்பதற்கு முன்பு செய்ய வேண்டிய நிறைய விஷயங்கள் இருந்தன. ஆனால், என் பிள்ளைகள் சின்னவர்கள் முதல் பதின்ம வயதினர் வரை எல்லோருமே எனக்கு உதவுவதற்குத் தயங்கினார்கள்; எல்லோரும் மிகவும் பதட்டமாக இருந்தார்கள்.'

அம்மா: 'ம்ம்... இன்றிரவு எனக்கு எந்தப் பெரிய உதவியும் இங்கே கிடைக்கப் போவதில்லை என்றுதான்படுகிறது. ஆனால், அப்படியிருக்கத் தக்கதாக, நீங்கள் எல்லோரும் உங்களுக்குள்ளே கேட்கக் கூடிய உதவிகளுக்குப் பதிலாக என்னிடமே உதவி கேட்கிறீர்கள். ம்ம்ம்... நீங்கள் அனைவரும் அப்பாவுடனும் என்னுடனும் தியேட்டருக்கு வர வேண்டும் என்று விரும்புவீர்கள் என்று நான் பந்தயம் கட்டிச் சொல்கிறேன்.'

'அவர்களின் தலைகள் உயர்த்தப்பட்டு சிரித்த கண்களுடன் என்னைப் பார்த்தபோது, அது நான் என் பந்தயத்தில் வென்றுவிட்டேனென்பதை உறுதிப்படுத்தியது. வேறு எதுவும் சொல்லப்படவில்லை, ஆனால் அவர்களின் அடுத்தடுத்துச் செய்த உதவிகரமான நடத்தைகளும், நிதானமான அணுகுமுறைகளும், அவர்களின் உணர்வுகள் ஒப்புக்கொள்ளப்பட்டதற்காக அவர்கள் எனக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதைத் தெரிவித்தன.'

- **இது உங்களுக்கு ஒரு சரியான இழுபட்ட நாள்:**

**காட்சி:** அம்மாவும் மகளும் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருக்கிறார்கள்.

**டோரா:** நான் மிகவும் சோர்வாக இருக்கிறேன்.

**அம்மா:** ம்... இது உங்களுக்கு ஒரு இழுபட்ட நாள் தான்.

**டோரா:** ஓமோம், இன்று பள்ளிக்கூடம் சரீ...யா...ன சலிப்புத் தருவதாக இருந்தது.

**அம்மா:** ஓமோம்... அது கொஞ்சம் கனக்க நேரமாகத்தான் இருந்தது.

**டோரா:** ஓமம்மா, அந்த ஆசிரியர் சரியான இழுவல், இழுத்தி முழுத்துப் பாடம் நடத்துகிறார். அவளுடைய குரல் மிகுந்த சலிப்புடன் வெளிப்பட்டது. போதாதற்கு நாங்கள் அவளுக்கு அடுத்தடுத்த இரண்டு பாடவேளைகளில், கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் அடுத்தடுத்ததாக வேறு வைத்திருந்தோம்.

**அம்மா:** உண்மைதான், இந்தப் பாடங்கள் இரண்டும் ஒன்றின் பின் ஒன்றாக வரும் போது, அது எப்போதுதான் முடியுமோ என்ற அளவுக்கு அலுப்பூட்டுவதாகத்தான் இருந்திருக்கும். அந்தளவுக்கு அது நீண்டு கொண்டே இருந்திருக்கிறது.

**டோரா:** அது சரி அம்மா. அது என்னை அப்ப சோர்வடையச் செய்தது என்னவோ உண்மைதான், ஆனால் இப்போது நான் நல்லாகத்தான் இருக்கிறேன்.

- **அலாம் மணிக்கூடு (Alarm clock) காரணமாக நீங்கள் மிகவும் எரிச்சலடைகிறீர்கள்:**

'எங்கள் வீட்டில், நான்கு குழந்தைகளும் கணவரும் காலை 7:30 முதல் 8:10 மணி வரையான நேரத்தில் வீட்டை விட்டு வெளியேறுவார்கள். கடந்த வாரம், காலை 7:50 வரை அனைவரும் தூங்கியபோது ஏற்பட்ட குழப்பத்தைக் கற்பனை செய்து பாருங்கள். ஆனால் எனது புதிய வழிமுறை நிலைமையைக் காப்பாற்றியது. அதாவது, குழந்தைகளின் உணர்வுகளை அங்கீகரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருந்தது.'

'நீங்கள் 'அலாம்' வைக்க மறந்துவிட்டீர்கள் என்று மிகவும் எரிச்சலடைகிறீர்கள்!'

'உங்கள் ஆடைகளை அவசரமாக அணிய வேண்டி வந்துவிட்டது. உங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது.'

'பொறுப்புணர்வு பற்றியும், நேரந்தவறாமை பற்றியுமான எனது வழக்கமான பிரசங்கங்களை விட இந்த அறிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.'

- **உனக்கு நிறைய வேலை இருக்கு:**

'பதின்மூன்று வயது ஒலிவர், பள்ளியிலிருந்து எரிச்சலான மனநிலையுடன் வீட்டுக்கு வந்தான். அவனுக்கு நிறைய வீட்டுப்பாட வேலை இருந்தது. இதைத் தவிர, பாடசாலையில் முடிக்காத ஒரு வேலையும் மீதியாக இருந்தது. தனது ஆசிரியை தனக்குத் தொடர்ச்சியாக வேலைகளைத் தந்து கொண்டே இருப்பதால், தான் அவரை வெறுப்பதாக அவன்

கூறினான்.’

‘இதைப்பற்றி நான் அவனுக்கு ஒரு பிரசங்கமே செய்ய வேண்டும் என்று என்னுள் எழுந்த உந்துதலால் வெளிப்படவிருந்த, ‘சரி, அது உனது ஆசிரியரின் தவறே அல்ல. உண்மையில், உன்னைத் தான் குறை சொல்ல வேண்டும். நீ வகுப்பிலேயே வேலையை முடித்திருந்தால், அதை வீட்டுக்கு வந்து செய்ய வேண்டிய அவசியமே இல்லையே.’ என்ற எனது பிரசங்கத்தைத் தவிர்த்து அடக்கிக் கொண்டு, அதற்குப் பதிலாக நான் இப்படிச் சொன்னேன்: ‘உங்களுக்கு நிறைய வேலை இருக்கிறது என்பது உண்மைதான், எழுத்துப் பிழை, எண்கணிதம், சமூக ஆய்வுகள் என்று எல்லாமே ஒரே நாளில்...’

எனக்கு ஆச்சரியத்தைத் தரும் வகையில் ஒலிவர் இப்படிப் பதிலளித்தான், ‘உடனே தொடங்குவது நல்லது. எனக்கு நிறைய வேலை இருக்கிறது.’



**வெளியே போய் அந்தச் சனங்களுக்கு முன்னால் நின்று வாசிப்பது பயமாக இருக்கிறது:**

‘பதின்நான்கு வயது டயானா, ஒரு மிகத் திறமையான பியானோ கலைஞைதான், ஆனால் அவள் இசை நிகழ்ச்சிகள் என்று வரும் போது அவளால் சிறப்பாக பியானோ வாசிக்க முடிவதில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்பும் அவள் அழுகிறாள், பதட்டமாக இருப்பதாகக் குறைப்படுகிறாள். கவலைப்பட ஒன்றுமில்லை என்று நான் அவளிடம் கூறுவேன். நான் அவளை முட்டாள்த்தனமான வார்த்தைகளால் சமாதானப்படுத்த முயற்சித்தேன். ‘நீ தவறு செய்வது பார்வையாளர்களுக்குத் தெரியப்போவதில்லை, என்றோ, அல்லது நீ அருமையாகத்தான் வாசிக்கிறாய், போய் எல்லோருக்கும் அதை நிரூபி என்றோ அல்லது நீ இப்படி நடந்து கொள்வது முட்டாள்த்தனமானது என்றோ கூறி, அவளுடைய வேதனை உணர்வுகளை நான் மறுத்து வந்திருக்கிறேன்’.

‘அவள் ஒவ்வொரு முறையும் வாசித்தாள், ஆனால் ஒரு போதும் நன்றாக வாசிக்கவில்லை. மறதி, மோசமான நுட்பம் மற்றும் அழகான நுணுக்கங்களை இழந்த தருணங்கள் என்று பல வும் இருந்தன. ஒவ்வொரு இசை நிகழ்ச்சிக்குப் பிறகும், அவள் அழுது அழுது தன்னை ‘நான் ஒரு தோற்றுப் போன வள்’ என்று சொல்லுவாள். நான் அவளுடைய மோசமான வாசிப்பை மறைத்து, அவள் மிகவும் நன்றாக வாசிப்பதாய் கூறுவேன். பொய் என்று அவளுக்குத் தெரிந்த ஒன்றைப் பற்றி நான் பொய் சொன்னேன்.

‘கடந்த வாரம் அவள் பியானோ இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்குத் தயாராகியிருந்தாள். வழக்கமான புலம்பலும் தொடங்கியது. ஆனால் இந்த முறை நான் தயாராக இருந் தேன். டயானா தன்னால் நிகழ்ச்சி நடத்த முடியாது என்று என்னிடம் கூறி, அவள் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக அறிவிக்கச் சொன்னபோது, நான் அவளை உண்மையிலேயே புரிந்துகொண்டேன். நான் சொன்னேன்: ‘வெளியே சென்று அந்த மக்கள் அனைவருக்கும் முன்னால் வாசிப்பது பயமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். அவர்கள் உன்னை மதிப்பிடப் போகிறார்கள் என்று நீ உணர்கிறாய் என்று நினைக்கிறேன். அதனால் தான் நீ பெரிதாகப் பதட்டத்தை உணர்கிறாய்.’

‘டயானாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அவள் சொன்னாள், ‘நான் எப்படி உணர்கிறேன் என்பதை நீங்கள் சரியாகவே புரிந்துகொள்கிறீர்கள் அம்மா. நீங்கள் உண்மையில் இப்படிச் சொல்வீர்கள் என்று நான் ஒரு போதும் நினைக்கவேயில்லை.’

‘டயானா நன்றாகச் செய்தாள். பதட்டமாகவும் கவலையாகவும் இருந்தாலும் அவள் முன்பை விடச் சிறப்பாக வாசித்தாள். கச்சேரிக்குப் பிறகு அவள் சொன்னாள்: ‘இந்த முறை நான் கைதட்டலுக்குத் தகுதியானவளாக இருந்தேன். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ?’

‘உங்கள் இசையைக் கேட்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.’ நான் பதிலளித்தேன். அவள் கண் களில் மகிழ்ச்சியின் கண்ணீர் இருந்தது.’

**பச்சாதாபமும் நேர்மையும்:**

பரிந்துரைக்கப்படுகின்ற வழிமுறைகள் ஒன்றும் வெறும் நுட்பங்கள் மட்டுமல்ல, அவை ஒருவரது தனிப்பட்ட உள்ளார்ந்த ஆற்றல்களும் கூட என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும். அவை ஆதரவுடனும் நேர்மையாகவும் பயன்படுத்தப்படும் போது மட்டுமே ஒருவருக்கு உதவியளிப்பவையாக இருக்கும். அவை பொருத்தமான விதத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சரியான முறையிலும் பயன்படுத்தப்படும் போது மிகப் பயன்மிக்கவையாகவும் அமையும். நமது தொடர்பாடல்களுக்குப் பதின்ம வயதினர்கள் அளிக்கும் பதில்களில் பல வேறுபாடுகள் இருக்கலாம். வார்த்தைகளிலும் செயல்களிலும் அவர்கள் எதை விரும்புகிறார்கள் அல்லது எதை விரும்பவில்லை என்பதை நமக்குச் சொல்கிறார்கள். உண்மையில், ஆற்றலுள்ள பெற்றோர்களது புத்திசாலித்தனமான அணுகுமுறை என்பது, பதின்ம வயதினர்களிடம் நிலவும் மனோபாவம், ஆளுமை என்பவற்றிலுள்ள தனிப்பட்ட வேறுபாடுகளைப் புறக்கணிக்காமல் புரிந்து நடந்து கொள்வதாகத்தான் இருக்க முடியும்.

(தொடரும்...)



vickneaswaran.sk@thaiveedu.com

# பெண் கல்வியே தலைமுறையை மாற்றும்

■ தேவசகாயம் சந்தியாகு

***‘அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்’***

மகாகவி பாரதியார் கூறிய இந்த வரிகள், காலம் கடந்து நிற்கும் உண்மையை உணர்த்துகின்றன. அறியாமையாகிய பெரும் இருளில் மூழ்கி, கலையின்றி, அவலமாய் வாழ்வதை உதறித் தள்ளி, அறிவு மற்றும் கலைகளில் சிறந்து விளங்குவதே ஒரு பெண்ணின் தலையாய கடமையாகும். இதுவே, சமூக மாற்றத்திற்கான அசைக்க முடியாத முதல் அடி என்று அவர் ஆணித்தரமாகக் கூறுகிறார். பாரதியார் காலத்தில் இருந்தே பெண் கல்வி என்பது ஒரு தனிநபரின் முன்னேற்றம் மட்டுமல்ல, ஒரு தேசத்தின் எழுச்சிக்கான அடிப்படையாகவே பார்க்கப்பட்டு வருகிறது.

ஓர் ஆண் கல்வி கற்றால், அதன் பயன் பெரும்பாலும் அவனுடைய குடும்பத்துடன் நின்றுவிடும். ஆனால், ஒரு பெண் கல்வி கற்கும் போது, அதன் தாக்கம் தலைமுறைகள் தாண்டியும் எதிரொலிக்கும். அறிவொளி பெற்ற தாய், தனது குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியறிவையும், ஒழுக்கத்தையும், உலக அறிவையும் ஊட்டி வளர்க்கிறார். அவள் மூலமே ஒரு குடும்பத்தின் ஆரோக்கியம், நிதி நிர்வாகம், அடிப்படை வாழ்வியல் சிந்தனைகள் ஆகியவை செம்மையடைகின்றன. இதனால், அறிவார்ந்த குடிமக்களை உருவாக்கும் முதல் தொழிற்சாலையாகக் குடும்பம் மாறுகிறது. கல்வி கற்ற பெண், வீட்டுக்குள் பூட்டி வைக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்ட மரபைத் தகர்த்தெறிந்து, தன்னம்பிக்கை மிக்க, துணிச்சலான சந்ததியைப் பயிற்றுவிக்கும் வல்லமையைப் பெறுகிறார்.

கல்வி என்பது பெண்ணுக்கு உரிமைகளையும் கடமைகளையும் சமூகம் குறித்த விழிப்புணர்வையும் அளிக்கிறது. ‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’ என்று முழங்கிய பாரதியின் கனவு, படித்த பெண்களால் மட்டுமே நிறைவேறும். அறிவுத் திறன்மிக்க பெண்கள், சட்டம் இயற்றுவதிலும், சமூக-அரசியல் ஆளுமையிலும், நிர்வாகத்திலும் பங்கேற்கும்போது, சமூகத்தில் நிலவும் பாலின சமத்துவமின்மை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. கல்வி அவளுக்கு முடிவெடுக்கும் சாமர்த்தியத்தை அளிக்கிறது. தனது உழைப்பை வீணாக்காத உயர்ந்த நெறியைக் கற்பிக்கிறது. இதன் விளைவாக, பெண்களை இழிவு செய்யும் மடமையும், பெண்ணடிமைத்தனமும் ஒழிந்து, உண்மையான சமூக நீதி மலர்வதற்கான வாய்ப்பு உருவாகிறது.

கல்வி என்பது பெண்ணுக்கு உரிமைகளையும், கடமைகளையும், சமூகம் குறித்த விழிப்புணர்வையும் அளிக்கிறது. ‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’ என்று முழங்கிய பாரதியின் கனவு, படித்த பெண்களால் மட்டுமே நிறைவேறும்.

சமூகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமான ஆயுதம் பெண் கல்வி ஆகும். ஒரு காலத்தில் வீட்டினை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதும் பெண்களிடம் மட்டுமே இருந்தது. ஆனால், இன்று அந்தப் பொறுப்பு குடும்ப உறுப்பினர்கள் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக, பெண்கள் இன்று குடும்பத்தின் முக்கிய முடிவுகளில் பங்குகொள்வதுடன், தங்களின் ஜனநாயகப் பொறுப்பை உணர்ந்து, பொது மற்றும் அரசியல் வாழ்விலும் தீவிரமாகப் பங்கேற்கின்றனர்.

பெண்களின் கல்விக்கான முக்கியத்துவம் இன்று உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் பிள்ளைகள் ஆரோக்கியத்துடனும், நோய்த் தாக்கங்கள் இன்றியும், மிகச் சிறந்த கல்வியறிவுடனும் வளர அதிக வாய்ப்புள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சமூக நேர்மறை மாற்றங்களுக்காகவே, சட்ட ரீதியாக இளம் வயதுத் திருமணங்கள் தடை செய்யப்பட்டு, திருமண வயது குறித்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இன்றைய சூழலில், பெண்கள் தனியாகப் படிப்பதற்கான கல்லூரிகள் மற்றும் பாடசாலைகள் மூலம் கல்வி வாய்ப்புகள் பெருகியுள்ளன. இதனால், பெண்கள் அதிக தூரம் பயணம் செய்து படிக்க வேண்டிய சிரமங்களும் தடைகளும் வெகுவாகக் குறைந்துள்ளன.

ஆண், பெண் என்ற பேதமின்றி பெற்றோர் கல்வியை வழங்க முன்வந்தாலும், சில கிராமப் பகுதிகளில் இன்றும் நிலவும் மூடநம்பிக்கைகள், அச்ச உணர்வு, வறுமை போன்ற காரணிகள் பெண் கல்விக்கான முக்கியத் தடைகளாக உள்ளன.



tg.theeban@gmail.com

பெண்களுக்கு திருமணத்தின்போது வரதட்சனை கொடுக்கும் நடைமுறை இருப்பதால் கல்விக்காக அவர்களுக்குச் செலவு செய்வதனை ஏற்கத் தயங்கும் பெற்றோர்களும் உண்டு. இதனை ஒரு மூல காரணமாகக் கொண்டு பெண் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. மேலும், சில சமூகப் பின்னணிகளில் பெண்களுக்கு முழுமையான சுதந்திரம் மறுக்கப்படுவதையும், 'கற்பு' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பல உரிமைகள் நசுக்கப்படுவதையும் காணமுடிகிறது. அதேபோன்று, சமயத்தின் பெயரால் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகளைச் சமூகம் விதித்துள்ளது. திருமணம், குடும்ப வாழ்க்கை, குழந்தைப் பேறு போன்ற தனிப்பட்ட காரணிகளும் பெண்களின் கல்வித் தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புகளைச் சீர்குலைக்கும் காரணிகளாக அமைகின்றன. எனவே, மேற்கூறிய சமூக மற்றும் தனிப்பட்ட தடைகள் பெண்களின் தொழில்சார் மேம்பாடுகளைப் பல வேளைகளில் பாதிக்கின்றன. பெண்கள் சமூகத்தில் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு எதிராகச் சில அம்சங்கள் தொடர்ந்து தடையாக இருப்பதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

- பெண்கள் தமக்கென்று உரிமைகள் உள்ளன என்ற விடயத்தைக்கூட அறியாமல் உள்ளனர்.
- எந்த சட்டத்தில் என்னென்ன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறித்த விழிப்புணர்வை பற்றிய அறிவைப் பெறாமல் இருத்தல்.
- யாப்பு ரீதியாக சட்டங்களைப் பற்றியும் உரிமைகளைப் பற்றியும் அறிந்திருந்தும் அந்த உரிமை பறிக்கப்படும் போது நீதி கேட்டு போராடுவதற்கு முன்வராதிருத்தல்.

“ ***திருமணம், குடும்ப வாழ்க்கை, குழந்தைப் பேறு போன்ற தனிப்பட்ட காரணிகளும் பெண்களின் கல்வித் தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புகளைச் சீர்குலைக்கும் காரணிகளாக அமைகின்றன.*** ”

இன்றைய சமூக அமைப்பிலும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும் சில நிலைகள் தொடர்வதைக் காணமுடிகிறது. குறிப்பாக, திருமணம் என்பது பெண்களின் கல்வி மற்றும் தொழில்சார் நிலைகளை முற்றிலுமாக மாற்றியமைக்கும் அல்லது முடிவுக்குக் கொண்டுவரும் சந்தர்ப்பங்களும் இன்னும் நிலவுகின்றன. இருப்பினும், தற்காலப் பரஸ்பரப் புரிதலுடன் இயங்கும் குடும்ப அமைப்புகளில், திருமணத்திற்குப் பின்னரும் பெண்கள் தமது கல்வியிலும் தொழிலிலும் தொடர்ந்து உயர்ந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது. இச்சூழலில், குழந்தைப்பேறு மற்றும் அதன் பராமரிப்புச் சுமை, சில சமயங்களில் அவர்களது கல்வி மேம்பாட்டிற்கோ அல்லது தொழில் முன்னேற்றத்திற்கோ ஒரு தடையாக அமைந்துவிடுகிறது. உயர் ஊதியம் மற்றும் உயர் அதிகாரம் கொண்ட பதவிகளில் பெண்கள் ஈடுபடுவதற்கு, குடும்பப் பொறுப்புகள் ஒரு கூடுதல் சுமையாக மாறுவதைக் கண்கூடாகக் காணலாம். மேலும், மகப்பேற்றுக் காலங்களில் எடுக்க வேண்டிய தொடர்ச்சியான விடுமுறைகள் காரணமாக, பெண்களுக்கான பதவி உயர்வுகளும், உயரிய பதவி வாய்ப்புகளும் சில சமயங்களில் தடைபடுகின்றன அல்லது காலதாமதமடைகின்றன. இன்று, கல்வி கற்ற சமூகங்களில், பெண்கள் தமது கல்வி, மனித வளம் மற்றும் அதன் மூலம் சமூகப் பொருளாதாரத்தில் ஏற்படும் வளர்ச்சி குறித்த ஆழமான விழிப்புணர்வை அடைந்துள்ளனர். நாட்டின் துரித வளர்ச்சிக்கு, பெண் மனித வளத்தின் முழுமையான பயன்பாடு இன்றியமையாதது. ஆகவே, சமூகத்தில் பெண்களும் எவ்விதமான தொழில்களையும், எவ்வித தயக்கமோ அல்லது கூச்சமோ இன்றி ஏற்றுக்கொண்டு, அவற்றில் சிறந்து விளங்குவதற்கான திறன்களை விருத்தி செய்துகொள்ள வேண்டும். அனைத்துத் துறைகளிலும் எவ்விதத் தடையும் இன்றி நுழைந்து, அத்தொழிலைப் பெறும் மன உறுதியை கல்வி அவர்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன், பெண்களின் இந்த முழுமையான பங்களிப்பை, சமூகம் எந்தவிதப் பாகுபாடும் இன்றி ஏற்கும் பரந்த மனப்பக்குவத்தை அடைவதும் காலத்தின் கட்டாயமாகும்.

இன்று, இலங்கையில் நகர்ப்புறக் கிராமப்புற பெண்களைப் பொறுத்தவரை அவர்களைப் பொருளாதார வளர்ச்சியில் ஈடுபடுத்துவதற்காகப் பலவகையான செயல்முறைகள், பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இங்கு சிறிய அளவிலான தொழில்நுட்ப முறைகளை அறிவதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. சுயதொழில் வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இலங்கையில் பெண்கள் ஆற்றுகின்ற சேவைகள் இன்றும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில், இன்று அனைத்துத் துறைகளிலும் கல்வி கற்றுச் சாதனைகள் படைத்தவர்களாகப் பெண்கள் மிளிர்கின்றனர். பாதுகாப்புத் துறை, அரசியல் துறை ஆகியவற்றின் உயர் அதிகார பதவிகளைக்கூட நிர்வகிக்கும் பெண்கள் நமது நாட்டில் பெருமையுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், தொழில் செய்ய இயலாத அல்லது தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத பெண்கள், ஆண்களைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலை தொடர்கிறது. இதன் விளைவாக, அத்தகைய சூழல்களில் பெண்களின் பல்வேறு திறமைகளும் வெளி உலகிற்குத் தெரியாதபடி, 'இலை மறை காய்' போல மறைக்கப்படும் வருந்தத்தக்க நிலைகளும் காணப்படுகின்றன. நகர்ப்புறக் கிராமப்புற வேறுபாடுகள் கல்வி நிலைகளிலும் குறிப்பாக பெண்கல்வி நிலையிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. கிராமப்புறங்களைப் பொறுத்தமட்டில் பெண் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தப்படாத நிலையும் உண்டு. பெண் கல்வி தொடர்பான விழிப்புணர்வினால் பெண்கல்வி பற்றி பெற்றோர் அறிந்திருந்த போதிலும் ஆண் பிள்ளைகளின் கல்வியில் கொண்டுள்ள அதேயளவு அக்கறை பெண் பிள்ளைகளின் கல்வியில் இருக்கவில்லையென்றே கூறலாம். பெண் பிள்ளைகள் தொடர்பாக தேவையற்ற பயம், மூடநம்பிக்கைகள், பாடசாலைகள் வீட்டிலிருந்து தூரத்தில் இருத்தல் போன்ற நிலைகள் பெண்களின் கல்வியைக் குறைக்கின்ற சந்தர்ப்பங்களாக நோக்க முடிகின்றது. பெண் பிள்ளைகள் பருவமடையும் நிலையில் (அல்லது வயதுக்கு வரும் நிலையில்), அவர்களின் கல்வி மறுக்கப்படுவது அல்லது தடைப்படுவது இன்றும் சில இடங்களில் காணப்படுகிறது. இதற்குப்

பிரதான காரணம், பெற்றோரின் அறியாமையும், அப்பருவம் குறித்த தேவையற்ற அச்ச உணர்வு மாகும். இந்த நிலை மாற்றம் பெற்றோரின் மனதில் ஒருவிதமான பாதுகாப்பு குறித்த பயத்தையும் பதட்டத்தையும் விதைத்துவிடுகிறது. இதன் விளைவாக, அச்சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அஞ்சி, பெற்றோர் பெண் பிள்ளைகளின் கல்வியைத் தொடர அனுமதிப்பதில்லை.

மேலும், பெண்களின் கல்வியைச் சீர்குலைக்கும் இன்னும் ஒரு காரணியாக வறுமையைக் குறிப்பிடலாம். கடந்தகாலப் போர் நிலைமைகள் நாட்டில் மிக மோசமான வறுமையை தோற்றுவித்துள்ளன. பல மக்கள் தத்தம் தொழிலை இழந்த நிலையில் தம் பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. கல்விக்கு வறுமை ஒரு தடைக்கல்லாக அமைந்து விடுகின்றது. இதனால், தமது பிள்ளைகளையும் கூலித்தொழிலுக்கு அனுப்பி அதன் மூலம் ஒரு சிறு வருமானத்தை பெற்றுத் தம் வாழ்க்கையை நடத்துகின்றார்கள். பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்வதனால் தம்முடைய இளைய சகோதரர்களைப் பராமரிக்கும் பொறுப்பு குடும்பத்தில் உள்ள மூத்த பிள்ளைகளைச் சார்ந்து விடுகின்றது. அந்நிலையில் மூத்த பிள்ளை பெண் பிள்ளையானால் அதற்கான சந்தர்ப்பம் அதிகமாகின்றது.



போரினால் அடிக்கடி ஏற்பட்ட இடம் பெயர்வுகள் பெண்களின் கல்வியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒரு பாடசாலையில் இருந்து இன்னொரு பாடசாலைக்கு மாறும்போது பெற்றோர்களின் அலட்சியப் போக்கினால் பெண்கள் கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படுகின்றது. இந்நிலையில், ஆண்களின் கல்வியைப் பொறுப்புணர்ச்சியோடு கவனிக்கின்ற பெற்றோர் பெண்களின் கல்வி நிலையில் அதிக கவனத்தைச் செலுத்துவதும் குறைவாக உள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு தடைகளையும் கடந்து, நகர்ப்புறச் சமூகங்கள் மத்தியில் பெண்கள் கல்வி உலகிற்குள் துணிச்சலுடன் நுழைந்து கற்கும் நிலை பரவலாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே, அவர்கள் இன்று உயர் படிப்புகளிலும், உயரிய தொழில்களிலும், பல்வேறு ஆராய்ச்சித் துறைகளிலும் முனைப்புடன் ஈடுபட்டுச் சிறந்து விளங்குகின்றனர்.


**நகர்ப்புறச் சமூகங்கள் மத்தியில் பெண்கள் கல்வி உலகிற்குள் துணிச்சலுடன் நுழைந்து கற்கும் நிலை பரவலாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே, அவர்கள் இன்று உயர் படிப்புகளிலும், உயரிய தொழில்களிலும், பல்வேறு ஆராய்ச்சித் துறைகளிலும் முனைப்புடன் ஈடுபட்டுச் சிறந்து விளங்குகின்றனர்.**


மேலும், நடைமுறையில், திருமணம் ஆன பெண்களும், குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களும்கூட, எவ்விதத் தடையுமின்றி தமது கல்வியைத் தொடர்ந்து கற்றுக்கொண்டு, தம்மை மேம்படுத்தி வரும் ஆரோக்கியமானதொரு நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது. குடும்பத்தின் கல்வி அறிவு விகிதம் இதனால் அதிகமாகும். குடும்ப வாழ்வில் பொருளாதாரம் முன்னேற்றமும் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையில் இதனால் பரஸ்பர புரிந்துணர்வும் ஏற்படும். இத்தகைய கல்வி குடும்ப மேம்பாட்டிற்கு உறுதுணையாக அமைந்து விடுகிறது. இந் நிலையில் இலங்கையில் பெண்களின் கல்விநிலை தொடர்பான சமூக விழிப்புணர்வு, பல விளைவுகளைச் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம்.

சமூக முன்னேற்றத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கலாசார வளமனைத்திற்கும் பெண் கல்வி மிகுந்த பங்காற்றுகிறது. கல்வியறிவு பெற்ற பெண்கள் தமது குடும்பத்துக்கு மட்டுமல்லாமல், முழு சமூகத்தையும் மேம்படுத்தும் திறனைப் பெற்றவர்களாகின்றனர். பெண் கல்வியானது சுகாதாரம், வேலைவாய்ப்பு, குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு வலுவான அடிப்படையாக அமைகிறது. இலங்கையில் பெண் கல்வியை ஊக்குவிப்பதும், சம வாய்ப்புகளை வழங்குவதும் நாடு முழுவதும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான முக்கிய வழியாகும். கல்வியால் வலுப்பெற்ற பெண்கள் தன்னம்பிக்கை, தலைமைத்துவம், சமூக மாற்றம் ஆகியவற்றை உருவாக்கி, எதிர்கால தலைமுறைக்கு வழிகாட்டிகளாக மாறுகிறார்கள்.

எனவே, பெண் கல்வியை மேம்படுத்துவது, இலங்கையின் ஒளிமயமான எதிர்காலத்தைக் கட்டியமைக்கும் முக்கிய முதலீடாகக் கருதப்பட வேண்டும் என்பதே நிதர்சனமான உண்மை.



devasagayam.santhiyagu@thaiveedu.com

# மின்சாரப் பாவனையும் அதிக சேமிப்புக்கான தெரிவுகளும்




**அடுக்குத் திட்டத்திட்டத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு பாவிக்கப்படும் காலத்தைத் தவிர்த்து ஒரு நாளில் எந்த நேரம் பாவித்தாலும் ஒரு நிலையான விலையில் மட்டும் கட்டணம் அறவிடப்படும்.**

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மின்சாரப் பாவனைக் காக (Smart Meter) ஸ்மாட் மீற்றர் அறிமுகப்படுத்தப்பட்டி ருப்பதும் அதன் அடிப்படையில் ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் மாதாந்த மின்சாரக் கட்டணம் அறவிடப்படுவதும் சகலரும் அறிந்ததே. பூகோள ரீதியாக ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் மின்சாரக் கட்டணச் செல வும் கணிசமான இடத்தைப் பிடித்துள்ளது. சற்று ஆழமாக உற்று நோக்கினால் கடந்த 10 வருடத்தில் மின்சாரச் செலவு சராசரியாக இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்திருப்பதை அவதானிக்க முடியும். எனவே இத்தகைய செலவினைக் கட்டுப்படுத்த எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஒன்ராறியோ மின்சார சபை (OEB) எதிர்வரும் ஆண்டிற்குரிய புதிய மின்சாரக் கட்டணத்தை நிர்ணயம் செய்கின்றது. அந்த வகையில் 2023 நவம்பரில் ஏற்கனவே இருந்த இரண்டு விலைத் திட்டங்களுடன் (Price Plan) புதிதாக மூன்றாவது விலைத் திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளது. அத்திட்டங்களைப் பின்வருமாறு வகைப்படுத்த லாம்.

- TOU (Time - Of - Use)
- Tiered
- ULO (Ultra - Low Overnight) (New)

நீங்கள் ஒரு குடியிருப்பாளராகவோ சிறுதொழில் (Small Business) செய்பவராகவோ இருந்தால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும். ஆனால் நீங்கள் ஏற்கனவே ஒரு சில்லறை விற்பனையாளரு டன் மின்சார விநியோகத்திற்காக ஒப்பந்தம் செய்திருந்தால் இத்தகைய தெரிவுகளைச் செய்ய முடியாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### TOU – Price Plan:

பாவனைக் காலத்திற்கான விலைத் திட்டம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் உள்ளது. நீங்களாக ஒரு தெரிவையும் செய்யாதிருந்தால் இயல்பு நிலையில் (Default) இத்திட்டமே அமுலில் இருக்கும். இத்திட்டம் கோடை காலம், மாரிகாலம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு பருவகால அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2025 நவம்பரில் வெளியிடப்பட்டுள்ள நடப்பு ஆண்டிற்கான விலைப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

நவம்பர் 1-ஆந் திகதி முதல் மாரி காலத்திற்கான பாவனை நேர அட்டவணை மாற்றம் பெறுகின்றது என்பதைக் கவனத் திற் கொள்ளவும்.




சுருங்கக் கூறுவதானால் மாலை 7 மணி முதல் காலை 7 மணி வரையும் உள்ள உச்சமற்ற காலப்பகுதியிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களுக்கான காலப்பகுதியிலும் பாவிக் கப்படும் மின்சாரத்திற்கான கட்டணமே மிகக் குறைவான கட்டணமாக அலகிற்கு 9.8 சதமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

பொதுவாகக் கூறுவதானால் மின்சாரத்தோடு தொடர்புடைய அதாவது அதிகளவு மின்சாரத்தை நுகரக் கூடிய Baking, Dish Washing, Cloth Drying போன்ற செயற்பாடுகளை இக்காலப் பகுதியில் மேற்கொள்வதன் மூலம் மின்சாரச் செலவைக் கணிசமான அளவு குறைத்துக் கொள்ளலாம். குறிப்பாக மின்சாரத்தில் இயங்கும் கார்களை வைத்திருப்பவர்கள் தமது வாகனங்களைச் சார்ஜ் செய்வதற்கு இக்காலப்பகுதியைப் பாவிப்பதே சாலச் சிறந்தது. உச்சமற்ற (OFF Peak) காலப் பகுதியைக் கவனத்திற் கொள்ளாது உச்சமான (ON Peak) காலப்பகுதியில் இச்செயற்பாடுகளை மேற்கொண்டால் உங் கள் மாதாந்தக் கட்டணம் 49% அதிகமாகக் காணப்படும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

உங்களது மின்சாரப் பாவனைக்கான கணக்கை online ஆகவோ Monthly Bill-லினையோ உற்று நோக்கினால் கடந்த 30 நாட்களுக்கான பாவனை விபரம் நாளாந்த பாவனைக் கால அடிப்படையில் விளக்கப்படத்துடன் இணைக்கப்பட்டிருப்ப தைக் காணலாம். இதனைச் சற்று உற்று நோக்கினால் ஒரு நாளில் எந்த நேரத்தில் எவ்வளவு அலகுகளைப் பாவித்தி -ருக்கிறோம் என்பதை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

இதனைப் பார்த்து அதற்கேற்ப உங்கள் செயற்பாடுகளை திட்டமிட்டு அமுல்படுத்துவதன் மூலம் அதிக நன்மை அடையலாம்.




## Tiered Price Plan அடுக்குத் திட்டம்:

அடுக்குத் திட்டத்திட்டத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு பாவிக்கப்படும் காலத்தைத் தவிர்த்து ஒரு நாளில் எந்த நேரம் பாவித்தாலும் ஒரு நிலையான விலையில் மட்டும் கட்டணம் அறவிடப்படும். இந்த விலை உச்சமற்ற காலத்திற்கு அற விடப்படும் விலையைவிட சற்று அதிகமாக இருக்கும். அத்து டன் ஒரு மாதத்திற்கு என வகுக்கப்பட்டிருக்கும் எல்லையைக் கடந்து பாவிக்கும் பட்சத்தில் அத்தகைய மேலதிக அலகிற்கு சற்று அதிக விலை செலுத்த வேண்டியிருக்கும். இந்த எல்லை Tier ஒன்றை தெரிவு செய்யும் குடியிருப் பாளருக்கு கோடை காலத்தில் 600 KWH ஆகவும் மாரிகாலத்தில் 1000 KWH ஆகவும் இருக்கும். சிறுதொழில் செய்பவர்களுக்கு பருவ காலக் கட்டுப்பாடின்றி ஆண்டு முழு வதும் 750 KWH ஆக இருக்கும்




தாங்கள் நினைத்த நேரங்களில் நினைத்தவற்றைச் செய்ய வேண்டும் என எண்ணுபவர்களுக்கும், வேலைப்பழு காரண மாகவோ செலவு பற்றி அலட்டிக்கொள்ளாமலோ இருப்பவர் களுக்கும் இத்திட்டம் பொருத்தமானது. உங்கள் மாதாந்த மின்சார Bill-களை பார்த்து எந்தத் திட்டம் பொருத்தமானது என முடிவுகளை மேற்கொள்வது புத்திசாலித்தனமானது என்பது எனது கருத்து.



velasubramaniam@thaiveedu.com

***தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.***
***விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***info@thaiveedu.com***



# சேமிப்பதா அல்லது முதலீடு செய்வதா?

**- செந்தூரன் புனிதவேல்**

தலைமுறை தலைமுறையாக, கையில் உள்ள பணத்தைச் சேமித்து வைப்பதே சிறந்தது என்ற கருத்து இருந்து வருகிறது. ஆனால், இன்றை உலகில் பணவீக்கம் பணத்தின் பெறுதியை குறைத்துக்கொண்டு செல்கிறது. இந்த நிலையில் சேமிப்பின் சிறப்பு என்ன என்றால், எப்போது வேண்டுமானாலும் சேமிப்பை மீளப் பெறமுடியும் என்பதோடு, அது பாதுகாப்பாகவும் இருக்கும் என்பதாகும். ஆனாலும், பணத்தினை நெடிய காலத்திற்கு சேமிப்பில் வைத்திருந்தால் அந்த பணத்தின் பெறுமதி குறைந்து கொண்டே செல்லும் என்பதே யதார்த்தமாகும்.

பொதுவாகச் சேமிப்பையும் முதலீட்டையும் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். சேமிப்பு என்பது வங்கியில் அவசர தேவைக்காகச் சேமிப்பில் வைப்பதாகும். இது குறைந்த இழக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பதோடு, குறைந்த பயனை அல்லது வெகுமதியை தரும். அதேவேளை, முதலீடு செய்வது என்பது சொத்துகளில் முதலீடு செய்வது. பங்குச்சந்தை, பத்திரங்களில் முதலீடு செய்வது, கட்டடங்களில் முதலீடு செய்வது கூடிய வளர்ச்சியைத் தரும்.

உலகப் பெரும் பணக்காரரான வரன் பவட் அறிவுறுத்துகிறார் ‘செலவளித்து மிஞ்சியதைச் சேமிக்க வேண்டாம், சேமித்து மிஞ்சியதை செலவு செய்யுங்கள்’ என்று. அவருடை அறிவுரை, செல்வம் வளர்வதற்கு நல்ல ஒழுக்க முறை வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. கையிருப்பில் உள்ள பணம் வளர்வதற்கு, அதனைச் சிறப்பாக முதலீடு செய்ய வேண்டும்.

### பண வீக்கம்: அமைதியான செல்வக் கொலையாளி:

சேமிப்பில் பணம் வைப்பதில் உள்ள பெரும் ஆபத்து பணவீக்கம் ஆகும். பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் வேளையில் கையில் இருக்கும் பணம் வாங்கக் கூடிய பொருட்களின் அளவு குறைந்து கொண்டுபோகும். குறைந்த வட்டியில் சேமிப்பில் வைப்பதினால் உண்மையில் உங்களிடம் உள்ள பணத்தின் பயன் குறைந்துகொண்டு போகும்.

### கூட்டுவட்டி:

கூட்டு வட்டி உலகின் எட்டாவது அதிசயம் எனச் சொல்லலாம். முதலீடு செய்வதால் கூட்டு வட்டியின் பயனை அனுபவிக்கலாம். உதாரணத்திற்கு: முதலீட்டில், பொதுவாக நெடிய கால



வளர்ச்சி வருடத்திற்கு ஏழு விகிதமாகும். எனவே $10,000 முதலீடு செய்தால் முப்பது வருடங்களில் அது $76,000 ஆக வளர்ச்சி அடைந்திருக்கும்.

அதேவேளை, ஒரு விகித வட்டியில் அந்த பணத்தை முதலீடு செய்திருந்தால் முப்பது வருடங்களில் $13,500 ஆக வளர்ந் திருக்கும்.

பண வீக்கத்தைப் பற்றி குறிப்பிடுகையில், சென்ற வருடம் நான் இலங்கைக்கு சென்றிருந்த வேளை ஒரு பால் தேநீரின் விலை ரூபா 100, அதே வேளை எனது தந்தையார் சொன்னார் 1981-இல் ஒரு பால் தேநீரின் விலை பத்து சதம் என்று. சேமிப்பில் அவர் பணம் வைத்திருந்தால் அதன் பெறுமதி எப்படி இருக்கும் என்று நீங்களே கணித்துக் கொள்ளுங்கள்.

## செல்வத்தை பெருக்கி இலக்குகளை அடைதல்:

முதலீடு செய்வது என்பது இலக்குகளை அடைவதற்கே. இலக்குகள் என்பது ஒரு வீடு வாங்குவது அல்லது பிள்ளை களின் படிப்பிற்காக இருக்கலாம், ஓய்வுக்காலத்தில் மகிழ்ச்சி யாக வாழ்வதற்காகவும் இருக்கலாம். முதலீடு செய்வது மேலதிக தேவைகளைப் பூர்த்தி செய்தவற்குப் பெரிதும் உதவும்.

முதலீடு செய்வதற்கு நீங்கள் பெரும் முதலீட்டு மேதையாக இருக்க வேண்டியதில்லை. இரண்டு வல்லமைகள் இருந்தால் போதுமானது. முதலாவது, முதல் வேண்டும். இரண்டாவது, எடுத்தற்கெல்லாம் அஞ்சாத ஒழுக்க நெறி வேண்டும். இவை இரண்டும் இலக்கை அடைவதற்கு வழிவகுக்கும்.

சேமிப்பு அவசர தேவைகளையும் குறுகிய கால தேவைகளையும் நாம் முகம் கொடுக்கும் வேளையில் பயன்ப டும். அதேவேளை, முதலீடு நீண்ட எதிர்கால தேவையை ஈடுசெய்யும்.

## முதலீட்டை பராமரிப்பது:

நிதி முதலீடு செய்கையில் தடங்கல் வருவது இயல்பே. உதாரணமாக: சந்தையில் வீழ்ச்சி அல்லது நிலையற்ற தன்மை போன்ற தடங்கல் ஏற்படுகையில் அச்சம் உங்களை ஆக்கிரமிக்கும் என்பதுடன், முதலீடு செய்வதைத் தவிர்க்க உந்தும். ஆனால், வெற்றிக்கு அடிப்படை முதலீட்டை நிறத்து வது அல்ல, நிலைமையை வெற்றியாகக் கையாள்வது. முத லீட்டை பல்வகைப்படுத்தி பல முதலீடுகளில் ஈடுபடுவதுதான் வெற்றிக்கு அச்சாணியாகும். அச்சம் ஒருபோது வெற்றி தராது.

முயலும் வெல்லலாம் ஆமையும் வெல்லலாம், ஆனால் முயலாமை வெல்லாது என்பதை மறக்க வேண்டாம்.

பொறுமையும் மீள் தன்மையுந்தான் உங்களுக்கு வெற்றி தரும். ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை, முதலீடுகள் சரா சரியாக வளர்ச்சியடைந்து வருகின்றன. எனவே பரவலாக முத லீடு செய்வது அவசியம்.

## சேமிப்பும் முதலீடும் ஒரு சமச்சீர் பார்வை:

முதலாவதாக நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விடயம், சேமிப்பும் முதலீடும் பகைவர்கள் அல்ல. அவை ஒன்றை ஒன்று பூரணப்படுத்தி நிறைவு செய்கின்றன. ஒரு சிறப்பான நிதித்திட்டம் இரண்டையுமே பாவிக்கும். அவசர தேவைக்காக ஆறுமாத செலவுத் தொகை சேமிப்பில் சேர்த்து வைப்பது மிக அவசியம். அது எளிதாக மீள் பெறக்கூடிய பணமாக இருக்க வேண்டும். அத்துடன் பத்திரமாக இருக்க வேண்டும். அதற்கு மேலாக உள்ள பணத்தை கூட்டுவதற்காக முதலீடு செய்ய வேண்டும். உங்கள் பணத்தை நீங்கள் கட்டுப்படுத்தா விட்டால் அந்தப் பணம் உங்களைக் கட்டுப்படுத்தும். வளர்ச் சிக்காக முதலீடும் அவசர தேவைக்காக சேமிப்பும் தவிர்க்க முடியாத விடயமாகும்.

## முதலீடு செய்யாவிட்டால் வரும் இழப்பு:

உங்களால் உழைத்து மட்டும் பணக்காரராவது மிக மிகக் கடினம். உழைத்த பணத்தை முதலீடு செய்து, அந்த முதலீட் டுடன் இணைந்து நாமும் உழைத்தால் தான் பெரும் செல்வந் தராக முடியும்.

## முடிவுரை:

சேமிப்பு ஆபத்து இல்லாதது, அவசர தேவைகளுக்கு பயன்படுவது. ஆனால் செல்வம் பெருக்க அது வழியில்லை. முதலீடு செய்து கூட்டுவட்டியால் பணம் பெருக்குவதுதான் செல்வந்தராவதற்கு சிறந்த வழியாகும். பணவீக்கம் முதலீடு செய்வதை அத்தியாவசியமாக்குகின்றது. அவசர சேவை களையும் நீண்ட காலத் தேவைகளையும் புரிந்துணர்வது சுபீட்சமான எதிர்காலத்துக்கு வழிவகுக்கும்.

இறுதியாக: பதுக்கிவைத்த பணம் பயனற்றுப் போகும். காலத்தே பயிர் செய்தால்த்தான் சிறந்த அறுவடை செய்து மகிழ்ச்சியாக வாழலாம்.



senthuran.p@thaiveedu.com



# எங்கள் வானத்தில் இரண்டு வால்வெள்ளிகள்

– குரு அரவிந்தன்

நாங்கள் இயற்கையை இரசிப்பவர்களாக இருந்தால், எங்களால் வானத்தையும் பார்த்து இரசிக்க முடியும். பலர் இயற்கையை இரசிப்பதற்காக பல நாடுகளுக்கும் செல்கிறார்கள். அப்படிச் செல்பவர்களால் கடல், ஆறு, மலை, குன்று, மரம், செடி, விலங்கு, பறவை, மக்கள் என்று பலவற்றையும் இரசிக்க முடிகின்றது. அதேபோல வானியலில் ஆர்வமுள்ளவர்களால் வானத்தையும் பார்த்து இரசிக்க முடியும். முன்பெல்லாம் கண்ணில் தெரிந்ததுதான் வானம் என்று நினைத்தோம், ஆனால் தொழில்நுட்ப வசதிகள் காரணமாக இப்பொழுது வானத்தில் பல விடயங்களை அவதானிக்க முடிகின்றது. விண்கலம், தொலைநோக்கி போன்ற வசதிகள் மட்டுமல்ல, எங்கள் செல்போன்கள் மூலமாகவும் வானத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றிப் பல தகவல்களைச் சாதாரண மனிதராலும் பெறமுடிகின்றது.

அதிசயமாக எங்கள் வானத்தில் சென்ற ஒக்ரோபர் மாதம் இரண்டு வால்வெள்ளிகள் தோன்றிப் பிரமிக்கவைத்தன. விண்வெளிசார்ந்த அறிவியலில் ஆர்வம் இல்லாதவர்களுக்கு அப்படி ஒரு சம்பவம் நடந்தது பற்றித் தெரிந்திருக்காது. ஆர்வமுள்ளவர்கள் எங்கோ தொலைவில் நகர்ந்துகொண்டிருக்கும் புதியதொரு உலகத்தைத் தேடித்தேடிப் பார்த்தார்கள். நவீன தொழில்நுட்ப வசதி காரணமாக விண்வெளி பற்றிய அறிவு எம்மிடையே பெருகிக்கொண்டே செல்கின்றது. விண்வெளியில் பல அதிசயங்கள் கடந்த 2025-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் நடந்தன. அண்மையில் இரவு வானத்தில் ஸ்வான் C-2025 R2 (SWAN) வால்வெள்ளியையும் C- 2025 A6 (Lemmon) வால்வெள்ளியையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. இவை எங்கிருந்து வருகின்றன, எப்படிக் காட்சி தருகின்றன என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

கனடாவில் இன்னும் கொஞ்ச நாட்களில் மழையும் தொடர்ந்து பனியும் கொட்டப் போவதால், வானத்தில் சந்திரனை, சூரியனை, நட்சத்திரங்களை அடிக்கடி காணமுடியாமல் போகலாம், இதனால் வெயிலுக்காக ஏங்கவேண்டிய நிலையும் வரலாம். ஓரளவு வசதி படைத்தவர்கள் விடுமுறைக்காலம் என்று சொல்லி வெப்ப நாடுகளுக்குப் பயணமாகிவிடுவார்கள். ஊசி இலை மரங்களைத் தவிர ஏனைய மரங்களின் இலைகள் எல்லாம் மஞ்சள், ஒரேஞ்சு, சிகப்பு என்று நிறம் மாறி இலைகளை உதிர்த்துவிடும். இனிவரப்போகும் நான்கு மாதங்கள் வானம் இருண்டுகுளிரும், பனியும் பனி சூழ்ந்த நிலமாகக் கனடாமாறிவிடும். அதனால்தான் இலக்கியத்தில் இதற்கு 'ஆறாம் நிலத்திணை' என்ற பெயரும் சூட்டப்பட்டது.

சில மாதங்களுக்கு இவற்றை எல்லாம் வானத்தில் பார்க்க முடியாது என்பதால்தான், செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் வானத்தில் என்ன நடக்கிறது என்பதை அவதானிக்கத் தொடங்கினேன். கனடாவில் எங்களுக்கு வானத்தில் என்ன நடக்கிறது என்பதை இப்படிச் சிலமாதங்களுக்குப் பார்க்க முடியாவிட்டாலும், விண்வெளி மாயாஜாலங்கள் தானாகத் தொடர்ந்தும் நடந்துகொண்டேதான் இருக்கும். எங்களுக்கு மிக அருகே உள்ள சந்திரனின் ஒவ்வொரு நிகழ்விற்கும் எம்மவர்கள் ஒரு பெயர் வைத்திருக்கிறார்கள். ஒக்ரோபர் மாதம் வானத்தில் தெரிந்த பூரணசந்திரனை 'வேட்டைக்காரர் நிலவு' அல்லது 'அறுவடைநிலவு' (Hunter's Moon or Harvest Moon) என்று அழைக்கிறார்கள். நவம்பர் 5-ஆம் திகதி வரும் சந்திரனை பீவர் நிலவு (Beaver Moon) என்றும், டிசெம்பர் 4-ஆம் திகதி தெரியும் சந்தினை குளிர் நிலவு (Cold Moon)

என்றும், ஜனவரி 3-ஆம் திகதி 2026-ஆம் ஆண்டு தெரியப் போகும் சந்திரனை ஓநாய் நிலவு (Wolf Moon) என்றும் ஒவ்வொரு பெயரில் இனம் காண்கிறார்கள். சிலர் இத்தகைய நிகழ்வை ஆங்கிலத்தில் 'சுப்பர்மூன்' (Supermoon) என்று சொல்கிறார்கள். இந்த நாட்களில் சந்திரன் பூமிக்கு மிக அருகே வருவதால் சற்றுப் பெரிதாகவும், பிரகாசமாகவும் தெரியும். தமிழர்கள் வானசாத்திரத்தில் சிறந்து விளங்கியதால் இதையே நம்மவர்கள் பௌர்ணமி என்றும் முழுநிலா என்றும் அழைத்தார்கள். இதற்கு எதிர்ச் சொல்லாக அமாவாசை என்ற பதத்தைப் பாவிக்கிறார்கள். அந்த நாட்களில் தொழில்நுட்ப வசதிகள் முன்னேறாததால், எம்மவர்களும் இயற்கையைக் கொண்டே நேரத்தை, நாட்களை, மாதத்தைக் கணித்தார்கள்.

ஒக்ரோபர் மாதத்து வானம் பிரமிக்கவைத்ததற்கு இன்னும் சில காரணங்கள் இருந்தன. ஒக்ரோபர் மாதம் 9-ஆம் திகதி சந்திரன் 440 ஒளிஆண்டுகள் தொலைவில் டாரஸ் விண்மீன் தொகுப்பில் பிரகாசிக்கும் 'ஏழு சகோதரிகள்' என்ற நட்சத்திரங்களான ப்ளேயட்ஸ் கூட்டத்திற்கு நேரே வானத்தில் நகர்ந்து வந்தது. இருண்ட கிழக்கு வானத்தில் தூசியால் மூடப்பட்ட இளம் நீல நட்சத்திரங்களின் கூட்டத்திற்கு அருகில் வானத்தில் ஒளிர்ந்த காட்சியை இரசிக்க முடிந்தது. சில இரவுகளில் பிரகாசமான வெள்ளி, வியாழன் கிரகங்களைக் கிழக்கு வானத்தில் காணமுடிந்தது. வீனஸ் என்று சொல்லப்படுகின்ற வெள்ளி அதிகாலையில் கிழக்கு வானத்தில் தாழ்வாகவும், வியாழன் சற்று உயரமாகவும் பிரகாசித்தன. சூரியன் மற்றும் சந்திரனைத் தவிர, வானத்தில் தெரியும் இரண்டு பிரகாசமான கிரகங்கள் இவைதான். ஆதிகாலத்தில் கடலில் பயணிப்பவர்களுக்கு வழிகாட்டியாக இருந்ததால், இதை 'விடி வெள்ளி' என்றும் கடற்பாதையில் பயணிப்பவர்கள் தமிழில் குறிப்பிடுவர்.



இதைவிட டிராகோனிட் விண்கல் (Draconid) மழையை இரவு வானத்தில் பார்க்கமுடிந்தது. 2018-ஆம் ஆண்டு சூரிய குடும்பத்திற்கு அருகே வந்த Giacobini Zinner எனப்படும் வால்நட்சத்திரத்தில் இருந்து உதிர்ந்த தூசிகள் பூமியை நோக்கிக் கவரப்பட்டபோது இரவு வானத்தில் அதைப் பார்க்க முடிந்தது. இந்த வால்நட்சத்திரம் 2031-ஆம் ஆண்டு திரும்பவும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதே போல ஒக்ரோபர் 21-ஆம் திகதி இரவு வானத்தில் ஓரியானிட் விண்கல் (Orionid meteor) மழையை, வேகமாக வானத்தில் நகரும் ஒளிக் கோடுகள் போலக் காணமுடிந்தது. ஹாலியின் வால் நட்சத்திரத்தின் பின்னால் தொடர்ந்த தூசுகள் குப்பைகள் பூமியின் ஈர்ப்புக்குள் அகப்படும்போது, அவை நமது வளிமண்டலத்தால் எரிக்கப்படுகின்றன. அப்போது ஏற்படும் ஒளியைத்தான் இந்த ஓரியானிட் விண்கல் மழை என்று சொல்கிறார்கள். எங்கள் வளிமண்டலம்தான் எங்களை இது போன்ற தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கின்றது.

ஒக்ரோபர் முதல் வாரத்தில் சிவப்புக்கிரகம் என்று சொல்லப்படும் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிவரும் செயற்கை விண்கலங்கள் 31-அட்லாஸ் (31 ATLAS, C-2025 N1) என்ற வால்நட்சத்திரத்தைப் படம் பிடித்தன. இது முற்றிலும் எமது சூரிய மண்டலத்திற்கு வெளியே விண்மீன்களுக்கு இடையே காணப்பட்ட 3-வது வால்நட்சத்திரமாகும். இதற்கு முன் 1I/`Oumuamuain 2017, I/Borisovin 2019 என்ற வால்நட்சத்திரங்கள் இதேபோல அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. இந்த மூன்று வால்நட்சத்திரங்களும் எமக்கு அந்நியமானவை. இவை எமது சூரியக்குடும்பத்திற்கு அப்பாற்பட்ட உலகங்களின் உருவாக்கம் பற்றிய தகவல்களைக் கொண்டிருப்பது எமது ஆய்வுகளுக்கு முக்கியமானதாகும். 31-அட்லாஸ் வால்நட்சத்திரம் யூலை மாதம் 2025-ஆம் ஆண்டு சிலியின் ரியோ ஹார்ட்டோவில் உள்ள ஆய்வு நிலையத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒமுவாமுவா என்ற (1I/`Oumuamuain 2017) வால்நட்சத்திரம் கனடாவைச் சேர்ந்த ராபர்ட் வெரிக் என்பவரால் பான்-ஸ்டார்ஸ் தொலைநோக்கியைப் பயன்படுத்தி ஹவாயில் உள்ள ஹலீகலா ஆய்வகத்தில் ஒக்ரோபர் 2017-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது லைரா விண்மீன் தொகுப்பில் உள்ள வேகாவின் திசையிலிருந்து சூரிய குடும்பப் பக்கம் வந்ததாகத் தெரிகிறது. போரிசோவ் (I/Borisovin 2019) வால்நட்சத்திரம் கிரிமியாவின் வானியலாளரான ஜெனடி போரிசோவ் என்பவரால் ஒகஸ்ட் மாதம் 2019-ஆம் ஆண்டு MARGO ஆய்வகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இவை சூரியனைவிட மூன்று பில்லியன் ஆண்டுகள் பழைமையானதாக இருக்கலாம் என ஆய்வாளர் கருதுகின்றனர்.

இனி முக்கியமான விடயத்திற்கு வருவோம், சூரிய மண்டலத்தின் வான்வெளியில் இரண்டு வால் நட்சத்திரங்கள் நகர்வதை சென்ற ஒக்ரோபர் மாதம் பலர் அவதானித்து இருப்பீர்கள். இதுவரை காலமும் அனேகமாக ஒரு வால்நட்சத்திரத்தை மட்டும்தான் வானத்தில் பார்த்திருப்பீர்கள். ஒக்ரோபர் மாதம் இரண்டு வால் நட்சத்திரங்கள் ஒரே வானத்தில் ஒன்றாகத் தோன்றியது மிகவும் அரிய காட்சியாக இருந்தது. ஆய்வாளர்கள் இந்த வால்நட்சத்திரங்களுக்கு C/2025 A6 (Lemmon) லெமன் என்றும், இரண்டாவது வால்நட்சத்திரத்திற்கு C/2025 R2 - (SWAN) ஸ்வான் என்றும் பெயர் சூட்டியி



ருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் வெகு அரிதாகவே சூரிய மண்டலத்தில் நிகழ்கின்றன.

C/2025 A6 (லெமன்) என்ற வால்நட்சத்திரம் டி. கார்சன்புல்ஸ் என்பவரால் மவுண்ட் லெமன் ஆய்வகத்தால் 3-1-2025 அன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒரு கால இடைவெளியற்ற வால் நட்சத்திரமாகும். இது சுமார் 1,340 ஆண்டுகள் உள்வரும் சுற்றுப்பாதைக் காலத்தைக் கொண்டிருப்பதாகவும், இது செல்லும் பெரிஹேலியன் பாதை இது நகரும் சுற்றுப்பாதை காலத்தை சுமார் 1,150 ஆண்டுகளாகக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பெரிஹெலியனில் அதிகபட்ச சுற்றுப்பாதை வேகம் வினாடிக்கு 57.8 கிலோமீற்றர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பெரிஹெலியன் என்பது சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் ஒரு கிரகத்தின் அல்லது ஒரு பொருளின் சுற்றுப்பாதையில் உள்ள புள்ளியாகும். அபெலியன் என்பது சூரியனிடமிருந்து ஒரு பொருள் மிகதொலைவில் இருக்கும் புள்ளியாகும். கோள்கள் சூரியனை ஒரு நீள்வட்டப் பாதையில்தான் சுற்றிவருகின்றன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இது நீள்வட்ட சுற்றுப் பாதையின் உச்சங்களை எடுத்துக் காட்டுகின்றது. பூமியின் சுற்றுப்பாதையில் பெரிஹெலியன் ஜனவரி 3-ஆம் திகதியிலும், அபெலியன் ஜூலை 4-ஆம் திகதியிலும் நிகழ்வதாக ஆய்வாளர்கள் கணித்திருக்கிறார்கள்.

லெமன் என்ற இந்த வால்நட்சத்திரம் சென்ற 21-ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 2025 அன்று பூமிக்கு மிக அருகில் வந்தது. இதுநவம்பர் மாதம் 2-ஆம் திகதி 2025 அன்று வான பூமத்திய ரேகையைக் கடந்து செல்லும். லெமன் என்ற இந்த வால் நட்சத்திரம் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டபோது வெளிப்படையான அளவு 10-க்கு மட்டுமே பிரகாசிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் இப்போது சுமார் 3 என்ற வெளிப்படையான அளவில் பிரகாசித்தது. பொதுவாக ஒளிசார்ந்த வானிலை அலகில் இலக்கம் குறையும்போது பிரகாசம் அதிகமாகும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சூரிய ஒளியில் மறைந்திருந்தலெமன் யூலை மாதம் காலை வானத்தில் மீண்டும் காணப்பட்டபோது வெளிப்படையான வால் காணப்படவில்லை. ஆகஸ்ட் மாதம் எடுக்கப்பட்ட படங்களில் ஒரு குறுகிய கூரான வால் தெரிந்தது.

ஒரு வால் நட்சத்திரம் சூரியனை நெருங்கும்போது, வெப்பம் காரணமாக அதன் ஆவியாகும் வாயுக்கள் வெளியிடப்பட்டு, கோமா என்னும் பரந்த மேகத்தை தூசி துகள்களுடன் உருவாக்குகின்றது. சூரியக் காற்று மற்றும் கதிர்வீச்சு காரணமாக பின்னர் இந்த வாயு மற்றும் தூசிகள் பின்தள்ளப்பட்டு வால் நட்சத்திரத்தின் வால்களை உருவாக்குகின்றன. லெமன் வால் நட்சத்திரம் சூரியனுக்கு அருகே சென்றபோது மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டது. அயன் வால் அல்லது பிளாஸ்மா வால் என்பது ஒரு வால் நட்சத்திரத்தின் இரண்டு வால்களில் ஒன்றா கும். இது சூரியக் காற்றால் சூரியனிலிருந்து நேரடியாக அடித்துச் செல்லப்படும் நீல நிறமுள்ள வாயுவைக் கொண்டது. இது பொதுவாக நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் நீண்டதாக இருக்கும். செப்ரெம்பர் 23-ஆம் திகதி எடுத்த படத்தில் பிளாஸ்மா வால் வழியாக தலையிலிருந்து ஒரு வாயுகுமிழ் நகர்வது படத்தில் தெரிந்தது.

வானத்தில் தெரிந்த இரண்டாவது வால் நட்சத்திரம் சுவான் (C/2025 R2 - SWAN) என்ற புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நீண்டகால வால் நட்சத்திரமாகும், இது சென்ற செப்ரெம்பர் மாதம் 2025-ஆம் ஆண்டு SOHO விண்கலத்தில் உள்ள SWAN கருவியைப் பயன்படுத்தி விளாடிமிர் பெசுக்லியால் முதன்முதலில் கண்டறியப்பட்டது. இதைத் தெற்கு அரைக்கோளத்தில் தொலைநோக்கி மூலம் பார்க்கமுடிகிறது. வடக்கு அரைக்கோளத்தில் ஒக்ரோபர் பிற்பகுதியில் அல்லது நவம்பர் தொடக்கத்தில் அதைப் பார்க்க முடியும். அக்டோபர் 20, 2025 அன்று பூமிக்கு மிக அருகில் இது வந்தபோது, சுமார் 39 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் இருந்தது.

இந்த நீண்டகால வால் நட்சத்திரம், oort cloud-இலிருந்து தோன்றியிருக்கலாம் எனவும் அதன் சுற்றுப்பாதை காலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருக்கலாம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு இருண்ட தென்மேற்குவானத்தில் இதைக் காணக்கூடியதாக இருந்தது.


**உசாத்துணை:**

- https://en.wikipedia.org/wiki/C/2025_A6_(Lemmon)
- https://en.wikipedia.org/wiki/C/2025_R2_(SWAN)




kuruaravindan@thaiveedu.com

# ‘அமுத மலராக’ வெளிவரும் ‘கலைமுகம்’ காலாண்டு இதழ்!




ஈழத்தில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு, வெளிவந்த கலை இலக்கிய சஞ்சிகைகளில் நீண்ட காலமாகவும் தொடர்ச்சியாக வெளிவந்தவையுமான இதழ்கள் என்றால் அவை சிரித்திரன், ‘மல்லிகை’ ஆகிய இரண்டு இதழ்களும்தான். அடுத்ததாக தொடர்ச்சியாக நீண்ட காலமாக இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்ற ஒரு ‘கலை இலக்கிய’ இதழ் என்றால், எமது கவனத்துக்கு வருவது ‘கலைமுகம்’ காலாண்டு இதழ் மட்டுமே என்றுதான் சொல்ல வேண்டும். நீண்ட காலங்களுக்கு தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த ‘சிரித்திரன்’, ‘மல்லிகை’ ஆகிய இரண்டும் மாதாந்த இதழ்களும் அவற்றின் ஆசிரியர்களாலேயே நடத்தப்பட்டு வந்தது. ஆசிரியர்கள் காலமாகியதை அடுத்து, அந்த இதழ்களின் வருகை நின்றுபோய் விட்டது; அவற்றைத் தொடர்ந்து கொண்டுவர சில முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை அவ்வளவுக்கு சாத்தியமாக அமைந்துவிடவில்லை. ஆயினும் 1990-இலிருந்து காலாண்டு இதழாக அதன் ஸ்தாபக ஆசிரியர் மரியசேவியர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு வெளிவந்த ‘கலைமுகம்’ இதழ், அவரது மறைவுக்குப் பின்னரும் இன்றுவரை தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. அதற்கு இன்னொரு முக்கிய காரணம், அடிகளார் உருவக்கிய திருமறைக் கலாமன்றம் என்ற நிறுவனம் என்று சொல்லலாம். அந்த நிறுவனம் தற்போது தனது அறுபதாண்டு பூர்த்தியையிட்டு வைரவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், வெளிவருகின்ற கலைமுகம் இதழ் தனது 80-ஆவது இதழைக், ‘கலைமுகம் - அமுத மலர்’ என்ற மகுடத்துடனும், அதிக பக்கங்களுடனும், பல முக்கியமான ஆக்கங்களுடனும் ஒரு சிறப்பிதழாக வெளியாகியுள்ளது.

அந்த 80-ஆவது ‘அமுத இதழி’ன் ஆசிரியர் தலையங்கத்தில் இதழின் ஆசிரியர் இவ்வாறு எழுதுகிறார்:

‘கலைமுகம்’ அமுத மலரின் மலர்வுடன் வாசகர்கள் மற்றும் படைப்பாளர்களின் கரங்களைப் பற்றிக் கொள்வதில் பேருவகை கொள்கின்றோம். ஒவ்வொரு இதழின் தயாரிப்புப் பணிகளையும் நிறைவு செய்த பின்னர் மனதில் ஏற்படுகின்ற நிறைவையும் பின்னர் இதழ் அச்சாகி வந்தவுடன் உண்டாகின்ற புத்துணர்வையும் விபரிக்க வார்த்தைகளில்லை. 'கலைமுகம்' முதலாவது இதழ் தை - பங்குனி 1990-இல் வெளிவந்தது. அது நிகழ்ந்து இவ்வாண்டுடன் 36 ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற வேளையில்-திருமறைக் கலாமன்றம் தனது 60-ஆவது ஆண்டு நிறைவை - வைர விழாவாகக் கொண்டாடும் இவ்வாண்டில் கலைமுகத்தின் 80-ஆவது இதழை அமுத மலராக வெளிக்கொணர்வதில் மகிழ்வடைகின்றோம். ஏற்கெனவே 50-ஆவது இதழை பொன்மலராகவும் 75-ஆவது இதழை பவள இதழாகவும் வெளியிட்டிருந்தோம். இவ்விரண்டு சிறப்பிதழ்களுக்கும் கிடைத்த வரவேற்பும் ஆதரவுமே இந்த 80-ஆவது இதழை அமுத மலராக வெளியிடும் உந்துதலைத் தந்தன என்றால் மிகையாகாது. இதுவொரு தொடர் பயணம். இந்தப் பயணத்தின் பாதையை நாம் இலகுவாகக் கடந்து வரவில்லை. நிறையவே சவால்களைச் சந்தித்தே கடந்திருக்கின்றோம். 'கலைமுகம்' இதழை மனதார நேசித்த பெறுமதிமிக்க வாசகர்கள், படைப்பாளர்கள் பலரை இழந்திருக்கின்றோம். கலைமுகத்தின் ஸ்தாபக ஆசிரியர் நீ. மரியசேவியர் அடிகள் உட்பட ஆரம்ப காலச் செயற்பாட்டாளர்கள் பலரை காலம் எம்மிடமிருந்து பறித்திருக்கின்றது. நாற்பதாவது இதழ் முதல் சில காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய சகோதரன் வி.பி. தனேந்திராவின் மறைவும் துயரத்தை ஏற்படுத்திய நிகழ்வே. எமது நாட்டில் ஓர் இலக்கிய இதழைத் தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வருவது எத்துணை கடினமானது என்பதை அனைவரும் அறிவர். அதிலும் இன்றைய தொழில்நுட்ப உலகுடன் போட்டி போட்டுக்கொண்டு இதனைச் சாத்தியமாக்கியுள்ளோம் என்பதை சாதனையாகவே கருதுகின்றோம்.’

கலைமுகத்தின் அமுத மலர் 200 பக்கங்களுக்கு மேற்பட்ட அளவிலும், பன்முக இலக்கிய வடிவங்களை உள்ளடக்கியதாகவும் வெளிவந்துள்ளது. இதில் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், மொழிபெயர்ப்புகள், பத்தி எழுத்துகள், நேர்காணல் ஆகியவை அடங்கும். ஈழத்தின் சமகால முக்கிய எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளர்களின் கவனத்துக்குரிய ஆக்கங்களை உள்ளடக்கியதாக இந்தச் சிறப்பிதழ் அமைந்துள்ளது. இதழின் ஆசிரியரான செல்மர் எமில் அவர்களின் அர்ப்பணிப்புமிக்க உழைப்புக்கும், இதழை வெளியிட்டு வருகின்ற, அதன் ஸ்தாபக ஆசிரியரான மரிய சேவியர் அடிகளாரது வழியில் தொடர்ந்து கலைத் தொண்டாற்றிவருகின்ற திருமறைக் கலாமன்றத்துக்கும் அதன் ஊழியர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்!



# சர்வதேச மாணவர் நாள்

## மாணவர் சக்தி வலுவானது

– சி. நற்குணலிங்கம்

நாட்டின் எதிர்கால செல்வங்களாக, நேர்மையான தலைவர்களாக, வருங்காலத்தை வளமாக அமைக்க உதவுபவர்கள் மாணவர்கள். இத்தகைய வலிமை மிகுந்த மாணவர்களை சர்வதேசம் மறக்கலாமா? இந்தியாவின் 11-ஆவது குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், எப்போதும் மாணவர்களே எதிர்காலம் என்றும் நாட்டை ஒவ்வொரு துறையிலும் வெற்றியின் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்லும் முற்போக்கு மனதைக் கொண்டவர்கள் மாணவர்களே என்றும் நம்பினார். இவர் ஒவ்வொரு முறையும் மாணவர்களைச் சந்திக்கும்போதும் கனவு காணுங்கள், அதற்கான முழு முயற்சியுடன் அர்ப்பணிப்போடு செயலாற்றுங்கள் வெற்றி உங்களை வந்தடையும் என்ற உற்சாகம் ஊட்டும் வார்த்தைகளை மாணவர்களிடையே ஊட்டிவிட்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை நோக்கிய பயணத்தை ஊக்குவித்தார். கனவுகளிலிருந்து சிந்தனைகள் பிறக்கும், சிந்தனைகள் செயல்களாகுமென மாணவர்களது சக்தி அறிந்து மாணவர்களுக்கு என்றும் வழிகாட்டியாக திகழ்ந்தவர். இதிலிருந்து தெரிகிறது மாணவர் சக்தி வலுவானதென்பது.

> ***“உலகெங்கிலும் உள்ள மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், கல்வியைத் தொடரவும் இந்த நாள் அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. இதன்மூலம் சர்வதேச மாணவர் நாள் மாணவர்களின் உரிமைகளையும், கல்வியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. உலகம் முழுவதிலும் உள்ள மாணவர்களின் பிரகாசங்களைக் கௌரவிக்க இந்நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.”***

மாணவர்களது சக்தி விரயமாகாது இருக்க, மாணவர் சக்தி வலுவாக, மாணவர்களது உரிமைகள் பேணப்பட வேண்டும், அவற்றில் கூடிய அக்கறை செலுத்தப்படவேண்டும். அத்துடன் மாணவர்களுக்கு தம் உரிமைகள் பற்றிய அறிவும் இருக்க வேண்டும். அப்போதுதான் தேவையானபோது தட்டிக் கேட்க முடியும். இல்லையேல் தட்டிக்கொண்டிருப்போர்க்கு தலை குனிய நேரிடும். மாணவர்களின் உரிமைகள் என்பது கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு இருக்கவேண்டிய அடிப்படை உரிமைகளாகும். இவற்றில் பாதுகாப்பான சூழலுக்கான உரிமை, வெளிப்படுத்துவதற்கான உரிமை, தனி உரிமைக்கான உரிமை, முறையான விசாரணை மீதான உரிமை, சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை போன்றவை அடங்கும். அதாவது, மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் உடல் மற்றும் மனரீதியாகப் பாதுகாப்பாக உணர வேண்டும். எந்த விதமான துன்புறுத்தல்களுக்கும் ஆளாகாமல் இருக்க அவர்களுக்குப் பாதுகாப்பான சூழல் வழங்கப்பட வேண்டும். மாணவர் தங்கள் கருத்துகளையும் எண்ணங்களையும் அச்சமின்றி வெளிப்படுத்த அவர்களுக்கு உரிமை உண்டு. கல்வி நிறுவனங்களில் நடைபெறும் விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்கவும், கேள்விகள் கேட்கவும் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

மாணவர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கலாசாரம் தொடர்பான விஷயங்களில் உரிமை உண்டு. அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் அனுமதியின்றி அவை யாருக்கும் பகிரப்படக்கூடாது. மாணவர்கள்மீது ஏதேனும் குற்றச்சாட்டு இருந்தால் அவர்கள்மீது முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். அவர்களுக்குத் தங்கள் தரப்பு நியாயத்தை விளக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மேலும் அவர்களின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் நியாயமானதாகவும் இருக்கவேண்டும். மாணவர்கள் அனைவரும் எந்த வேறுபாடுகளுமின்றி சமமாக நடத்தப்பட வேண்டும். அவர்களுக்குக் கல்வி மற்றும் இதர வசதிகள் அனைத்தும் சமமாக வழங்கப்பட வேண்டும். மாணவர்கள் தம் கருத்துகளை வெளிப்படுத்தவும், தம் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஏதுவாக மாணவர் சங்கங்களை அமைக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. இந்த உரிமைகள் மாணவர்களின் கல்வி மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை. மாணவர்களது உரிமைகள் மதிக்கப்பட வேண்டியவை. 1924 முதல் ஜெனீவா பிரகடனத்தில் இருந்து அவை விரிவடைந்து வருகின்றன.

மனிதகுலம் தோன்றிய காலம் முதல் இன்று வரை நிகழ்ந்துவரும் போராட்டங்கள் அனைத்தும் தனித் தனியே பல இலக்குகளைக் கொண்டதாக இருந்தாலும் அப்போராட்டங்கள் அனைத்திற்கும் பொதுவான இலக்கு ஒன்று இருந்தது. அது முன்பு அனுபவித்துக் கொண்டிருந்ததைக்காட்டிலும் கூடுதலான சுதந்திரத்தை அடைவது என்பதாகும். அதாவது மனிதகுலப் போராட்டத்தின் பொது இலக்கு கூடுதல்

tg.theeban@gmail.com

சுதந்திரம் என்பதை நோக்கியே இருந்தது. மேலும் மனிதர் தமது குறிப்பிட்ட ஒரு பருவத்தில் தமது வாழ்க்கையிலேயே அதிகபட்ச சுதந்திரத்துடன் இருக்க விரும்புவர். அவ்வாறான சூழலில் பயிலும் வாய்ப்பு பெற்றவராக இருந்தால் அவர் இயற்கை, சமூகம் குறித்த பல விடயங்களைத் தெரிந்தவர் என்ற ரீதியில் தமது அறிவினைப் பயன்படுத்தி சுதந்திரம் என்ற கண்ணோட்டத்திலும் பல புதுப்புது பரிமாணங்களைக்கொண்ட மிகுந்த சுதந்திரம் உடையவராக விளங்குவதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றார். கல்வி என்பது ஆசிரியர், மாணவர் இருவரும் இணைந்து நிகழ்வது. அறிவைப் பகிர்ந்துகொள்வதற்காக நடத்தும் ஒரு ஜீவனுள்ள வாழ்க்கை என்பது பல்கலை வளாகத்துக்குள் அழிந்து ஒழியுமாயின் பல்கலைக் கழக நிலைப் பாடு ஆட்டம் காணத்தொடங்கும். எதுவாயினும் உரிய முறையில் மாணவர்களின் உரிமைகளுக்கும், உணர்வுகளுக்கும் வடிகால் அமைத்து கொடுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில்தான் போராட்டங்கள் தோற்றம் பெறுகின்றன. இது தேவையா ?

**“சமூகத்திற்கான விழுமியங்களை உருவாக்குவதிலும் சமூக மூலதனங்கள், ஒற்றுமை, சகிப்புத் தன்மை, ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்தல், நட்புணர்வு ஆகியவற்றை சமூக கட்டமைப்புக்குள் பலப்படுத்துவதிலும் பல்கலைக் கழகங்களின் பங்களிப்பு முதன்மையானது.”**

மாணவர்களது கல்வி பாதிப்படையக்கூடாது, அவர்களது பங்களிப்பு சமூகத்திற்குக் கிடைக்க வேண்டும். மாணவர்களின் சமூகப் பங்களிப்பு என்பது அவர்கள் கல்வி பயிலும் நாடுகளில் கலாசார மற்றும் சமூக விழுமியங்களை உள்வாங்கி சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பங்களிப்பது ஆகும். இதனால் பொறுப்புணர்வு வளர்க்கிறது. மாணவர்கள் சமூகப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் மற்றவர்களைச் செயலில் ஈடுபட ஊக்குவிக்க முடியும். மாணவர்கள் தங்கள் சமூகத்தில் ஒரு நேர்மறையான மாற்றத்தைக் கொண்டுவர முடியும். சமூக மாற்றத்தினை வழி நடத்துவதில் பிரதான பங்கு பல்கலைக் கழகங்களுக்கு உண்டு, சமூகத்திற்கான விழுமியங்களை உருவாக்குவதிலும் சமூக மூலதனங்கள், ஒற்றுமை, சகிப்புத் தன்மை, ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்தல், நட்புணர்வு ஆகியவற்றை சமூக கட்டமைப்புக்குள் பலப்படுத்துவதிலும் பல்கலைக் கழகங்களின் பங்களிப்பு முதன்மையானது. அறிவு, திறமை போன்றவற்றை வழங்கி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றை வழங்கி ஒரு முழுமையான ஆற்றல் படைத்தவராக மாற்றுவதற்கு கல்வி உதவுகிறது. இதன் அழிவுக்கு யாரும் துணை போகலாமா ?

நம் அனைவருக்கும் வாழ்வின் அணியாகவும், தாழ்வின் துணையாகவும், வளர்ச்சியின் ஆதாரமாகவும் அமைவது கல்வி ஆகும். ‘கல்வி என்பது ஒருவரை முழுமையான சிந்தனா சக்தி உடையவராக ஆக்குவது’ என்று தந்தை பெரியார் கூறினார். கல்வியால் நல்ல மனிதர்கள் உருவாகுகிறார்கள். அவர்கள் நல்ல முறையில் செயலாற்றவும் பழகிக் கொள்கிறார்கள். அதேவேளை சமூக மாற்றத்தினை வழி நடத்துவதில் பிரதான பங்கு வகிக்கும் கல்வி நிலையங்களில் ஏற்படும் பாதகமான சில செயற்பாடுகளால் நிகழும் துயர சம்பவங்கள் பாதகமான நிகழ்வுகளைத் தோற்றுற்றுவிப்ப தோடு வரலாற்றிலும் இடம்பிடிக்கின்றது. இதற்கு சர்வதேச மாணவர்கள் தினம் ஒரு சான்றாகும்.

சர்வதேச மாணவர் நாள் (INTERNATIONAL STUDENTS' DAY) நவம்பர் 17-ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இது மாணவர்கள் போராட்டம் மற்றும் எழுச்சிகளை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது. குறிப்பாக 1939-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் திகதி செக்கோஸ்லோவாக்கியாவின் தலைநகர் பிராக் (PRAGUE) நகரில் உள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்தைப் பல்கலைக் கழகத்துள் நுழைந்த நாஜி (ஜேர்மனி) படையினரின் ஆக்கிரமிப்பால் 9 மாணவ தலைவர்கள் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதையும், பலர் சிறைபிடிக்கப்பட்டதையும், 1200-க்கு மேற்பட்டவர்கள் சித்திரவதை முகாமிற்கு அனுப்பப்பட்டதையும், செக்கோசிலவாக்கியாவின் அனைத்து பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டதையும் எதிர்த்து மாணவர்கள் போராட்டம் நடத்தியதை இந்த நாள் குறிக்கிறது. இந்த துயர் சம்பவம் உலகெங்கிலும் உள்ள மாணவர்களை ஒன்றிணைத்தது. அதிலிருந்து நவம்பர் 17 சர்வதேச மாணவர் நாளாகத் தொடர்கிறது. இந்த நாள் மாணவர்களது உரிமைகளை வலியுறுத்துகிறது மற்றும் அவர்களின் கல்வி மற்றும் சமூக பங்களிப்பை அங்கீகரிக்கிறது. அனைத்துலக மாணவர் நாள் என்பது பன்னாட்டுரீதியில் மாணவர் எழுச்சிக்கான நாளாகும். சர்வதேச மாணவர் நாள் என்பது மாணவர் சமூகத்திற்கான ஒரு சர்வதேச அனுசரிப்பாகும்.

இந்நாள் முதன்முதலில் 1941-ஆம் ஆண்டு அனைத்துலக மாணவர் கவுன்சிலால் இலண்டனில் கொண்டாடப்பட்டது. இவ் அமைப்பில் மாணவர்கள் பலர் அங்கத்தவர்களாய் இருந்தனர். இத்துக்க நிகழ்வை ஐ.நா. அவை அங்கீகரிக்க ஐரோப்பாவின் தேசிய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் ஊடாக இந்த மாணவர் அமைப்பு அழுத்தம் கொடுத்தது.

தொழில் வளர்ச்சியுடன்கூடிய வலிமையான நாட்டை உருவாக்குவதற்கு மாணவர்களின் திறமையையும், ஆற்றலையும் நல்வழிப்படுத்தி சாதனை படைக்கவேண்டும். உலகெங்கிலும் உள்ள மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், கல்வியைத் தொடரவும் இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சர்வதேச மாணவர் நாள் மாணவர்களின் உரிமைகளையும், கல்வியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. உலகம் முழுவதிலும் உள்ள மாணவர்களின் பிரகாசங்களைக் கௌரவிக்க இந்நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர்களை நினைவுகூர்வதும், சர்வதேச மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதுமே இந்நாளின் நோக்கமாகும். மாணவர்களிடையே பன்முக கலாசாரம், பன்முகத்தன்மை மற்றும் குழுப்பணி ஆகியவற்றின் கொண்டாட்டம் சர்வதேச மாணவர் நாள் என்று அழைக்கப்படுகிறது. இந்நாளினை அனுசரிப்பதன் மூலம் பன்முகத்தன்மையே நம்மை மனிதர்களாக வரையறுக்கிறது என்பதை அனைவருக்கும் நினைவூட்டலாம். அனைவருக்கும் கல்வி கிடைப்பதை உறுதி செய்வதற்காக நமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி சர்வதேச மாணவர் நாளினை நினைவுகூர்வோம்.



natkunalingam@thaiveedu.com




# சுய மதிப்பீடு

- பவானி சற்குணசெல்வம்

சுய நம்பிக்கையானது ஒரு சொத்து மற்றும் ஆளுமைத் தன்மையுடையது. முக்கியமாக, இது திறன்கள் மற்றும் திறன்களின் நேர்மறையான மதிப்பீடு ஆகும். கடினமான சூழ்நிலைகளிலிருந்து வெற்றிகரமாக விடுபடுவதன் மூலம் தன்னம்பிக்கை உணர்வு ஊக்குவிக்கப்படுகிறது. நம்மைப் பற்றியும் நம் திறமை பற்றியும் நாம் எவ்வாறு உணர்கிறோம் என்பதுதான் தன் மதிப்பீடு (Self evaluation). இதற்கு முக்கியமானது நம்மைப் பற்றி நமக்கிருக்கும் அபிப்பிராயம். நம்மைப் பற்றிய நம் மதிப்பீடு நம் சுற்றத்தின் அபிப்பிராயத்தைச் சார்ந்தோ சொத்து மதிப்பைச் சார்ந்தோ கல்வித் திறனைச் சார்ந்தோ இருக்கக் கூடாது. அது நம் உள்மனதைச் சார்ந்த நம் குணத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும். இந்தத் தன்மதிப்பு உயர்வானதாகவோ குறைவானதாகவோ இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையிலேயோ இருக்கலாம். ஆனால், அது எந்த நிலையில் இருந்தாலும் நம் வாழ்வில் அது ஏற்படுத்தும் தாக்கம் மிகப் பெரியது.

நம்முடைய தன்மதிப்பு குறைவானதாக இருந்தால் அதற்கான காரணத்தைக் கண்டறிவது மிகவும் முக்கியம். தனிமை, பிறரால் கட்டுப்படுத்தப்படுதல், படிப்பில் குறைந்த

மதிப்பெண் பெறுதல், ஒதுக்கப்படுதல், நிந்திக்கப்படுதல், வேலை வாய்ப்பின்மை ஆகியவை தன்மதிப்புக் குறைபாட் டுக்குப் பொதுவான காரணிகளாக இருக்கலாம்.

சில நேரத்தில், அதற்கான காரணத்தை அறிவது கடினமா கவும் இருக்கலாம். ஆனால், நமக்கு அதற்கான காரணங்கள் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அந்தத் தன்மதிப்பை மேம்ப டுத்துவதற்குப் பல எளிய வழிமுறைகள் உள்ளன.

## விழிப்புடன் இருத்தல்:

எதை மாற்ற வேண்டும் என்பதைக் கண்டு உணராதவரை நம்மால் அதை மாற்ற முடியாது. நம்மைப் பற்றி நாம் கொண் டிருக்கும் எதிர்மறையான எண்ணங்களை வெறுமனே உணர்வதே நமக்குப் போதுமானது. அந்த உணர்வால் நாம் அந்த எதிர்மறை எண்ணங்களில் இருந்து விலகிச் செல்ல ஆரம்பிப்போம். நம்மை அந்த எண்ணங்களுடன் அடையாளப் படுத்துவதையும் குறைத்துக்கொள்வோம். இந்தப் புரிதல் இல் லையென்றால், அந்த எதிர்மறை எண்ணங்கள் விரிக்கும் வலையில் சிக்கி, நம் தன் மதிப்பைத் தாழ்த்திக்கொள்வோம்.

நமக்குத் தோன்றும் எண்ணங்கள் அனைத்தையும் நாம் நம்பத் தேவை இல்லை. ஏனென்றால், எண்ணங்கள் என்பவை வெறும் எண்ணங்கள், அவ்வளவுதான். நம்மை நாமே கடுமையாக விமர்சிப்பது தெரிய வந்தவுடன் என்ன நடக்கிறது என்பதை கவனமாக, மிகுந்த ஆர்வத்துடன் குறித்துக்கொள்ள ஆரம் பிக்க வேண்டும். அதற்குப் பின்னர், இவை எல்லாம் வெறும் எண்ணங்கள்தான். இவை எதுவும் உண்மை அல்ல என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக்கொள்ள வேண்டும்.

## கதையை மாற்றுதல்:

நம் அனைவருக்குமே நம்மைப் பற்றி ஒரு கதை இருக்கும். அந்தக் கதைதான் நமது சுய கண்ணோட்டத்தை வடிவ மைக்கும். அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் நம் சுய பிம்பம் உருவாகும். எனவே, இந்தக் கதையை நாம் மாற்ற விரும்பினால் முதலில் அது எங்கிருந்து வந்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் நமக்கு நாமே சொல்லிக்கொள்ளும் இந்தக் கருத்துகளை நாம் எங்கே பெற்றோம் என்பதையும் யாருடைய கருத்து நமக்குரியது என் பதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

சில வேளைகளில், நம்மைச் சுற்றி இருப்பவர்கள், நம்மைக் ‘குண்டாக இருக்கிறாய்’ என்றோ சோம்பேறி என்றோ சொல் லிக்கொண்டே இருக்கலாம். இதைக் கேட்டுக்கொண்டே இருந்தால், சில நாட்களில் அவர்களின் அந்தக் கருத்து நம்மு டையதாகவும் மாறிவிடும். ஆனால், இந்தக் கருத்துகள் நாம் பிறரிடம் இருந்து கற்றவை என்ற புரிதல் இருந்தால், அதை நம்மிடம் இருந்து அகற்றுவது எளிது. எதை நம்ப வேண்டும், எதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தினமும் நமக்கு நாமே சொல்லிக்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

## பிறருடன் ஒப்பிடுவதைத் தவிர்த்தல்:

இக்கரைக்கு அக்கரை எப்போதும் பச்சையாகத்தான் தோன்றும் என்பது மறுக்க முடியாத உண்மை. நம் கண்க ளுக்கு மிகுந்த மகிழ்ச்சியாகத் தெரியும் மனிதர் உண்மையில் மகிழ்ச்சியாக இருக்கிறாரா என்பது நமக்குத் தெரியாது. எனவே, உண்மை நிலை எது என்று தெரியாத ஒன்றுடன் நம்மை ஒப்பிடுவது மடமையான செயல். ஒப்பிடுதல் எப்போதும் நமக்கு எதிர்மறையான எண்ணத்தைத்தான் தோற் றுவிக்கும். அது நம்மை பயம், பதற்றம், மன அழுத்தத்துக்கு இட்டுச் செல்லும். இதனால் நம் வேலை, உறவுகள், உடல் நலம் போன்றவை வெகுவாகப் பாதிக்கப்படும்.

## திறமையை ஒருமுகப்படுத்துதல்:

‘எல்லோருமே மேதைதான். ஆனால், மரம் ஏறும் திறனைக் கொண்டு ஒரு மீனை மதிப்பிட்டால், அந்த மீன் தன் வாழ்நாள் முழுவதும் தன்னை ஒரு முட்டாள்’ என்று நம்பியே வாழ்ந்து மடியும் என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொன்னது இங்கு பொருந்தும். ஆம், நம் அனைவருக்குள்ளும் ஒரு தனித்து வமான திறமை இருக்கிறது. அந்தத் திறமை எது என்பதைக் கண்டறிவதில்தான் நம் வெற்றியின் சூட்சுமம் அடங்கியிருக் கிறது.

நம் வாழ்வில் ஒரு சூழ்நிலையில் நம்மைப் பற்றி மிகவும் உயர்வாக எண்ணி யிருப்போம். அது எது என்பதைக் கண்ட றிந்து, அப்போது நாம் என்ன செய்துகொண்டு இருந்தோம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். அது நம் தனித்துவமான திறமையை நமக்கு அடையாளம் காட்டும். நம்மிடம் இருக்கும் இந்தத் திறமையைக் கண்டுபிடிப்பதற்கு நம் நண்பர்களின் உதவியையும் நாடலாம்.

## உடற்பயிற்சி:

உயர்வான தன் மதிப்புக்கும் உடற்பயிற்சிக்கும் உள்ள தொடர்பைப் பல ஆராய்ச்சி முடிவுகள் உறுதி செய்கின்றன. உடற்பயிற்சி உடலையும் மனதையும் வலிமையாக்குகிறது. தினசரி உடற்பயிற்சியில் ஈடுபடுவது அந்த நாளை ஒழுங்குப டுத்துவதுடன் நம்மையும் பேணுகிறது. உடற்பயிற்சியால் நாம் சத்தான உணவையும் போதுமான தூக்கத்தையும் பெறுகிறோம். இதனால் ஏற்படும் நேர்மறையான எண்ணங்கள் நமக்கு நம்மைப் பற்றி ஒரு உயர்வான எண்ணத்தை உருவாக் குகின்றன.

மகிழ்ச்சியான, வெற்றிகரமான வாழ்வுக்குத் தேவையான திற மைகளுடன்தான் நாம் அனைவரும் பிறக்கிறோம். நம் அனை வருக்குள்ளும் வெவ்வேறு விதமான திறமைகள் வெவ்வேறு அளவுகளில் இருக்கின்றன. தன்மதிப்பு அற்ற மனிதனோ குறைகள் இல்லாத மனிதனோ இவ்வுலகில் இல்லை. எனவே, நம்மை நம் குறைகளுடன் நேசித்துப் பழக வேண்டும். இந்த நேசிப்பு தோல்வி பயத்தை நம்மிடம் இருந்து அகற்றி வெற்றியைச் சுவைக்க வழிவகுக்கும்.

Bavany.S@thaiveedu.com





# உறங்க மறுக்கும் உண்மைகள் சுசிமன் நிர்மலவாசனின் ‘கெத்சமனி’

– ஏ.பி.எம். இத்ரீஸ் –

முன்னொரு காலத்தில் ஓர் ஓவியனை அரசன் சிறையில் அடைத்துவிட்டான். ஓவியன் தயங்காமல், தனக்குத் தூரிகையையும் சில வண்ணங்களையும் தர முடியுமா எனக் கேட்டான். அவை அவனுக்கு வழங்கப்பட்டன. அவன் ஆகாயம் தழுவிய ஒரு வனாந்தரத்தை வரைந்தான். என் கற்பனையால் என்னை விடுதலை செய்வேன் என்று கூறியபடி ஓவியன் அந்த வனத்திற்குள் புகுந்து மறைந்து விட்டான். இருநூறு ஆண்டுகளை எட்டிப் பிடிக்க காத்திருக்கும் மட் / புனித மிக்கேல் கல்லூரியின் பேராலயக் கட்டடக்கலையின் செழுமையும் உறுதியும் வாய்ந்த சிற்றாலயத்தில் பழைய மாணவர் தாய்ச் சங்கமும் மூன்றாவது கண்ணும் இணைந்து ஏற்பாடு செய்த சுசிமன் நிர்மலவாசனின் ‘கெத்சமனி’ ஓவியங்களைப் பார்க்க நுழைந்தபோது எனக்கும் அந்த நிலைதான் ஏற்பட்டது.

ஆலயத்தின் உள்ளே பதின்ம வயது இயேசுவின் உருவப்படத்தை கைகளில் ஏந்திய மாதாவின் திருவுருவம், மாதாவின் முன்னால் அதே பதின்ம வயது மதிக்கத்தக்க சிறுவர்களும் சிறுமிகளும் அருட்தந்தையர்கள் சிலரும் மல்லாந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பின்னால் சோகமே உருவாக சில தாய்மார் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குப் பின்னாலும் வெண் துகில் போர்த்திய குழந்தையை ஏந்தியபடி மாதாவின் திருவுருவம் தெரிகிறது. முன்னாலுள்ள மாதாவின் சட்டகத்தின் இடுமருங்கிலும் முடிச்சுக் கட்டிய துணிகள் தொங்க பலிபீடத்தில் மெழுகுத் தீபங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஆலயத்தின் உள்ளே இரு பக்கவாட்டிலும் அருட்தந்தையரின் உருவங்கள் உள்ளன. வண்ணத்துப்பூச்சிகளின் உதிர்ந்த சிறகுகளைத் தன்னிரு கைகளாலும் முடிந்தளவு வாரிக்கொண்டு அம்புரொஸ் அடிகள் நிற்கிறார். அவருக்குப் பக்கத்தில் உடைந்து நொருங்கிய வெசாக் கூடுகளைத் தன் ஆடையாக உடுத்திக் கொண்டு ஜெ. சந்திரா அடிகள் நிற்கிறார். மூன்றாவதாக அருட்தந்தை ஹாரி மில்லர் நிற்கிறார். தலைக்கு மேலே உள்ள பகுதி வெளிச்சமாகவும் கீழே மீதம் எல்லாம் இருளாகவும் இருக்கிறது. அடுத்த பக்கத்தில் அருட்தந்தை இயூஜின் ஜோன் ஹெபயர் உள்ளூர்வாசிகளுடன் நிற்கிறார். இடுப்புக்கு குறுக்காகக் கட்டப்பட்ட கருப்புப் பட்டியுடன் வெண்ணிற அங்கியில் புன்னகை தவழும் அழகிய வதனத்துடன் கைகளில் குழந்தை ஒன்றை ஏந்தியிருக்கின்றார். அடிகளாரின் இருபுறமும் குழந்தைகளும் பெண்களுமாக, வாஞ்சையுடனும் முறுவலித்துக்கொண்டு அவரைப் பார்த்து நிற்கின்றனர்.

கண்காட்சியைப் பார்க்க நானும் குழந்தையும் காந்தி பூங்காவை கடந்து வரும்போது காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பாக எதிர்ப்புப் பேரணியொன்று நிகழ்ந்துகொண்டிருந்தது. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு (17.05.2000) மட்டு நகர் புனித இஞ்ஞாசியர் ஆலய அமைப்பின் பேரில் வெசாக் பூரணை அன்று கல்விச் சுற்றுலாவில் வந்த ஆயித்திய மலை சதாசகாய மறைப்பள்ளி குழந்தைகள் 25 பேர் ஸ்ரீ மங்கள ராம ரஜ மகா விகாரையின் வெசாக் தோரணங்களைப் பார்க்க வாகனத்தை விட்டு இறங்கிய தருணத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பிலும் துப்பாக்கிச் சூட்டிலும் உயிர் இழந்தவர்களின் நினைவுகூரலாகத்தான் இந்த ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பத்து குழந்தைகளும் 23 பொது மக்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிர்மலவாசன் தான் செல்ல விரும்பும் கருப்பொருளுக்கு இசைவாக ஓவிய நிகழ்த்துகையை தெரிவு செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துகிறார். ஓவியத்தை ஆற்றுகையாக மாற்றும் இந்த சோதனை முயற்சி அவரின் ஓவியங்களுக்குப்



பன்முகத்தன்மையையும் கலை நேர்த்தியையும் வழங்குகின்றது. கெத்சமனி ஓவிய நிகழ்த்து கைக்கான இடத்தேர்வும், வடிவமைப்பும் கருப் பொருளை ஆழமாக உணர வைக்கின்றது. கெத்சமனி துக்கத்தை கலையாக மாற்றும் செயல் முறையாகும். இழப்பின் வழியாக மனிதாயக் குணங்களைக் கற்கும் சாத்தியங்களை உருவாக் குகிறார். இவ்வோவியங்களைத் தனித்தனியே ஒவ்வொன்றாகப் பிரித்து சுவர்களில் மாட்டி வைப்பதன் மூலம் இந்த உணர்வின் ஆழத்தை அடைய முடியாது போகலாம். யுத்த வடுக் களின் இரத்த சாட்சியங்களாக இல்லாமல் பார்ப்போரின் இதயங்களை ஊடுருவும் ஆழம் அதன் நிகழ்த்துகையிலேயே தங்கியிருக்கிறது.

இன்புற்றுக்கிடக்கும் காட்சிகளையும் அறக்கருத்துகளையும் மட்டும் உள்ளடக்கியதல்ல கலை, அதிர்ச்சியூட்டும் எதிர்மறை விடயங்களையும் அது சுமந்து வரலாம். தாங்கிக் கொள்ள கடினமான பிரச்சினைகளோடு பார்ப்போரையும் நேரடியாகப் பங்குபெறச் செய்யும் நிலையும் இதில் நிகழ் கிறது. காணாமலாக்கப்பட்ட அல்லது வன்கொடுமைக்குப் பலியான குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என்கின்ற ஒரு தொகுதி ஓவியங்களை ஓர் ஆலய வெளியில் இணைப்பது போன்ற செயல்தான் இது. இந்த இணைப்பில் வரைந்தவர் உருவாக்கிய ஓவியங்களும் வரலாம். அல்லது நீங்கள் ஆத் மார்த்தத்தோடு ஏற்றிய மெழுகு தீபமும் வரலாம். ஓவியர் உரு வாக்குவதும் நீங்கள் உருவாக்குவதும் பொருந்திப் போக வேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஆனால் ஓவியம் பார்ப் போரும் இங்கே ஆற்றுகையாளராக இணைகின்றனர். ஓவியம் ஒரு தருணத்தை நிலையாக்கிக் காட்டுவது என்கின்ற அசையாப் படிமத்திலிருந்து விலகி இங்கே நினைவுகூரும் ஒரு நிகழ்த்துகையாக மாறுகின்றது. இது பார்ப்போரும் பங் கேற்பாளராக மாறும் ஓவிய வாசிப்புக்குப் பங்களிப்புச் செய்யும் நிலையாகும். இவ்வோவியங்கள் கண்ணாடிச் சட்ட கங்களுக்குள்ளும் கித்தான் துணிகளிலும் வரையப்பட்டவை என்பதற்கப்பாலும் அவை காற்றில் அசையும் போதும் குழந் தைகளைத் தேடும் தாய்மார் அருகருகே நிற்பது போன்றும் நாம் பார்ப்பது போன்று அவர்களும் பார்ப்பது போலவும் நாம் கதைப்பதையும் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வைத் தருகிறது.

பொதுவாக நிர்மலவாசனின் ஓவியங்கள் ஈழத்து ஓவியங்க ளுக்கும் குறிப்பாக ஈழத்து தமிழ் ஓவியத்துக்கும் வளம் சேர்க்கும் தவிர்க்க முடியாத பங்களிப்பாகும். இவர் பன்முகப் பட்ட கருப்பொருட்களையும் வடிவங்களையும் கலை உத்திக ளையும் பயன்படுத்தி கலை நேர்த்தியுடன் வெளிப்படுத்துவர். சமகால வாழ்வின் சிக்கல்களையும் மனித உறவுகளின் ஆழ அகலங்களையும் நுட்பமான அரசியல் பரிமாணங்களையும் பார்ப்போரின் மனதில் பதிய வைத்து வருபவர். காலனியம், போர், சமூகச் சமவீனம், விளிம்புநிலை வாழ்வியல் கோல ங்கள், எனப் பல தளங்களில் அவரது ஓவியக் கண்காட் சிகளை பார்த்து பயணித்து வந்துள்ளேன் என்ற வகையில் எளிமையான பொருட்கள், ஆனால் அர்த்தம் பொதிந்த வண் ணங்கள், படிமங்கள், கோடுகள், நுண்வரைபுகள் மூலம் யதார்த்தம், மீயதார்த்தம் கலந்த உணர்வுகளை ஓவியங் களில் வெளிப்படுத்துவதால் அவர் தனித்துத் தெரிகிறார். இவர் சூழலில் கிடைக்கும் பொருட்களையே ஓவியமாக மாற்றிப் பார்ப்பவர். ஒடுக்கப்பட்ட மக்களை வரைபடங்களா கவும் புறக்கணிக்கப்பட்ட வாழ்வியலையும் அல்லது கண்டுகொள்ளாமல் போன வாழ்வை சித்திரமாகவும் வரைவதன் மூலம் கெத்சமனி சமகால ஓவியப்பரப்பில் தனக்கென நீங்கா இடத்தைப் பெறுகிறார். வாசன் தனது கலை வழியே பார்ப்போரின் சுய பிரக்ஞைக்குள் சமூக விமர்சனத்தை செய்கிறார். எல்லாவற் றிற்கும் மேலாக மனிதாய குணத்தை உணர்வ தற்கு அழைக்கிறார். அவர் நினைவாலயங் களையோ நினைவுத்தூபிகளையோ நிர்மா ணிப்பதற்கு நம்மை அழைக்கவில்லை. அல்லது சம்மந்தப்பட்டவர்கள் மீது பழிசுமத்தவுமில்லை மாறாக நாம் எவ்வளவு வன்மமும் கொடூரமும் நிறைந்த காட்டு தர்பாருக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைவு கூர்கிறார். கெத்ச மனியில் வரும் குழந்தைகளின் எந்தவொரு ஓவியமும் இலட் சியப்படுத்தப்பட்டதாகவோ குண்டுவெடிப்பு கோரக்காட் சிகளை சித்தரிப்பதாகவோ இல்லை.

குழந்தைகள் அனைவரும் தத்தமக்கேயுரிய இயல்புடனும் குழந்தைத்தன குதூகலத்துடனும் அவர்களின் சின்னச்சின்ன ஆர்வங்களுடனும் ஆசைகளுடனும் யதார்த்த மனிதர்களாக வரையப்பட்டுள்ளதோடு அவர்களைப் பற்றிய குறிப்புகளும் அருகில் எழுதப்பட்டுள்ளன. கரியும் தேயிலைச்சாயமும் கொண்டு மிக நேர்த்தியாக வரையப்பட்டுள்ள வசீகர முகங் களைப் பார்க்கும் போது கனிவும் இரக்கமும் தோன்றினாலும் அருகிலுள்ள குறிப்புகளைப் படிக்கும்போது நிம்மதி இழக்கச் செய்கின்றன. நாகரிகமிக்க யுகமா நம்முடையது என்று மானுட சமூகத்தை நோக்கி ஆழமான கேள்விகள் எழு கின்றன. நிஜமான குழந்தைகள், பெண்கள், திருத்தந்தை யர்கள் உட்பட மாதாவும் மகனும் அவர்களின் ஆத்மார்த்த உருவம் கெடாமல் ஒளி மிகாமலும் சாதுவான இயல்பான வர்ணச் சேர்க்கைகளுடன் மறு உருவாக்கம் செய்திருக்கிறார் வாசன். காணாமலாக்கப்பட்டவர்களின் கதை ஒன்றும் புதிதல்ல, ஈராயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் அது நெடுங் கதையாய் நீண்டு செல்கிறது எனக்கூறி வாசன் பதின்ம வயதில் காணாமல் போன இயேசுவின் வரலாற்றுடன் கெத்ச மனியை இணைத்துவிடுகிறார். வாசன் கூறுவதை சற்றுக் கேளுங்கள், வாழ்க்கையில் எத்தனையே முகங்களைக் கடந்து செல்கிறோம், அவர்கள் எல்லோரையும் நாம் நினைவில் வைத்திருப்பதில்லை நின்று நிதானித்து கூர்ந்து பார்ப்பதற்கு அவகாசமில்லாத அவசரக் கதியில் வாழ்கி றோம். ஆனால் ஒவ்வொரு முகத்திற்குப் பின்னாலும் பல நூறு கதைகள் கொட்டிக் கிடக்கின்றன என்கிறார். கெத்ச மனியில் ஒரு சிலவற்றைத் தவிர எல்லாமே போட்ரைட் முகங் களாகத்தான் தெரிந்தன. அசல் ஒன்று இல்லாமல் நகல் உரு வாவதில்லை. அந்த அசலுக்குள் இருக்கும் சாதாரண, அதே நேரம் மகத்தான மனிதர்களின் மறக்கப்பட்ட, பேசப்படாமல் போன கதைகளை வெளியே கொண்டு வந்திருக்கிறார் வாசன். உண்மையைப் போல, நீதியைப் போல வலிமையா னதும் நியாயமானதும் வேறு என்னதான் இருக்கிறது.

idrees@thaiveedu.com



# படிம அரங்கு:

## ஆற்றுகை, நிகழ்த்துமுறை, உத்தி, வடிவம், பயன்பாட்டுத் தளங்கள்

# அறிமுகமும் அனுபவப் பகிர்வும்

**ரூபன் சிவராஜா**

**ஒரு முரண்பாட்டுச் சூழலில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் உணர்வுகள், சூழ்நிலைகள், விருப்பங்கள், முடிவுகள் வெவ்வேறு பார்வைகள் குறித்த உரையாடல்களுக்கும், புரிதல்களுக்குமான வெளிகளைத் திறக்கின்றன. சரி – தவறு என்ற கறுப்பு வெள்ளை அணுகுமுறை, பார்வைகளுக்கு அப்பாலான வெவ்வேறு பார்வை, நிலைப்பாடு, தீர்வுகளைத் தேட இடம்கொடுக்கின்றது படிம அரங்கு.**

ஆற்றுகைக்கான வடிவத்திற்கும் அதனூடு எடுத்தாளப்படும் பேசுபொருளுக்கும் தொடர்புண்டு. குறிப்பிட்ட ஒரு கலை வடிவத்திற்கு ஊடாக எந்தவகையான பேசுபொருளையும் நிகழ்த்த முடியும், ஆற்றுகை செய்யமுடியும். எடுத்துக்கொண்ட பேசுபொருளின் தன்மைக்கு ஏற்ப குறித்த அந்தக் கலை வடிவத்தினைக் கையாள முடியும். அதற்குள் பேசுபொருள் கோரும் உள்ளீடுகளையும் மாற்றங்களையும் கொண்டுவரமுடியும். அதாவது ஒரு வடிவத்திற்குள் பல்வேறு பொருட்களைப் பேசலாம். எந்தவொரு கலை வடிவத்தினையும் அதன் இலக்கணங்களுக்குள் நின்றுகொண்டே வெவ்வேறு பொருட்களைப் பேசவும் முடியும். கலை வடிவத்தின் இலக்கணங்களைத் தெரிந்துகொண்டு அவற்றை மீறவும் முடியும். இதற்கு அடிப்படையாகப் படைப்பாளியின் கலைப் பார்வையும் புத்தாக்கச் சிந்தனையும் அமையும்.

பெரும்பாலான கலை வடிவங்கள் ஒருவழித் தொடர்பாடலாகவே நிகழ்த்தப்படுகின்றன. ஒருவழித் தொடர்பாடலைத் தகர்த்தெறிந்து பார்வையாளர்களையும் அரங்கின் முக்கிய அங்கமாக இணைத்துக் கொள்கின்ற நோக்கில் உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட்டதுதான் 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு'. இதனை வடிவமைத்து உலகெங்கும் பரவச் செய்த கலைச் சிற்பி பிரேசில் நாட்டு அரங்கவியலாளர் Augusto Boal.

30.04.2025 அன்று நடைபெற்ற நோர்வே தமிழ்ச் சங்கத்தின் சித்திரை விழாவில் எமது அரங்கச் செயற்பாட்டுக் குழுவால்





படிம அரங்கு வடிவத்தைத் தழுவிய ஆற்றுகை நிகழ்த்தப் பட்டது. படிம அரங்கு, 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு' வடிவங்களில் ஒன்றாகும். நோர்வேயில் முதற்தடவையாக இவ் வடிவத்தைத் தழுவி நாம் நிகழ்த்திய ஆற்றுகை இது.

## ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்கள்:

இவ் வடிவமும் Forum Theatre போல சபையோருடன் இணைந்தவாறு ஆற்றுகையினை வளர்த்துச் செல்லும் நிகழ்த்து முறையைக் கொண்டதே. ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு 'ஒருவழி'த் தொடர்பாடலை உடைத்துப் போடுகின்றது. பார்வையாளர்களை ஈடுபடவைப்பதற்கான வெளிகளைத் திறப்பதே அதன் அடிப்படையான இயங்குதளம். அந்த இலக்குகளுக்காக Augusto Boal-இனால் தோற்றுவிக்கப்பட்டவையே மக்கள் அரங்கு, கட்புலனாகா அரங்கு, படிம அரங்கு, செய்தித்தாள் அரங்கு, சட்டவாக்க அரங்கு, வானவில் அரங்கு (Forum theatre, Invisible theatre, Image theatre, News paper theatre, Legislative Theatre, Rainbow of desire) எனவான வடிவங்கள். இவை அனைத்தும் ஆற்றுகையாளர்கள் - பார்வையாளர்கள் இடையேயான இடைவெளியைக் குறைக்கின்ற நிகழ்த்துகை வடிவங்கள். ஆனாலும் ஒவ்வொன்றும் தனித்துவமான உத்திகள், நிகழ்த்துமுறைகள், வெளிகள், விளைபயன்களைக் கொண்டவை. 30.04.25 அன்று நாம் நிகழ்த்திய படிம அரங்கில் உயரமான மேடை பயன்படுத்தப்படவில்லை. பார்வையாளர்கள் அமர்ந்திருக்கும் அரங்கின் ஒரு பகுதியில் அவர்கள் நெருக்கமாக உணரத்தக்க சமதளத்தில் ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது.

நாம் முன்னர் 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின்' Forum Theatre வடிவத்தினைத் தழுவிப் பல அரங்க ஆற்றுகைகளை முன்னெடுத்திருக்கின்றோம். இறுதியாக கடந்த ஆண்டு டிசம்பர் 8-இலும் இந்த ஆண்டு பெப்ரவரி 2-ஆம் திகதியும் 'ஒரு கல்யாணக் கதை' தலைப்பில் முற்றிலும் பார்த்தல் அனுபவத்திற்குரிய ஒரு நாடகமும் - அந்நாடகப் பேசுபொருளின் உச்சக்கட்ட முரணை முன்வைத்து மக்கள் அரங்குமாக நிகழ்த்தினோம். நோர்வே - ஒஸ்லோ வாழ் கலை ஆர்வலர்கள் பலருக்கு அந்த வடிவத்தில் பங்கேற்ற அனுபவமும் பரிச்சயமும் உண்டு.

## தழுவல், மாற்றம், உள்ளீடு:

படிம அரங்கினை அதன் மூலவடிவ நிகழ்த்துமுறையில் நாங்கள் நிகழ்த்தவில்லை. அதனைத் தழுவிய ஒரு வடிவத்தினை உருவாக்கியிருந்தோம். பாத்திரங்களுக்குரிய உடைகள், அரிதாரங்கள், அரங்கப் பொருட்கள், பின்னணி இசை என்பனவற்றைப் பயன்படுத்தினோம். கதையின் ஓட்டத்தினைப் பார்வையாளர்கள் புரிந்துகொள்ளும் வகையில், கதைசொல்லிகளைப் பயன்படுத்தியிருந்தோம்.

ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்களுக்கென்று தனித்தனியான தனித்துவமான விதிமுறைகள், உத்திகள், நிகழ்த்துமுறைகள் இருக்கின்றன. ஆனால் அந்தச் சட்டகங்களுக்குள் மட்டுமாக நின்றுகொண்டுதான் அவற்றை ஆற்றுகை வடிவங்களாக முன்னெடுக்க வேண்டுமென்று 'அகுஸ்ரு போல்' கூறவில்லை. தேவைகள், சூழல்கள், நோக்கங்களுக்கு ஏற்ப அவற்றில் மாற்றங்களை உள்வாங்கி வளர்க்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம். ஒரு கலை வடிவத்தினைத் தழுவவும் அதனை மீறவும் அடிப்படையாக அதனுடைய விதிகளைத் தெரிந்திருக்க வேண்டும். விதிகளை மீறுவதற்கான அடிப்படை விதிகளைத் தெரிந்திருப்பதாகும்.

படிம அரங்கினை நாம் நிகழ்த்திய முறையினை எளிதாக விளங்கப்படுத்துவதானால் ஒரு 'Slide show - ஒளிப்படக் காண்பியம்' காட்சியுடன் ஒப்பிடலாம். அந்தச் Slide show-விற்கு Caption இருக்கும். அத்தகைய Slide காட்சிகளில் பின்னணி இசையும் சிலவேளைகளில் இணைப்பதுண்டு அல்லவா. நாம் நிகழ்த்திய படிம அரங்கினை அத்தகு உருவகத்தினூடு புரிந்துகொள்வது பொருத்தம் என நினைக்கின்றேன்.

## நிகழ்த்துமுறையின் படிநிலைகள்:

இத்தகைய அரங்கமுறையினை முதன்முதல் நிகழ்த்தியதால் அது குறித்த ஒரு புரிதலைப் பார்வையாளர்களுக்கு வழங்க வேண்டியிருந்தது. ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின் நோக்கம் மற்றும் அதன் உட்பட்ட வடிவங்கள் குறித்த சுருக்கமான அறிமுகத்தினை வழங்கினோம். பின்னர் பார்வையாளர்களை அரங்கிற்குத் தயாராக்கும் வகையில் அரங்க விளையாட்டில் (Theatre Game) அவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இதனை ஒரு 'Warm up session' என்றும் சொல்லலாம்.

படிம அரங்கின் ஆற்றுகைப் பகுதியில் உரையாடல்கள் இருக்காது. அசைவுகள் இருக்காது. முழுக்க முழுக்க படிமங்களுக்கூடாக, அதாவது உடல்களையும் மெய்ப்பாடுகளையும் கொண்டு - அசைவற்ற காட்சிப் படிமங்களுக்கூடாகத்தான் (still images / freeze-frames) கதை சொல்லப்பட்டது.

## கதை – முரண்பாடு – படிமங்கள்:

இதுவொரு குடும்பக் கதை. கதை என்றால் அதில் முரண்பாடு இருக்கும், உறவுச் சிக்கல், முறுகல் இருக்கும், உணர்வுகள் இருக்கும். இந்தக் கதை புலம்பெயர் வாழ்வில் எம்மவர்

முகம்கொடுக்க நேர்கின்ற கதைதான். வயதாகி நோய்வாய்ப் பட்ட ஒரு பாட்டியை வீட்டில் வைத்து பராமரிப்பதா? பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்புவதா? என்பதில் குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான உணர்வுப் போராட்டமே கதையின் மையப்புள்ளியும் முரண்பாடும். புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரை, குறிப்பாக நோர்வேயில் இது தமிழர்கள், வெளிநாட்டுச் சமூகங்கள் மற்றும் நோர்வேஜிய சமூகத்திலும் முக்கியமான சமகாலப் பேசுபொருட்களில் ஒன்று. நாட்டில் 'முதியோர்-அலை' அதிகரித்து வருகின்றது. இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் அது மேலும் அதிகரிப்பை நோக்கிச் செல்லவுள்ளதான தரவுகளும் அவை குறித்த விவாதங்களும் நோர்வேயில் இடம்பெற்றுவருகின்றன. படிம அரங்கில் நாம் எடுத்த பேசுபொருள், அதன் வாழ்வியல், சமூக, அரசியற், பொருளாதாரப் பரிமாணங்கள் குறித்துப் பிறிதொரு கட்டுரை எழுதவுள்ளேன். இந்தப் பத்தி படிம அரங்கின் நிகழ்த்துமுறை குறித்து மட்டும் கூடுதற் கவனம் செலுத்துகின்றது.

கதை ஒரே வீட்டில் வாழும் மூன்று தலைமுறையினரைக் கொண்ட குடும்பத்தில் நிகழ்கிறது. குடும்ப உறுப்பினர்கள் முதலில் வீட்டுச் சூழலில் அறிமுகப்படுத்தப்பட்டனர். அதன் பின் ஐந்து படிமங்களைக்கொண்டு ஆற்றுகை அமைக்கப்பட்டிருந்தது. முரண்பாட்டின் உச்சகட்டத்தில் ஆற்றுகை நிறுத்தப்பட்டுப் பார்வையாளர்களை இணைக்கும் செயல்முறைக்குட் கொண்டுசெல்லப்பட்டது. பார்வையாளர்கள் தமது கருத்துகளை வாய்மொழியாகச் சொல்வதற்குரிய இடமளிக்கப் பட்டது. அத்தோடு படிம அரங்கில் குடும்பத்தில் ஏற்பட்ட முறுகல் நிலை, மற்றும் முரண்பாட்டினை வெளிப்படுத்திய காட்சி ஆகிய இரண்டு படிமங்களிலும் பார்வையாளர்கள் தமது நிலைப்பாடுகளுக்குரிய மாற்றங்களைச் செய்யவும் வேண்டப்பட்டனர். மாற்றம் எனும்போது நாம் காட்சிப்படுத்தி, ஆற்றுகை செய்த படிமங்களுக்கு மாற்றான படிமங்களை வடிவமைக்க அனுமதிக்கப்பட்டனர். அதற்கான நியாயங்களையும் அவர்கள் தமது பார்வை, அனுபவங்களினூடு வெளிப்படுத்தினர்.

அடிப்படையில் பெரும் மண்டபத்தில் மக்கள் திரள் மத்தியில் கலை நிகழ்வாக நடத்தப்படும் வடிவமாக படிம அரங்கு Augusto Boal-இனால் உருவாக்கப்படவில்லை. அது 50 - 100 வரையானவர்களின் பங்குபற்றலுடன் ஒரு செயலமர்வு, பயிற்சிப் பட்டறை (Seminar, Workshop) போன்ற செயற்பாடுகளுக்கான அரங்க ஆற்றுகை வடிவங்களாகவே இவை கூடுதல் பொருத்தமுடையவை. ஆனால் நாம் அவற்றை நிகழ்த்தும் போது அதனை பார்த்தல் அனுபவத்திற்குரிய ஆற்றுகை வடிவமாக (Theatercal experience) நிகழ்த்துவதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. அந்த வகையில் அரங்க அமைப்பு, அரங்கப் பொருட்கள், உடையலங்காரம், இசை, ஒவ்வொரு படிமங்களையும் இணைத்துக் கதைசொல்லிகள் (Narrators) மூலம் சிக்கனமான சொல்லாடல்களில் வெளிப்படுத்தியிருந்தோம்.

## புதிதாகச் சிந்தித்தல், மாற்று அணுகுமுறை:

பெரும்பான்மை கருதுகின்றது, வலியுறுத்துகின்றது என்பதால் மட்டும் எந்தவொரு விடயத்திலும் ஏற்றுக்கொள்ளல் இருக்கக்கூடாது. குறிப்பாக அதிகார, சமூக ஒடுக்குமுறைகள் சார்ந்து விமர்சனம், பகுப்பாய்வு, பகுத்தறிவு, எதிர்வினை, மாற்றுப் பார்வை அவசியம். அவற்றுக்குரிய வெளியை உருவாக்குதல் 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின்' முதன்மை நோக்கங்களில் ஒன்று.



படிம அரங்கிற் பார்வையாளர்களுக்கான ஊடாட்ட, பங்கேற்பு வெளி பெரியது. உரையாடல்களையும் அசைவுகளையும் கொண்ட நாடகத்தில் அல்லது Forum theatre-இல் பாத்திரங்

கள் தத்தமது நிலைப்பாடுகளை வார்த்தைகளில் வெளிப் படுத்துவர். உரையாடல்கள், அசைவுகள் மூலம் அந்தந்தப் பாத்திரங்களின் உணர்வுகள், சூழ்நிலை, நடத்தை, எடுக் கின்ற முடிவுகள் பார்வையாளர்களுக்குச் சென்றடையும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே பார்வையாளர் கள் தமது மாற்றுக் கருத்துகள், விமர்சனங்களை, தீர்வுகளை முன்வைக்கமுடியும். அதாவது அங்கு ஒரு கதை, சூழல், பாத் திரங்களின் உணர்வுகள் நிறுவப்பட்ட நிலையில் வெளிப் படுத்தப்படுகின்றன. ஆனால் படிம அரங்கில் அப்படியல்ல. உரையாடல்களும் அசைவுகளும் அற்ற உறைநிலைப் படி மங்களே அங்கு வெளிப்படுகின்றன. அந்நிலையில் ஒரு பாத்திரம் ஒரு செயற்பாட்டைச் செய்கின்றது, ஒரு முடிவை எடுக்கின்றது, ஒரு முரண்பாட்டுக்குக் காரணமாக இருக்கின் றது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பாத்திரம் ஏன், எதற்காக, எந்தச் சூழ்நிலையில், எந்த அனுபவத்தின் விளை வாக, எந்த மனநிலையில், எந்த உணர்வில் அந்த முடிவினை அல்லது செயலினை முன்னெடுத்தது என்பது படிம அரங் கில் வார்த்தைகளில் சொல்லப்படுவதில்லை. உடல் அசைவு களிலும் சொல்லப்படுவதில்லை. இவற்றையெல்லாம் தமது நிலையிலிருந்து, அனுபவத்திலிருந்து பார்வையாளர்கள் புரிந்துகொள்ளவும் எதிர்வினையாற்றவும் மாற்று நடவடிக் கைகள், தீர்வுகளை முன்வைக்கவுமான பெரிய வெளி படிம அரங்கிற் சாத்தியமாகின்றது.

## படிம அரங்க வடிவத்தின் தோற்றத்திற்கான காரணம்:

படிம அரங்கானது சொற்கள் எவ்வாறு புரிந்துகொள்ளப்படு கின்றன என்பது தொடர்பான கேள்வியிலிருந்து தோன்றிய வடிவம். சொற்கள் சமூகத்திற்குச் சமூகம், மொழிக்கு மொழி, கலாசார பண்பாட்டுப் பின்னணிகளுக்கேற்ப வேறுபடுகின் றன. ஒரே சொல் வெவ்வேறு நாடு, மொழி, பண்பாட்டுச் சூழல் களில் வெவ்வேறு பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றன. ஒரே வார்த்தைக்கு வெவ்வேறு மொழி, பண்பாடுகளில் வெவ் வேறு புரிதலும் பொருளும் புழக்கத்திலுள்ளன. இந்தச் சூழ்நி லைகளிலும் வார்த்தை நீக்கம் செய்யப்பட்ட அரங்க வடிவ மான படிம அரங்கின் பயன்பாடு உள்ளது. படிம அரங்கின் தனித்துவங்களில் முதன்மையானது, அது கொண்டுள்ள ஊடாட்டவெளி. பார்வையாளர்களை உள்ளீர்ப்பதில், எதிர்வி னையாற்றவைப்பதில், மாற்றுத் தீர்வுகளுக்குத் தூண்டும் வகையிலான பெருவெளியைக் கொண்டுள்ளது.

## வார்த்தைகள் என்பது என்ன?

வார்த்தை என்பது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக் குமிடையிலான வெற்றிடத்தை நிரப்புகின்ற கருவி. அந்தக் கருவியே அடிப்படையில் வெற்றிடங்களால் ஆனது என்பது Augusto Boal-இன் எண்ணம். வார்த்தைகளை மணலில் கிறுக்கும் கோடுகளாக, காற்றில் செதுக்கும் ஒலிகளாக அவர் உருவகப்படுத்துகின்றார்.

எமது விருப்பங்கள், ஆசைகள், உணர்வுகள், கருத்துகள், பார்வைகள், நோக்கங்களால் அந்த வார்த்தைகளை நாம் நிரப்புவதால் அவற்றின் அர்த்தத்தை நாம் அறிந்து வைத் திருக்கின்றோம். அதாவது வார்த்தைகளை உச்சரிக்கும் எம்மிடம் அவற்றின் பொருள் குறித்த உணர்வும் அறிதலும் இருக்கின்றது. ஆனால் அந்த வார்த்தைகளைச் செவிமடுப் பவருக்கு அது அப்படியே சென்றடையுமா? என்பது பற்றிய துல்லியமான அறிதல் எம்மிடம் இருக்காது. அதாவது ஒரு வரால் உச்சரிக்கப்படும் அதே உணர்வு, கருத்து, விருப்பம், பார்வை, ஏற்பு செவிமடுப்பவரிடமும் இருக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. அத்தகைய சூழலில் படிம அரங்கு (Image Theatre) வார்த்தைகள் (உரையாடல்கள்) இல்லாமல், உடல் களால் உருவாக்கப்படும் காட்சிப் படிமங்கள் ஊடான தொடர்பாடல், ஊடாட்ட வெளிகளை அனுமதிக்கின்றது.

ஒரு முரண்பாட்டுச் சூழலில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் உணர்வுகள், சூழ்நிலைகள், விருப்பங்கள், முடிவுகள் வெவ் வேறு பார்வைகள் குறித்த உரையாடல்களுக்கும், புரிதல்க ளுக்குமான வெளிகளைத் திறக்கின்றது. சரி - தவறு என்ற கறுப்பு வெள்ளை அணுகுமுறை, பார்வைகளுக்கு அப்பா லான வெவ்வேறு பார்வை, நிலைப்பாடு, தீர்வுகளைத் தேட இடம்கொடுக்கின்றது.

## உலகெங்கும் பரவலாகப் பல தளங்களில் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்கள்:

ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின் ஆற்றுகை வடிவங்கள் உலகின் பல பாகங்களிலும் - நாடுகள், கண்டங்கள், பிராந் திய எல்லைகளைத் தாண்டிப் பரவலாக அறியப்பட்ட, கையா ளப்படும் அரங்க வடிவமாக உள்ளது. மேற்கில், குறிப்பாக நோர்வே உட்பட்ட நோர்டிக் நாடுகளில் அது அரசியல், சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அதிகம் பயன்படுத்தப்படுவ தில்லை. மாறாக உளவியல் சார்ந்த, குறிப்பாக தனிமனித மற்றும் மனித உறவுகள் சார்ந்த உளவியல் ரீதியில் அதிகம் கையாளப்படுகின்றது. மாற்றம், ஒடுக்குமுறை என்பன சமூ கம், அரசியல் என்ற பெரும் தளங்களுக்குரியவை மட்டு மல்ல. அத்தகைய பெரும்தள மாற்றங்கள் என்பது அடிப்ப டையில் தனி மனிதர்களில் இருந்து தொடங்கப்படவேண் டியது. தனி மனிதர்களின் மனத்தடை, தனக்குள் ஒடுங்குதல் என்பதை உடைத்து, அதிலிருந்து விடுதலையாதல், மனத் தடை நீங்குதல் - செயற்பாட்டு ரீதியான பங்கேற்பினை ஊக் குவித்தல் என்பதான ரீதியிலும் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்கள் நோர்டிக் நாடுகளில் அதிகம் பயன்படுத் தப்படுகின்றன.

உதாரணமாக நோர்வேயின் பல்கலைக்கழகமொன்றில் தொழில்முனைவோர் மேன்நிலைக் கல்வித்திட்டம் ஒன்றிற் காக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய் வில் வேலைத்தள வாழ்வில் நிலவும் முரண்பாடுகளை வெளிக்கொணரும் வகையிலும், நேர்மறை மாற்றங்களையும் தீர்வுகளையும் கண்டடையும் நோக்கிலும் படிம அரங்கு பயன் படுத்தப்பட்டுள்ளது. நேர்காணல்கள், ஆய்வில் பங்குபற்று வோரின் அனுபவங்கள், கருத்துகள், பார்வைகள், மதிப்பீடு கள், அவதானிப்புகள் உட்பட்ட தரவுத்தொகுப்புகளுடன் உடல்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட படிமங்களும் ஆய்வு வழிமுறைகளில் ஒன்றாகக் கையாளக்கூடியமையை அந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது (Boal's Image Theatre as Embodied Exploratory Reflection - A Study with Business Leaders as Research Participants, Linda Wilhelmsen, July 2018)

## சமூக மாற்றத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய கருவி:

நாடகத்தை சமூக மாற்றத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய உரையாடலாகவும் வாய்ப்பாகவும் Boal கண்டார். பிரேசில் நாட்டில் 1960-களில் நிலவிவந்த வறுமை, ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களின் அனுபவங்களை நாடகமாக்கினார். Boal-இன் பல நாடகங்கள் ஆட்சியாளர்களால் தடைசெய்யப்பட்டன. 1971-இல் பிரேசிலின் இராணுவ ஆட்சிபீடம் அவரை சிறையில் அடைத்தது. விடுதலையின் பின் அவர் நாடுகடத்தப்பட்டார். அர்ஜென்டீனா, போர்த்துக்கல், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் 15 ஆண்டுகள் வாழ்ந்தார். அங்கெல்லாம் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்களை அவர் நிகழ்த்தி, வளர்த்து, பரவலான பயன்பாட்டை அடையவும் தொடர்ச்சியாக இயங்கினார். நோர்வேயில் Boal-இன் அரங்க உத்திகளும் சிந்தனைகளும் அதிகமாக நாடக, அரங்கக் கல்வித்துறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அரசியல் நாடகங்களிலும் அவரது அனுபவங்களும் சிந்தனைகளும் கைக்கொள்ளப்பட்டுள்ளன.

ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின் வெவ்வேறு வடிவங்களும் சமூக, அரசியல், பண்பாட்டு மாற்றங்களுக்கான கருவியாக அரங்கினை (நாடகத்தினை) பயன்படுத்துகின்ற - கையாளுகின்ற நோக்கங்களையும் வெளிகளையும் கொண்ட அரங்க வடிவங்களை உள்ளடக்கியதாகும். அடிப்படையில் விவசாயிகள், தொழிலாளர்களின் உரிமைகள், அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளை எதிர்க்கும் வகையில் பிரேசிலில் தொடங்கப்பட்ட நாடக வடிவம் இது. இன்றைய சூழலில் உலகம் முழுவதும் பரவலாக அறியப்பட்டதும் சமூக, அரசியல், கல்வித் துறைகளில் பயன்படுத்தப்படும் வடிவங்களாக உள்ளது. சமூக மாற்றம் என்ற தளத்தோடு, முரண்பாட்டுக் களைவு, சமூக மேம்பாடு, மனித உறவுச் சிக்கல்களைக் கையாளுதல், உளவியல் ஆற்றுப்படுத்தல், சட்டவாக்கம், போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

## ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி:

Paulo Freire பிரேசில் நாட்டு கற்பித்தல் நிபுணர். ஒடுக்கப்பட்டவர்களுக்கான கற்பித்தல் முறைமைகளை வடிவமைத்தவர். அவருடைய சிந்தனைகள் கற்பித்தல்சார் முறைமைகளால் ஈர்க்கப்பட்ட Boal ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்களை உருவாக்கி வளர்த்தெடுத்தார். அடிப்படையில் இந்த அரங்க வடிவங்கள் விமர்சனபூர்வமானதும் மாற்றுச் சிந்தனைகளையும் (Critical thinking) ஊக்குவிக்கின்றது.

ஒரு விடயம், பேசுபொருள், முரண்பாடு, சூழமைவு சார்ந்து ஏற்றுக்கொள்ளலை விடுத்து அதனைப் பகுத்தறிவதை வலியுறுத்துகிறது. பதில்களைக் கொண்டிருத்தலை விடுத்து கேள்விகள் எழுப்பப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. பேசிக்கொண்டிருப்பதை விடுத்துச் செயலை முதன்மைப்படுத்துகிறது என்பதே ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின் நோக்கமும் இயங்கு முறையுமாகும். பேச்சுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தாண்டிச் செயற்படுவதற்கு முன்னுரிமை அளிப்பது Boal இனதும் Freire இனதும் ஆத்மார்த்தமான வேணவாவாகும். (It is also about 'acting' rather than just talking)

## ஒருவழித் தொடர்பாடலைத் தகர்க்கும் வடிவம்:

வழமையான அல்லது பாரம்பரியமான நாடக ஆற்றுகை வடிவங்கள் ஒருவழித் தொடர்பாடலைக் கொண்டவை. நாடகத்தை நடத்துவோர் தாம் நினைத்ததைச் சொல்கின்றதே தவிர பார்வையாளர்களை ஓர் அங்கமாக இணைப்பதில்லை. அது ஒரு வகையில் அதிகாரம் இருப்போர் தமது கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் திரும்பத்திரும்ப வலியுறுத்தித் தமது அதிகாரத்திற்கு ஆதரவான நிலையைப் பேணுகின்ற, வளர்க்கின்ற வலுவடையச் செய்கின்ற விளைவுகளைக் கொண்டுள்ளது. அது ஒடுக்குவோர் - ஒடுக்கப்படுவோர் என்ற நிலையைப் பேண வழிவகுக்கின்றது. எனவே அந்த வடிவத்தில் ஓர் உடைப்பினைச் செய்து பார்வையாளர்கள், ஆற்றுகையாளர்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பது - பார்வையாளர்கள் என்ற பதத்தினையே இல்லாமல் ஆக்கி அவர்களையும் ஆற்றுகையின் அங்கமாக்குதல் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின் முதன்மை இலக்கு. அவ்வாறு அங்கமாக்குதலின் ஊடாக மாற்றங்கள், தீர்வுகள், மாற்றுச்சிந்தனைகளை உருவாக்குதல் அதன் விளைபயனாகும்.

ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவங்களில் பார்வையாளர்கள் 'ஆற்றுகையாளர்'களாக மாறுகிறார்கள். நாடகம் எனும் கலைத்துவ, அழகியல், மற்றும் உணர்ச்சிகரமான மொழியின் ஊடாகப் பார்வையாளர்கள் தாம் அறிந்த, கேள்விப்பட்ட அல்லது நேரடி அனுபவம் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் சார்ந்து தங்கள் கருத்துகளைப் பகிர அழைக்கப்படுகிறார்கள். Boal-இன் புத்தகங்கள் 35-இற்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன, உலகம் முழுவதும் ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள், சிகிச்சையாளர் மற்றும் செயற்பாட்டாளர்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த அரங்க வடிவங்கள் நிலவுகின்ற சமூக, அரசியல், வாழ்வியல், மனித உறவுசார் யதார்த்தத்தினை, விமர்சன அணுகுமுறையுடன் பிரதிநிதித்துவம் செய்வதற்கும், உரையாடுவதற்கும், மாற்றத்தினை ஏற்படுத்தவும், திட்டவட்டமான செயல்களைக் கண்டடைவதற்கும் தூண்டுகின்ற நோக்கம் கொண்டது. கடந்த சில தசாப்தங்களாக குறிப்பாக 1990-களின் தொடக்கத்திலிருந்து ஒடுக்கப்பட்டவர்களுக்கான அரங்கு சார்ந்த நாடக விளையாட்டுகள் (Theatre Games), பயிற்சிகள் (Theatre exercises) உத்திகள் (Techniques), நிகழ்த்துமுறைகள் (Theatre forms) உலகம் முழுவதும் அரங்கக் கலை, கற்பித்தல் முறை, ஆய்வுத்துறை, கருத்தமர்வு, பயிற்சிப்பட்டறைகளுக்கு வலிமையான கருவிகளாக மாறியுள்ளன. இது ஒரு பங்கேற்புக் கலை வடிவம். தனிநபர் மத்தியிலும் ஒரு சமூகத்திரள் மத்தியிலும் கூட்டுப்பொதுமாற்றத்திற்கான உந்துதலாகவும், ஒடுக்குமுறைக்கு எதிரான செயலாகவும் விடுதலைக்கான உந்துதலாகவும் இதன் இயங்குதளம் பயன்பாட்டினைக் கொண்டுள்ளது.



rooban.s@thaiveedu.com

■ ஓவியர் ஜீவா

# கறுப்பும் வெள்ளையும் சாம்பல் நிறமும்



உலகம் வண்ணங்களால் நிறைந்தது. ஒவ்வொரு வண்ணமும் ஓர் உணர்வை நமக்கு தரும் அல்லது தொட்டுச் செல்லும். விளக்கங்களுக்கு உட்படாத உணர்ச்சிகளை பல சமயங்களில் வண்ணங்கள் மூலம் பெறுகிறோம். ஒவ்வொரு வண்ணமும் இன்னொன்றுடன் இணையும்போது புதிய வண் ணக்கலவை பிறக்கிறது. விசேடமான ஒரு வண்ணம்கூட அந்தக் கலவையிலிருந்து பிறக்கக்கூடும். இன்று நாம் காணும் புகைப்படங்களில் இருந்து திரைப்படங்கள் வரை வண்ணங்களால் தோய்ந்து கிடக்கின்றன. பல திரைப்படங் களை வண்ணங்கள் தவிர்த்து கற்பனை செய்யக்கூட முடி யாது! ஆனால் இந்த புகைப்படக் கலையும் பின்னர் சலனப் படக்கலையும் பிறந்து வளர்ந்து நடை பயிலும்போது வண் ணங்களின்றி கறுப்பு வெள்ளையில் உலா வந்தன என்பதை இன்று நினைக்கும்போது வியப்பாக இருக்கிறது! கறுப்பு, வெள்ளை மற்றும் இரண்டும் கலந்த சாம்பல் நிறத்தின் பல்வேறு கலவைகளை மட்டுமே நாம் சுவைத்து மகிழ்ந்து வந்திருந்தோம்!

கறுப்பு என்பது அறியாமை, இருள், மறைவு, துக்கம், அமங் கலம் ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அது மனதின் ஆழத்தில் இருக்கும் பயம், துயரம், அவமானம் ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

ஆனால் அதே சமயம், எங்கோ படித்தது போல, கறுப்பு எதையோ தொடங்குவதற்கான ஆரம்பமும் ஆகிறது. வெள்ளை நிறம் எதிர்மறையின் எதிர் மறை; அது பரிசுத்தம், நம் பிக்கை, வெளிச்சம் என்று கூறப்படும். வெள்ளை வெளிச்சம் எல்லா வண்ணங்களையும் உள்ளடக்கியது போல, அது மனிதனின் பூரணத்தை குறிக்கலாம். வெள்ளை என்பதே நேர்மறை!. இரு விளிம்புகளுக்கும் நடுவே நிற்கும் சாம்பல் நிறம்தான் உண்மையான வாழ்க்கையின் முகம். இது நல்ல தும் கெட்டதும் ஒன்றிணைந்த ஒரு நிலை. சாம்பல் என்பது சமநிலையின் அடையாளம்.

தத்துவ விசாரங்களை விட்டுவிட்டு கலையுலகிற்கு வரு வோம். புகைப்படக்கலை உருவானபோது நெகட்டிவ்களும் பதிவுகளும் கறுப்பு வெள்ளையிலேயே அமைந்திருந்தன.

அதற்கு முக்கியமான காரணம் தொழில்நுட்ப வரம்புகள் இருந்ததுதான். ஆரம்ப கால புகைப்படங்களை உருவாக்க பயன்படுத்தப்பட்ட இரசாயனங்கள் மற்றும் பதிப்பு முறைகள் நிறங்களைப் பதிவு செய்யும் திறன் இல்லாதவை. அதனால் பிம்பங்கள் ஒளியின் அளவு மற்றும் தீவிரத்தைக் கொண்டு மட்டுமே உருவானது; வண்ண விவரங்கள் பதிவு செய்ய முடி யவில்லை. பயன்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்கள் ஒளியின் வண்ண வெவ்வேறு கிரேடுகளுக்கு உணர்திறன் இல்லாததால், வண்ணம் வெளிப்படவில்லை. வண்ணங்களை விட ஒளியே அப்போது முக்கியமான ஆற்றலாக வெளிப்



tg.theeban@gmail.com

பட்டது. ஆகவே புகைப்படக்காரர்களுக்கு ஒளியினால் ஏற்படக்கூடிய கறுப்பு வெள்ளை, சாம்பல் நிறங்களின் அடர்த்தியின் அளவினால் புகைப்படங்களை பதிவு செய்யக்கூடிய ஆற்றலும் கலைத்தன்மையும் கூடியது. அகன்ற இயற்கைக் காட்சியும் சரி, அருகாமையில் கிளிக் செய்யப்பட்ட மனித முகமும் சரி, சாம்பல் நிறத்தின் வெவ்வேறு அடர்த்திகளினால் வண்ணங்கள் இன்றியே உயிர்ப்புடன் வெளிவந்தன.



கறுப்பு வெள்ளையில் காவியங்கள் படைத்த புகைப்படக் கலைஞர்களை அதன் ரசிகர்களான நாம் அறிவோம். அன்செல் ஆடம்ஸ் இயற்கை காட்சிகளைக் கறுப்பு வெள்ளையில் அற்புதமாக எடுத்த புகழ் பெற்ற புகைப்படக்காரர். ஹென்றி கார்ட்டியர் - பிரசான் மனிதர்கள் மற்றும் நகர வாழ்க்கையை கறுப்பு வெள்ளை பதிவுகளாக்கிய மேதை. ராபர்ட் கேப்பா போர் புகைப்பட பத்திரிகையாளர். போரின் அவலங்களையும், கொடூரங்களையும் கலையழகுடன் பதிவு செய்த முக்கியமான ஆவணகர்த்தா. அவரது புகைப்பட சட்டகங்கள் மிகப் பிரபலமானவை. டயான் ஆர்பஸ் சமூகம் மற்றும் மனித தன்மையை தனித்துவமாக எடுத்த புகைப்படக்காரர். இந்தியாவில் எனது இளமைக் காலத்தில் நான் ரசித்த புகைப்படக்காரர் ரகு ராய். சாதாரண மனிதர்கள் முதல் அரசியல் முக்கியஸ்தர்கள் வரை, வண்ணக் காலத்திலேயே கறுப்பு வெள்ளையில் பதிவு செய்தவர் இவர். இந்தியா டுடே போன்ற பத்திரிகைகளில் இவரது புகைப்படக் கட்டுரைகளுக்காகவே ஏராளமான ரசிகர்கள் இருந்தனர். மனிதர்களோடு நிற்காமல் தாஜ் மகால், வாரணாசி போன்ற இடங்களையும் மனிதர்களோடு கலந்து கறுப்பு வெள்ளைக் காவியங்களை படைத்தவர் இவர்.

**“ வண்ணங்களை விட ஒளியே அப்போது முக்கியமான ஆற்றலாக வெளிப்பட்டது. ஆகவே புகைப்படக் காரர்களுக்கு ஒளியினால் ஏற்படக்கூடிய கறுப்பு வெள்ளை, சாம்பல் நிறங்களின் அடர்த்தியின் அளவினால் புகைப் படங்களை பதிவு செய்யக்கூடிய ஆற்றலும் கலைத் தன்மையும் கூடியது. ”**

எனது குழந்தைப்பருவத்தில் திரைப்படங்கள் பெரும்பாலும் கறுப்பு வெள்ளையில்தான் திரையிடப்பட்டன. அபூர்வமாக சில வண்ணப்படங்கள் வந்திருந்தாலும் அது கறுப்பு வெள்ளை யுகம். புகைப் படங்களை வண்ணத்தில் காணும் முயற்சிகளில் ஒன்று செபியா வண்ணப் பிரதிகள் எடுப்பது. சில இரசாயனக் கலவைகள் மூலம் பழுப்பு நிறத்தில் புகைப்படப் பதிவுகள் வெளியாயின. இவற்றின் மீது ஒளி புகும் தன்மையுள்ள ட்ரான்ஸ்பரெண்ட் நீர் வண்ணம் கொண்டு வண்ணம் தீட்டி ஒரு வண்ணப்பட எபக்ட் (effect) தந்தனர். இதே பாணியை திரைப் படங்களுக்கும் பயன்படுத்தி ஒவ்வொரு சட்டகத்துக்கும் வண்ணம் தீட்டினர். இது காலவிரயமும் பண விரயமும் ஏற்படுத்தியது என்பதால் கைவிட்டனர்.

கறுப்பு வெள்ளை பிரதிகளின் தாக்கம் என் தலைமுறையை சேர்ந்தவர்களுக்கு அதிகம். பெரும்பாலும் திரைக்கு வெகு அருகில் இருக்கும் தரை டிக்கெட்டில் தான் படங்கள் பார்ப்பதுண்டு. தரை என்று பெயர் இருந்தாலும் நகரங்களில் பெஞ்ச் போட்டிருப்பார்கள். சாய முடியாது. கழுத்து நிமிர்த்திப் பார்த்தால் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் திரை பூதாகரமாகத் தெரியும். இப்படி பார்த்த திரைப்படங்கள் அதே கோணங்களில் நினைவுகளில் தங்கி விட்டன. மாலை நேரங்களில் தியேட்டர் கதவுகளை திறந்து விட்டு விடுவார்கள். அரங்கினுள் தென்றல் வீசும். இந்தச் சூழலில் பார்த்த படங்களும் அவற்றின் பாடல்களும் மறக்க முடியாதவை. ‘படித்தால் மட்டும் போதுமா’ படத்தில் ‘தண்ணிலவு தேனிறைக்க’, ‘தாயைக்காத்த தனயன்’ படத்தில் ‘கட்டித்தங்கம் வெட்டியெடுத்து’, ‘பாசமலர்’ படத்தில் ‘மலர்களை போல் தங்கை உறங்குகிறாள்’ போன்ற பாடல் காட்சிகளும் இன்னும் மனதுக்குள் கறுப்பு வெள்ளையில் தென்றல் வீசும் சூழலில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

திரைப்படங்கள் உருவானபோது ஆரம்பகால சோதனைகளைக் கடந்து பிரதிகள் கறுப்பு வெள்ளையில் அசையும் படங்களாகத் திரையில் தோன்றியதும் மக்கள் மிரண்டு போனார்கள். குதிரைகள் ஓடுவதும் ரயில் வண்டி ஓடுவதும், வண்ண உலகை வெறும் கண்களால் பார்த்தவர்களுக்கு ஒரு கறுப்பு வெள்ளை அதிர்ச்சி. பிறகு மெல்ல பழகிப்போனார்கள். புகைப்படங்களைப்போலவே சலனப்படங்களும் கறுப்பு வெள்ளை உலகத்தை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தின. அப்போது திரைப்படங்கள் ஒலி இல்லாமல் மௌனப்படங்களாக இருந்ததால், பார்வையாளர் கவனம் முழுவதும் படக்காட்சியிலேயே இருந்தன. அப்போது பெருகி வந்த முயற்சிகளில் ஒளியமைப்பு மீது கொண்ட கவனங்கள், திரைப்பட பிரதிகளை மெருகேற்றின. கலையம்சத்துடன் ஒளியமைப்புகள் உருவாக்கப்பட்டு ஒரு ஓவியத்தின் முப்பரிமாணத் தன்மையை திரைப்படங்களுக்குத் தந்தன.

அப்போதைய ஒளிப்பதிவாளர்கள் ஒளியின் சரியான பயன்பாட்டில் கறுப்பு வெள்ளையில் பல சாகசங்கள் புரிந்தனர். நான் ரசித்த சிலரை சொல்கிறேன். சத்யஜித் ராயின் முதல் திரைப்படம் ‘பதேர் பாஞ்சாலி’. பெரும்பாலும் தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவருமே புதியவர்கள். அதுவரை ஸ்டில் புகைப்படக்காரராக இருந்த சுப்ரதா மித்ரா முதன் முறையாக திரைப்பட ஒளிப்பதிவாளராக அறிமுகமானார். திரைப்படமே ஒரு கறுப்பு வெள்ளை காவியமாகத் திகழ்ந்தது. முக்கிய கதாபாத்திரங்களின் அண்மைக்காட்சிகள், புகைகக்கிக்கொண்டு தூரத்தே செல்லும் ரயில் வண்டி, குளத்தில்

பூச்சிகளின் நடனம், மிட்டாய் வியாபாரியின் நடை, வழுக் கைத்தலையில் விழும் முதல் மழைச்சொட்டு என்று கலை நயம் மிளிர்ந்த காட்சிகளால் சிறப்புப் பெற்றது இந்தப் படம். இவர் நீண்ட நாட்களுக்கு சத்யஜித்ராயின் ஒளிப்பதிவாள ராகப் பணி புரிந்தார்.

மிருணால் சென்னின் சில கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு கே.கே. மகாஜன் பணி புரிந்திருக்கிறார். யதார்த்தமான வெளிப்புறக்காட்சிகள், இயற்கையான ஒளியமைப்பு என்று யதார்த்த பாணியில் 'புவன் ஷோம்', 'இன்டர்வியூ', 'பதாதிக்', 'கல்கத்தா 71', 'கோரஸ்' படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார்.

ராஜ் கபூர் திரைப்படங்களில் நகரத்து ஏழ்மை, சாதாரண மனிதர்கள், இரவு அல்லது அந்தி நேரங்கள், குழு நடனங் கள் என்று நிரம்பி வழியும். அவருடைய ஆரம்பகாலத் திரைப் படங்கள் கறுப்பு வெள்ளையில்தான் வந்தன. 'ஆவாரா, ஸ்ரீ 420' போன்ற திரைப்படங்களின் ஒளிப்பதிவு மறக்க முடி யாதது. ராது கர்மகர் பிரமாதப்படுத்தியிருப் பார். குருதத் திரைப்படங்கள் ஆழ்ந்த சோகத்தையும், சிதைந்த கனவுக ளையும், தனிமையையும், காதல் தோல்விகளையும் தனக் குள் புதைத்துக் கொண்டவை. குருதத்தின் ஒளிப்பதிவாளர் வி.கே. மூர்த்தியும் இசையமைப்பாளர் எஸ்.டி. பர்மனும் இயக்குநருக்கு ஈடாக இந்தத் திரைப்படங்களில் பணியாற்றி யவர்கள், போற்றப்படவேண்டியவர்கள். மூர்த்தியின் பேக் லைட் உத்திகளை ஸ்ரீராம் போன்ற ஒளிப்பதிவாளர்கள் கற்றுத் தேர்ந்து தங்கள் படங்களில் பின்னர் பயன்படுத் தினர். 'பியாசா' மற்றும் 'காகஸ் கே பூல்' இரண்டு படங்களின் அனைத்து பிரேம்களும் கறுப்பு வெள்ளை காவியங்கள் என்றுதான் அழைக்கப்படவேண்டும். பியாசா படத்தின் இறு திக்காட்சியில், நாயகன் ஒரு விழா அரங்கின் கதவுகளை திறந்து கொண்டு வரும்போது, பீறிட்டு பின்னால் வரும் ஒளிக்கற்றைகள் அவர் முதுகை தடவி அரங்கில் அமர்ந் துள்ளோர் உச்சந்தலைகளில் பரவி நிற்கும்போது ஏற்படும் பரவசம் மறக்க இயலாதது! சோக முகங்களுக்கு ஒளிவட்டம் தந்தன மூர்த்தியின் பிரேம்கள்!

மார்கஸ் பார்ட்லே விஜயா வாகினி திரைப்படங்களுக்கு அற் புதமான கறுப்பு வெள்ளை ஒளிப்பதிவில் நிறைய படங்களை செய்திருக்கிறார். 'பாதாள பைரவி', 'மிஸ்ஸியம்மா', 'மாயா பஜார்' போன்ற திரைப்படங்களை இப்போது கூட அதே தரத்தில் காணலாம்!

தென்னாட்டில் ஏ. வின்செண்ட் கறுப்பு வெள்ளை காலத்திலும் வண்ணக் காலத்திலும் கொடி கட்டி பறந்தவர். புதுமைக்கு பெயர் போன வின்செண்ட் பின்னர் இயக்கத்திலும் ஈடுபட் டவர். ராமு காரியத் - பி. பாஸ்கரன் இயக்கிய நீலக்குயில் மூலம் அறிமுகமானவர் வின்செண்ட். டி. பிரகாஷ் ராவ் இயக்கிய அமரதீபம், உத்தமபுத்திரன் போன்ற திரைப்படங்க ளுக்கு ஒளிப்பதிவு செய்தவர், அவற்றில் பணி புரிந்த ஸ்ரீதருடன் இணைந்து கல்யாணப்பரிசு தொடங்கி நிறைய திரைப்படங்களில் பணிபுரிந்தார். கறுப்பு வெள்ளையில் வித் தகரான வின்செண்ட் புதிய கோணங்களில் படம் பிடிப்பதில் நிபுணர். 'நெஞ்சில் ஒரு ஆலயம்' படப்பாடல்களில் அவர் கையாண்ட ஒளியமைப்புகளும் காமெரா கோணங்களும் மிகவும் பேசப்பட்டவை!

அடூர் கோபாலகிருஷ்ணன் திரைப்படங்களுக்கு ஒளிப்பதி வாளராகப் பணி புரிந்தவர் மாங்கட ரவி வர்மா. அடூரின்





ஆரம்பகால கறுப்பு வெள்ளைத் திரைப்படங்களான 'சுயம் வரம், கொடியேற்றம்', பி.என். மேனன் இயக்கிய 'ஓளவும் தீரவும்', அரவிந்தன் இயக்கிய 'உத்தராயணம்', சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவ் இயக்கிய 'திக்கற்ற பார்வதி' போன்ற திரைப்ப டங்களுக்கு இயற்கை ஒளியில் கவித்துவமான ஒளிப்பதிவை செய்தவர் ரவி வர்மா. தமிழில் வண்ண ஒளிப்பதிவில் புகழ் பெற்ற அசோக் குமார், ஆரம்பத்தில் சில மலையாளப் படங்களை கறுப்பு வெள்ளையில் படமாக்கியிருக்கிறார். பி.என். மேனன் இயக்கிய 'குட்டியேடத்தி', 'செம்பருத்தி', கே. விஸ்வநாத் இயக்கிய தெலுங்குப் படமான 'காலம் மாறிந்தி' போன்ற திரைப்படங்களுக்கு பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

பாலு மகேந்திரா பி.என். மேனன், ஏ.பி.ராஜ், ராமு காரியத், சேதுமாதவன், போன்றவர்களின் கறுப்பு வெள்ளை திரைப்ப டங்களை ஆரம்பத்தில் படமாக்கியிருக்கிறார். இயக்குநர் பரதனின் முதல் திரைப்படமான 'பிரயாணம்' படத்திற்கும் இவரே ஒளிப்பதிவு. பிரமாதமாக இருக்கும். பாலு மகேந்திரா தான் இயக்கிய முதல் படமான கோகிலாவை கறுப்பு வெள் ளையில்தான் இயக்கினார்.

நினைவோடையில் விரிந்து கிடைக்கும் கறுப்பு வெள்ளை நினைவுகள் என்றும் மறக்க முடியாதவை!



jeeva@thaiveedu.com

25 ஆவது ஆண்டு 25 th Anniversary

# இயல் விருது விழா 2024

கனடாவில் வலுவான தொடர்ச்சியைக் கொண்டு 25 ஆண்டுகளாக இயங்கிவரும் இலக்கிய அமைப்பு, தமிழ் இலக்கியத் தோட்டம்.தொடர்ச்சியாகப் பல்வேறு இலக்கியப் பணிகளைச் செய்துவரும் தமிழ் இலக்கியத் தோட்டம் ஆண்டு தோறும் உலகளாவிய வகையில் தமிழ் இலக்கிய ஆளுமை களைத் தெரிவுசெய்து மதிப்பளித்து வருகின்றது. இவ்வாறான ஆளுமைகளைத் தெரிவுசெய்து ஆண்டுதோறும் மதிப்பளிப் பதில் தமிழ் இலக்கியத் தோட்டத்துக்குச் சிறப்பிடம் உண்டு. தமிழ் உலகம் நன்கறிந்த இலக்கியப் படைப்பாளியான அ. முத்துலிங்கம் அவர்களின் நெறிப்படுத்துதலில் சிறப்புற இயங்கிவரும் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பில் இன்னும் பல சான்றோரும் அமைப்பாளர்களாக இயங்கிவருகின்றனர். அடுத்த ஆண்டு முதல் இலக்கியத் தோட்டத்தில் வழங்கப் படும் வாழ்நாள் சாதனையாளர் விருது, 'அ. முத்துலிங்கம் விருதா'க அறிவிக்கப்படும் என்றும் அமைப்பாளர் தெரிவித் திருக்கின்றனர்.

வழமைபோல் இவ்வாண்டும் இலக்கியப் படைப்புகளில் சிறந்த விளங்குவோர் பலர் தெரிவுசெய்யப்பட்டு விருதுகளைப் பெற் றிருக்கின்றனர். வாழ்நாள் சாதனையாளருக்கான இயல் விருது இம்முறை இரு பேராளுமைகளுக்கு வழங்கப்பட்டது.

விருதாளர் அனைவருக்கும் தாய்வீடு உள்ளம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

## இயல் விருது - சச்சிதானந்தன் சுகிர்தராஜா

2024-ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளருக்கான இரண்டு இயல் விருதுகளுள் ஒன்று, சச்சிதானந்தன் சுகிர்த ராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டது.



சச்சிதானந்தன் சுகிர்தராஜா இலங் கையில் பிறந்தவர். உயர்கல்விக் காக இங்கிலாந்து சென்று, கடந்த முப்பது ஆண்டுகளாக அங்கேயே கல்விசார் சூழலில் வாழ்ந்து வருகி றார். பேர்மிங்ஹம் பல்கலைக்கழ கத்தில் பேராசிரியராகப் பணி புரிந்து, இப்போது தகைசால் ஓய்வு நிலைப் பேராசிரியராக இருக்கிறார்.

பின்காலனித்துவக் கருதுகோளை உபயோகித்து காலனித்துவ, பின் காலனித்துவ காலத்தில் எவ்வாறு திருப்பிரதிகள் கையாளப்பட்டன என்பது பற்றி ஆங் கிலத்தில் இவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட நூல்களும் தொகுப்புகளும் இதுவரை வெளிவந்திருக்கின்றன. பேர்மிங் ஹம் பல்கலைக்கழகம் இவரின் ஆக்கங்களின் சிறப்பை அங் கீகரித்துத் தனிப் பேராசிரியர் இருக்கையை (PersonalProfes-sorial Chair) வழங்கி இவருக்கு மதிப்பளித்தது. இவரின் தமிழ் எழுத்துகள் எண்பதுகளில் கணையாழியில் பிரசுரமா யின. இவருடைய சிறுகதைத் தொகுப்பு ‘அ/சாதாரண மனிதன்' (2008) காலச்சுவடு பிரசுரமாக வெளிவந்திருக்கிறது.


tg.theeban@gmail.com



தொடர்ச்சியாகத் தமிழில் கட்டுரைகள் எழுதி வருகிறார். தமிழ் மரபும் பண்பாடும் மொழியும் உவந்தளித்த பொற்கனி சச்சிதானந்தன் சுகிர்தராஜா.

இவர், அ/சாதாரண மனிதன் (2008), யூதர்கள் சைவர்களான கதை (2023), ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடைமை வாதிகள் (2023), நான் தடுப்பூசி குத்தப்போனேன் (2021), கலாச்சாரக் கவனிப்புகள் (2021), நூல்கள், நூலகங்கள், நூல கர்கள் (2021), பண்பாட்டுப் பொற்கனிகள் (2010) ஆகிய தமிழ் நூல்களையும் Jesusin Asia (Harvard University Press - 2018), The Brahmin and his Bible: RammohunRoy's Precept's of Jesus 200 years on (Bloomsbury - 2019). ExploringPostcolonial biblical Criticism: History, Method, Practice (Oxford University Press - 2012), TroublesomeTexts: The Bible in Colonial and Contemporary Culture (Sheffield PhoenixPress - 2008), TheBible and Empire: Postcolonial Explorations (Cambridge University Press - 2005), PostcolonialReconfigurations: An Alternative way of reading the Bible and doing theology (SCM Press, London - 2003, American edition: Chalice Press), PostcolonialCriticism and Biblical Interpretation (Oxford University Press - 2002), TheBible and the Third World: Precolonial, Colonial and Postcolonial Encounters (Cambridge University Press - 2001), AsianBiblical Hermeneutics and Post colonialism: Contesting the Interpretations (Orbis Books - 1998), Hindusand their Christian Bible (Bloomsbury, 2024) ஆகிய ஆங்கில நூல்களையும் எழுதியிருக்கிறார்.

## இயல் விருது - யுவன் சந்திரசேகர்

2024-ஆம் ஆண்டுக்கான, வாழ்நாள் சாதனையாளருக்கான இரண்டு இயல் விருதுகளுள் மற்றையது யுவன் சந்திரசேகர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

எம். யுவன் என்ற பெயரில் கவிதைகளும், யுவன் சந்திரசேகர் என்ற பெயரில் புனைவுகளையும் படைக் கும் ஆர். சந்திரசே கரன், மதுரை மாவட்டம் சோழவந்தானை அடுத்துள்ள கரட் டுப்பட்டி என்ற சிறுகிராமத்தில் 1961-ஆம் ஆண்டு பிறந் தார். பள்ளிப் படிப்பை மதுரை மாவட்டத்தின் மூன்று பள்ளிக் கூடங்களிலும் வணிகவியல் இளங்கலைப் படிப்பை மதுரை - அமெரிக்கன் கல்லூரியிலும் பயின்றார்.

பாரத ஸ்டேட் வங்கியில் நீண்ட காலம் பணியாற்றி 2018-இல் விருப்ப ஓய்வு பெற்று, சென்னையில் வசிக்கிறார். கடந்த முப் பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக யுவன் சந்திரசேகர். நவீன இலக்கியச் சூழலில் செயற்பட்டுவருகிறார். மிகுந்த எச் சரிக்கையுணர்வைக் கோரும் வங்கிப் பணிக்கிடையில் இவர் உருவாக்கியுள்ள படைப்புலகம் வியப்பளிக்கும் அளவுக்குப் பரந்தது.



நவீனத் தமிழ் இலக்கியத்தில் 1990-களின் தொடக்கத்தில் உருவான புதுப்பிரக்ஞையின் அடையாளங் களுள் ஒருவர் யுவன் சந்திரசேகர். பின்நவீனத்துவம் என்று அழைக் கப்பட்ட இந்தப் புதிய நடைமுறை யில் தனித்துவமான எழுத்து வகை மையை உருவாக்கியவர். மீண்டு வந்த இயல்புவாத ஆக்கங்களுக் கும் நவீனத்தைக் கடந்த சொல்லா டல்களுக்கும் அப்பாற்பட்ட புனைவு முறையை முன்வைத்தார்.

இவரது படைப்புக் குவை ஆறு கவிதைத் தொகுப்புகள், ஒன்பது சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு குறுங்கதைத் தொகுப்புகள், பதினொரு நாவல்கள், ஆறு மொழியாக்கங் கள், இரண்டு கட்டுரை நூல்கள் ஆகியவற்றை உள்ளடக் கியது. யுவன் சந்திரசேகர் சரளமான எழுத்தாளர். நிறைய எழு தியிருப்பவர். எழுதி வருபவர். இவரது எந்தப் படைப்பும் வாசிப்பில் சோடை போகாதவை.

யுவன் சந்திரசேகரின் நாவல்களில் பயணக்கதை. வெளியேற் றம், குள்ளச்சித்தன் சரித்திரம், எதிர்க்கரை ஆகியவை மெல் லிய ஆன்மீகச் சாயலைக் கொண்டவை. இசையில், குறிப் பாக இந்துஸ்தானி இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதன் பயனாக, இந்துஸ்தானி இசையுலகப் பின்னணியில் இவர் எழுதிய மூன்று நாவல்களான கானல் நதி, நினைவுதிர் காலம், ஆறு தாரகைகள் ஆகியவை தமிழுக்குக் கிடைத்த அரிய படைப்புகள், கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய வகை மைகளில் ஈடுபட்டுள்ள யுவன் சந்திரசேகர் மொழியாக்கத் திலும் தனது கைவண்ணத்தைப் பதித்திருக்கிறார். உலக இலக்கியத்தில் கவனம்பெற்ற சிறுகதைகள், நாவல்களைத் தமிழாக்கம் செய்திருக்கிறார். இவர் எழுதிய ஜென் கவிதை களின் தொகுப்பு - பெயரற்ற யாத்ரீகன், தமிழ்க் கவிதைக்கு வாய்த்த நற்கொடை.

## புனைவுப் பரிசு - இரவி அருணாசலம்

'பம்பாய் சைக்கிள்' நாவலுக்காக, இரவி அருணாசலம் அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டுக்கான புனைவுப் பரிசு வழங்கப் பட்டது.



இரவி அருணாசலம் யாழ்ப்பாணம், அளவெட்டியைச் சேர்ந்த ஆசிரியர், கலைஞர். தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்ற இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஆசிரியராக 1987 – 1996 வரையான ஆண்டுகளில் கடமை யாற்றினார்.

இவர், கொழும்பிலிருந்து வெளிவந்த சரிநிகர், இலண்டனிலிருந்து வெளிவந்த புலம், ஒரு பேப்பர் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக்கிறார். அத்துடன் ஐ.பி.சி. தமிழ் வானொலி, தமிழ் தொலைக்காட்சி இணையம், ஐ.பி.சி. தமிழ் தொலைக்காட்சி ஆகியவற்றில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் நாடக அரங்கக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகக் கலாச்சாரக்குழு, கொழும்பு அரங்காடிகள், இலண்டன் அரங்கத்தாடிகள் ஆகிய நாடகக் குழுக்களுடன் இணைந்து பதினைந்து நாடகங்களுக்கு மேல் நெறியாள்கை செய்தும் நடித்தும் இருக்கின்றார்.

காலம் ஆகி வந்த கதை, பாலைகள் நூறு (சிறுகதைத் தொகுப்பு). வீடு நெடும் தூரம் (அரசியல் புதினம்), ஆயுதவரி (குறுநாவல்கள்), 1958 (நெடுங்கதை). PKM என்கிற புகையிரத நிலையம், பம்பாய் சைக்கிள் ஆகியவை இவரது நூல்கள்.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் புகுந்து வெளியேறிய நாள்வரை ஈழத்தின் மண்ணுக்கும், மக்களுக்கும் இழைக்கப்பட்ட இன்னல்களையும், துயரத்தையும் சித்தரிக்கும் முக்கியமான படைப்பு பம்பாய் சைக்கிள். இந்தியாவைப் பல நூறு ஆண்டுகளாக நட்பு நாடாகக் கருதி வந்த ஈழத்து மக்களின் எண்ணம் இதன் பிறகு முற்றிலும் மாறியதை விவரிக்கும் இந்த நூலில் புனைவு, வரலாற்றோடு பின்னிப் பிணைந்து வாசிப்புக்குச் சுவையூட்டுகிறது.

## அல்புனைவுப் பரிசு - த. பிச்சாண்டி

2024-ஆம் ஆண்டுக்கான அல்புனைவுப் பரிசு, 'எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர் நினைவுகள்' நூலுக்காக, த. பிச்சாண்டி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

நூலாசிரியர் த. பிச்சாண்டி, திருவண்ணாமலை அருகிலுள்ள பள்ளிகொண்டாப்பட்டு எனும் சிறுகிராமத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சிறுவயதிலேயே தந்தையை இழந்து வறுமையில் வளர்ந்தாலும், தன் விடாமுயற்சியால் கணிதத்தில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களை சென்னை அரசுக் கல்லூரியிலும், இலயோலா கல்லூரியிலும் படித்துப் பெற்றார். தமிழ் ஆர்வத்தால் தொடர்ந்து இலக்கியங்களையும் கற்றார். 1973-ஆம் ஆண்டு மாவட்டத் துணை ஆட்சியராக அரசுப் பணியில் சேர்ந்து பின்னர் இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகி திண்டுக்கல், நீலகிரி மாவட்டங்களில் ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றார். திண்டுக்கல்லில் பணியாற்றியபோது தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவரது நேர்மையையும் பணித்திறனையும் அறிந்த எம்.ஜி.ஆர் அவர்கள் இவரைத் தனது நேர்முக உதவியாளராக நியமித்தார். 1987-இல் எம்.ஜி.ஆர். அவர்கள் மறையும்வரை,ஏறத்தாழ பத்தாண்டு காலம், அவருடன் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு. பின்னர் தமிழக அரசில் பல்வேறு உயர் பதவிகளில் பணியாற்றி 2009-இல் ஓய்வு பெற்றார்.

பிச்சாண்டி அவர்கள் தன் அனுபவங்களை, 'எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர். நினைவுகள்' என்ற தலைப்பில் நூலாக எழுதியிருக்கிறார். எம்.ஜி.ஆரின் அரசியல், திரையுலக வாழ்க்கை சம்பந்தமாக நிறைய நூல்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராகப் பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் பொது மக்கள் பயனடையும் வகையில் அவர் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களைக் கூறும் அருமையான நூல் இதுவொன்றே. ஆசிரியருடைய நினைவாற்றலும் எழுத்து வன்மையும் வியக்கவைக்கின்றன. எம்.ஜி.ஆர். மறைந்து 37 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட இந்த நூல் புகழுக்காகவோ, அரசியல் இலாபத்துக்காகவோ அல்ல என்பது நிதர்சனம். ஒரு மாநிலத்தின் முதல்வருடைய மனிதாபிமானத்தைச் சொல்வதாகவே இது இருக்கிறது. உலகத்தில் எங்கேயாவது ஒரு முதல்வர் காரில் போகும்போது செருப்பு அணியாத பெண்களின் கால்களை எண்ணி, பெண்களுக்குச் செருப்பு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருவாரா ? முதல்வர் எம்.ஜி.ஆர். செயல்படுத்தியிருக்கிறார்.



எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர். நினைவுகள் என்ற இந்நூல் முதலமைச்சர் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு பகுதியைச் சொல்வதோடு, தமிழ் நாட்டின் முக்கியமான ஒரு காலகட்டத்தின் வரலாற்றையும் ஆவணமாகத் தருகிறது.

## கவிதை விருது - ரவி சுப்பிரமணியன்

'அருகிருக்கும் தனியன்' கவிதை நூலுக்காக, 2024-ஆம் ஆண்டுக்கான கவிதை விருது புதிய சாளரங்களைக் கவிதைகளுக்குத் திறந்துவைத்த ரவி சுப்பிரமணியன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

1963-இல் கும்பகோணத்தில் பிறந்தவர் ரவி சுப்பிரமணியன். அங்கிருக்கும் சரஸ்வதி பாடசாலை, நகர மேல்நிலைப்பள்ளி போன்றவறில் பள்ளிப்படிப்பையும், பொருளியல் இளங்கலை, முதுகலைப் படிப்பை கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியிலும் பயின்றார்.



கும்பகோணத்தின் நாகேஸ்வரன் கோவில் சன்னதியில் இவர் வீடு அமைந்ததனால், இளவயது முதலே இவர் கேட்ட தேவாரம், திருவாச கம், திராவிட இயக்க மேடைப்பேச் சுகள், இலங்கை வானொலியின் பாடல்கள், நிகழ்ச்சிகள். தமிழக வானொலிகளின் நாடகங்கள், உரை கள் போன்றவை இவர் இலக்கி யத்தை நோக்கிய திட்டிவாசல் திறந்தவை. பதினோராம் வகுப்பில் பயிலும் காலத்திலிருந்தே பேச்சு, நடிப்பு, எழுத்து, இசை, நடனம், பலகுரல் போன்றவற்றில் ஆர்வம் துளிர்விட, அது கல்லூரிப் படிப்பின் போது மேலும் மலர்ச்சிகொண்டு மாவட்ட, மாநில, தேசிய அங்கீகாரமென மொத்தம் நூற்றுப்பன்னிரண்டு பரிசுகளை, விருதுகளை அந் தக் கல்லூரி சார்பில் பெற்று படிப்பையும் முடித்திருந்தார். கல்லூரிப் படிப்பின் போதே கர்நாடக இசையும் பரதநாட்டிய மும் கற்றார். மேடைகளில் பலகுரல் கலைஞராக விளங் கினார். நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்தார்.

படிப்பு முடிந்ததும் வார, மாத இலக்கிய இதழ்களில் கவிதை கள் எழுதத்துவங்கினார். சில இலக்கியச் சிற்றிதழ்களின் ஆசிரியர் குழுவில் பங்கேற்றார். இவரது முதல் கவிதைத் தொகுதி ‘ஒப்பனை முகங்கள்’ என்ற தலைப்பில் வெளியாகி, மாநில அரசின் பரிசு பெற்று பல்கலைக் கழகங்களில் பாடமா கவும் ஆனது. அதன்பின் இதுவரை ஏழு கவிதைத் தொகுதி கள் வெளிவந்துள்ளன. கவிஞர். ஆர். ராஜகோபாலன், ‘That was adifferent season’ என்ற தலைப்பில் இவரது கவிதை களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட் டுள்ளார். இசையமைப்பாளர் இளையராஜா உட்பட மூன்று இசையமைப்பாளர்களால் இவர் கவிதைகளுள் சில பாடல் களாகியுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட பழந்தமிழ், நவீன கவி தைகளுக்கு மெட்டமைத்ததோடு நூற்றுக்கும் மேற்பட்ட ஆவ ணப்படங்களையும் இயக்கியுள்ளார். 'தாமரை' என்ற குறும்ப டத்தையும் இயக்கி வெளியிட்டுள்ளார்.

இசை சார்ந்த சில சிறுகதைகளையும் ஐந்து கட்டுரை நூல்க ளையும் எழுதியுள்ள இவர், தன் இலக்கியப் பணிகளுக்காக ஏராளமான விருதுகள் பெற்றதோடு, தஞ்சை தமிழ்ப் பல் கலைக் கழகத்தின் 'மதிப்புறு இலக்கிய ஆளுமையாக' சில ஆண்டுகள் பணி புரிந்தார். விஜய், ஜெயா தொலைக்காட்சி நிறுவனங்களில் சில ஆண்டுகள் பணியாற்றி அங்கேயும் இலக்கிய நிகழ்ச்சிகளை, ஆவணப்படங்களை இயக்கு தலையே முதன்மை பணியாகக்கொண்டு தொலைக்காட் சியின் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு முன்னேர் ஆனார். புதிய சொல்லாக்கங்களும் அகமும் அரசியலும் இசையும் கோவில் களும் சார்ந்த. தனித்தன்மை கொண்டவை இவர் கவிதைகள்.

### கவிதைப் பரிசு - றியாஸா எம். ஸவாஹிர்

சிறந்த கவிதைத் தொகுப்பாகத் தெரிவுசெய்யப்பட்ட ‘நிலங் களின் வாசம்’ கவிதைத் தொகுப்பை எழுதிய றியாஸா எம். ஸவாஹிர் அவர்களுக்கு, 2024-ஆம் ஆண்டுக்கான கவிதைப் பரிசு வழங்கப்பட்டது.

இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்த நிந்தவூர் இவரது சொந்த ஊர். பயிற்றப்பட்ட ஓவிய ஆசிரியையாக,



கல்முனை இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயத்தில் பணி புரிகிறார். ஓவியம் தவிர இலக்கியத்திலும் நிறைந்த ஆர்வலர்.

‘நிலங்களின் வாசம்’ நூல் இவரது முதலாவது கவிதைத் தொகுதி. சமூக ஊடகங்கள், பத்திரிகைகள், வானொலி, இணைய இதழ்கள் வலைத்தளங்களில் தனது கவி தைகளைத் தொடர்ந்தும் பதிவிடு கிறார் றியாஸா. கவிதைகளை குரல் வழி அளிக்கை செய்வதிலும் இவர் மிகுந்த திறன் வாய்ந்தவர்.

### மொழியாக்கத்துக்கான விருது (Translation Award) - நீத்ரா ரொட்ரிகோ

தேவகாந்தனின் ‘கனவுச்சிறை’ நாவலை, ‘Prison of Dreams’ என ஐந்து தொகுதிகளாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நீத்ரா ரொட்ரிகோ அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டுக்கான மொழியாக்கத்துக்கான விருது வழங்கப்பட்டது.



Nedra Rodrigo was born in Ilankai and emigrated to Canada during the civil war. She is a writer, academic, curator of multi arts events, community capacity builder, and currently advisor to the Board of the Tamil Community Centre project.

She is the founder of the Tamil Studies Symposium in Toronto, and the bilingual, inclusive event series, The Tam Fam Lit Jam. Nedra's published translations include In the Shadow of the Sword (SAGE Yoda, 2020) and the Devakanthan quintet Prison of Dreams (Mawenzi House 2021-2024). Her essays have appeared in Briarpatch, C Magazine, Studies in Canadian Literature, River in an Ocean: Essays on Translation (trace, 2023), and Human Rights and the Arts: Essays on Global Asia (Rowman, Littlefield and Brown, 2014). Her translations of poetry have featured in Words and Worlds, Jaggery Lit, Still We Sing: Voices on Violence Against Women(Dhauli Books, 2021), Human Rights and the Arts in Global Asia (Rowman, Littlefield and Brown, 2014), and Out of Sri Lanka (Bloodaxe Books, 2023). She co-edited the anthology, Tamil Terrains: Poems, Translations, Reflections (trace, 2025) with Geetha Sukumaran. Her draft translation of Kuna Kaviyazhakan's novel The Forest that took Poison was shortlisted for the inaugural Global Humanities Translation Prize. Her translation of Rashmy's Songs in a Time of Confinement (trace, 2026) received the inaugural PEN Translates x SALT award, given by English PEN in collaboration with South Asian Literature in Translation, University of Chicago.

■ ■ ■

# சுசீலாவதி வில்சனுக்கு ஆத்மார்த்தமான வணக்கம்

தந்தை என்று ஈழத் தமிழர்கள் கொண்டாடிய தந்தை செல்வநாயகம் அவர்களின் மகளான சுசீலாவதி (சுசிலி) வில்சன் அவர்கள் ரொறன்ரோவில் காலமானார்.

'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பழந்தமிழ் ஈழந்தன்னை மீள்விக்க வந்த தந்தை' என்று தமிழர்களால் ஒரு காலத்தில் கொண்டாடப்பட்டவர் இலங்கையின் மூத்த தமிழ் அரசியல் கட்சிகளுள் ஒன்றான தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள். பல தசாப்தங்களாக, வன்முறையற்ற கண்ணியமான அகிம்சைப் போராட்ட அரசியலால் தமிழர்களுக்கான கூட்டாட்சி, சிவில் உரிமைகளைப் பெறப் போராடிய தமிழ் அரசியல்வாதியாக தந்தை செல்வா இருந்தார். அவர் உண்மையை எல்லோரிடமும் தேடும் ஓர் உன்னத மனிதரின் அடையாளம். ஜனநாயகத் தூண்டுதலின் மூலம் அமைதியான தீர்வுகளைத் தேடும் ஒரு பெரிய தமிழ் வரலாறாக இருந்தவர்.

தந்தை செல்வா அவர்களின் மூத்த மகளான திருமதி சுசீலாவதி (சுசிலி) வில்சன் அவர்கள், 2025 ஒக்ரோபர் எட்டாம் நாள் ரொறன்ரோவில் தனது 97-ஆவது வயதில் காலமானார்.

1928-ஆம் ஆண்டு ஜூன் இரண்டாம் நாள், இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெல்லிப்பளையில் பிறந்த சுசிலி அவர்கள், ஆளுமையும் அர்ப்பணிப்பும் கொண்ட துணிச்சலான பெண்மணியாகத் திகழ்ந்தார். அவர் தனது தந்தையின் அரசியற் பரப்புரை களுக்குப் பக்கபலமாக நின்று உதவினார். பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை நிறைவு செய்த அவர், பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் தேடல் மிகுந்த ஆய்வுகளுடன் கூடிய நூலக ருக்கான முதுகலை மேற்படிப்பை மேற்கொண்டு, ஒரு திறமைமிக்க நூலகராகத் தேர்ச்சி பெற்றார்.

அவர் தான் வளர்த்துக்கொண்ட அனுபவங்களின் துணையோடு பொதுப் பணிகளில் சிறந்து விளங்கினார்.

தன்னோடு பல்கலைக்கழகத்தில் கற்ற அரசறிவியல் மேதையான ஏ.ஜே. வில்சன் என்று அறியப்பட்ட அல்பிரட் ஜெயரட்ணம் வில்சனை தனது கணவராகத் தேர்ந்தெடுத்தார். டாக்டர் வில்சன் இலங்கை மற்றும் தமிழ் அரசியலில் முன்னணிக் கல்வியாளராக மிளிர்ந்தவர். இலங்கையில் பல ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றிய அவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற்றுறை



tg.theeban@gmail.com

ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டவர். பின் கனடாவின் நியூபிரன்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் அரசியல் பேராசிரியராகப் பணியாற்றி மறைந்தவர்.

பல புலம்பெயர்ந்தவர்களைப் போலவே, சுசிலியும் இலங்கை, கனடா ஆகிய இரு வேறு தேசங்களில் வாழ்ந்தார். கனடாவிலுள்ள, நியூ பிரன்ஸ்விக் மாகாணத்தின் நியூ பிரன்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் நூலகராகப் பணியாற்றினார். அகதிப் பெண்களின் முன்னேற்றத்திற்கான பல அமைப்புகளோடு பயணித்தார்.

தன் மூன்று குழந்தைகளை மிகுந்த அன்புடன் வளர்த்தார்: மல்லிகாவை வழக்கறிஞராகவும் மைதிலி, குமணன் ஆகியோரை மருத்துவர்களாகவும் ஆக்கி மகிழ்ந்தார். மெலனியும் மத்தேயுவும் அவரை ஒரு மென்மையான ஆசிரியராகவும் அன்பான பாட்டியாகவும் அறிந்திருந்தனர்.

இவரது இளைய சகோதரரான வழக்கறிஞர் சந்திர ஹாசன் அவர்கள் தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுக்காக, ‘ஈழத் தமிழ் ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் (OFERR)' என்ற அமைப்பை நடத்தி வருகிறார்.

ஊக்குவிப்புத் தொகைகளால் மானுட அவலங்களுக்கு மாற்றுத் தேடலாம் என சுசிலி அவர்கள் தன் துணைவரின் உதவியோடு ரொறன்ரோப் பல்கலைக்கழகக் காப்பகத் துக்குப் பங்களித்தார்.

1983 தமிழினப் படுகொலையின் போது அவர் சேகரித்து, பாதுகாத்து, சாட்சியாக இலங்கைக்கு வெளியே கொண்டு வந்த முக்கிய ஆவணங்கள், ரொறன்ரோவின் ஸ்கார்பரோ பல்கலைக்கழகத்தில் உள்ள எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மற்றும் ஏ.ஜே. வில்சன் காப்பக ஆவணத் தொகுப்புகளின் அடித்தளமாக அமைந்துள்ளன. இதன் மூலம் எதிர்கால சந்ததியினர் தமது வரலாற்றைப் படிக்கவும், கற்றுக் கொள்ளவும், அறிந்துணரவும் முடியும்.

சிறப்புமிக்க அம்மையாரின் இழப்பில் தாய்வீடும் துயருறுகின்றது.

அவர் இப்போது எங்களுடன் இல்லை என்றாலும், சுசிலி அம்மையாரின் நீங்கா நினைவுகள் அவர் பேரன்போடு வளர்த்தெடுத்த சமூக மனங்களிலும் உதவிய சமூகங்களிலும் என்றும் வாழும்.

மலர்களுக்குப் பதிலாக, ஏ.ஜே. வில்சன் காப்பக நிதியத்துக்கு நன்கொடைகள் வழங்கப்படலாம் என குடும் பத்தார் வேண்டுகின்றனர்.

அம்மையாருக்கு எம் ஆத்மார்த்தமான வணக்கம்.

அவரது இறுதி வணக்க நிகழ்வுகள் ஒக்ரோபர் 25-ஆம் நாள் ரொறன்ரோவில் நடைபெற்றன.



■ ■ ■

aR

# வேலுப்பிள்ளை கதிரவேலு (அப்புஜி) என்ற பேராளுமை

– பா. கணபதிப்பிள்ளை



நெடுந்தீவு மேற்கில் 1916-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21-ஆம் நாள் வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதி களின் தவப் புதல்வனாகப் பிறந் தவர்தான் அப்புஜி. பெற்றோர் அவருக் கிட்ட பெயர் கதிரவேலு. ஆயினும், அவரைச் செல்லமாக இரத்தினம் என்றே அழைத்தனர். இரத்தினம் பிறந்து சிறிய காலப்பகுதியில் வேலுப்பிள்ளையும் தாயாரும் காலமாகிவிட்டனர். அதன் காரணமாக அவரின் பெரிய தந் தையாருடனும், பேரனுடனும்தான் வாழ்ந்தார்.

இவரது இளமைக் கல்வி நெடுந்தீவில் கத்தோலிக்க மிஷனரி வித்தியாலயத்தில் ஆரம்பமானது. அதனால் கத் தோலிக்க சமயத்தில் சேர்ந்தார்.

1923-ஆம் ஆண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கம் (Hindhu Board) உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக இருந்த சேர். பொன். இராமநாதன் அவர்களின் முயற்சி யாலும் அவரின் பின் தலைவராக வந்த சேர். வைத்திய லிங்கம் போன்றோரின் அரிய முயற்சியாலும் இதன் முகா மையாளராக இருந்த இந்து போர்ட் இராஜரட்ணம் அவர் களின் தொடர் முயற்சியாலும் இலங்கை முழுவதிலும் 187 நிறுவனங்கள் (பாடசாலைகள், ஆசிரிய கலாசாலை, சிறுவர் இல்லங்கள் உட்பட) உருவாக்கப்பட்டன. இதன் நோக்கம் ஏழை சைவக் குழந்தைகள் மதம் மாறாது தமது கல்வியைப் பெற வேண்டும் என்ற வேணவாவேயாகும். இவ்வாறு திருநெல்வேலியில் இவர்களால் அமைக்கப்பட்ட முத்துத்தம்பி வித்தியாசாலையில் பெற்றோரை இழந்த பிள்ளைகள் தங்கி இருந்து கல்வி கற்பதற்கான வசதி களும் செய்துகொடுக்கப்பட்டது. எனவே இரத்தினம் என்ற கதிரவேலு (அப்புஜி) அவர்கள் அக்கல்லூ ரியில் முழு நேர மாணவனாகச் சேர்ந்தார்.

ஆசிரிய கலாசாலையில் இவரின் ஆசிரியர்களாக இருந்தவர்கள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற தமிழிலும் சைவத்திலும் ஆற்றலுள்ள மேதைகள். அவர்களின் கற்பித்தல் பாணியும், மாணவர் அணுகுமு றையும், நன்னடத்தையும், அறநெறி கருத்துகளும், ஆன்மீக சிந்தனையும் இரத்தினம் என்ற கதிரவேலுவை வெகுவாக கவர்ந்தன.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் உள்ளம் கவர்ந்த மாணவரானார் கதிரவேலு அவர்கள். பண்டிதமணி அவர்கள் தன் வீட்டு நூலகத்தில் இருந்து புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுக்கும் அளவுக்கு நட்புரிமையுடன் பழகினார். அவரது நன்னடத்தையும், மாணவர் மையக்கல் வியும் கவர்ச்சியாக இருந்தமையால் அவரைப் பின்பற் றினார் கதிரவேலு அவர்கள். அதனால் அவர் தழுவி இருந்த கத்தோலிக்க சமயத்தைவிட்டு சைவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினார்.

ஆசிரியத் தேர்வில் தெரிவாகிய கதிரவேலு அவர்கள் பேராதனை அ.த.க. பாடசாலையில் முதல் நியமனம் பெற்றார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கதிரவேலு ஆசிரியருக்கு ஆசி வழங்கும் போது 'நீர் போகிற இடம் மிகக் கல்வி வசதி தேவைப்படும் இடம், அந்த இடத்தில் நீ பல பாடங்களைப் படிப்பாய், உன்னை நீ ஆக்கும் நிகழ் வுகள் நடைபெறும், சென்று வா' என்று வாழ்த்தி விடைகொ டுத்தார். பேராதனைக்குச் சென்று அங்குள்ள வறிய குழந்

தைகளையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் பார்த்து உள்ளம் வெதும்பினார். அந்தக் குழந்தைகளைச் சமூகத்தில் உயர்த்த வேண்டும் என்று எண்ணம் கொண்டார். இந்த நேரத்தில் 1960-ஆம் ஆண்டு இந்தியா சென்று காந்திய பல்கலைக்கழகமான 'வார்தா' பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டார். 'தயாள் பாக்' தாபனம், 'அரவிந்தர் ஆச்சிரமம்' போன்றவற்றையும் பார்வையிட்டார். அங்கிருந்து தான் அவரின் உள்ளத்தில் 'குரு குலம்' ஒன்றின் அவசியம் புரிந்துக் கொள்ளப்பட்டது.

இரண்டு ஆண்டுகள் இந்தியப் பயிற்சியை முடித்து இலங்கை திரும்பி, உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபர் ஆனார். அங்கு அயல் கிராமங்களில் உள்ள பிள்ளைகளை எல்லாம் அரவணைத்து பாடசாலையைச் சிறப்பாக கொண்டு நடத்தினார்.

இவ்வேளை வினோபாஜி அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு வந்தார்கள். அவரை சந்திக்க கதிரவேலு (அப்புஜி) அவர்களும், தவத்திரு வடிவேலு சுவாமிகள், ஆத்ம சோதி முத்தையா, திரு. நல்லதம்பி, தவத்திரு கணேசாந்த மகாதேவ சுவாமிகள் ஆகியோர் கூட்டாகச் சென்று அவரின் உரையையும் அவரின் ஆசியையும் பெற்றுத் திரும்பினார். அந்த அதிர்வில் 1964-ஆம் ஆண்டு மாசி மாதம் 24-ஆம் திகதி 11 ஏழைச் சிறுவர்களுடன் திரு. கா. நாகலிங்கம் அதிபர் அவர்களின் காணியில் (7-ஆம் வாய்க்காலில்) உதயமானது குருகுலம்.

பெர்னார்ட் ஷா என்ற பேரறிஞர்; 'உன்னை யார் என்று நீ சொல்லாதே, உன் நண்பர்களைச் சொல், நான் உன்னை யார் என்று சொல்வேன்' என்று குறிப்பிட்டார். அப்புஜியின் நடத்தையோடு தொடர்புடையவர்களைப் பார்த்தால், தவத்திரு வடிவேலு சுவாமிகள், தவத்திரு யோகர் சுவாமிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தவத்திரு கணேசாந்த மகாதேவ சுவாமிகள், விசாலாட்சி அம்மா, ஆத்மஜோதி முத்தையா, திரு. கா. நாகலிங்கம் அதிபர், திரு. நடராசா ஆசிரியர், பரமானந்த வல்லி (மாதாஜி), நாவற்குழியூர் தவத்திரு செல்லத்துரை, தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற ஆத்மீக சிந்தனை யார்களை காணலாம்.

**இந்தியா சென்று 'தயாள் பாக்' தாபனம் 'அரவிந்தர் ஆச்சிரமம்' போன்றவற்றை பார்வையிட்டார். அங்கிருந்து தான் அவரின் உள்ளத்தில் 'குரு குலம்' ஒன்றின் அவசியம் புரிந்துக் கொள்ளப்பட்டது**



இக்காலத்தில் மானிப்பாயிலுள்ள சகோதரி ஒருவரின் வீட்டுக்குச் சென்ற கதிரவேலு அவர்கட்கு, நெருப்புக் காய்ச்சல் வந்து விட்டது. மானிப்பாய் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைக் கண்ணும் கருத்துமாக கவனித்த தாதியர் 'சின்னம்மாவை' தன் வாழ்க்கைத் துணையாக்கினார் அப்புஜி. மனைமாட்சி என்ற மங்கலத்தின் நன்கலங்களாக முருகதாஸ், நீலாம்பிகை, விமலாம்பிகை என்று மூன்று குழந்தைகளை பெற்றெடுத்தார்.

கிளிநெச்சிப் பிராந்தியத்தில் மலேரியா நோய், பாம்புக்கடி, யானை அச்சுறுத்தல், நெருப்புக்காய்ச்சல் போன்ற பாரிய அச்சுறுத்தல் நிலவிய காலம் அது. இவ்வேளை இன்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியாக இருக்கும் பாடசாலையின் முதல் அதிபராக திரு. கா. நாகலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

அவரின் அனுசரணையுடனும், தன் அயராத முயற்சியாலும் 'குருகுலம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அங்கு வாழும் குழந்தைகளுக்குப் பாடசாலைக் கல்வியை 7-ஆம் வாய்க்கால் இந்து வித்தியாலயத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்தார். இந்த குருகுலம் என்ற அமைப்பை தன் குருவான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களை வைத்தே ஆரம்பித்து வைத்தார்.

அமரர் வே. கதிரவேலு அவர்களைப் பற்றிக் திரு. கா. நாகலிங்கம் அதிபர் அவர்கள்; உயர்ந்த உள்ளம், மிடுக்கான நடை, வினோபாஜியின் தோற்றம், வெண்பனிக்கட்டி போன்ற தாடி, கணீர் என்ற இனிய குரல், நான்கு முழ ஆடையும், தோளிலே மெல்லிய துண்டும் கொண்ட குருகுல பிதா அமரர் வே. கதிரவேலு என்று குறிப்பிட்டார்.

தவத்திரு கணேசாந்த மகாதேவ சுவாமிகள் குறிப்பிடும் போது: 'காட்டை களனி ஆக்கி குருகுலத்தை நிலைநாட்டியவர் என்றும் பூசைகளைத்

தமிழில் செய்த புரட்சியாளர் என்றும், நல்லாரை காண்பதுவும் நன்றே நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே என்ற பொன்மொழிக்கேற்ப அவர் புகழ் பாடப்பட வேண்டியது' என்று குறிப்பிட்டார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிடும்போது;

*'அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள் வைப்புழி'*

என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாக வாழ்பவர். கற்றாங்கு ஒழுகும் மாண்புடையவர் திரு. கதிரவேலு என்று குறிப்பிடுகிறார்.

அன்றைய குருகுலம் 316 குழந்தைகளுடனும், 255 ஏக்கர் நிலத்துடனும், அப்புஜி, அம்மா போன்றோரின் அனுசரணையுடனும் சிறப்புற்றுக் காணப்பட்டது. 1994-ஆம் ஆண்டு அமெரிக்க கல்வியியல் சிந்தனையாளர் 'கார்வேட் காடினர்' என்பவர் 'பன்முக நுண்மதி' என்றொரு நூலை எழுதினார். அதில் குழந்தைகள் பலதரப்பட்டவர்கள். அவர்களிடம் ஏழு நுண்மதிகள் உள்ளன. அவற்றை இனம் கண்டு அவர்களை வளப்படுத்தினால் எல்லா மாணவர்களுமே விவேகமானவர்கள் தான். இந்த கோட்பாட்டை 1964-ஆம் ஆண்டில் கிளிநொச்சி பிரதேசத்தில் குருகுலத்தை ஏற்படுத்தி, அதை நடைமுறைப்படுத்தி வெற்றிகொண்டவர் அப்புஜி. அதற்காகப் பல கைத்தொழில்களை அறிமுகப்படுத்தினார்.

- பருத்தி வளர்த்து நெசவுத்தொழில்
- பேக்கரிக் கைத்தொழில்
- மரவேலை
- இரும்பு வேலை
- தையற் பயிற்சி
- சமையற் பயிற்சி
- விவசாயச் செய்கை
- கால்நடை வளர்ப்பு
- அச்சுத் தொழில்
- ஓட்டுத் தொழில்
- பன்ன வேலை

என்று மாணவர்களுக்குப் பிடித்தமான கைத்தொழிலைச் செய்யும் சந்தர்ப்பம் தரப்பட்டது. தன் நெசவுத் தறியில் நெய்த பருத்தி உடையையே அப்புஜி அணிந்தார். அங்கே சமைக்கும் சாப்பாட்டை மாணவருடன் உடன் இருந்து அவரும் உட்கொண்டார். சொல் வேறாகவும் செயல் வேறாகவும் செயற்படும் இக்காலத்தில், சொன்னபடி வாழ்ந்து காட்டிய உத்தமர் அப்புஜி.

இந்தக் கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்ளும் பிள்ளை பிற்காலத்தில் தொழில் இல்லை என்று யாரிலும் தங்கி நிற்காது தானே தன்னை வளம்படுத்திக் கொள்ளும். இதைத்தான் 'ரூசோ' என்ற கல்விச் சிந்தனையாளர் குறிப்பிடும்போது 'அவர்களை அவர்களாக வளரவிடுங்கள் அதுதான் பாடசாலையின் வகிபாகம்' அத்தகைய சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்தவர் அப்புஜி. வள்ளுவன் குறிப்பிடும் போது

*'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்'*

என்றார் வள்ளுவர். உலகத்தோடு சேர்ந்து வாழத் தெரியாதவன் அறிவில்லாதவன் என்றுபொருள்படும். உலகத்தோடு சேர்ந்து வாழ மேற்படி கைத்தொழில்கள் அவனுக்கு / அவளுக்கு உறுதுணையாக இருந்தது.

*'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்'*

என்றார் வள்ளுவர். ஒருவர் பெருமையடைகிறார் என்றாலும், சிறுமையடைகின்றார் என்றாலும் அவரவர் செய்யும் காரியத்தாலே தான் அது அளவிடப்பட வேண்டும். அந்த வகையில் அப்புஜியின் பெருமையை அவர் எடுத்துக்கொண்ட வாழ்வியல் முறை பறைசாற்றிக்கொண்டே இருக்கும்.

மற்றோர் உதாரணம், 1977-ஆம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்ற இனவழிப்புச்செயல் காரணமாக ஊர் இழந்து, உறவிழந்து, உற்றபொருள் தான் இழந்து 'அகதி' என வந்தோரை ஆதரித்து, வீடளித்து, உயர்வளித்த உத்தமன் அப்புஜி. ஊற்றுப்புலம் என்றொரு கிராமத்தை உருவாக்கி அங்கே இடம்பெயர்ந்து வந்தோரைத் தங்கி வாழ வழிசமைத்தார். இதற்கு உறுதுணையாக இருந்தவர் முன்னாள் பிரதேசச் சபைத்தலைவர் வை. குகராஜா. இவ்விருவரின் அர்ப்பணிப்பிலும் அந்த கிராமம் எழுச்சி கண்டது. அங்கு ஒரு பாடசாலையையும் அமைத்தார். அப்பாடசாலையை அக்காலத்தில் ஊற்றுப்புலம் கதிரவேலு அ.த.க. பாடசாலை என்றே அழைத்தார்கள். பின்வந்த பெரியோரால் கதிரவேலு என்ற பெயர் அகற்றப்பட்டு ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை என்றே அழைக்கப்படுகிறது. இந்த குருகுல வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு செய்த 'மில்க்வைட்' கணகராசா அவர்களின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட முடியாது.

**1977-ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்புச்செயல் காரணமாக ஊர் இழந்து, உறவிழந்து, உற்றபொருள் தான் இழந்து 'அகதி' என வந்தோரை ஆதரித்து, வீடளித்து, உயர்வளித்த உத்தமன் அப்புஜி. ஊற்றுப்புலம் என்றொரு கிராமத்தை உருவாக்கி அங்கே இடம்பெயர்ந்து வந்தோரைத் தங்கி வாழ வழிசமைத்தார்.**




குருகுலக் குழந்தைகள் உணவுக்குழு, சுகாதாரக்குழு, விவசாயக்குழு, பொதுக்குழு என்று பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஜனாதிபதி, பிரதமர், மந்திரிமாரைத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக முறையை அறிமுகப்படுத்தி தேர்தல் வைத்து சேவை சிறப்பாக நடைபெற முயற்சிகள் எடுக்கப்பட்டது. கல்வியோடு கருணை, காருணியம், தர்மம், நீதி, சேவை, தியாகம், சிரமதானம் என்ற பண்புகள் பழக்கப்படவும் புரிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்தார். அயல் கிராமங்களில் உள்ள பாடசாலைகள், கோயில்களில் குருகுலக் குழந்தைகள் தம் சிரமதானத்தால் சுத்தம் செய்தனர். 1983-இல் சைவப் போதகர் பயிற்சி அளித்து, மலையகம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணத்துக்குத் தொண்டர்கள் அனுப்பப்பட்டனர். அதிகாலை 4 மணிக்கு எழும்பி காலைக்கடன் முடித்து, யோகப் பயிற்சி, பிரார்த்தனை, கற்றல், தொழிற்பயிற்சி முடித்து பாடசாலைச் செல்லவேண்டும். பாடசாலை முடிந்து வந்ததும் அதே முறையைப் பின்பற்ற வேண்டும். ஆண்கள் பகுதிக்கு கா. நாகலிங்கம் அதிபர் அவர்கள், திரு. நடராஜா ஆசிரியர், அப்புஜி போன்றோர் மேற்பார்வையாளர்களாகச் செயற்பட, பெண்கள் பகுதிக்கு அப்புஜியின் மனைவி சின்னம்மா மற்றும் விசாலாட்சி போன்றோர் பொறுப்பாக இருந்தனர்.

திரு. கா. நாகலிங்கம் அதிபர் அவர்கள் குறிப்பிடும்போது உருத்திரபுரத்தில் அப்புஜியின் பங்களிப்பு குருகுலத்துக்கும், சிவன் கோயிலுக்கும் பாரிய அடிப்படையில் அமைய, பெரியண்ணாவின் பங்களிப்பு காந்தி நிலைய வளர்ச்சிக்கும் முக்கியம் வழங்கியது. இலங்கையில் நாலாபுறங்களில் இருந்தும் மாணவர்கள் குரு குலத்திற்கு வந்தார்கள். அவர்களை எந்த வேறுபாடும் இல்லாமல் ஒரு தாய் பிள்ளைகள் போல் பார்த்த பெருமை அப்புஜியையே சாரும். யாரும் ஆதரவற்றோர் என்றோ, வசதியீனமானவர் என்றோ கல்வியைப் பெறாதிருக்கக் கூடாது என்பதில் நாட்டங் காட்டிய பெருந்தகை அவர்.

இத்தகைய பெருமகனார் 24.10.1987 அன்று தன் மனைவி, மகள், மருமகன், பேரன் மற்றும் உறவினர் ஒருவருடனும் கள்ளியங்காட்டில் சென்று கொண்டு இருக்கும் போது, அகிம்சையை அறிமுகம் செய்ய நாட்டின், காந்தி தேசத்தின் படையால் குண்டு வைத்து அதே இடத்தில் அக்கினியுடன் அப்புஜி, அவர் மனைவி, மகள், மருமகன் மற்றும் உறவினர் ஐவரும் இறக்க தூக்கி எறியப்பட்ட காரில் இருந்து கார் செலுத்துநரும், பேரக்குழந்தையும் உயிர் தப்பினார்கள்.

சம்மந்தர் நெருப்பில் சங்கமமானார் என்றே படிப்போம். அதே போல் எல்லோரையும் அரவணைத்து, ஒரே தாய் பிள்ளைகள் போல் ஒன்றாக வாழப்பழக்கி, ஒரு கைத்தொழில் ஒன்றை கற்று வாழ் என்று போதித்த அந்த மகாத்மா அக்கினியுடன் சங்கமமாகியது பெரும் துயர் தரும் சம்பவமாகும். அன்பு, அகிம்சையைப் போதித்த இந்திய நாட்டின் படையினர் இதைச் செய்தமை இந்தியாவுக்குத் தீராப்பழியைத் தேடித் தந்த மற்றொரு சம்பவம் ஆகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றவர்களுக்கு வழி காட்டிய மாபெரும் ஆத்மா எம்முடன் இன்று இல்லை. குருகுலம் அப்புஜீயின் 109-வது பிறந்த தின நினைவையொட்டி இலங்கையர் வாழும் இடம் எல்லாம் அவரை நினைவுகூரவேண்டும். எதிர்காலச் சந்ததிக்கு இத்தகைய தன்னலம் இல்லாத தூய மனிதர் எங்களை உருவாக்கினார் என்று சொல்லித்தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.



kanapathipillai.maa@thaiveedu.com

# கல்வியியலாளரான அரசியல்வாதி
# ஹன்டி பேரின்பநாயகம்

– வே. விவேகானந்தன்

ஹன்டி பேரின்பநாயகம் தேசத்தின் ஒருமைப்பாடு, அங்கு வாழும் மக்களின் ஐக்கியம், பல்லின மக்களின் சமத்துவம் ஆகியவற்றின் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாசைகளை ஈடேற்ற முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.



இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், கல்வி யும், செல்வமும், பொருளாதார வளமும், ஆன்மீகச் செழிப்பும், நிறைந்த மானிப்பாயில், வாழ்ந்து வந்த திரு திருமதி சரவண முத்து குடும்பத்தினருக்கு மகனாக ஹன்டி பேரின்பநாயகம், 1899-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28-ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் கற்றார். உயர் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர்ந்த இவர், 1929-ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைகழகப் பட்டதாரியாகத் தேர்ச்சி பெற்றார்.

பட்டப்படிப்பை நிறைவு செய்த ஹன்டி அவர்கள், தான் படித்த யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே ஆசிரியராகத் தனது பணியினை ஆரம்பித்தார். ஆங்கிலம், இலத்தீன் மொழிகளைப் போதித்து வந்தார். இவர் மாணவனாகப் படித்த காலத்தில் அதிபராகப் பணி புரிந்தவர், சங்கைக்குரிய பிக்நெல் பாதிரியார். இவர் பரந்த அறிவும், முற்போக்கு சிந்தனையும், சுதந்திரமாகக் கருத்துரைக்கும் துணிவும் கொண்டவர். அவரது ஆளுமையால் பெரிதும் கவரப்பட்ட ஹன்டி அவர்கள், ஆசிரியராக மட்டுமன்றி மாணவர்களைக் கவரும் காந்த சக்தியாகவும் விளங்கினார். அதனால் அவருக்கென ஒரு மாணவர் குழு இருந்தது. அதுவே பின்னர் 'மாணவர் காங்கிரஸ்' என உருவாக்கி, பின்னர் பாடசாலை மட்டத்துடன் மட்டும் நின்றுவிடாமல், இளம் சமூகத்தினரையும் அரவணைத்து 'யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்' என வளர்ச்சி பெற்றது.

காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு, இலங்கை பூரண சுதந்திரம் பெற்ற நாடாக விளங்க வேண்டும், தமிழ் சமூகத்தில் காணப்படும் சாதிபேதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், வறிய மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படவேண்டும். மாணவர்களுக்குப் பாடசாலைகளில் தாய் மொழியில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைகளை முன்னிறுத்தி யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் செயற்பட்டது. வருடாவருடம் கொள்கைப் பிரசாரக் கூட்டங்களையும் நடத்தியது. இந்தியாவிலிருந்து கல்யாணசுந்தர முதலியார், சத்தியமூர்த்தி போன்றவர்களையும், இலங்கையில் கலாநிதி என்.எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா போன்ற இடதுசாரி அரசியல் பிரமுகர்களையும் அழைத்து, மாநாடுகள் நடத்தப்பட்டன. சமபந்தி போசனமும் இடம்பெற்றது. உயர் குலத்தவர்களின் எதிர்ப்பும் கண்டனமும் வலுப்பெற்றிருந்தன. எனினும், அவற்றையெல்லாம் சவாலாக எதிர்கொண்டு யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் முன்னோக்கி நகர்ந்தது. ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் அழைப்புக்கிணங்க 1927-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்கு வந்த மகாத்மா காந்தி அவர்கள், அதே மாதம் 26-ஆம் திகதி யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் உரையாற்றினார். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அது ஒரு வரலாற்றுப் பெருமை மிக்க உரையாக அமைந்தது.

மகாத்மா காந்தியினது கொள்கைகளில் அளவிலாப் பற்றுக் கொண்ட ஹன்டி அவர்கள் அவற்றைத் தனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார். எப்பொழுதும் கைத்தறியினால் நெய்யப்பட்ட தேசிய உடையினையே அணிந்து வந்தார். 1949-ஆம் ஆண்டு 'அகில இலங்கை காந்தி சேவா சங்கம்' ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் முதலாவது தலைவராக ஹன்டி பேரின்பநாயகம் பதவி வகித்தார். சுதந்திரத்துக்காகப் போராடிய அகில இந்தியக் காங்கிரசின் 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தினாலும் ஈர்க்கப்பட்டார். 1937-ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு முதல் தடவையாக விஜயம் செய்தார். அவரது விஜயமும் உரைகளும் காலனித்துவ அரசுக்கு எதிராக அமையும் என்பதனை அறிந்த அரசாங்கம், அவற்றைத் தடுக்கும் வகையில் பல கட்டளைகளைப் பாடசாலைகளுக்கு விதித்தது. அவற்றையெல்லாம் துச்சமாக மதித்த ஹன்டி அவர்கள் நேருவை வரவேற்று, வட்டுக்கோட்டைச் சந்தியிலிருந்து மேளவாத்திய இன்னிசை முழங்க நீண்ட ஒரு பவனியையும் ஏற்பாடு செய்தார்.

அமெரிக்க மிஷனறிகளால் நடத்தப்பட்டு வந்த யாழ்ப்பாணக் கல்லூரியில், ஆசிரியராகப் பணி புரிந்துகொண்டு, பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகச் செயற்பட்ட, ஹன்டி அவர்களைப் பதவி நீக்கம் செய்யும்படி அரசு அழுத்தம் கொடுத்தது. யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் ஹன்டி அவர்களை ஒரு தத்துவஞானியாக, வழிகாட்டியாக, நண்பராகக் கருதினர். ஆங்கில மொழியில் பாண்டித்தியம் மிக்க அவர் 'சேக்ஸ்பியரில்' ஒரு வல்லுநராகக் கருதப்பட்டார். மாணவர் மனதில் நிறைவான அன்பைப் பெற்றிருந்தார். எனவே அவரைப் பதவியிலிருந்து நீக்குவது அதிபருக்குத் தர்மசங்கடமாக இருந்தது. ஒரு விதமாக சமரசம் ஏற்படுத்தப்பட்டு ஹன்டி அவர்கள் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். அவரது முயற்சிகள் அனைத்துக்கும் பக்கபலமாக நின்ற அதிபர், சங்கைக்குரிய பிக்நெல் பாதிரியார் ஓரிரு ஆண்டுகளில் அமரத்துவம் அடையவே, அவர் இல்லாத சூழலில் மன நிறைவுடன் தன்னால் பணியாற்ற முடியவில்லை, எனக் கூறி ஆசிரியர் பணியிலிருந்து ஹன்டி விலகிக் கொண்டார்.

ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் ஒரு கிறீஸ்தவராகப் பிறந்து, தலைசிறந்த கிறீஸ்தவக் கல்லூரியான யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து, அதே கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த அதேவேளை, பழமைக்கு எதிராகப் போராடும் சுயாதீனச் சிந்தனை உடையவராகவும் விளங்கினார். இடதுசாரிக் கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொண்ட அவர், தேசத்தின் ஒருமைப்பாடு, அங்கு வாழும் மக்களின் ஐக்கியம், பல்லின மக்களின் சமத்துவம் ஆகியவற்றின் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாசைகளை ஈடேற்ற முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அக்காலகட்டத்தில், அக்கொள்கை மக்கள் ஆதரவு பெற்றதாக இருக்கவில்லை. கலாநிதிகள் என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, மற்றும் பீற்றர் கெனமன், எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, எட்மண்ட் சமரக்கொடி, லெஸ்லி குணவர்த்தனா போன்ற இடதுசாரித் தலைவர்கள் யாழ்ப்பாணம் வந்து பிரச்சாரக் கூட்டங்களை நடத்தியபோது, பெருமளவில் மக்கள் கலந்துகொண்டனர். ஆனால் தேர்தல் காலங்களில் அவை வாக்குகளாக மாறவில்லை. மேற்படி இடதுசாரித் தலைவர்களுடன் ஹன்டி அவர்கள் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த போதிலும், அவர்கள் சார்ந்த கட்சிகளில் இணைந்து கொள்ள விரும்பவில்லை. 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் சுயேட்சை அங்கத்தவராகப் போட்டியிட்டு, 1716 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார்.

பொதுத்தேர்தலில் தோல்வி கண்ட ஹன்டி அவர்கள், இரு வருடங்கள் சட்டத்தரணியாகப் பணிபுரிந்தார். அப்பணியில் அவர் திருப்தியடையவில்லை. கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் ஏ. நாகலிங்கம் அவர்கள் ஓய்வு பெறமுன்னரே, அகால மரணமடைய, பாடசாலை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அப்பதவியை 1949-ஆம் ஆண்டு ஹன்டி பேரின்பநாயகம் ஏற்றுக்கொண்டார். ஒரு கிறீஸ்தவர், எவ்வாறு ஒரு இந்துப் பாடசாலையை நிர்வகிக்கப் போகிறார்? எனச் சிலர் அங்கலாய்த்தபோது, பாடசாலையில் பதவியேற்ற அன்றைய தினம், ஹன்டி அவர்கள் பாடசாலைக்கு அருகேயுள்ள கோயிலுக்குச் சென்று, வீபூதி, பொட்டுடன் பாடசாலைக்குச் சென்றமை, பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு, ஹன்டி அவர்கள் ஆற்றிய பணி அளப்பரியதாகும். அடிப்படைக் கல்

பாடசாலை மாணவர்களை, ஹன்டி அவர்கள் கையாண்ட விதமே வித்தியாசமானதாகும். மாண வர்களை அடக்கி ஒடுக்காமல் சுதந்திரமாக செயற்பட ஊக்கமளித்தார். வெறும் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிடாமல், ஜனநாயக அமைப்பில் சமூகத்தோடு ஒன்றிணைந்து வாழ்வதற்கான ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும், என்பதில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். பாடசாலையில் மாணவர் சங்கத்தையும், பழைய மாணவர் சங்கத்தையும் திறம்பட செயற்பட ஊக்குவித்தார்.

வியுடன் தொழில்நுட்பக் கல்வியும் அழகியற் கல்வியும் உள்ளடங்கியிருக்க வேண்டும் எனக் கருதிய அவர், தொழில்நுட்பப் பாடங்களான உலோக வேலை, மரவேலை, மட்பாண்ட வேலை, விவசாயம், தையல் கலை ஆகிய பாடங்களையும், அழகியல் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களையும் உரிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார். மறுபுறம் சட்ட சபையிலே கல்வி அமைச்சராக இருந்த, C.W.W. கன்னங்கரா 1944-ஆம் ஆண்டு இலவச கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, தாய் மொழிப் பாடசாலைகளில் படித்த பல மாணவர்கள், ஆங்கிலப் பாடசாலைகளை நோக்கிப் படையெடுத்தனர். இதனால் வகுப்பறைகளுக்கான கட்டடம், தளபாடங்கள், ஆய்வுகூட வசதிகள் என்பவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதே சவால்களை கொக்குவில் இந்துக் கல்லூரியும் எதிர் கொண்டது. பெற்றோர், பழைய மாணவர்கள், கல்வி ஆர்வலர்கள் போன்றவர்களிடம் உதவி கோரியும், களியாட்ட விழா ஒன்றை ஒழுங்குசெய்தும், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழ்வோரிடம் உதவி பெற்றும், ஹன்டி அவர்கள் பாடசாலையின் குறைபாடுகளுக்குத் தீர்வு கண்டார்.

1950-ஆம் ஆண்டு அவர் ஒழுங்கு செய்த 'Linga Lights Carnival' மிகப் பெரும் வெற்றியாக அமைந்தது. தென்னிந்தியாவில் பிரபல்யம் பெற்ற இராஜகோபாலாச்சாரியார், பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களுடன் ஹன்டி அவர்கள் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததனால், என்.எஸ். கிருஷ்ணன், T.A. மதுரம் போன்ற தலை சிறந்த நடிகர்களையும், எம்.எஸ். சுப்புலக்ஷ்மி போன்ற இசை மேதைகளையும் இலகுவாக அழைத்து வந்தார். இக்களியாட்ட விழாவில் சேகரிக்கப்பட்ட நிதியில், அமரர் ஏ. நாகலிங்கம் அதிபராக இருந்தபோது, பாடசாலைக்கென வாங்கப்பட்ட காணிக்கான கடனில் ஒரு பகுதி கொடுக்கப்பட்டது, தளபாடங்கள் செய்யப்பட்டன. மிகுதிப் பணத்தில் மூன்று மாடிக் கட்டடமும் எழுந்தது. கல்வி அமைச்சின் அங்கீகாரத்தோடு கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் சில மாணவர்கள், கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக் கல்வியை, யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர விரும்பியபோது, அவரது மனம் ஒப்புக்கொள்ளாத போதிலும், அதனை அவர் தடுக்கவில்லை. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அவர் கொண்ட பெருந்தன்மையை இது எடுத்துக் காட்டுகிறது.

பாடசாலை மாணவர்களை, ஹன்டி அவர்கள் கையாண்ட விதமே வித்தியாசமானதாகும். மாணவர்களை அடக்கி ஒடுக்காமல் சுதந்திரமாக செயற்பட ஊக்கமளித்தார். வெறும் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிடாமல், ஜனநாயக அமைப்பில் சமூகத்தோடு ஒன்றிணைந்து வாழ்வதற்கான ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும், என்பதில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். பாடசாலையில் மாணவர் சங்கத்தையும், பழைய மாணவர் சங்கத்தையும் திறம்பட செயற்பட ஊக்குவித்தார். வருடாவருடம் இராப்போசன விருந்தை ஏற்பாடு செய்து, கல்வியியலாளர்களை அழைத்து, மாணவர்களுக்குப் பயன்படும் உரைகளை நிகழ்த்துவித்தார்.

பாடசாலை மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதையோ, அரசியல் தலைவர்கள் மாணவர்களை அரசியலில் பயன்படுத்துவதையோ, ஹன்டி அவர்கள் விரும்பவில்லை. 1953-ஆம் ஆண்டு இலங்கையின் பிரதமராக இருந்த சேர். ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணம் வந்தபோது, யாழ். அரசாங்க அதிபராகப் பணியாற்றிய ஸ்ரீகாந்தா, அவரை வரவேற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். காங்கேசன்துறை வீதி வழியாகப் பிரதமர் செல்லும்போது, வீதியின் இருமருங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் நின்று, பிரதமரை வரவேற்கத் தயார்ப்படுத்தும்படி ஹன்டி அவர்களைக் கேட்டுக் கொண்டார். அதற்கு ஹன்டி அவர்கள் 'வீதியோரத்தில் வெயிலில் நின்று மாணவர்கள் பிரதமரை வரவேற்பதில் தனக்கு சம்மதமில்லை எனவும், பாடசாலைக்கு விஜயம் செய்தால் வரவேற்கலாம், எனவும் கூறி, பாடசாலையில் பொதுமக்கள் வரவேற்பாக அதனை நடத்தினர்.

அக்காலப்பகுதியில் தமிழ்த் தேசியத்தை அடிநாதமாகக் கொண்டு, தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்று வந்தது. தமிழ்த் தேசியத்தைத் தீவிரமாக ஆதரித்த சிலர், பிரதமருக்கான வரவேற்பு நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு, கொக்குவில் இந்துக் கல்லூரியில் வகுப்புகள் இருந்த ஓலைக் கொட்டில்களை எரித்தனர். எனினும் பிரதமருக்கான வரவேற்பு திட்டமிட்டபடி நடைபெற்றது. எரிந்த ஓலைக் கொட்டில் வகுப்புகளைப் பார்த்த ஹன்டி அவர்கள் 'இனிமேல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஓலைக் கொட்டில் வகுப்புகள் இருக்கமாட்டாது' என உறுதி பூண்டார். பின்னர் அவை மூன்று மாடிக் கட்டடமாக எழுந்தமை வரலாறு. இன்றைய அக்கல்லூரிச் சமூகம் அதற்கு ஹன்டி பேரின்பநாயகம் எனப் பெயர் சூட்டி மதிப்பளித்துள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் தலை சிறந்த அதிபராகப் பணியாற்றிய ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் 1960-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஹன்டி அவர்கள் மீண்டும் அரசியலில் ஈடுபட்டார். 1956-ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி, எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டமையால்

வட்டுக்கோட்டை தொகுதி, வட்டுக்கோட்டை, உடுவில் என இரண்டாகின. 1960-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், உடுவில் தொகுதியில் போட்டி யிட்ட ஹன்டி பேரின்பநாயகம் 1241 வாக்குகளைப் பெற்று மீண்டும் தோல்வியடைந்தார். அதன் பின்னர் நாடாளுமன்ற அரசியலைத் துறந்தார். எனினும் தமிழ் மக்களின் அரசியல் விமோசனத்துக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தார்.

ஹன்டி அவர்கள் பத்திரிகை ஆசிரியராகவும், நூலாசிரியரா கவும் செயற்பட்டுள்ளார். 1940-ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஈழகேசரி பொன்னையா அவர்களின் ‘கேசரி’ (KESARI) என் னும் ஆங்கில வாரப் பத்திரிகையின் ஆசிரியராகத் திகழ்ந் துள்ளார். ‘NORTHERN CO-OPERATOR’ என்னும் ஆங்கில சஞ்சிகையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். ‘Language Government and in Education’ என்னும் நூலை எழுதிய அவர், கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்களின் அரசியல் அறிவை மேம்படுத்த, ‘ஆட்சி இயல்’ என்னும் நூலை இலகு தமிழில் எழுதினார்.

தொழிற்சங்கவாதியாகச் செயற்பட்டு ஆசிரியர்களின் மேம் பாட்டுக்காகவும் பாடுபட்டுள்ளார். அகில இலங்கை ஆசிரியர் சம் மேளனத்தின் தலைவராகவும், 1961-ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணையத்தின் உறுப்பினராகவும், வடமாகாண ஆசிரியர் சங்கம், அதிபர்கள் சங்கம், மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக் குழு என்பவற்றில் அங்கத்தவராகவும் இணைந்து பல் வேறுபட்ட கல்விப் பணிகளிலும் ஈடுபட்டார்.

சிறந்த ஆசிரியராகவும், திறமைமிக்க அதிபராகவும், பேச்சாள ராகவும் பத்திரிகை ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், முற்போக்கு எழுத்தாளராகவும், காந்தியவாதியாகவும், சமூக சேவகராகவும், இடதுசாரி அரசியல்வாதியாகவும், பன்முக ஆளுமை கொண்ட ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள், 1977-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் திகதி தமது 78-வது வயதில் அமரத்துவம் அடைந்தார். தமிழ் மக்களின் சமூக அரசியல் விடிவுக்காகத் தூரநோக்குடன், கல்வியையும், அரசி யலையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த ஒரு தனிப் பெருந் தலைவராக அவர் கருதப்படுகின்றார்.



vivekananthan.v@thaiveedu.com


**சிந்தனைக் களம்**

**(இசை, நடனம்)**

**இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்**

**Zoom ID: 816 1894 9584 Password: 101 052**

**சிறப்பு நிகழ்வு: 7**

உரைப் பொருள்:

**‘நடனக்கலையில் ரஸபாவங்களும் உத்தி முறைகளும் - பரதசாஸ்திரத்தை மையப்படுத்திய பார்வை’**

உரையாளர்:

**‘பத்ம விபூஷண்’**

***Dr.* பத்மா சுப்ரமணியம்**

**(Dancer & Indic scholar, President-Nrithyodaya)**



08 நவம்பர் 2025 சனிக்கிழமை 8:00pm-9:00pm (கனடா-ரொறன்ரோ)

08 நவம்பர் 2025 சனிக்கிழமை 5:00pm-6:00pm (கலிபோர்னியா)

09 நவம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை 6:30am- 7:30am (இலங்கை, இந்தியா)

09 நவம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை 11:00am-12:00pm (சிட்னி)

Website: www.chinthanaikkalam.org

E-mail:



# நுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி - 5

# பெண்ணுரிமையின் குரல்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புகள்:**

நுகி வா தியாங்கோ ஆபிரிக்க எழுத்தாளர்களில் முதன்மையானவர். தேசியவாதம், கலாசார அடையாளம், காலனித்துவ நீக்கம் மற்றும் சமூக நீதி போன்ற கேள்விகளை ஒன்றாக இணைத்ததற்காக நன்கறியப்பட்டவர். அவரது விடுதலை பற்றிய பார்வையின் மையமானது பாலினம் தொடர்பான கேள்வியில் தொக்கி நிற்கிறது: மக்கள் தொகையில் பாதிப்பேர் ஆணாதிக்கத்தால் ஒடுக்கப்பட்டால் உண்மையிலேயே சுதந்திரமான ஆபிரிக்கா எப்படி உருவாகும்? இந்தக் கேள்வியை அவர் தனது படைப்புகள் அனைத்திலும் கேட்கிறார், அதற்கான குரலாக ஒலிக்கிறார். அவரது படைப்புகளில் ஆண் புரட்சியாளர்கள் பெரும்பாலும் மைய நிலைக்கு வந்தாலும், நுகியின் படைப்புகள் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்திற்கும் பிந்தைய காலனித்துவ தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பெண்களின் பங்களிப்புகளைத் தொடர்ந்து முன்னறிவிக்கின்றன. அவரது பெண் கதாபாத்திரங்கள் மீள்தன்மை, கலாசாரத் தொடர்ச்சி மற்றும் அரசியல் தைரியத்தை பிரதிபலிக்கின்றன, அதே நேரத்தில் அவர்கள் சுமக்கும் பாலின சுமைகளையும் வெளிப்படுத்துகின்றன.

கென்யாவின் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்திலும், காலனித்துவத்திற்குப் பிந்தைய தேசத்தின் மறுகட்டமைப்பிலும் பெண்களை முக்கிய பங்கு வகிக்கும் அரங்காடிகளாக தியாங்கோ தனது படைப்புகளில் நிலைநிறுத்துகிறார். அழாதே குழந்தாய் (Weep not, Child) நாவலில், நியோகாபி தனது மகன்களின் கல்வியை ஊக்குவிப்பதன் மூலமும், மெள மெள எழுச்சியை ஆதரிப்பதன் மூலமும் பாலின விதிமுறைகளை அமைதியாக மீறுகிறார். ஒரு கோதுமை மணி (A Grain of Wheat) நாவலில், மும்பி சுதந்திர இயக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக மாறுகிறார், துரோகம் மற்றும் அதிர்ச்சியைக் கடந்து செல்லும் அதே வேளையில் கென்யாவின் நம்பிக்கைகளை அடையாளப்படுத்துகிறார். இரத்தத்தின் இதழ்கள் நாவலில், வான்ஜா பொருளாதார மற்றும் பாலியல் சுரண்டலுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறார், சுதந்திரத்தின் ஏமாற்றத்தையும், நவகாலனித்துவ முதலாளித்துவத்தை எதிர்ப்பதில் பெண்களின் மீள்தன்மையையும் அடையாளப்படுத்துகிறார்.

இந்தப் பெண்கள் காலனித்துவ ஆட்சியை மட்டுமல்ல, உள் நாட்டுப் பாத்திரங்களுக்குள் தங்களைக் கட்டுப்படுத்த முயலும் ஆணாதிக்க பழக்கவழக்கங்களையும் எதிர்க்கின்றனர். அவர்கள் கூட்டணிகளை உருவாக்குவதையும், பூர்வீக கலாசாரத்தைப் பாதுகாப்பதையும், சமூகங்களை நிலைநிறுத்துவதையும் தியாங்கோ சித்திரிக்கிறார். சிலுவையில் தொங்கும் சாத்தானில், வரிங்கா ஆணாதிக்க சுரண்டலுக்கு ஆளானவராக நாவலின் தொடக்கத்தில் இருக்கிறார். ஆனால் ஒரு தன்னம்பிக்கை கொண்ட புரட்சியாளராக மாறுகிறார், தேசிய விடுதலையைப் புத்துயிர் பெறச் செய்யும் பெண்களின் அதிகாரமளிப்பின் திறனைக் குறிக்கிறார். இதை தியாங்கோவின் பரந்த காலனித்துவக் கண்ணோட்டத்தின் ஒரு பகுதியாகக் காணலாம். அவரைப் பொறுத்தவரையில் உண்மையான விடுதலை என்பது காலனித்துவக் கட்டமைப்புகள் மற்றும் பூர்வீக ஆணாதிக்க படிநிலைகள் இரண்டையும் தகர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய கென்யாவை மையமாகக் கொண்ட தனது முதல் நாடகமான ஒரு கறுப்புத் துறவியின் (The Black Hermit) கதைக்களமானது, பழங்குடி விசுவாசத்திற்கும் தேசிய கடமைக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் மேற்கத்தேய கல்வி கற்ற மூன்று பெண் கதாபாத்திரங்களை - தோனி, நியோபி மற்றும் ஜேன் - மையமாகக் கொண்டுள்ளது. அவை ஆணாதிக்க சமூகத்திற்குள் ஆபிரிக்க பெண்மையின் மூன்று நிலைகளை அடையாளப்படுத்துகின்றன. திருமணம் மற்றும் தாய்மை மூலம் மட்டுமே தன்னை வரையறுக்கும் பாரம்பரிய பெண்ணை தோனி உள்ளடக்குகிறார். கடமைக்காக அவள் தனது மகிழ்ச்சியை தியாகம் செய்கிறாள், ரெமியின் வருகைக்காகக் காத்திருக்கிறாள், இறுதியில் அவன் அவளை நிராகரிக்கும்போது தற்கொலை செய்து கொள்கிறாள். பெண்ணியத்தின் மையமான தன்னம்பிக்கை இல்லாத, ஆணாதிக்கத்தை உள்வாங்கும் சோகமான பெண்ணாக அவள் இருக்கிறாள். ரெமியின் தாயார் நியோபி, பழைய தலைமுறையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவர் ஆணாதிக்க விதிமுறைகளை ஏற்றுக் கொள்கிறார், ஆனால் இரக்கத்தைக் காட்டுகிறார் மற்றும் தோனியை தனிப்பட்ட மகிழ்ச்சியைத் தேட ஊக்குவிக்கிறார். அவர் பெண்ணியத்தின் வளர்க்கும் நெறிமுறைகளைப் பிரதிபலிக்கிறார். ரெமியின் காதலியான ஜேன், வளர்ந்து வரும் நவீன பெண்ணை அடையாளப்படுத்துகிறார். அவர் பொருளாதார ரீதியாக சுதந்திரமானவர், உறுதியானவர் மற்றும் உணர்ச்சி ரீதியாக நேர்மையானவர். அவர் மரியாதை கோருகிறார், பழங்குடி தப்பெண்ணத்தை சவாலுக்குட்படுத்துகிறார், மேலும் தொழில் மற்றும் குடும்பத்தை சமமாக இணைக்கத் தயாராக உள்ளார். பெண்மையின் சுய வரையறையின் இலட்சியத்தை அவர் உள்ளடக்குகிறார். ஆனால் கலாசார ரீதியாக வேரூன்றிய பெண்மையை தகர்க்க இயலாமல் போராடுகிறார். இந்தப் பெண்களைப் பற்றிய தியாங்கோவின் அனுதாபமான சித்திரிப்பு பாலின ஒடுக்குமுறை பற்றிய அவரது விழிப்புணர்வையும், முகாமை மற்றும் மாற்றத்திற்கான பெண்களின் திறனில் அவரது நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

காலனித்துவம் மற்றும் ஆணாதிக்கத்தால் பெண்களின் இரட்டை ஓரங்கட்டலை தியாங்கோ சித்திரிக்கிறார். பெண்கள் இரண்டு முனைகளில் போராடுகிறார்கள்: அவர்கள் தங்கள் சொந்த சமூகங்களில் பாலின அடிபணிவைத் தாங்கிக் கொண்டு காலனித்துவ சுரண்டலை எதிர்க்கிறார்கள். இது ஆழமான உள் மோதல்களை உருவாக்குகிறது. அவர்கள் தன்னலமற்ற தாய்மார்களாகவும் மனைவிகளாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் அரசியல் பங்கேற்பு மற்றும் தனிப்பட்ட திருப்திக்காக ஏங்குகிறார்கள்.

பாலின ஒடுக்குமுறை வர்க்கம், இனம் மற்றும் இனத்துடன் எவ்வாறு குறுக்கிடுகிறது என்பதையும் தியாங்கோ காட்டுகிறார். அவரது பெண் கதாபாத்திரங்கள் பெரும்பாலும் கிராமப்புற, தொழிலாள வர்க்கம் அல்லது வேறுவிதமாக ஓரங்கட்டப்பட்டவர்கள். வான்ஜா ஒரு பெண்ணாக மட்டுமல்ல, ஏழை ஒற்றைத் தாயாகவும் பாதிக்கப்படுகிறார்; வாரிங்கா வர்க்க அடிப்படையிலான பொருளாதார சுரண்டல் மற்றும் பாலின பாலியல் துன்புறுத்தல் இரண்டையும் எதிர்கொள்கிறார். தியாங்கோ பல ஒடுக்குமுறைகளால் வடிவமைக்கப்பட்ட பல்வேறு பெண்களை சித்திரிக்கிறார்.

## நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்:

அவரின் முதல் இரண்டு நாவல்கள் பாரம்பரியத்திற்கும் நவீனத்துவத்திற்கும் இடையிலான மோதலைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தும் பெண் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துகின்றன. அழாதே குழந்தாயில், நியோகாபி தனது மகனைக் கல்வி கற்க ஊக்குவிக்கிறார், அதை சமூக மேம்பாட்டிற்கான திறவுகோலாகக் கருதுகிறார். அவரது பங்கு தாய்வழி மற்றும் பாரம்பரியமாகத் தோன்றினாலும், கல்வியில் அவர் அமைதியாக வலியுறுத்துவது ஆணாதிக்க விதிமுறைகளை நுட்பமாக சவால் செய்கிறது. அந்தப் பாத்திரம் இவ்வாறு சொல்கிறது: 'நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் ஏழைகள். ஆனால் நாங்கள் உங்களைப் பள்ளிக்குக் கொடுத்துள்ளோம். ஏனெனில் உங்களுக்கான வெளிச்சம் கல்வியே'

இதேபோல், இடையில் ஓடும் நதியில் (The River Between), முத்தோனியின் கதாபாத்திரம் மிஷனரி எதிர்ப்பையும் மீறி சர்ச்சைக்குரிய பெண் விருத்தி சேதன சடங்கிற்கு உட்படுவதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உடல் சுயாட்சியை நாடுகிறது: 'நான் ஒரு பெண்ணாக இருக்க விரும்புகிறேன், ஓர் உண்மையான பெண்ணாக - பழங்குடியினரின் வழிகளை அறிந்த ஓர் உண்மையான பெண்ணாக, இருக்க விரும்புகிறேன்.' என்று அப்பாத்திரம் உறுதியாகப் பேசுகிறது. இது வெளிப்புறக் கட்டுப்பாட்டை எதிர்ப்பதில் குறித்த பாத்திரத்தின் முன்னோடியான தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இங்கே, தியாங்கோ பெண்களின் உடல்கள் காலனித்துவ மற்றும் பூர்வீக ஆணாதிக்கங்களுக்கு எவ்வாறு போர்க்களங்களாகின்றன என்பதை அம்பலப்படுத்துகிறார். அதேவேளை இரண்டிலிருந்தும் விடுதலையின் அவசியத்தைக் குறித்துக்காட்டுகிறார்.

ஒரு கோதுமை மணி நாவல், பெண்களை காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் மையத்தில் வைக்கிறது. விடுதலை இயக்கங்களில் பெண்களின் பாத்திரங்களின் முரண்பாடுகளை மும்பி என்ற பெண் பாத்திரம் உள்ளடக்கியுள்ளது - அவர்கள் நாட்டின் குறியீட்டுத் தாய்மார்களாக மதிக்கப்படுகிறார்கள், ஆனால் பெரும்பாலும் தனிப்பட்ட முறையில் ஓரங்

கட்டப்படுகிறார்கள். மும்பி தனது கணவரின் பாசாங்குத் தனத்தைப் பற்றி எதிர்கொள்வதன் மூலம் ஆணாதிக்க எதிர் பார்ப்புகளை மீறுகிறார்: 'நீங்கள் ஆண்கள் எங்களைக் காட்டிக் கொடுத்தீர்கள்... நீங்கள் வீரம் மற்றும் சுதந்திரம் பற்றிப் பேசுகிறீர்கள். சுமையைச் சுமந்த எங்களைப் பற்றி என்ன பேசியிருக்கிறீர்கள்?' என்று அப்பாத்திரம் கேள்வி எழுப்புகிறது. தேசியவாத அரசியலுக்குள் ஒரு புதிய பெண்ணிய விமர்சனத்தை அவரது கூற்று வெளிப்படுத்து கிறது: பாலின சமத்துவம் இல்லாத சுதந்திரம் முழுமையடை யவில்லை. அந்நாவலில் மும்பி ஒரு போர்க்குணம்மிக்க புரட் சியாளராக சித்திரிக்கப்படவில்லை என்றாலும், அவரது தார்மீக தைரியம் தியாங்கோவின் பிற்கால படைப்புகளில் மிகவும் தீவிரமான பெண் கதாநாயகர்களை முன்னறிவிக் கிறது.

இரத்தத்தின் இதழ்கள் தீர்க்கமானதொரு மாற்றத்தைக் குறிக் கின்றது. இங்கே, அவர் முதலாளித்துவ சுரண்டலை ஆணாதிக்க ஒடுக்குமுறையுடன் வெளிப்படையாக இணைக் கிறார். பெண் எதிர்ப்பை முன்னிலைப்படுத்துகிறார். பெண்மையக் கதாபாத்திரமான வன்ஜா மூலம் இது எடுத்துக் காட்டப்படுகிறது. ஆரம்பத்தில் ஆண் பார்வை மூலம் சித்த ரிக்கப்படும் அவர், இறுதியில் பின்காலனித்துவ உயரடுக்கின் ஊழலை அம்பலப்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு முகவராக மாறுகிறார். பாலியல் வன்முறை மற்றும் பொருளாதார ஓரங் கட்டப்படுதலில் இருந்து தப்பிய பிறகு, அவர் தனது சுதந்தி ரத்தை மீட்டெடுக்கிறார்: 'நான் ஆண்களால் பயன்படுத்தப்பட் டிருக்கிறேன்... இனி ஒருபோதும் யாருடைய கருவியாகவும் இருக்க மாட்டேன்.' என்று அவர் பேசுகிறார். வான்ஜாவின் விபச்சார விடுதி எதிர்ப்பின் அடையாளமாக மாறுகிறது. தியாங்கோ பாலியல் வேலையை விமர்சனமின்றி முன்வைக்க வில்லை என்றாலும், வான்ஜாவின் கிளர்ச்சி பெண்கள் பாதிக் கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தை கேள் விக்குள்ளாக்குகிறது. இது நாவலின் பரந்த மார்க்சிய-பெண் ணியவாத வாதத்தை பிரதிபலிக்கிறது: விடுதலை, வர்க்கம் மற்றும் பாலினப் படிநிலைகள் இரண்டையும் அகற்றக் கோருகிறது.

சிலுவையில் தொங்கும் சாத்தான், ஒரு கூட்டு, தொழிலாள வர்க்கப் பெண்ணியத்தை சித்திரிப்பதன் மூலம் பெண்ணிய சிந்தனைகளில் மேலும் முன்னேறியது. கதாநாயகி, வாரிங்கா, காலனித்துவ-முதலாளித்துவ உயரடுக்கினர் மற்றும் ஆணா திக்க நபர்களால் சுரண்டலை அனுபவிக்கிறார். ஆரம்பத்தில் தன்னை சந்தேகித்த அவர், ஒரு புரட்சிகர விழிப்புணர்வை அடைகிறார், இறுதியில் தனது முதலாளியின் பாலியல் முன் னேற்றங்களை நிராகரித்து, தன்னை ஆயுதபாணியாக்கி, தொழிலாளர்களின் போராட்டங்களில் இணைகிறார். வாரிங் காவின் உச்சகட்ட அறிவிப்பு தியாங்கோவின் புரட்சிகர பெண்ணியப் பார்வையை உள்ளடக்கியது: 'இனி நான் மற்ற வர்கள் பறிக்கும் பூவாக இருக்க மாட்டேன்... வேட்டையாடும் சிங்கமாக இருப்பேன்.' இங்கே, அவர் பெண்ணிய மற்றும் முத லாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்களை இணைத்து, அடக் குமுறை அமைப்புகளை தூக்கியெறிவதில் பெண்களைத் தலைவர்களாக முன்வைக்கிறது. முந்தைய தனிமைப்படுத் தப்பட்ட கதாநாயகிகளைப் போலல்லாமல், வாரிங்கா ஒரு கூட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாகச் செயல்படுகிறாள், பெண்களின் விடுதலை பரந்த சமூகப் புரட்சிக்கு ஒருங்கி ணைந்ததாகத் தியாங்கோவின் நம்பிக்கையை முன்மொழிகிறது.

அவரது நாவல்கள் முழுவதும், பெண்களைப் பாரம்பரி யத்தின் குறியீட்டுத் தாங்கிகளாக அல்லாமல், வரலாற்றைச் செயற்படுத்துபவர்களாகவே சித்திரிக்கிறது. நியோகாபியின் அமைதியான கல்வி வலியுறுத்தல் முதல் வரிங்காவின் ஆயுதக் கிளர்ச்சி வரை, அவரது பெண் கதாபாத்திரங்கள் கட்டுப்படுத்தப்பட்ட உள்நாட்டுப் பாத்திரங்களிலிருந்து புரட் சிகர கடமை வரை ஒரு பாதையைக் கோடிட்டுக் காட்டு கின்றன. இந்தப் பரிணாமம், பெண்ணிய மற்றும் மார்க்சிய சிந் தனையுடன் தியாங்கோவின் வளர்ந்து வந்த ஈடுபாட்டைப் பிர திபலிக்கிறது, இது ஆபிரிக்காவில் உண்மையான விடுத லைக்கு காலனித்துவம் மற்றும் முதலாளித்துவத்துடன் ஆணாதிக்கத்தை அகற்ற வேண்டும் என்பதைக் குறிக்கிறது. சிலுவையில் தொங்கும் சாத்தான் என்ற நூலில் வாரிங்கா இவ்வாறு அறிவிக்கிறார்: 'பெண்களின் விடுதலை சமூகத்தின் விடுதலையிலிருந்து பிரிக்க முடியாதது'.

## நாடகங்களில் பெண் பாத்திரங்கள்:

ஒரு நாவலாசிரியராக மட்டுமல்லாமல், ஆபிரிக்காவின் மிகவும் அரசியல் ரீதியாக ஈடுபாடு கொண்ட நாடக ஆசிரியர் களில் ஒருவராகவும் தியாங்கோ புகழ்பெற்றவர். அவரது நாட கங்கள் மார்க்சிய, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் காலனித் துவக் கண்ணோட்டங்களை இணைக்கின்றன. அவை புரட் சிகர மாற்றத்தின் முக்கிய பகுதியாக ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தை மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்கின்றன. பெண்களை தேசத்தின் குறியீட்டுத் தாய்மார் களாக சித்திரிப்பதைத் தாண்டி, அவர்களை நனவான, ஒழுங் கமைக்கப்பட்ட எதிர்ப்பின் முகவர்களாகக் காட்டுகிறது.

டெடன் கிமதி மீதான வழக்கு (The Trial of Dedan Kimathi), பிரித்தானிய காலனித்துவ ஆட்சியால் விசாரணைக்கு உட்ப டுத்தப்பட்ட காலனித்துவ எதிர்ப்பு சுதந்திரப் போராளி டெடன் கிமதியின் இறுதி மணிநேரங்களை நாடகமாக்குகிறது. பெண்கள் வெறும் ஆதரவான நபர்களாக மட்டுமல்லாமல், புரட்சிகர தோழர்களாக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளனர். நாடகத்தில் வரும் பெண்கள் கென்ய மக்களின் கூட்டுப் போராட்டத்தை வெளிப்படுத்தும் கருத்தியல் ஊதுகுழல் களாக செயற்படுகிறார்கள். அந்நாடகத்தில் ஒடுக்கப்பட்ட

**தியாங்கோவின் நாடகங்கள் மார்க்சிய, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் காலனித்துவக் கண்ணோட்டங்களை இணைக்கின்றன. அவை புரட்சிகர மாற்றத்தின் முக்கிய பகுதியாக ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தை மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்கின்றன**

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் உரையாற்றும் பெண் இவ்வாறு அறிவிக்கிறாள்: 'நமது குழந்தைகளை அடிமைத்தனத்தில் வளர விடமாட்டோம். பெண்களின் கருப்பைகள் சுதந்திரமான மக்களைப் பெற்றெடுக்கும்.' இந்த வசனம், செயலற்ற இனப்பெருக்கம் செய்பவர்களாக பெண்களின் ஆணாதிக்கக் கோட்பாட்டைத் தகர்த்து, தாய்மையை உணர்வுபூர்வமாக அரசியல் எதிர்ப்பின் செயலாக மாற்றுகிறது. கெரில்லாக்களுக்குத் தோட்டாக்களைக் கடத்தும் பெண் பாத்திரம், பெண்களின் போராட்ட இயல்பையும் துணிவையும் இவ்வாறு ஒரு பாத்திரம் பேசுகிறது: 'இங்கே போராட்டம் அனைவராலும் மேற்கொள்ளப்படுகிறது: ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்'; இங்கே, தியாங்கோ பெண்களை துணைப் பெண்களாக அல்லாமல் இன்றியமையாத புரட்சியாளர்களாகக் காட்டுகிறார், காலனித்துவ மற்றும் ஆணாதிக்கத்தை ஒரே நேரத்தில் எதிர்க்கும் கூட்டுப் பெண்ணியப் போர்க்குணத்தை முன்னறிவிக்கிறார்.

நான் விரும்பும் போது திருமணம் செய்து கொள்வேன் நாடகம், கமிரித்து சமூக கல்வி மற்றும் கலாசார மையத்தில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களால் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகம் புதிய காலனித்துவ முதலாளித்துவத்தையும் மத பாசாங்குத்தனத்தையும் விமர்சிக்கிறது, அதே நேரத்தில் ஆணாதிக்க விவசாய குடும்பங்களுக்குள் பெண்கள் மீதான ஒடுக்குமுறையையும் அம்பலப்படுத்துகிறது.

கதாநாயகி கதோனி ஆரம்பத்தில் தனது குடும்பத்தின் சமூக இயக்கத்தைப் பாதுகாக்க ஒரு பணக்கார வயதானவரை திருமணம் செய்து கொள்ள அழுத்தம் கொடுக்கப்படுகிறாள். ஆனால் அவள் அதை எதிர்க்கிறாள்: 'மற்றவர்கள் விரும்பும் போது அல்ல, நான் விரும்பும் போது திருமணம் செய்து கொள்வேன்' என்று உறுதியாக அவள் பேசுகிறாள். உடல் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தின் இந்த வலியுறுத்தல் ஒரு தீவிரமான பெண்ணியச் சிந்தனையாகும். குறிப்பாக பெண்களின் தேர்வுகள் பெரும்பாலும் குறைக்கப்படும் கிராமப்புற கென்ய சூழலில் இந்த நாடகம் முக்கியமானது. மேலும், ஆணாதிக்க கட்டுப்பாடு முதலாளித்துவ சுரண்டலுடன் எவ்வாறு ஒத்துப்போகிறது என்பதை நாடகம் எடுத்துக் காட்டுகிறது. பெண்களின் ஊதியம் பெறாத உழைப்பு, குடும்பம் மற்றும் காலனித்துவ அமைப்புகள் இரண்டையும் நிலைநிறுத்துகிறது. திருமணத்தில் பண்டமாக்கப்படுவதற்கு மறுப்பைக் காட்டுவதன் மூலம், தியாங்கோ அடக்குமுறை மரபுகள் மற்றும் நவீன முதலாளித்துவ ஆணாதிக்கம் இரண்டையும் குற்றம் சாட்டுகிறார். இதில் வாங்கேசி என்ற கதாபாத்திரம் கூட்டு எதிர்ப்பையும் வெளிப்படுத்துகிறது, விவசாயப் பெண்களை ஆண்களுடன் சேர்ந்து நிலத்தையும் நீதியையும் கோர வலியுறுத்துகிறது, அது: 'சுதந்திரம் பெண்களுக்கு பரிசாக வழங்கப்படவில்லை; அதை நாம் நம் கைகளால் கைப்பற்ற வேண்டும்' என்கிறது. இத்தகைய வரிகள் வர்க்கப் போராட்டத்தில் வேரூன்றிய புரட்சிகரப் பெண்ணிய உணர்வை வெளிப்படையாக காட்டுகிறது.

அம்மா, எனக்காகப் பாடு (Mother, Sing For Me) நாடகத்தில், நினைவாற்றல், கலாசாரம்: எதிர்ப்பு ஆகியவற்றைத் தாங்குபவர்களாக பெண்களின் பங்கை வலியுறுத்துகிறார். இந்த நாடகம், மேற்கத்தேய கல்வி கற்ற இளைஞர்களை, சமூக மீள்தன்மை மற்றும் கலாசார வேரூன்றிய தன்மையை உள்ளடக்கிய தாயின் உருவத்துடன் இணைக்கிறது. இருப்பினும், தியாங்கோ அவளை ஒரு அமைதியான அடையாளமாக இலட்சியப்படுத்துவதைத் தவிர்க்கிறார்: தாய் காலனித்துவம் மற்றும் பூர்வீக ஆணாதிக்கம் இரண்டையும் தீவிரமாக விமர்சிக்கிறார். அவர் புலம்புகிறார்: 'நம் வழிகள் பின்தங்கியவை என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது... ஆண்கள் அதை நம்பி எங்களை மறந்துவிட்டார்கள்'. தாயின் குரலை முன்னிலைப்படுத்துவதன் மூலம், தியாங்கோ தேசியவாத வரலாற்றிலிருந்து பெண்களை ஆணாதிக்க ரீதியாக அழிப்பதை விமர்சிக்கிறார். புரட்சிகர மாற்றம் பெண்களின் கலாசார, அரசியல் முதனிலையை மீட்டெடுக்க வேண்டும், பாரம்பரியத்தின் பாதுகாவலர்களாக மட்டுமல்ல, விடுவிக்கப்பட்ட எதிர்காலத்தின் இணைப்படைப்பாளர்களாகவும் இருக்க வேண்டும் என்று நாடகம் அறிவுறுத்துகிறது. தாயின் பாடும் செயலானது தேசிய கதையாடலுக்குள் அமைதியாகிவிட்ட பெண் குரல்களை மீட்டெடுப்பதற்கான உருவகமாக மாறுகிறது.

அவரது நாடகங்கள் முழுவதும், பெண்களைக் குறியீட்டு நபர்களாக சித்திரிப்பதில் இருந்து அவர்களை மையப் புரட்சிகர நடிகர்களாக சித்திரிப்பது வரை பரிணமிக்கிறது. காலனித்துவ வீரர்களை எதிர்க்கும் பெண், தனது நிபந்தனைகளின்படி திருமணத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வலியுறுத்துவது, அல்லது கலாசார நினைவகத்தில் பெண்களின் பங்கை தாய் மீட்டெடுப்பது என எதுவாக இருந்தாலும், பெண் விடுதலை இல்லாமல் உண்மையான விடுதலை சாத்தியமற்றது என்று தியாங்கோ வலியுறுத்துகிறார். காலனித்துவம் மற்றும் முதலாளித்துவத்தைப் போலவே ஆணாதிக்கமும் தூக்கி எறியப்பட வேண்டிய ஒரு அமைப்பு என்பதை அவரது நாடகங்கள் வெளிப்படுத்துகின்றன - இது ஆபிரிக்க இலக்கியத்தில் புரட்சிகர பெண்ணிய சிந்தனைக்கு அவரது நாடகப் படைப்புகளை முக்கிய பங்களிப்பாக ஆக்குகிறது.

## தியாங்கோவின் எழுத்துலகில் பெண்ணியம்:

தனது நாவல்கள், நாடகங்களுக்காக மிகவும் பிரபலமானவரானாலும், அவரது இலக்கியம் சாராத எழுத்துக்கள் - கட்டுரைகள், நினைவுக் குறிப்புகள், சொற்பொழிவுகள், கலாசார விமர்சனம் -பெண்ணிய சிந்தனையுடன் ஆழமான ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றன. Homecoming (1972), Writers in

**கலாசார நினைவகத்தில் பெண்களின் பங்கை**
**தாய் மீட்டெடுப்பது என எதுவாக இருந்தாலும்,**
**பெண் விடுதலை இல்லாமல்**
**உண்மையான விடுதலை சாத்தியமற்றது**
**என்று தியாங்கோ வலியுறுத்துகிறார்**

Politics (1981), Decolonising the Mind (1986), Moving the Center (1993), Penpoints, Gunpoints and Dreams (1998) மற்றும் அவரது சிறை நினைவுக் குறிப்பான Detained: A Writer's Prison Diary (1981) போன்ற நூல்களில், தியாங்கோ பெண்களின் விடுதலையைக் காலனித்துவம், முதலாளித்துவம் மற்றும் கலாசார ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பெரிய போராட்டங்களுடன் தொடர்ந்து இணைக்கிறார். பெண்ணியத்தின் சொற்களஞ்சியத்தில் எப்போதும் கட்டமைக்கப்படவில்லை என்றாலும், இந்த எழுத்துகள் புரட்சிகர பெண்ணியக் கருத்துகளை வெளிப்படுத்துகின்றன - ஒரு நியாயமான காலனித்துவமற்ற சமூகத்தைக் கட்டமைக்கும் பகுதியாக ஆணாதிக்கக் கட்டமைப்புகளை அகற்ற அழைப்பு விடுக்கின்றன.

'வீடுமீளல்' என்ற தனது முதல் கட்டுரைத் தொகுப்பில், காலனித்துவ கல்வியின் கலாசார ஏகாதிபத்தியத்தையும் அதன் பாலின பரிமாணங்களையும் விமர்சிக்கிறார். காலனித்துவம் ஆபிரிக்க பாலின உறவுகளை எவ்வாறு சீர்குலைத்தது, உற்பத்தி மற்றும் சமூகத் தலைமைத்துவத்தில் பெண்களின் வரலாற்றுப் பாத்திரங்களை எவ்வாறு அழித்தது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்: 'காலனித்துவம் நமது சமூகங்களில் பெண்களின் இடத்தை முறையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது, ஐரோப்பிய ஆணின் பிம்பத்தை மனிதகுலத்தின் விதிமுறையாகப் புகழ்ந்துரைத்தது. எங்களது பெண்தலைமைக் குடும்ப அமைப்பு முறைகள் இல்லாதாக்கப்பட்டன' என்று எழுதுகிறார். இங்கே, அவர் ஆணாதிக்க அடிபணிவை காலனித்துவ கட்டுமானமாக நிலைநிறுத்துகிறார், பெண்கள் ஒடுக்குமுறைக்கு 'பாரம்பரியத்தை' மட்டுமே குற்றம் சாட்டும் தேசியவாதக் கதையாடலைக் கேள்விக்குள்ளாக்குகிறார். காலனியத்துக்கு முந்தைய கென்ய இனக்குழு அமைப்பில் பெண்கள் வகித்த முதன்மைப் பாத்திரத்தையும், பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் இருந்ததையும் சுட்டிக்காட்டுகிறார். இது காலனித்துவமற்ற பெண்ணிய நிலைப்பாட்டின் ஆரம்பகால வெளிப்பாட்டைக் குறிக்கிறது. பெண்களின் விடுதலைக்குக் காலனித்துவ, பூர்வீக ஆணாதிக்கங்களை எதிர்க்க வேண்டும் என்று கோருகிறார்.

'அரசியலில் எழுத்தாளர்கள்' என்ற நூலில், அவர் வர்க்கப் போராட்டத்தைப் பாலின ஒடுக்குமுறையுடன் மிகத் தெளிவாக இணைக்கிறார். தேசிய விடுதலைக்குப் பிறகுதான் பெண் விடுதலையை ஒத்திவைக்க முடியும் என்றும், அது புரட்சிகரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்றும் வாதிடும் அவர் இவ்வாறு எழுதுகிறார்: 'எந்தவொரு உண்மையான மக்களின் கலாசாரமும் ஆண்கள் மற்றும் பெண்களின் சமத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். பெண்ணை மறக்கும் புரட்சி, புரட்சியின் தாயை மறந்துவிடும்'. இந்தக் கூற்று பெண்களை செயலற்ற பயனாளிகளாக அல்ல, செயலில் உள்ள வரலாற்றுப் பாத்திரங்களாக முன்னிலைப்படுத்துகிறது. சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆபிரிக்க ஆட்சிகள், ஆணாதிக்கம் உட்பட காலனித்துவ படிநிலைகளைப் பிரதிபலிப்பதாக இந்நூல் விமர்சிக்கிறது. இது முதலாளித்துவ மற்றும் ஆணாதிக்க அமைப்புகள் இணைந்து அமைந்தவை மற்றும் ஒன்றாக அகற்றப்பட வேண்டிய மார்க்சிச-பெண்ணிய பகுப்பாய்வோடு ஒத்துப்போகிறது.




காலனியாதிக்க சிந்தனையிலிருந்து விடுபடல்: ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல் என்ற நூலில், கலாசார ஆதிக்கத்தை எதிர்ப்பதில் ஆபிரிக்க மொழிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். மொழி இழப்பைப் பெண்களை அமைதிப்படுத்துவதோடு இணைக்கிறார், காலனித்துவ கல்வி ஆண் குரல்களுக்கு சலுகை அளித்தது. குழந்தைகளை அவர்களின் தாய்மார்களின் மொழிகளிலிருந்து அந்நியப்படுத்தியது என்பதைக் கவனிக்கிறார்: 'குழந்தையின் வளர்ப்பின் மொழி காலனித்துவ மொழியானது, தாயின் மொழி வெறுக்கப்பட்டது. குழந்தை தனது தாயை இழிவாகப் பார்க்கக் கற்றுக்கொண்டது' என்று எழுதுகிறார்.

இது ஒரு குறிப்பிடத்தக்க பெண்ணிய நுண்ணறிவு அகற்றலாகும் என்று வாதிடும் அவர், தாய்வழி மொழி, அறிவு அமைப்புகளை மதிப்பிழக்கச் செய்வதன் மூலம் காலனித்துவம் பெண்களை அதிகாரமற்றதாக்கியது. கலாசார காலனித்துவ நீக்கம் என்பது பாலின காலனித்துவ நீக்கமாகவும் இருக்க வேண்டும், மொழியியல் மற்றும் கலாசார பரிமாற்றிகளாக பெண்களின் அதிகாரத்தை மீட்டெடுக்க வேண்டும். இது காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தைக் குடும்பம்,

கலாசார இனப்பெருக்கம் என்ற நெருக்கமான முறையில் விரிவுபடுத்துகிறது என்பது அவரது வாதமாகும். அதேவேளை இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஆணாதிக்கம் மிகவும் வேரூன்றியுள்ளது என்பதையும் குறிப்பிட அவர் தவறவில்லை.

பெண்ணிய சிந்தனைகளின் மேற்குலக மையத்தை கீழைத்தேயம் நோக்கி நகர்த்துவதன் அவசியத்தை முன்மொழிவதோடு, கலாசார பன்மைத்துவம், உலகளாவிய நீதி பற்றிய பார்வையை முன்வைக்கிறார், அதில் பாலின நீதி வெளிப்படையாக அடங்குகிறது. மூன்றாம் உலகப் பெண்களின் பொருளாதார மற்றும் இன ஒடுக்குமுறையைப் புறக்கணிப்பதற்காக மேற்கத்தேய தாராளவாத பெண்ணியத்தை அவர் விமர்சிக்கிறார், பெண்ணியம் ஏகாதிபத்திய எதிர்ப்பில் வேரூன்றியிருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்: 'ஆபிரிக்க பெண்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பாலும் உள்ளூர் ஆணாதிக்கத்தாலும் இரட்டிப்பாக ஒடுக்கப்படுகிறார்கள். உலகின் மையம் அதன் ஐரோப்பிய மைய மற்றும் ஆண் மைய பீடத்திலிருந்து நகர்த்தப்படும்போதுதான் அவர்களின் விடுதலை சாத்தியமாகும்'.

வர்க்கம், இனம் மற்றும் பாலின ஒடுக்குமுறைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதை வலியுறுத்துவதோடு பெண்களின் விடுதலையை காலனித்துவ எதிர்ப்பு மற்றும் முதலாளித்துவ எதிர்ப்பு மாற்றத்திலிருந்து பிரிக்க முடியாததாகக் கருதும் ஆபிரிக்க மற்றும் உலகளாவிய தெற்கின் பெண்ணிய சிந்தனைகளோடு அவர் தன்னை இணைத்துக் கொள்கிறார்.

கென்யா அரசாங்கத்தால் தனது அரசியல் நாடகத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டபோது எழுதப்பட்ட சிறை நினைவுக் குறிப்பில், கமிரிது சமூக கல்வி மற்றும் கலாசார மையத்தைச் சுற்றி அணிதிரண்ட விவசாயப் பெண்கள் உட்பட பெண் ஆர்வலர்களின் முக்கிய பங்கை நுகி எடுத்துக் காட்டுகிறார். அரசு துன்புறுத்தலுக்கு மத்தியிலும் பெண்கள் நாடகத் திட்டத்தை எவ்வாறு நிலைநிறுத்தினர் என்பதை அவர் நினைவு கூர்ந்தார்: 'ஒவ்வொரு நாளும் வந்த பெண்கள்தான் எனக்கு உணவைக் கொண்டு வந்தார்கள், செய்திகளைக் கொண்டு வந்தார்கள், தைரியத்தைக் கொண்டு வந்தார்கள்' இதை அவர் 'பெண்களின் புரட்சிகர பொறுமை' என்று விவரிக்கிறார், இது பெண்களின் உழைப்பு மற்றும் மீள்தன்மையை எதிர்ப்பு இயக்கங்களின் மையமாகக் கொண்டுள்ளது. பெண்கள் வெறும் அடையாள 'தேசத்தின் தாய்மார்கள்' அல்ல, மாறாக தீவிர புரட்சிகர தோழர்கள் என்பதை இந்த தனிப்பட்ட சாட்சியம் உறுதிப்படுத்துகிறது.

இலக்கியம் அல்லாத தனது படைப்புகளில், கலாசார, அரசியல் மற்றும் பொருளாதார காலனித்துவ நீக்கத்திற்கு பெண் விடுதலை இன்றியமையாதது என்பதை வலியுறுத்தும் புரட்சிகர பெண்ணிய உணர்வை அவர் வெளிப்படுத்துகிறார். வீடுமீளலில் காலனித்துவ பாலின படிநிலைகளை விமர்சிப்பதில் இருந்து, அரசியலில் எழுத்தாளர்கள் புத்தகத்தில் புரட்சிகர கலாசாரத்திற்கு பெண்களின் மையத்தை வலியுறுத்துவது வரை, மனதை காலனித்துவப்படுத்துவதில் மொழியியல் ஏகாதிபத்தியத்தின் பாலின வன்முறையை அம்பலப்படுத்துவது வரை, ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவத்துடன் ஆணாதிக்கத்தை அகற்ற அவரது எழுத்துக்கள் தொடர்ந்து அழைப்பு விடுக்கின்றன. அவரது கட்டுரைகளும் நினைவுக் குறிப்புகளும் ஒடுக்குமுறையின் பாலின பரிமாணங்களைப் புரிந்துகொள்வதற்கும் பாலின சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட காலனித்துவமற்ற எதிர்காலத்தைக் கற்பனை செய்வதற்கும் சக்திவாய்ந்த தத்துவார்த்த கட்டமைப்பை வழங்குகின்றன. 'அரசியலில் எழுத்தாளர்கள்' புத்தகத்தில் அவர் அறிவிக்கிறார்: 'பெண்களின் முழுமையான விடுதலை இல்லாமல் உண்மையான புரட்சி இருக்க முடியாது'. இந்த நம்பிக்கை தியாங்கோவின் இலக்கியம் அல்லாத எழுத்துக்களை ஆபிரிக்க மற்றும் உலகளாவிய பெண்ணிய சிந்தனைக்கு முக்கிய பங்களிப்பாக ஆக்குகிறது.

## நிறைவுக் குறிப்புகள்:

அவரது நாவல்கள், நாடகங்கள் மற்றும் இலக்கியமற்ற எழுத்துக்கள் பெண் விடுதலை காலனித்துவம், முதலாளித்துவம், கலாசார ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பரந்த போராட்டங்களிலிருந்து பிரிக்க முடியாதவை என்பதை வலியுறுத்தும் ஆழமான புரட்சிகர பெண்ணிய பார்வையை வெளிப்படுத்துகின்றன. அவரது கற்பனை கதாநாயகிகள் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் பாலின ஒடுக்குமுறையை சவாலுக்குள்ளாக்குகிறார்கள். அவரது நாடகக் கதாபாத்திரங்கள் பெண்களை இன்றியமையாத புரட்சிகர தோழர்களாக மறுவரையறை செய்கின்றன. மேலும் அவரது கட்டுரைகள், நினைவுக் குறிப்புகள் மற்றும் கலாசார விமர்சனங்கள் ஆணாதிக்கம் ஏகாதிபத்திய ஆதிக்கத்துடன் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பது குறித்த தத்துவார்த்தத் தெளிவை வழங்குகின்றன.

அவரது நாவல்கள் பெண்களை முதலாளித்துவ எதிர்ப்பின் தலைவர்களாக முன்னிலைப்படுத்துகின்றன. நாடகங்கள் காலனித்துவக் கட்டமைப்புகளுடன் ஆணாதிக்கத்தை அகற்றுவதன் அவசியத்தை நாடகமாக்குகின்றன. அவரது இலக்கியமற்ற படைப்புகள் மொழி, கலாசாரம் மற்றும் பொருளாதார அமைப்புகள் மூலம் பாலின படிநிலைகள் எவ்வாறு மீண்டும் உருவாக்கப்படுகின்றன என்பதைக் காண்பிப்பதன் மூலம் இந்த நுண்ணறிவுகளை விரிவுபடுத்துகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்த எழுத்துக்கள் ஆபிரிக்க யதார்த்தங்களில் வேரூன்றிய தீவிரமான பெண்ணிய ஆவணக் காப்பகத்தை உருவாக்குகின்றன, ஆனால் அதே நேரத்தில் பாலின நீதிக்கான உலகளாவிய போராட்டங்களுடன் எதிரொலிக்கின்றன.

பெண்களின் முழுமையான விடுதலை இல்லாமல் எந்தப் புரட்சியும் முழுமையடையாது என்பதை அவரது படைப்புகள் நம்மை அங்கீகரிக்க வலியுறுத்துகின்றன - மேலும் ஆணாதிக்கத்தை அகற்றுவது இரண்டாம் நிலைப் பணி அல்ல, மாறாக காலனித்துவ நீக்கத்திற்கான அடித்தள நிபந்தனை. இன்று அவரது எழுத்துக்களை ஈடுபடுத்துவது அவசர அரசியல் மற்றும் கற்பித்தல் பணியாக மாறுகிறது: ஆபிரிக்க மற்றும் உலகளாவிய விடுதலைப் போராட்டங்களின் மையத்தில் பாலின நீதி இருக்கும் எதிர்காலத்தை உருவாக்குவது தவிர்க்கவியலாதது என்பதைத் தன் கல்லறையிலும் அவர் எதிரொலிப்பார் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கவியலாது.

(தொடரும்...)



meenilankco@thaiveedu.com



# பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸூம் கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையமும்

**இக்பால் அலி**

எகிப்திய தேசபக்தரும் இராணுவத் தலைவருமான அஹமத் ஒராபி பாஷா (Ahmed Urabi Pasha) அவர்கள், 1882-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிரிட்டிஷ் படைகளால் தோற்கடிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, அவருக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டாலும், பின்னர் அத்தண்டனை நீக்கப்பட்டு, இலங்கைக்கு (அக்காலத்திய சிலோன்) ஆயுள் நாடு கடத்தலாக மாற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், அவர் 1883-ஆம் ஆண்டு இலங்கையை வந்தடைந்தார்.

ஒராபி பாஷா அவர்கள், நாடு கடத்தப்பட்டிருந்த தமது 19 ஆண்டு காலப் பிரிவில் (1883 - 1901), இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்பை வழங்கினார். குறிப்பாக, இஸ்லாமியக் கல்வி மற்றும் அரபு மொழிப் படிப்பு ஆகிய துறைகளில் அவர் அதிக கவனம் செலுத்தினார். இலங்கையில் முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட முன்னணிச் சமூகச் செயற்பாட்டாளரான அறிஞர் சித்திலெப்பை (M.C. Siddi Lebbe) அவர்கள், ஒராபி பாஷாவைச் சந்தித்து, முஸ்லிம் சமூகத்தை நவீன இஸ்லாமியக் கல்விப் பாதையில் வழிநடத்தத் தூண்டினார். இதனால், அவ்விரு பெரும் தலைவர்களுக்கும் இடையே மிகவும் நெருக்கமான உறவு காணப்பட்டதுடன், அது இலங்கையின் முஸ்லிம் கல்வி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

அஹமத் ஒராபி பாஷாவுக்கு 1901-ஆம் ஆண்டு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர் செப்ரெம்பர் 19, 1901 அன்று இலங்கையிலிருந்து புறப்பட்டு தமது தாய்நாடான எகிப்துக்குச் சென்றார். அங்கிருந்து சுமார் பத்தாண்டுகள் கழித்து, செப்டம்பர் 21, 1911 அன்று கெய்ரோவில் காலமானார்.

இலங்கையில் நாடு கடத்தப்பட்டிருந்த காலத்தில், ஒராபி பாஷா முதலில் கொழும்பிலும், பின்னர் 1892-ஆம் ஆண்டு முதல் கண்டிக்கும் இடம்பெயர்ந்து வாழ்ந்தார். அவர் கண்டியில் வசித்த இல்லங்களில் ஒன்றுதான் தற்போது கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையம் (Kandy Orabi Pasha Centre) என்ற பெயரில் இயங்கி வருகிறது. இந்த நிலையம், ஒராபி பாஷாவின் நினைவாக ஒரு அருங்காட்சியகத்துடனும் கலாசார மையத்துடனும் இணைந்து செயற்பட்டு, அவரது பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாக்கிறது. இந்த நிலையத்தின் பணிப்பாளராகச் செயற்பட்ட ஆய்வறிஞர் எஸ்.எம்.ஏ. ஹஸன், எம்.எச். சலீம்டீன் முதலான பணியாளர்களுடன் சேர்ந்து சமூகப் பணிகளின் மூலம் தன்னை அலங்கரித்துக் கொண்டவர் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள்.



ஒராபி பாஷா அவர்கள் பற்றிய அறிமுகம் எம்.எஸ்.எம் அனஸ் அவர்களுடைய 17 வயதில் ஏற்பட்டது எனலாம். அவர் கொழும்பு சஹிராக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற சமயம் காலைக்கூட்டம் கபூர் மண்ட பத்தில் நடைபெறுவது வழக்கம். அம்மண்டபத்தின் மேல் பகுதியில் அறிஞர்கள், அரசியல்வாதிகள், உலக தலை வர்கள் ஆகியோருடைய அழகிய படங்கள் வரிசையாக சுவரில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். எமது மார்பு அளவி லான பெரிய படங்கள் அவை. அது அந்தக் காலத்தில் பெரிய கலாசார மண்டபம். அம்மண்டபத்தில் குத்துச் சண்டை உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெறும். அதில் உலகிலுள்ள சிறந்த பேச்சாளர்கள், மார்க்க அறி ஞர்கள் வருகை தந்து உரையாற்றுவார்கள்.

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களின் மனதில், கண்டிக் கலாசார நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த சில முக்கிய தலைவர்களின் உருவப்படங்கள் ஆழமாகப் பதிந் திருந்தன. அவற்றில் அறிஞர் சித்திலெப்பை, ஒராபி பாஷா, சேர் ராசிக் பரீத் போன்ற நன்கு அறியப்பட்ட ஆளு மைகளின் படங்கள் இருந்தன. ஆயினும், எம்.டி.எச். அப்துல் கபூர், மார்க்கான் மாக்கார் போன்ற, அவருக்கு நன்கு பரிட்சயமில்லாத பல தலைவர்களின் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவர்களின் படங்கள் அவரு டைய மனதில் பதிந்திருந்தபோதிலும், ‘அவர்கள் யார்? அவர்களுடைய பங்களிப்புகள் எத்தகையவை?’ என்பது குறித்து அனஸ் அவர்களுக்குத் தெளிவு கிட்டவில்லை. அக்காலகட்டத்தில் அவர் தனது படிப்பில் தீவிர ஆர்வம் கொண்டு, க.பொ.த. உயர்தரப் பாடங்களைக் கற்பதில் கவனம் செலுத்தி வந்தார். மேலும், அந்தத் தலைவர் களைப் பற்றிப் பெரிய அளவில் கொழும்பில் பேசப்பட்ட அறிகுறிகளும் காணப்படவில்லை. அவர்களைப் பற்றி விரிவான நூல்களும் பெரியளவில் வெளிவந்திருக்க வில்லை. ஆதலால், அனஸ் அவர்களுக்கு அவர்களைப் பற்றி வாசித்தறிந்து கொள்வதற்குரிய வாய்ப்புக்கள் கிட்ட வில்லை. ஏதோ ஒரு வகையில், அந்தப் பெரியோர்களைப் பற்றிப் பொதுமக்களிடம் கொண்டு செல்வதில் ஒரு தகவல் தொய்வு நிலை காணப்பட்டது. ஒராபி பாஷா குறித்த தக வல்கள் பொதுமக்களிடையே போதியளவு கிடைக்காமல் இருந்த நிலையில், அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் 1965-ஆம் ஆண்டு எழுதிய ‘The West Reappraised’ என்ற ஆங்கில நூல் ஒரு முக்கிய ஆவணப்பதிவாக அமைந்தது. இந்த நூல், ஒராபி பாஷாவின் வாழ்க்கை வரலாறு மற்றும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்விச் சீர்திருத்தங்களில் அவர் ஆற்றிய பணிகள் குறித்து விரிவான முதல்நிலைத் தகவலைப் பதிவுசெய்தது. இந்த நூலின் மொழிபெ யர்ப்பான ‘இலங்கையில் இஸ்லாம்’ என்ற நூல் வெளிவந்த பின்னரே, ஒராபி பாஷா இலங்கை முஸ்லிம் சமூக வர லாற்றில் ஒரு முக்கியமானவராகப் பரவலாக அறியப் பட்டார். பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் ஒராபி பாஷா குறித்து முதன்முதலில் வாசித்த நூல் இதுவே யாகும். இந்தப் பெறுமதியான மொழிபெயர்ப்புப் பணியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி மற்றும் எஸ்.எம். கமால்தீன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் அனஸ் அவர்கள் அறிந்திருந்தார். பேராசிரியர் அனஸ் அவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வந்த பின்னரே ஏ.எம்.ஏ. அஸீஸின் மூல நூலான ‘The West Reappraised’ ஐ வாசித்தார். அதன் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்த அவர், தானே பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று, அந்நூலை ‘குமரன் இல்லம்’ வெளியீடாக மீள்பதிப்பு செய்து வெளி யிட்டார். இதன்மூலம், ஒராபி பாஷாவின் வரலாற்றையும் அவரது பங்களிப்பையும் தமிழ் பேசும் வாசகர்களிடையே பரவலாகக் கொண்டுசேர்த்து, விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் ஒரு முக்கிய பங்காற்றினார்.

அந்தக் கட்டுரை ஐந்து பக்கங்களைக் கொண்ட சிறிய கட் டுரையாகும். ஏ.எம்.ஏ. அஸீஸ் எப்பொழுதும் சிறிய கட்டு ரைகள் எழுதினாலும் அதை அவர் மிகத் தெளிவாகவும், அழகாகவும், நேர்த்தியாகவும் எழுதுவார். ஆங்கிலமாக இருந்தாலும் சரி தமிழ் மொழி மூலமான கட்டுரையாக இருந்தாலும் சரி அவற்றை சிறிய கட்டுரை என்று ஒதுக் கிவிட முடியாது. ஒவ்வொரு கட்டுரையும் முத்திரை பதித்த கட்டுரைகள் ஆகும். அவர் முதலில் ஆங்கிலத்தில்

எழுதுவார். அதன் பிறகு தமிழில் மொழி பெயர்ப்புச் செய்வார். அவருடைய எந்தக் கட்டுரையாக இருந்தாலும் அனஸ் அவர்கள் மிகுந்த ஆர்வத் துடிப்போடு வாசிப்பவர்.

அனஸ் அவர்கள், கண்டியில் ஒராபி பாஷா கலாசார நிலையம் ஒன்று உருவாக்கப்படுவதாகச் செய்தித்தாள்களில் வாசித்தபோது, அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். ஒராபி பாஷா கண்டியில் வாழ்ந்த இல்லம், அப்போது டல்பி விஜய ரட்ன (Dulphy Wijeyratne) என்ற வர்த்தகரின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1980-களின் முற்பகுதியில், எகிப்திய தேசிய வீரரான ஒராபி பாஷாவின் வரலாற்றுப் பங்களிப்பை இலங்கையில் நிலைநிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலகட்டத்தில், எம்.எச். முஹம்மட் அவர்கள் போக்குவரத்து மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சராகப் பதவி வகித்தார். அதே சமயத்தில், ஹிஜ்ரி ஆண்டுக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது, மறைந்த ஜனாதிபதிச் சட்டத்தரணி எஸ்.எச்.எம். மஹ்ரூப் அவர்கள் வக்ஃப் சபை மற்றும் மத்திய மாகாண ஹிஜ்ரி ஆண்டுக் குழுவின் தலைவராகப் பணியாற்றினார். ஒராபி பாஷா கண்டியில் வசித்த இல்லத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்த எஸ்.எச்.எம். மஹ்ரூப் அவர்கள், உடனடியாக அமைச்சர்கள் எம்.எச். முஹம்மட் மற்றும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இவர்களின் இராஜதந்திர முயற்சி மற்றும் கூட்டுச் செயற்பாட்டின் விளைவாக, ஒராபி பாஷாவின் நாடுகடத்தலின் 100-வது ஆண்டைக் குறிக்கும் வகையில் 1983-ஆம் ஆண்டை 'ஒராபி பாஷா ஆண்டாக' இலங்கையில் அறிவிக்க ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு முக்கியப் பகுதியாக, 'ஒராபி பாஷா கண்டியில் வாழ்ந்த இல்லத்தை எகிப்து தூதரகத்தின் மூலம் விலைக்கு வாங்கி, அதனை ஒரு நிரந்தர அருங்காட்சியகமாக மாற்றுவது' என்ற பரிந்துரை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.



எகிப்துக்கும் இலங்கைக்கும் மிக நீண்ட கால உறவு இருக்கிறது. அந்த உறவைப் பலப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணம் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவர்களுக்கும் அன்றைய எகிப்திய நாட்டின் தலைவர் அவர்களுக்கும் இருந்தது. இந்த ஒராபி பாஷா வாழ்ந்த இடம் கையகப்படுத்துவது தொடர்பில் இருவருக்கிடையே தொலைபேசியில் இது பற்றி கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒராபி பாஷாவை ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகக் கருதி எகிப்து அவருக்குத் தனியான கௌரவத்தை வழங்கி வந்தது. அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும், உள்ளூர் ஆட்சியாளர்களின் மோசமான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் புரட்சியில் ஈடுபட்ட ஒரு மாபெரும் தலைவராகப் போற்றப்பட்டார். இதன் காரணமாக, அவருக்கு எகிப்து நாட்டில் ஒரு சிறப்பான மதிப்பும் கௌரவமும் இருந்தது. எனவே இவ்விடயத்தில் இலங்கை எகிப்திய தூதுவராலயம் கவனம் செலுத்தியது. இதனைத் தொடர்ந்து, எவ்விதமான பொது ஆர்ப்பாட்டங்களும் இன்றி, எகிப்து தூதுவராலயத்தின் ஊடாக நிதி வழங்கப்பட்டு, அந்த இல்லம் மீட்கப்பட்டது. இதன்மூலம், ஒராபி பாஷா வாழ்ந்த இல்லம் எகிப்து தூதுவராலயத்தின் உதவியுடன் மீளப் பெறப்பட்டு, கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையமாக மாற்றப்பட்டது.

1983-11-13 திகதி கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையம் திறந்து வைக்கப்பட்டது. எகிப்திய தூதுவராக இருந்து மறைந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கிண்ணியாவைச் சேர்ந்த மௌலவி எஸ்.எம்.ஏ. ஹஸன் அவர்கள் அதன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1987-களில் எஸ்.எம்.ஏ. ஹஸன் அவர்கள் இதன் இரண்டாவது பணிப்பாளராகக் கடமைப் பொறுப்பை ஏற்றார். அவர் கண்டி கல்வி வலயத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றியவர். அவர் கண்டியில் மிகப் பிரபல்யமான ஓர் ஆய்வறிஞர். அவர் வருகைக்குப் பின் ஒராபி பாஷா கலாசார நிலையம் ஒரு புதுப் பொலிவு பெற்றது. ஹஸன் அவர்கள் வசிக்கின்ற கண்டி நகருக்குள் அமைந்துள்ள ஹீரஸ்ஸகலையில்தான் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களும் வசித்தார், அந்தவகையில் எஸ்.எம்.ஏ. ஹஸன் அவருடன் நட்பு ரீதியில் பழகி வந்தார். ஹஸன் அவர்கள் ஒராபி பாஷா கலாசார நிலையத்தின் பணிப்பாளராகக் கொண்டு இயங்கி வந்ததை அறிந்து அந்த நிலையத்தைப் பார்வையிட அனஸ் அவர்கள் அங்கு சென்றிருந்தார். அங்கு சென்ற சமயம் அனஸ் அவர்களை மனமுவந்து வரவேற்று அந்த இடத்தைச் சுற்றிக் காண்பித்தார். அது திருத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தது, ஹஸன் அவர்கள் அந்த நிலையத்தை கட்டியெழுப்புவதில் மிகுந்த கரிசனை மிக்கவராக இருந்தார். அவர் இலங்கை எகிப்திய நாட்டு உயர்ஸ்தானிகர் அவர்களுடன் தொடர்பு கொண்டு முன்னேற்றகரமான திட்டங்களை மேற்கொண்டார். அங்குள்ள நூதனசாலையின் காட்சி அறைகளை ஒழுங்குபடுத்துகின்ற விடயத்தில் அக்கறை செலுத்தினார். ஒராபி பாஷா அவர்கள் இலங்கைக்கு வந்த புகைப்படங்கள், அவர் எகிப்து நாட்டில் கலந்து கொண்ட யுத்தங்கள், எகிப்திய நாட்டு புரதானப் பொருட்களும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஒராபி பாஷா பயன்படுத்திய அலுவலகம், சிறிய நூலகம் என எல்லாம் அமையப்பெற்றிருந்தன. அடிக்கடி அனஸ் அவர்கள் அங்கு சென்று வருபவராக மாறிவிட்டார். அதன் பின்பு 1988-இல் ஒராபி பாஷா நிலைய சமூக சேவை அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அமைப்பு கண்டியிலுள்ள பல முக்கிய பிரமுகர்களை ஒன்றிணைத்து இயங்கும் சுயேட்சையான நிறுவனம் ஆகும். அது ஒராபி பாஷா நூதனசாலைக்கு உட்பட்ட நிறுவனம் அல்ல. பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களுடைய ஆலோசனையின் பெயரில் இது உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக மறைந்த கல்ஹின்னையைச் சேர்ந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் சுபைர் நியமிக்கப்பட்டார். மத்திய மாகாண ஹிஜ்ரா குழுவின் தலைவர்

ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.எச்.எம். மஹ்ரூப், சட்டத்தரணி எம்.எம்.எம். நஸீர், எம்.எம்.எஸ். அபூஸாலி, ஆயிஷா அஸீஸ் மஹ்ரூப், கதீஜா அபுஷாலி, சரிபுன் நிஸா, சிஹானா முஸ்தபா, பரீதா ரவூப், கல்வி அதிகாரி எம்.எஸ்.ஏம். கலீல், சுலைஹா நஸீர், ராஸியா போன்றவர்கள் சேர்ந்து இயங்கினர். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் அக்காலத்தில் முஸ்லிம் பெண்கள் சமூகப் பணிகளில் இணைந்து செயற்படுவது மிக மிகக் குறைவு. ஆனால், அக்காலகட்டத்தில் இவ்வமைப்பில் ஐந்து பெண்கள் இணைந்து செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. கண்டிப் பிரதேச மக்களின கல்வி வளர்ச்சிக்கும், பெண்களுடைய சுயதொழில் கல்வி மேம்பாட்டுக்கும், வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் இப்பெண்கள் பெரும் அர்ப்பணிப்புடன் பங்காற்றினார்கள். இன்றோ அல்லது இன்னும் சில வருடங்களிலோ கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையத்தை ஆய்வு செய்ய யாராவது முன்வந்தால் கண்டியில் முதன் முதலில் முஸ்லிம் பெண்கள் களத்தில் இறங்கி சமூகப் பணிகள் புரிந்தார்கள் என்பதை அடையாளப்படுத்தும் அழியாத ஆவணமாக அனஸ் அவர்களுடைய வாழ்வியல் வரலாறு ஒரு சான்றாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



அனஸ் வெறுமனே கல்வியாளர் மட்டுமல்ல. பல அமைப்புகளோடு சேர்ந்து இயங்கிய சமூகப் பணியாளர். பெண்களுக்கான தையற் கலைப் பயிற்சிகள், கைப்பணிப் பயிற்சிகள், மணப்பெண் அலங்காரப் பயிற்சிகள், முன்பள்ளிப் பாடசாலை கற்கைகளுக்கான பயிற்சிகள், சமையற்கலைப் பயிற்சிகள், கணினிப் பயிற்சிகள் எனப் பல்வேறுபட்ட தொழில்நுட்ப பயிற்சிகளும் இவ்வமைப்பினரால் வழங்கப்பட்டன. இதில் முன்பள்ளிப் பாடசாலைக்கான கற்கை நெறிப் பயிற்சியானது முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு எகிப்திய தூதுவராலயம் இணைந்து நடத்திய பயிற்சி நெறியாகும். இதில் பெரும் எண்ணிக்கையிலான சிங்கள, தமிழ், முஸ்லிம் யுவதிகள் கலந்து கொண்டு பயிற்சியினைப் பெற்று தொழில்வாண்மையாளராக மாறியுள்ளார்கள். இந்தக் கற்கை நெறியைப் பெற்றுக் கொள்வதற்காக கண்டியில் இருந்து மட்டுமல்ல தூர இடங்களில் இருந்து இளம் பெண் யுவதிகள் வந்து கற்று பயிற்சியை முடித்துச் சென்றுள்ளார்கள்.

அவை மட்டுமல்ல மத்திய மாகாணத்தில் மிகவும் புகழ்பெற்ற மற்றும் சுயதொழில் பயிற்சி நெறிகளுக்காக ஆவலுடன் காத்திருக்கின்ற யுவதிகளால் பெரிதும் வரவேற்கப்படுகின்ற ஒரு இடமாக அந்த நிலையம் பேசப்பட்டது. அதேபோன்று பயிற்சியை முடித்துக்கொண்டு வெறியேறுகின்ற பெண்கள் ஆடை அலங்கார கைப்பணிக் கண்காட்சிகள், விசேட தொழில் பயிற்சி செயலமர்வுகள் என பல நிகழ்வுகளை அங்கு நடத்தினர்.

அவை மட்டுல்ல இந்தக் கலாசார நிலையத்தில் இலக்கிய நிகழ்வுகளும் நடைபெறும். இலக்கியக் கருதரங்குகள், விசேட இலக்கிய உரைகள், இலக்கிய மாநாடுகள், கவியரங்குகள் எனப் பல நிகழ்வுகள் இவ்விடத்தில் நடைபெறும். இடையிடையே தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெறும். இவ்வமைப்பினால் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. இது இவ்வமைப்பின் முக்கியமான பணியாகும்.

இதன் பணிப்பாளராக இருந்த எஸ்.எம்.ஏ. ஹஸனின் சேவை மனப்பான்மையும் கண்டியிலுள்ள தொடர்புகளும் அதனைக் கட்டி எழுப்ப உதவியது. கண்டியில் ஹஸனும் அனஸூம் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அனஸ் அவர்கள் அடிக்கடி ஹஸனின் இல்லம் சென்று வருவார். இவருவரும் நேரம், காலம் எவ்வாறு போகுது என்று தெரியாமல் கலந்துரையாடுவார்கள். ஹஸன் அவர்கள்கூட ஓர் ஆய்வறிஞன் என்று சொல்லாம். அவர் பன்னூலாசிரியர். அவரும் ஒரு புத்தக வாசகர். ஒரு வரலாற்று ஆய்வாளர். அத்தோடு பாதி மார்க்க அறிஞராகவும் இருப்பார். அவர் தந்தை ஒரு உலமா. அவர் ஒரு மௌலவியாக இருந்து வணிகத்தில் ஈடுபட்டு தம் பிள்ளைகளை உலகக் கல்விக்கு கொண்டு வந்தவர்.

ஹஸன் அவர்கள் ஓர் ஆங்கில ஆசிரியர். ஆனால், அவர் ஒரு பெரிய தமிழறிஞன். அவர் மனைவி சர்புன் நிஸா என்பவர் பெரிய பெண் எழுத்தாளர். அவர் நிறையக் கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். அவருடைய அரைவாசி கட்டுரைகள் இன்னும் அனஸ் அவர்களிடம் பாதுகாப்பாக இருக்கிறது, அவர் நிறைய உரைகளும் ஆற்றியுள்ளார். பெண்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். படிக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் பெண்கள் தலை சிறந்து விளங்க வேண்டும் என்ற தொனிப் பொருளில் கட்டுரைகளை எழுதியும் அவை குறித்துப் பேசியும் வந்தார். மூத்த எழுத்தாளர்களான ஏ. இக்பால், ஏ.ஆர்.எம். சலீம், அ.ஸ. அப்துல் ஸமது, கவிச்சுடர் அன்பு முகைதீன், மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத், எம்.எச்.எம். ஷம்ஸ் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவர். பிரபல்யமான கவிஞர் புரட்சிக் கமால் அவர்களுக்கு சர்புன் நிஸா அவர்கள் சகோதரியுமாவார். இவர்கள் எல்லோரும் சம காலத்தில் வாழ்ந்த மூத்த படைப்பாளிகள் ஆவார்கள். இன்றைய எழுத்துலகம் போல் அல்ல அன்றைய எழுத்துலகம். இவர் குடும்ப சகிதம் அவர்களுடைய வீட்டுக்குச் செல்வது வழக்கம். அவர்கள் எல்லோரும் இவர் வீட்டுக்கு வந்து போவதும் உண்டு. கடிதத் தொடர்புகளும் அதிகம் இருக்கும். இலக்கிய உலகம் ஒரு மகிழ்ச்சிகரமானதாகவே அமைந்திருந்தது. அன்றைய இலக்கிய நண்பர்கள் ஒருவொருக்கொருவர் இதமாகவும் இறுக்கமாகவும் பழகி வந்தார்கள். சர்புன் நிஸா அவர்களுக்கு இலக்கிய நண்பர்கள் எழுதும் கடிதங்களை எல்லாம் அனஸ் அவர்கள் வாசித்து இருக்கின்றார். அவைகள் ஒவ்வொன்று மிக அருமையான சகோதரப் பாசத்தை வலுவூட்டுகின்ற கடிதப் பரிமாற்றமாக இருக்கும். அன்புறவு கொண்டு வாழ்ந்தார்கள். இன்றைய படைப்பாளில் மமதை கொண்டு வாழ்கின்

றனர். ஒருவருடனும் தொடர்புகள் இல்லை. இன மத பேதங்களைக் கடந்து பழகுவதில் சிறப்புமிக்கவர்களாய் விளங்கினார்கள்.



ஓராபி பாஷா கலாசார நிலையத்தில் நடைபெறும் நிகழ்வுகளை பத்திரிகைக ளுக்குச் செய்தி சேகரிப்பதற்காகக் கண்டியில் உள்ள மிகப் பிரபல்யமான ஊட கவியலாளர்கள் வருகை தருவார்கள். அங்கு நசாக், ஸ்டார் ராசிக், குவால்தீன், க.ப. சிவம் போன்றவர்களுடன் ஊடகவியலாளர்களென மன்சூர் ஜே.எம். ஹாபிஸ், இரா.அ. இராமன், இக்பால் அலி ஆகியோரும் வருகை தரு வார்கள். இவர்களுக்கும் அனஸ் அவர்களுக்கு மிக நெருக் கமான தொடர்பு இருந்தது.

அதேபோல், மறைந்த பேச்சாளர் எழுத்தாளர் கண்டி அசோகா வித்தியாலயத்தின் அதிபர் சொல்லின் செல்வர் செ. நடராஜா, அந்தனி ஜீவா போன்ற இலக்கியவாதிகள் எல்லோரும் அனஸ் அவர்களுடன் சந்தித்துக் கலந்துரையா டுவதற்கு ஒரு மையகமாக இந்த ஓராபி பாஷா கலாசார நிலையம் விளங்கியது எனலாம்.

கண்டியில் தமிழ் இலக்கிய நிகழ்வுகளை நடத்துகின்ற இலக் கியச் செயற்பாட்டாளர்கள் ஹஸன் அவர்களை அழைப் பதைப் போன்று அனஸ் அவர்களுடைய ஆய்வுத் திறனையும் பேச்சாற்றலையும் அறிந்து கொண்ட தமிழ் இலக் கியவாதிகள் அவர்களுடைய நூல் வெளியீட்டு விழாக்கள், இலக்கிய நிகழ்வுகளில் உரையாற்றுவதற்காக அழைப்பு விடுத்தார்கள். அவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று கலந்து கொண்டு பல மேடைகளில் உரையாற்றியுள்ளார். ஒரு பெரிய இலக்கியப் பரிமாற்றம் முஸ்லிம் தமிழர்களும் இணைந்து கொள்வதற்கான ஒரு இலக்கியப் பாலமாக இருந்தது. சிலவேளை சிங்கள எழுத்தாளர்களும் இணைந்து கொள்வார்கள். எகிப்து உயர்ஸ்தானிகர் ஓராபி பாஷா கலாசார நிலையத்துக்கு வருவது என்றால் சிங்களப் பிரமுகர் களுக்கும் விசேட அழைப்பு விடுக்கப்படும். முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் முதலான மூவினத்தவர்களும் தேனோடு பால் கலந்து மகிழ்ந்து உண்டு வாழ்பவராக இங்கு காணப்பட்டார்கள்.

இக்கால கட்டத்தில் எஸ்.எம்.ஏ. ஹஸன் அவர்கள் பற்றிய ஒரு வாழ்க்கை வரலாற்று நூலை அனஸ் அவர்கள் அப்பொழுது எழுதி வெளியிட்டார். அது கண்டியில் மிகப் பிரமாண்டமான முறையில் கண்டி உயர்தர மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது. ஹஸன் அவர்கள் ஓய்வு நிலையை அடைந்தவுடன் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவராகக் கடமையாற்றிய எம்.எச். சலீம்டீன் ஓராபி பாஷா கலாசார நிலையத்தின் மூன்றாவது பணிப்பாள ராகக் கடமையைப் பொறுப்பேற்றார். அவர் மத்திய மாகாண நெஸ்லே கம்பனியின் பிராந்திய முகாமையாளராகக் கடமை யாற்றியவர். அவர் அதில் பயிற்றப்பட்டவர். அதே போல் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையிலும் பல பதவிகளை வகித்தவர். அந்த வகையில் அவர் கண்டி ஓராபி பாஷா கலாசார நிலையத்தை மேலும் சிறந்த முறையில் முன் னெடுத்துச் சென்றார்.

எஸ்.எம். ஏ. ஹஸன் அவர்கள் தனக்கே யுரிய பாணியில் தன் பணிகளைச் செய்து கொண்டு செல்ல, சலீம்டீன் இதனை மேலும் மெருகூட்டி திட்டமிட்டுச் செயற்ப டுத்தினார். நூலகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று அனஸிடம் அடிக்கடி ஆலோசனை பெற்றுக் கொண்டு செயற்பட் டவர். அவர் முன்னவர்களை விட ஒருபடி மேல் சென்று இயங்கினார். கட்டடரீதி யிலான புனர் நிர்மாணம் செய்ததில் எம்.எச். சலீம்டீனின் பங்கு மிகப் பெரியது. அது 150 வருடங்கள் பழைமை வாய்ந்த கட்டடம். அதனை எகிப்திய தூதுவராலயத் துடன் தொடர்பு கொண்டு மீள் நிர்மாணம் செய்வதில் கூடுதல் கவனஞ் செலுத்தி செயற்பட்டார். மறைந்த எஸ்.எம்.ஏ. ஹஸன் தொடங்கியதை எம்.எச். சலீம்டீன் அதற்கு அடித்தள மிட்டு கட்டியெழுப்புவராக இருந்தார்.

ஆயினும் ஈஸ்டர் குண்டு வெடிப்பு சம்பவத்தினை அடுத்து அங்கு செயற்பட்ட சமூகப் பணிகள் எல்லாம் இடை நிறுத்தப் பட்டன. அது காவல்துறையின் அவதானத்துக்கு வந்தமை யினால் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் சிறிது காலம் முடங்கலாயிற்று. எம்.எச். சலீம்டீன் ஒவ்வொரு வருடமும் வருடாந்த கூட்டத்தை தொடராக நடத்துவார். ஓராபி பாஷா பற்றிய நூல்களை வெளிக் கொணர்ந்தார். கண்டி மாநகர முதல்வர், புத்திஜீவிகள், அரசியல் பிரமு கர்கள் எனப் பலரை அழைத்து வந்து கூட்டங்கள் நடத் துவார். கண்டி ஓராபி பாஷா கலாசார நிலையம் சிங்கள, தமிழ். முஸ்லிம் மக்களிடையே உறவுகளை ஒன்றிணைத்துப் பலப்படுத்தியதைப் போன்று வேறு எந்தவொரு அமைப்பும் செயற்பட்டதாக தெரியவில்லை என்கிறார் அனஸ் அவர்கள்.

எனவே, ஓராபி பாஷா கலாசார நிலையத்தின் முதல் பணிப் பாளராகக் கடமையாற்றியவர் என்றவகையில் மௌலவி ஹஸன் அவர்களுடைய தொடர்பு அனஸ் அவர்களுக்கு பெரியளவில் இருந்ததில்லை. இருப்பினும் தனிப்பட்ட ரீதியில் இருவருக்கும் இடையிலான உறவுகள் இருந்தன. மௌலவி ஹஸன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழ கத்தில் எம்.ஏ. கற்கையினை நெறியை மேற்கொள்வதற்காக வந்து செல்லும் தருணத்தில் பேராசிரியர் அனஸ் அவர்ளுடன் ஒரு மரியாதையுடன் பழகி வந்தார். அதேபோல் அனஸ் அவர் களும் அவர் மீது தனியானதொரு மரியாதை வைத்திருந்தார். அவருக்குப் பின் வந்த இந்த இரண்டு பணிப்பாளர்களும் சேர்ந்து கண்டி ஓராபி பாஷா நிலையத்தைக் கட்டியெழுப்பி இருக்கிறார்கள். எம்.எச். சலீம்டீனைப் பொறுத்தவரையில் கண்டியில் அவர் ஒரு முக்கியமான சமூகப் பணியாளர். இவர்தான் தற்போதைய கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர். முஸ்லிம் லீக் வை.எம்.எம்.ஏ. என்று பல இயங்கு தளங்களில் நின்று நிலையாகச் செயற்பட்டு வருகின்றவர். இந்தப் பெரும் அடையாளங்களுடன் அனஸ் அவர்கள் இன்று வரை சேர்ந்து இயங்கி வருகிறார்.



Iqbal.ali@thaiveedu.com



# லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை

## ஹங்கேரியின் உரைநடைச் சிற்பிக்கு நோபல் பரிசு

அருள்கார்க்கி

நமது சமகால இலக்கிய உலகில், தனது ஆழமான தத்துவார்த்த மற்றும் தனித்துவமான எழுத்து நடையால் உலகை உலுக்கியவர் ஹங்கேரிய எழுத்தாளர் லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை (László Krasznahorkai). சமீபத்தில் (2025) அவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதன் மூலம், அவரது 'பேரழிவுக் கால தரிசனம்' கொண்ட படைப்புகள் மீண்டும் உலக கவனத்தைப் பெற்றுள்ளன.

லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை, சமகால இலக்கிய உலகில் ஒரு சவாலான, தவிர்க்க முடியாத குரலாக ஒலிக்கிறார். அவரது படைப்புகள் வெறும் கதை சொல்லல் அல்ல; அவை மனிதனின் வீழ்ச்சி, நம்பிக்கையின் சிதைவு மற்றும் உலகின் மீதான விரக்தி ஆகியவற்றைப் பற்றிய ஆழமான தத்துவார்த்த சித்திரங்கள் ஆகும். இவரது ஒட்டுமொத்தப் படைப்புகளையும் ஆராயும்போது, அவை 'கவித்துவமான அபோகாலிப்ஸ்' (Poetic Apocalypse) என்ற ஒற்றைப் புள்ளியை நோக்கி நகர்வதைக் காணலாம்.

### சட்டத்திலிருந்து இலக்கியத்திற்கு ஒரு பயணம்:

லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை 1954-ஆம் ஆண்டு ஜனவரி 5-ஆம் தேதி ஹங்கேரியின் ஜுலா நகரில் பிறந்தார். இவரது தந்தை ஒரு வழக்கறிஞர், தாய் ஒரு நிர்வாகி. ஆரம்பத்தில் சட்டம் பயின்ற கிராஸ்னாஹோர்கை, விரைவிலேயே தன் ஆர்வத்தை இலக்கியத்தின் பக்கம் திருப்பினார். 1977 முதல் 1983 வரை புடாபெஸ்டில் உள்ள ELTE பல்கலைக்கழகத்தில் ஹங்கேரிய மொழி மற்றும் இலக்கியத்தில் பட்டம் பெற்றார். சட்ட விதிகளைப் பயின்றபோது கிடைத்த ஒழுங்கமைக்கப்பட்ட சிந்தனை, பின்னர் அவரது எழுத்துகளில், குறிப்பாக நீண்ட, கிட்டத்தட்ட முடிவில்லாத வாக்கிய அமைப்புகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு நேர்காணலில், 'முற்றுப்புள்ளி என்பது வாக்கியங்களுக்கு இடையே உள்ள ஒரு செயற்கை எல்லை' என்று அவர் கூறியது, அவரது நடையின் தனித்தன்மையை உணர்த்துகிறது.

### யதார்த்தத்தின் இருண்ட சித்திரம்:

கிராஸ்னாஹோர்கையின் இலக்கியப் பயணம் 1982-இல் ஒரு முழுநேர எழுத்தாளராகத் தொடங்கியது. அவரது படைப்புகள் மனித இருப்பு, நம்பிக்கை இழப்பு, தனிமை மற்றும் சமூகத்தின் சிதைவு போன்ற சிக்கலான கருப்பொருள்களை மையமாகக் கொண்டவை. கிராஸ்னாஹோர்கையின் எழுத்தின் தனிச்சிறப்பு, அதன் நீண்ட, கிட்டத்தட்ட முடிவற்ற உரைநடை வாக்கியங்கள் ஆகும். இது வாசிப்பவருக்கு ஒரு சவாலை முன்வைத்தாலும், அதுவே அவரது கலைப்படைப்பின் அடிப்படை அம்சமாகிறது.

- தொடர்ச்சியான பிரக்ஞை (Stream of Consciousness): ஒரு முற்றுப்புள்ளி கூட இல்லாமல், பக்கங்கள் நீளும் அவரது வாக்கியங்கள், கதாபாத்திரங்களின் குழப்பமான சிந்தனை ஓட்டத்தையும், அச்சத்தையும், பிரக்ஞையின் தொடர் ஓட்டத்தையும் முழுமையாகப் பிரதிபலிக்கின்றன.
- மூச்சுத் திணறல் தரும் சூழ்நிலை: இந்த வாக்கிய அமைப்பு, வாசகர்களைக் கதையின் இருண்ட சூழ

லுக்குள் இழுத்துச் செல்கிறது. வாக்கியத்தின் முடிவைத் தேடும் வாசகனைப் போலவே, கதையில் வரும் கதா பாத்திரங்களும் தங்கள் வாழ்க்கையின் விளிம்பைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். இது வாசகருக்கும் கதை மாந்தருக்கும் இடையே ஓர் ஆழ்ந்த உளவியல் தொடர்பை உருவாக்குகிறது.

- காலத்தின் சிதைவு: நீண்ட வாக்கியங்கள் நேரத்தின் நீட்சியை உணர்த்துகின்றன. கதை மெதுவாக நகர்வது போன்ற உணர்வை அளித்து, கதையில் வரும் நிகழ்வுகள் ஒரு முடிவற்ற வட்டத்திற்குள் சுழல்வதைப் போலத் தோற்றமளிக்கின்றன.

கிராஸ்னாஹோர்கை, 'முற்றுப்புள்ளி ஒரு செயற்கை எல்லை' என்று கருதுவது, தனது நடையை அவர் எவ்வளவு உன்னிப்பாகக் கையாள்கிறார் என்பதற்குச் சான்று.

## நம்பிக்கையின் சிதைவு மற்றும் காருண்யம்:

கிராஸ்னாஹோர்கை தனது நாவல்களில் மீண்டும் மீண்டும் பேசும் கருப்பொருட்கள், சமகால சமூகத்தின் ஆழமான நோய்களைப் பிரதிபலிக்கின்றன.

## நம்பிக்கையின் சிதைவு:

'சாத்தான்டாங்கோ' (Sátántangó): இந்த நாவல், ஒரு கூட்டுறவுப் பண்ணையின் சிதைவையும், அங்குள்ள மக்கள் தங்கள் நம்பிக்கைகளைச் சூறையாடும் ஒரு 'மீட்பருக்காக' எப்படி ஏமாற்றத்துடன் காத்திருக்கிறார்கள் என்பதையும் சித்தரிக்கிறது. இங்குள்ள மனிதர்கள் இலக்கற்று அலைகின்றனர்; அவர்களது வாழ்க்கை, நம்பிக்கையின் அழிவுக்குப் பிந்தைய வெறுமையைக் குறிக்கிறது.

## ஆளுமைச் சிதைவு மற்றும் வெறி:

'தி மெலன்கலி ஆஃப் ரெசிஸ்டன்ஸ்' (The Melancholy of Resistance): இந்த நாவலில், ஒரு மர்மமான சர்க்கஸ் வருகையும், திமிங்கலத்தின் உடலும் நகரத்தில் ஒருவித வெறியையும், குழப்பத்தையும் விதைக்கின்றன. குழப்பம் மற்றும் வன்முறையின் மையத்தில் உள்ள அப்பாவி கதாபாத்திரங்களின் வாயிலாக, சமூகத்தின் ஆளுமைச் சிதைவைக் காட்டுகிறார்.

## கலையின் அழியாத சக்தி:

'சீயோபோ தேர் பிலோ' (Seiobo There Below): அவரது படைப்புகள் அனைத்தும் இருண்டவை என்றாலும், கிராஸ்னாஹோர்கை, இறுதியாக கலையின் காருண்யத்தையும், அதன் அழியாத மதிப்பையும் உறுதிப்படுத்துகிறார். இந்தப் படைப்பு, கலைஞர்கள் தங்கள் கலையின் மூலம் ஆன்மீகத்தையும், அழகையும் எவ்வாறு நாடுகிறார்கள் என்று காட்டுகிறது. 2025 நோபல் விருதுக்கான அவரது மேற்கோள், 'பேரழிவுக் காலப் பயங்கரத்தின் நடுவிலும், கலையின் வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தும்' என்று அவரது இந்தக் கருப்பொருளை மையப்படுத்தியே அமைந்திருந்தது.




1985 - **சாத்தான்டாங்கோ** (Sátántangó)

முதல் நாவல். ஒரு சிதைந்த விவசாயக் கூட்டுறவு மற்றும் அங்கு 'இரட் சகனை' எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களின் கதையைச் சொல்கிறது. பிரபல இயக்குநர் பேலா டார் இதைத் திரைப்படமாக எடுத்தார்.




1989 - **தி மெலன்கலி ஆஃப் ரெசிஸ்டன்ஸ்** (The Melancholy of Resistance)

சர்வதேசப் புகழைப் பெற்றுத் தந்த நாவல். மர்மமான ஒரு சர்க்கஸ் வருகையால் ஒரு சிறிய நகரில் ஏற்படும் சமூகப் பதற்றங்கள், குழப்பங்கள் மற்றும் வன் முறையைச் சித்தரிக்கிறது.




1999 - **வார் அண்ட் வார்** (War and War)

ஓர் எழுத்தரின் உலகைச் சுற்றும் பயணம் மற்றும் அவர் தான் எழுதும் கையெழுத்துப் பிரதியை இணையத்தில் பதிவேற்ற முயல்வது.




2008 - **சீயோபோ தேர் பிலோ** (Seiobo There Below)
கலைஞர்கள், ஆன்மீகம் மற்றும் கலையின் அழியாத வலிமை பற்றிப் பேசும் சிறுகதைத் தொகுப்பு.

## பேலா டார் உடனான கூட்டுப்பணி: காட்சியின் வலிமை:

லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை மற்றும் திரைப்பட இயக்குநர் பேலா டார் (Béla Tarr) இடையேயான கலைக் கூட்டுப்பணி, அவரது இலக்கியப் படைப்புகளின் உலகளாவிய தாக்கத்தை அதிகப்படுத்தியது. கிராஸ்னாஹோர்கையின் 'சாத்தான்டாங்கோ' மற்றும் 'தி மெலன்கலி ஆஃப் ரெசிஸ்டன்ஸ்' ஆகிய நாவல்கள் பேலாடாரால் திரைப்படங்களாக எடுக்கப்பட்டன. டாரின் படங்கள் மெதுவான, நீண்ட ஷாட்களைக் கொண்டிருப்பதும், கிராஸ்னாஹோர்கையின் உரைநடைகள் நீண்ட வாக்கியங்களைக் கொண்டிருப்பதும் ஒரே மாதிரியான கலை அணுகுமுறையைக் காட்டுகின்றன. இருவரும் உலகின் சிதைந்த, அழகற்ற அம்சங்களை ஆழ்ந்த கவித்துவத்துடன் காட்டினர். இவரது புனைவுகள் யதார்த்தத்தின் உச்சகட்ட இருண்ட பக்கங்களை, ஆழ்ந்த கவித்துவ நடையுடன் கலந்து தருகின்றன. அதனால்தான், இலக்கிய விமர்சகர்கள் அவரை 'அபோகாலிப்ஸின் (பேரழிவின்) சமகால மாஸ்டர்' என்று அழைக்கிறார்கள்.

## இலக்கிய உலகின் உச்சம்:

கிராஸ்னாஹோர்கையின் தனித்துவமான பங்களிப்பு உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:

- கோசுத் பரிசு (Kossuth Prize) (2004): ஹங்கேரியின் மிக உயர்ந்த தேசிய விருது.
- மேன் புக்கர் சர்வதேசப் பரிசு (Man Booker International Prize) (2015): ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இவரது மொத்தப் பணிக்காக வழங்கப்பட்டது.
- இலக்கியத்திற்கான நோபல் பரிசு (Nobel Prize in Literature) (2025): 'பேரழிவுக் காலப் பயங்கரத்தின் நடுவிலும், கலையின் வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தும் அவரது கட்டாயமான மற்றும் தொலைநோக்குடைய ஒட்டுமொத்தப் படைப்பு களுக்காக' இந்த உயரிய விருது வழங்கப்பட்டது.

லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை ஒரு சாதாரணமான பொழுதுபோக்கு எழுத்தாளர் அல்ல. அவரது புத்தகங்கள் வாசகர் களுக்குச் சவாலானவை, ஆழ்ந்த கவனம் தேவைப்படுபவை. எனினும், ஒருமுறை அவரது உரைநடைக்குள் நுழைந்துவிட்டால், உலக இலக்கியத்தின் மிக முக்கியமான, அசைக்க முடியாத ஒரு சக்தியை நாம் கண்டுகொள்ளலாம். அவரது எழுத்து, மனித சமூகத்தின் சிதைவுக்கு மத்தியில், கலையின் மீதான நம்பிக்கையையும் அதன் நீடித்த வலிமையையும் மீண்டும் மீண்டும் நிலைநிறுத்துகிறது. லாஸ்லோ கிராஸ்னாஹோர்கை, வாசகனை மகிழ்விப்பதை விட, சிந்திக்க வைப்பதையே தனது பிரதான கடமையாகக் கொண்டவர். அவரது படைப்புகளை வாசிப்பது எளிதல்ல, அது ஒரு சவாலான அனுபவம். ஆனால், அந்தச் சவாலை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, அவரது படைப்புகள் மனிதனின் நிஜமான இருப்பு, சமுதாயத்தின் தோல்வி மற்றும் ஆன்மீகத்தின் தேடல் ஆகியவற்றை ஆழமாகப் புரிந்துகொள்ள ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. அவரது எழுத்துலகம் ஓர் இருண்ட கண்ணாடி போன்றது; அது யதார்த்தத்தை அப்படியே பிரதிபலிப்பதில்லை, மாறாக, அதில் ஒளிந்துள்ள அபாயகரமான உண்மைகளை உருப்பெருக்கிக் காட்டுகிறது. தனது படைப்புகள் மூலம், கிராஸ்னாஹோர்கை ஹங்கேரிய இலக்கியத்தின் எல்லைகளை விரிவுபடுத்தி, உலக இலக்கியத்தின் தவிர்க்க முடியாத தத்துவக் குரலாக நிலைபெற்றுவிட்டார்.



Arulkarki@thaiveedu.com



# சிறார் இலக்கிய அழகியலும் அரசியலும் விஷ்ணுபுரம் சரவணன் ஆக்கங்களை முன்வைத்து

**– தென்னவன் வெற்றிச்செல்வன்**




**'உண்மைகளின் அதிர்ச்சிகளின் ஏற்றத்தாழ்வுகளின்**
**பரவசங்களின் உல்லாசங்களின் குதூகலங்களின்**
**-கண்காட்சியாக**
**அவருடைய ஒவ்வொரு கதைக்களமும்**
**- அமைந்து மொத்தக் கதைகளையும்**
**ஒரு கண்காட்சியாகப் பார்த்தால் ஒரு புத்துலகம்**
**- பிறப்பதற்கான ஒரு விதை**
**அந்த கண்காட்சியின் மையமாக விதைக்கப்பட்டு**
**- வைத்திருப்பதும்,**
**சில சில காலம் கழித்து அந்த விதை முளைத்தால்**
**இந்த உலகம் எப்படி உன்னத உலகமாக மாறிப்**
**- போகும் என்கிற**
**தேடலை அங்கே பொதிந்து வைத்திருப்பதாகவும்**
**- நாம் கண்டுகொள்ள முடியும்'**

பொதுவாக, அம்புலிமாமா காலம் தொடங்கி, இன்றுவரை சிறார்களுக்குப் புத்தி சொல்லுகின்ற; நன்னெறி புகட்டுகின்ற இலக்கியங்கள்தான் சிறுவர் இலக்கியம் என நாம் ஒற்றைப் பரிமாணத்தில் புரிந்து வைத்திருக்கிறோம். சிறார் இலக்கியம் என்றால், குழந்தைத் தனத்தை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். அதில் மாயாஜாலங்கள் இருக்கவேண்டும். சாகசங்கள் செய்யப்படவேண்டும். மந்திரக் கம்பளங்கள், பறக்கும் தட்டுகள் பறக்கவேண்டும். கதாபாத்திரங்கள் பல தந்திரோபாயங்களைக் கையாளுகிறவர்களாகவும், பெரும்பாலும் புராணிகமையம் கொண்டவையாகவும் இருக்க வேண்டும். அது அரசியல், சூழலியல் பற்றியெல்லாம் கவனத்தில்கொள்ள வேண்டியதில்லை. யதார்த்தத்தில் நடக்கமுடியாத அல்லது சிறாரின் கற்பனைக்கு எட்டாத வகைகளிலெல்லாம் கதை அமையும் என்பதும், பெரும்பாலும் சிறார் இலக்கியத்தைச் சமயம் சார்ந்த சிறார் இலக்கியமாகப் பார்க்கப்பட்டும் வருகிற காலத்தில், விஷ்ணுபுரம் சரவணன் சமயம்சாரா சங்கத்தமிழ் மரபின் வளர்நீட்சியாக, சூழலியல் அவதானம் கொள்வதும், இயற்கை வேளாண்மை, சாதிமத ஏற்றத்தாழ்வு என்னும் நுண் அரசியல் போன்ற பல விடயங்களைக் கடக்கிற; வீண்பழம் பெருமை, அடிப்படைவாதப் போக்குகளைத் தகர்க்கிற சிறார் ஆக்கங்களுக்குத் தொடர்ந்து பங்களித்து வருகிறார்.

சிறார் இலக்கிய வரலாற்றைப் பறவைப் பார்வையாகப் பார்க்கும் சுகுமாரன், 1840-இல் சிறுவர்களுக்கான முதல் இதழாக வெளிவந்த பாலதீபிகை, 1901- இல் கவிமணி சிறுவர் பாடல், 1915-இல் பாரதியார் பாப்பா பாட்டு, 1950-இல் குழந்தை எழுத்தாளர் சங்க உதயம், 1950-இல் முதன்முதலாக சிறுவர் நூல் கண்காட்சி, 1957-இல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய நாடகப்போட்டி, 1957- இல் வை. கோவிந்தன் நடத்திய சிறுவர்களுக்கான முதல் தினசரி, 1972-இல் குழந்தை எழுத்தாளர்கள் யார்? எவர்? நூல் வெளியீடு, எனப் பல தொடர் நிகழ்வுகள் நடந்துள்ளன என்கிறார். 1972-இல் வெளிவந்த குழந்தை எழுத்தாளர்கள் யார்? எவர்? நூலில் குறிப்பிட்டிருந்த சிறார் எழுத்தாளர்களின் எண்ணிக்கை - 370. 2019-இல் ஆர்.வி. பதி அவர்கள் தொகுத்த நூலில் சிறார் எழுத்தாளர்களின் எண்ணிக்கை 102. எவ்வளவு சரிவு ஏற்பட்டுள்ளது என்று அதிர்ச்சி அடைகிறார், சுகுமாரன். தம்பி சீனிவாசன், 'சிறுவர்களுக்கு எழுதும் பெரியோர்கள்' என சிறுவர் எழுத்தாளர்களை பேட்டி கண்டு எழுதியுள்ளார் என்பது போன்ற அரிய இந்த வரலாற்றுக் கருவூலத்தை 'சிறார் இலக்கியம் கடந்துவந்த பாதை' என்னும் தலைப்பில் சுகுமாரன் தொகுத்தளிக்கிறார். மேலும் பிசி என்ற ஒரு வகையை தொல்காப்பியம் குறிப்பிடுகிறதே அது சிறார் இலக்கியத்தைச் சார்ந்தது என்று பூவண்ணன் சொல்வதையும் மேற்கோள் காட்டுகிறார்.

இந்த வரலாற்றுத் தொடர்ச்சியில் வந்து சேர்ந்திருக்கும் விஷ்ணுபுரம் சரவணன், குழந்தை இலக்கியம் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல; குழந்தைகளின் கற்பனை மற்றும் வாசிப்புப் புரிதலை வளர்ப்பதால் அவர்களின் வாழ்க்கையில் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. சிறார் இலக்கியத்தின் பயன்கள் மிக மகத்தானவை என்கிறார்.

இந்தக் கருத்தை வழிமொழியும் இப்ராஹிம்,

- மொழி மற்றும் புரிதலை அதிகரிக்கும்
- கதை சொல்லும் திறன் மேம்படும்
- குடும்ப உறவுகளை வலுப்படுத்தும்
- கற்கும் ஆர்வத்தை அதிகரிக்கும்
- ஒழுக்க நெறிகளைக் கற்றுக் கொள்ள ஏதுவாகும்

என்று, தமிழில் சிறார் இலக்கிய விளைபயன்களைப் பட்டியலிடுகிறார். (முனைவர் பா. இப்ராஹிம், தமிழில் சிறார் இலக்கியம், பக்கம் 6).

குழந்தைகள் குட்டி மனிதர்கள் என்பதை, நமது சமூகம் எப்போதும் மறந்து விடுகிறது. அவர்களுடைய மறுப்பை மதிப்பதில்லை. அவர்களுடைய கோரிக்கைகளுக்குக் காது கொடுப்பதில்லை. அவர்களுடைய உணர்ச்சிகளை மதிப்பதில்லை. அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதில்லை. குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான கலை, இலக்கியம், விளையாட்டு போன்றவை குறித்துப் பெரிதாகக் கவலைப்படுவதில்லை என்று, தமிழ்நாடு சிறார் எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத் தலைவர் உதயசங்கர் குறிப்பிடுவது, மிக முக்கியமாக மனங்கொள்ளத்தக்கது. (நவீன தமிழ்ச் சிறார் இலக்கியம் - நோக்கமும் அதன் பாதையும், பக்கம்-9)

இதையொட்டியே சரவணன் கருத்தும் அமைகிறது. கதை சொல்வதும் கதை கேட்பதும் பொழுதுபோக்கவோ தூக்கம் வரச்செய்யவோ அல்ல. உணர்வுகளைக் கடத்தவும் அன்பைப் பரிமாறிக் கொள்ளவுமான எளிய வழி. பிள்ளைகளுக்கு மொழியைப் பிழையின்றிப் பழக்கவும் உறவுகளின் நேசத்தைப் புரிய வைக்கவும் கதைகள் தூதுவராகப் பயணிக்கின்றன என்று வரையறுக்கிறார், விஷ்ணுபுரம் சரவணன். (கதைகதையாம் காரணமாம் பக்கம்-3)

கண்ணில் நுழைந்தோ அல்லது கனவில் நுழைந்தோ ஃபேண்டஸி வகைப் பாணியாகக் கதைசொல்ல நேர்ந்தாலும் கதையின் வளர்ச்சியும், கதையின் செல்நெறியும் நவீன வாழ்முறையைப் பற்றிய அவதானிப்பும் பகடியும் தர்க்கமும் அதே வேளை எந்த மாய்மாலங்களும் அற்ற யதார்த்தமான கதைக்களத்தைக் கட்டி எழுப்புகிற அழகியலும் கொண்டவையாக விஷ்ணுபுரம் சரவணன் கதைகள் விளங்குகின்றன எனலாம். எடுத்துக்காட்டாக அவருடைய கயிறு என்கிற கதை, சுமார் ஒன்றரை லட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்திருக்கின்றன. அந்தக் கதையின் பக்க அளவு ஒரு நான்கு அல்லது ஐந்து இருக்கலாம் அவ்வளவுதான். ஆனால் அது எழுப்பிய வீச்சான சிந்தனைக் கிளர்த்தல் மிக முக்கியமானது. குறிப்பாகத் தென் மாவட்டங்களில் (அதீதமாக) கையில் கயிறு கட்டுதல் மூலமாக சாதி அடையாளத்தைப் பேணுகிற போக்கைத் தட்டி நொறுக்குகிற வேலையை, கயிறு கதை செய்திருக்கிறது.

ஆசிரியர்கள், கல்வியாளர்கள், பள்ளி / கல்லூரி நிர்வாகங்கள் சீருடை என்கிற பொதுத்தன்மையை (uniformity) எல்லோருக்கும் உரித்தாக்கி, குறைந்தபட்சம் படிப்பவர்கள் எல்லோரும் ஏற்றத் தாழ்வற்ற வகுப்பறையின் கற்கை நுகர்வோர் என்கிற ஒற்றை அடையாளம் மட்டுமே இருக்கவேண்டும் எனும் அக்கறையோடு செயற்பட்டு வருகிறபோது, இது சார்ந்து அரசாங்கமும் அரசாணைகள் வெளியிட்டிருக்கிற போது, பொதுப்புத்திச் சமூகம் ஒரு வண்ணக் கயிறை அவர்கள் கைகளில் கட்டி அனுப்புவதன் மூலமாக, சாதி அடையாளத்தை; ஏற்றத் தாழ்வை வகுப்பறைகள் வரைக்கும் ஊடாடவிட்டு, தனது சனாதன இழிவு வேர்களைக் கல்விப்புலம் நோக்கி நீட்டுகிறது. சிலவேளை கல்விப்புலங்களில் இருக்கிற புல்லுருவிகள் இதுபோன்ற கயிறுகளைக் கட்டுவதற்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ ஊக்கிகளாக இருக்கிறார்கள். கயிறுகள்தானே இதைக் கட்டிவிட்டுப் போகட்டுமே என்றால், வகுப்பறை சாதியச் சனாதன வகுப்பறையாக எப்படி மாறுகிறது? சமகாலத்திலேயே இப்படி இருந்தால் எதிர்காலத்தைச் சமைக்கிற வகுப்பறை என்று கோத்தாரி கமிஷன் சொன்ன அந்தத் தத்துவம் என்ன ஆவது? எதிர்காலச் சமூகம் டி.எஸ். எலியட்டின் வார்த்தையில் சொன்னால் பாழ்நிலம் ஆகிவிடாதா? இதுகுறித்து, இலக்கியவாதிகள் பேசத்தான் வேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சிறார் இலக்கியகர்த்தாக்கள் மிக அவசியமாகப் பேச வேண்டியிருக்கிறது. இந்தச் சாதிய வண்ணக் கயிறுகளால் கட்டுண்டு கிடக்கிற சமூகத்தைத் தட்டி நொருக்குகிற வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. குறிப்பாக விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய அந்தக் ‘கயிறு’ கதை ஏன் இவ்வளவு வீச்சாகப் பார்க்கப்பட்டது என்றால், வண்ணமயமான இந்த சாதியக் கயிறுகளை கட்டுவதன் மூலம் சமூகத்தைச் சனாதன இழிவுபடுத்துகிற வாழ்நெறியை மாணவர்களோடு சேர்த்துக் கட்டிப்போடுகிற வேலையை, பொதுப்புத்தி சார்ந்த சமூகம் செய்கிறது. சீருடையோடு ஒருங்கு திரளுகிற மாணவர் சமூகத்தை வண்ணக்கயிறுகளோடு வந்து கூறுபோடும் வேலையை படைப்பாளிகளாக / சமூக அக்கறையாளர்களாக / களச் செயற்பாட்டாளர்களாக இதற்கு எதிராக வினையாற்றுகிறபோது சனாதனிகள் முட்டி மோதுகிறார்கள்.

இது ஒரு தொடர் பயணம். அந்த வகையில் ஒரு எழுத்தாளர், இந்த வண்ணக் கயிறுகளைத் துண்டிக்க வேண்டி இருக்கிறது. மட்டுமல்லாமல் இப்படிக் கயிறு கட்டிக்கொண்டு வருவதனால் ஏற்படக்கூடிய உடல் சார்ந்த தொற்று நோய்கள் குறித்த ஆய்வக முடிவுகள் என்ன சொல்கின்றன? என்றும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. மருத்துவ விஞ்ஞான ரீதியாகக் கைகளில் கயிறுகளைக் கட்டுவது, கேடு விளைவிப்பதாகக் கைகளில் கட்டப்படும் கயிறுகளைச் சோதனைச் சாலையில் மருத்துவ ரீதியாக சோதித்த போது, Staphylococcus albs, Staphylococcus aureus, Escherchia coli போன்ற தீமை விளைவிக்கும் பாக்டீரியாக்கள் இருப்பது தெரியவந்தது. இந்நோய்க் கிருமிகளால் வாந்தி, வயிற்றுப்போக்கு, குடல்சார்ந்த உபாதைகள், சிறுநீர்த்தொற்று போன்ற நோய்கள் ஏற்படுகின்றன என மருத்துவத்துறை விளம்புகிறது. இதைச் சொன்ன பிறகும்கூட, அல்லது எப்படி மாணவர் சமூகத்தைக் கூறுபோடுகிற இந்த அடையாளங்களைத் தவிர்க்க வேண்டும் என்கிற பரப்புரையைச் செய்த பிறகும் கூட, இந்த இழிவான சாதியச் சமூகம், சிறார் பருவத்திலேயே அவர்களைச் சாதிய மனிதர்



களாக மாற்றிப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறது. விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய கயிறு கதை சாதியக் கயிறுகளால் இப்படிக் கட்டுண்டு கிடக்கிற சமூகத்தைக் கட்டறுக்கிற வேலையை மிக நேர்த்தியாகச் செய்கிறது.

இதுகாறும் சொல்லப்பட்டு வந்த ஏழுகடல் தாண்டி ஏழுமலை தாண்டி பஞ்சவர்ணக்கிளியின் கழுத்தில் இருக்கிற மச்சத்தில் பொதிந்து வைத்திருக்கிற இரகசியங்களைக் கண்டுபிடிப்பதை விட, நம்சமூகத்தில், நம்காலத்தில், நம்மீது சுமத்தப்பட்டிருக்கிற இழிவைக் கண்டுகொள்வதும் அந்த இழிவை அகற்றுவதும்தான் படைப்பாளியின் உடனடி நோக்கமாக இருக்கும் என்று சிறார் இலக்கியத்திற்கு புதிய வரையறையை, புதிய இலக்கணத்தை விஷ்ணுபுரம் சரவணன் தருகிறார். இது மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன்.

இவரது 'ஒற்றைச் சிறகு ஓவியா' என்கிற சிறுவர் படைப்பாக்கம், இந்த ஆண்டு சாகித்ய அகாடமியின் பால புரஸ்கார் விருது பெற்ற அருமையான படைப்பாக்கம். இந்நாவல் நான்கு ஐந்து சிறுமிகளையும் பள்ளி வளாகத்தையும் மணி அடிக்கிற தோட்டக் காவலர் தாத்தாவையும் பாத்திரங்களாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. கார்ப்பரேட் உலகம் தன் குழாய்களை மண்ணுக்கடியில் அனுப்பி, இயற்கை எரிவாயுவையும் கனிம வளத்தையும் உறிஞ்சுகிறபோது, அதன் பக்கவிளைவுகள் நமக்கு நோய் நொடிகளை உருவாக்குகிற சுகாதாரமற்ற குடிநீரை; சுகாதாரமற்ற காற்றை; சுகாதாரமற்ற வாழ்வியலைப் பரிசாக, கொடையாக சமகால வாழ்வில் நமக்குத் தருகிறது என்பது குறித்தும் இரசாயன உரங்கள் மூலமாக நம்முடைய உணவுக்கூடம் எப்படி மருத்துவகூடமாக மாற்றப்படுகிறது என்பது குறித்தும் காத்திரமான முன்னெடுப்பை இந்த நாவல் செய்கிறது. இது ஃபேண்டஸி வகைக் கதையாக இருந்தாலும் கனவுகளின் வழியாக இந்தச் சிறுமி நுழைந்து உள்ளிருக்கிற இரகசியத்தைக் கண்டுபிடிக்கிறார். ஹோமியோபதி மருத்துவத்தில் கனவுகள் மிக முக்கியமான நோய்க்குறிகளை நமக்கு அடையாளம் காட்டுகின்றன. கனவுகளென்பது உணரும் குறிகளாகும் (Subjective Symptoms). கனவில் பாம்புகள் வருவதற்கு அர்ஜெண்டம் நைட்ரிகம் என்ற மருந்தையும் தாறுமாறான கனவுகளுக்கான பல மருந்துகளையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும். பெண்ணைவெட்டி உப்பிலிட்டது போன்ற கனவுகள் ஆணாதிக்கச் சமூகத்தில் வரும்தானே? (ஹோமியோபதியில் அதற்குக் கல்கேரியா ஃப்ளூவாரிக்கம் என்ற மருந்தைப் பரிந்துரைப்பர்.)

சாதி என்பது, கூட்டு நனவிலி மனதில் உறைந்துள்ளது எனும் அம்பேத்கரின் கருத்தியல்படி பார்த்தால், கனவில் நுழைவது ஒரு வகையில் நனவிலியில் நுழைவது போல்தான். நீங்கள் என்ன கனவு காண்கிறீர்கள் என்று கேட்பது, ஹோமியோபதி மருத்துவரின் அடிப்படைக் கடமையாக இருக்கிறது. நோய்த் துயர் அறிக்கையொன்றைத் (Case Taking Report) தயார் செய்கிறபோது, இது ஒரு முக்கியமான கேள்வியாக அமைகிறது. கனவில் நுழைந்து பார்த்து, அவர் என்ன வகை நோய் வாய்ப்பட்டிருக்கிறார் என்று சிகிச்சை செய்வது மருத்துவ அறிவியல். இந்த நுட்பங்களை நம்முடைய விஷ்ணுபுரம் சரவணன் தன்னுடைய கதாபாத்திரம் ஒன்று, ஒற்றைச் சிறகு ஓவியாவாக மற்றவர்களுடைய கனவில் (அதுவும் கூட்டு நனவிலியில்) நுழைந்து, அந்தக் கனவில் என்னென்ன மாய்மாலங்களும் தகிடுதத்தங்களும் செய்யப்படுகின்றன? பள்ளிக்கூட மணியின் நாக்கை மட்டுமல்ல பொது அறம் சார்ந்த விடயங்களையும் எப்படி? யார்? ஒளித்து வைக்கிறார்கள்? என்பதைக் கண்டுபிடித்து ஒன்று சேர்த்து எப்படி உண்மையின் முழுமையை அடைவது என்கிற புதிரை விடுவிக்கிறார் விஷ்ணுபுரம் சரவணன். கூடவே இரசாயன உரங்களால் மண்புழுக்கள் எப்படி அழிந்து வருகின்றன? மண்புழு இனம் அழிந்த பிறகு, நிலம் எப்படி மலடாக்கப்படுகிறது? நீர் மஞ்சள் நிறமாக மாற இந்தக் கார்ப்பரேட் நாகரிகங்கள் நல்ல தண்ணீரை எப்படிக் கெடுத்துவைத்திருக்கின்றன? என்பது குறித்தெல்லாம் அவள் காத்திரமாக ஆய்வு செய்யப் பலரோடும் விவாதிக்கிறாள். கண்களில் நுழைவது கனவுகளில் நுழைவது என்பதான பயணமெல்லாம் பேண்டஸி வகைப் பயணம்தான். ஆனால் நடக்கிற யதார்த்த உலகத்திற்குள்ளேயே கதையாடல்கள் கட்டமைக்கப்படுகின்றன. வழக்கமாக ஃபேண்டஸி கதைகள் மூளையைக் கசக்கிப் பிழிந்து, புரியாமை என்கிற இருண்மைக் குகைக்குள் தள்ளிவிடும் அபாயமும் சேர்த்தே பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால், விஷ்ணுபுரம் சரவணனுடைய கதைகளில் புலப்படுத்தல் என்பது இருண்மையைப் போல தொடங்கினாலும், யதார்த்தத்திற்குள் நுழைந்து எல்லா மாய்மாலங்களையும் புதிர்களையும் கட்டவிழ்கிற வேலையைச் செய்கிறது என்றுதான் சொல்லவேண்டும். கடினமாக எதையும் பேசுவதும் எழுதுவதும் எளிது. ஆனால் எளிமையாக எதையும் பேசுவதும் எழுதுவதும் மிகக் கடினம். இது ஒரு முரண்நகையாகத் தோன்றலாம். ஆனால் இதுதான் உண்மை. விஷ்ணுபுரம் சரவணனுடைய கதைகள் எல்லாவற்றிற்கும் அதீத எளிமையே அழகு சேர்க்கிற ஒன்றாக இருக்கிறது. அதேவேளை அது பேசுகிற அர்த்தப் பரிமாணங்கள் மிகக் கனதியானவை. அவை போட்டு உடைக்கிற உண்மைகள் மிக அதிர்ச்சிகரமானவை. குழந்தைத்தனமான கதை சொல்லியாக இருந்து எல்லாக் கதாபாத்திரங்களுக்குமான போதிய சுதந்திர வெளியை உறுதிப்படுத்தி அந்த உரையாடல்களின் வாயிலாக ஜனநாயகப் பயணத்தை மேற்கொள்ளும் படைப்புகள் இவை. எனவே, இங்கு எந்தக் கதாபாத்திரமும் எந்தக் கதாபாத்திரத்தின் தோளிலும் ஏறி உட்கார்ந்து ஆதிக்கம் செலுத்தவில்லை. அதனதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உரையாடலைச் செழுமைப்படுத்தும் விதமாக இந்தப் படைப்பாக்கம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

விஷ்ணுபுரம் சரவணன் அடிப்படையில் கவிஞராகத் தன் படைப்புப் பயணத்தைத் தொடங்கினாலும், கவித்துவத்தின்

எந்த வீச்சையும் கதைகளில் புகுத்துவதோ திணிப்பதோ இல்லை எனும்விதமாக உரையாடலுக்குரிய அழகியலை உரையாடலுக்கானதாகவே பயன்படுத்துகிற அதே சமயம், சில தத்துவத் தெறிப்புகள் போகிற போக்கில் எங்காவது ஓரிடத்தில் கவித்துவமாகப் பளிச்சிடுகிற பாணியில் எழுதுவதனை அவரது தனித்துவமாக நாம் கொள்ளலாம். இப்படி அவருடைய கதைத்தளத்துக்குள் நாம் பயணிக்கும்போது அது சிறார் இலக்கியமாக மட்டும் அல்லாமல் பெரியவர்களுக்கான, அல்லது மொழி பெயர்க்கப்பட்டால் இந்த உலகத்திற்கான கதைகளாக அமைந்துவிடுவது கூடுதல் சிறப்பு. அவருடைய அரசியல் அவருடைய அழகியல் இரண்டும் முயங்கி ஒரு ரசமாற்றத்தைச் செய்யத் துடிக்கின்ற நிலையை அவருடைய படைப்பாக்க வினைத்திறனாக (craftmanship) நாம் பார்க்கலாம்.

விஷ்ணுபுரம் சரவணன் ஜப்பான் போர்ட்ஸ், ஸ்பீட் அண்ட் வாட்ச், ஜாவா ஹார்ட், சைனா கோட்டு, சிப்பாய் பெல்ட்டு, சிரியா சூட்டு, சிங்கள டான்ஸ், ஸ்பானிஷ் பாட்டு என்றெல்லாம் பிற மொழிகள் கலந்து எழுதுவதில்லை. பாரதிதாசன் சொல்வதைப் போல,

*காட்சி என்று எழுதுவாய் தம்பி*
*சிலர் காட்ஷி என்பார் அது தப்பாம்*
*காட்சி என்னும் பெயர் கேள் தம்பி*
*காண் என்னும் சொல்லின் விளைவாம்*
*அடிக்கடி உத்தியோகம் என்பர் அதை*
*அலுவல் என்று உரைத்திடு தம்பி*
*படிப்பது வாசித்தல் இரண்டில் உன்*
*பழந்தமிழ் முன்னது தம்பி*

என்று சொல்வதைப் போல, தமிழின் நல்ல சொற்களை, இயன்றவரை செழியன், ஓவியா போன்ற அருமையான கதாபாத்திரங்களை, அம்பேத் போன்ற அரசியல் அடையாளப் பெயர்களை இயல்பாகவும் அல்லது திட்டமிட்டும் அவர் கட்டி அமைக்கிறபோது, அவருடைய மொழிநடை எந்தச் சிக்கல் சிடுக்கலும் இல்லாத கதைக்களமாக மாறுகிறது.

அவர் சொல்கிறார்: டி.வி.-யில் செய்தி வாசிப்பதைப் போல, ஆடாமல் அசையாமல் சொன்னால், போதும் மம்மி எனக்கு, போகோ சேனல் போடுங்க என்று சொல்லிவிடுவார்கள். உங்கள் கதையில் வரும் பச்சைக்கிளி சிவப்பாகக்கூட இருக்கலாம். ஆனால் உங்கள் கைகள் கிளியின் இறக்கையாக மாறி இருக்கவேண்டும். சிங்கம் எலியைத் தேடும்போது உங்களின் கண்களில் அந்தத் தேடலைக் கொண்டுவரவேண்டும். உங்கள் குரலில் இருந்து, புலியும் நரியும் நாயும் ஒலிக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால் கதையின் காட்சிகளை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்று ஒரு வரையறையை (விஷ்ணுபுரம் சரவணன், கதை கதையாம் காரணமாம், பக்கம் 17) குறிப்பிடுகிறார். நிகழ்வைப் பேசாதே விளைவைப் பேசு என பிளக்கானவ் சொன்னதைப்போல. அந்த இலக்கணத்தை அவருடைய கதைக்களத்தில் அவர் புழங்குகிறார். எல்லோரையும் எப்படி அவரால் எளிதாகக் கதைசொல்ல வைக்க முடிகிறது என்று பார்த்தால், அதற்கான சில வழிமுறைகளை அவர் ‘கதை கதையாம் காரணமாம்’ நூலில் பேசுகிறார். தீட்சிதா என்கிற பள்ளி செல்லும் பெண்ணின் பள்ளிப் பையில் ஒரு பக்கம் மான் படமும் அடுத்த பக்கம் பூச்செடிகள் படமும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. மான் சொல்கிறதாம்: என்னை உன் ஸ்கூல் பேக்கில் இருந்து பிரித்துவிடு. எனக்குப் பசிக்கிறது அந்தப் பக்கத்தில் உள்ள பூச்செடியைக் கடித்துத் தின்னவேண்டும் என்கிறதாம். உன்னை விடுவிக்க மாட்டேன் உன்னைப் போலவே அந்தப் பூச்செடிகளையும் எனக்குப் பிடிக்கும். அது எவ்வளவு அழகாக இருக்கு என்கிறார் தீட்சிதா. அதற்கு மான், என்னால் பசி பொறுக்கமுடியவில்லை என்கிறது. கூடப் பயணிக்கிற அம்மா ஒரு வழி சொல்கிறாள். நாம் பஸ்ஸிலிருந்து புறப்பட்டு வரும் நான்காவது திருப்பத்தில் சின்னப் பூங்கா இருக்கிறது. அதை ஒட்டி நிறைய மரங்கள் புல் எல்லாம் இருக்கின்றன. நாம் அந்த இடத்தில் மானை விடுவித்துவிட்டால், புல் சாப்பிட்டுவிட்டு நாம் பள்ளிக்குச் செல்வதற்குள் ஓடி வந்துவிடும் என்கிறார். நான்காவது திருப்பத்தில் மானை விடுவிக்கிறார்கள். மானும் சந்தோஷமாக ஓடுகிறது. பள்ளி வந்ததும் இருவரும் பஸ்ஸிலிருந்து இறங்கிக்கொள்கிறார்கள். தீட்சிதா முதல் வேலையாக மேகம் தங்களுடன் வந்திருக்கிறதா என்று வானத்தைப் பார்க்க, மேகம் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்துக் கை அசைக்கிறது. அதற்குள் மானும் ஓடிவந்து வயிற்றை ஆட்டிக்கொண்டு நல்லா சாப்பிட்டுவிட்டேன் என்று கூறுகிறது. ஸ்கூல் பேக்கில் ஒட்டிக் கொள்கிறது. அம்மா டாடா காட்ட, தீட்சிதா பள்ளிக்குள் நுழைகிறார் என்று ஒரு சிக்கலான / எதிர்பாராத பிரச்சினையை வெகு இலாவகமாகத் தீர்த்துவைத்து விடுகிற கதைப் போக்கின் மூலமாக சிறார் கதையாடலை இப்படிக் கட்டமைக்கலாம் என்று சொல்லிச் செல்கிறார் சரவணன்.

அதிர்ச்சிகளின், உண்மைகளின், ஏற்றத்தாழ்வுகளின், பரவசங்களின், உல்லாசங்களின், குதூகலங்களின் கண்காட்சியாக அவருடைய ஒவ்வொரு கதைக்களமும் அமைந்து மொத்தக் கதைகளையும் கண்காட்சியாகப் பார்த்தால் ஒரு புத்துலகம் பிறப்பதற்கான ஒரு விதை அந்த கண்காட்சியின் மையமாக விதைக்கப்பட்டு வைத்திருப்பதும், சில காலம் கழித்து அந்த விதை முளைத்தால் இந்த உலகம் எப்படி உன்னத உலகமாக மாறிப்போகும் என்கிற தேடலை அங்கே பொதிந்து வைத்திருப்பதாகவும் நாம் கண்டுகொள்ள முடியும். அந்த வகையில், சிறார் இலக்கியப் போக்கில், இந்த வரலாற்றில் கவிமணியும் அழ வள்ளியப்பாவும் பூவண்ணனும் தொடங்கி சமகாலச் சிறார் எழுத்தாளர்களுக்கு மத்தியில் விஷ்ணுபுரம் சரவணன் எப்படித் தனித்துவமாகத் தெரிகிறார் என்றால், அதில்தான் அவருடைய அரசியலும் அழகியலும் கூடி முயங்கிப் பிறக்கிற அந்த படைப்பாக்க மேன்மையை நாம் கண்டு கொள்கிறோம். அந்த வகையில் மிக முக்கியமாக சாகித்ய பால புரஸ்கார் விருதளிக்கப்பட்டிருக்கிற விஷ்ணுபுரம் சரவணனுடைய ‘ஒற்றைச்சிறகு ஓவியா’ படைப்பாக்கம் சிறார் இலக்கியத்திற்கு தனித்துவமான பங்களிப்பென நாம் நிச்சயமாகக் கட்டியம் கூறமுடியும்.



Vetrichelvan@thaiveedu.com

# சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு

ஒரு பார்வை

– கிறிஸ்டி நல்லரெத்தினம்

கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஈழத்திலும் புலம்பெயர் தேசத்திலும் இலக்கியத் துறையில் ஆழமான தடம் பதித்து, சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள் என பல்வேறு படைப்புகளை தமிழ் வாசகர்களுடன் பகிர்ந்து வருபவர் திருமதி ரதிதேவி கந்தசாமி அவர்கள். தாமரைச்செல்வி எனும் புனைப்பெயரில் எழுத்துலகில் வலம்வரும் இவரை அறியாதவர் இலர். அவர் வாழ்ந்த வன்னி மண்ணே அவருடைய பல படைப்புகளின் தளமாகவும் பின்னணியாக அமைந்துள்ளது. அவரை சந்தித்தோ, அவருடன் பயணித்தோ வந்த சாதாரண மானுடர்களையே கதாபாத்திரங்களாக்கி, அவர்களூடாகக் கதையை நகர்த்துவதால், அவரது படைப்புகளில் யதார்த்தம் இயல்பாகவே ஒரு சக பயணியாகிறது. மிதமான வர்ணனைகளையும், வார்த்தைச் சிலம்பங்களையும் தவிர்த்து, சொல்லவந்ததை துல்லியமாகச் சொல்லி வாசகனின் புரிதலுக்கும் கற்பனைக்கும் இடம் ஒதுக்குவது, பொன்விழா கண்ட இந்த மூத்த எழுத்தாளரின் தனித்துவம்.

ஒரு கதை முடிந்த பின்னரும் அதில் சேர்க்கும் ஒவ்வொரு சொல்லும் கூடுதல் சுமையாகும் என்பார்கள். ஆனால், இவரின் கதைகள் முடிவில் முற்றுப்புள்ளியுடன் நிறைவடை வதோடு மட்டுமல்லாமல், சில முடிச்சுகளையும் இயல்பாக அவிழ்த்துச் செல்கின்றன.

இவரின் ‘மௌன யுத்தம்’ சிறுகதையில் கணவனுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் வீட்டை விட்டு சென்ற மனைவி மீண்டும் வீடு திரும்புகிறார். இப்படி முடிகிறது கதை: ‘வழக்கம் போல் முகத்தில் எந்த உணர்வும் இல்லை. ஆனாலும் வாய் அசைந்து ‘வாரும்’ என்றது. ஆண் ஆதிக்கத்தை குறியீடாக்கும் அந்த ஒரு சொல்தான் கதையை வேறு தளத்திற்கு எடுத்துச்செல்கிறது.

ஈழப்போரின் வரலாற்று நிகழ்வுகள் ஒரு நூலகத்தின் அலுமாரியில் கட்டுரை வடிவில் சாய்ந்து உறங்கிக்கொண்டு இருக்கலாம். ஆனால் ஒரு போரின் அல்லது சமூகப் புரட்சியின் வடுக்களை பின்புலமாக வைத்து அது ஒரு சிறுகதையாகவோ நாவலாகவோ இலக்கிய வடிவமெடுக்கும் போதுதான் அது தொன்மம் என்பதைத் தாண்டி நிகழ்காலத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. ஒரு தொன்மம் சார்ந்த நிகழ்வுகளை சார மாய் கொண்ட புனைகதைகள் தன்னைத்தானே புதுப்பித்துக்கொண்டு அதை வாசிக்கும் காலத்தை நிகழ்காலமாக்கி வாசகரின் மனதில் மறுபிறவி எடுக்கின்றன. டால்ஸ்டாயின் ‘போரும் அமைதியும்’ இதற்கு ஒரு நல்ல உதாரணம்.




தாமரைச்செல்வியின் சிறுகதைகளைத் தற்போது படிக்கும் அல்லது இன்னும் ஐம்பது வருடம் கழித்து படிக்கும் எதிர்கால சந்ததியும் அந்த போர் நினைவுகளில் மீண்டும் போய் நிச்சயம் வாழ்ந்து மீண்டும் அதே வேதனை வடுக்களை பிராண்டிப் பார்க்கும் என்பது நிச்சயம். அதுவே இவரின் புனைகதைகள், ஆவணப்படுத்தல் என்பதையும் தாண்டி, ஒரு நிகழ்கால தோற்றத்தை எதிர்கால வாசகர் கண்முன் தோற்றுவிக்கும் என நம்பலாம். இக்கதைகளின் உள் அர்த்தத்தையும் போர்ச்சூழலில் வாழும் பாத்திரங்களின் மனக் கொந்தளிப்பையும் புரிந்து கொள்ள அந்த எதிர்கால சமூகம் தாமரைச்செல்வி எனும் எழுத்தாளரை புரிந்து கொள்ளத் தேவையில்லை. இக்கதைகள் அவரை உதறித் தள்ளிவிட்டு அச்சூழலில் ஈழத்தின் வடகிழக்கில் நிகழ்ந்த சமூக இடர்களை அந்த வாசகர்முன் விரித்துப் போடும் தன்மை கொண்டவை. அந்த வரலாற்று நிகழ்வுகளில் போய் அந்த வாசகர் வாழ்வார். இந்த வாசகருக்கு இதை எழுதியவர் பற்றிய எந்த அறிவும் இல்லா விட்டாலும் இக்கதைகள் வாசகரை இழுத்துச் சென்று பதுங்குகுழிக்குள்ளும், அகதிகள் முகாமின் முள்ளுக் கம்பிகளின் பின்னேயும், ஷெல் வெடிக்கு தப்பி செட்டிக்குளம் முகாமிற்குள்ளும் வாழவைக்கும். அதன் வேதனை வடுக்களை வாசகர் புதுப்பித்துக்கொள்வார். இந்த அனுபவத்தை சரித்திரப் பாடப்புத்தகங்கள் ஒரு வாசகருக்கு அளிக்காது. எனவேதான் போர்க்கால நினைவுகளில் வாழ்ந்த பாத்திரங்கள் ஊடாக புனைகதைகள் போரின் அவலத்தை எம்மனதில் ஆழப் பதியவைத்து விடுகின்றன.

போரின் புறவய காட்சிகளே இக்கதைகள் மூலம் படிமங்களாய் மாறி ஒரு இலக்கியத்தை செழுமைப்படுத்தியுள்ளன என்பது உண்மை. எனவே ஒரு கதாசிரியருக்கும் அவர் படைத்த இலக்கியத்திற்கும் உள்ள பிணைப்பு காலத்தால் முறிந்த பின்பும் அந்த இலக்கியம் தொடர்ந்து வாழும் எனில் அதுவே உயர்ந்த இலக்கியம் என நம்பலாம்.

போரின் வடுக்களைக் கடந்து தனி மனித உணர்வுகளை கூறுபோட்டுப் பார்க்கும் சிறுகதைகளும் இந்த தொகுப்பில் உண்டு. 'மழை வரும் காலம்' சிறுகதையில் விவாகரத்துப் பெற்ற இருவரை அறிமுகப்படுத்தி, ஒரு புலம்பெயர்ந்த சூழலில், மீண்டும் ஒரு புதிய உறவை அவர்கள் ஏற்படுத்த எடுக்கும் எத்தனிப்பையும் அதற்கான காரணிகளை தராசில் ஏற்றி அவற்றை யதார்த்த சிந்தனைக்குட்படுத்தி இறுதியில் ஒரு முடிவை அடைவதையும் மிக ஆழ்சிந்தனையுடன் சித்தரிக்கிறார் கதாசிரியர். ஒரு ஆணின் மன ஓட்டத்தில் இக்கதை சொல்லப்பட்டிருந்தாலும் பெண் பாத்திரங்களின் மென் உணர்வுகளை மிகச்சிறப்பாக சித்தரிக்கத் தவறவில்லை. 'அவரோட சரியாய் களைச்சுப் போனன்' என்ற வார்த்தை இக்கதையின் பெண் கதாபாத்திரத்தின் அங்கலாய்ப்பையும் அலைக்கழிப்பையும் அழகாகவும் ஆழமாகவும் சித்திரித்துச் செல்கிறது.



tg.theeban@gmail.com

போர்க்கால அலைக்களிப்புகளின் சித்திரிப்பைப் பற்றிய ஒரு பத்திரிகையாளரின் நோக்கும் ஓர் இலக்கிய படைப்பாளியின் நோக்கும் வேறுபடுகிறது. செய்தியை 'சொல்வதுடன்' செய்தி சேகரிப்பவரின் கடமை முடிந்துவிடுகிறது. ஆனால் ஒரு படைப்பாளி வாசகருடன் ஒரு நிகழ்வின் வலியையும், கதாபாத்திரங்களுக்கு அது ஏற்படுத்தும் தாக்கத்தையும், சமுதாய கட்டமைப்பில் அது ஏற்படுத்தும் நிலைகுலைவையும் 'காண்பித்து' கடந்து போகிறார். இதன் வலிகள் கதையை படித்து முடித்த பின்னரும் வாசகரின் ஆழ்மனதில் நிலையாகக் குடிகொள்கிறது. இந்த காட்சிப் படுத்தலை மிக நேர்த்தியாக அங்காங்கே கதையின் கருவுடன் இணைத்த கதாசிரியரை பாராட்ட வேண்டும். போர்ச் சம்பவங்களின் பாதிப்புகள் மிக இறுக்கமாக கதைமாந்தர்களுடன் பிணைத்து புனையப்பட்டுள்ளதால் அவைகள் இன்றி கதை சரிந்து விடுமோ என எண்ணத்தோன்றும்.

இத்தொகுப்பின் முத்திரைக்கதையான 'சின்னாச்சி கிழவனின் செங்காரிப்பசு'வில் குஞ்சுப்பரந்தனில் இருந்து ஷெல் அடிபட்டு தன் மகனையும் மருகளையும் இழந்ததில் இருந்து கிழவனின் இடப்பெயர்வு ஆரம்பமாகிறது. செட்டிக்குளம் முகாம், மீள் குடியேற்றம் என அலைக்கழிந்து இறுதியில் சொந்த ஊர்திரும்பி செங்காரிப் பசுவிற்கு உரிமையாளராகிறான் சின்னாசிக்கிழவன். பின்னர் பசுவை இழந்த அவனின் தேடலில் நாமும் இணைந்து கொள்கிறோம். போர் சூழலில் உறவுகளை இழந்த எத்தனையோ சொந்தங்களின் உருவகமாக (allegory) செங்சாரிப்பசுவை கதாசிரியர் இங்கு காட்சிப்படுத்துகிறார் எனச் சொல்லலாம். 'சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு' மனிதநேயம், இரக்கம், தியாகம் ஆகியவற்றை வலியுறுத்தும் ஒரு அற்புதமான சிறுகதை. இது போரின் வடுக்களையும், வறுமையின் பிடியையும் தத்ரூபமாகச் சித்தரிப்பதோடு, இத்தகைய சூழ்நிலைகளிலும் மனித மனம் எப்படி கருணையுடனும், அன்புறவுடனும் செயற்படுகிறது என்பதைக் காட்டுகிறது. ஒரு மனதைத் தொடும், சிந்தித்துப் பார்க்க வைக்கும் படைப்பு.

இந்தக் கதையின் சிறப்பு அம்சங்களை பட்டியலிடுவதானால்:

உணர்வுபூர்வமான ஆழம் (Emotional Depth): இக்கதையின் மிகப்பெரிய பலம் அதன் உணர்வுபூர்வமான ஆழம் எனலாம். பசுவை இழந்த கிழவனின் துயரம், அவருடைய கடந்த கால இழப்புகள் (மனைவி, மகன், மருமகள்) மற்றும் இறுதியாக, தான் கண்டுபிடித்த பசுவை மற்றொரு ஏழைக் குடும்பத்தின் பசியையும், அநாதைப் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருதி தியாகம் செய்யும் அவரது முடிவு ஆகியவை வாசகர்களின் மனதைத் தொடுகின்றன. 'இல்லை மோனை' என்ற ஒற்றை வார்த்தையில் வெளிப்படும் அவரது தியாகம், மனிதநேயத்தின் உச்சகட்ட வெளிப்பாடு!

யதார்த்தமான சித்தரிப்பு (Realistic Portrayal): போர் தந்த துயரங்கள், இடம்பெயர்வு, வறுமை, பசி, உடல்நலிவு போன்றவற்றை மிக யதார்த்தமாக, வலியுடன் ஆசிரியர்

பதிவு செய்துள்ளார். ஒரு பசு ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரமாக இருப்பதை, அதன் பால் அவர்களுக்கு எப்படி உணவாகிறது என்பதை எளிய நடையில் காட்டியுள்ளார். இது சமூகத்தின் கீழ்மட்டத்தில் வாழும் மக்களின் அன்றாட போராட்டங்களை மிகத் துல்லியமாகப் படம்பிடிக்கிறது.

பாத்திரப் படைப்பு (Characterisation): சின்னாசிக்கிழவன் கதாபாத்திரம் மிகச் சிறப்பாக கட்டமைக்கப்பட்டுள்ளது. அவர் ஒரு முதிய, எளிமையான, ஆனால் அசாதாரணமான மனவலிமை கொண்டவராக இங்கு சித்தரிக்கப்படுகிறார். அவரது நம்பிக்கைகள், பயங்கள், உள்ளுணர்வுகள் அனைத்தும் இயல்பாக வெளிப்படுத்தப்படுகின்றன. அவருடைய மனைவி பவளக்கொடியின் கடந்த காலம், அவர் குழந்தைகளை வளர்த்த விதம் ஆகியவை போரின் வலிகளை மேலும் எடுத்துக்காட்டுகின்றன. பசு கிடைத்தவுடன் ஏற்படும் சிறுவன் மற்றும் அவனது தாயின் எதிர்வினைகள், அவர்களின் நிர்க்கதி நிலையையும், செங்காரியின் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றன.

குறியீட்டுப் பொருள் (Symbolism): 'செங்காரி' வெறும் ஒரு பசுவாக இல்லாமல், வாழ்வின் நம்பிக்கை, எதிர்காலத்திற்கான பிடிமானம், மற்றும் இழந்தவற்றின் நினைவாகக் குறியிடப்பட்டுள்ளது. இது வெறும் உடலியல் பசியை நீக்கும் ஒரு ஆதாரம் என்பதையும் தாண்டி, உணர்வுபூர்வமான ஒரு பிணைப்பாகிறது. கிழவனின் தியாகம், இந்த குறியீட்டுக்கு மேலும் வலு சேர்க்கிறது.

எளிய, சக்திவாய்ந்த மொழி (Simple, Powerful Language): கதை முழுவதும் கிராமப்புறத் தமிழ் நடையும், எளிய உரையாடல்களும் கதையை மிகவும் நம்பகத்தன்மையுடையதாக்குகின்றன. கதாசிரியர் சிக்கலான வார்த்தைப் பிரயோகங்களை தவிர்த்து, நேரடியான உணர்வுகளை வெளிப்படுத்தும் வட்டார மொழிநடை பாராட்டுக்குரியது. இது வாசகர்களைக் கதாபாத்திரங்களுடன் எளிதில் ஒன்றிணைய உதவுகிறது.

இனி மற்ற சில கதைகளை நோக்குவோம்:

மனித மென் அகஉணர்வுகளை கருவாய் கொண்ட 'அவனும் அவளும்', 'வெயிலோடும் மழையோடும்', 'மௌன யுத்தம்', 'மழை வரும் காலம்' போன்ற கதைகளில் உள்ள சமூகநீதி கடந்த யதார்த்த நோக்குடன் கூடிய பரிவும் மனித நேயமும் கருணை மரித்துவிடவில்லை என்பதை சொல்லிப் போகின்றன.

'வாழ்தல் என்பது' கதையில் இலங்கை அண்மையில் எதிர்கொண்ட பொருளாதார வீழ்ச்சியின் இடர்களில் சிக்கித் தவிக்கும் இரு ஆட்டோக்காரர்களின் தோழமையையும் மனித நேயத்தையும் சொல்லிப்போகிறது. தினக்கூலியில் நாட்களை நகர்த்தும் இவர்களின் புரிந்துணர்வையும் பரிவையும் மிக நேர்த்தியாக கதையில் புகுத்தியிருக்கிறார் கதாசிரியர். மனித நேயத்தின் இன்னொரு வெளிப்பாடே 'இருட்டின் நிறம் வெள்ளை'. இங்கு கதையின் நாயகனின் அலைக்கழிப்பிற்கு வாசகர் சாட்சியாகிறார். போரின் கொடுமையில் கண்களை இழந்தாலும் கண்ணியத்தை இழக்காமல் சக மனிதனுக்கு உதவும் பரிவை இங்கு காட்சிப் படுத்துகிறார் கதாசிரியர்.

பல மாறுபட்ட கோணங்களிலும் கதைக்களங்களிலும் பயணிக்கும் கதைகளை 'ஒரே மூச்சில் படித்து முடித்தேன்' எனச் சொல்லிக் கடந்து போனால் கதைகளில் பொதிந்துள்ள உணர்ச்சிக் கொந்தளிப்புகளை வாசகர் தவறவிட்டுவிடலாம். எனவே இக்கதைகள் மீள் வாசிப்பிற்கும் வாசகர் வட்டம் போன்ற அமைப்புகளிலும் விவாதிக்கப்பட வேண்டியவை.

ஒரு மூத்த எழுத்தாளரின் முத்திரை இத்தொகுப்பில் உள்ள எல்லாப் படைப்புகளிலும் ஆழமாய் வீழ்ந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

அதே வேளையில் புலம்பெயர்ந்த சூழலில் மாற்றுச் சமூகத்தினுடனான பண்பாட்டு உரசல்களை சித்தரிக்கும் கதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்படாமல் இருப்பதை நோக்கக்கூடியதாய் உள்ளது. அவர்களுடனான கலாசார சிக்கல்கள், அற மீறல்கள், முரண்கள் போன்றவற்றை ஆசிரியர் கதைக்களமாக்கி எழுத வேண்டும் என்பதே எனது அவா. ஒரு புலம்பெயர் தேசத்தில் எப்படி நம்மவர்கள் பொருந்திப் போகிறார்கள், சமூக முரண்பாடுகள் அவர்களின் நோக்கில் ஏற்படுத்தும் தாக்கங்கள், தங்கு தேசத்தை அரவணைக்காமல் 'எங்கட ஊரில எண்டா...' எனும் அங்கலாய்ப்புகள், தோல் நிறத்தை தராசிலேற்றி தீர்ப்புச் சொல்லும் மனப்பாங்கு போன்றவற்றையும் இவர் பேனா தொட்டுச் செல்ல வேண்டும் என்பதே எனது அவா. இவ்வாறான கதைகள் நிச்சயம் புலப்பெயர் இலக்கியத்தை செழுமைப்படுத்தும் என நம்பலாம்.

கதாசிரியர் அண்மையில் எழுதிய 'இரவின் துயர்' எனும் சிறுகதை இதற்கான ஆரம்பப்புள்ளியோ என எண்ணத் தோன்றுகிறது. இக்கதையில் ஆஸ்திரேலியாவில் தனிமையில் வாழும் ஒரு முதியவரின் கற்பனை உலகை எம் முன்னே விரித்துப்போட்டு கதையின் கடைசி வரியில் ஒரு முடிச்சை அவிழ்த்து வாசகரை வாயடைத்து நிற்கச் செய்யும் உத்தி கதாசிரியரின் தனித்துவம் என்றே சொல்வேன்!

மொத்தத்தில், வேதனை வடுக்களை பிராண்டிப்பார்க்கும் சிறு கணங்களின் திரட்டு இந்நூல் என்று கூறினால் அது மிகையாகாது!

பொன்விழாக்கண்ட திருமதி தாமரைச்செல்வி அவர்கள் மேலும் பல புனைகதைகளைப் படைத்து இலக்கிய வானில் மின்ன வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

christy.nallaratnam@thaiveedu.com



# சிதறடிக்கப்பட்ட ஓர் இனத்தின் துயரக் காவியம் சயந்தனின் 'ஆதிரை' நாவல்




tg.theeban@gmail.com

- சு. வேணுகோபால்

1977 முதல் 2011 வரையிலான ஈழப்போர்ச் சூழலில் தமிழ்க் குடும்பங்கள் எப்படியெல்லாம் சீரழிந்தது என்பதை 'ஆதிரை' நாவல் விவரிக்கின்றது. டெலோ, ஈபி.ஆர்.எல்.எப், எல்.டி.டி போன்ற தமிழ் ஈழவிடுதலை இயக்கங்களுக்குள் நிகழ்ந்த அரசியல் நிலைப்பாடுகள், அழித்தொழிப்புகளின் பக்கம் என நாவல் பயணிக்க வில்லை. மாறாக, சிங்கள இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமான நீண்டகாலப் போர்ச் சூழலிலும், இந்திய அமைதிப்படை வந்தபின் நிகழ்ந்த சிக்கல்களிலும் தமிழ்க் குடும்பங்கள் அடைந்த அலைக்கழிப்புகள், அவமானங்கள், மானபங்கங்கள், வன்மங்கள், குரூரங்கள், சிதைவுகள் குறித்தான பல்வேறு பாதிப்புகளை அதி கமாகப் பேசுகிறது.

இரு தேசிய இனங்களின் போர்ச் சூழலில் ஏழைத் தமிழ்க் குடும்பங்கள் அடைந்த வரலாற்று சோகத்தைச் சித்தி ரங்களாக வரைந்திருக்கிறது ஆதிரை நாவல். போர்ச் சூழலில் இருந்து விலகி மண்ணை நம்பி வாழ முற்பட்ட ஏழை விவசாய குடும்பங்களையும் போர் நெருக்கித் தாக்குகிறது. தாய், தந்தை, அக்காள், தங்கை, தம்பி, அண்ணன், நண்பர்களைச் சிங்கள இராணுவம் தாக்கி நாசமாக்குகிறது. நேரடியாக இளம் பருவத்தினரை அடித்துக் கொல்கிறது. விடுதலைப்புலிகளின் மீது இருந்த கோபத்தை, ஒதுங்கி வாழும் தமிழ்க் குடும்பங்களின்

> **போர் உக்கிரமாக நடக்கிறது. வசதியுள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை இந்தியாவிற்கோ, வெளிநாடுகளுக்கோ கடத்திவிட படகுத்துறைகளில் ஒளிந்து கெஞ்சியபடி இருக்கின்றனர். பணம் சிங்கள இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகளின் அமைப்பையும் தன்வசப்படுத்தி காரியம் சாதிக்கிறது.**

மீது இராணுவம் காட்டுகிறது. பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கிறது. சிறுவர்களின் உடலைச் சிதைக்கிறது; கொல்கிறது. இந்த இனவதையிலிருந்து தப்பித்த இளைஞர்கள், நாசத்தைப் பார்த்து இதயம் குமுறி விடுதலை இயக்கத்துடன் இணைந்து போராடுகின்றனர். இந்தப் போராட்டங்களின் வெற்றி தோல்விகள் போரிலிருந்து ஒதுங்கி வாழும் தமிழ்க் குடும்பங்களைத் தாக்கியபடியே இருக்கிறது.

முப்பதாண்டுகால ஈழப்போரில் விடுதலைப் புலிகளின் இயக்கம் தவறுகளைச் செய்திருக்கலாம். சில விடயங்களைக் காது கொடுத்துக் கேட்காமல் தன் போக்கில் வழி நடத்தியிருக்கலாம். அவையெல்லாம் விமர்சிக்கப்படதக்கவைதான். ஆனால், தமிழ் மக்களுக்கான விடுதலைப் போரில் அதன் இடத்தை எக்காலத்திலும் குறைத்து மதிப்பிடவே முடியாது. விடுதலைப் புலிகளின் இயக்கம் என்பது காலத்தின் விளைச்சல். வரலாற்றின் முடிவு. தமிழ் இனத்தை அழிக்க முற்பட்ட சிங்கள இனவெறிக்கு எதிராக எழுந்த சுதந்திர உணர்ச்சியின் தன்மான வடிவம்தான் இயக்கம். அப்படியொரு இயக்கம் தோன்றாமல் இருந்திருக்குமானால் அது வரலாற்றிற்கு முரணான விடயம்; உண்மையில் ஈழத்தமிழர்கள் இதைவிட கொடூரமான அழிவிற்கும், கேவலத்திற்கும் உள்ளாகியிருப்பார்கள். மிகக்குறைந்த காலத்திலேயே தமிழர்கள் மீதான கொடூரங்கள் நடந்தேறி இருக்கும் என்ற புரிதலில் போர்ச் சூழலை உள்வாங்கி இந்நாவல் எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால், இன விடுதலைக்கான போரில் அதிகம் பாதிக்கப்பட்டது வசதி வாய்ப்புள்ள தமிழர்கள் அல்ல. ஏழை, எளிய தமிழர்கள்தான் என்பதை அழுத்தமாகச் சொல்கிறது இந் நாவல். வசதிபடைத்த தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு அவசர அவசரமாக அனுப்பி வைத்தனர். வறிய குடும்பத்து பிள்ளைகள் விரும்பியும் விரும்பாமலும் இயக்கத்திற்குள் வந்தனர். ஈழப்போர் என்பது வசதி வாய்ப்புள்ள தமிழ்ப் பிள்ளைகளின் போராக அமையவில்லை. ஏழைத் தமிழர்களின் போராக வடிவம் கொண்டதை நுட்பமாகக் கண்டு சொல்கிறது. விடுதலைப் போரில் சகல அழிவையும் சகல அவமானங்களையும், இழிவுகளையும் அதி கம் சந்தித்தது ஏழைத் தமிழ்க் குடும்பங்கள் என்பதை நிகழ்ந்த சம்பவங்களின் வழியே காட்டியுள்ளார் சயந்தன். சந்திரா போன்ற உயர் சாதியினர் சிலர் குடும்பத்தை எதிர்த்து, இயக்கத்திற்காகப் போராட வீட்டிலிருந்து வெளியேறி வந்திருக்கலாம். ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இயக்கத்தில் இருந்தவர்கள் ஏழைகள்.

தமிழர்களைச் சிங்களவர்கள் இந்திய வம்சாவழியினர்களாகப் பார்க்கின்றனர்; இந்தியாவிலிருந்து வந்த வந்தேறிகள் என்று வெறுக்கின்றனர்; மலையகத்தில் பிழைக்க முடியாமல் அடிவாரங்களுக்கு வந்தால் தங்கள் மண்ணை அபகரித்து உழுது பயிரிடும் கள்வர் கூட்டமாகச் சிங்கள இனம் அவர்களைப் பார்க்கிறது. தமிழர்களைத் துரத்தி அடித்துவிட்டு சிங்கள ஏழைகளைக் குடியேற்ற முயல்கிறது.

தமிழர்களின் உரிமைக்காக எளியவர்கள் போராடினாலும் பெரும்பாலான மேட்டுக்குடி உயர்சாதி மக்கள், இவர்களின் தியாகத்தை அசட்டை செய்கின்றனர். காமத்திற்காகக் காதலிக்கின்றனர். பின் கைவிட்டுப் போய்விடுகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து தப்பித்து தனிக்கல்லடிப் பக்கம் வந்து குடியேறும் தமிழர்களை விலக்கி வைக்கின்றது அமைப்பு. விமானம் குண்டுகளைப் பொழிந்து தமிழர்களின் வீடுகளை அழித்தாலும், சாதிய முரண் அவர்கள் இரத்தத்தில் ஓடிய படியே இருக்கிறது. போர் உக்கிரம் பெற்றுத் தெருத்தெருவாகத் தமிழர் பிணங்களை இலங்கை அரசு குவித்துக் கொண்டிருக்கும்போதும் மேலைநாட்டு கனவு அவர்களை விடுவதில்லை. எவ்வளவு பணம் செலவானாலும் குண்டு விழுந்தபடியே இருக்கும் பகுதியிலிருந்தும் பிள்ளைகளைப் பெருந்தொகை செலுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் தான் அவர்கள் ஒரே மூச்சாக இருக்கின்றனர். அதற்கு எந்த வடிவத்தை எடுக்கவும் தவறுவதில்லை. மகனைக் காப்பாற்றி வெளிநாடுகளுக்கு அனுப்ப அவசர அவசரமாக ஒரு பொய்க் கல்யாணத்தை நிகழ்த்தி இயக்கப் பொடியன் இல்லை என்று காட்டிக்கொள்வதிலேயே தீவிரம் காட்டுகின்றனர். இதற்கும் பலியாவோர் ஏழைத் தமிழ்ப் பெண்கள்தான். போர் உக்கிரமாக நடக்கிறது. வசதியுள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை இந்தியாவிற்கோ, வெளிநாடுகளுக்கோ கடத்திவிட படகுத்துறைகளில் ஒளிந்து கெஞ்சியபடி இருக்கின்றனர். பணம் சிங்கள இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகளின் அமைப்பையும் தன்வசப்படுத்தி காரியம் சாதிக்கிறது.

புலிப்படையில் ஆட்களின் பலம் குறையக்குறைய 14, 15 வயது குமருகளையும், விடலைப் பையன்களையும் விடுதலைப் புலிகள் இழுத்துச் செல்கின்றனர். இந்த மாபெரும் ஈழத் தமிழரின் போரில் வசதி படைத்த இளைஞர்கள் பெரும்பாலும் இல்லை. அவர்கள் இந்தப் போருக்குத் தந்தது சில கட்டுரைகளையும், அதை விளக்க சில கோட்பாடுகளையும், ஏழெட்டு வரி கவிதைகளையும்தான் என்று விமர்சிக்கிறது இந் நாவல். இந்திய சுதந்திரப் போரில் வசதி படைத்த நேதாஜி, காந்தி, நேரு, பகத்சிங், திலகர், வ.உ.சி, சாவர்கர், பூபேந்திரசிங், அரவிந்தர் என எண்ணற்றோர் முன் நின்று அவரவர் கொள்கை வழி விடுதலையை வடிவமைத்து போராடியது போல ஈழத்தில் நிகழவில்லை. ஈழப்போரில் இறுதியில் நின்றவர்கள் வெளிநாடு செல்ல ஏலாத ஏழைத் தமிழர்கள்தான். வெளிநாடு சென்ற தமிழர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பிற்குப் பண உதவி, பிற பொருள் உதவிகள் செய்திருக்கலாம். இவர்கள் களத்தில் நிற்காது போனதும் தோல்விக்குக் காரணமாகப் பார்க்க வைக்கிறது. ‘ஆதிரை’ நாவலில் ஏழைகள்தான் தன்னியல்பாகவும், தன்னெழுச்சியோடும் போர்முனைக்குச் செல்கின்றனர். கிறீஸ்துவத்தை ஏற்றுக்கொண்ட தமிழர்கள் முன்நிலை வகிக்கின்றனர். மதம்தான் கிறீஸ்துவமே தவிர அவர்களும் ஏழைகள்.

உயர்சாதி இந்துக்கள் ஈழப்போருக்கு மனரீதியான பணரீதியான ஆதரவை தந்து வந்திருக்கிறார்கள். இவ்விடத்தில் வரலாற்றில் ஒரு பிழையும் நேர்கிறது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் தங்கள் ஊர்க்காவல் படையைச் சிங்கள இராணுவத்துடன் இணைத்து தமிழர்களை அடித்து துரத்துகிற நிலைப்பாட்டிற்கும் செல்கின்றனர். தொடர்ந்து புலிகள்

இயக்கம் முஸ்லிம்களை வன்னியைவிட்டுத் துரத்துகிற மற்றொரு பிழையும் நேர்கிறது.

மதம், சாதி, பணம் மூன்றும் தமிழரின் ஈழப்போரைப் பலவீனப்படுத்திய சக்தியாகக் காணமுடிகிறது. தமிழ் ஈழப்போர் என்பதே ஏழைகளின் போராக நாவல் முழுக்க காட்சி அளிக்கிறது. தமிழ்ப் பெண் போராளிகளின் தியாக உணர்வு மகத்தான செயலாக இந்நாவலில் உருவாகிறது. காதலால் ஏமாற்றப்பட்ட, சாதியால் நிராகரிக்கப்பட்ட, இராணுவத்தால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட, வசதியின்மையால் படிப்பைக் கைவிட்ட சின்ன வயது குமருகள் தன்னெழுச்சியோடு போராளிகளாக மாறி உயிர் நீத்த தியாக வரலாறுகள் இந்நாவலில் பதிவிடப்படுகிறது. இவர்கள் தலைமையிட்ட கட்டளையைச் (சரியோ தவறோ) சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட தேசப்பற்றோடு முன்னெடுத்துப் போராடி வீழ்ந்த துக்கத்தின் வரலாறு இது. புலிப்படை ஒவ்வொரு கணமும் வீழ்ந்து வீழ்ந்து பலவீனமாகிக்கொண்டு வந்த காலத்தில் பெண் போராளிகள் தீவிரத்துடன் போராடுகிறார்கள். உயிரைப் பணையம் வைக்கிறார்கள். வெல்வோம் என்ற கனவோடு போரில் மடிகிறார் கள். இனி ஈழம் இல்லை என்ற நிலை உருவாகி தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் போர்ச் சூழலுக்குள் சிக்கி சிதறிக் கொண்டிருக்கும்போதும் ஓடி ஓடி உதவுகிறார்கள். இந்தப் பெண் போராளிகளின் தியாகத்திற்கும் காருண்யத்திற்கும் மிக மிக உயர்வான இடத்தைக் கொடுத்திருக்கிறார் சயந்தன். இந்த நாவல் அவர்களின் வாழ்வை உணர்ச்சியோடு ஆராதிக்கிறது. இந்நாவலை ஒருவகையில் போருக்கு சம்பந்தமற்றவர்களின் சம்பந்தப்பட்ட வரலாறு எனலாம். ஈழப்போர் என்ப தைச் செய்திகளாக அறிய நேர்ந்தவர்கள்; போரின் விழைவு களை விவசாயம் செய்து கொண்டே செவி வழியாகக் கேட்பவர்கள்; காட்டை ஒட்டி வாழ்பவர்கள்; காட்டுடன் உறவைக் கொண்டாடுபவர்கள்; இவர்களையும் இந்தப் போர்ச்சூழல் விரிந்து வந்து தாக்கி, அந்த சுழலுக்குள் இழுத்துப்போட்டு சிதைந்து நாசமாக்குகிற அவலத்தைச் சொல்கிறது.

போர் முடிந்த பின்னும் இவர்கள் குழந்தைகளின் பசியைப் போக்க மற்றொரு ஆபத்தில் இறங்கி வேலை செய்கிற துயரத்திற்கு ஆளாகிறார்கள். தமிழர்களின் சாம்ராஜ்யம் வீழ்ந்த நிலமெங்கும் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடிகளைத் தோண்டி எடுக்கும் பணிக்குச் செல்கின்றனர் முன்னாள் விடுதலைப்புலிகள். இப்படியொரு பிழைப்பும் பிழைக்க வேண்டியதாகிறது. விசுவமடுவில் மாவீரர்களின் நினைவு இடமாகப் போற்றப்பட்ட வீரர்களின் கல்வெட்டு அடையாளங்கள் பொக்ரையன்களால் தோண்டி உருட்டி குழியில் தள்ளும் சுவடு அழிப்பு வேலையும் நடக்கிறது. அதே விசுவமடுவில் சிங்கள ராணுவ வீரன் செய்த சாகசத்தின் அடையாள எச்சத்தை அம் மக்கள் திரண்டு வந்து கண்டு போற்றும் இடமாக மாறுகிறது. தமிழர்கள் இருந்த பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றுகிறது அரசு. தமிழர்களின் கைவசம் இருந்த நிலங்களைப் பறித்து சிங்களவர்களுக்குத் தருகிறது. தங்கள் நிலம்தான் எனத் தமிழர்கள் உறுதிப்படுத்த ஆவணங்களைத் தூக்கி அலைந்தாலும் அவர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். சிங்கள ஆதிக்கத்தின் கீழ் அவர்களுக்குத் தொண்டூழியம் செய்யும் வேலைக்குச் செல்ல வேண்டியவர்களாக மாறுகிறார்கள். ஒரு விடுதலைப் போருக்காகக் கைகளை இழந்து, கால்களை இழந்து, ஷெல்லடியில் காயமடைந்த போர்வீரர்களும், பெண் போராளிகளும் வாழ்வு தேடி கிராமங்களுக்கு வந்து குடிசைகளைப் போடுகின்றனர்.

இறுதிப்போருக்குப் பின் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த பொடியன்களையும் சிறுபெண்களையும் விசாரணை என்ற பெயரில் இராணுவம் இழுத்துச் சென்று கொன்று குவிக்கின்றனர். பெண்களை வன்கொடுமைகளைச் செய்து சீரழிக்கின்றனர். இவற்றையெல்லாம் கையறுநிலையில் பார்த்துக் கொண்டு புதிய வாழ்வை வாழத் தலைப்படுகின்றனர். மாபெரும் அபத்தத்தை ஏற்றுக்கொண்டு வாழ்ந்துவிட முனைகையில் கூனிக் குறுகி, ஏளனத்தை ஏற்றுப்போக விழைகின்றனர். காலம் என்ற அரக்கன் கொடூரமாகப் பழிவாங்கிய நிகழ்கால சாட்சியம் இது.

முப்பதாண்டுகாலப் போர்ச்சூழலின் மையமான வரலாற்றில் மானிடரின் துயரத்தை அதன் சாதக பாதகங்களை மக்கள் அனுபவிக்கின்றனர். ஈழத்தமிழரின் எல்லா நிகழ்வுகளும் இல்லை. குறிப்பாக, சிக்கலான அரசியல் நிலைப்பாடுகள், கொள்கைகள் விவாதிக்கப்படவில்லை. முக்கியமாகப் போராளிகள் தோற்றுப்போனதற்கான உள்விவகாரங்கள் ஆராயப்படவில்லை. அதேபோல, சிங்கள இந்திய இராணுவத்தின் விவகாரங்கள் ஆராயப்படவில்லை. இந்நாவல் பொதுமக்களின் பார்வையிலிருந்து அவர்களின் அனுபவத்திலிருந்து போரின் அழிவுகளைச் சொல்கிறது. ஓயாமல் இடம் பெயர்ந்தபடியே மக்கள் இருக்கின்றனர். பிள்ளைகளை, கணவன்மார்களை இழந்தபடியே மக்கள் நகர்கின்றனர். எங்கு சென்றாலும் உயிரையும் உடைமைகளையும் இழந்து மற்றொரு இடத்திற்கு ஓடிப்போய் ஒளிகின்றனர். அங்கும் போரின் தாக்குதல் நிகழ்கிறது. முப்பது ஆண்டுகால நிம்மதியற்ற வாழ்வுதான் நாவல் முழுக்க விரிந்து கிடக்கிறது.

1977-இல் கொழும்பு நகரில் கலவரம் மூழ்கிறது. சிங்களக் காடையர்கள் தமிழர்கள் வீடுகளுக்குத் தீ வைக்கிறார்கள். கொள்ளை அடிக்கிறார்கள். வெட்டிக் கொல்லுகிறார்கள். ரயிலில் வந்த தமிழர்களை இறக்கிவிட்டு விரட்டி விரட்டி அடிக்கிறார்கள். 13 வயது சிறுமியை இழுத்துச் சென்று வல்லுறவு செய்து கொல்கிறார்கள். தோட்டக்காடுகளில் குடியிருக்கும் தமிழர்களின் வீடுகளுக்கு சிங்கள வெறியர்கள் தீ வைக்கின்றனர். அங்கிருந்து தப்பித்து தமிழர்கள் சிலர் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வேறு இடத்திற்கு ஓடுகின்றனர்.

மறுபடியும் 1983-இல் காட்டுப்புலவில் சிங்களக் குடியேற்றம் நிகழ்கிறது. அத்தோடு கலவரம் மூழ்குகிறது. அங்கிருந்து தப்பிச் செல்கின்றனர். வெலிக்கடைச் சிறையில் குட்டி மணியின் கண்களைத் தோண்டி எடுத்துச் சிங்களவன் காலில் போட்டு மிதித்த செய்தி வருகிறது. 1987-இல் திலீபனின் உண்ணாவிரதமும் அவரது மரணமும் உணர்ச்சிகரமான சூழலை மக்களிடையே உருவாக்குகிறது. அதனால் எந்த பிரியோசனமும் இல்லாமல் போகிறது. இப்படி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணம் வரை மிக முக்கியமான சில தகவல்கள் நாவலின் இடையே செய்திகளாக வருகின்றன.

“ *1977-இல் கொழும்பு நகரில் கலவரம் மூழ்கிறது. சிங்களக் காடையர்கள் தமிழர்கள் வீடுகளுக்குத் தீ வைக்கிறார்கள். கொள்ளை அடிக்கிறார்கள். வெட்டிக் கொல்லுகிறார்கள். ரயிலில் வந்த தமிழர்களை இறக்கிவிட்டு விரட்டி விரட்டி அடிக்கிறார்கள். 13 வயது சிறுமியை இழுத்துச் சென்று வல்லுறவு செய்து கொல்கிறார்கள்.* ”

ஒரு ஊருக்குள் நாட்டின் அரசியல் பிரச்சினைகள், கலவரங்கள், போர் அழிவுகள், திடீர் தாக்குதல்கள், மரணங் கள், வன்முறைகள் செய்திகளாக வந்து சேர்வது இயல்பு. அதன் பாதிப்பு வாழும் வாழ்க்கையில் புதிதாகத் தோன்றவும் செய்யும். பயணமோ, கல்வியோ, வாணிபமோ தடைப்படும். அச்சம் ஏற்படும். செய்திகளுக்குப் பின் ஏற்படும் நேரடிப் பாதிப்புகள் இவை போன்றவை நாவலில் செய்திகளாக வெளிப்படுத்திக் கொள்வது இயல்பானதுதான். அதேசமயம், ஒரு ஊரை களமாகக் கொண்டு இயங்கும் நாவலில் வரும் மக்களின் சில மரணங்கள், பாலியல் வன்கொடுமைகள், பய ணங்கள், கடத்தல்கள், மோதல்கள் செய்திகளாகச் சொல் லப்படும்போது படைப்பின் வீரியத்தைக் குறைக்கின்றன. மலரின் முதல் காதல்; சிங்கமலை காட்டில் தலையற்ற முண் டாகக் கிடப்பது; சங்கிலி பன்றி தாக்கி வீழ்வது; போன்ற சில நிகழ்கால நிகழ்வுகள் செய்தியாகத் தரப்படுகின்றன. படைப் பாளி காட்சிகளின் வழியாக நிகழ்த்திக் காட்டியிருக்க வேண் டிய இடங்களைச் செய்தியாகத் தரும்போது படைப்பின் வீச்சு மங்கிப்போகிறது. கதாசிரியர் ஒரு வசதிக்காக ஒதுங்கிக் கொள்கிறார் போல் தெரிகிறது. போர்ச் சூழலில் ஒருவரின் தலை துண்டித்து கிடக்கலாம். இந்த மரணம் அதிர்ச்சிக்குரிய துதான். ஆனால் அந்த மனிதன் நம்மிடையே (நாவலில்) பிரிக்க முடியாத அம்சத்தில் வாழ்ந்திருந்தவராக இருந்தால் கூடுதல் ஆழமும் அழுத்தமும் பெறும். அப்படியான மாந்தர் களுக்குச் சாவுக்கு முன் கூடுதல் உறவு சொல்லப்பட்டிருக்க வேண்டும். இந்த கூடுதல் பகுதிகள்தான் நாவலில் இல்லை. பல கதாமாந்தர்கள் நம் இதயத்தைத் தொந்தரவு செய்யாமல் போனதற்கு வாழ்வில் நின்று விரியவில்லை என்பதுதான் காரணம்.

மனிதர்களின் உறவுகள் போரினால் சிதைவுறுவதைப் படைப் பிற்கு நெருக்கமாகச் சொல்லிவிடுகிற சயந்தன் அவர்கள் புற உலகின் பிணைப்பினைத் துல்லியமாக உருவாக் கவில்லை. இந்தத் துல்லியத்தன்மை இல்லாத தால் வரலாற்றின் செய்திகளுக்கு ஒரு கதை வடி வம் கொடுத்து எழுதப்பட்ட நாவலாக மாறும் இடங்கள் நிறைய இருக்கின்றன. வாழ்ந்து அனு பவப்பட்ட சம்பவங்களாக உருவாகாமல் மாதி ரிச் சம்பவங்களாக இருக்கின்றன.




தனிக்கல்லடியில் இவர்கள் செய்யும் உழவு, விதைப்பு, களையெடுப்பு, நீர்ப் பாய்ச்சுதல், அறுவடை, மாடுமேய்த்தல் என்ற நிலையில் நாவலில் அவை ஒரு இயக்கமாக உருவாகி வரவில்லை. காட்டுடனான உறவில் ஒரு பன் றிவேட்டை மட்டும் இருக்கிறது. அம்மக் களின் பொதுவான காட்டுறவு இல்லை. ஊரின் எல்லைச்சாமியாக நின்ற இத்தி மரத்தின் பிரமாண்டமும் அதனுடனான சிறியவர் பெரியவர்களின் உறவும் ஆழ மாகத் துலக்கம் பெறவில்லை. பெரும்பு யலில் இத்தி மரத்தின் வீழ்ச்சி அடர்த்தி கொள்ளவில்லை. ஒரு குறியீடாக இத னைக் காட்ட வந்ததுபோல இருக்கிறது. பிற்பகுதியில் அதே இடத்தில் அதன் வேரடி யிலிருந்து தோன்றிய புதிய இத்தி மரமும் அப்படியே. இதெல்லாம் மேலைநாட்டு இலக்கிய உத்திபோல இருக்கிறது. இத்தி மரம் ஆழமான பிணைப்பை கொண்டு எழவில்லை.

சிங்களவர்களின் குடியேற்றம் அவ்வப்போது சொல்லப்படு கிறது. நிலத்தில் அவர்களின் குடியேற்றத்தின் துல்லியத் தன்மை இல்லை. இந்திய இராணுவம் வருகிறது. மலரைப் பாலியல் கொடுமைக்குள்ளாக்கிறது. போய்விடுகிறது. அதன் நடமாட்டம் சிறப்பாக நாவலில் சித்திரிக்கப்படவில்லை. மல ருக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகூட நாவலில் திட்டமிட்ட நிகழ்வாக வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மலர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகப் போகிறவர் என்று ஊகித்து விட முடிகிறது. மீனாட்சி பசு வைத்திருக்கிறாள் என்பதற்கு மேல் பசுவிற்கும் அவளுக்கும் தனித்துவமான எந்த உறவும் இல்லை. ஒரு நாள்கூட பசுவிற்கு அவர் தண்ணீர் வைக்க வில்லை. வரப்போரங்களில் அதனைப் பிடித்து மேய்க்க வில்லை. போர் உண்டாக்கிய சிக்கலின் ஊடே பாடசாலை இயங்குகிறது. அது எப்படி இயங்குகிறது, அதன் சிதிலம் எப்படி இருக்கிறது என்று இல்லை. இறுதிப் போரில் மக்கள் ஊர்விட்டுச் செல்லும் சித்திரங்கள், அவர்கள் தங்கும் இடங் கள், ஏரிகள், மரத்தடியில், நடையிடையே மிதித்த சேறுகள், பரல்கற்கள் எதுவுமே துல்லியம் பெறவில்லை.

புற உலகம் சார்ந்த உறவுகளில் துல்லியத்தன்மை இல்லாத நம்பகத்தன்மையைக் குறைக்கிறது. ஒரு கிராமத்தின் அழிவு மிக நுட்பமாகப் பதிவு செய்யப்படவில்லை.

அத்தார் - சந்திரா இருவரின் மணவாழ்க்கை, அவர்களின் கருத்தியல் முரண், லட்சுமணனின் இயக்க வாழ்க்கை சரியாக உருவாகவில்லை. சிங்கமலை தன் மகனை சந்திரா - அத்தர் தம்பதிகளிடம் ஒப்படைக்கிறான். இதற்கு வலுவான காரணம் ஏதும் இல்லை. மகளை வளர்ப்பவர் மகனை வளர்க்கமாட் டாரா? சரி அத்தார் வீட்டில்தான் அவனுக்கு என்ன வேலை. ஒன்றுமில்லை. வெள்ளையன் பாத்திரம் முன்பகுதியில் வலுக் கொள்ளவில்லை. குண்டடிபட்டு இயக்கத்திலிருந்து விடுபட்டு வந்தப்பின் அவனின் வாழ்க்கை அழுத்தம் கொள்கிறது. பின் பகுதி சிறப்பாக வந்திருக்கிறது. இயக்கத்திற்குள் அவனின் செயற்பாடு இல்லை. பின்பகுதியில் மிதிவெடி வைக் கும் வேலை என்று செய்தி குறிப் பாக சேர்க்கப்படுகிறது. அவனு டைய மௌனத்திற்குப் பெரிய அர்த் தம் இல்லை. சந்திரா - அத்தார் குடும்பமாக வாழும் இடத்திற்குத் தேடி வரும் சந்திராவின் தாயின் சாதிப் பற்று வெளிப்படும் இடம்தான் அழுத் தமாக இருக்கிறது.

'ஆதிரை' நாவலைப் படித்த நண்பர் கள் ஈழப்போரின் வலிமிகுந்த நாவல் என்றனர். இந்த நாவலில் வரும் பல பகுதிகள் ஏற்கனவே படித்திருப்பதுபோ லவும் இருந்தது. ஒரே சந்தர்ப்பத்தில் ஈழப்போர்ச்சூழலில் எழுதப்பட்ட பல சிறு கதைகளைப் படித்தேன். சிறுகதைகளின் தீவிரம் என்னை ஆட்கொண்டன. உமாவர தராசனின் 'அரசனின் வருகை'. சேரனின் 'எல்லாவற்றையும் மறந்து விடலாம்' கவிதை, மலைமகள், தமிழ் நதி, தமிழ்ச்செல்வியின்

“ஈழப்போரின் இறுதிநாட்களில் மக்கள் பட்ட அவதிகளையும், அழிவுகளையும், ஆசைகளையும், அலைச்சல்களையும், இழப்புகளையும் சொல்லும் பகுதிகள் அழுத்தத்துடன் வந்திருக்கின்றன. போர் செய்த மானிட அழிவை இப்பகுதி பதட்டத்துடன் கொடுக்கிறது. இறுதி 200 பக்கங்கள் தமிழர்களின் கையறுநிலையைப் பெருந்துக்கத்தோடு விவரிக்கின்றது.”

கதைகள், சு. வில்வரத்தினத்தின் கவிதைகள் என்று யாவற்றையும் படித்ததின் விளைவு ‘ஆதிரை’ நாவல் என்னை உலுக்கி எடுக்கவில்லை. போர்ச்சூழலில் எழுதப்பட்ட 50 கதைகளேனும் ஒரே சமயத்தில் படித்திருப்பேன். அந்த வாசிப்பு, அறிந்த விடயங்களைப் படிப்பது போன்ற ஒரு தோற்றத்தைத் தந்தது. இந்தக் கதைகளைப் படிக்காதிருந்தால் ‘ஆதிரை’ இன்னும் கூடுதலான பாதிப்பை எனக்குள் ஏற்படுத்தியிருக்கும்.

நாவலில் புனைவின் வெற்றிகூடிய இடங்களாக சங்கிலியின் பன்றிவேட்டை, ஆச்சி முத்துக்கிழவி தன் பேரன் பேத்திகளைப் பார்த்து வர மூட்டையைச் சுமந்து செல்கிற பகுதி; இலங்கை இராணுவம் தனிக்கல்லடியில் இறங்கி 16 வயது தம்பியை அடித்து சிதைப்பதும் அக்காவின் ஓலமும், நடராசனை இராணுவம் கொன்ற இடமும் வெள்ளையனுக்கு வரும் யானைக் கனவும் போர் உண்டாக்கிய மானிட துக்கத்தைப் புதிதாக வெளிப்படுத்தியிருக்கின்றன. உணவு விநியோகம் நடக்கும்போதே விழும் ஷெல்லுக்குத் தப்பி ஓடும்போது பேரனுக்காக உணவு வேண்டி நிற்கும் கிழவியின் துயரம் போன்ற சிறிய அளவிலான பல வெளிப்பாடுகளைச் சொல்லலாம்.

பெண் போராளி மலர், விநோதினி, ஆதிரை இவர்களின் உலகம் அசலாக உருவாகி இருக்கிறது. வெள்ளையன், சிங்கமலை போல மற்ற மாந்தர்கள் சிறப்பாக உருவாகவில்லை.

ஈழப்போரின் இறுதிநாட்களில் மக்கள் பட்ட அவதிகளையும், அழிவுகளையும், ஆசைகளையும், அலைச்சல்களையும், இழப்புகளையும் சொல்லும் பகுதிகள் அழுத்தத்துடன் வந்திருக்கின்றன. போர் செய்த மானிட அழிவை இப்பகுதி பதட்டத்துடன் கொடுக்கிறது. இறுதி 200 பக்கங்கள் தமிழர்களின் கையறுநிலையைப் பெருந்துக்கத்தோடு விவரிக்கின்றது. நாவலின் பலமான பகுதி இது. இந்த பெரிய வரலாற்றுத் துயரம் சொல்லப்பட்டிருக்கும் விதத்தில் முக்கியமான நாவலாக ஆகிறது.

ஈழத்தமிழர்களின் எழுச்சியும் வீழ்ச்சியுமான இந்த வரலாற்றுப் பின்னணியை ஒட்டி தமிழர்கள் பட்ட பேரவலங்கள், அபத்தங்கள், உணர்ச்சிகரமான தருணங்கள், நம்பிக்கை இழப்புகள், பற்றுக்கோடுகள் என வாழ்வின் பல்வேறு வெளிப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த வாழ்க்கை இங்கு புனைவாகத் திரட்டப்பட்டிருக்கும் விதத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. அசலான இலக்கியப் பிரதியாகவும் மாறுகிறது. சயந்தனின் படைப்பாளுமையின் தனித்துவத்தால் வடித்தெடுக்கப்பட்ட வெற்றி என்பதைவிட போர் உண்டாக்கிய பேரழிவின் விழைவால் உண்டான இலக்கிய வெற்றி எனலாம்.

நிகழ்வுகள் அனுபவமாகி, அனுபவங்கள் மொழியின் சாரத்தில் இறங்கி வெளிப்பட்ட இலக்கியத்துவமான, சில இடங்கள் இந்நாவலில் வருகின்றன. ‘வதை சாவைத் தட்டித்தட்டி திறக்க முயற்சிக்கும்’, ‘இந்திய நாய் என்றான் விஜேயரத்ன. முகத்தில் கணச்சலிப்பு, நான் புழுதி கிளறும் காலக் குதிரையொன்றில் காற்று நெஞ்சிலறைய என் மூதாதையரின் தலைமுறைகளைக் கடந்து பயணித்து மீண்டேன்’, ‘ஒரு மின்னல் பளிச்சென்று வெட்டியது. தொடர்ந்து ஆகாயம் ஒரு பிரமாண்டமான கண்ணாடியைப் போல சிதறிப் பூமியில் கொட்டுவதைப்போல மழை பொழியும் ‘சத்தம்’, என்று எழுதிய இடங்களைச் சொல்லலாம்.

விடலைப் பையனின் மனநிலையை ஒரு பன்றி வேட்டையை முன்வைத்து சொல்லியிருக்கும் இடம், ‘சங்கிலி மும்முரமாக வாரினார். பன்றி வெள்ளை நிற இளங்கன்றைப்போல உருமாறிக் கொண்டிருந்தது. தலையை வேறாக்கினான். முண்டம் லட்சுமணனை கலவரப்படுத்திற்று. அதுவரை அவனை ஆட்கொண்ட உற்சாகம் சடுதியில் காலடியில் வழிந்து தகித்த நிலத்தில் ஆவியாகிப் போனது.’, ‘பக்கத்து காணியில் செவலையின் வீடு அமைதியாகக் கிடக்கிறது. அவன் குடும்பத்தோடு கண்டிக்குப் போயிருக்கிறான். பிள்ளைகளை எதிர்பார்த்து காத்திருக்கும் கிழவியின் முகத்தைப் போல ஆளரவமற்ற அந்த வீட்டில் துயரம் படிந்திருந்தது’ என்று எழுதுகிறார். இம்மாதிரியான கவிதைக் கணங்களும், மனம் அடைகிற விநோதங்களுமான படைப்பு முழுக்க இயல்பாக வெளிப்படவில்லை. முதல் இரண்டு அத்தியாயத்தோடு இந்த மனவெழுச்சி மறைந்துவிட்டது. அடுத்தடுத்த அத்தியாயங்கள் சம்பவங்களைத் தொகுத்து செல்ல முனைந்துவிட்டது. மனவெழுச்சி ததும்ப எழுதப்பட்ட நாவலாக ‘அம்மா வந்தாள்’, ‘ஜே.ஜே. சில குறிப்புகள்’ முதலானவற்றைச் சொல்லலாம். இம்மாதிரியான வரலாற்றைச் சார்ந்து எழுதப்படும் நாவலில் இம்மாதிரியான பார்வைத் தேவையும் இல்லை.

சில இடங்களில் சொருகப்பட்ட பகுதிகள் செண்டிமெண்டாக இருந்தாலும் பொருத்தப்பாடாக இருக்கின்றன. சில இடங்களில் இயல்பாகவும் கூடி வந்திருக்கின்றன. போர்முனையில் மரத்திற்குப் பின் ஒளிந்திருந்த இரு குழந்தைகள் திடுக்கென ஒருவரைக் கண்டதும் பயந்து அப்பா கிழித்து தந்த வேட்டியின் துண்டு பகுதியை வெள்ளை கொடியாக அசைப்பதும், ஆளற்றுப்போன ஊரில் வயதான பூசாரி கடமையைச் செய்வதும், குழந்தைகளால் ஊதி ஒலி எழுப்பமுடியாத சங்கை வாங்கி மலர் ஒலியெழுப்புவதும் மனதிற்குள் புதிய மனவெழுச்சியை, துக்கத்தைக் கிளர்த்துகின்றன. இத்தோடு, தமிழ் நாவல் இலக்கிய வகைக்கே புதிய களத்தில் நின்று இயங்குவதால் இந்நாவல் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தமிழின் குறிப்பிடத்தக்க நாவல் வரிசையில் சயந்தனின் ‘ஆதிரை’யும் ஒன்று.



venugopal@thaiveedu.com

# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

6

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

tg.theeban@gmail.com

### வடதிராவிட மொழிகள்:

தென்திராவிட மொழிகள் ஒன்பது. நடுத்திராவிட மொழிகள் நான்கு. அது போல் வடதிராவிட மொழிகள் பிராகுயி, மால்டோ மற்றும் குரூக் என்னும் மூன்று மொழிகளாகும்.

திராவிட மொழிக் குடும்பத்தின் ஒரு பிரிவாகப் பார்க்கப்படு வது வடதிராவிட மொழியாகும். இவை பெரும்பாலும் வட இந்தியாவின் சில பகுதிகளில் பேசப்படுகின்றன. ஆந்திரா வில் வழங்கும் 'கோயா' மொழியை கோண்டி மொழியின் வட் டார வழக்காகவே கருதுகின்றனர். இருப்பினும் கோயா தனி மொழி என்று கண்டுபிடித்து கோயா மொழியினையும் வட திராவிட மொழியுடன் சேர்த்துள்ளனர். வடதிராவிட மொழி களுள் பிராகுயி மொழி முதலில் பிரிந்திருக்க வேண்டும். காலப்போக்கில் குரூக் மற்றும் மால்டோ எனும் இரண்டு மொழிகளும் தனித் தனியாக பிரிந்திருக்க வேண்டும் என்பது மொழியியல் அறிஞர்கள் கருத்தாகும். இந்த அடிப்படையில் வடதிராவிட மொழிக்கு சில பொதுப் பண்புகள் மொழியி யலாளர்களால் கூறப்பட்டுள்ளன.

### வடதிராவிட மொழிகளின் பொதுப்பண்புகள்:

திராவிட மொழிகளின் மற்றய பிரிவுகளான தென்திராவிடம் மற்றும் நடுத்திராவிட மொழிகளில் இருந்து சில வேறுபாடு களைக்கொண்டு காணப்படுவது வடதிராவிட மொழிகளின் பொதுப் பண்புகளாகும். அந்த வகையில் வடதிராவிட மொழி களில் சில சிறப்புகள் அல்லது பண்புகள் என்று பார்க்கின்ற போது...

- வடதிராவிட மொழிகளில், மொழி முதலில் வரும் ககர மானது ஹகரமாகவும், வகரமானது பகரமாகவும், சகர மானது ககரமாகவும் மாறும் தன்மை கொண்டது.

- மூலத்திராவிட ஒலியான 'க'கரம் மொழி முதலில் இ, ஈ தவிர்ந்த முன்னுயிர்களின் முன் வரும்போது வடதிராவிட மொழிகளில் அது 'ஹ'கர ஒலியாக (X) மாறிவிடுகின்றது. இம்மாற்றத்தினை உரசொலியாதல் (Fricativisation) என்று கூறுவர்.

  **உதாரணம்:**

  | | |
  |---|---|
  | தமிழ் | Kan |
  | மால்டோ | Xuanu |
  | பிராகுயி | Xan |
  | குரூக் | Xann என்று உச்சரிக்கப்படும். |

  மொழி முதல் இடம்பெறும் மூலத்திராவிட ஒலியான 'வ' (V) வடதிராவிட மொழியில் பகர (B) ஒலியாக மாறும்.

  **உதாரணம்:**

  | | |
  |---|---|
  | தமிழ் | Vay |
  | குரூக் | Bai |
  | பிராகுயி | Ba என்று அமையும். |

- மொழி முதலில் வரும் 'ச'கர ஒலி உ, எ, ஊ, ஏ ஆகிய உயிர்களின் முன்னர் இம்மொழிகளில் 'க'கர ஒலியாக மாறு கின்றது. (சகரம் ககரமாக மாறுதல்).

  **உதாரணம்:**

  | | |
  |---|---|
  | தமிழ் | சுடு |
  | குரூக் | குடு |
  | மால்டோ | குடு |

- 'க்' இறந்தகால இடைநிலையாகவும் 'ஓ' எதிர்கால இடை நிலையாகவும் வடதிராவிட மொழியில் காணப்படுகின்றன.

- குரூக், மால்டோ மொழிகளில் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை, மூவிடப் பெயர்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங் கள் ஆகியவை நான்காம் வேற்றுமை வடிவங்களாகவே உள்ளன. இவ்வாறு வடதிராவிட மொழிகளின் பொதுப் பண்புகள் அமைந்து காணப்படுகின்றன.

### பிராகுயி மொழி (Brahui Language):

பிராகுயி மொழி என்பது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியாகும். திராவிட மொழிகள் அனைத்தும் தென்னிந்தியாவில் பேசப்படும் சூழலில், அவற்றிலிருந்து புவியியல் ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டு வடமேற்குப் பகுதியில் பேசப்படுவது இதன் தனிச்சிறப்பாகும். பிராகுயி மொழி முதன்மையாகப் பாகிஸ்தானில் உள்ள பலுச்சிஸ் தான் மாகாணத்தின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளில் பேசப்படுகிறது. பலூச்சிஸ்தானில் சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இம்மொழியைப் பேசுவதாக மதிப்




> “ திராவிட மொழிகளின் மற்றய பிரிவுகளான தென்திராவிடம் மற்றும் நடுத்திராவிட மொழிகளில் இருந்து சில வேறுபாடு களைக்கொண்டு காணப்படுவது வடதிராவிட மொழிகளின் பொதுப் பண்புகளாகும். ”

பிடப்படுகிறது. இது தவிர, ஈரானின் பலூச்சிஸ்தான், ஆப் கானிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் போன்ற பகுதிகளி லும் பிராகுயி மொழி பேசுபவர்கள் வாழ்கின்றனர்.

இம்மொழி பேசும் மக்கள் சிறு சிறு பிரிவுகளாக வாழ்கின்ற னர். இங்கு வசிக்கும் மக்கள் தங்கள் மொழியினை பல நூற்றாண்டு காலமாக பாதுகாத்து வருகின்றனர். பாகிஸ்தான் அதனை ஒட்டிய சிந்துப் பகுதிகளிலுள்ள மலைப்பாங்கான பகுதிகளிலும் பிராகுயி மொழி பேசப்படுகின்றது.

பிராகுயி மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பதை ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் தங்கள் ஆட்சியை நிறுவும் போது கண்டறிந்தனர். 1816-இல் ஹெச். போட்டிங்கர் (H. Pottinger) என்பவர் முதன்முதலில் இந்த மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபட்டுள்ள தனைக் குறிப்பிட்டார். மொழியியல் ஆய்வாளர்கள், பிராகுயி மொழியை வடதிராவிட மொழிகளின் உட்பிரிவில் வகைப் படுத்துகின்றனர். இந்தப் பிரிவில் வட இந்தியாவில் பேசப் படும் ஏனைய வடதிராவிட மொழிகளான குருக் (Kurukh), மால்டோ (Malto) போன்ற மொழிகளும் அடங்கும்.

இம் மொழி பேசப்படுவது பற்றி டாக்டர் இராபர்ட்டு கால்டு வெல் (Robert Caldwell) குறிப்பிட்டுச் சென்றாலும் அதைத் திராவிட மொழிக் குடும்பத்தில் இணைத்து விரிவாக ஆராய வில்லை. Denys de Savmarez Bray என்பவர் பிராகுயி மொழி திராவிட மொழிக் குடும்பத்தினைச் சார்ந்தது என்று நிறுவினார். பிராகுயி மொழி வடதிராவிடத்தை சேர்ந்தது என்று பேராசிரியர் மர்ரே பான்சன் எமனோ (Murray Barnson Emeneau) அவர்கள் 1962-இல் விளக்கினார். திராவிட மக் களும், பிராகுயி மக்களும் ஒரே இனத்தவர் என்று சொல்லிக் கொள்ள சான்றுகள் இல்லை என்றாலும் திராவிட மொழி பேசுவோரின் கலப்பு இருக்க வேண்டும் என்று வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் குறிப்பிடுவார். பிராகுயி மொழி திரா விட மொழியாகக் கருதப்பட்டாலும் பிராகுயி மொழி பாரசீக மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள் ளது என்று கூறப்படுகிறது. இம்மொழி பேசும் மக்கள் பாகிஸ்தானிலுள்ள கலத், ஹய்ர்பூர் மாவட்டங்களிலும், ஈரான், ஆப்கானிஸ்த்தான் பகுதிகளிலும் பரந்து வாழ் கின்றனர். இப்பகுதிகளில் வாழும் மக்கள் பலுச்சி மொழியே பெருவழக்கில் உள்ளது. இம்மொழி பேசு வோரின் எண்ணிக்கையில் மாற்றுக் கருத்துகள் காணப் படுவது குறிப்பிடத்தக்கது. பிராகுயி மொழி பற்றி பேராசிரியர் மர்ரே பான்சன் எமனோ பல்வேறு கட்டுரை களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்ற திராவிட மொழிகளைப் போல பிராமி அடிப்படையி லான எழுத்து முறையைப் பயன்படுத்தாமல், பிராகுயி மொழி தற்போது அரபு எழுத்துமுறையில் எழுதப்படுகிறது. 20-ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியில் அரபு எழுத்துமுறை பரவ லாகப் பயன்பாட்டுக்கு வந்தது. பிராகுயி இலக்கியம் மிகவும் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும். முதலாம் நாசர் கான் (1750 - 1793) என்பவரின் ஆட்சிக் காலத்தில் மாலிக் தார்ட் என்பவரால் எழுதப்பட்ட துஹ்ஃபா-துல்-அஜைப் (Tuhfa-tul-Ajaib) என்பதே இம்மொழியில் காணப்படும் மிகப் பழைய இலக்கியமாகும். இது 18-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.

பிராகுயி மொழியின் தற்போதைய நிலையினை பார்க்கும் போது யுனெஸ்கோவின் (UNESCO) ‘ஆபத்தில் உள்ள உலக மொழிகளின் அட்லஸ்’ (Atlas of the World’s Languages in Danger) பட்டியலில் ‘பாதிக்கப்படக்கூடிய’ (Vulnerable) மொழியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றியுள்ள பலூச்சி, சிந்தி, பாரசீக மொழிகளின் ஆதிக்கம் காரணமாக இம்மொழி மெதுவாகப் பயன்பாட்டிலிருந்து குறைந்து வரு வதற்கான அபாயம் உள்ளது.

## மால்டோ மொழி (Malto Language):

மால்டோ மொழி என்பது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு முக்கிய வடதிராவிட மொழியாகும். இது இந்தியா வில் உள்ள பழங்குடியினரால் பேசப்படுகிற மொழியாகும். பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பேசும் மொழியாக விளங்குகிறது. ஏறத்தாழ 90,000 முதல் 1 இலட் சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இம்மொழியைப் பேசுவதாக மதிப்பிடப்படுகிறது. மால்டோ மொழியினை ‘ராஜ்மஹால்’ என டாக்டர் இராபர்ட்டு கால்டுவெல் (Robert Caldwell) அழைப்பர். மேற்கு வங்கத்தில் ராஜ்மஹால் குன்றுப் பகுதி யிலும், பீகாரில் சந்தால் பர்கணா பகுதியிலும் இம்மொழி பேசும் மக்கள் அதிகமாக வாழ்கின்றனர்.

மால்டோ மொழிச் சொற்களைப் பேராசிரியர் பி. எச். ஹாட்ஸன் (B.H. Hodsn) மற்றும் கேம்பல் (Sir George Campell) ஆகியோர் தொகுத் துள்ளனர். 1884-இல் எர்னஸ்ட் ட்ரோயெஸ் (Ernest Droes) என்பவர் எழுதி வெளியிட்ட 'மால்டோ மொழி அறிமுகம் (Introduction to the Malto Language) என்ற நூல் இம்மொழி பற்றி வந்த முதல் நூல் மட்டுமன்றி இம்மொழி பற்றி அறிவதற்கு மிகவும் பெரிதும் துணையாக நின்றது.



இம்மொழியை ஆராய்ந்த பேராசிரியர் ஜார்ஜ் ஆபிரகாம் கிரியர்சன் (George Abraham Grierson) என்பவர் மாலர் என்ற சொல் மலை என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது என்றும் மாலர் என்பது மலை மனிதர்கள் என்னும் பொருளுடையது என்றும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. இவர்கள் பெரும்பாலும் ராஜ்மஹால் மலைப் பகுதிகளில் (Rajmahal Hills) வாழ்கின்றனர்.

மால்டோ மொழிக்குத் தனிப்பட்ட பாரம்பரிய எழுத்து வடிவம் இல்லை. இது பெரும்பாலும் சுற்றியுள்ள மொழிகளான இந்தி மற்றும் வங்காளியின் தாக்கத்தால் தேவநாகரி (Devanagari) எழுத்து முறையிலோ சில இடங்களில் இலத்தீன் எழுத்து முறையிலோ எழுதப்படுகிறது. மால்டோ மொழிக்கு இலக்கிய வளம் கிடையாது ஆனால் கிறிஸ்தவத் தொண்டர்கள் பலர் இம்மொழியில் பல இலக்கியங்கள் படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மொழியின் உயிரொலிகளைப் பொறுத்தவரை குறில் நெடில் வேறுபாடு பொருள் மாற்றத்திற்கு அடிப்படையான கருவியாக அமைகின்றது. இந்த உயிரொலிகள் சொற்களின் எல்லா இடங்களிலும் இடம்பெறுகின்றன. இருந்தாலும் நெடில் உயிரொலிகள் மொழியின் இறுதியில் இடம்பெறமாட்டாது.



George Abraham Grierson

அடைப்பொலிகள் (Stops) உரசொலிகள் (Fricatives) மூக்கொலிகள் (Nasals) வருடொலிகள் (Trills) பிரிவளி ஒலிகள் (Laterals) ஆடொலிகள் (Flaps) அரைஉயிர்கள் (Semi vowels) என இம் மொழியின் மெய்யொலிகள் ஏழாகக் கூறப்படுகின்றன.

### குரூக் மொழி (Kurukh language):

குரூக் மொழியினை டாக்டர் இராபர்ட்டு கால்டுவெல் (Robert Caldwell) 'ஒரோவன்' மொழி என்று குறிப்பிட்டுள்ளார். இது குடக்கு மொழி என்றும் அழைக்கப்படுகிறது. இம்மொழியைப் பேசும் மக்கள் தங்களை குரூக் என்று அழைக்கின்றனர். குரூக் (ஓராவோன்) மற்றும் கிசான் (Kisan) பழங்குடி மக்களால் பேசப்படுகிறது. குரூக் மொழி சுமார் 2 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது. இது பெரும்பாலும் கிழக்கு மற்றும் வடமத்திய இந்தியாவில் பேசப்படுகிறது. இந்த மொழி பெரும்பாலும் வட இந்திய மாநிலங்களில் வாழ்கின்ற மக்களால் பேசப்படுகின்றன. பீகார், அசாம், வங்காளம், ஒடிசா, மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளில் குரூக் மொழி பேசுவோர் காணப்படுகின்றனர். சோட்டார் நாக்பூர் பகுதியில் இம்மொழி பேசுவோர் அதிகமாக வாழ்கின்றனர்.

குரூக் மொழி பாரம்பரியமாக வாய்மொழி மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் மூலமாகவே கடத்தப்பட்டு வந்தது. இதற்குத் தொன்மையான எழுத்து வடிவம் இருக்கவில்லை. பேராசியர் கொலனோல் டால்டன் (Colonel Dolton) வங்காள மக்களின் வரலாறு (Ethnology of Bengal) என்ற நூலின் மூலம் குரூக் மொழி பேசும் மக்களின் குறிப்புகளை எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பட்சச் பாதிரியார் (Rev.F. Batsch) குரூக் மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார். அந்த இலக்கண நூலில் குரூக் மொழி பேசும் இம்மக்கள் கொங்கணத்தில் இருந்து வந்ததாகவும் பாடலிபுர மலைகளில் வாழ்ந்ததாகவும் இவரது இலக்கணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் இராபர்ட்டு கால்டுவெல் (Robert Caldwell) குரூக் மொழி பேசும் மக்களுக்கும் மால்டோ மொழி பேசும் மக்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாக தனது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலில் குறிப்பிடுகின்றார். குரூக் மொழியின் பெரும்பாலான இலக்கியங்கள் மற்றும் எழுத்துகள் தேவநாகரி எழுத்து முறையிலேயே வெளியிடப்படுகின்றன.

1924-ஆம் ஆண்டு குரூக் மொழிக்கான அகராதி நூலினையும், இலக்கண நூலினையும் பேராசிரியர் ஏ. கிரிக்நாட் (A. Grignard) தயாரித்து வெளியிட்டார். அத்துடன் ஃபென்ட்-ஹன் (Fend-Hahn) என்பவரும் சி.பி. லெசஸ் (C.B. Leses)

> **"குரூக் மொழி பாரம்பரியமாக வாய்மொழி மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் மூலமாகவே கடத்தப்பட்டு வந்தது. இதற்குத் தொன்மையான எழுத்து வடிவம் இருக்கவில்லை."**

என்பவரும் குருக் மொழிக்குரிய அகராதியைத் தயாரித்துள் ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குருக் மொழியின் தற்போதைய நிலையினைப் பார்க்கும் போது குருக் மொழியானது யுனெஸ்கோவினால் அழியும் ஆபத்தில் உள்ள ஒரு மொழியாக (Vulnerable language) பட்டியலிடப்பட்டுள்ளது. இந்தி, சாத்ரி (Sadri / Nagpuri) மற்றும் ஒடியா போன்ற அண்டை மொழிகளின் பரவலான பயன்பாடு காரணமாக, பல குருக் மக்கள் தங்கள் தாய் மொழியை விட்டுவிட்டு, அப்பகுதியின் இணைப்பு மொழி களைப் பேசத் தொடங்கியுள்ளனர்.

ஆகவே வடதிராவிட மொழிகளான பிராகுயி, மால்டோ, மற் றும் குருக் ஆகியவை திராவிட மொழிக் குடும்பத்தின் தனித் துவமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க மொழிகளாகும். பிராகுயி, மால்டோ மற்றும் குருக் ஆகிய மூன்று மொழிகளும் இந்தியாவின் தெற்குப் பகுதியில் பேசப்படும் பெரும்பான்மை யான திராவிட மொழிகளிலிருந்து புவியியல் ரீதியாகப் பிரிந்து வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளில் நிலைபெற் றவை. இந்த மூன்று மொழிகளும் தற்போது ஒரு பெரிய சவாலை எதிர்கொண்டுள்ளன. யுனெஸ்கோவினால் இவை 'பாதிக்கப்படக்கூடிய' மொழிகளாகப் பட்டியலிடப்பட்டுள் ளன. சுற்றியுள்ள இந்தோ-ஆரிய மொழிகளான இந்தி, சிந்தி, பலூச்சி போன்றவற்றின் ஆதிக்கம் காரணமாக, இளைய தலைமுறையினர் தங்கள் தாய்மொழியைப் பேசுவதைக் குறைத்து, பிராந்திய இணைப்பு மொழிகளைப் பேசுகின் றனர். இதனால், இந்த மொழிகள் அழியும் ஆபத்தை எதிர் கொள்கின்றன.

***“இந்தி, சிந்தி, பலூச்சி போன்றவற்றின் ஆதிக்கம் காரணமாக, இளைய தலைமுறையினர் தங்கள் தாய்மொழியைப் பேசுவதைக் குறைத்து, பிராந்திய இணைப்பு மொழிகளைப் பேசுகின்றனர். இதனால், இந்த மொழிகள் அழியும் ஆபத்தை எதிர்கொள்கின்றன.”***



சிந்து சமவெளி நாகரிகம் மற்றும் ஆரியர்கள் வருகைக்கு முந்தைய இந்திய மொழியியல் நிலப்பரப்பைப் புரிந்து கொள்ள இந்த மொழிகள் முக்கிய களஞ்சியங்களாகத் திகழ் கின்றன என்பதில் ஐயமில்லை.

(தொடரும்...)



nageswary@thaiveedu.com



# இலங்கை மலையகத் தமிழர் நிலையில் ஐ.நா. சபையும் அதிகார சபையும்



– மல்லியப்புசந்தி திலகர்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 60-வது அமர்வு 2025 செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பித்தது. ஒக்ரோபர் மாதம் இலங்கை தொடர் பான புதிய தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. பேரவை யின் அறுபதாவது அமர்வில் இலங்கை பங்குகொண்ட அமர்வு செப்ரெம்பர் 8-ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மூன்று தசாப்த காலத்துக்கு மேலாகத் தொடர்ந்த இலங்கையின் உள்நாட்டு யுத்தம், பெரும் உயிரிழப்புகள், சொத்தழிவுகளுக்கு மத்தியில் 2009-ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. இந்நிலையில் அதன்போதான மனித உரிமை மீறல்கள் குறித்த 'சர்வதேச நீதி விசாரணை', 'பொறுப்புக்கூறல்' அவசியம் எனும் கோரிக்கை யுத்தத்தினால் நேரடியான பாதிப்புக்கு உள்ளான இலங்கைத் தமிழ்த் தரப்பினரால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதேநேரம், இந்த இலங்கை விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை முன்னிலையில் வைக்கப்பட்ட பிரேரணைகள் அவை மீதான விவாதங்கள், வாக்கெடுப்புகள் என ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டங்களின்போது இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொடர்பிலும் இலங்கைத் தமிழர் எதிர்பார்ப்பு தொடர்பிலும் பேசப்பட்டு வருகிறது.

2024-ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கிய நிலையில், கடந்த செப்ரெம்பர் 08-ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை கூட்டத்தில் பங்குகொண்ட இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தின் செயற்பாடுகள், புதுமைகள் ஏதும் இல்லாத வழமையான இலங்கை அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாகவே தெரிகிறது. குறிப்பாக, இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தோடு தொடர்புடையதான மனித உரிமை மீறல்கள் தொடர்பான வெளிப்புற விசாரணைகளுக்கு வாய்ப்பில்லை என்பதை உறுதிப்பட வெளிப்படுத்தியுள்ளார். இந்த வெளிப்படுத்தலானது உள்ளார்ந்த பொறிமுறை ஒன்றையே இலங்கை முன்னெடுக்கலாம் எனும் கருத்தை குறித்து நிற்கின்றது. இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் முன்னாள் தலைவர் பிரதீப மஹாநாமஹேவா போன்றவர்கள் இலங்கையின் இந்த நிலைப்பாட்டை பாராட்டி வரவேற்றுள்ளனர்.



இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளார்ந்த பொறிமுறை என்ன என்பது உள்நாட்டு அரசியற்பாற்பட்டது. இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை அறிவித்த அதே நாளில். ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் வொல்கன் டேர்க் அவர்களும் தனது எழுத்து மூல ஆவ ணத்தைச் சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை அண்மைய அவரது இலங்கை விஜயத்தின் போதான அவதானிப்புகளை உள்ளடக்கியிருந்ததுடன் ஒரு மென்போக்குத் தன்மைகொண் டதாகவும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இது இலங்கை அரசின் நிலைப்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலானது எனவும் கொள்ள முடியும்.

இலங்கை நிலையில் ஐ.நா. மனித உரிமை மாநாடு என்பது வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், மனித உரிமை மீறல்கள்களுக்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்துவது எனும் புரிதலே பரவலாக உள்ளது. ஆனால், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வொல்கன் டேர்க்கின் அறிக்கையில் தெற்கு பற்றியும் மலையகத் தமி ழர்கள் பற்றியும்கூட சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தெற்கைச் சேர்ந்த பெண் ஒருவரும் தனது கணவருக்காக நீண்டகாலம் காத்திருப்பதாகத் தன்னிடம் கூறியுள்ளதாக பதிவு செய்துள்ள ஆணையாளர், மலையகத் தமிழ் மக்களின் மனித உரிமை நிலைமைகளை நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையுடன் தொடர்புபடுத்தியதாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஏற்கனவே கட்டமைப்புரீதியானதும் பொருளாதாரரீதியான துமான பேதப்படுத்தலை எதிர்கொண்டுள்ள மலையகத் தமிழர் சமூகம், பொருளாதார நெருக்கடி நிலைமைகள் கார ணமாகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பெருந் தோட்டப் பகுதியில் வாழும் சமூகத்தினர் தமது காணி மற்றும் தொழில் உரிமைகளைப் பெறுவதில் பெரும் சாவல்களை எதிர்கொண்டுள்ளனர்' என்பதே அவரது கூற்றாகும். (The Malaiyaha Tamil community, which was already facing structural and economic discrimination, was severely affected by the economic crisis. The estate community continues to face significant challenges in securing land and labour rights - (A/HRC/60/21- 8th September 2025)

இலங்கை மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களது பிரச்சினை என்ன என்பதனை ஐ.நா. மனித உரிமை அறிக்கையாளர்கள் இலங்கைக்கு வரும் போதெ ல்லாம் எடுத்துக்கூறப்பட்டு வருவதுடன், அவை ஐ.நா. மனித உரிமை பேரவை மாநாட்டில் நன்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

உதாரணமாக: 2012-ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையின் உயர்ஸ்தானிகர் காரியாலயம் முன்வைத்த (A/HRC/WG.6/14/LKA/3)அறிக்கையில் கல்விக்கான உரிமை (உறுப்புரையின் 10) எனும் தலைப்பின் கீழ் மலையகத்தில் கல்வி உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டு அவை எவ்வாறு அந்த மக்களின் சமூக பொருளாதார விட யங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதுவும் அவர் களது கலாசார உரிமையை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015-ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனமான பசுமைத் தாயகம் அமைப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட கட்டாயக் கருத்தடை சம்பந்தமாகவும் (A/HRC/28/NGO/94) குறிப்பிடப்பட்டுள்ளது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அறிக்கையில் ((A/HRC/WG.6/28/LKA/1) தரமான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமையின் கீழ் (உறுப்புரை 54) மலையகப் பெருந்தோட்டப் பகுதியில் அமையப் பெற்றுள்ள லயன் வீட்டு முறைமையின் குறைபாடுகள் குறித்தும் அங்கு நிலவும் மலச லகூட வசதியின்மை, குடிநீர்ப் பிரச்சினை மற்றும் சுகாதார கேடுகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் 2017-ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் அலுவலகத்தினால் சமர்ப் பிக்கப்பட்ட (A/HRC/WG.6/28/LKA/3) (உறுப்புரை-85) அறிக் கையில், அந்த மக்களின் வாழ்க்கை அபிவிருத்திக்காகத் தயாரிக்கப்பட்ட பத்தாண்டுத் திட்டம் (2015-2025) குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இது 2016-2020 என ஐந்தாண்டுத் திட்டமாக அமைச்சரவையினால் மாற்றம் செய்யப்பட்டு நல்லாட்சி அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

குறிப்பாக 2022-ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்தி ருந்த சமகால அடிமைத்தனம் குறித்த ஐ.நா. மனித உரிமை அறிக்கையாளர் தொமாயா ஒபகாட்டாவின் அறிக்கையில் (A/HRC/51/26/ADD.1) இலங்கை பெருந்தோட்டத்துறையில் வாழும் மலையகத் தமிழர்கள் அரை அடிமை நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெளிவாகக் குறிப்பிட் டுள்ளார்.

'இலங்கையில் சமகால அடிமைத்தனப் போக்கு இனப்பரிமா ணத்தைக் கொண்டது. குறிப்பாக இந்தியாவில் இருந்து 200 ஆண்டுகளுக்கு முன்னதாக பிரிதானியர்களால் பெருந் தோட்டத் துறைக்கு தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்ட வர்கள், அவர்களது வம்சாவளி அடிப்படையில் உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாதல் முதலான பல்வேறு விதமான பேதப்படுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர். (In Sri Lanka, contemporary forms of slavery have an ethnic dimension. In particular, Malaiyaha Tamils – who were brought from India to work in the plantation sector over 200 years ago under British colonial rule – continue to face multiple forms of discrimination on the basis of their descent, making them vulnerable to labour exploitation.) எனக் குறிப்பிட்டுள் ளதுடன், சிறுபான்மை சமூகங்கள் எனும் தலைப்பின்கீழ் தோட்ட தொழிலாளர்களின் (1000/-) சம்பள விவகாரம், லயன் வீட்டு (10x12 அடி) அவலம், இலங்கை - இந்திய வீடமைப்புத் திட்டங்களின் இழுபறிநிலை, தமிழ் மொழி அமுலாக்கத்தில் உள்ள சிக்கல்கள், இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிரச்சி னைகள், தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சவால்கள் முதலானவை (உறுப்புரை 52 முதல் 60 வரை) மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன.



இவ்வாறு இலங்கை மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் ஐ.நா. மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள போதும், இலங்கை அரசின் சார்பில் எத்தகைய பொறுப்புக் கூறல் குறித்தும் ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்ற அமைச்சர் விஜித்த ஹேரத்தினால் முன்வைக்கப்படவில்லை. அதேநேரம் 'இந்திய தமிழர்கள்' என இலங்கையில் அடையாளப்படுத்தப்படும் இனக்குழுமம் 'மலையகத் தமிழர்கள்' என அடையாளப்படுத்தப்படுவார்கள் எனும் உறுதிப்பாட்டை வழங்கியுள்ளார். ஆனால், இந்த இன அடையாளம் குறித்து ஐ.நா.-வில் கேள்வி எழுப்பப்படவில்லை. அது உள்நாட்டில் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் கோரிக்கையாகும்.

> **இலங்கை மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் ஐ.நா. மனித உரிமை பேரவையில் முன் வைக்கப்பட்டுள்ள போதும், இலங்கை அரசின் சார்பில் எத்தகைய பொறுப்புக் கூறல் குறித்தும் ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்ற அமைச்சர் விஜித்த ஹேரத்தினால் முன்வைக்கப் படவில்லை.**

மறுபுறமாக இலங்கை குறித்த தீர்மானத்துக்கு வெளியகப்பொறிமுறைகள் ஊடாகத் தீர்வு காணப்படமாட்டாது என்றும் உள்ளகப் பொறிமுறை ஒன்றின் ஊடாகத்தான் தீர்வு காணப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

மலையகத் தமிழர்களினால் ஐ.நா.-வுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உள்நாட்டுப் பொறிமுறை என்ன என்பதே இப்போதைய கேள்வி. அதனை ஆராய்வதற்காயினும் அரசாங்கம் தலைப்பட்டிருக்குமானால், மலையகத் தமிழ் மக்களினால் ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு செல்லப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதான 'மலையக அதிகார சபையை' இழுத்து மூடுவதற்கு அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்திருக்காது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழர்களான மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் எச்சங்களாகக் கருதிய மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தியாக உருமாறிய பின்னர் நடத்திய ஹட்டன் மாநாட்டில் வெளியிடப்பட்ட ஹட்டன் பிரகடனத்தில் இந்திய தமிழர்களை 'மலையகத் தமிழ் மக்கள்' என எற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளமை பலராலும் வரவேற்கப்பட்டது. அண்மையில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் இதனை பாராளுமன்றில் நிறைவேற்றுவதாகவும் உறுதி அளித்துள்ளார். இப்போது இதனை மேலதிகமாக ஐ.நா. உரையிலும் சேர்த்துக்கொண்டுள்ளார்.

தாம் ஆட்சிக்கு வந்தால் அரச சொத்துக்களைப் பாதுகாப்பதாக கூறிய அநுர அரசு, தற்போது சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு அரசுக்கு சொந்தமான பல நிறுவனங்களை மூடுவதற்கு நடடிவடிக்கை எடுத்துவருகிறது. அவ்வாறு மூடுவதற்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன என்பதை பாராளுமன்ற குழுக்களின் உதவியுடன் அரசாங்கத்தால் இலகுவாக கண்டறிய முடியும். 2020-2022 காலப்பகுதியில் பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையில் இதனைத் தெளிவாகப் பெறலாம்.

அதற்கு மாறாக, அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு அமையப்பெற்று மூன்று மாதத்துக்கு உள்ளாகவே 2024-12-18 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் பரிந்துரைப்பின்பேரில் பிரதமரின் செயலாளரின் தலைமையில் 'வணிக நோக்கம் அல்லாத முறையாக இயங்காத அரச நிறுவனங்களை' அடையாளம் கண்டு அறிக்கை இடப்பட்டன. அமைச்சரவை அனுமதியுடனான குழுவை அமைத்து. அந்தக் குழு கடந்த எட்டு மாத காலத்துக்கு மேலாக ஆராய்ந்து 160 நிறுவனங்களை அடையாளங் கண்டதுடன் இறுதியாக 33 நிறுவனங்களை மூடிவிடுவதற்கு கடந்த செப்ரெம்பர் முதல் வாரத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டார். இதில் 'மிஹின் லங்கா' உள்ளிட்ட 33 நிறுவனங்களில் 13-வது இடத்தில் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையும் (மலையக அதிகார சபை) உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவெனில் தேசிய மக்கள் சக்தியின் ஹட்டன் பிரகடனத்தில் மேற்படி அதிகார சபை குறித்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'மலையகத் தமிழச் சமூகத்துக்கு அரச சேவைகளின் மிகச்சிறந்த அணுகலை வழங்குவதற்காக 2018-ஆம் ஆண்டின் 32-ஆம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சட்டத்தைத் திருத்தி சக்தி மயப்படுத்துவோம் என ஆட்சிக்கு வந்த அரசாங்கம் கூறியது. இப்போது அந்த அதிகார சபையை அடியோடு ஒழிப்பதற்கு நடடிக்கை எடுத்திருப்பதை எவ்வாறு அளவிடுவது ?.

இலங்கை மலையகத் தமிழ் மக்களின் 200 ஆண்டுகால வரலாற்றில் முக்கிய அடைவாக அமைந்தது இந்த 'பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையாகும். இலங்கை சுதந்திரமடைந்த கையோடு குடியுரிமை பறிக்கப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள் அரச சேவைகளைப் பெறுவதில் இருந்தும் தடுக்கப்பட்டனர். அவர்களுக்கான தேவைகள் அனைத்தையும் தோட்ட நிர்வாகமே முன்னெடுக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டையே இலங்கை அரசு கொண்டிருந்தது. மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்ற தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என ஒரு தனியான அமைச்சு உருவாக்கப்பட்டபோதும் கூட அதன் கீழ் சமூகநல உட்கட்டமைப்பு விடயங்களை முன்னெடுப்பதற்கு தோட்டக் கம்பனிகளின் கூட்டிணைவால் உருவாக்கப்பட்ட பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமே (Trust) அமையப்பெற்றது.

நிதியம் (TRUST) 1992-ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தால் அனுமதியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும், இது பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் நிறுவனமல்ல. தனியார் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. பெயருக்கு அரசாங்க, தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கொண்ட பணிப்பாளர் சபையாக்கொண்டதாக அமைந்ததே தவிர முழு அதிகாரமும் தனியார் கம்பனிகள்

வசமே உள்ளது. பெருந்தோட்ட மக்கள் தமது தொழில் சார்ந்து மட்டுமல்ல சமூகம் சார்ந்தும் தனியார் கம்பனிகளிடம் தங்கியிருக்கும் நிலை இதனாலேயே உருவானது. இத னையே, ஐ.நா. அறிக்கையாளர் அடிமைத்தனம் என குறிப்பிட்டுள்ளார்.

**200 வருட இலங்கை வரலாற்றில் மலையக அதிகார சபையை அமைத்துக் கொண்டது மலையகத் தமிழ் மக்களின் பெரும் அடைவாகும். அதனை, இழப்பதென்பது மலையக மக்கள் இன்னுமொருமுறை தமது குடியுரிமையை இழப்பதற்கு சமனாகும்.**

இன்னுமொரு பக்கத்தில் மலையகத்தில் நீண்டகால தலைமையைக் கொண்டிருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமது மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் பெயரில் உருவாக்கிய சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினைத் தமது அமைச்சுக் காலத்தில் அரச நிதியைப் பயன்படுத்தி மக்களுக்குப் பணியாற்றும் கைங்கரியத்தில் ஈடுபட்டனர்.

நிதியத்தினதும் (ட்ரஸ்ட்), தொண்டமான் மன்றத்தினதும் இத்தகைய குறைபாடுகளை அவதானித்து அரசாங்கத்தின் பொறுப்பில் மலையகப் பெருந்தோட்ட மக்களின் சமூக நல விடயங்களை முன்னெடுப்பதற்கு என உருவாக்கப்பட்டதே 'பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையாகும்'.

2018-ஆம் ஆண்டு 32-ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மேற்படி அதிகார சபை 2019-ஆம் ஆண்டு நடைமுறைச் செயற்பாட்டுக்கு வந்தது. எனினும், 2020-ஆம் ஆண்டு வந்த ஆட்சி மாற்றத்தோடு அதன் செயற்பாட்டுத் தன்மை அரசியல் காரணங்களாலும் கொவிட் 19, பொருளாதார நெருக்கடி நிலை போன்ற காரணங்களாலும் முறையாக இடம்பெறவில்லை. 2024-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபை கலைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகார சபை கலைக்கப்பட்டால் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்கு என வரலாற்றிலேயே உருவாக்கப்பட்ட ஒரே ஒரு அரச நிறுவனமும் இல்லாமல் செய்யப்படும் சூழ்நிலை எழுகின்றது.

அதிகார சபை 2018-ஆம் உருவாக்கப்பட்டாலும் அதற்கான கோரிக்கை 1960-களில் இருந்தே வெவ்வேறு வடிவத்தில் முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. மலையக அதிகார சபையின் நோக்கம் இலங்கை அரச நிர்வாகத்தில் இருந்து விலத்தி வைக்கப்பட்டுள்ள மலையகத் தமிழ் மக்களை அபிவிருத்திக்கான பாதையில் தேசிய நீரோட்டத்தில் இணைப்பதாகும். இன்னும் சுருங்கச் சொன்னால், மலையகத் தமிழர் குறித்து இதுவரை காலம் ஐ.நா. சபையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய உள்ளகப் பொறிமுறையாகும்.

எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதாகக் காட்ட முனையும் இலங்கை அரசு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூற எத்தகைய தீர்மானத்தை எடுக்கப் பார்க்கிறது என்பதற்கு அப்பால், மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தினால் தீர்வு வழங்கப்படக் கூடிய வகை யில் 2018-ஆம் ஆண்டு 32-ஆம் இலக்கச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அதிகார சபையைக் கலைப்பது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய நடைமுறை அல்ல என்பதை உணர வேண்டும்.

அதனையும் தாண்டி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மலையக அதிகார சபை கலைக்கப்படுவதற்கான இந்த எத்தனிப்பு, மலையக மக்கள் குறித்த அவர்களது எண்ணம் என்னவாக இருக்கிறது? எனும் கேள்வியை உருவாக்குகிறது. அவர்களது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலையகத் தமிழ் பிரதிநிதிகளினதும் இந்த ஆட்சியை அமைப்பதற்காக உழைத்தோரும் முதலில் இதன் பாரதூரத் தன்மையை விளங்கிக் கொண்டு அவர்களின் மேலிடத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டும்.

200 வருட இலங்கை வரலாற்றில் மலையக அதிகார சபையை அமைத்துக்கொண்டது மலையகத் தமிழ் மக்களின் பெரும் அடைவாகும். அதனை, இழப்பதென்பது இன்னுமொருமுறை தமது குடியுரிமையை இழப்பதற்கு சமனாகும். இலங்கை சுதந்திரமடைந்து சூடு தணியும் முன்பதாகவே மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறித்ததற்கும் அவர்களது 75 வருட அகிம்சை போராட்டத்தின் விளைவாக உருப்பெற்ற மலையக அதிகார சபையைக் கலைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

எனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மலையகத் தமிழ் மக்கள் குறித்து நேர்மையான அக்கறையைக் கொண்டிருந்தால், பின்வரும் நிலைப்பாட்டை எடுத்தல் உடனடித் தேவையாக உள்ளது.

- பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையானது (மலையக அதிகார சபை) கலைக்கப்படும் அரச நிறுவனங்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும்.
- அத்தகைய நீக்கத்திற்கான தீர்மானத்தினை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.
- பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையை (NEVIDA) மறுசீரமைப்பின் பேரில் அதிகாரக் குறைப்பு செய்தல் கூடாது.
- அதிகார சபையைத் தொடர்ந்து உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் எதிர் வரும் 2026 ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்வதுடன், அதனூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும்.



thilagar@thaiveedu.com

மூதூர் சேனையூரின்

# குடும்ப வேள்விச் சடங்கான மாரியம்மன் கரையல்

நாகராசா லக்சிகா



மாரியம்மன் கரையல் வேள்வி என்பது எமது சேனையூர் கிராமத்தில் வாழும் மக்களின் பிரதானமான குடும்ப வேள்விச் சடங்குகளில் ஒன்றாகும். குறிப்பாக சொன்னால் வீடுகளில் செய்யப்படும் முக்கியமானதொரு வேள்விச்சடங்கு ஆகும். இந்த மாரியம்மன் சடங்கானது அம்மை நோய், கண்நோய், வெக்கை நோய் போன்ற நோய்களிலிருந்தும் பூத, பிரேத, பிசாசு, பில்லி, சூனியம், வஞ்சனை, ஏவல் போன்ற மாந்திரீக துர்கருமங்களில் இருந்து தம்மைப் பாதுகாப்பதாக நம்பப்படும் மாரியம்மனை வேண்டி செய்யப்படுகின்ற பத்ததி முறையிலான சடங்கு ஆகும்.

இச்சடங்கானது இக்கிராமங்களில் உள்ள பல வீடுகளில் காலங் காலமாக நம்பிக்கையுடன் செய்யப்பட்டு வரும் வேள்விச் சடங்காகும். மேலும் இச்சடங்கினை சிலர் ஒவ்வொரு வருடமும் சிலர் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் என்ற ஒரு ஒழுங்கு விதிமுறையைத் தாமாகவே வகுத்து செய்து வருகின்றனர்.

நம்பிக்கை என்பதை முன்னிலைப்படுத்தி இச்சடங்கினை முறைப்படி செய்தால் வீட்டில் உள்ள தீய விடயங்கள் எல்லாம் நீங்கி வீட்டில் ஒரு புது வெளிச்சம் தோன்றும் என்ற ஒரு நம்பிக்கையிலேயே இந்த சடங்கு செய்யப்படுகின்றது.

இச்சடங்கானது குறிப்பாக செவ்வாய்க்கிழமை மாலைப்பொழுதில் ஆரம்பிக்கப்பட்டு புதன்கிழமை காலைப் பொழுதில் பூசைகளுடன் முடிவடையும். அல்லது வெள்ளிக்கிழமை மாலைப் பொழுதில் ஆரம்பிக்கப்பட்டு சனிக்கிழமை காலைப் பொழுதில் பூசை நிகழ்வுகளுடன் முடிவடையும். இது பெரும்பாலும் மாரியம்மன் குளிர்த்திச் சடங்கு என பேர் பெறுகின்றது. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி போன்ற மாதங்களில் சேனையூர் கிராம மக்களின் இல்லங்களில் இச்சடங்கு செய்யப்படுவதை பரவலாகக் காணலாம்.

மாரியம்மன் குளிர்த்திச் சடங்கானது எமது சேனையூர் கிராமத்தில் இரண்டு வகையான பத்ததி முறைகளில் செய்யப்படுவதைக் காணலாம். அவை:

- பாலாவி முறை
- வாலை, புவனை, திரிபுரை முறை

### பாலாவி முறை:

பாலாவி முறை என்பது மாரியம்மனுக்கு மட்டும் கும்பம் வைத்து செய்யப்படும் முறை ஆகும்.

### வாலை, புவனை, திரிபுரை முறை:

இந்த முறையானது மூன்று கும்பங்கள் வைத்து வாலையாக மாரியம்மனையும், புவனையாக புவனேஸ்வரியையும், திரிபுரையாக வராகியையும் மந்திர உச்சாடனங்களால் ஸ்தாபித்து செய்யப்படும் ஒரு முறையாகும். இச்சடங்கானது ஒரு முறையான படிநிலை ஒழுங்கில் செய்யப்படுகின்றது.

- மடிப்பிச்சை எடுத்தலும், ஊருக்கு சொல்லலும்
- அம்மன் முகம் மற்றும் ஐந்திரத் தகடுகளுக்கான அபிஷேகம் செய்தல்
- அம்மன் முகங்களுக்கான அலங்கார ஒப்பனை.
- கும்பம் வைத்தல்
- மடை வைத்தல்
- அவிபாக வேலை தொடக்கம்
- கன்னிமார் பூசை
- துள்ளுமா இடித்தல்
- படையல்
- பூசை
- தட்டம் பெலி கொடுத்தல்
- கன்னிமார் உபசாரமும் வெளியேற்றமும்
- குளிர்த்தி பாடுதல்
- பூசை நிறைவு
- பக்தர்களுக்கான உபசாரம் (கரையல் கொடுத்தல்)
- கும்பம் சொரிதல்

## மடிப்பிச்சை எடுத்தலும் ஊருக்கு சொல்லுதலும்:

மாரியம்மன் குளிர்த்திச் சடங்கு செய்யும் வீட்டுக்காரர்கள் மாரியம்மன் பூசை நடைபெறும் தினத்திற்கு ஒரு வாரத் திற்கு முதலே மது, மாமிச போஜனங்களைத் தவிர்த்து வீட்டை சுத்தப்படுத்துவர்.

சடங்கு செய்வதற்கு ஒரு நாள் முன்பு சடங்கு செய்யும் குடும்பத்தின் வீட்டு உரிமைப் பெண் வீடு வீடாகச் சென்று மடிப்பிச்சை எடுப்பார். மடிப்பிச்சை எடுக்கும் வீடுகளில் பூப்படையாத கன்னிப்பெண் பிள்ளைகள் இருப்பின் அவர்களை கன்னிமாருக்கு அழைத்து வரும்படி கூறிச் செல்வார். ஏழு கன்னிப் பெண்களும் காத்தவராயனுக்காக ஓர் ஆண் பிள்ளையும் அழைக்கப்படுவர். அதனோடு சேர்த்து உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் போன்ற வர்களையும் தமது சடங்கு வழிபாட்டில் வந்து கலந்து கொள்ளும்படி கூறுவார்.

மடிப்பிச்சை எடுக்கும் பெண்கள் மஞ்சள் அல்லது செம் மஞ்சள் சீலை அணிந்து காலில் பாதணிகள் இல்லாமல் நடந்து சென்று தனது முந்தானை சீலையை இரண்டு கைகளிலும் ஏந்தி கைகளை நீட்டிக்கொண்டு மடிப்பிச்சை எடுத்து வருவதாக ஒவ்வொரு வீட்டிலும் கூறுவார். வீட்டுக் காரர்கள் அரிசி, சில்லறைக்காசு போன்றவற்றை மடிப்பிச் சையாக இடுவர். இவ்வாறு ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று மடிப்பிச்சை எடுத்து வரும் அரிசியில் இருந்தே அம் மனுக்கு படைக்கப்படும் அமுது சமைக்கப்படும்.

## அம்மன் முகம் மற்றும் ஐந்திரத்தகடுகளுக்கான அபிஷேகம் செய்தல்:

பூசை நடக்கும் நாள் அன்று மாலைப்பொழுதில் பூசையின் முதற்கட்டமான அம்மன் முகங்கள் மற்றும் ஐந்திரத்தகடுகள், அம்மனின் ஆயுதங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றவற் றிற்கு அபிஷேகம் செய்யப்படும்.

அபிஷேகப் பொருட்கள் ஒரு ஒழுங்கு முறையில் ஒன் றன்பின் ஒன்றாக செய்த பின்னர் தூப தீபம் காட்டி மீண்டும் நீரால் கழுவப்படும். அதே ஒழுங்கு முறையில் அமைந்த அபிஷேகப் பொருட்களாவன நீர், அபிஷேகக்கூடு, பால், தயிர், பஞ்சாமிர்தம், கரும்பு, இளநீர், திருநீறு, சந்தனம், குங்குமம், வாசனைத் திரவியங்கள், (ஜவ்வாது, அத்தர்) போன்றவற்றால் அபிஷேகம் செய்யப்பட்டு இறுதியில் பன்னீரால் அபிஷேகம் செய்யப்படும். பன்னீரால் அபிஷேகம் செய்த பின்னர் நீரால் கழுவாமலேயே தூப தீபம் காட்டி அபிஷேகம் நிறைவு பெறும்.

## அம்மன் முகங்களுக்கான அலங்கார ஒப்பனை:

பாலாவி முறையில் செய்யப்படும் சடங்கில் மாரியம் மனுக்கு ஒரு கும்பம் வைத்து செய்யப்படுகின்றது. அதில் மாரியம்மனின் முகம் இரண்டு பக்கங்களும் தீச்சுடர் இருக் கும்படியாக அமைந்திருக்கும். அம்மனின் முகத்தில் மகுடம், இளம்பிறை, ஆபரணங்கள், காதுகளில் தோடுகள் என்பன காணப்படும். இந்த முகத்தில் ஆபரணம் மற்றும் மகுடத் திற்கு அதற்குரிய நிறங்கள் கொடுக்கப்பட்டு கண்மை, உதட்டுச் சாயம், பிறை போல் வளைந்த புருவங்கள், சந்தனம் திருநீறு, குங்குமம் போன்றன இடப்பட்டு முகம் அலங்கரிக்கப்படும்.

அதேபோல் வாலை, புவனை, திரிபுரை முறையில் அம் மனுக்கு மூன்று கும்பங்கள் வைக்கப்படும். மூன்று கும்பங் களிலும் மாரியம்மன், புவனேஸ்வரி, வராகி போன்ற தெய் வங்களின் முகங்கள் நிறுத்தப்படும்.

வாலை அலங்கரிப்பாக மேற்கூறிய மாரியம்மன் அலங்க ரிப்பு இடம்பெறும். புவனேஸ்வரியின் முக ஒப்பனையாக மகுட முடியின் உச்சியில் இளம்பிறை காணப்படும். இம் முகத்திற்கும் இளம்பிறை, மகுடம், ஆபரணங்கள் என்பவற் றிற்கும் அதற்குரிய நிறங்கள் கொடுக்கப்படும். மேலும் சாந்த சொரூபமாக அமையும் வகையில் கண்மை, உதட்டுச் சாயம், வளைந்த புருவங்கள் என்பன அம் மனுக்கு ஒப்பனையாக இடம்பெறும்.

அடுத்து திரிபுரையாக வராகியின் முகத்திற்கு மகுடம், அணிகலன்கள், முடி என்பவற்றிற்கு அதற்குரிய நிறங்கள் கொடுக்கப்பட்டு சற்று அகோரமான நிலையைக் காட்டக் கூடிய வகையில் கண்மை, உதட்டுச் சாயம், வளைந்த புரு வங்கள் என்பன ஒப்பனை செய்யப்படும்.

மேலும் வாயின் இரண்டு பக்கங்களிலும் நீட்டப்பட்ட கோரைப்பற்கள், வெளியே நீட்டப்பட்ட நாக்கு போன்றன காணப்படும். நாக்கிற்கு சிவப்பு வர்ணமும், கோரைப் பற்க ளுக்கு வெள்ளை நிறமும் கொடுக்கப்படும்.

இங்கு மாரியம்மன் சாந்தமான குணவியல்பையும், புவனேஸ்வரி சாந்தமான குணவியல்வையும், வராகி அகோரமான குணவியல்பையும் வெளிப்படுத்தும் வகை யில் ஒவ்வொரு முகமும் ஒப்பனை செய்யப்படுகின்றது.

## கும்பம் வைத்தல்:

மாரியம்மன் குளிர்த்திச் சடங்கின் முக்கிய பகுதி கும்பம் வைத்தல் ஆகும். கும்பம் வைத்தலில் முதலில் விளக்கு வைக்கப்பட்டு விளக்கிற்கு மடை, விநாயகர் மடை, குரு மடை என்ற மூன்று மடைகளும் வைத்த பின்னரே கும்பம் வைக்கும் ஆயத்த வேலைகள் இடம்பெறும்.

பின்னர் கும்பம் வைக்க வேண்டிய இடத்தில் அரிசியை குவியலாக இட்டு அதனைச் சுற்றி வெற்றிலைகள் அடுக்கப்பட்டு கும்பம் வைக்கப்படும் பீடம் அமைக்கப்படும். அப்பீடத்திற்கு பூசகரால் பிராண பிரதிஸ்டை மந்திரம், பிரணவம் போன்றவற்றால் உருக் கொடுக்கப்படும். அடுத்த கட்டமாக கும்பம் வைக்கும் தேங்காயின் முடி கண்கள் தெரியாத வகையில் சீவப்பட்டு அதில் ஒப்பனை செய்யப்பட்ட அம்மனின் முகம் கட்டப்படும்.

பின்னர் கும்பம் வைக்கும் தகட்டிற்கு ஐந்திர சாப நிவர்த்தி செய்து பிரணவ மந்திரத்தால் உருக் கொடுக்கப்படும். பின்னர் கும்பத்தில் வைக்கப்பட்டிருக்கும் முகத்திற்குரிய தெய்வத்திற்கே உரித்தான மந்திரங்களால் உருவேற்றி தகடு பீடத்தில் வைக்கப்படும். பின்னர் கும்ப நூலால் சுற்றப்பட்ட குடத்திற்குள் நீர், வெற்றிலை, பாக்கு, பழம், சில்லறை காசு, அத்தர், ஜவ்வாது, புனுகு, கோரோசனை, குங்குமப்பூ, கும்பத் திரவியம் என்பன இடப்பட்ட பின்னர் கும்பத்தின் வாய்ப்பகுதியில் பிடியாகப் பிடிக்கப்பட்ட வேப்பங்குழை சொருகப்படும். குழையின் நடுப்பகுதியான குடத்தின் வாய்ப்பகுதியில் தேங்காய் அமரும் வகையில் அம்மனின் முகம் கட்டப்பட்ட தேங்காய் வைக்கப்படும்.

பட்டு, மலர் மாலைகள் சாத்தப்பட்டு கும்பம் அலங்கரிக்கப்படும். பின்னர் கும்பமானது மந்திர உச்சாடணங்கள் மூலம் உரு ஏற்றப்பட்டு முன்னரே தயாரிக்கப்பட்டு உருக் கொடுக்கப்பட்ட பீடத்தில் தூக்கி வைக்கப்படும்.

## மடை வைத்தல்:

கும்பம் வைக்கப்பட்ட பின்னர் கும்பத்தின் முன்னால் குத்துமடை என்று கூறப்படும் சிறிய மடை வைக்கப்படும். பின் குத்துமடைக்கு மேலாக வெற்றிலை, பாக்கு, பழம் போன்றவற்றைப் பரவி மடை வைக்கப்படும்.

முக்கியமாக அம்மனுக்கு உரித்தான காப்பு, சீப்பு, கண்ணாடி, காதோலை, கரிசமணி, மை, மணம் என்பனவும் மடையில் வைக்கப்படும்.

கும்பத்திற்கான மடை வைத்த பின்னர் ஏனைய பரிவாரத் தெய்வங்களுக்கான மடை வைக்கப்படும். இதில் வீரபத்திரன், நாராயணர், பேச்சி அம்மன், காளி, ஆஞ்சநேயர் போன்ற தேவாதிகள் ஏனைய பரிவாரத் தெய்வங்களுக்குள் அடங்கும்.

## அவிபாக வேலைகள் ஆரம்பம்:

பத்ததி முறையில் நடைபெறும் சடங்குகளில் பொதுவாக எந்த ஒரு வேள்விச் சடங்காக இருந்தாலும் படையல்களுக்கான பொருட்கள் அனைத்தும் (மோதகம், பொங்கல், அமுது, அரியதரம், வடை...) கும்பம் வைத்து மடை பரவியதன் பின்னரே ஆரம்பிக்கப்படுவது காலங் காலமாகப் பேணப்பட்டு வரும் மரபு ஆகும்.

அதாவது மாரியம்மன் பத்ததி முறையிலான குளித்திச் சடங்கில் கும்பம் வைத்து மடை பரவியதன் பின்னர் காட்டப்படும் தூப தீபத்தைத் தொடர்ந்தே அவிபாக வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. மாரியம்மன் குளித்திச் சடங்கில் செய்யப்படும் அவி பாகங்களாக மோதகம், வடை, சிலுகு, அரியதரம், முறுக்கு போன்றன காணப்படுகின்றன.

மேலும் படையல் மற்றும் பக்தர்களுக்கு கரையல் வழங்கும் அமுதும் கும்பம் வைத்து மடை பரவிய பின்னரே சமைக்கப்படுகின்றது. பின் சமைக்கப்பட்ட அமுதானது ஆறவிடப்பட்ட பின்னர் அதன் சூடு இல்லாமல் போனதும் அதனுள் நீரூற்றப்படும். குறிப்பாக அம்மனுக்கு படைக்கப்படும் தயிர் மாத்திரம் தயிர் உறைவதற்கான நேரத்தைக் கருத்திற் கொண்டு மடை வைப்பதற்கு முன்னர் பால் காய்ச்சப்பட்டு உறைய விடப்படுகின்றது. இருப்பினும் பால் காய்ச்ச ஆரம்பிக்கும் முன்னர் மாரியம்மனை நன்றாக மன்றாடி அடுப்பிற்கு கற்பூரம் கொளுத்தப்பட்ட பின்னரே பால் காய்ச்சப்படும்.

## கன்னிமார் பூசை:

மாரியம்மன் குளித்திச் சடங்கின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட மாலை வேளை தொடக்கம் கும்பம் வைத்த பின்னர் செய்யப்படும் அவிபாக வேலைகள் அனைத்தும் முடிவடைய விடியற்காலை ஆகிவிடும். இதன் பின்னர் கன்னிமாருக்கு அழைக்கப்பட்ட பெண் பிள்ளைகளை அழைத்து வெள்ளை விரித்து அவர்களை இருப்பாட்டி அவர்களுக்கான உபசாரங்கள் தொடங்கும்.

அவர்கள் ஒவ்வொருத்தருக்கும் குளிர்த்திச் சடங்கினை செய்யும் வீட்டுக்காரரர்களால் பாத பூசை செய்யப்படும். பின்னர் அவர்களுக்கு பட்டு, வேப்பம் பத்திரம் சாத்தி அவர்களை வெள்ளையில் இருப்பாட்டுவர். இவர்களைத் தொடர்ந்து காத்தானுக்கு அழைக்கப்பட்ட சிறுவனும் இதே போன்று உபசாரங்களுடன் அமர்த்தப்படுவார்.

## துள்ளுமா இடித்தல்:

கன்னிமார் இருப்பாட்டப்பட்டதன் பின்னர் துள்ளுமா இடிக்கும் நிகழ்வு இடம்பெறும். இதற்கு துள்ளுமா இடிக்கும் உரல் உலக்கை தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். அதாவது வெள்ளை விரித்து அதன் மேல் மஞ்சள் கலந்த நீரால் கழுவப்பட்ட உரல் உலக்கை வைக்கப்படும். உரலைச் சுற்றி வேப்பங்குழை கட்டப்பட்டிருக்கும் அந்த உரலின் நான்கு திசையிலும் சிறுமடை வைக்கப்படும். அதேபோன்று துள்ளுமா இடிக்கும் உலக்கைகளின் நடுவில் வேப்பங்குழை கட்டப்பட்டு இருக்கும். இதற்கு இரண்டு உலக்கைகள் பயன்படுத்தப்படும்.

உரல், உலக்கை தயார் செய்யப்பட்டதன் பின்னர் இரண்டு, இரண்டு கன்னி மாறாக துள்ளுமா இடிப்பதற்காக விடப்படுவர்.

இதற்கு ஊறவைத்த பச்சை அரிசி வைக்கப்பட்டு இருக்கும். அதனோடு சக்கரையும் போடப்படும். அரிசியும் சக்கரையும் இடிபடும்போது உலக்கையில் கட்டப்பட்டி ருக்கும் வேப்பங்குழை உருவி உரலுக்குள் இடப்படும். இது மூன்றும் நன்றாக இடிபட்ட கலவையே துள்ளுமா என அழைக்கப்படுகின்றது. இது மாரியம்மன் குளித்திச் சடங் கின் முக்கியமான ஒரு பாகமாகக் கருதப்படுகின்றது.

## படையல்:

துள்ளுமா இடித்து முடிந்த பின்னர் படையல் படைக்கப் படும். படையலானது மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது என்ற எண்ணிக்கை அமைப்பில் காணப்பட வேண்டும். படையலுக்காக தாமரை இலை பரவப்படும். பின்னர் அம் மனுக்காக சமைக்கப்பட்ட அமுது படையலாக இடப்படும். அதாவது நீரூற்றப்பட்ட அமுதானது கைகளால் புளிந்து எடுக்கப்பட்டு படைக்கப்படும். படைக்கப்பட்ட அமுதின்மேல் தயிர் வைக்கப்படும். மேலும் படையலைச் சுற்றி பலகாரங்கள், மோதகம், முறுக்கு, வாழைப்பழம் என்பன படைக்கப்படும். படையலின் ஓரத்தில் துள்ளுமா வைக்கப்பட்டிருக்கும். படையலோடு சேர்த்து மண்சட் டியில் பாணக்கம் வைக்கப்படும்.

படையலுடன் மாம்பழம், அன்னாசிப்பழம், கொய்யாப்பழம், வத்தகப் பழம் போன்ற பழங்களும் வைக்கப்படும். குறிப்பாக அனுமானுக்கு வைக்கப்படும் இளநீர், பழங்கள் வெட்டாமல் வைக்கப்படும். ஏனைய தெய்வங்களுக்கு வைக்கப்படும் இளநீர் முடி சீவி வெட்டி வைக்கப்படும். அதேபோன்று ஏனைய தெய்வங்களுக்கு வைக்கப்படும் பழங்களும் வெட்டி வைக்கப்படும்.



## பூசை:

படையல் படைத்து முடிந்ததும் பூசைகள் ஆரம்பமாகும். பூசையின் தொடக்கமாக விநாயகருக்கு தேங்காய் உடைப் பதுடன் பூசைகள் தொடங்கும். தேங்காய் உடைத்ததன் பின் விநாயகருக்கான தோத்திரங்கள் பாடி அம்மனுக்கான அகவல், காவியம், தாலாட்டு, காவடிச்சிந்து என்பன பாடப் படும். இவ்வாறு பாடப்படும் வேளையில் பூசகர்கள் மந்திர உச்சாடனங்கள் மூலம் சாமியாடிகளை அழைத்து சாமி யாட்டுவர். இவ்வாறு தெய்வங்கள் ஆடத் தொடங்கியதன் பின்னர் ஒவ்வொரு தேவாதியாக வந்து பூசைகளை எடுத்துச் செல்வர். எமது பகுதியில் தெய்வம் ஆடுப வர்களை பூமரம் என்று அழைக்கும் மரபு காணப்படு கின்றது. இவ்வாறு ஆடிவரும் தேவாதி வந்து தனக்கான ஆசனம் அமைத்துத் தர ஆணையிடும். அதற்கு பூசகர் வெள்ளை விரித்து ஆடிவரும் தேவாதிக்குரிய ஐந்திரம் கீறி அதற்குரிய ஆசன மந்திரம் கூறும்போது அந்த தேவாதி அந்த ஆசனத்தின் மேல் அமரும். தேவாதி ஆசனத்தில் அமர்ந்த பின் பூசகர் அந்த தேவாதிக்குரிய பூசை கொடுப்பார். ஆடும் தெய்வம் ஆண் தெய்வம் எனில் மஞ்சள் பூச மாட்டார்கள். பெண் தெய்வங்களுக்கு கையில் மஞ்சள் கொடுத்து பன்னீரும் விட்டுவிடுவர். அதை அந்த தேவாதி உடல் முழுவதும் பூசிக்கொள்ளும். பின்னர் பூசகர் நீரால் கழுவி விட திருநீறு, சந்தனம், குங்குமம் இட்டு பெண் தெய்வம் எனில் கைகளில் வேப்பங்குழை கொடுப்பர். மேலும் தேவாதிகளின் கைகளில் சிலம்பு போட்டு விடப்படும்.

பின்னர் ஒவ்வொரு தேவாதியிடமும் உருவேறிய தெய்வங்க ளுக்கு உரிய ஆயுதங்களும் கொடுக்கப்படும். பின்னர் பூசை பெற்றுக்கொண்ட தேவாதி, பக்தர்களுக்கு கட்டுச் சொல்லுவர். பக்தர்களை அழைத்து அவர்களின் கஷ்டங்க ளையும், கஷ்டங்களுக்கான காரணங்களையும், அவற் றுக்கான தீர்வையும் கூறுவர். இடையிடையே பூசகர்க ளாலும் பக்தர்களாலும் பாடப்படும் உருவேறி ஆடும் தெய் வத்திற்கு உரித்தான பாடல்கள் (அகவல், காவியம், தாலாட்டு, காவடிச்சிந்து) பறை, உடுக்கு, சல்லரி, தாளம் போன்ற இசைகளுடன் பாடப்பட தேவாதிகள் தமது உடலை பலவாறு அசைத்து ஆடுவர்.

## தட்டம் பெலி கொடுத்தல்:

மடை வைக்கும்போது ஒவ்வொரு தெய்வத்தின் மடைக்கும் முன்னால் அந்த அந்த தெய்வத்திற்கு உரிய பெலி மந்தி ரத்தால் தட்டத்தில் வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து தட்டம் வைக்கப்பட்டு இருக்கும். பூசையின் இறுதியில் எந்தத் தட்டத்தை தூக்கி பெலி மந்திரத்தைக் கூறுகின் றார்களோ அதற்குரிய தெய்வம் அந்தத் தட்டத்தில் இருக்கும் தனது பெலியை எடுத்துக் கொள்ளும். இதுவே தட்டம் பெலி கொடுத்தல் எனப்படுகின்றது.

## கன்னிமார் உபசாரமும் வெளியேற்றமும்:

தட்டம் பெலி கொடுத்ததன் பின்னர் பூசையானது இறுதிக் கட்டத்தை நெருங்கும். கன்னிமாரை வெள்ளை விரித்து அதில் அமரச் செய்து அதில் ஒவ்வொருவருக்கும் தாமரை இலை போடப்பட்டு அதில் அமுது, தயிர், பலகாரம், மோதகம், பழங்கள் என்பன வைக்கப்படும். இதனோடு துள்ளுமாவும் வைக்கப்படும் பின்னர் அவர்கள் உணவ ருந்த விடப்படுவர். அவர்கள் உணவருந்திய பின்னர் அவர் களிடம் திருப்தியாக உண்டீர்களா என பூசகர் கேட்பார் ஆம் என அனைவரும் கூறியவுடன் அவர்களிடம் நீங்கள் இனிமேல் இங்கு வரக்கூடாது எனக் கூறி பூசகர் தீர்த்த சட்டி நீர் எறிந்து அவர்களை விரட்டி விடுவார்.

## குளிர்த்தி பாடுதல்:

குளிர்த்தி பாடும் இடம் தயார் செய்யப்பட்ட பின்னர் அதாவது மண்பானை ஒன்றிற்கு கும்ப நூல் சுற்றி வைக்கப் பட்டிருக்கும். அதற்குள் நீரூற்றி வைக்கப்படும். இதன் போது குளிர்த்தி பாடும் பூசகரை சுற்றி உடுக்கு அடிப் பவர், சல்லரி அடிப்பவர், பிற்பாட்டு பாடுபவர்கள் என பலர் குளிர்த்திப் பானையை சூழ நிற்பர்.

குளிர்த்தி பாட ஆரம்பித்ததும் பக்தர்கள் ஒவ்வொருத் தராக குளிர்த்தி பாடும் இடத்திற்கு வருகை தந்து சில்லறைக் காசுகளை பானைக்குள் காணிக்கையாக இடுவர். பூசகர் பானைக்குள் இருக்கும் நீரை வேப்பங்கு ழையால் எடுத்து பக்தர்களுக்கு தெளிப்பார்.

## பூசை நிறைவு:

குளிர்த்தி பாடி முடிந்ததும் கடவுள் வாழ்த்து பெரியபு ராணம் பாடி பூசை நிறைவு பெறும். இதன் பின்னர் குத்துமடை மட்டும் வைக்கப்பட்டு இருக்கும். மீதமான மடைகள் பிரிக்கப்படும்.

## பக்தர்களுக்கான உபசாரம்:

சீலை விரித்து அதில் பூசைக்காக வருகை தந்த பக் தர்களை அமர வைத்து தாமரை இலை கொடுத்து அதில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்ட அமுதினை கைகளால் பிழிந்து தாமரை இலையில் வைப்பர். அதன் மேல் தயிர், வாழைப்பழம், சிலுகு, மோதகம், அரியதரம் துள்ளுமா என்பன வைக்கப்பட்டு உபசரிக்கப்படும்.

## கும்பம் சொரிதல்:

பூசை நிறைவடைந்த அன்று மாலை கும்பங்கள் பூசகரால் வீட்டின் கிணறு அல்லது கால் படாத இடங்களில் சொரியப் படும்.



laksika.nakarasa@thaiveedu.com

## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

## 11



tg.theeban@gmail.com

மதனுக்கும் ரதிக்கும் இடையில் இடம்பெற்ற நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களின் பின் மதன் பயணிக்கத் தொடங்குகிறான். மதனின் பயணப் பாதையில் பல்வேறு நபர்களை எதிர்கொள்கிறான். இவர்கள் புராண, இதிகாச கதைகளோடும், வழிபாட்டு மரபோடும் தொடர்புபட்டவர்கள். ரதி மதனுடனான வாதங்களுக்கு அமைவான ஆட்டங்களுக்கு இடையேயும் இப்பாத்திரங்களைக் காட்சிப்படுத்துவதுண்டு. தொடர்ந்து பாடல்களுக்கு ஏற்ற ஆட்டங்களில் ஈடுபடும் மதன் - ரதி பாத்திரங்களுக்கு அவ்வப்போது ஓய்வை வழங்கும் நுட்பமாகவும் இது அமைகிறது. மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது வழிபாட்டுடனும் வழிபாட்டு மரபுடனும் தொடர்புபட்டவைகளாக இப்பாத்திரங்கள் காணப்படுகின்றன.

மலையக மக்கள் இலங்கைக்கான புலம்பெயர்விலும் சரி, புலம்பெயர்விற்கு முன்னரும் சரி பெண்தெய்வ வழிபாட்டு மரபில் அதீத ஈடுபாட்டை கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். அதன் விளைவாகவே இலங்கையில் அம்மன் வழிபாடு பிரசித்தம் பெற்றுள்ளமை கவனத்திற்குரியதாகும். அதிகார வர்க்கத்தினர் ஒடுக்கப்பட்டவர்கள் மீது வன்மத்தைப் பிரயோகித்து வந்துள்ளனர். ஒடுக்கப்பட்ட பெண்கள் பாலியல் பலிப்பொருட்களாகப் பிரயோகிக்கப்பட்ட வரலாற்றைத் தமிழர் சமூகமும் கொண்டுள்ளது. இவ்வாறு பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து விலகிக்கொள்வதற்குப் பின்வரும் அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. பாதிப்பை எதிர்நோக்கும் பெண்களை அவ்வூரிலிருந்து தப்பிச்செல்ல வழிசமைத்துக் கொடுத்தல், கொலை செய்து விடுதல், தற்கொலைக்குத் தூண்டுதல் போன்ற அணுகுமுறைகளாக அவை அமைந்தன. தப்பிச் செல்லும் பெண்கள் அதிகார வர்க்கத்தின் பிடியில் அகப்பட்டு பாதிப்புக்குள்ளாகி கொலை செய்யப்படும் நிலையே பெரும்பாலும் நிலவியது. எது எவ்வாறாக இருப்பினும் பெண்களில் இருந்து அவர்களின் உயிர்களைப் பிரித்து மரணிக்கச் செய்த சம்பவங்களே இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் தற்கொலை அல்லது கொலையின் ஊடாகவே தங்களின் குலப் பெருமையும் குடும்ப கௌரவமும் காப்பாற்றப்பட்டதாக உணர்கிறார்கள். மரணமடைந்த பெண்களின் நினைவாக நடுகல் அமைத்து வழிபட்டதன் தொடர்ச்சி நிலையிலேயே அம்மன் வழிபாட்டின் முக்கியத்துவம் வளர்ந்து வந்துள்ளது. அம்மன் வழிபாடு சமூகத்தில் நிலவிய, நிலவும் சாதிய வேறுபாடுகளை களையச் செய்யும் அணுகுமுறையாகவும் போதிக்கப்படுகிறது. மாறாக இவ்வழிபாட்டு முறையின் ஊடாக சாதியக் கட்டமைப்புக்கள் வளர்க்கப்படுகின்றமையும் அவதானத்திற்குரியதாகும். கிராமிய வழிபாட்டிற்குரிய அம்சத்துடனேயே அம்மன் ஆராதிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ஆகம முறையான வழிபாட்டில் அம்மன் வழிபடுகின்றமையும் கவனத்திற்குரியதாகும். அம்மன் வழிபாடு மலையக மக்களோடு வேறுபடுத்த முடியாத நிலைபெற்றுள்ளதையும் அறியலாம். காமன் கூத்தில் அம்மன், ஆதிபராசக்தி, ஈஸ்வரி ஆகிய பாத்திரங்களும் வந்து போகின்றமை தவிர்க்க முடியாததாக அமையப்பெறும்.

அம்மன் வழிபாட்டில் தீ மிதித்தல், அக்கினி சட்டி ஏந்தும் நடைமுறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு சபைக்கு அம்மனின் வருகை சபையோரால் மிகுந்த எதிர்பார்ப்பிற்குரியதாக அமையப்பெறும். அம்மன் துதிப்பாடல்களைக் காமன் மாஸ்டர் இசைப்பதையும் குலவைப் பாடல்களைச் சபையிலுள்ள பெண்கள் பாடிய நிலையில் குலவை சத்தங்கள் கோரசாக இசைக்கப்படுவதையும் அவதானிக்கலாம். வெள்ளை அல்லது மஞ்சள் நிற உடையுடன் பவனி வரும் அம்மன் பாத்திரம் அக்கினிச் சட்டியை கையில் ஏந்தியவாறு வருவதைக் காணலாம். இந்நிலையில் பலருக்கு மருள் வருவதுண்டு. அம்மனின் சக்தி தங்களில் வெளிப்படுவதான பிரமிப்பு நிலையில் அவர்களது நடத்தை மாற்றங்கள் உளவியல் ரீதியான அவதானத்தையும் பெற்றதாகவும் அமையப்பெறும். இவ்வாறு அம்மன் பாத்திரத்தின் வருகையின் போது

அம்மன் பாத்திரத்தை வரவேற்கும் முகமாக அக்கினிச் சட்டியை ஏந்திய வண்ணம் ஆட்டத்தில் ஈடுபடுவார்கள். அம் மனுக்கு நேர்த்திக்கடன் வைத்து அவ்வாறு வேண்டுதல் நிறை வேறியதற்கு அமைய தனது கடனை நிறைவேற்றுவதாக இச் செயற்பாடுகள் அமையப்பெறும். குலவைப் பாடல்களுக்கு ஏற் றவகையில் ஆங்காங்கே ஆடல்கள் இடம்பெறும். அம்மனுக்கு குலவைப்பாடல் மிகவும் பிடித்தமானது, என்ற நம்பிக்கை மலையக மக்களிடத்தே நிலவு கிறது.

*'பவளத்தேர் ஓடையில எங்க முத்துமாரி*
*பக்தியுடன் கொண்டாடுவோம் எங்க முத்துமாரி*
*வெந்த மாவைத் தின்றாலும் எங்க முத்துமாரி*
*விரதங் கலையுதென்று எங்க முத்துமாரி*
*பச்சைமாவை தின்று நாங்கள் எங்க முத்துமாரி...'*

என்றவாறு பாடல் தொடரும். மாரியம்மன் வழிபாட்டில மாவிளக்கு பூசை முக்கியத்துவம் பெறுவதாக அமையப்பெறு கிறது. அம்மன் திருவிழாவின்போது மாத்திரமே மாவிளக்கு செய்து பூஜிக்கும் வழக்கம் நிலவுகிறது. அவ்வாறு மாவிளக்கு செய்து வழிபடும் வழக்கும் காமன் கூத்தின் தாலி கட்டும் சந் தர்ப்பத்தில் இடம்பெறுவதுண்டு. அதை தவிர்த்து அம்மன் பாத்திரத்தின் போது அம்மன் பாத்திரத்தை ஏற்பவரின் குடும் பத்தைச் சார்ந்தவர்கள் மாவிளக்குடன் பூசைத்தட்டை ஏந்தி வருவார்கள். நேர்த்திக்கடனுடன் தொடர்புபட்டவர்களும் இவ் வாறு பூசைத்தட்டுகளுடன் வருகைத் தருவதுமுண்டு. காமன் பொட்டலில் பூசை நிறைவடைந்த நிலையில் அம்மன் பாத் திரம் ஒப்பனை செய்த இடம் நோக்கி மீள திரும்புவதுண்டு.

அம்மனுடைய உக்கிர பண்புகள் நிறைந்தவொரு சக்தியாக ஆதி பராசக்தியைக் கொள்வர். மென்மையான தன்மைக் குரிய சக்தியாக அம்மனை ஆராதிப்பவர்கள் கடினமான போக்குடைய சக்தியாக ஆதி பராசக்தியைக் கொள்வர். தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் வல்லமை பொருந்தியவ ளாகவே ஆதிபராசக்தியை நோக்குவர். மதனின் பயணத் திற்கு ஆசி வழங்கும் பொருட்டே ஆதிபராசக்தியை அழைத்து வருவார்கள். ஓரளவு அகங்கார முகத்துடன் பயத்தை தோற்று விக்கும் வகையிலான உருவத்துடனேயே ஆதிபராசக்தியின் உருவம் வடிவமைக்கப்பட்டிருக்கும். மஞ்சளின் நோய் எதிர்ப்பு சக்தியின் உன்னதத்தை உணர்ந்தவர்களாக மலையக மக் களும் திகழ்கிறார்கள். தினசரி பயன்பாட்டிலும் மஞ்சளைப் பிரயோகிப்பர். மஞ்சளின் மகிமையை உணர்த்தும் அடையாள மாகவும் போர்க்குணத்தை கொண்ட அவதாரமாகவும் ஆதிப ராசக்தி விளங்குகிறாள். ஆதிபராசக்தியை ஆராதிக்கும் பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் எடுத்துக்காட்டாகப் பின் வரும் பாடலை நோக்கலாம்.

*'மஞ்சளிலே தலை முழுகி ஆதிபராசக்தி*
*அழகில் சிறந்தவளாம் ஆதி பராசக்தி*
*கொஞ்சி விளையாடி வாரா ஆதிபராசக்தி*
*வெள்ளிக் கிழமைகளில் ஆதிபராசக்தி*
*வீதி விளையாடி வாறாள் ஆதிபராசக்தி*
*வெற்றி வழிக் காட்டி வாறாள் ஆதிபராசக்தி...'*

போன்ற பாடல்களை இசைக்க கேட்கலாம். இவ்வாறு ஆடி வரும் ஆதி பராசக்தி மன்மதனுக்கு அருளாசி வழங்குவதை யும் அவதானிக்கலாம். இவ்வாறே ஈஸ்வரி பாத்திரத்தின் வர வும் அமையப்பெறும். ஈஸ்வரியின் வரவின்போது காமன் மாஸ்ட்டரினால் வாழ்த்துப்பாடல்கள் இசைக்கப்படும். அவ் வாறே ஆதிபராசக்தி இந்து மதத்தில் மிக முக்கியமாக அணு கப்படுகிறது. உலகைப் படைத்த மூலசக்தியின் வடிவமாக வணங்கப்படுகிறது. சாக்த மதத்தின் முழுமுதற் கடவுள் என்ற அந்தஸ்த்தை பெற்ற தெய்வமாக சக்தி விளங்குகிறது. கலை மகள், அலைமகள், மலைமகள் ஆகிய வடிவங்கள் ஆதிபரா சக்தியின் மறு வடிவங்களாகவே உற்று நோக்கப்படுகின்றது. தக்கனின் வரலாற்றோடும் தொடர்புபடுகின்ற பாத்திரமாகவும் ஆதிபராசக்தி பாத்திரம் அமையப்பெறுகிறது. காமன் பொட் டலுக்கு கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகியோரின் பிரசன்னமும் இடம்பெறுவதுண்டு. இச்சந்தர்ப்பத்தில் நார தரின் வரவும் அமையப்பெறுவதுண்டு. முத்தேவியருக்கும் தோத்திரப்பாடல்கள் காமன் மாஸ்டரினால் இசைக்கப்படுவ துமுண்டு. இச்சமயத்தில் டோலாக் இசைக்கருவியினூடாகப் பின்னணி இசை வழங்கப்படுவதுண்டு. பெண் தெய்வ வழி பாட்டு மரபினைப் பின்பற்றுகின்றவர்களில் மலையக மக் களும் மிக முக்கிய பகுதியினர்களாக விளங்குகிறார்கள். இவர்களது வழிபாட்டுடன் தொடர்புபடும் பெண் தெய்வங்கள் சகலதும் இக்கூத்திலும் பங்கேற்பதுண்டு.

மலையக மக்களிடத்தே காளி வழிபாடு தொடர்பான அவ தானம் நீண்ட நாட்களாகவே பின்பற்றப்படுகிறது. காளி என்பதை 'காலம்', 'காளி' என்ற பொருள்களிலும் உற்று நோக் கப்படுகிறது. ஈசனுக்கு 'காளன்' என்ற பெயரும் உண்டு. காளனின் மனைவிதான் 'காளி' என்ற என்ற கருத்தும் நிலவு கிறது. வடமொழியில் 'காலா' என்ற ஆண்பெயரின் பெண்பாற் பெயராகவும் அணுகப்படுகிறது. மாந்திரிகச் செயற்பாடுக ளுடன் காளி வழிபாடு மிக நெருங்கிய தொடர்பை பெற்றதாக விளங்குகிறது. அசுரர்களை அழிப்பதற்காக கௌசிகி தேவி யிடமிருந்து காளி தோன்றுவதாகவும் புராணக்கதை தெளிவு றுத்துகிறது. சண்டன், முண்டன் ஆகிய அசுரர்களை அழித் ததால் காளி சாமுண்டி என்ற பெயராலும் அழைக்கப்படுவ தாகக் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறே பத்ரகாளி, சண்டிகா, கருங்காளி, அங்காளம்மன், சந்தியா, வீரக்காளி ஆகிய பெயர்களாலும் காளி வழிபாடு மலையக மக்களுடன் தொடர்பு படுகின்றது. இக்கூத்தில் பத்ரகாளி, காளி ஆகிய பாத்தி ரங்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுண்டு. பங்கேற்பாளர் களின் ஆர்வம் கருதியும் அவர்களுக்கும் பாத்திரங்கள் வழங்க வேண்டும் என்பதற்காகவும் காளியின் வேறு அவதா ரங்களும் பாத்திரமாக்கப்படலாம். தோட்டங்கள் தோறும் தவிர்க்க முடியாத வழிபாடாக காளி வழிபாடு சிறுதெய்வ வழி பாட்டுடன் இணைந்து நோக்கப்படுகிறது.

மதனின் பயணப்பாதையில், அதாவது காமன்கூத்தின் பிர தான செயற்பாடுகள் நிகழ்த்தப்படும் இடத்தில் இருந்து சற்று தொலைவில் உயரமான இடத்தில் மேடை அமைத்து அதில் காளி பாத்திரத்தை ஏற்பவரை நிறுத்தி விடுவார்கள். இப்பாத் திரத்தை ஏற்பவர் பத்திரகாளியாகவே பயங்கரமான உரு வத்தில் காட்சியளிப்பார். வாயில் நீளமான நாக்கு தொங்கிக் கொண்டிருக்கும். கையில் வாள் ஏந்திய வண்ணமும் காலில் சலங்கையுடனும் இருப்பதை அவதானிக்கலாம். உயரத்தில் இருக்கும் காளிக்கு தரையில் இருந்து பூசை நடத்தப்படும். பின்னர் காளிதேவியின் தோத்திரப்பாடல்கள் இசைக்கப் படும். எடுத்துக்காட்டாக,

*'வாழ்த்தி வரங்கொடம்மா*
*வாழுருவே கைக்கொடம்மா*
*பெற்றவளே காளிமுத்தே*
*பேருவச்ச காளியரே*
*பெற்றவளே மாதாவே*
*வளர்த்தவளே காளியம்மா - நீ*
*வரம் கொடுக்க வேண்டுமம்மா...'*



என்றவாறு பாடல் தொடரும். உச்சஸ் தாயில் பாடல் பாடப்படு வதையும் அதற்கேற்ற வகையில் தப்பிசையின் முழக்கமும் அமையப்பெறும். காளி பாத்திரத்தை ஏற்பவர் இவ்வாறு பாடல் பாடியவுடன் மேலிருந்து நிலத் திற்கு குதிப்பதில்லை. அவரில் மருள் நிலையை ஏற்படுத்தி அதனை உச்சநி லைக்கு கொண்டு செல்கையிலையே அவர் மேல் இருந்து தரையை நோக்கி குதிப்பார். மருள் நிலையை ஏற்படுத் துவதற்கு கடும் பிரயத்தனத்தை மேற் கொள்ள வேண்டியிருக்கும். காமன் கூத்து இடம்பெறும் இடத்திற்கு அண் மைய தோட்டங்களில் இருந்தும் காமன் வாத்தியார்கள் அழைக்கப்பட்டிருப்பார் கள். அவர்களது பங்கேற்பும் இக்களத்தில் கூத்தை நடத்தி செல்வதில் பேருதவியாக அமையப்பெறும்.

காளியின் வேறுபட்ட அவதாரங்களை வாழ்வியல் பொருத்தப் பாட்டுடன் அணுகுகின்ற போக்கும் கவனத்திற்குரியதாகும். இம் மக்களிடத்தே உதிரக்காளி தொடர்பான அவதானம் முக்கிய கவனத்தைப் பெறுகிறது. பெண்களின் மாதவிடாய் சக்கரத்தையும் கர்ப்பிணிப் பெண்களிடத்தில் கரு வளர்ச்சி முறையாக அமைய காளியின் அருட்கடாட்சமே தேவைப்படு கிறது என்ற நம்பிக்கை நிலவுகிறது. மேற்குறித்த செயற்பாடு களில் பாதிப்பு நிலை ஏற்படுத்துமிடத்து அதற்கு உதிரக் காளியின் கோப நிலையே காரணம் என்ற நம்பிக்கை காணப் படுகிறது. அதன் காரணமாக உதிரக்காளி மீது மிகுந்த பய பக்தியுடனான வழிபாட்டு அணுகுமுறை கையாளப்படுகின் றமை அவதானத்திற்குரியதாகும். பிள்ளை வரம் கொடுக்கும் சக்தி படைத்தவளாகவும், கருச்சிதைவை ஏற்படுத்தும் அகங் காரியாகவும் மக்கள் காளியை அணுகுவதுண்டு. கிராமிய தெய்வ அம்சமாகவும் வழிபாட்டிற்குரியவளாகவும் காளி அணு கப்படுகின்றாள். கருச்சிதைவோடு தொடர்புபடும் வகையில்

*'ஏழு மாத கருப்பத்தை - நீ*
*இறைச்சென்று தின்னவளே*
*மூன்று மாத கர்ப்பத்தை - நீ*
*முட்டையெண்டு தின்னவளே*
*மந்திர வாளெடுத்து ஆத்தாளே*
*உதிரக்காளி - நீங்கள்*
*தந்திரமாய் வருக வேண்டும்'*

எனவும் பாடலிசைக்கப்படும். பிள்ளைப்பேறு பெற்ற பெண் களின் பிரசவத்தை திருப்தியாக நிறைவேற்றிக் கொடுத்த மைக்கு கைங்கரியமாக நேற்றிக்கடனை நிறைவேற்றுவதுண்டு. இவ் நேற்றிக்கடன் பொட்டைக்கோழியை பலி கொடுத்து அதனுடன் முட்டையையும் சமைத்துப் படையலிட்டு பூசை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. நேற்றிக்கடன் வைக்கும் போது 'முட்டையும் பொட்டையும்' தரு வேன் என வேண்டுதல் முன் வைக்கப் படும். காளி உருவெடுக்கும் பூசாரி மார்கள் மருள் வரும் நிலையில் வேண்டுதலை முன்வைப்பவரிடம் எனக்கு 'முட்டையும் பொட்டையும்' தருவியா? எனக் கோரிக் கையை முன்வைப்பதையும் அவதானிக்கலாம். அவ்வாறே பிள்ளை வரம் வேண்டும் முனைப்பில், வேண்டுதல் பின்வரு மாறும் பாடலாக இசைக்கப்படும். மடிப்பிச்சை என்ற சொல்லாடல் இதன் போது பிரயோகிக்கப்படும். மடிப் பிச்சை வேண்டுதலின் பேரில் சேலை முந்தானையை ஏந்தியவாறு பெண் கள் நிற்பதைக் காணலாம்.

*'சாய்ந்தால் சடையழகி*
*சன்னல் பின்னழகி*
*சாய்ஞ்சி சடை பிஞ்சிவரும் - அம்மா*
*அழகு சடை மார்பில்புரளும்*

*அன்பான பொட்டலிலே - நான்*
*தெம்பாக மடிப்பிச்சை*
*ஏந்தின முந்தானைக்கு - என்னை*
*பெற்றவளே காளியம்மா - நீ*
*வரத்தை கொடுக்க வேண்டும்*
*என்றவாறான பாடல்கள் தொடரும்'*

உயரமாக அமைக்கப்பட்டுள்ள மேடையில் நின்று கொண்டி ருக்கும் காளி வேடம் தரித்தவரை நோக்கி பாடல்கள் உக்கிர மாக பாடப்படும். பாடலுக்கு ஏற்ற வகையில் தப்பின் இசை யும் முழங்கப்படும். காளி வேடம் தரித்தவருக்கு மருள் நிலை வந்தவுடனேயே கீழ் நோக்கி பாய்தல் வேண்டும் என்ற ஏற்பாடு அவதானத்திற்குரியதாகும். சில சந்தர்ப்பங்களில் வேடம் தரித்தவருக்கு மருள் நிலையை ஏற்படுத்துவதற்கு கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அறுபதடி மேடையிலே இருக்கும் 'காளிமுத்தே! மலர்களால் உனக்கு பூசை செய்கிறோம். முட்டையும் பொட்டைக்கோ ழியும் உனக்கு பலியாக கொடுக்கிறோம், விடியப் போகிறது, விடியலுக்கு ஆதாரமாக சேவலும் கூவிவிட்டது. ஊரவர்கள் உன் மீது குறை சொல்லுவார்கள். 'நாவைப் படைத்தவங்கள் உனக்கு நைவேத்தியங்கள் பண்ணுவாங்க, உதட்ட படைத்த வங்க உனக்கு உய்யாரம் பண்ணுவாங்க...' இவ்வாறு கோரிக்கையை முன்வைக்கும் பாடல்களை இசைக்கப்படும். இந்நிலையிலேயே மேடையில் இருக்கும் காளி வேடம் தரித் தவரை கீழிறக்கும் முயற்சி இடம்பெறும். சில சந்தர்ப்பங் களில் பாடல் இசைக்க ஆரம்பித்தவுடனேயே வேடம் தரித் தவர் பாய்ந்து விடுவதுண்டு. இவ்வாறு பாய்ந்துவிட்டால் அவ்வூரில் காளி மக்களுக்கு எதுவித குறையும் வைக்க வில்லை என்பது ஐதீகம்.

மாறாக காலதாமதம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் காளி மீதான தெய்வக்குற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் அல்லது தீட்டுடையவர் இப்பாத்திரத்தை ஏற்றமை குற்றம் என்ற முடிவுக்கு வரு வார்கள். அச்சந்தர்ப்பத்தில் பரிகாரம் செய்ய வேண்டியதை அல்லது பரிகாரத்தை திட்டமிடும் சந்தர்ப்பமாக இதனை

உணர்ந்து கொள்வார்கள். எது எவ்வாறாயினும் நம்பிக் கையோடு காளியை வேண்டிய நிலையில் வேடம் தரித்தவர் மேலிருந்து கீழ் நோக்கி பாய்வார். இவ்வாறு பாய்ந்தவுடன் ஆக்ரோசமான தப்பிசை, அதற்கேற்ற பாடலுடன் காமன் பொட்டலை நோக்கி ஆட்டத்தோடு முன் நகர்வார்கள். இந்நி லையில் ஏற்கனவே காளி வேடத்ததை தரிப்பவர்களுக்கும் மருள் வருவதுண்டு. மருளாடுபவர்கள் பொது வெளியில் தெய்வக்குற்றம் தொடர்பில் விளக்கத்தை முன்வைப்பார்கள். அதனை ஏற்று பரிகாரச் செயற்பாடுகளைச் செய்வதற்கான உறுதிமொழியும் இக்களத்தில் எடுக்கப்படும். கூத்தின் நகர் வில் இவ் ஆளுமை பொருந்திய காளிதேவியிடம் மன்மதனும் அருளாசி வேண்டுவான். மலையக மக்களிடத்தில் சிறுதெய்வ வழிபாட்டிற்குரிய முக்கிய தெய்வமாக காளி காணப்படுகின் றது. ஆங்காங்கே காளிதேவிக்கு ஆகம முறைப்படி ஆல யங்கள் அமைக்கப்படுவதும் உண்டு. அவ்வாறே இப்பிரதே சங்களில் வாழும் பெரும்பான்மை மக்களால் மிகுந்த நம்பிக் ககைக்குரிய தெய்வமாகவும், மாந்திரிகச் செயற்பாடுகளின் நிமித்தம் விசேடமான வழிபாட்டிற்குரிய தெய்வமாகவும் காளி விளங்குகின்றது.

இக்களத்தில் மோகினியினுடைய பிரசன்னம் முக்கியமானது. மோகினி எனப்படுவது மோகத்தினால் மயக்கும் வல்லமை யுடையவள் எனப் பொருள்படும். மோகினி பற்றி புராணக்க தைகள் பலவற்றில் குறிப்பிடப்படுகிறது. விஸ்ணுவின் பெண் அவதாரமாகவும் மோகினி நோக்கப்படுகிறார். மோகினியின் கணவனாக அரவான் குறிப்பிடப்படுகிறார். அதே சமயத்தில் மோகினிக்கு சிவனோடும் தொடர்பு இருப்பதாக குறிப்பிடப் படுகிறது. இவ்வாறான தொடர்பில் பிறந்த குழந்தையாகவே ஐயப்பன் அறிமுகப்படுவதும் கவனத்திற்குரியது. அண்மைக் காலங்களில் ஐயப்பன் வழிபாடு, ஐயப்பன் யாத்திரை போன்ற விடயங்களும் மலையக மக்களிடத்திலும் செல்வாக் குப் பெற்று வருகின்றன. ஐயப்பன் வழிபாட்டுடன் தொடர்பு படும் கருப்புசாமி போன்ற பாத்திரங்களும் காமன்கூத்தில் இணைக்கப்பட்டுள்ளமையும் அவதானத்திற்குரியதாகும். விஸ்ணுபுராணத்தில் தேவர்களும் அசுரர்களும் இணைந்து மேருமலையை மத்தாகவும், வாசுகி பாம்பினைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தது அமிர்தம் எடுத்த செயற் பாடு யாவரும் அறிந்ததே!. இம்முயற்சியில் எடுக்கப்பட்ட இறவாதவரம் தரும் அமுதத்ததை அசுரர்கள் பெறுவதைத் தடுப்பதற்காகவே மோகினி உருவானதாகவும் சொல்லப்படு கிறது. மோகினிக்கும் தெரியாத நிலையில் இவ் அமுதத்தை அசுரன் பருகிய நிலையில் இதையறிந்த மோகினி தனது சக் ராயுதத்தால் அசுரனின் தலையைத் துண்டித்து விடுகிறாள். அவ் அசுரனின் தலை இராகுவாகவும் உடல் கேதுவாகவும் மாறியுள்ளது என்ற நம்பிக்கை எம்முள் நிலவுகிறது. பொது வாக இந்துக்களிடத்தில் சாஸ்த்திர, சம்பிரதாயங்கள் தொடர் பான நம்பிக்கை மிக நீண்டகாலமாகவே பின்பற்றப்படுகின்ற ன. இந்நம்பிக்கை மலையக மக்களிடத்திலும் நிலவுகிறது.

பருவ வயதுகளில் ஆண்களுக்கு இயல்பாகவே விந்து தானாக வெளியேறும் நிலைமை இயற்கை அம்சத்தின் செயற் பாடாக அமைகிறது. இளம் வயது ஆண்களிடத்தே பய நிலைமையை ஏற்படுத்தும் விடயமாகிறது. இவ்வாறு விந்து வெளியேறுவதற்கு மோகினியின் தாக்கமே காரணமாக அமை கின்றது என்ற நம்பிக்கையும் மலையகத்தில் நிலவுகிறது. இதன் காரணமாக இளம் வயது ஆண்களிடம் பாதிப்பை ஏற் படுத்தும் சக்தியாக மோகினி காணப்படுகின்றாள். அந்நிலை மையில் பாதுகாப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் மோகினி குறித்த வழிபாடு நிலவுகின்றமையும் கவனத்திற்குரியதாகும். மோகினியை துஸ்டசக்தியாக பார்க்கின்ற வழக்கம் மலையக மக்களிடத்து வழக்கத்தில் உள்ளது. மோக மோகினி, விரும மோகினி, விஸ்ணு மோகினி, நடன மோகினி ஆகிய மோகினி கள் தொடர்பான அவதானம் காமன் கூத்துடனும் தொடர்பு படுகின்றமையை அறியலாம். அவ்வாறே மலையக மக்களின் பயில்நிலைக்குரிய கூத்துகளில் பொன்னர் சங்கர், அருச் சுணன் தபசு ஆகிய கூத்துக்களும் முக்கியத்துவம் பெறு கின்றன. அக்கூத்துக்களுடனும் இவ் மோகினி பாத்திரம் தொடர்புபடுகின்றது. காமன் கூத்தில் மோகினி பாத்திரத்தின் வருகையும் ஆட்டமும் மிகுந்த அவதானத்தை பெறுகிறது. சபையினரின் அவதானம் இப்பாத்திரத்தின் ஆட்டத்தை நோக்கியதாக அமையப்பெற்றிருக்கும். மோகினி பெண் பாத் திரமாக இருந்த போதிலும் ஆண் ஒருவரே இப்பாத்திரத்தை ஏற்றிருப்பார். இது ஓர் ஆண் என்று அடையாளம் தெரியாத வகையில் ஒப்பனை காணப்படும். வாழ்க்கைப் படிநிலையில் ஆண் பெண் இருபாலாரிடமும் உயிரணுக்கள் தொடர்பான கவனத்தை ஏற்படுத்தும் முனைப்பில் உதிரக்காளி மோகினி பாத்திரங்கள் காணப்படுகின்றன. வாழ்வின் தொடர்ச்சி நிலை யில் இனவிருத்தி செயற்பாட்டின் முக்கியத்துவத்தை இவ்வழி பாடுகள் வலியுறுத்துகின்றன.

நாகர்கள் என்பதன் பூர்வீகத்தை உற்று நோக்குகின்ற போது நாகத்துடன் மலையக மக்கள் தொடர்புபடும் நிலையைக்



காணலாம். இலங்கையின் பூர்வ குடிகள் தமிழர்கள் என்ற வகையில் நாகர்களுடன் தொடர்புபடும் நிலை காணப்படுகின்றது. நாகத்தை வழிபடும் வழக்கம் மலையகத் தமிழர்களிடத்திலும் நீண்டகாலமாக நிலவி வருகிறது. அதன் தொடர்ச்சியை காமன்கூத்திலும் காணலாம். கூத்தில் நாகக்கன்னி பாத்திரத்திற்கு வழங்கும் முக்கியத்துவத்தின் ஊடாக இதனை அறியலாம். 'இமவானினதும் மோனாவினதும் காதலால் மைனாகன் எனும் மலை உருவானது பற்றி ஏலவே குறிப்பிட்டுள்ளோம். சிறகுகளுடன் மலைகள் இருந்தமையால் கிராமங்கள் அழிவுற்றன. இந் நிலையை அவதானித்த இந்திரன் மலைகளின் சிறகுகளை வெட்டத் துணிகிறான். இந்திரனிடம் இருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு மைனாகன் நண்பன் சமுத்திரராஜனுடன் சரணடைகிறான். மைனாகன் சமுத்திரராஜனுடன் கொண்ட நட்பினால் சமுத்திரத்தின் அடியில் ஒழிந்துக்கொண்ட மைனாகன் பாதாள உலகில் வாழும் நாகக்கன்னியை மணந்துக்கொள்கிறான் என்பார் மகாகவி காளிதாசர். இதன் தொடர்ச்சி நிலையிலையே பிரம்மனின் பிரஜாபதிகளின் உருவாக்கங்கள். இதனுடன் தொடர்புபடும் வகையிலேயே நாகக்கன்னி பாத்திரம் இக்கூத்துடனும் தொடர்புபடுகிறது. பொருத்தமற்ற கதை அம்சாக இதனை உற்றுநோக்க வாய்ப்புகள் உள்ளது. பாத்திர உருவாக்கம் இயற்கை உருவாக்கத்தோடு தொடர்புபடும் விதம் சிந்தனைக்குரியதாகும். உயிரின் உற்பத்தி செயற்பாட்டில் அறிவார்ந்த கவனத்தை ஏற்படுத்தும் முனைப்பும் குறிப்பிடத் தக்கது. நாகக்கன்னி பாத்திரம் ஏனைய பாத்திரங்களைப் போல அழகியல் அம்சத்தோடு பிரசன்னமாகும் நிலையில் நீண்ட வாலுடன் களத்திற்கு வருகைத்தருவதும் மதனுக்கு அருளாசி வழங்குவதும் கவனத்திற்குரியதாகும். பாம்பிற்கு முட்டை வைத்தல், பாம்பு புற்றிற்கு பால் ஊற்றுதல் போன்ற நம்பிக்கைகளையும் மக்கள் வழிபாட்டுடன் இணைத்து அறியலாம்.

அவ்வப்போது சபையைக் கலகலப்படுத்தும் முனைப்பில் கோமாளியின் பங்கேற்பு கவனத்தைப் பெற்றதாக விளங்கும். சபையோரைக் கலகலப்பாக்கவும் அவர்களின் தூக்கத்தை கலைக்கவும் கோமாளி (பபூன்) பாத்திரம் உதவுகின்றது. பபூன் பாத்திரம் கூத்தை தொய்வின்றி முன் கொண்டு செல்வதற்கு உதவுகின்றது. அது போலவே மலையக நாடக செயற்பாடுகளிலும் இப் பாத்திரத்தின் வகிபங்கு மிக முக்கியமானது. அவ்வாறே மலையக அரங்கியல் தொடர்பான அவதானத்தில் 'பூசாரி' பாத்திரத்தின் வகிபங்கும் மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. மலையக மக்களின் சர்வலோக நிவாரணியாகவும் பூசாரி விளங்குகிறார். கோடாங்கி, கோணங்கிகள் என்றவாறும் இவர்கள் அழைக்கப்படுவார்கள்.

தங்களுக்குள் ஓர் தெய்வீக சக்தி உட்புகுந்திருப்பதான நம்பிக்கையை மக்கள் மனங்களில் விதைக்கும் வகையில் முனைப்பார்ந்த நடவடிக்கைகளில் பூசாரிகள் ஈடுபடுகின்றனர். உளவியல் ரீதியான இவர்களது அணுகுமுறை மிகுந்த அவதானத்திற்குரியது. சாதாரண நோய்க்கு திருநீறு மந்திரித்து பூசுவது தொடக்கம் பில்லி, சூனியம், பேயோட்டல், காத்து கருப்பு அண்டாது தடை செய்தல் முதலான விடயங்களுக்குப் பரிகாரம் செய்வதும், பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதும் என பல செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். உடுக்கையை இசைத்து தனது இஸ்ட தெய்வத்தை தன்னுள் உட்புகுத்திக்கொள்ள பாடல் மூலம் கோரிக்கை விடுப்பார்கள். சாமி வந்ததும் உடல் நடுங்கிய நிலையில் குறி சொல்லுவார்கள். அக்குறியில் பாதிப்பு நிலை, பரிகாரம், சன்மானம் ஆகிய விடயங்கள் பேசுபொருளாக அமையப்பெறும்.

மலையக மக்களின் வாழ்க்கை முறையோடு நெருங்கிய தொடர்பைப் பேணும் பூசாரியின் பங்கேற்பும் இக்கூத்துக் களத்தில் இடம்பெறுவதுண்டு. பேயோட்டல் என்பது பூசாரியின் முக்கிய பொறுப்பாக அமைவதுண்டு. இக்களத்தில் பூசாரியும் பேயும் ஒருசேரவே வருகை தருவார்கள். பூசாரி உடுக்கிசைத்துப் பாடல் பாடுகின்ற போது பேய் பாத்திரம் ஏற்பவர் அதற்கேற்ற துலங்களை வெளிப்படுத்துவதுமுண்டு. இருவரின் ஆட்டங்களால் காமன் பொட்டல் முழுவதும் அமர்க்களப்படும். பூசாரி வேட்டி அணிந்து, கையில் உடுக்கு, கழுத்தில் சாட்டையைச் சுற்றிய நிலையில் காட்சித்தருவார். பேய் அதற்குரியவாறு பயத்தை ஏற்படுத்தும் வகையிலான உருவத்தோடு காட்சித்தருவதாக அமையும். இரு பாத்திரங்களுக்கு பிரயோகிக்கப்பட்ட ஒப்பனை முறையும் களத்தின் பின்னணியில் ஒப்பனையாளர்களின் ஆளுமையும் தனித்துவமாகத் துலங்கும். சபையோரைக் கவரும் வகையிலான பாடல்கள், கோடங்கியால் இசைக்கப்படும். பூசாரிக்கோ அல்லது பேய் வேடம் தரித்தவருக்கோ மருள் நிலை உண்டாகும் நிலையில் சபையில் இருவரினதும் பங்கேற்பு நிறைவுக்கு வரும். சில சமயங்களில் பார்வையாளர்கள் அரங்கில் அமர்ந்திருப்பவர்களும் பூசாரியின் பாடலுக்கு உடுக்கடித்து துலங்கல்களை வெளிப்படுத்துவதுமுண்டு.

காமன் கூத்து களத்தில் நகைச்சுவை உணர்வை ஏற்படுத்துவதற்காக வருகின்ற பாத்திரங்களில் ஆஞ்சநேயர் பாத்திரத்தின் வருகையும் சபையைக் கலகலப்பாக்கும். கூத்தின் தொடக்க நிலையில் இந்திரச்சபையில் இராமன், சீதை, லெட்சுமணன் வருகையும் இடம்பெறுவதுண்டு. தொடர்ந்து மதன் - ரதி ஆகியோருக்கிடையில் வாதப் பிரதிவாதங்கள் நிலவும். இந் நிலையில் இராமனை மதன் புகழ்வதும், ரதியானவள் மதன் மீதுள்ள கோபத்தில் இராமனை இகழ்வதையும் அறிவோம். அச்சந்தர்ப்பங்களை தவிர்த்து மதனின் பயண பாதையில் இராமன் காட்சித்தருவதுண்டு. இது மதனுக்கு ஆசி வழங்கும் பொருட்டாக அமையப்பெறுவதுண்டு. இச்சந்தர்ப்பங்களிலோ அல்லது தனித்தோ ஆஞ்சநேயரது வருகை இடம்பெறும். காமன் பொட்டல் முழுவதையும் வலம் வருவதோடு இப்பாத்திரத்தை ஏற்பவர் தனக்கு விரும்பியவாறான சேட்டைகளில் ஈடுபடுவதுமுண்டு. இந் நிலைமை சபையோருக்கு இரசனையை ஏற்படுத்துவதாக அமையப்பெறும். மலையக மக்களிடத்தே மார்கழி மாதம் இராமர் பஜனை ஊர்வலம் இன்றியமையாததாக விளங்குகிறது. இந்நிலையில் அனுமான் பாத்திரமும் நெருங்கிய தொடர்புக்குரியதாக முக்கியத்துவம் பெறுகிறது. இதன் நேசிப்பில் திருவிழா போன்ற முக்கிய நிகழ்வுகளில் அனுமான் அல்லது குரங்கு வேஷம் தவர்க்க முடியாத அம்சமாக இணைந்திருக்கும். காமன் கூத்தில் எது எவ்வாறாக இருப்பினும் கலகலப்பை ஏற்படுத்த வரும் பாத்திரங்களும் மருள் வரும் நிலையோடு தனது பாத்திர இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவார்கள்.

(தொடரும்...)

letsumanan.a@thaiveedu.com





# கூத்துகளில் விளிம்புநிலைச் சமூகமும் மாற்றமும்

**கோபிகா நடராசா**

கூத்துகள் பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் மரபில் திகழும் நிகழ்த்துகலை வடிவ மாகும். கூத்து, மக்களின் வாழ்க்கை, உணர்வு, அரசியல், சமூகவியல் போன்ற அம் சங்களைப் பிரதிபலிக்கும் கலை வடிவாகும். கூத்துகளில் பண்டைய காலத்தில் இருந்தே வெவ்வேறு சமூகங்களின் நிலைகளைப் பிரதிபலிக்கும் பாத்திரங்கள் இடம் பெற்றுவருகின்றன. சமூகத்திடையே ஆரம்ப காலங்களில் இருந்து உயர்சாதி, தாழ்த் தப்பட்ட சாதி என்கின்ற சாதி ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. சமூகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்ற கலை வடிமான கூத்துகளில் இவ்வாறான சாதி ஏற்றத் தாழ்வுகளை பல விதமானதாகக் காணமுடிகின்றது.

வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் பறையறிவோன் பாத்திரத்திற்கு பயன்படும் தாளக்கட்டு பின்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

‘திருட்டுக் கள்ளனை போலவே வெருட்டிய விழியுடனே
தேடித் தெரு ஓடியிட்டி – மருட்டி மனத்துடன்
தோட்டியும் வந்தானே’

‘சாம்பான் வந்தானே அயோத்தியில் சாம்புவனும்
வந்து தோற்றினானே
சாம்பானும் வந்தானே வீம்புகள் பேசியே
தக்கிட தருகிட தகிகிடதோம்...’

இத்தருவில் தேவையில்லாமல் வீம்பு வார்த்தைகளைப் பேசுபவனாகப் பறையறை வோனைக் கட்டமைத்துள்ளனர்.

‘கூத்துகளில் விளிம்புநிலைப் பாத்திரங்களின் மூலம் விளிம்புநிலைச் சமூகம் கீழ்நி லைக்குட்படுத்தப்படுகின்றன’ என்ற கருத்தானது ஏற்றுக் கொள்ளத்தக்க விடயமாக வுள்ளது. தற்காலத்தில் விளிம்புநிலைச் சமூகங்கள் தொடர்பான ஏற்றத் தாழ்வுகள் முற்றாகக் குறைந்துவிட்டன எனக் கூறமுடியாது. இன்றும் பெரும்பாலான கூத்துகளில் விளிம்புநிலை மக்களைத் தாழ்த்திச் சித்திரிக்கின்ற மரபு காணப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக, கடந்த வருடம் மாமாங்கேஸ்வரர் கோயில் திருவிழாவின்போது நடைபெற்ற கூத்துகளில் ஒன்றான ‘இறைவனும் புலவனும்’ என்ற கூத்தில் பறைய றைவோன் பாத்திரமாக ஒரு சிறுவனைச் சித்தரித்தார்கள். அவனின் உடையமைப் பானது கறுத்தப் பாவாடை மட்டும் அணிந்து, மேல் முழுவதும் திருநீறு இட்டு, கையில் பறையுடனும், கள்ளு முட்டியுடனும் காட்சியளித்தான். பறையறைவோன் பாத்திரம் என்றாலே இவ்வாறான கட்டமைப்பிலே காணப்பட வேண்டும் என்ற எண்ணத்தினை மாற்றாமல் இருப்பதனால்தான் சிறுவனாக இருந்தாலும் அப்பாத்திரத்தின் சித்தரிப்பு அவ்வாறு வடிவமைக்கப்படுகின்றது.

இரு மோடிக் கூத்துகளிலும் பறையறைவோன் பாத்திரத்திற்கு தாவைக்கி, தின்ன, நேத்தைகி, பேத்தைக்கி போன்ற சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கூத்துகளில் கட்டியக்காரன் பாத்திரத்திற்கு நிகரான பாத்திரம்தான் பறையறைவோன் பாத்திரம். கட்டியக்காரன் அரசன் வரவை மக்களுக்கு அறிவிப்பவனாவான். பறைறைவோன் அரச கலை சார்ந்த திருமணம், சீமந்தம், முடிசூட்டு விழா போன்ற நிகழ்ச்சி பற்றிய முன்னறிவிப்புக்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பவனாவான். இரண்டு பாத்திரங்களுமே அரச கருமங்களை மக்களிடத்தே கொண்டு செல்லும் பாத்திரங்களாகக் காணப்பட்டாலும் கட்டியக்காரன் பாத்திரத்தினைத் கௌரவமாகவும், கம்பீரமாகவும் வடிவமைக்கின்றனர். பறையறைவோன் பாத்திரம் குடிகாரனுக்குரியதான தாளக்கட்டிற்கேற்ப ஆடிக்கொண்டு ஒரு கையில் கள்ளுப் போத்தலுடன் பறையினைத் தோளில் தொங்கவிட்டபடி, திக்குத் திசை தெரியாத, கதைக்கப் பேசத் தெரியாத அகடவிகடப் பாத்திரமாகவே அறிமுகமாவான். ஆனால் ஏன் பறையறைவோன் பாத்திரத்தினை மாத்திரம் எதிர்மாறான நிலையில் வடிவமைக்கின்றார்கள் என்ற கேள்வி இருக்கின்றது. அவர்கள், அவர்கள் சார்ந்த தொழிலைச் செய்யும்போது அது ஏன் இழிவாகப் பார்க்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பில் பண்டாரியவெளி எனும் இடத்தில் அம்பட்டர் சாதியினரை மையமாகக் கொண்ட தென்மோடிக் கூத்தான 'பக்காத்திருடன்' கூத்தினைப் பார்த்திருந்தேன். இக்கூத்தானது கால்திருடன், அரைத்திருடன், முக்கால்திருடன், முழுத்திருடன், பக்காத்திருடன் ஆகிய திருடர்களின் கதையமைப்பினைக் கொண்டதாகும். பக்காத்திருடன் கூத்திலும் பாத்திரக் கட்டமைப்பு ரீதியாக விளிம்புநிலைப் பாத்திரங்கள் கேலிக்குட்படுத்துகின்ற வகையிலான செயற்பாடுகளைக் காணமுடிகின்றது. இக்கூத்திலே நாசிவன் கால்திருடனுக்குச் சவரம் செய்யும்போது சொல்லுகின்ற வார்த்தைகள் ஊடாக அவனை மிகக் கீழ்த்தனமான எண்ணங்கள், சிந்தனைகளை உடைய பாத்திரமாகக் காட்டுகின்றார்கள்.

'மீசைதான் வைத்தேன் வேசைகள் கண்டால் ஆசைகள் கொண்டு
பின் தொடர – காசிதான்
பெரிதோ கண்ணாடி தன்னிலே பாருமையா'

வேசைகளாக இருத்தல் என்பது சமூகத்தினால் ஏற்றுக் கொள்ள முடியாத, கீழ்த்தனமான ஒரு விடயமும், செயற்பாடுமாகும். இவ்வாறான செயற்பாடுகளை அக்கூத்திலே உள்ள வேறு உயர் பாத்திரங்கள், நடுநிலைப் பாத்திரங்கள் வாயிலாகச் சொல்லாது குறிப்பாக விளிம்புநிலை மக்களினூடாகச் சொல்வது அச்சமூகத்தினை ஒடுக்கிச் சிறுமைப்படுத்துகின்ற செயற்பாடாகும்.

நவீனமயப்படுத்தப்பட்ட இன்றைய உலகில் மக்களின் கருத்துகள், சிந்தனைகள், எண்ணங்கள் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டாலும்கூட சமூகத்தில் இன்னும் சில நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் இருந்துகொண்டுதான் வருகின்றன. சில சமூகங்களின் மத்தியில் சாதிப் பாகுபாடு முக்கியமாகப் பேணப்பட்டு வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் அன்றைய காலத்தில் தொழில்களை வைத்து சாதி பார்க்கப்பட்டது. மற்றையது பாரம்பரியச் சடங்குகளில் சாதி இன்றியமையாத ஒன்றாகக் காணப்பட்டது. இவ்வாறான காரணங்களின் மூலம் நாகரிகம் அடைந்த சமூகங்களில் வாழ்ந்தாலும் அன்றும் இன்றும் சாதி என்ற சொல்லைக் கொண்டு மக்கள் இழிவுநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் காலம் காலமாக கூத்துகளில் இருந்துகொண்டு வருகின்ற விடயமாகவுள்ளது. பொழுதுபோக்காக கூத்தினை பார்த்தாலும் அவை ஒவ்வொரு சமூகத்தையும் பிரதிபலிக்கின்ற அம்சமாகவுள்ளது. அவ்வாறு இருக்கையில் இவ்வாறான சித்தரிப்புகள் மூலம் மேலும் மேலும் அச்சமூகம் இழிவுநிலைக்குத் தள்ளப்படுகின்ற நிலையே உருவாகின்றது. கூத்துகளில் சாதி ரீதியான பாகுபாடுகள் இருப்பது போல பெண்ணியல் சார்ந்த ஒடுக்குமுறைகள், ஓரங்கட்டல்கள் அநேகமாகக் கொட்டிக்கிடக்கின்றன. இதனை மாற்றியமைக்கும் முகமாக எடுத்த முதல் அடியே கூத்து மீளுருவாக்கம் ஆகும்.



கூத்து மீளுருவாக்கத்தில் இவ்வாறான அடிநிலைச் சமூகங்களை ஒடுக்கின்ற தன்மைகளை மாற்றியமைத்து அவர்களுக்கான அடையாளங்களையும், மதிப்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்ற தன்மையினை காணமுடிகின்றது. பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்கள் ஏட்டண்ணாவியர் செ. சிவநாயகம் உள்ளிட்ட கூத்துக்கலைஞர்களுடன் இணைந்து கூத்து மீளுருவாக்க ஆய்வுப் பணியினை 2002-ஆம் ஆண்டு சீலாமுனைப் பிரதேசத்தில் மேற்கொண்டார். இக்கூத்து மீளுருவாக்கச் செயற்பாடானது கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், களப்பயிற்சிகள், இலக்கிய படைப்பாளிகளின் சந்திப்புகள், பெண்ணிலைவாத செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடல்கள் போன்ற செயற்பாடுகள் ஊடாக இடம்பெற்றன.

கூத்து மீளுருவாக்கப் பணியில் பேசப்பட்ட விடயங்களாக...

- சாதி ரீதியாக உள்ள ஏற்றத்தாழ்வுகள்
- பெண் ஒடுக்குமுறை சார்ந்த விடயங்கள் என்பன இருந்துள்ளன.

பெண்ணிலைவாதக் கருத்துகள் உரையாடல் பாங்கில் செயற்படுத்தப்பட்டன. திரௌபதியைத் துயிலுரிய முற்படும் காட்சியை ஆடிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் கூத்தானது ஜெயசங்கர் அவர்களினால் இடைநிறுத்தி கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. 'யாராவது ஒருவர் திரௌபதியாக இருந்தால் என்ன செய்வீர்கள் என்று செய்து காட்ட முடியுமா? என்று வினா எழுப்பட்டது. அங்கிருந்த பா. அகிலன் என்ற இளைஞன் 'திரௌபதியை தொடுவதற்கு துச்சாதனனுக்கு என்ன உரிமை உண்டு? என்று கேட்டான். அந்த கேள்வியினால் பெண் பாத்திரங்கள் பற்றிய படைப்பாக்கத்தினை கட்டவிழ்த்துப் புதிய வகையில் மீளுருவாக்கி படைக்க வேண்டும் என்ற சிந்தனை உருவானது.

அடுத்து பெண்களின் சுதந்திரமான நியாயமான உரிமைகளை இச்'சிம்மாசனப்போர்' கூத்து மூலம் நிலைநாட்டியது. அதாவது சூதாட்டத்தில் தருமர் திரௌபதியின் அனுமதி இல்லாமல் பந்தயப்பொருளாக சூதில் வைத்துத் தோற்றதை பிரதிகாமி மூலம் அறிந்து திரௌபதி மனம் குழறி அதிர்ச்சியும் கோபமும் கொண்டமை மூலம் பெண்களின் நியாயமான உரிமைகளை மதிக்கத் தெரியாதவர்கள் பாண்டவர்கள்தான் என்று எண்ணத் தோன்றுகிறது. இதுவே பெண் அடக்குமுறை என்று சொன்னோம்.

இதன் காரணமாகவே பின்வரும் பாடலை அமைத்திருந்தார்கள்.

*'தன்னைத் தோற்று பின்பு என்னைத்*
*தோற்றாரோதான்*
*சொல்வாய் அடா சொல்வாய்*
*என்னைத் தோற்ற பின்பு*
*தன்னைத் தோற்றாரோதான்*
*கேளாய் கேட்டுவாறாய்'*

மற்றும் திரௌபதி சபையில் புலம்பியபோது,

*'தாரத்தை வைக்கவும் உரிமைதான்*
*உமக்குண்டோ பாவியே*
*உங்கள் சாத்வீக வீரத்தைத்தானே*
*பறித்தாரோ பாவியே'*

இப்பாடல்கள் திரௌபதியின் மனக் குமுறல்களை எடுத்துக் காட்டியது. அது மட்டும் அல்லாது பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நடைபெற்ற போராட்டம் 'தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடந்த போராட்டம் அல்ல அரசு உரிமைக்காக நடந்த போராட்டமாக' கதையைச் சித்தரித்து இப்போராட்டத்தினால் அனேகமான அப்பாவி மக்களே அநியாயமான மரணங்களைத் தழுவிக்கொண்டனர் போன்ற சம்பவங்களை சித்தரித்துக்காட்டியது.

தர்மபுத்திரன் கூத்தில் கணவனே கண்கண்ட தெய்வம் என எண்ணியும், அவர் வழி செல்லும், குரலற்ற பெண்ணாக இருந்த திரௌபதி, கணவன் என்றாலும் செய்தது நியாயமானதா? என்று துணிவுடன் தட்டிக்கேட்கின்ற ஆளுமைமிக்க பெண்ணாக 'சிம்மாசனப்போரில் படைக்கப்பட்டாள்.

பிரதிகாமி தேர்த்தாளத்துடன் தேரில் வந்து அரசனைச் சந்திக்கின்றான். அரசன் அந்தப்புரத்திலிருக்கும் திரௌபதியை அழைத்துவரும்படி பணிப்புரை வழங்குகின்றான். பிரதிகாமி திரௌபதியைச் சந்திக்கின்றான். திரௌபதியிடம்,

*'துரோபதி கேளாய் சூது எனும் மயக்கத்தால் உன்னை*
*தோற்றிட்டார் தருமரும் ஜெயித்திட்டார் துரியரும்*
*அன்னையே உன்னையும் அழைத்திட வந்தேனே'*

என்கின்றான். இதைக்கேட்ட திரௌபதி,

*'என்னைத்தோற்ற பின்பு தன்னைத் தோற்றாரோதான்*
*தன்னைத் தோற்ற பின்பு என்னைத் தோற்றாரோதான்*
*கேளாய் கேட்டு வாறாய்'*

'உரிமைக்குரல்' மீளுருவாக்கத்தில் பெண் அநீதிக்காக குரல் எழுப்பப்பட்டது. அல்லியின் அழகில் மயங்கி அர்ச்சுனன் அவளை அடைய ஆசை கொள்கின்றான். கிருஸ்ணன் துணையுடன் அவள் தூக்கத்தில் இருக்கும்போது தாலி கட்டுகிறான். அர்ச்சுனனால் கருவுறும் அல்லி அவனை ஏற்க மறுகின்றாள். இதனால் சகாதேவனால் சிறைபிடிக்கப்பட்டு கூண்டில் அடைக்கப்படுகிறாள். 'உரிமைக்குரல்' கூத்தில் அல்லி தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்கும் பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

*'என்னையும் அறியாமல் உருவான குழந்தையை எப்படி*
*ஏற்றுக்கொள்வேன்*
*குழந்தையை ஏற்றாலும் அர்ச்சுனனுக்கே தான் தந்தை*
*என்ற உரிமை கொடேன்*
*நித்திரை தன்னில் திருட்டு தாலி கட்டிப் புணர்ந்ததாலே*
*இந்த இழிசெயல் சமூகம் தன்னிலே வெறும் ஏற்பாரோ*

*அதனால் நானுமே கருவை கலைத்திட முடிவு தான் எடுத்தேனே*
*உங்களில் ஒருவருக்கு இப்படி நடந்து விட்டால் என்னதான் செய்வீர்களோ*
*நல்லதொரு பதில்தான் நான் இங்கு அறியவே நலமுடன் சொல்வீரே'*

இவ்வாறு சபையோரிடம் கேள்வி கேட்பதன் மூலம் தனக்கு நியாயம் தேடிக்கொள்ளும் பெண்ணாகவும், துணிச்சலான முடிவுகளை எடுக்கும் படைக்கப்பட்டுள்ளான்.

தர்மபுத்திரன் கூத்தானது சிம்மாசனப்போர் எனும் கூத்தாக மீளுருவாக்கம் செய்யப்பட்டது. தர்மபுத்திரன் எனும் கூத்தானது 'தர்மத்துக்கும் அதர்மத்திற்கும் நடைபெற்ற யுத்தம் என்றும் பாண்டவர்கள் எல்லா விடயங்களிலும் தர்ம வான்கள் என்றும் கௌரவர்கள் எல்லா விடயங்களிலும் அதர மவான்கள்' என்று அதன் கருவானது காணப்பட்டது. பாரதக் கதைகள் பற்றி புதிய சிந்தனைகள் எழுதப்பட்ட பின் மீளுரு வாக்கம் செய்யப்பட்டதுதான் 'சிம்மாசனப்போர்' எனும் வடமோடி கூத்தாகும். இதில் சாதி மற்றும் பெண்கள் குறித்த பார்வை மீளுருவாக்கம் செய்யப்பட்டது.

அரசசபையில் நடைபெற்ற வில்வித்தைப் போட்டியின்போது கர்ணனும் ஒருவனாக போட்டியில் நுழைந்தபோது அங்கி ருந்த அவைப் பெரியோர் கர்ணனுடைய சாதியைக் காரணம் காட்டி வில் போட்டியில் பங்கு பெறத்தகுதி இல்லாதவன் என்று தடுத்த போது துரியோதனன் கூறியதாவது படித்தவன், பண்பாளன், கற்புடைய பெண்கள், கொடையாளன் போன் றோருக்கு சாதி என்பதே கிடையாது, திருமால் தூணில் பிறந்தார். சிவபெருமான் மூங்கிலில் பிறந்தார். முருகன் தண்ணீரில் பிறந்தார், துரோணர் குடத்தினில் பிறந்தார். இவர்களை தெய்வங்களாகவும் குருவாகவும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லையா? எனவே சாதியையோ ஒருவரின் பிறப்பையோ வைத்து உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று கூற முடியாது. சாதிகளினூடாக இழிவுபடுத்தும் முறைக்கு எதிராகக் கூறப்பட்டது.

பாரம்பரியக் கூத்தில் பறையறைவோரை குடிவெறியராகவும், அறிவிலியாகவும், தட்டாரப் பொடியர்களைத் திருடராகவும், கோமாளியாகவும் கட்டமைத்திருக்கின்றனர். பறையர்கள் தமிழரின் மூத்த குடிகள் என்ற வகையிலும் தொன்மையான தோல் வாத்தியங்களை வாசிப்பவர்கள் என்பதனாலும் முன் னிலைப்படுத்தப்படுகின்றனர். பறையறைவோன் தொடர்பான மீளுருவாக்க செயற்பாட்டின் கலந்துரையாடலின்போது வே. தம்பிமுத்து அண்ணாவியார் கூறினார் 'பறையறைவோனை இழிவுபடுத்தாமல் கௌரவமாகக் கொண்டு வருவதற்கு ஏற் கனவேயுள்ள பறையறைவோனுக்காக வைக்கப்பட்டுள்ள தாளக்கட்டினை வேகமாக மாற்றியமைத்தால் போதும் அது கம்பீரமான தாளமாக மாறிவிடும்' என்றார். பறையறைவோன் தொடர்பான சாதி ஏற்றத்தாழ்வை நீக்கி ஒடுக்குதல்களைப் புறக்கணித்து வரவாட்டம், பாடல், பாடும்முறை, ஆட்டம், செய்தி அறிவிக்கும் பாணி என்பவற்றில் மாற்றம் செய்யப் பட்டு கம்பீரமாக அரசின் உத்தியோகபூர்வ செய்தி அறிவிப் போனாக மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பறைய றைவோன் பாத்திரங்கள் ஒடுக்குமுறைத் தன்மையில் இருந்து முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இம்மாற்றம் வடிவரீதியிலும், குணாம்சரீதியிலும் மாற்றப்பட்டது.

*'அரச செய்திகள் எங்குமே அறிவிப்போன்*
*மூத்த குடி மூப்பன் தோன்றினானே*
*தோளில் பறையும் தொங்கவே பறையறைந்து*
*அரச செய்திகள் எல்லாம் தெளிவாய்ச் சொல்வோன்'*

மீளுருவாக்கம் செய்யப்பட்ட 'அல்லி அர்ச்சுனா' கூத்தில் வரும் பறையறிவோன் பாத்திரத்தினை குடித்து வெறித்து புலம்பும் பாத்திரமாக இல்லாமல் பறையறைந்து விவாதத்தை நடத்திச் செல்லும் பாத்திரமாக மீளுருவாக்கப் பட்டிருக்கின்றது.

கூத்து என்பது தமிழர் மத்தியில் தொன்று தொட்டு ஆடி வருகின்ற கலை வடிவமாகும். அன்றைய காலத்திலிருந்து கூத்துகளில் முக்கியமாக சாதியமைப்பு காணப்படுகின்றது. இவ்வாறான சாதிப்பாகுபாடு மூலம் கீழ்நிலைப்பட்ட மக்கள் இழிவு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இன்றைய கூத்து மீளுருவாக்கப் பார்வையில் விளிம்புநிலை பாத்திரங்க ளுக்கான அனைத்து கட்டமைப்புகளும் மாற்றியமைக்கப்பட் டாலும் முழுமையாக அந்த விடயம் கூத்துகளில் கொண்டுவ ரப்படவில்லை என்பதும் கூத்து மீளுருவாக்கம் பற்றிய தெளிவான விளக்கம் இல்லை என்பதும் உதாரணமாக மேலே குறிப்பிட்ட மாமாங்கேஜஸ்வர ஆலய திருவிழாவில் நடைபெற்ற சில கூத்தின் துணைக்கொண்டு குறிப்பிடமு டியும். எனவே கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களை மேலும் பரவ லாக்கஞ்செய்து கூத்துகளை மீளுருவாக்கி முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

**உசாத்துணை:**


- சிவநாயகம். செ, (2007), 'சீலாமுனை கூத்து மீளுருவாக்கம்- அனுபவப் பகிர்வு-1', மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு.
- ஜெயசங்கர். சி, (2011), 'கூத்து மீளுருவாக்கம் (ஈழக் கூத்தின் புதிய பரிமாணம்)', கருத்துப் பட்டறை.
- கௌரீஸ்வரன். து, (2007), 'கூத்து மீளுருவாக்கம் கோட்பாடும் செயற்பாடும்', மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற் பாட்டுக் குழு.
- கௌரீஸ்வரன். து, (2021), ' பாரம்பரியக் கூத்தில் பறைய றைவோன் பாத்திரமும் அதன் மீளுருவாக்கமும்', Shanlax International Journal Of Tamil Research.
- கண்ணன். ப, (2023), 'உரிமைக்குரல் மீளுருவாக்கம்', மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு.
- வினோதன். வ, (2013), 'மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் விளிம்பு நிலைப் பாத்திரங்களின் கட்டமைப்பு'.




kobika.nadarasa@thaiveedu.com



# மூன்று நாவல்கள் ஒப்பீடு

## கங்கைக்கரை ஓரம்

## சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும்

## ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது

**– சின்னத்தம்பி குருபரன்**

மனிதர்கள் நாகரிகமடைந்த பின்னர் எங்கு, எப்படி, எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை இலக்கியச் சான்றாதாரங்களின் துணைகொண்டு அறிகிறோம். 'இலக்கியம் வாழ்க்கையின் அல்லது சமுதாயத்தின் பிரதிபலிப்பு' என்றார் அர்னோல்ட். 'இலக்கியம் சமுதாயத்தில் பிரதிபலிக்கிறது' என்பது ரஷ்ய நாட்டறிஞர் மைக்கெல் எம். பாக்கின் கூற்று. இந்த இரு அறிஞர்களும் ஒரே கருத்தையே வலியுறுத்துகின்றனர். இலக்கியம் மானுடத்துள் வாழ்ந்த குறிப்பிட்ட சிலரின் வாழ்வியல் அம்சங்களை அதன் ஊடாட்டங்களையும் காலத்தின் போக்கிற்கு இணங்க அவர்களது காதல், வீரம், தொழில், இன்ப, துன்ப, துயரங்கள், உறவு முறைகள், சமய, கலை, கலாசார, வாழ்வியல் அம்சங்கள் யாவையும் பிரதிபலிப்பனவாகும்.

இலக்கிய அறிஞரும் ஆய்வாளருமான என்.டி. நெயில் 'ஒரு சமுதாயத்தில் இலக்கியப் படைப்புகளின் வெற்றி, படைப்பாளர்களையும் வாசகர்களையும் பொறுத்தே அமையும். எனவே, படைப்பாளர் பெறும் முக்கியத்துவம் வாசகருக்கும் உண்டு. ஒரு நாவல் படைப்பாளர், தனது படைப்பை வாசகருக்கு எவ்வளவு வெற்றிகரமாகத் தெரிவிக்கிறாரோ, அந்த அளவுக்கு அந்த நாவலைப் பற்றி முழு நிறைவு ஏற்படும். எனவேதான் நாவலை, வாசகருக்கும் படைப்பாளருக்கும் இடையிலான ஒரு மௌனத் தொடர்பு' (A short history of the English Novel. p.7) எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்று நாவல் ஒன்றைப் படைக்கும் எழுத்தாளருக்கும் வாசகருக்கும் இடையேயான உறவின் யதார்த்த நிலையை வெளிப்படுத்துகின்றன.

நாவலைப் படைக்கும் படைப்பாளிகள் அதன் கரு, உள்ளடக்கம், உத்தி, வர்ணனை, பாத்திர வார்ப்பு, மொழி நடை, உரையாடல், கதையின் ஆரம்பம், மத்தி, நிறைவு என்பவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றில் மாற்றங்களைப் புகுத்த வேண்டும் என்பதற்கு ஆதாரமாகப் பின்வரும் கூற்று அமைகின்றது. 'நாவல்களின் கதைக் கருவிலும், வடிவத்திலும், பாத்திரப் படைப்பிலும், உத்திகளிலும் மாற்றத்தை விரும்பிய வாசகர்கள் நாவல்களின் மொழி நடையிலும் மாற்றத்தை விரும்பி வரவேற்கின்றனர்' என ம.செ. இரபிசிங் (தமிழ் நாவல் இலக்கியத்தில் புதிய பரிமாணங்கள், 1996, பக். 90) குறிப்பிடுவது கூர்ந்து அவதானிக்கத்தக்கது. இந்த விடயங்களின் அடிப்படையில் இலங்கையின் பிரபலமான மூன்று நாவல்கள் இக்கட்டுரையில் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

இலங்கையில் புகழ்பெற்ற இலக்கிய ஜாம்பவான்களான செங்கை ஆழியானின் 'கங்கைக்கரை ஓரம்', அங்கையன் கயிலாசநாதனின் 'சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும்', வ.அ. இராசரத்தினத்தின் 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது' ஆகிய நாவல்கள் இக்கட்டுரையில் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன. நாவல்கள் மூன்றினதும் கதை, உள்ளடக்கம், கதைப் போக்கு என்பவற்றின் அடிப்படையில் இந்நாவல்களைக் குறு நாவல்களாகவும் கொள்ளலாம்.

செங்கை ஆழியான், அங்கையன் கயிலாசநாதன், வ.அ. இராசரத்தினம் ஆகிய மூவரும் 1960-களின் பின்னர் எழுத்துத் துறையில் தடம் பதிக்க ஆரம்பித்தவர்கள். மூவரும் இலக்கியத்துறையில் பல்துறைசார்ந்து தம்மை இனங்காட்டியவர்கள். அவர்களது எழுத்துக்கள் யாவும் சமகாலத்தில் ஈழத்து இலக்கியத் தளத்தில் பெரிதும் பேசப்பட்டன. அவர்கள் மூவரையும் விடுத்து ஈழத்து நாவல் இலக்கிய வரலாறு பேசப்பட முடியாது என்றளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்.

மூன்று நாவல்களினதும் கதைப் பின்னல் 1960-க்கும் 1970-க்கும் இடையில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களுடன் கற்பனையும் கலந்து பின்னப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய மூன்று நாவல்களினதும் கதைக்கரு, களம் என்பன சில விடயங்களில் ஒன்றுடன் ஒன்று சார்ந்தது போலான உணர்வு ஆழ்ந்து வாசிப்பவர்களுக்குத் தென்படும். வறுமை யில் வாடும் மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தும் கருவியாகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெற்றோர் தமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று, அரச தொழிலில் சேர்ந்து தமது வறுமைக்கும் துன்பத்துக்கும் விடிவினை ஏற்படுத்தித் தருவார்கள் என நம்புவதாகவே கதைகள் மூன்றும் அமைந்திருக்கின்றன. அதற்காவே சொத்துகளை அடகு வைத்தும் விற்பனை செய்தும் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றனர். அத்தோடு ஆண் பிள்ளைகளை நல்ல வசதியான சொத்துப் பத்துள்ள இடங்களிலுள்ள பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பதால் கிடைக்கும் சீதனத்தைக் கொண்டு தமது மற்றைய பெண் பிள்ளைகளையும் வாழ வைக்கலாம் என நம்பும் போக்கும் காணப்படுகிறது.




வ.அ. இராசரத்தினத்தின் ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது கதைக்களம் திருகோணமலை (ஆலங்கேணி) கிராமியச் சூழலை மையப்படுத்தி எழுதப்பட, ஏனைய இரு நாவல்களும் யாழ்ப்பாணத்தைக் கதைக்களமாகக் கொண்டு கீழ்தட்டு மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமாகின்றன. வறுமை, சீவனத்துக்கான போராட்டங்கள், அதில் படும் துன்ப, துயரங்கள், வேதனைகள், வலிகள் ஆகியன கதை மாந்தர்களுக்கூடாக உயிரோட்டமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

கதைகளின் ஆரம்பம், களவர்ணனை, பாத்திர உரையாடல்கள், மொழிநடை என்பன மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. கதையின் உள்ளடக்கத்துக்கு ஏற்ப பாத்திரங்களுக்கு உருவம் கொடுத்து மூன்று நாவல்களிலும் பாத்திரங்களை உயிருடன் நடமாட விட்டிருந்தமை சிறப்புக்குரியன. மூன்று நாவல்களிலும் வரும் கதையின் நாயகர்களான சிவராசா, செந்தில்நாதன், தாமோதரம் ஆகிய மூவரையும் கதாசிரியர்கள் புத்திசாலிகளாகவும், வாழ்க்கையின் துன்ப, துயரங்களை உணர்ந்து செயற்படக்கூடியவர்களாகவும் முன்மாதிரியானவர்களாகவும் சித்திரித்துள்ளார்கள்.

நாவல்கள் மூன்றிலுமுள்ள பாத்திர வார்ப்புக்கள் மிக அளவோடு, கதையின் உள்ளடக்கத்துக்கு உயிர் கொடுக்கக் கூடிய வகையில் பாத்திரங்கள் புனையப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். செங்கை ஆழியானின் ‘கங்கைக்கரை ஓரம்’ நாவலின் கதையின் நாயகன் நாயகிகளாக சிவராசா, கங்கா ஆகிய இருவருடன் இணைந்த பிரதான பாத்திரங்களாக கனகசபை, கமலம், சறோசா, செல்லம்மா, சிகாமணி, கோபாலரெத்தினம் ஆகியோரும் கதை ஓட்டத்துக்கு ஏற்ற துணைப் பாத்திரங்களாக தம்பிராசா, சரோசாவின் தாய், வசந்தி, சுந்தரம், சத்தியலிங்கம் போன்றவர்களும் காணப்படுகின்றனர். இப்பாத்திரங்கள் நாவலில் உயிருடன் நடமாடுவது போலான உணர்வினை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

அங்கையன் கைலாசநாதனின் ‘சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும்’ நாவலின் நாயகன், நாயகிகளாக செந்தில்நாதன் புஸ்பா ஆகியோரும் கதையோட்டத்துடன் இணைந்த பிரதான பாத்திரங்களாக சிற்றம்பலம், தில்லைவாசன், புனிதா, தவம் ஆசிரியை, ராஜா முதலானவர்களும் காணப்படுகின்றனர். இவர்களுடன் கதையில் இணைந்துகொள்ளும் துணைப் பாத்திரங்களாக கமலக்கண்ணன், ஐயர், மரகதம், ரேணுகா, காந்தன் உட்பட இன்னும் சில கதை மாந்தர்களும் அவ்வப்போது வந்து கதைக்கு உயிர்த் துடிப்பை ஏற்படுத்திச் செல்கின்றனர்.

மூதூர் வ.அ. இராசரத்தினத்தின் ‘ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது’ நாவலின் நாயகன் நாயகிகளாக தாமோதரம், சௌந்தரம் ஆகியோருடன் கதைக்கு உயிர் கொடுக்கும் பிரதான பாத்திரங்களாக மயில்வாகனம், தெய்வானை, சின்னத்தம்பி அதிபர், நாகேந்திரன், அபிராமி ஆகியோருடன் கதையோட்டத்துக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் பரமன், பாலா, செல்லையா, மணியம், தம்பிராசா போன்றோரும் காணப்படுகின்றனர்.

மூன்று நாவல்களிலும் நடமாடிய கதாபாத்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றமையால் கட்டுரையின் விரிவஞ்சி நாவல்களில் உலாவந்த கதை மாந்தர்களின் பெயர்கள் தேவை கருதிப் பயன்படுத்தப்பட இருக்கின்றன. கங்கைக்கரை ஓரம் நாவல் முதலில் சிரித்திரன் சஞ்சிகையில் தொடர் கதையாக வெளிவந்தது முதல் 1978 நூலுருப் பெற்றதில் இருந்து என்போன்ற பலருக்குப் பல்கலைக்கழம்

செல்வதற்குரிய அவாவினைத் தூண்டிய நாவலாகக் கொள்ளப்பட்டது. அதிலும் பேராதனைப் பல்கலைக்கழகம் செல்வதற்குரிய கனவு மெய்ப்படக் காரணமாக அமைந்தது. இந்த நாவலை வாசித்த பலர் பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலைக் கனவு கண்டிருக்கின்றனர். பின்னர் பலர் அங்கு சென்று பார்த்து மகிழ்ந்திருக்கின்றனர். இவ்வாறு பெரும்பாலானோரால் வாசித்து இரசிக்கப்பட்ட நாவலாகவே அது கொள்ளப்பட்டது. நாவலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியலைச் சிறப்புப் பாடமாகக் கற்றவர் என்பதனால் அச்சூழலை அப்பட்டமாக வர்ணித்திருக்கிறார். இந்தக் கள வர்ணனையை சிட்டுக்குருவிகளும் வானம்பாடிகளும் நாவலில்கூட காணமுடியவில்லை. இதனை வெல்லாவெளி விவேகானந்தனின் 'மகாவலி கங்கைக் கரையினிலே' (2025) நாவலில் ஓரளவு காணலாம்.



கங்கைக்கரை ஓரம் நாவல் மூன்று பகுதிகளைக் கொண்டது. நாவலின் பெயருக்கு ஏற்றாற்போல் முதல் இரு பகுதிகளிலும் கதை ஓட்டம் பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலை (மகாவலி கங்கைக்கரை) மையப்படுத்தியே அமைக்கப்பட்டுள்ளது. கதையோட்டத்துக்கேற்ற வகையில் கதைக்களத்தை அமைத்து, கச்சிதமாக உயிரோட்டத்துடன் கதை நகர்ந்திச் செல்கிறார் கதாசிரியர். கதையை வாசிக்கும் வாசகர்கள் மனதில் உணர்வுகளோடு கலந்ததாகக் கதை மாந்தர்கள் காணப்படுகின்றனர். அதேபோலவே யாழ்ப்பாணக் கிராமியச் சூழலை மையப்படுத்திய கதை நகர்வு யாழ்ப்பாணத்தில் முதல் பகுதியில் ஆரம்பமாகி இறுதிப் பகுதியில் அங்கேயே நிறைவடைகிறது.

சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் நாவல் கதையின் நாயகனை வானம்பாடியாகவும் நான்கு பெண்களைச் சிட்டுக்குருவிகளாகவும் சித்திரிக்கின்றது. கதைக்களம் கொழும்பில் செந்தில்நாதனின் அச்சுக்கூடத்தில் அவனைப் பார்த்து 'நீயும் ஒரு மனிசனா?' என ஐயர் ஒருவர் ஆக்ரோசமாகக் கேட்பதுடன் விறுவிறுப்பாக ஆரம்பிக்கும் கதை, யாழ்ப்பாணக் கிராமியச் சூழலில் நனவோட்ட நிலையில் சற்றுத் தாமதித்து, பொல்காவலை புகையிரத நிலையம் சென்று பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலில் சிறிது உலாவி, கொழும்புக்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணத்து சூழலுக்குள் நகர்ந்து பின்னர் உச்சம் பெற்று இறுதியில் கொழும்பில் நிறைவுறுகிறது.

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது நாவல் வெண்மணல் சூழ்ந்த ஆலங்கேணிக் கிராமத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாகும். கலவரத்தால் அடித்து நாசமாக்கப்பட்டு புலம்பெயந்து வாழும் ஆலங்கேணி மக்களின் கடந்த கால வாழ்வியலைக் கூறும் இந்நாவல் வெண்மணற் கிராமம் மீள்குடியேற்றத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது. அங்கு நடந்த அவலங்கள் துன்ப, துயரங்கள், சீரழிவுகள் என்பவற்றைக் கதை மாந்தர்களுக்கூடாகக் கூறும் இந்நாவல் ஆலங்கேணி, தம்பலகாமம், திருகோணமலை, யாழ். நெல்லியடி ஆகிய இடங்களைக் கதைக் களங்களாகக் கொண்டது. நனவிடை உத்தியினூடாக வரலாற்று நோக்கில் உயிர்த் துடிப்புடன் ஆசிரியரால் கதை கூறப்பட்டிருக்கிறது. கதையின் 90 வீதத்துக்கு மேற்பட்ட பகுதி ஆலங்கேணியை மையப்படுத்தியே நகர்ந்து செல்கிறது.

மூன்று நாவல்களின் உருவம், உள்ளடக்கம், உத்தி என்பன சிறப்பாக அமைந்திருக்கின்றன. நாவல் ஆசிரியர்கள் மூவரும் ஈழத்தவர்கள். இம்மூவரும் தமக்கிருந்த மும்மொழித் தேர்ச்சியையும் புனைகதை இலக்கியத் தேர்ச்சியையும் அனுபவத்தையும் கொண்டு நாவலின் உருவம், உள்ளடக்கம், உத்திகளை அதிகூடுதல் கவனமெடுத்து காத்திரமானதாக ஆக்கியுள்ளனர். உருவம் மூன்று நாவல்களிலும் சிறப்புப் பெறுகிறது. உள்ளடக்கம் கச்சிதமாக அமைந்தாலும் ஒருசில இடங்களில் சம்பவங்கள் தொடர்பற்றுத் திடீரென மாறுவது போலான உணர்வினைச் சுவைஞர்களுக்கு ஏற்படுத்திவிடுகின்றன. இது கதைப் போக்கில் சிறிது தொய்வினை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகின்றது. நாவல்களில் கதை சொல்லியால் பாத்திரங்கள் ஊடாக கதைகூறும் உத்தியும் நனவிடை உத்தியும் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, முரண்நிலை, முரண்நகை ஆகிய அழகியல் உத்திகளும் இடம், பொருள், பாத்திர முக்கியத்துவம் உணர்ந்து சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கதைகள் சமகாலத்தில் நடந்திருந்த போதிலும் ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது நாவல் 1960-களில் நடந்த சம்பவங்களைக் கதையாகக் கொண்டுள்ளது. 1990-காலப்பகுதியில் எழுதப்பட்ட இந்நாவல் 1993-இல் நூலாக வெளிவந்தது. சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் நாவல் 1970-க்கு முன்னர் எழுதப்பட்டிருந்தாலும் 2001-இல் நூலுருப் பெற்றது. கங்கைக்கரை ஓரம் நாவலின் கதை 1970-க்கு முன்னர் கருக்கொண்டு நிகழ்ந்திருந்தாலும் 1976 காலப்பகுதியில் சிரித்திரன் சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. முழுமையடையாத அந்நாவல் பூரணப்படுத்தப்பட்டு 1978-இல் வீரகேசரிப் பிரசுரமாக நூலுருப் பெற்றது.

நாவலின் உருவம், உள்ளடக்கம், உத்தி என்பவற்றில் கூடுதல் கவனம் எடுத்ததுபோல் பாத்திரச் சேர்க்கை, பாத்திர அறிமுகம், பாத்திர வர்ணனை, கள வர்ணனை என்பவற்றிலும் கதாசிரியர்கள் விசேட கவனம் செலுத்தியிருக்கின்றனர். பாத்திரங்கள் யாவும் கதை ஓட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் அமைந்ததோடு அப்பாத்திரங்கள்

யாவும் உயிருடன் நடமாடி, வாசகர்களின் ஆர்வத்தினையும் உணர்வினையும் தூண்டி, அதனில் இலயித்திருக்கச் செய் கின்றன. கங்கைக்கரை ஓரம் நாவலில் சிவராசா, கங்கா, கமலம், சறோசா, கனகசபை, தெய்வசிகாமணி, கோபாலரெத் தினம் ஆகிய பாத்திரங்கள் மனதைவிட்டு அகலாதனவாகும். அதில் கங்காவின் பாத்திரம் உச்சத்தைத் தொட்டு தியா கத்தின் உருவமாக நிற்கிறது. வாசகரிடத்தில் ஏக்கம், தவிப்பு, இரக்கம், கவலை என்பவற்றை ஏற்படுத்திவிட்ட பாத்திர மாகக் கங்கா அமைகிறாள். மகாவலி கங்கையை மனதில் கொண்டுதான் கங்கா என்ற பாத்திரத்தை ஆசிரியர் உருவாக் கினாரோ என எண்ணத் தோன்றுகிறது. அத்தனை அழுத்த மானது அக்கதாபாத்திரம்.

சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் நாவலில் நடமாடும் செந் தில்நாதன், புஸ்பா, புனிதா, தவம், ராஜா, சிற்றம்பலம், தில்லைவாசன், ஐயர் ஆகிய மாந்தர்கள் வாசகரி டத்தில் நீங்காது நிலைத்திருப்பர். அதிலும் புஸ்பா என்ற பாத்திரப் படைப்பு உணர்வுடன் கலந்து என்றும் மாறாத இடத்தைப் பிடித்து நிற்கிறது. அந்த நாவலை வாசித்த வர்கள் புஸ்பாவை மறக்கமாட் டார்கள். அதேபோல், ஒரு வெண் மணற் கிராமம் காத்துக் கொண்டி ருக்கிறது நாவலின் ஊடாடும் தாமோதரம், சௌந்தரம், மயில்வா கனம், தெய்வானை, சின்னத்தம்பி அதிபர், நாகேந்திரன், அபிராமி ஆகிய கதாபாத்திரங்கள் மனதைத் தொட்டவை. அவர்களுள் சௌந்த ரத்தின் ஏக்கம், தவிப்பு, எதிர் பார்ப்பு என்பவை வாசகரின் உள் ளத்தைத் தொட்டு நீங்காத இடம் பிடித்து நிற்கின்றன. நாவலில் சௌந்தரம் நடமாடும் நாயகி யாகக் காட்டப்பட்டிருக்கிறாள்.




கங்கைக்கரை ஓரம் நாவலைத் தவிர ஏனைய இரு நாவல்க ளிலும் பாத்திர வார்ப்பு மிக அளவோடு உள்வாங்கப்பட்டி ருக்கின்றன. நாவல்கள் மூன்றிலும் பாத்திர அறிமுகத்தில் அவர்களின் குணநலன், பண்புகள், நடத்தை என்பவற்றை வ.வே.சு. ஐயர், சாண்டில்யன், கல்கி, லா.சா.ரா போன்ற நாவ லாசிரியர்கள் போல் அல்லாமல் கதாசிரியர்கள் மூவரும் மிகச் சுருக்கமாகக் கதையின் இடையிலும், உரையாடல் களின் போக்கோடு ஒத்தும் அறிமுகம் செய்கின்றனர். அத்தோடு பாத்திரங்களின் உடல் தோற்றம், நடை, உடை, பாவனை, அணிகலன்கள், அங்க அசைவுகள், உடல் மொழி, உரையாடல், மௌனம் என்பன இயற்கையோடு ஒப்பிட்டு அளவோடு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. கங்கைக்கரை ஓரம் நாவலில் சில இடங்களில் வர்ணனை அதிகரித்துக் காணப்ப டுகின்றது. இரசனையை விரும்பி அழகியல் உணர்வோடு வாசிப்பவர்களுக்கு இது பெரிதாகத் தென்படாது. ஏனைய இரு நாவல்களிலும் பாத்திர வர்ணனை அளவோடு கையா ளப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணக் கிராமியச் சூழல், இரயில் பயணம், பேராதனைப் பல்கலைக்கழகம், அதனோடு ஒத்த சூழல், பகிடிவதை நடந்த இடங்கள், இயற்கை வனப்பு, காலநிலை, விரிவுரை மண்டபங்கள், சலசலத்து ஓடும் மகாவலி கங்கை, மாணவர் விடுதிகள், நூலகம், வேலைத்தளம், கொழும்பில் புஸ்பாவின் வீடு, யாழ். வைத்தியசாலை என முன்னைய நாவல்களின் களம் விரிய ஆலங்கேணிக் கிராமத்தின் சமூக, பௌதிக, பண்பாட்டுச் சூழல், தம்பலகாமம் கிராமத்தின் இயற்கை வனப்பு, தம்பலகாமம் ஆதிகோணநாதர் ஆலய வருடாந்த உற்சவம் அகியவற்றை அளவோடு வ.அ. இராசரத் தினம் சுருக்கமாக வர்ணித்திருப்பதன் மூலம் வாசகர்களை அந்தந்த இயற்கைச் சூழலுக்கு அழைத்துச் சென்று தரி சிக்கச் செய்திருக்கிறார். கள வர்ணனையில் மூவரும் வெற்றி கண்டிருக்கின்றனர் என்றே கூறலாம். கங்கைக்கரை ஓரம் நாவலின் ஒரு சில இடங்களில் களவர்ணனை சிறிது அதிகமா கவும் உள்ளன. வாசகர் இதனை ஊன்றி, அவதானித்து வாசிக் கும்போது மாத்திரமே ஊகித்துக் கொள்ளலாம்.

ஒரு நாவல், பேசப்படுவதற்கும் தொடர்ந்து வாசிக்கப்படுவதற்கும் பொருத்தமான மொழிநடை பயன் படுத்தப்படவேண்டும். மொழி என்பது சொல்ல வந்த கருத்தை, செய்தியை வாசிப்பவருக்கு, கேட்ப வருக்கு இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய ஊடகமாகும். பயன் படுத்தும் மொழிநடை குறித்த சமூ கத்தில் பயன்பாட்டில் உள்ளதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமாக இருத்தல் வேண்டும். அந்த வகையில் குறித்த நாவல்களில் சரளமான, இலகுவான, வட்டார வழக்கு மொழிநடை பேச்சு வழக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பாத்திரங்களின் சமூக அந்தஸ்து, கல்விநிலை என்பவற்றுக்கு ஏற் றாற்போல் மொழிநடையினை ஆசிரி யர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். மொழியைப் பயன்படுத்துவதில் ஆசிரியர் மூவருக்கும் இருந்த மொழித்தேர்ச்சி, அனுபவம், ஆற்றல், ஆளுமை, களப் பிரதேச மாந்தர்கள்மீது கொண்ட பரீட்சயம், விருப்பு என்பன வெளிப்பட்டிருக்கிறது. லா.சா.ரா, எஸ். பொன்னுத்துரை, ரஞ்சகுமார் ஆகியோரிடம் காணப்பட்ட வித்துவ நடையினை மூன்று நாவல்களிலும் காண முடிய வில்லை. இயல்பான மொழிநடையில் அமைந்திருப்பது நாவல்களுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

கங்கைக்கரை ஓரம் நாவலில் வரும் கதாபாத்திரங்களின் உரையாடல்கள் உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்ப டுத்தும் வகையில் ஒவ்வொரு சொற்களுக்கும் உயிர் கொடுக் கப்பட்டு உயிருடன் கலந்த உணர்வாக வெளிப்பட்டிருக் கின்றன. உரையாடல்களின்போது ஒவ்வாரு பாத்திரமும் உயிருடன் நடமாடுவது போலான உணர்வினை கதையில் கையாளப்பட்ட மொழிநடை ஏற்படுத்தி விடுகின்றது. ஒவ்வொரு பாத்திரமும் தத்தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. சிவராசனைப் பல்கலைக்கழகத் துக்குப் படிக்க அனுப்புவதற்குப் பணத்துக்கு என்ன செய்யலாம் என்பது தொடர்பாகக் கனகசபை, செல்லம்மா, கமலம் ஆகிய மூவருக்கும் இடையிலான உரையாடல்கள்

அவர்களின் உள்ளத்து உணர்வுகளையும் துன்ப துயரங்களையும் தத்ரூபமாக வெளிப்ப டுத்தி நிற்கின்றன. சிகாமணி, சறோசா, கோபால ரெத்தினம் ஆகியோரின் உரையாடல்களில் உள்ளக் கிடக்கைகள் வெளிப்பட்டு நிற்கின்றன. அதிலும் கங்கா சிவராசனுக்கு இடையிலான உரையாடல்களில் கங்காவை உச்ச இடத்தில் கொண்டு போய் நிறுத்துகின்றார் ஆசிரியர் செங்கை ஆழியான். சிவராசன் தனது காதலை வெளிப்படுத்திய போதிலும் கங்கா புத்தி சாதுரி யமாக இரு சாராரின் குடும்ப நிலவரத்தையும் சிவராசனின் குடும்பக் கஷ்டத்தையும் நாசுக்காக எடுத்துக் கூறி உணர்த்த முயல்



வதும், இருதலைக் கொள்ளி எறும்புபோல் தனது காதலை வெளிப்படுத்த முடியாமல் தவிப்பதும், இறுதியில் மறைமுக மாகத் தனது சம்மதத்தை மௌனமாக தெரியப்படுத்துவதும் சொற்களுக்கும் உணர்வுகளுக்கும் ஆசிரியர் கொடுத்த முக் கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. தியாகத்தின் உருவ மாகவே கங்கா சித்திரிக்கப்பட்டிருக்கின்றாள். கமலமும் கன கசபையும் சிவராசனுக்கு எழுதிய கடிதங்கள், கங்கா சறோசா வுக்கு எழுதிய கடிதம் ஆகியன வாசகரின் மனதில் உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தி விடுகின்றன.

சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் நாவலின் ஆரம்பமே விறு விறுப்பாக அமைகின்றது. கொழும்பில் அச்சக உரிமையா ளரான செந்தில்நாதனுக்கும் ஐயருக்கும் கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான உரையாடல் உணர்வுபூர்வமாக அமைந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் செந்தில்நாதன், சிற் றம்பலம், தில்லைவாசன் ஆகியோருக்கிடையே தமது வீட்டில் நடக்கும் உரையாடல் அவர்களின் வறுமை நிலையைத் தத்துரூபமாக வெளிப்படுத்திவிடுகின்றது.

அதேபோல் தனது தந்தையைத் தவிர எந்தவொரு ஆடவ ரையும் ஏறெடுத்தும் பார்க்காதவள் புஸ்பா. யாழ்ப்பாணத்தில் பிரபலமான பாடசாலை விடுதியில் இருந்து படித்தவள். தனது பாடசாலை நண்பியான புனிதாவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் கேட்டு மனதார வெறுத்துப் போனவள் என்பதனால் ஆண்கள் மீதான வெறுப்பு அவளுக்கு ஏற்பட்டிருந்தது. பொல்காவலை இரயில் நிலை யத்தில் மரணத்தின் விளிம்பில் இருந்து தன்னைப் பாதுகாத்த செந்தில்நாதனை கருணையுடன் பார்த்த பார்வை, அதற்குப் பின்னரான உரையாடல், தனது உயிரையும் உடலையும் செந்தில்நாதனிடம் அர்ப்பணம் செய் துவிட்டது போலான தன்னை மறந்த நிலை, அத்தருணத்தில் சக மாணவர்கள் தன்னையும் செந்திலையும் இணைத்து மிக மோசமாகக் கேலி, கிண்டல் செய்த போதிலும் தன்னை மறந்து கடவுளுக்கும் பக்தைக்கும் இடையேயான உற வைப்போல் மானசீகமாக வெளிப்படுத்திய புஸ்பாவின் உணர்வை ஆசிரியர் சொற்களுக்கும் மௌனத்துக்கும் உயிர் கொடுத்துச் சித்திரித்திருக்கின்றார். அந்த உணர்வுக்கு உயிர் கொடுக்கும் வகையில் புஸ்பா நாவலின் இறுதிவரை செந்திலின் பெயரை உச்சரிக்காது மானசீகமாக முன்னிலை உயர்திணையில் அழைப்பதுபோல் நாவலில் கையாண்டி ருப்பது மெச்சத்தக்கது. புஸ்பா தனது காதல் உணர்வினை அடிமனதில் இருந்து வெளிப்படுத்துவதுபோல் ஒவ்வொரு சந் தர்ப்பத்திலும் ஆசிரியர் வெளிக்காட்டி இருக்கின்றார். இதனை பொல்காவலையில் இருந்து பேராதனை வரையான இரயில் பயணம், பல்கலைக்கழகத்தில் மகாவலி கங்கைக்கரை ஓரத்தில், கொழும்பில், செந்திலின் வீட்டில், வைத்தியசாலையில் நடக்கும் உரையாடல் ஒவ்வொன்றிலும் கண்ணி யமான மானசீக உணர்வினைப் புஸ்பாவின் ஊடாக வெளிப்படுத்தி இருக்கின்றார்.

புஸ்பா என்ற பாத்திரத்தினூடாக அவளின் காத்திருப்பு, எதிர்பார்ப்பு, ஏக்கம், தவிப்பு என் பனவற்றை வெளிப்படுத்தும் ஆசிரியர் தனது வாழ்க்கையில் செந்திலைத் தவிர வேறு எந்த ஒரு ஆணுக்கும் இடமில்லை என்ற மனவுதி றுயைப் புஸ்பா கொண்டிருப்பதையும் தத்துருப மாகச் சித்திரிக்கிறார். அதனால் இக்கதையில் புஸ்பா உயர்ந்த இடத்தில் உள்ளாள். செந்தில்நாதன், தவம் ஆசிரியை, புனிதா, ரேணுகா, சிற்றம்பலம், ராஜா ஆகியோ ருக்கு இடையிலான உரையாடல்களும் நீண்டு செல்லாது கரு, உருவம், உள்ளடக்கத்துக்கு ஏற்ற வகையில் சொற்களைக் கவனமாகக் கையாண்டிருப்பது பாராட்டத் தக்கது. இந்நாவலிலும்கூட ஒரு கடிதம், இரு தந்திகள் முக் கியத்துவம் பெறுகின்றன.

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது நாவல் ஓரிரு வருடத்துள் குறுகிய காலத்தில் நிகழ்ந்த உண்மைச் சம் பவங்களின் தொகுப்பாக அமைந்திருக்கிறது. ஆலங்கேணிக் கிராமத்தில் தங்கள் இல்லத்தில் நடக்கும் உரையாடல்கள், மயில்வாகனம், தாமோதரம், நாகேந்திரம், தெய்வானை ஆகி யோருக்கு இடையேயான உரையாடல்கள் தமது வீட்டுச் சூழல், வறுமை, துன்ப, துயரங்கள், குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்காகத் தினமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தேடல்கள் என்பன மிகச் சிறப்பாக சித்திரிக்கப்பட்டிருக் கின்றன. தாமோதரம், சின்னத்தம்பி அதிபர், பரமன், பாலு ஆகியோருக்கு இடையிலான உரையாடல்கள் கல்வி அபிவி ருத்தியின் ஊடாக மாத்திரமே தமது கிராமத்தினை முன்னேற் றலாம் என்ற முற்போக்குச் சிந்தனையின் பிரதிபலிப்பாக உரையாடல் அமைந்திருக்கின்றன. தாமோதரம், சௌந்தரம், ஆகியோருக்கு இடையிலான உரையடல்கள் கல்வி, காதல், ஊடல், அன்பு, கருணை, எதிர்பார்ப்பு, ஏக்கம் என்பவற்றை மையப்படுத்தியதாக அமைந்திருக்கின்றன. தாமோதரத்திடம் இருந்து காதல், அன்பு, பாசம், திருமண வாழ்வு ஆகிய வற்றை எதிர்பார்த்து ஏங்கும் கதாபாத்திரமாகவே சௌந்தரம் சித்திரிக்கப்பட்டிருக்கின்றாள். இங்கும் ஒரு தந்தியும் கடிதமும் முக்கியத்துவமுடையதாக அமைகின்றன. ஆசிரியர் கதையின் உரையாடலுக்குப் பயன்படுத்தியிருக்கும் ஒவ் வொரு சொற்களும் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து வாசகரின் முன் நடமாடுவது போலான உணர்வினை ஏற்ப டுத்தி இருக்கின்றன.

அடுத்து மூன்று நாவல்களின் கதை ஆரம்பம், மத்தி, நிறைவு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றன. முதலாவது, மூன்றாவது நாவலின் கதைகள், தத்தம் கதை மாந்தர்களின் கிராமியச் சூழலில் இருந்து ஆரம்பமாக இரண்டாவது நாவலின் கதை கொழும்பில் செந்தில்நாதனின் அச்சகத்தில் காலை வேளையில் கோயில் ஐயரின் ஆக்ரோசமான கேள்வி களுடன் ஆரம்பமாகிறது. பின்னர் கதை யாழ்ப்பாணம் நோக்கி செந்தில்நாதனின் கிராமிய வீட்டுச் சூழலுக்குள் நகர் கிறது. இங்கு மூன்று நாவல்களின் கதைகளும் பல்கலைக்கழ

கத்துக்குச் சென்று படித்துப் பட்டம்பெற்று, அரச தொழிலில் இணைந்து கொள்வதன் மூலமே தமது வாழ்க்கைத்தரம் உயரும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடாகவே கதைகள் நகர்கின்றன. சிவராசாவும், செந்தில்நாதனும் பட்டதாரியாகும் கனவுகளோடு கலைப் பிரி வுக்குத் தெரிவாகிப் பேராதனைப் பல்கலைக்க ழகம் செல்கின்றனர். தாமோதரன் வைத்திய ராகும் கனவுகளோடு நெல்லயடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் கற்கின்றான். கதைகளின் நகர்வின் இடையில் சிவராசா - சரோசா, தாமோதரம் - சௌந்தரம் ஆகியோருக்கிடையில் சிறிய காதல் உணர்வு அரும்பி இருப்பது இரு நாவல்களிலும் சுட் டிக்காட்டப்படுகின்றது. மற்றைய நாவலில் செந்தில்நாதன் புஸ்பா இருவரும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி இரயிலில் சென்று கொண்டிருக்கின்றனர். பொல்காவலை இரயில் நிலையத்தில் இருவரும் இரயிலில் இருந்து இறங் கும்போது ஏற்பட இருந்த மரணத்தில் இருந்து புஸ்பாவைச் செந்தில் பாதுகாத்ததனால் புஸ்பாவின் உள்ளத்தில் ஆழமா கவும் செந்தில் இடத்தில் மென்மையான இனம்புரியாத காதல் உணர்வும் அரும்பி வருவதையும் கதையின் போக்கில் உணர முடிகிறது. மூன்று நாவல்களின் கதைகளும் இவ்வாறுதான் நகர்ந்து செல்கிறது.



நாவல்களின் கதைகளின் மத்தியில் சில திருப்புமுனைகள் உருவாகின்றன. சிவராசா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்தில் கற்கின்றபோது கலைப் பிரிவில் கற்பதற்காக முதலாம் வருட மாணவியாக கங்கா வருகிறாள். இவள் சிறுவ யதில் சிவராசனின் வீட்டுக்கு அருகில் குடியிருந்தவள். பகிடி வதையின்போது அறிமுகமாகிப் பழைய நட்பு புதுப்பிக்கப்ப டுகிறது. கங்காவின் அழகில் மயங்கிய சிவராசன் மையல் கொள்கிறான். இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. பல்வேறு காரணங்களைக்கூறி நிதானமாக மறுத்து வந்த கங்கா இறுதியில் ஒருநாள் இரவு விருந்துபசாரத்துக்கு முன்னர் சிவராசன் மனமுருகிக் காதலை வெளிப்படுத்திய நிலையில் மௌனம் சம்மதத்துக்கு அடையாளம் என்பது போல் வெளிப்படுத்துகிறாள். இது கதையின் முதலாவது திருப்பு முனையாக அமைகிறது.

செந்தில் புஸ்பாவிடையே அரும்பியிருந்த காதல் பேராதனைப் பல்கலைக்கழக மகாவலி கங்கைக் கரையில் மலை அட்டை கங்காவைக் கடித்த பின்னர் உறுதிசெய்யப்பட்டு, இருவரி னதும் இரு குடும்பத்தாரினதும் எதிர்கால நன்மை கருதி பட் டப்படிப்பு முடியும் வரை தனிமையில் சந்திப்பதில்லை என்ற உறுதி மொழியோடு செல்கின்றனர். விடுதிக்குச் சென்ற செந் திநாதனுக்கு அன்று பகல் கடிதம் ஒன்று கிடைக்கிறது. அக்க டிதத்தினைச் செந்திலின் அண்ணன் தில்லைவாசன் எழுதியி ருந்தான். கொழும்பு பிரதம அஞ்சல் அலுவலகத்தில் தொழில் கிடைத்தமைக்கான நியமனக் கடிதமும் அதற்குள் இருந்தது. கடமை ஏற்பதற்கு இரு தினங்கள் மாத்திரம் இருந் ததமையால் புஸ்பாவுக்கும் விரிவுரையாளர் கமலக்கண் ணனுக்கும் கடிதம் எழுதி நண்பனிடம் கொடுத்துவிட்டு அன்றிரவே புறப்படுகிறான். இதுசிட்டுக்குருவிகளும் வானம் பாடியும் கதையின் முதலாவது திருப்புமுனையாகும்.

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது நாவலின் கதையின் மத்தியின் பின்னர் தந்தை மயில்வா கனம் இறந்துவிட்டதாகத் தாமோதரத்தின் அண்ணன் நாகேந்திரன் சின்னத்தம்பி அதிப ருக்கு அனுப்பிய தந்தி இக்கதையின் பிரதான திருப்பு முனையாக அமைகிறது.

கமலம் சிவராசாவுக்கு எழுதி அனுப்பிய உருக் கமான கடிதம் கங்காவின் கையில் கிடைத்தமை இரண்டவது திருப்பு முனை யாகும். சரோசா தனது பாடசாலை நண்பியான கங்காவுக்கு 'அத்தான் சிவராசனைத் தனக்கு விட்டுக் கொடுக்குமாறு' உருக்கமாக எழுதிய கடிதம் கங்கைக்கரை ஓரம் கதையின் மூன்றாவது திருப்புமுனையாகும்.

புஸ்பா செந்தில் இருவரும் தீர்மானித்தபடி விரதம் காத்துக் கொண்டிருந்தனர். இவ்வேளையில் செந்திலின் அண்ணன் தில்லைவாசனின் இறப்பு சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் கதையின் மூன்றாவது திருப்புமுனையாகும். தாமோதரன் உயர்தரப் பரீட்சை எழுதி முடித்து வந்த பின்னர், விரக்தியில் 'தனக்குக் கிடைக்காத பல்கலைக்கழகக் கல்வி தம்பிமா ருக்கும் தங்கைக்கும் கிடைக்கவேண்டும்' அவர்களுக்காகத் தனது வாழ்க்கையைத் தியாகம் செய்ய முடிவு செய்வது ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது நாவலின் கதையின் இரண்டாவது திருப்புமுனையாகும். தாமோதரம் சௌந்தரத்திடம் 'நீ இனிமேலும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளாதே' எனக் கூறியபோது சௌந்தரம் 'இன்னமும் வளர்த்துக் கொள்வதற்கு நான் முட்டாளுமல்ல. சுயமரியாதை இல்லாதவளுமல்ல. தயவு செய்து என்னிடம் கதைக்க வேண்டாம்', 'இந்த வருஷம் எஸ்.எஸ்.சீ.-யை நிச்சயமாகப் பாஸ் பண்ணுவேன். அதன் பிறகு என்னாலும் சுதந்திரமாக நிமிர்ந்து நிற்க முடியும்' எனக் கூறிய கருத்து அவளின் மனவு றுதியை எடுத்துக் காட்டுகிறது.

நாவல்களின் இறுதிக்கு முன்னரான சில சம்பவங்களையும் இவ்விடத்தில் எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும். பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டுப் பரீட்சையின் இறுதி நாள் சிவராசன் பரீட்சை முடிந்து கவலையோடு வருகிறான். கங்காவும் தன் கவலைகளை அடிமனதில் அடக்கி வைத்தவ ளாகப் பில்லரிங் செக்சனில் நின்று கொண்டு புன்சிரிப்புடன் வரவேற்கிறாள். பல்கலைக்கழக வாழ்க்கையிலும் தனிப்பட்ட இருவரினது வாழ்க்கையிலும் இருவருக்கும் இன்று இறுதிநாள். சிவராசனால் கங்காவை மறக்க முடியவில்லை. கங்கா தன் நண்பி சரோசாவுக்காகத் தனது வாழ்க்கையை விட்டுக் கொடுத்துப் பிரிய முடியாமல் வேதனைகளைச் சுமந்து கொண்டு பிரிந்து செல்கிறாள். இடிந்துபோய், எல்லாம் இழந்தவன்போல் திக்பிரமை பிடித்தவனாக அவளையே பார்தபடி நிற்கிறான். இது கங்கைக்கரை ஓரம் நாவலின் நான்காவது திருப்புமுனை. மழையில் நனைந்து கொண்டு வலிகள் வேதனைகளோடு சிகாமணியுடன் ரூமுக்குச் சென்றவனுக்கு சிவராசனின் தந்தை கனகசபை எழுதி அனுப்பிய கடிதம் கிடைக்கிறது. அக்கடிதம் கதையின் இறுதித் திருப்பமாகும்.

சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் நாவலில் ராஜா சிற்றம்ப லத்துக்கு அனுப்பிய தந்தியைப் பார்த்த புனிதா விசம் குடிப் பதும், சிற்றம்பலம் செந்திலுக்குத் தந்தி மூலம் தெரியபப்ப் படுத்தி, உடன் வருமாறு தந்தி அனுப்புவதும் இக்கதையின் இறுதித் திருப்பங்களாகும்.

நாவலின் இறுதி முடிவு கதையில் திருப்பத்தையும் வாசகரின் எதிர்பார்ப்பையும் கதை சொல்லியின் இலக்கையும் உள்ளக் கிடக்கையையும் நிறைவு செய்வதாக அமைய வேண்டும். ஓரிரண்டைத் தவிர பெரும்பாலும் வாசகர்கள் மகிழ்ச்சிகரமான நிறைவினையே எதிர்பார்ப்பர். கதையின் இறுதி முடிவு வாசகர்மீது திணிப்பதாகவோ, அவர்களைக் கவலையில் ஆழ்த்துவதாகவோ அமைவது கதை ஓட்டத்துக்குப் பொருத்தமாக அமையாது. இங்கு எடுத்துக்கொண்ட மூன்று நாவல்களும் உண்மைச் சம்பவங்கள் என்பதை ஆசிரியர்களும், அதனைச் சார்ந்தவர்களும் குறிப்பிடுகின்றனர். இருந்தும் இறுதி முடிவில் சில நெருடல்களும் தென்படுகின்றன. முதல் நாவலில் நாயகி கங்காவை அறிவு, சாதுரியம், முதிர்ச்சி கொண்ட பெண்ணாகச் சித்திரித்து இறுதியில் தியாகத்தின் உருவமாக அவள் காட்டப்படுகிறாள். சிவராசா கங்காவைப் பிரிந்த சோகம், ஏக்கம் கவலைகளோடு சரோசாவைத் திருமணம் செய்கிறான்.



கங்கா சரோசாவுக்கு எழுதிய கடிதம் எதிர்பாராமல் சிவராசாவின் கையில் கிடைக்கிறது. அதில் '...அதிஷ்டம் என்பது எல்லாருக்கும் வாய்ப்பதில்லை. நான் துரதிஷ்டம் பிடித்தவள். உன் அத்தானை உன்னிடம் திருப்பித் தந்துவிட்டேன். சறோ எனக்காக உன்னிடம் ஒன்றைத்தான் யாசிக்கிறேன். எப்போதாவது அவரிடம் எனக்காகச் சொல், அவரின் கங்கா அவரை ஒருக்காலும் ஏமாற்றவில்லை என்று. கடைசி நாள் அவள் அவரிடம் சொல்லியதெல்லாம் மனமறிந்த பொய் என்று சொல். இதயத்தைக் கல்லாக்கி அவரின் இதயத்தைச் சுக்கல் சுக்கலாக்கி விடை பெற்றேன் என்று சொல்' அதற்குமேல் அவனால் வாசிக்க முடியவில்லை. சிவராசாவின் 'இதயம் அழுதது... '...கங்கா! என் அன்பே! உன்னை நான் இழந்து விட்டேன்' எனக் கதை நிறைவடைகிறது. அழியாத கோலமாக சிவராசனின் மனதில் கங்கா மீண்டும் நீங்காத இடம் பிடித்து விட்டாள்.

இரண்டாவது நாவலில் சிட்டுக்குருவிகள் பறக்கின்றன. வானம்பாடி மாய்ந்து விடுகிறது. என்னமோ தெரியவில்லை சிற்றம்பலத்தின் குடும்பம் துரதிஷ்டவசமானதுதான். மனைவி, செந்தில் உட்பட ஆறு பேர் இறந்துவிட்டனர். புஸ்பா செந்திலுக்காக நான்கு வருடம் காத்திருந்து, திருமணம் செய்யாத விதவை. புனிதா தில்லைவாசன் இறந்த பின்னர் செந்தில் தனக்கும் தனது பிள்ளைக்கும் வாழ்வு தருவான் எனக் காத்திருந்து ஏமாந்த விதவை. செந்தில்மீது ரேணுகாவுக்கு ஒருதலைக் காதல். தவம் ரீச்சருக்கும் பழைய நினைவுகள் உள்மனதில் ஒரு நெருடலாக இருக்கிறது. சிவராசனை மனதில் பதித்தவாறும் நன்றி உபகாரமாகவும் தினமும் முருகன் சிலையை வழிபடுகிறாள்.

'சுவரில் பழைய பானையை ஓட்டையிட்டு யாரோ அறைந்து கொடுத்த கூட்டைப் பெரிதாக நம்பி சீழ்க்கை அடித்துச் சப்தித்து மகிழ்ந்திருக்கின்றன. அவற்றின் மத்தியில் ஒரு வானம்பாடியேனும் இல்லை'. '...அது என்றோ எங்கோ பறந்து விட்டதே' என்று கதை முற்றுப் பெறுகிறது.

மூன்றாவது நாவலில் தாமோதரம் சௌந்தரம் இருவரும் காதலர்களாகப் பல எதிர்பார்ப்புகளுடன் வாழ்கின்றனர். ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த தாமோதரம், ஆசிரியர் நியமனம் கிடைத்த சௌந்தரத்துக்குத் தனது ஞாபகார்த்தமாக 'விதி என்ன செய்யும்?' என்ற நூலைப் பரிசளித்திருந்தான். அந்நூலின் முன்பக்கத்தில் உள்ளே உள்ள பக்கம் ஒன்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை வாசித்த சௌந்தரம் 'கிருஷ்ணா நேருவால் மட்டுமல்ல என்னாலும் காத்திருக்க முடியும். பன்னிரெண்டு ஆண்டுகள் அல்ல யுகம் யுகாந்திரமாக என்னாலும் காத்திருக்க முடியும்', 'என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உம்மோடு உற்றோமேயாவோம். உமக்கே நாமன்பு செய்வோம்' என்ற திருப்பாசுரப் பாடலடியுடன் கடிதத்தை உருக்கமாக நிறைவு செய்திருந்தாள். அத்தோடு கதையும் முற்றுப்பெறுகிறது.

நாவல்களில் வரும் நாயகிகளான கங்கா, சௌந்தரம் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த கதைமாந்தர்கள், புஸ்பா உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவள். அவளும் நடத்தையில் மத்தியதரத்தைப் போன்றவள்தான். மூன்று கதையின் நாயகிகளையும் அறிவு, அனுபவம், சாதுரியம் நிறைந்த பெண்களாகச் சித்திரித்திருப்பது நாவலாசிரியர்களின் சாதுரியம். இந்த மூன்று பாத்திரங்களும் வாசகரிடத்தில் பெண்ணியம் மீதான பரிவு, இரக்கம், கருணையையும் ஏற்படுத்தி விடுகின்றன. இந்த மூன்று நாவலையும் வாசிப்பவர்களிடத்தில் இத்தகைய ஐயம் நிச்சயம் ஏற்படும். கதையின் போக்குக்கு ஏற்ப நாவல்களின் முடிவுகள் அமைந்திருக்கின்றன. உண்மைச் சம்பவங்கள் என்பதனால் கங்கா, புஸ்பா, சௌந்தரம் ஆகிய பாத்திரங்கள்மீது கதாசிரியர்களால் திருப்புமுனையை ஏற்படுத்த முடியவில்லை என்பதற்கும் இடமுண்டு. தாமோதரத்துக்கும் சௌந்தரத்துக்கும் திருமணம் நடக்கலாம். நடக்காமலும் இருக்கலாம். ஆனால், கங்கா, புஸ்பா, புனிதா மூவரும் பரிதாபத்துக்குரியவர்கள். இதில் சரோசா, தவம் ரீச்சரும் குறிப்பிடத்தக்க பாத்திரங்கள்.

பல்கலைக்கழகங்களில் நடந்தேறும் காதல் பெரும்பாலும் திருமணத்தில் முடிவதில்லை என்ற மாயை பலரிடம் நிலவுகிறது. கண்டி மழையும் கம்பஸ் காதலும் ஒன்றுதான் என்பது போல் சிவராசன் கங்கா, செந்தில்நாதன் புஸ்பா காதலும் இரு நாவல்களில் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு உரமூட்டுவதுபோல் மெடிக்கோ சபாநாயகம் வசந்தி காதல் முறிவடைவதும் கங்கைக்கதை ஓரம் நாவலில் வரும் ஒரு தகவல். பல்கலைக்கழகத்தில் தோன்றிய உண்மைக் காதல்கள் பெரும்பாலும் திருமணத்தில் நிறைவேறி இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மூன்று நாவல்களிலும் கதை நாயகர்களாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும் சிவராசா, செந்தில்நாதன், தாமோதரம் ஆகிய மூவரும் உரிய வேளையில் உரிய சிறப்பான தீர்மானங்களை எடுக்க முடியாதவர்களாகவும் உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டுத் திடீரெனத் தீர்மானம் எடுத்துக் கதையில் திருப்புமுனையை ஏற்படுத்தி இருப்பது போலான உணர்வை ஏற்படுத்தி இருக்கிறது. கங்கா சிவராசனிடம் இருவரினதும் குடும்பச் சூழல், இலட்சியம், கடமை, பொறுப்பு, எதிர்பார்ப்புகள் என்பன பற்றியெல்லாம் எடுத்துக்கூறிக் காதலர்களாக இருப்பதையும்விட நண்பர்களாக இருப்போம் எனப் பலவாறு அறிவுரை கூறி இருக்கிறாள். இருவருக்கும் இடையே அரும்பு

விட்டிருந்த காதல் வெளிப்படுத்தப்பட்டு காதலர்களாகி, நிர்ப் பந்தம் காரணமாகத் தியாகத்தில் பிரிகிறது. சிவராசாவின் கதாபாத்திரம் எதையும் அனுசரிச்சுப் போகக்கூடிய மென் போக்கானதாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

தனது குடும்ப வறுமை, படிப்பு, எதிர்காலம் பற்றிய எதிர் பார்ப்பு, வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகள், தாய், சகோத ரங்களின் இழப்பு, அதனால் ஏற்பட்ட விரக்தி, ஏக்கம், தவிப்புக் கொண்டதாக செந்தல்நாதனின் பாத்திரம் சித்திரிக் கப்பட்டிருக்கிறது. புத்திசாதுரியமாகத் தீர்மானம் எடுக்க முடியாத தன்மை, ஒன்றில் நிலைத்திருப்பு இல்லாமை, புஸ்பாவின் காதலின்மீது கொண்ட ஐயம். புஸ்பா தனது அந்தஸ்து, கௌரவம், தான் வாழ்ந்த வாழ்க்கை என்பவற்றை யெல்லாம் விட்டுக் கொடுத்து, காதல் பக்தியினால் செந்திலை நெருங்கிய போதெல்லாம் எடுத்தெறிந்து பேசும் பண்பு காணப்படல். அதற்குத் தமது குடும்பச் சூழலும் புஸ்பாவின் தந்தை ராஜா மீது கொண்ட பயமும் காரணமாக இருக்கலாம். அது மாத்திரமன்றி கிடைத்த அரச தொழிலில் நிலைத்திருக்காமை, புனிதாவைப் பிடித்திருக்கிறதா எனத் தவம் ரீச்சர் புனிதாவுக்கு முன்னால் வைத்துக் கேட்டபோது ஆம் என்று கூறி அவளின் உள்ளத்தில் ஆசையை வளர்த்தமை. பின்னர் தமையன் தில்லைவாசனுக்குத் திருமணம் செய்து கொடுத்தமை, தில்லைவாசனின் இறப்பு. கைக்குழந்தையுடன் புனிதா செந்திலை நேசித்தல். அவனையே நம்பியிருத்தல். இது தெரிந்தும்கூட உரிய தீர்மானம் எடுக்காமை. சில சந்தர்ப்பங்களில் புஸ்பாவை மறந்தது போல் நடந்து கொள்ளல் ஆகியன செந்திலின்மீது வாசகருக்கு ஒரு நெருடலை ஏற்படுத்துகிறது. அத்தோடு செந்திலின் குடும்பத்தை துரதிஷ்டமாகக் காட்டிச் செந்தி லையும் சாகடித்து இருவரை விதவைகளாக ஆக்கி இருப் பதும் வாசகருக்கு ஒரு தவிப்பை ஏற்படுத்தி இருக்கும். இதே போலான கதையின் முடிவொன்றினை ஆசிரியர் கடற்காற்று (2000) நாவலிலும் காட்டியுள்ளார். அதில் இடம்பெறும் செபமாலை, அன்னா ஆகிய கதை மாந்தர்களும் இவ்வாறே அமைகின்றனர்.

செந்திலைப் போன்றதொரு குணப்பண்பினைக் கொண்ட கதாபாத்திரமாக தாமோதரத்தை ஆசிரியர் காட்டி இருக் கின்றார். சௌந்தரத்தின் மனதை அடிக்கடி நோகடிக்கின்ற கதாபாத்திரமாக தாமோதரம் காணப்படுகின்றான். தந்தை இறந்த பின்னர் வைத்தியராகும் கனவைக் கைவிட்டமை. சுய பலத்தில் நம்பிக்கை வைப்பதில் தடுமாற்றம். முரண்நிலை, சிலவேளைகளில் உறுதி இழத்தல் என வரும் தாமோதரம் பாத்திரம் சொல்லம்புகளால் சௌந்தரத்தின் மனதை அடிக்கடி நோகடிக்கின்றான். இது சௌந்தரத்தின்மீது ஒரு பரிவுணர்வை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர் ஒரு அத்தியா யத்தைச் சேர்த்து, இருவருக்கும் திருமணம் செய்து வைத்து கதையை நிறைவு செய்திருக்கலாம் என்பது கதையை வாசித்த பலரின் அபிப்பிராயமாகும்.

கல்கியின் சோலைமலை இளவரசி (1994) என்ற வரலாற்று நாவலில் மாறனேந்தல் நாட்டின் இளவரசன் உலகநாதத் தேவருக்கும் சோலைமலை இளவரசி மாணிக்கவல்லிக்கும் இடையே பிரிக்க முடியாத அற்புதக் காதல். சோலைமலை மன்னர் ஆரம்பத்தில் எதிர்த்துப் பின்னர் சம்மதிக்கிறார். பிரித்தானிய ஆளுநர் செய்த சதியால் இளவரசி தற்கொலை செய்கிறாள். பிரித்தானியப் படையால் உலகநாதன் சுட்டுக் கொல்லப்படுகிறான். அந்த இருவரும் நூறு வருடங்களின் பின்னர் குமாரலிங்கம் பொன்னம்மாவாகப் பிறந்து அதே இடத்தில் சந்தித்து மீண்டும் இருவரும் தீவிரமாகக் காதலிக் கின்றனர். இறுதியில் இருவரும் சேராமல் பொன்னம்மா தான் சோலைமலை இளவரசி மாணிக்கவல்லியாக பாவனை செய்து மாறனேந்தால் இளவரசர் தன்னைத் திருமணம் செய்ய வருவார் எனக் கூறிப் புத்தி பேதலித்துப் போய் இருக் கிறாள். குமாரலிங்கம் மனம்வருந்தி பாலசாமியாராக மாறி கோயிலில் இருக்கிறார். கதையின் ஆசிரியர் வாசகருக்கு ஏமாற்றத்தைக் கொடுக்காமல் நூறு வருடங்களின் பின்னர் பிறந்த இருவரையும் இணைத்து வைத்திருக்கலாமே என்பது கதையை வாசித்த பலரின் வினாவாக இன்றுவரை இருந்து வருகிறது.

செங்கை ஆழியானின் ‘காட்டாறு’ நாவலிலும் இதேமாதி ரியான முடிவொன்றை அவதானிக்கலாம். கதையின் நாயகன் சந்தணத்தைச் செவந்தி, புவனேஸ்வரி இருவரும் காதலிக் கின்றனர். செவந்தி இளம் விதவை. தனது இலட்சியத்தின் மத்தியில் அவளையே சந்தணமும் காதலிக்கிறான். ஒருதலைக் காதல் புவனத்தினுடையது. ஊர் சியாமனால் கற் பழிக்கப்பட்டு செவந்தி இறந்துவிடக் கதை நிறைவடைகிறது. கதையின் திருப்பு முனையாக இருவரையும் இணைத்து வைத்திருக்கலாம் என்பது பல வாசகர்களின் அபிப்பிராய மாகும். அங்கையன் கைலாசநாதனின் கடற்காற்று நாவலில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற செபமாலை இறக்கிறான். மனைவி அன்னாவும் நடக்க முடியாத மாற்றுத் திறனாளியான மகனும் ஆதரவற்றோர் ஆகின்றனர். அன்னாவின் கட்டு மஸ்த்தான உடலை அனுபவிப்பதற்காக முத்துமாணிக்கம் காம வெறியுடன் அலைகிறான். பாதுகாப்பற்ற அவளும் பயந்து பயந்து விலகிச் செல்கிறாள் எனக் கதை பரிதாபமாக நிறைவுறுகிறது. இக்கதையும் உண்மைச் சம்பவமாக இருந்த போதிலும் கதைக்காக செபமாலையை உயிருடன் வாழ வைத்திருக்கலாம் என்பதும் பல வாசகரின் கருத்தாகும்.

திரைப்படம், குறுந்தொடர், நெடுந்தொடர், காவியம், நாவல் என்பவற்றிலும் சுவைஞர்களில் பெரும்பாலானோர் சுபமான முடிவினை எதிர்பார்ப்பதே வழக்கம். சுவைஞரைத் திருப்திப் படுத்தாத முடிவுகள் அதன் மீதான ஆர்வத்தை குறைத்து விடுவதுமுண்டு.

மூன்று நாவல்களிலும் ஆசிரியர்கள் கதை சொல்லியாகப் பெரும்பாலும் நனவிடை உத்தியைப் பயன்படுத்திக் கதை மாந்தர்களுக்கூடாக நடந்து முடிந்த சம்பவங்களை மிக நுணுக்கமாகவும் கச்சிதமாகவும் நகர்த்திச் சென்றிருக்கின் றனர். இடையிடையே கதைகளில் சிற்சில தொய்வுகள் காணப்பட்டாலும் ஆசிரியர்கள் அதனைத் தமது ஆற்றலால் தடைப்பட்டு நிற்காமல் சாதுரியமாகக் கதைகளை நகர்த்திச் சென்றிருக்கின்றனர். கதையை நகர்த்திச் செல்வதில் புகழ் பெற்ற எழுத்தாளர்களான செங்கை ஆழியான், அங்கையன் கைலாசநாதன், வ.அ. இராசரத்தினம் மூவரும் தமக்கேயுரிய பாணியில் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து மனக் கண்முன் நடமாட விட்டிருந்தமை பாராட்டத்தக்கதாகும்.



kuruparan.s@thaiveedu.com

# வரலாற்றில் ‘ஊடல்’

## திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 3

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்



tg.theeban@gmail.com

*முன்னைய இதழ்களில்...*

தலைவன் தலைவியரிடையே ஏற்படும் பிணக்கு, பொய்ச் சினம், பகைத்தல், வெறுத்தல் முதலான செயல்களைக் குறிக்கும் ஒற்றைப் பதமான ‘ஊடல்’, காலம், இடம், இனம், மொழி, பண்பாடு முதலாய எல்லைகளைக் கடந்து, எவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைத்தாக, இனிய வாழ்விற்குப் பொருந்தும் அன்பின் நுணுக்கங்களைப் படிப்பார் மனத்தில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அனைத்து இலக்கணங்களையும் விஞ்சி நிற்கிறது திருக்குறள் என்பது கருதுகோளாகும்.

திருக்குறளில், பல்வேறு பகுதிகளில் ஊடல் தொடர்பான தகவல்கள் கூறப்பட்ட போதும் புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்னும் அதிகாரங்களில்தான் ஊடல், சிறப்பாகப் பேசப்படுகிறது. திருக்குறளில், ஊடல் பற்றிக் குறிப்பிடும் கருத்துகள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரியனவாக அனைத்து இலக்கண இலக்கியங்களையும் விஞ்சி நிற்கிறது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

*தொல்காப்பியத்தில் (இயல் 1):*

தொல்காப்பியத்தில் ‘ஊடல்’ என்னும் ஒழுக்கம் கற்பியல் என்னும் அதிகாரத்தின் முக்கிய பேசுபொருளாக இடம்பெறுகிறது. ஊடல் என்பது பொதுவாக இருவரிடையே, சிறப்பாக, கணவன் மனைவியரிடையே அல்லது காதலன் காதலியரிடையே ஏற்படும் பொய்க் கோபம், பிணக்கு, கருத்து வேறுபாடு அல்லது மனத்தாங்கல் எனலாம். இது உளவியல் அடிப்படையில் தோன்றுகிறது. இதனை, ‘நடத்தை அறிவியல்’ அடிப்படையில் பல கோணங்களில் பகுத்து ஆயலாம். ‘நடத்தையியல் மேலை நாடுகளில் 19-ஆம் நூற்றாண்டில் உருவானது. தமிழில் இக்கலை தொல்காப்பியர் காலத்திலேயே வளர்ந்திருக்கிறது.

தொல்காப்பியர், தன் காலத்தில் பாடல் பாடும் புலவனுக்கு, பாடல் அமையவேண்டிய விதிமுறைகள், எல்லைகள் முதலியவற்றைக் கூறும் வாழ்வியல் இலக்கணமே தொல்காப்பியப் பொருளதிகாரமாகும்.

*சங்க இலக்கியங்களில் ஊடல் (இயல் 2):*

சங்க காலத்தில் ஊடல் பெரும்பாலும் பரத்தையிற் பிரிவு காரணமாக ஏற்பட்டதாக அறியப்படுகிறது. தலைவன் தன் மனைவியிடம் கொண்ட அன்பு நிரந்தரமானது. பரத்தையிடம் கொண்ட கவர்ச்சி, நாட்டம், அன்பு தற்காலிகமானது. தலைவியிடம் கொண்ட நிரந்தர அன்பு பரத்தையிடம் ஏற்படும் இன்பம் மீதான தற்காலிக உணர்வால் மறைக்கப்படுகிறது அல்லது தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்படுகிறது. அதாவது, ஒரே நேரத்தில் இரு உணர்ச்சிகள் ஒருங்கே பயணிப்பது இயற்கைக்கு மாறானது.

**தொடர்கிறது...**

### இயல் 3:
### திருக்குறளில் ஊடல்:

காமத்துப்பாலில், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய மூன்று அதிகாரங்களும் இனிமையான இல்லற வாழ்விற்கு இன்றியமையாதவையாக அமைத்திருக்கும் திறம் இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் எம் மக்களுக்கும் ஏற்புடையவையாக இருப்பது இதன் சிறப்பாகும்.

புலவி, ஊடல், துனி என்னும் பதங்கள், இந்தவகையான பிணக்கைக் குறிக்கும் படிநிலை வளர்ச்சிச் சொற்கள். ஊடல் மனப்பாங்கு ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலாரிடமும் இருப்பது பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

பெண் ஊடுதல் பற்றிய செய்திகள் திருக்குறளின் ஈற்றில் அமைந்துள்ள புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்னும் மூன்று அதிகாரங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. இம்மூன்று அதிகாரங்களுமே, காம உணர்வை மிகுதிப்படுத்திக் கூடல் - இன்பத்தை இனிமையாக்கும் ஊடல் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

***‘துனியும் புலவியும் இல்லாயின் காமம்***
***கனியும் கருக்காயும் அற்று’***

குறள் - 1306

என்னும் இந்தக் குறட்பா, காமத்தில் பெரிய பிணக்கும் (துனி) செல்லமான சிறு பிணக்கும் (புலவி) இல்லாவிட்டால், அது அளவுக்கு அதிகமாகப் பழுத்த பழம்போல் சுவையற்றதா கவும், துவர்க்கும் பிஞ்சு போல் பயன்படாமலும் போய்விடும் என்று கூறுகிறது. காதல் வாழ்க்கைக்கு ஊடலும் கூடலும் எத்துணை அவசியமானவை என்பதை இக்குறட்பா சிறப்பாக உணர்த்துகிறது.

அடுத்து, ஊடலின் பகுதிகளாகத் திருவள்ளுவர் கூறுப வற்றை ஒவ்வொன்றாக ஆராயலாம்.

### ‣ புலவி:

புலவி என்பதன் பொருள், ஊடல், செல்லக் கோபம், பொய் யான கோபம் என்று கொள்ளலாம். தொடர்ந்து அனுபவித்து வரும் கலவி இன்பம் தெகிட்டிவிடாமல் இருப்பதற்காக, கலவி இன்பத்திற்கு இடையேயான இடைவெளியைக் கூட்டு வதன் மூலம், கலவி இன்பத்தின் மேலான ஆர்வத்தைக் கூட்டி அவ்வின்பத்தின் தரத்தை உயர்த்துவதற்கான வழி வகை களில் புலவியும் ஒன்றாகும்.

கணவன் மனைவியரிடையே ஏற்படக்கூடிய சிறு சிறு பிணக்கு களை இலக்கியகார்கள் முறையாகப் பயன் கொண்டு இலக்கிய வளத்தைப் பெருக்குகிறார்கள். ஊடலின் இலக்கி யச் சிறப்பு பாடுபவரின் பாடல் வளத்தைப் பொறுத்துச் சுவை மிக்கதாக அமையும்.

***‘புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்***
***அல்லல்நோய் காண்கம் சிறிது’***

குறள் - 1301

பாடல் பின்புலம் - வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில் நேர்தற்பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லி யது. இங்கு புலத்தலில் தோழியின் பங்கும் கூறுப்படுகிறது.

பொருள் - தோழி, விளையாட்டாக, தலைவியை நோக்கி, நீ அவ்வாறு புலந்தால், அதனால் தலைவன் அடையும் துன் பத்தை நாம் சிறிது காண்போம் (இரசிக்கலாம்). நீ, தலைவன் வந்தவுடன் அவனை விரைந்து சென்று புல்லாதே; சிறிது பிணங்கு. காம நோய் துன்பம் செய்யும். இங்கு, புலவியை நீள விடலாகாது என்பது பற்றி ‘சிறிது’ என்றாள். புலவிக்கு றிப்புக் கண்டு அவள் வழி நின்று, ‘நாம் உற்ற வருத்தம் அவ ரும் சிறிதுற்று அறிதல் வேண்டும்’ என நகையாடிக் கூறு கிறாள்.

***‘உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது***
***மிக்கற்றால் நீள விடல்’***

குறள் - 1302

பாடல் பின்புலம் - புலவியைத் தவிர்த்து, தலைவனுக்கு வாயில் நேரும் வகையைத் தோழி சொல்லியது.

பொருள் - உணவின் அளவிற்கு ஏற்ப உப்பின் அளவு அமை தல் வேண்டும், உப்பு சிறிது கூடினாலோ அன்றிக் குறைந் தாலோ உணவில் சுவை மாறுபடும். அது போல, கலவி இன் பத்திற்கு வேண்டும் அளவிற்கு ஏற்ப ஊடல் அமையவேண் டும்; ஊடல் அளவு கடந்து கொஞ்சம் நீட்டினாலும், உப்பின் அளவைக் கூட்டுவது போல் கெட்டுவிடும்.

***‘அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்***
***புலந்தாரைப் புல்லா விடல்’***

குறள்- 1303

பாடல் பின்புலம் - பரத்தையர் இல்லம் சென்று திரும்பிய தலைவனோடு தலைவி புலந்து சொல்லியது.

பொருள் - தன்னுடன் ஊடல் கொண்ட மனைவியின் ஊடலை நீக்கி அவளைக் கூடாமல் போவது, ஏற்கனவே துன்பப்பட்டவர் களுக்கு மேலும் அதிகத் துன்பத்தைக் கொடுத்தது போலாம்.

***‘ஊடி யவரை உணராமை வாடிய***
***வள்ளி முதல்அரிந் தற்று’***

குறள் - 1304

பாடல் பின்புலம் - ஊடிய தலைவியின் ஊடலைத் தீர்த்து அவளைச் சமாதானப்படுத்தாது செல்வது.

பொருள் - தன்னுடன் ஊடல் கொண்ட தலைவியின் ஊட லைத் தெளிவுபடுத்தி, அவளுடன் கூடாமல் போவது, முன்பே நீர் இல்லாமல் வாடிய கொடியை அடியோடு அறுத்தது போலாகும் என்று எடுத்துக்காட்டுடன் முன்னர் கூறிய விட யத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

***‘நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை***
***பூஅன்ன கண்ணா ரகத்து’***

குறள் - 1305

பாடல் பின்புலம் - தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலை மகன் தனக்குத் தானே சொல்லியது.

பொருள் - நல்ல பண்புகள் கொண்ட நல்ல ஆடவர்க்கு அழகு, மலர் போன்ற கண்களை உடைய மகளிரின் நெஞ்சம் விளையும் ஊடலின் சிறப்பே ஆகும்.

***‘துனியும் புலவியும் இல்லாயின் காமம்***
***கனியும் கருக்காயும் அற்று’***

குறள் - 1306

பாடல் பின்புலம் - துனியும் புலவியும் அளவோடு இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு கிறார்.

பொருள் - பெரும்பிணக்கும், சிறுபிணக்கும் ஏற்பட்டு இன்பம் தரும் காதல் வாழ்க்கை அமையாவிட்டால் அது முற்றிப் பழுத்து அழுகிய பழம் போலவும், முற்றாத இளம் பிஞ்சைப் போலவும் பயனற்றதாகவே இருக்கும்.

***‘ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது***
***நீடுவ தன்றுகொல் என்று’***

குறள் - 3107

பாடல் பின்புலம் - இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலிலும் ஒரு துன்பம் (நீடிக்குமா ? நீடிக்காதோ என்ற) உண்டு.

பொருள் - கூடியிருக்கும் இன்பம் இனிமேல் நீட்டிக்காதோ என்று ஏங்கி எண்ணுவதால் ஊடியிருத்தலினும் காதலர்க்கு ஒருவகைத் துன்பம் இருக்கின்றது.

***‘நோதல் எவன்மற்று நொந்தார்என் றஃதறியும்***
***காதலர் இல்லா வழி’***

குறள் - 1308

பின்புலம் - ஊடலை உணராத தலைமகளோடு புலந்து பயன் என்ன என்று தலைவன் புலந்து சொல்லியது.

பொருள் - நம்மால் இவர் வருந்தினார் என்று அந்த வருத் தத்தை அறிகின்ற காதலர் இல்லாதபோது, வருந்துவதால் பயன் என்ன? இவள் நம் காதலி அல்லள். அல்லாமையால், ஊடலில் வரும் நோவு அறிய மாட்டாள்.

***‘நீரும் நிழலது இனிதே புலவியும்***
***வீழுநர் கண்ணே இனிது’***

குறள் - 1309

பாடல் பின்புலம் - இவளிடம் ஆற்றாமைக்கு நோதலும் கூடு மிடத்து வேட்கையும் இல்லை.

பொருள் - உயிர்க்கு இன்றியமையாத நீரும் நிழலின் இருக்கும் போது தான் குளிர்மையானதாக இனியது, வெயிலில் உள்ள நீர் அப்படி இனியது ஆகாது; அது போலவே கலவிக்கு இன் றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனியது, ஏனை அன்பிலார்கண் ஆகாது. (நிழற்கண் இருந்த நீர் குளிர்ச்சிமிக்கதாகத் தாகம் தணித்தலான், இனிதாயிற்று. ஆற்றாமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையும் உடைய ராவார். ‘இவள் நம்மாட்டு அவ்விரண்டும் இன்மையின் இப் புலவி தானும் இன்னாதாயிற்று.)

***‘ஊடல் உணங்க விடுவாரோ டென்நெஞ்சம்***
***கூடுவேம் என்ப தவா’***

குறள் - 1310

பாடற் பின்புலம் - ஊடலில் ஊடலைத் தீர்த்து மகிழ்விக் காமல் இருப்பவரோடு கூடுவோம் என்று என் மனம் நினைப்ப தற்கு ஆசையே காரணம்.

ஊடல் கொண்டபோது உணர்த்தி மகிழ்விக்காமல் வாட விடு கின்றவரோடு என் நெஞ்சம் கூடியிருப்போம் என்று முயல்வ தற்குக் காரணம் அதன் ஆசையே. அன்பும் அருளும் இல்லா தவரை உடையர் என்றும் அவரோடு யாம் கூடுவம் என்றும் கருதி அதற்கு முயல்தல் ஆசைப்பட்டவர் செயலாகலின், ‘கூடுவேம் என்பது அவா’ என்றார்.

புலவி என்னும் அதிகாரத்தில் முதல் இரு குறட்பாக்களும் தோழி கூற்றாக, புலத்தலில் தோழியின் பங்கு கூறப்படு கிறது. ஊடலை வேடிக்கைக்காக நீடிக்கவேண்டும், ஆனால் ஊடல், அளவு கடந்து நீண்டதாக அமையுமானால், ஊடல் இன்பம் கெட்டு விடும் என்று தோழி, தலைவிக்கு அறிவுரை கூறுவதாக அமைகின்றது. மூன்றாம் குறட்பா, தம்முடன் ஊடிய தலைவியின் ஊடலை நீக்காமல் போவதால் தலைவி யின் துன்பம் அதிகப்படுதலைக் கூறுகிறது. நான்காம் குறட் பாவும் அதே பொருளை எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது. தொடர்ந்து வரும் குறட்பாக்கள் ஊடலின் முக்கியத்துவத் தையும் அதனால் விளையும் இன்பத்தையும் துன்பத்தையும் விளக்குவதாக உள.

‘புலவி’ என்னும் அத்தியாயம், அடுத்தடுத்து வரும் புலவி நுணுக்கம், ஊடலுவகை ஆகிய அதிகாரங்களுக்குத் தோற் றுவாயாக அமைந்திருக்கின்றது.

### ▸ புலவி நுணுக்கம்:

புலவி என்னும் அதிகாரத்தை அடுத்து, அதன் நீட்சியான புலவி நுணுக்கம் கூறப்படுகிறது. ஊடல், காதலில் வரும் ஒரு செல்லக் கோபம். இங்கு செல்லமான ஒரு வகைக் கோபம் மட்டும் இருப்பதாகத் தெரியவில்லை. இது அன்பின் ஒரு வகை வெளிப்பாடு. வள்ளுவர் இது பற்றி, மேலும் எதையோ கூற முயல்கிறார். ஊடல், கணவன் மனைவி அல்லது காத லன் காதலி இருவரும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள அன்பை, நெருக்கத்தை, உரிமையைக் காட்டுவதாக அமைந் திருக்கிறது. கோபப்படுவதிலும் ஒரு அழகு இருக்கிறது. ஊடுதல் பற்றி வள்ளுவர், இம்மூன்று அதிகாரங்களில் மட்டு மல்லாது ஆங்காங்கே பல்வேறு பகுதிகளில் பல்வேறு தரு ணங்களில் கூறியிருக்கிறார்.

இப்படியாக, வள்ளுவர், ‘புணர்ச்சி மகிழ்தல்’ என்னும் அதிகா ரத்தில் கூறிய ஒரு குறள் வெண்பாவைப் பார்க்கலாம்.

***‘ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்***
***கூடியார் பெற்ற பயன்’***

புணர்ச்சி மகிழ்தல் குறள் எண்: 1109

இந்நூற்பாவில் ‘உணர்தல்’ என்பதற்குப் பழைய உரையாசிரி யர்கள் ‘ஊடல் தீர்தல்’ என்று கூறியிருக்க, பரிதியார், ‘ஊடிக் கூடவேண்டும் என்று நினைத்தலும்’ என்கிறார்.

இன்றைய உரையாசிரியர்கள், ‘பிணங்குதல் தெளிதல் சேருதல் இவை’, ‘ஊடல், ஊடல் காரணத்தை அறிந்து தெளிதல், கூடல் என்னும் இவை’, ‘ஊடலும் ஊடல் காரணத்தை அறிதலும், கூடலும் ஆய இவைகள்’, ‘சிறு கோபங்கொள்ளுதலும், அந் தக் கோபத்தைத் தணித்து உணர்ந்துவிடுவதும் பின்னர்க் கூடுவதும்’ என்றபடி பொருள் கூறினர்.

இவற்றுள், பரிதியாரின் உரை, அதிகம் பொருத்தமானதாக உள்ளது. அதாவது, ஊடல் இன்பம். ‘ஊடுதலாகிய அந்த இன்பத்துடன் ஊடிக் கூடவேண்டும் என்று நினைத்தல்’ அதா வது, ஊடுதலே, அதன் பின்னதாகிய கூடுதலை நோக்கிய ஒரு நகர்வு. இந்த விளக்கம் ‘ஊடல் இன்பத்தைக் கூட்டு வதான செயலாக’ அமைகிறது.

ஊடல் என்பது காதலரிடையே உண்டாகும் நுண்ணிய உணர் வுகளுடன் கூடிய பிணக்கு, சண்டை. ஊடல் உள்ளம் சார்ந்த ஒரு செயற்பாடு. ஆண்டாண்டு காலமாக ‘ஊடல்’ நாடு, இனம் சாராத ஒரு நடவடிக்கையாகப் பரவலாக நடைபெறும் நிகழ் வாகும். இங்கு, ஊடலும் ஊடல் தீர்தலால் வரும் இன்பமாகிய பயனும் அறியப்படுகிறது.

ஊடல் என்னும் சிறு பிணக்கின் காரணம் அது தீர்தலாகிய பெரும் பயனை எதிர்நோக்கியதாகும். இதுவே, ‘காமம்




> ஊடல், கணவன் மனைவி அல்லது காதலன் காதலி இருவரும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள அன்பை, நெருக்கத்தை, உரிமையைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. கோபப்படுவதிலும் ஒரு அழகு இருக்கிறது. ஊடுதல் பற்றி வள்ளுவர், இம்மூன்று அதிகாரங்களில் மட்டுமல்லாது ஆங்காங்கே பல்வேறு பகுதிகளில் பல்வேறு தருணங்களில் கூறியிருக்கிறார்.

கூடியார் பெற்ற பயன்' என்று வள்ளுவர் கூறுவது, அன்பினால் கூடியவர்கள் பெற்ற பயனாகும்.

இந்தக் குறட்பா, காமத்தின் மூன்று நிலைகளைக் கூறுகிறது.

- ஊடல் கொள்ளுவதாகிய ஒரு சுவை.
- ஊடல் கொண்டு அந்த ஊடலிலிருந்து விடுபடலாகிய ஒருவகை கிளர்ச்சி இன்பம், ஊடலை நீக்குதல், நீக்குபவனுக்கும் நீக்கப்படுபவன் அல்லது நீக்கப்படுபவளுக்கும் இன்பத்தை ஊட்டும் செயலாக அமையும். இதற்குத் தனித்திறமை வேண்டும். ஊடலை நீக்குவது வெறும் காரியம் அல்ல. ஒருவர் உள்ளத்தை மற்றவர் நன்றாகப் புரிந்து கொண்டு உளவியல் முறையில் அணுகுவது.

  ஒருவர் மற்றவர் குறையையோ நிறையையோ உணர்ந்து, உடல், உள்ளம் ஆகிய இரண்டிலும் இன்பத்தில் சமநிலை ஏற்படுமாறு இருவரும் சமன் செய்து கொள்வது தான் ‘உணர்தல்' ஆகும்.
- ஊடல் நீங்கிய கூடல் இன்பம்.

தலைவன் தலைவியர் புணர்வது இன்பம். ஆனால், தொடர்ந்து இன்பத்தையே அனுபவிப்பது திகட்டிவிடலாம். இடையிடையே ஊடிக் கூடுதல் வாழ்க்கையில் சுவை மிக்கதாக அமையும். இருவருடைய உடலின்பமும் இனிதாக அமையும் பொருட்டு ஊடல் தேவையானது என்பது வள்ளுவரது கருத்து. உடல் உறவு என்பது எங்கும் சொல்லப்படாவிட்டாலும் புணர்ச்சி என்பது உடல் உறவையே குறித்து நிற்கிறது.

ஊடலில் இத்தனை விடயம் இருக்கிறதா ?

‘களவு ஒழுக்கத்தில் ஊடலுக்கு அதிகம் இடமில்லை' தலைவியுடன் கூடி இன்புறுதலை வேண்டித் தலைவனும் அதையே வேண்டித் தலைவியும் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளே களவியல்.

‘புலவி நுணுக்கம்' என்னும் அதிகாரமே புலவியின் பல்வேறு கட்டங்களை ஒரு நாடகப் பாங்கில் சுவைபடக் கூறுவதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ‘புலவி' என்பதைக் ‘காதலைச் சோதிக்கின்ற, புரிதலைச் சோதிக்கின்ற ஒரு ‘கருவி' என்று கூடக் கூறலாம்'. இது ஒரு நாடகம் போல அமைக்கப்பட்டிருக்கிறது.

தலைவன் எந்தத் தவறையும் செய்யவில்லை என்றாலும் அவன் மீது ஊடல் கொள்வது எதற்காக என்றால் தலைவன், தலைவியின் மீது அன்பு காட்டவேண்டும் என்பதற்காகவும், தலைவி தன்மீது வைத்திருக்கும் அன்பை அவ்வப்போது சோதிப்பதற்கான உத்தியாகவும் தலைவி ஊடல் கொள்கிறாள் என்பதை,

***‘இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்***
***வல்லது அவரளிக்கும் மாறு'***

குறள் - 1321

எனும் குறள் எடுத்துரைக்கிறது.

கணவன் கொண்டுள்ள அன்பைப் பரிசோதிப்பதற்காக அவ்வப்போது ஊடல் கொள்வது பெண்களுக்கேயுரிய இயல்பாகும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com

# தமிழருவி த. சண்முகசுந்தரம்

**- கதிர் துரைசிங்கம்**



1953-ஆம் ஆண்டின் ஆரம்பம், மகாஜனக் கல்லூரி SSC-யில் இருந்த எங்களுக்கு, நேரிய நடையில் கூரிய பார்வை யுடன் சீரிய வெண்ணிற ஆடை அணிந்த திரு.த. சண்முகசுந்தரம் தமிழ் ஆசிரியராக வருகிறார்.

எங்களுக்கு ஆசிரியர் மட்டுமே புதிது. ஆனால், ஆசிரியருக்கோ ஆசிரியத் தொழில், மகாஜனக் கல்லூரி, கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று எல்லாமே புதிது. ஆளுமையை உணர்த்தும் பாணியில் நிமிர்ந்து நின்றபடி எங்கள் பெயரையும் கிராமத்தையும் கேட்டு அறிந்த ஆசிரியர் அமர்ந்ததும்:

'கத்தி இன்றி இரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என்று முழங்கிவிட்டு இதை எழுதியவர் யார் என்று ஒவ்வொருவராக கேட்கிறார். பலர் மௌனம், சிலர் பாரதியார் என்றனர். மௌனம் தொடர்கிறது, மீண்டும் பாரதி என்று இருவர். எனக்கு பக்கத்தில் இருந்தவன் பார்வதிநாதசிவம் தமிழ் வகுப்பில் எந்த ஆசிரியர் என்ன கேட்டாலும் வஞ்சகம் இன்றி சரியான பதில் கூறுபவன். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம், என்றான் அவன். பதில் சரி என்றபடியால் அன்று நான் பிழைத்தேன். கவிதையை ஆசிரியர் தொடர்ந்தார். கவிதையின் விரிவான விளக்கத்தோடு பாடம் முடிந்தது. கவிதை சுமாராக மட்டுமே புரிந்தது. ஆனால், ஆசிரியர் கறாரானவர் என்பது நன்றாகவே புரிந்தது.

வார இறுதியில் என் தந்தையை சந்திக்க வீடு வந்த ஆசிரியர் கதிரேசர்பிள்ளை, மகாஜனாவிற்கு வருகை தந்த சண்முகசுந்தர ஆசிரியரையும், அவர் எனக்குத் தமிழ் ஆசிரியர் என்ற செய்தியையும் சொன்னார். அதற்கு தந்தையார் 'குடும்பமாக வண்டிலில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் செல்லும் போதும், மகனுடன் சைக்கிளில் செல்லும் போதும் எங்கள்வாகனத் தரிப்பிடம் தெற்கு வீதியில் வசித்த ஆசிரிய நண்பர் (பளை) தம்பு சட்டம்பியார் வீடுதான். சண்முகசுந்தரம் தம்பு தம்பதிகளின் ஒரே மகன். 30.11.1925-இல் பிறந்தவர். பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை அன்று 'விழிசிட்டி தமிழ் கலவன் பாடசாலை' என்ற பெயரில் பன்னாலையில் இயங்கியபோது தம்பு சட்டம்பியாரும் கதிரிப்பிள்ளை பண்டிதரும் எனது ஆசிரியர்கள். 1929-இல் நான் SSC படிக்கும் போது சண்முகசுந்தரம் அரிவரியில் இணைந்தவர். தந்தையுடன் தினமும் வரும் சண்முகசுந்தரம் தனது ஆரம்ப கல்வியை இங்குதான் கற்றார். பின்னர் JSC வரை நடேஸ்வரா, SSC வரை யூனியன், HSC வரை ஹாட்லியிலும் கற்று, 1948-இல் இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று B.A. பட்டதாரியாகி 1951-இல் தினகரன் பத்திரிகை ஆசிரியர் குழுவில் இணைந்தவர்' என ஒரே மூச்சில் சொல்லி முடித்து, மகாஜனா வந்தது தனக்குத் தெரியாது என்றார்.

**MAHAJANA COLLEGE- TELLIPPALAI**
**1984**
**J.S.S.A**
**First Eleven Soccer Champions**



Standing Left to Right: Mr. Baskaran, Mr. Surendran, Mr. Suthakar, Mr. Gnanasooriyar, Mr. Gnanakrishnan, Mr. Ravindran, Mr. Balaskanthan, Mr. Vijayarajah, Mr. Premachandran

Sitting Left to Right: Mr. Kandiah (Vice Principal), Mr. Rajendra, Mr. T. Pathmanathan (Coach), Mr. Shanmugasundaram (Principal), Mr. Sivarajah (Captain), Mr. Yoganathar (Master in Charge), Mr. Umashangar

திங்கட்கிழமை தமிழ்ப் பாடம் தொடங்க எனக்குப் பயமும் பக்தியும் கலந்த ஒர் உணர்வு. வகுப்பறைக்கு வந்த ஆசிரியர், அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ஏழாம் வகுப்பு மாணவர் இருவர் சண்டை இடுவதையும் செருப்பு அணிந்தவர் செருப்பு கையில் எடுப்பதையும் அவதானித்து அவர்களை அழைத்து வருமாறு என்னைப் பணித்தார். அவர்கள் வந்ததும், செருப்புத் தூக்கியவரிடம் நீ மல்லுக் கட்டிய மாணவன் நிராயுதபாணி, எனவே ஆயுதம் ஏந்தியது தவறு, அது மட்டுமன்றி பாதரட்சை புனிதமானது. பதின்நான்கு ஆண்டு அயோத்தியை ஆட்சி புரிந்தது எனக் கூறிய ஆசிரியர் இருவருக்கும் கைச்சாத்து வழங்கி அனுப்பி வைத்தார்.

இதைத் தொடர்ந்து இராமாயணத்தில் கைகேசியின் சூழ்ச்சி பற்றியும், வனம் சென்ற இராமன் திரும்பும் வரை தம்பி பரதன் பாதரட்சையை பூசித்து 14-ஆண்டு காலம் அயோத்தியை எவ்வாறு ஆட்சி செய்தான் என்பதையும், எமக்கு விளக்கினார். ஆசிரியரின் திருமணம் நான் கல்வி பயிலும் அதே ஆண்டு நடந்தது. எனது தந்தை கதிர்காமத்தம்பி ஆசிரியராகப் பணிபுரிந்த பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலைக்கு ஆசிரியை திருமதி ஞானசக்தி சண்முகசுந்தரம் இடமாற்றம் பெற்று இணைந்தார். ஆசான் சண்முகசுந்தரனார் தமிழ் மொழியை இலக்கண இலக்கிய சுவையுடன் எமக்கு புகட்டிய காலகட்டம் நினைவை விட்டு அகலாது. SSC-இல் எங்களுக்கு தமிழ் கற்பித்த ஆசான் HSC Arts வகுப்பிற்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் சரித்திரம் புகட்டி வந்தார். அதிபர் ஜயரத்தினம் HSC வகுப்பு மாணவர்களுக்கு பொது அறிவை ஒரு பாடமாக்கி சண்முகசுந்தரனாரை அதற்கு ஆசிரியராக நியமித்தார். SSC-இல் இறுக்கமாக இருந்த ஆசிரியர், HSC-இல் எம்முடன் இலகுவாகப் பழகினார். ஆசிரியரின் தூய்மையான உள்ளத்திற்கு அவர் தரிக்கும் வெண்ணிற ஆடை ஒரு தனி அணிகலனாக அமைந்திருந்தது.

tg.theeban@gmail.com

பொது அறிவு போதிப்பதில் எம் ஆசான் தன்நிகர் இல்லாத் தலைவன். ஆதி மனிதன் குகை வாழ்க்கை முதல் நவீன யுகத்தில் அணுகுண்டு பிரயோகத்தால் ஏற்படும் தாக்கம் வரையும், அரசியலில் முதலாளித்துவத்தின் அமுக்கம் முதல் சோசலிஸத்தின் அங்கலாய்ப்பு வரை, எந்தவொரு பொருள் பற்றியும் அக்கு வேறாகவும் ஆணி வேறாகவும் பிரித்துப் பொருளின் பொருட்கருத்தையும் உட்கருத்தையும் தகுந்த முறையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எடுத்து விளக்கும் திறன் படைத்தவர்.

வகுப்பறையில் இவர் சொல்லும் முதலடியில் இருந்து, அன்று எந்த பொருள் பற்றி கருத்துரை நடைபெறும் என்பதை அனு மானிக்க முடியும். 1957-இல் ஒரு நாள் வகுப்பிற்கு வந்த ஆசிரியர் ‘Muddle in Middle East’ என்றார் இதன் அர்த்தம் எதுவோ ?

என்னவோ ? என்று நாம் எண்ணிய வேளை ஜனாதிபதி நாசர் ஆணையின் பேரில் சுவெஸ் கால்வாயை, எகிப்திய நாடு தனது உரிமையாக்கிக்கொண்ட வரலாற்றையும், இதனால் உலக நாடுகள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பதட்டத்தையும் பேராசான் எமக்கு தெட்டத்தெளிவாக எடுத்துரைத்தார்.

டிப்புளோமா பட்டப் படிப்பு முடித்து, 1959-இல் பொது அறிவு வகுப்பிற்கு வந்த ஆசிரியர் ‘சுட்டான் பூசாரி மாண்டான் மந்திரி’ என்றார். இதைத் தொடர்ந்து அடுத்து 39 நிமிட நேரம் சுதந்திர இலங்கையின் வரலாற்றையும், தனிச் சிங்களச் சட்டத்தின் பாதகத் தன்மையையும், பௌத்த பிக்குமாரின் ஆதிக்கத்திற்கு அடிபணிந்த S.W.R.D. பண்டார நாயக்கா எப்படி ஒரு பௌத்த பிக்குவின் வெடிகுண்டுக்கு பலியானார் என்பதையும் விளக்கினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் S. Vithyananthan, K. கணபதிப்பிள்ளை, V. செல்வநாயகம் மற்றும் Sir Ivor Jennings ஆகியோரின் அபிமான மாணவனாக திகழ்ந்தவர்

சண்முகசுந்தரம் என சக மாணவனாக இருந்த கார்த்திகேசு ஆசிரியர் கூறுவதை நான் கேட்டு இருக்கிறேன்.

சண்முகசுந்தரனார் தமது வாழ்நாளில் தமிழ் வரலாற்று நிகழ்வுகள் பலவற்றை நாடகங்களாக எழுதி நூலாக்கினார். இவற்றில் பாண்டி நாட்டு அரசி மாருதப்பு ரவீகவல்லி பற்றிய 'வாழ்வு பெற்ற வல்லி' என்ற நூல், 1962-இல் இலங்கை சாகித்திய மண்டலத்தினால் தெரிவு செய்யப்பட்டு, சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றது.



1965-ஆம் ஆண்டு பன்னாலையில் தலைமை ஆசிரியர் கதிர்காமத்தம்பி அவர்களின் தலைமையில் நடைபெற்ற சேர் கனகசபை வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவிற்குப் பிரதம விருந்தினர்களாக வருகைதந்த கௌரவ ஸ்தல ஸ்தாபன மந்திரி மு. திருச்செல்வம் மற்றும் தந்தை செல்வா அவர்களுடன், திரு.த. சண்முகசுந்தரம் அவர்களும் சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

பன்னாலை மற்றும் தெல்லிப்பழையில் நடைபெற்ற எனது திருமண விருந்து உபசார நிகழ்வில் ஆசிரியர் சண்முக சுந்தரம் அவர்கள் மனைவி சகிதம் வருகை தந்து சிறப்பித்தார். 1953-இல் இருந்து ஆசிரியராக கடமை யாற்றிய சண்முகசுந்தரம் அவர்கள், 1974-இல் மகாஜனக் கல்லூரி உப அதிபரானார்.

பாவலர் துரையப்பாபிள்ளையின் வரலாற்றை 'அறிவு கொளுத்திய அமரர்' என ஆசிரியர் எழுதிய நாடகம் கவிஞர் கதிரேச பிள்ளையின் நெறியாள்கையில் மகாஜனக் கல்லூரி ஆசிரியர்கள் நடிக்க பாவலரின் பிறந்த நூற்றாண்டு விழாவில் மேடை ஏறியது.

ஈழத்திருநாட்டின் முன்னேற்றத்தில் எம் ஆசான் என்றென்றும் பேரக்கறை கொண்டிருந்தார். தாயூரின் பெரிய (மாவிட்டபுரம் முருகன்) கோயில் வீதியில் தண்ணீர் ஊற்றி, வரம்பு அமைத்து தகாது சொல்லி, தமிழ் மகனே கோயிலுக்கு உள்ளே வராதே என்று, வடு உரைத்த காலமதில், இப்பெரியோன் மனம் நொந்து மனவேதனை உடன், எதிர் சாட்சி உரைக்க முன்வந்ததை, நாம் மறவோம். இதே போல் தன்னுடன் பணியாற்றிய சக ஆசிரியர்கள் தமது தொழிலை விட்டெறிந்து திரவியம் தேடி, ஆபிரிக்க நாடுகளுக்கு தினமும் பறப்பதைப் பார்த்த போதும், எமது ஆசான் தனது ஆசிரியப் பணிக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை.

பேராசானின் வாழ்வில் அக்கறையுள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் 'ஏன் வெளிநாடு போகவில்லை' என்று ஆசிரியரிடம் வினவினால், அவரின் பதில் 'மணி கட்டின மாடு - உள்ளூரில் எல்லோ முதலில் உழவேண்டும்'

ஆசான் அன்பாக அழைக்கப்படும் பட்டம் 'தசம்', ஆசான் கௌரவம் பெற்ற பட்டம் தமிழருவி. தசம் தனது வாழ்நாளில் தமிழ் வரலாற்று நுல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், சைவசமய நூல்கள் என நூற்றுக்கணக்கான ஆக்கங்களை யாத்தது மட்டுமன்றி பச்சிலைப்பள்ளி முதல் பன்னாலை வரை உள்ள பல பட்டினங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் திரிந்து தேடுவாரற்றுக் கிடந்த அண்ணாவி பரம்பரை வழிவந்த பல நாட்டுக்கூத்துகளைச் சேர்த்து அவற்றினை வழிநடத்தி மேடை ஏற்றினார். இதைப் போலவே கிராமங்கள் தோறும் இலைமறை காயாக இருந்து காலப்போக்கில் மருகி வந்த பலநூறு நாட்டுப் பாடல்களையும் ஒன்று சேர்த்து அச்சேற்றினார். தசம் அவர்களின் சைவப் பணியும் இறைபக்தியும் தனித்துவமானவை.

வரம் தந்த முருகன் நாமம் நித்தம் இல்லத்தில் ஒலிக்க, தந்தை திரு தம்பு தனையனுக்குச்சூட்டிய பெயர் சண்முக சுந்தரம். சண்முகசுந்தரனாருக்கு சக்தியாக இணைந்த இல்லத்தரசி ஞானசக்தி. தசம் தம்பதிகள் தெய்வீகம் தொடர பிள்ளைகள் ஐவருக்கு இட்ட பெயர் அருள்முருகனார், சிவதம்பு, அருள் மங்கை, கதிரகாமசேகரன், அருட்செல்வி.

எப்படியும் வாழலாம் என்பதில் எள்ளளவும் நம்பிக்கை இல்லாத எங்கள் ஆசான், இப்படித்தான் வாழவேண்டும் என்ற கோட்பாட்டை வகுத்து வாழ்ந்தும் காட்டியவர். 1975-இல் அரசியல் தலையீட்டால் இடமாற்றம் பெற்றார். மீண்டும் மிடுக்குடன், 1982-இல் மகாஜனாவிற்கு Grade-1 Principal ஆகப் பதவியேற்று 1984-இல் ஓய்வு பெறும்வரை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஆரம்பக் கல்வி கற்ற பன்னாலை சேர் கனகசபை வித்தியா சாலையின் நூற்றாண்டு விழா, மற்றும் ஆசிரியப் பணி ஆரம்பித்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பொன் விழா, வைரவிழா என இரண்டையும் கண்டு களித்தது மட்டுமன்றி மகாஜனவின்அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்ற பெருமைக்கு உரியவர் எங்கள் ஆசான் சண்முக சுந்தரனார்.

1986-இல் எம்மை விட்டுப் பிரிந்த தமிழருவி த. சண்முக சுந்தரம் (தசம்) அவர்கள் சத்தியத்தின் நித்தியத்தை நம்பியவர். தமிழையும் சைவசமயத்தையும் தனது இரு கண்களாகக் கருதியவர்.



kathir.thuraisingam@thaiveedu.com

aR

# நூற்றாண்டு காணும் அறிவொளி த. சண்முகசுந்தரம் அவர்களின் இடமும் இருப்பும்



ஈழத்தில் தொன்மையான வரலாற்றுச் சிறப்பும் மிக்க இடமாகக் கருதப் படும் மாவிட்டபுரத்திலே சைவ ஒழுக் கத்தில் சிறந்து விளங்கிய தம்பு உபாத்தியாருக்கும் அவருடைய மனை வியார் அன்னப்பிள்ளை அம்மையா ருக்கும் மகனாக 30.11.1925-இல் திரு. சண்முகசுந்தரம் பிறந்தார். நிலத்தின் இயல்பை மழை யால் அறிவது போலவும் ஒருவன் உள்ளத்தின் இய ல்பை அவன் முகத்தால் அறிவது போலவும் அறிவின் இயல்பை சற்கு ருவின் தன்மையால் அறிவது போலவும் தந்தை தம்பு சட்டாம்பியரின் தன் மையை மகன் சண்முகசுந்தரனாரின் பண்பினூடாகவும் அறியலாம். இதனை ‘மகனுரைக்கும் தந்தை நலத்தை’ என்னும் நான்மணிக்கடிகை பாடல் கொண்டு அறியலாம். அவருடைய அன்புக்குரியவர்களால் ‘தசம்’ என்று அழைக்கப்பட்டவர். அதேசமயம் சண், சண்முகம், நையாண்டி, நிறை என்ற புனைபெயர்களாலும் அறியப் பட்டவர். சண்முகசுந்தரம் அவர்கள் சிறுபராயம் தொடக்கம், ஆற்றொ ழுக்குமிக்க அறவொழுக்கசீலராய் நல்லாசிரியர் போற்றும் நன்மாணாக் கனாய், சான்றோர் மதிக்கும் சால்பு டையோனாய் விளங்கினார்.

தந்தையார் கற்பித்த விழிசிட்டி சிவஞான வித்தியாசாலையில் 1929-ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் பின்னர் காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தம் கல்வியைத் தொடர்ந்தார். அதன் பின்னர் 1942-இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிற் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்த சண்முகசுந்தரம் அவர்கள் 1943-ஆம் ஆண்டு மார்கழி மாதம் அக்கல்லூரியில் நடைபெற்ற சிரேட்ட பாடசாலைத் தேர்வில் தோற்றிச் சித்தியெய்தினார். படிக்கும் காலத்திலேயே தொடர்ச்சியாக இருதடவை அரசினரின் புலமைப்பரிசில் பெற்றுக் கற்றவராகக் காணப்பட்டார். இதனால் இவரைக் கருவிலே திருவுடையார் எனக் குறிப்பிடுவர். தனது உயர்கல்வியைத் தொடரும் நோக்கில் 1944-இல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்றார். இக்கல்லூரியில் பயின்ற காலப் பகுதியில் யாவராலும் மெச்சத்தக்க மாணவராக விளங்கினார். இப்பாடசாலையில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலப்பகுதியில் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களைக் கொண்டு 'இளங்குரல்' (1946) என்ற கையெழுத்து ஏட்டினை உருவாக்கி அதன் ஆசிரியராக இருந்து செயலாற்றினார். இச்செயற்பாடே இவரது எதிர்கால எழுத்துலக வாழ்விற்கான அச்சாணியாக அமைந்தது.

1948-இல் கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப் பயிலுவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றது. பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலப்பகுதியில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன் முதலியோரிடம் தமிழைக் கற்கும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு பயின்று கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் முதல் மாணாக்கராகவும் ஊர்க்காரராகவும் விளங்கியதால் பேராசிரியர் அவர் மீது அன்பு கொண்டவராகக் காணப்பட்டார். தமிழ் மொழிப்பற்று அவரைப் பெரிதும் பற்றிக்கொண்டது. இளமை யிலே எழுத்தாற்றல் மிக்கவராய்த் திகழ்ந்த சண்முகசுந்தரம் அவர்களை கலை, இலக்கிய உலகம் நன்கு அறியும்.

அறிவின் விசாலமும் ஆழ்ந்த சமூகநோக்கும் கொண்ட சண்முகசுந்தரம் அவர்கள் மாணவர் சமுதாயம் போற்றும் ஆசிரிய ராகவும் மனிதநேயமிக்க அதிபராகவும் சிறுகதை, நாவல், நாடகம் முதலானவற்றை ஈழத்திலக்கிய உலகுக்கு விரும்பியளித்த படைப்பிலக்கியவாதியாகவும் நாட்டாரியல் வளராத நிலையில் அதனை தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்த கள ஆய்வாளராகவும் தமிழ்மொழிமீது பற்றுக்கொண்டு அதனை ஈழத்தவருக்களித்த கட்டுரையாசிரியராகவும் விளங்கினார். அழிந்து சென்று கொண்டிருந்த சுதேசிய இலக்கியம், கிராமிய பண்பாட்டு கலைகளை மீட்டெடுத்து அதனை சமூகம் பயனுறும் வகையில் அளித்த தமிழ்ப் பண்பாட்டின் காவலனாகவும் விளங்கினார்.

பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் எழுத்துத்துறையின் மீது ஏற்பட்டிருந்த மிகுந்த ஈடுபாட்டின் காரணமாக பல்கலைக்கழகப் பட்டப்படிப்பினை முடித்ததும் 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியர் குழாத்தில் ஒருவராக இணைந்து பணியாற்றத் தொடங்கினார். அப்போது தினகரன் ஆசிரியராக இருந்தவர் திரு வி.கே.பி. நாதன் அவர்கள். இவ்விருவரும் தினகரனில் பணியாற்றிய காலத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் கட்டுரைகளும், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் கட்டுரைகளும் பேராசிரியர் சேனரத் பரணவிதான அவர்களின் கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவந்தன. பத்திரிகை தர்மத்தைப் பேணி வளர்த்து தினகரன் நிறுவனத்தாரின் நன்மதிப்பைப் பெற்ற சண்முகசுந்தரம் அவர்கள் அதிலிருந்து விலகி சிலகாலம், பாராளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றினார். பின்னர் மகாஜனக் கல்லூரி அதிபர் தெ.து. ஜயரத்தினம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கற்பித்தல் தொழிலிலே நாட்டம் கொண்டு மகாஜனக்கல்லூரியின் ஆசிரியரானார். கற்பித்தல் தொழிலில் கொண்ட ஈடுபாட்டினால் சண்முகசுந்தரம் அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருந்த காலத்தில் பல்வேறு விதமான அரசியற் கொள்கைகளை அலசி ஆராய்ந்தார். அக்காலத்தில் தமிழருக்குரிய தார்மீக உரிமைகள் வழங்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். இதனால் தமிழ் அரசியல் தலைவர்களிடம் அபிமானமும் மதிப்பும் உடையவராய் வாழ்ந்த இவர் பின்னர் தந்தை செல்வநாயகத்தின் சுதந்திரன் பத்திரிகையோடு தன்னை இணைத்துக் கொண்டார். தந்தை செல்வாவுடன் இறுதிவரை நட்புறவைப் பேணிக்கொண்ட வராகவும் காணப்பட்டார்.

"

**சண்முகசுந்தரம் மாஸ்டர்,**
**முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம், மாக்ஸீய இலக்கியம்**
**கோலொச்சிய அக்காலப்பகுதியில்**
**அவற்றை எல்லாம் மாணவர் மத்தியில் எடுத்துரைத்து**
**தனித்துவமிக்க ஆளுமைகளில்**
**ஒருவராகத் துலங்கினார்.**

"

## ஆசிரியர் பணியில் சண்முகசுந்தரமும்:

அறிவொளி மாவை த. சண்முகசுந்தரம் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலக்கியம், வரலாறு, அரசறிவியல் முதலான பாடங்களைக் கற்பித்தார். வரலாறும், அரசறிவியலும் இவருக்குக் கைவந்த பாடங்கள். இதனை சுவாரஸியமாகவும் மாணவர் இரசித்துக் கேட்கும் விதமாகவும் கற்பிப்பார்.

பாடத்திட்டங்களுக்கப்பால் தமிழர் பிரதேசங்களில் பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்து நிற்கும் கலைகள் குறித்து விரிவான அறிமுகத்தைச் செய்வதுடன் மண்ணில் வாழ்ந்த, வாழும் கலைஞர்கள் குறித்தும் எடுத்துரைப்பார். மாணவர்களுக்கு தேவையான பயிற்சிகளை அளித்து அவர்களை விவாதப்போட்டிகள், சமயப்போட்டிகள் முதலானவற்றுக்கு தயார்ப்படுத்தி விடுவதும் இவரது கடமைகளாக இருந்தன. 'மலையைக் காண்பதற்கு தூரம் வேண்டும், சம்பவங்களை மதிப்பிடுவதற்கு காலம் வேண்டும்' என்று கூறும் சண்முகசுந்தரம் மாஸ்டர், முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம், மாக்ஸீய இலக்கியம் கோலொச்சிய அக்காலப்பகுதியில் அவற்றை எல்லாம் மாணவர் மத்தியில் எடுத்துரைத்து தனித்துவமிக்க ஆளுமைகளில் ஒருவராகத் துலங்கினார். தனிமனித விருப்பு வெறுப்புக்களுக்கப்பால் மாணவர் நலனே தன்னலன் எனக் கொண்டு நேர்மையுடனும் திடசங்கற்பத்துடனும் உழைத்தார்.

கல்லூரி வளர்ச்சிக்கும் மாணவர்களது உயர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்த சண்முகசுந்தரம் அவர்கள், தனிமனித பல்கலைக்கழகமாக நின்ற பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்களது படைப்புகளை அச்சிலே வெளிக்கொணர்ந்து இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார், அவரில்லையேல் துரையப்பா பிள்ளைகளின் படைப்புக்கள் இல்லை. பாவலர் துரையப்பாபிள்ளையின் இலக்கியமரபையும் சமூகப் பணிகளையும் அவரது முற்போக்குச் சிந்தனைகளையும் நன்கறிந்த சண்முகசுந்தரம் அவர்கள் பாவலரின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்பதை 1972-ஆம் ஆண்டு பழைய மாணவர், பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஆசிரியர் குழு, பல்கலைக்கழக ஆய்வாளர் கொண்ட இணைப்புக் கூட்டத்திலே வற்புறுத்தினார். இந்நூற்றாண்டு விழாவில் மலர் வெளியிடல், சிலை நிறுவுதல், சிறப்பு விழா என்பன நடைபெறுதல் வேண்டுமென்பதையும் ஆலோசனையாக முன்வைத்தார். பாவலரின் நூற்றாண்டு விழா மலர்க்குழுவில் ஒருவராயிருந்து மலர் சிறப்புற அமையவும் உதவினார். பாவலரது வரலாற்றை 'அறிவு கொளுத்திய அமரர்' என்னும் தலைப்பில் நாடகமாக எழுதி, கவிஞர் கதிரேசர் பிள்ளையின் நெறியாள்கையில் கல்லூரி ஆசிரியர்கள் மூலம் அதனை நூற்றாண்டு விழாவில் மேடையேற்றினார். அந்நாடகத்தில் பாவலராக நடித்த செ. கதிரேசர் பிள்ளை அவர்களின் நடிப்பைக் கண்டு பாவலரின் மகனார் தெ. ஜயரத்தினம் தேம்பித் தேம்பி அழுத காட்சி அன்று அனைவரினதும் மனத்தினைத் தொட்டது.

கல்வித்துறையிலே தேர்வு நடைமுறைகளைப் பரவலாக்கும் முன்னோடித் திட்டத்தின் கீழ் சண்முகசுந்தரம் அவர்கள் குடியியற்பாடத் தேர்வாளராக உள்வாங்கப்பட்டார். குடியியற் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தால் குடியியற் பாடத் தேர்வாளராக 1972-இல் நியமிக்கப்பட்ட இவர் மதிப்பீடு தொடர்பான பயிற்சி நிலையத்திற்குச் சென்று அப்பயிற்சிகளையும் பெற்று தன் வாண்மை விருத்தியை வளர்த்துக் கொண்டார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உயர்தர மாணவமன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து, உயர்வகுப்பு மாணவரிடையே போட்டி ஒன்றை வைத்து வெற்றிபெற்ற அறுவரின் சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து அதனைத் தொகுத்து 'இளம்முல்லை' என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளிக்கொண்டு வந்தார். இரா. நாகராசனின் 'பெரிய மனிதர்கள்', தியாகராமின் 'வாழ்வின் மாயைகள்', யுவனேஸ்வரியின் 'சகடக்கால்', திருமகளின் 'இரத்தத் தொடர்பு', கணேசலிங்கனின் 'பரிசு', சுதந்திரச் செல்வியின் 'தியாகச்சுடர்' முதலான சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றன. அத்தோடு நில்லாது, 1966-ஆம் ஆண்டு புத்தகக் கண்காட்சி ஒன்றினையும் சிறப்புற நடத்துவதற்கும் உறுதுணையாகவும் இருந்தார். இக்காலப்பகுதியில் மகாஜனன் இதழின் பதிப்பாசிரியராகவும் இருந்தார்.

ஆ. சிவநேசச்செல்வனுடன் பதிப்பாலோசகராக சண்முகசுந்தரம் அவர்களும் இருந்து 'சங்கமம்' இதழ் சிறப்பாக வெளிக்கொண்டு வந்தார். இவ்விதழின் இணை ஆசிரியர்களாக நாகேஸ்வரன், சு. சரவணபவன் ஆகியோர் காணப்பட்டனர். இதன் நிர்வாக ஆசிரியராக வீ. ஸ்ரீகதிர்காமநாதனும் செயலாளராக சண்முகநாதனும் நிர்வாக அதிபராக பொ. இரகுபதியும் விளங்கினர். நான்கு இதழ் காத்திரமாக வெளிவந்த நிலையில் இவ்விதழ் தன்னை முடித்துக் கொண்டது.

1971-காலப்பகுதியில் யாழ். தொல்லியற்கழகம் நிறுவப்பட்டது. அந்நிறுவனத்தின் உறுப்பினர்களில் ஒருவராக இருந்து சண்முகசுந்தரம் அவர்கள் தொல்லியல் ஆய்வுப்பணிகளிலும் தொல்லியல் அறிவுப்பரப்பலிலும் ஈடுபட்டார். இதன்காரணமாக, குடியுரிமைக்கல்வி, எட்டாந்தரத்திற்கான புதுமுறைச் சரித்திரம் போன்ற பாடநூல்களின் இணையாசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பும் அவரைத் தேடிவந்தது. யாழ். தொல்பொருளியற் கழகம் மகாஜனக்கல்லூரியில் அதன் சமூகவியற் கழகத்தின் ஆதரவுடன் இணைந்து தொல்பொருளியற் கண்காட்சி ஒன்றினையும் நடத்தியது. சமூகவியற் கழகப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் அதன் அமைப்பாளராக சண்முகசுந்தரம் மாஸ்டர் இருந்தமையால் அவரது மாணவன் ஆ. சிவநேசச்செல்வனுடன் இணைந்து இதனைச் சிறப்புற நடத்தினார்.

மகாஜனக்கல்லூரியில் இவரிடம் கற்று உயர்நிலையை அடைந்த மாணவர்கள் பலராவார். ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆலோசகராக விளங்கிய பாஸ்கரலிங்கம், மொழிபெயர்ப்பாளரும் ஆய்வாளருமான க. சண்முகலிங்கம், முன்னாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன், ஆய்வாளரும் பதிப்பாசிரியருமான மயிலாங்கூடலூர் நடராசன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்கிய பூ. சோதிநாதன், பேராசிரியர் கலாநிதி நாகேஸ்வரன், கலாநிதி பொ. இரகுபதி எனப் பலர் இவரிடம் கற்று இன்று நாடாளவியரீதியில் அறியப்பட்டவர்கள்.

மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து துணை அதிபராக உயர்ந்த அவருக்கு, அரசியற் தலையீடு

காரணமாக 1975-ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. புதுக்குடியிருப்புக்குச் சென்ற இவர் 1980-ஆம் ஆண்டுவரை அங்கு கடமையாற்றினார். அக்காலப்பகுதியில் அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டது. ஆயினும் அதனை அவர் பொருட்படுத்தவில்லை. தன் பணியை அங்கும் செவ்வனே செய்தார். புதுக்குடியிருப்பில் ஆசிரியராகக் கடமை புரிந்த சண்முகசுந்தரம் அவர்களுக்கு, இளமையிற் கல்வி பயின்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு 1981-இல் கல்வியமைச்சினால் இடமாற்றம் வழங்கப்பட்டது. இங்கு 19.12.1981 முதல் 31.05.1982 வரை ஈராண்டுகள் துணையதிபராக இருந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்காக உழைத்தார்.

முதல் நியமனத்திலிருந்து ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகள் சேவை புரிந்த பின், தவறான அரசியற் தலையீடு காரணமாக இடமாற்றம் பெற்றுச் சென்ற த. சண்முகசுந்தரம் அவர்கள் தனது கடமையின் இறுதிக்காலத்தில் மகாஜனாவில் சேவை செய்வதையே விரும்பினார். மீளவரமுயன்ற போதிலும் அரசியல் செல்வாக்குத் தடையாக அமைந்தது. எனினும் அக்கல்லூரியின் பழைய மாணவர்களினதும் நலன் விரும்பிகளினதும் முயற்சியின் விளைவால் 01.06.82 அன்று மீண்டும் மகாஜனக் கல்லூரிக்கு வந்து அங்கு அதிபராகப் பணியாற்றினார். 1982 முதல் முதலாந்தர விசேட பதவித் தரத்திற்குப் (Grade 1 Special Post) பதவியுயர்வு பெற்றார். இப்பதவி உயர்வு அவர் அதிபராகக் கடமையாற்றிய பின்னரே கிடைத்தது.

## சண்முகசுந்தரம் அவர்களின் தமிழ்ப்பணி:

இருபத்து நான்கு நூல்களை வெளிக்கொண்டு வந்து தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர். தனது பெருவிருப்புக்குரிய குருநாதர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றை 'கலையருவி கணபதிப்பிள்ளை சில நினைவுகள்' என்ற பெயரில் எழுதினார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் பெயரையும் புகழையும் அவருடைய பெருவிருப்புக்குரிய மாணவர்களே மழுங்கடிக்க முனைந்த சமயத்தில், பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் ஒப்பில்லா தமிழ்ப்பணியையும் ஆளுமையையும் 'கலைமகிழ்நன்' என்ற பெயரில் நூலாக்கம் செய்து ஆவணப்படுத்தியவர். சைவத்தையும் தமிழையும் தன்னிரு கண்களாகக் கொண்டு தமிழ்ப்பணி செய்த சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை சிவத்தமிழ்ச்செல்வம் என்ற தலைப்பில் நூலாக்கி அவரை வரலாற்றுச் சரித்திரத்தில் நிலைபேறு உடையவராக்கியவர். அம்பிகையின் மீளா அடிமையாக்கித் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட துர்க்கா துரந்தரி, சிவத் தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி வரலாற்றை அவர் உயிருடன் இருக்கும் போதே எழுதிய சண்முகசுந்தரம் அவர்கள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், அதிபர் ஐ.பி. துரைரட்ணம் முதலான பன்முக ஆளுமைகள் குறித்தும் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். இவரது கட்டுரைகள் ஆழமும் சொற்செறிவும் மிக்கவை.

தமிழ், ஆங்கிலமாகிய இரு மொழிகளிலும் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தாலும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தந்தையாரிடம் கற்றறிந்திருக்க காரணத்தால் கூடியளவு வடமொழிச் சொற்கள் கலவாமல் கட்டுரைகளை எழுதுவதில் வல்லவராகவும் காணப்பட்டார். இவரின் எழுத்தாற்றலையும், அறிவுத்திறனையும், செந்தமிழ்ச் சிறப்பு நடையையும் கண்டு ஆசிரிய உலகம் அவரைப் பெரிதும் மதித்தது. கற்பன கற்று, கடிவன கடிந்து, நிற்பன நின்று நெறி பிறழாது வாழ்ந்தவரான சண்முகசுந்தரம் அவர்களை 'தன்னலங் கருதாச் சேவை / தனித்தமிழ் இயம்பும் வாய்ச்சொல் / சொன்னலம் காட்டும் பேச்சு / தூய்மையைக் காட்டும் வாழ்வு / பன்னலம் பெற்ற சால்பு / பாவலர் போற்றும் மேதை / மன்னிய நாமம் என்றும் / மன்னுக உலகில் என்றும்' எனப் போற்றுவார் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

சமூகத் தொண்டனாய், உயர்ந்த சைவாசாரசீலராய், பேரறிஞராய், தனித்தமிழ் அபிமானியாய் விளங்கிய சண்முகசுந்தரம் நாற்பதாண்டு காலமாக எமது மக்களின் பண்பாடுகளையும், கலை வளங்களையும் துருவித்துருவி ஆராய்ந்தார். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களுடன் இணைந்து தமிழ்ச்சங்க ஏடாகிய 'இளங்கதிர்' இதழை உருவாக்கிய சண்முகசுந்தரம் அவர்கள் அவ்விதழின் முதலாசிரியராக இருந்து, பல எழுத்தாளர்களைத் தமிழுலகிற்கு அளித்தார். வருடாந்த இதழ்களைத் தயாரிப்பதிலும், கட்டுரைகளைச் சரி, பிழை பார்த்துப் பிரசுரிப்பதிலும், அச்சு வாகனமேறும்போது அங்கு பணிபுரிவோர்க்கு வழிகாட்டுவதிலும் மிகச் சாதுரியம் வாய்ந்தவராகச் சண்முகசுந்தரம் அவர்கள் செயற்பட்டார். இச்சஞ்சிகை இன்றும் சுடர்விட்டுப் பிரகாசிப்பதற்கு இவரே காரணம் என்று கூறலாம். கலாநிதிப் பட்டத்திற்கு வித்தியானந்தன் அவர்கள் இலண்டனுக்குச் சென்ற காலத்தில் அங்கிருந்து பயணக் கட்டுரைகள் பலவற்றை வாங்கி தினகரனில் வெளியிட்ட பெருமையும் இவரைச்சாரும்.

நவீன இலக்கியத்தில் ஈடுபாடுகொண்ட தசம் அவர்கள், தமிழர் பண்பாட்டியல் தொடர்பாகவும் விரிவான ஆய்வினை மேற்கொண்ட தனித்துவமான படைப்பாளி. தமிழ்மொழியின் சொல்லாக்கவியல் துறையில் அதிக கவனத்தைச் செலுத்தி நின்றவர். இதற்கு பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களோடு கொண்ட நட்பே காரணமாக அமைந்தது. தமிழ் சொல்லாக்கம் தொடர்பாகப் பேசுவதோடு நில்லாது அவ்வப்போது அது தொடர்பான கட்டுரைகளையும் எழுதினார்.

தம்பு உபாத்தியாயரின் நண்பரே யோகர்சுவாமிகள். அந்தமுறையில் சண்முகசுந்தரம் அவர்களை யோகர்சுவாமி நன்கறிந்திருந்தார். தினகரனில் சண்முகசுந்தரம் அவர்கள் வேலை செய்துகொண்டிருந்த காலத்தில் யாழ்ப்பாண புத்தகக்கடை ஒன்றில் அவரைச் சந்தித்து 'கற்றது ஆங்கிலம், பற்றுவது தமிழ்' என யோகர்சுவாமிகள் கூறினார். சுவாமிகளது வாக்கிற்கமைய தமிழ்மொழிப்பற்றாளராக விளங்கிய சண்முகசுந்தரனார், தமது கொள்கைப் பிடிப்பினைத் தாம் எழுதிய கட்டுரைகள் வாயிலாகவும் நிறுவினார். அக்காலத்தில் வெளிவந்த 'ஈழநாடு', 'ஈழமுரசு', 'வீரகேசரி', 'தினகரன்', 'தினபதி' முதலான பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் இவரது பெயரினை நிலைபெறச் செய்தன. அன்று முதல் அவரது பேச்சிலும் எழுத்திலும் 'தொன்மைசால் மாண்புடைய இன்தமிழ் குடிகொண்டிருந்தது.

எடுத்துக்கொண்ட விடயத்தை விரிவுபடுத்தாமல் இரத்தினச் சுருக்கமாய் எழுதுவதில் வல்லவர். கருத்துக்களை மரபு பிறழாமலும் நேர்த்தியாகவும் ஆழமாகவும் கூறுவார். அவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் இதனைப் புலப்படுத்தி



நிற்கின்றன. 'வாழ்வு பெற்ற வல்லி', 'இறுதிமூச்சு', 'பூதத்தம்பி' முதலான நாடகமாயிருக்கலாம், 'மீனாட்சி' நாவலாக இருக்கலாம் மாவை முருகன் காவடிப்பாட்டு, வன்னி வள நாட்டின் புதுக்குடியிருப்புக் கூத்தும் மரபும், இசையும் மரபும் முதலான நூல்களாயிருக்கலாம் எந்த நூலிலும் திரு சண்முகசுந்தரம் அவர்களது சிந்தனை வளம் நிரம்பியிருப்பதை வாசக நேயர்கள் இனிது காண்பார்கள்.

## சிறுகதைகள்:

இளமையிலேயே எழுத்தார்வங் கொண்ட சண்முகசுந்தரம் அவர்கள், தனது வாழ்நாளில் பெரும் பகுதியினை எழுத்துத் துறைக்கே செலவிடலானார். அறிவிலக்கியவாதியாக அறியப்பட்ட தசம் அவர்கள் ஆக்க இலக்கியங்கள் பலவற்றையும் படைத்தவராவார். மனிதநேய மிக்க தசம் அவர்கள் தத்துவ விசாரமிக்க சிறுகதைகள் பலவற்றையும் எழுதினார். 'கடவுளே', 'நாயும் தத்துவஞானமும்', 'கழிவிரக்கம்' ஆகிய மூன்று கதைகளையும் முறையே சண், சண்முகம், நையாண்டி என்ற புனை பெயர்களில் எழுதி ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் விளங்கினார். 1950 தொடக்கம் 1953 வரை தினகரனில் நான்காண்டுகள் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் இவருடைய சிறுகதை ஆக்கங்களாக 'தங்கப் பதக்கம்' (19.11.1950) 'இராசவம்ச ரத்தம்' (26.08.1951) போன்றன வெளிவந்தன. 'கலைக்கண்' என்ற பத்திரிகையில் 'கந்தையுள் கிளந்த காதல்' (23.07.1973) 'தனிப்பிறவி' (23.3.1973) போன்ற கதைகளும் சுதந்திரனில் 'வறுமையின் வேதனை' என்ற கதையும் வெளியாகி இருந்தன. த. சண்முகசுந்தரம் அவர்களின் சிறுகதைகள் முல்லைப்பூங்கொத்து - 1 என்ற பெயரில் வெளிவர இருந்தன. இத்தொகுப்பில் 'வீட்டுக்கணக்கு' (தினகரன், 24-2-80), 'காட்டுக்கோழி' (ஈழநாடு, 3-2-80), 'உறவுகள் தொடர்கதை' (சிந்தாமணி, 11-5-80), 'இவர்களுக்காக நான் வாழ்வேன்' (சிந்தாமணி, 30-1-80), 'மண்ணை உண்ட மாயவன்' (ஈழநாடு, 26.10.80), 'இறுதி ஓட்டம்' (சிந்தாமணி, 12-3-85), 'தனிப்பிறவி' (கலைக்கண், 23-3-73), 'நடத்துநர் வாழ்க்கை நடாத்துகின்றர்' (ஈழநாடு), 'புகையும் புகைச்சலும்' (தினகரன், 28-11-82) 10. 'தப்பியது விந்தை' (இலங்கை வானொலி) முதலான கதைகள் உள்ளடக்கப்பட்டு வெளிவர இருந்த நிலையில் அது கைகூடாமல் போனது. இவை தவிர 'சுமை இறங்கிய சுகம்' (16.08.1986), 'ஒரு பிடி மண்' (தினகரன்), 'தாய்மை வெள்ளம்' (சங்கமம், 1974), 'எங்களுக்கு இடமில்லையடா' முதலான சிறுகதைகளையும் இவர் எழுதி உள்ளார்.

இவருடைய பெரும்பாலன சிறுகதைகள் வர்க்க ஏற்றத்தாழ்வுகளைச் சித்திரிப்பனவாகவும் இனப்பிரச்சினைக்கு முகங்கொடுத்த தமிழ் மக்களின் உணர்வின் கோலமாகவும் தமிழ், சிங்கள மக்களின் முரண்பாடுகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்தன. வீட்டில் வளர்க்க என்று வாங்கிய நாய் குரைக்க அது அக்கம் பக்கத்தில் இருப்பவருக்கு தொந்தரவாக அமைகிறது. நாயை வெளியில் கொண்டு விட முனைகையில் தம் பிள்ளை என்றால் அவ்வாறு செய்வோமா என்ற தத்துவஞானம் பிறக்கிறது. இதன் வெளிப்பாடே 'நாயும் தத்துவஞானமும்' என்ற கதை. இவரின் கந்தையுள் கனிந்த காதல்' வறுமைத்துயரில் உழன்ற போதிலும் பணத்துக்கு விலை

போகாத ஏழைகளின் வாழ்வை வெளிப்படுத்தி நிற்கிறது. பிறரின் பணத்தைச் சுரண்டி வாழ்பவர்கள் ஒரு போதும் நன்றாக வாழ்ந்ததாகச் சரித்திரமில்லை என்ற தூரநோக்கையும் இக்கதை உணர்த்தி நிற்கிறது. 'மண்ணை உண்ட மாயவன்' சிறுகதை யாழ்ப்பாணத்தில் பிறந்து முப்பது வருடத்துக்கு மேலாக அங்கேயே வாழ்ந்த மலையகத் தமிழர் மாயவன், பிரஜாவுரிமைச் சட்டத்தின் பிரகாரம் விமானத்தில் ஏற்றி இந்தியாவுக்கு அநாதரவாய் அனுப்பி வைப்பதைச் சித்திரிக்கிறது. விமான நிலையத்திலும் சமூக ஏற்றத்தாழ்வுகள் உடைகள், உடமைகள் என்பனவற்றை வைத்து எவ்வாறு கணிக்கப்படுவது என்பதையும் இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. 'நடத்துநர் வாழ்க்கை நடாத்துகிறார்' மனதுக்குள் புழுங்கி வாழ்க்கைச் சுமையால் தடுமாறும் ஏழை நடத்துநரின் வாழ்க்கைச் சரிதையை வெளிப்படையாக உணர்த்தி நிற்கிறது. 'காட்டுக்கோழி' வசதி படைத்த கல்வியறிவு கொண்ட செல்வந்தரின் இரட்டை முகத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. காட்டுச் சேவல் போல ஏழைகளை ஏய்த்துப் பிழைக்கும் போலி மனிதர்களின் இரட்டை வாழ்க்கை இச்சிறுகதையில் நுண்மையாகச் சித்திரிக்கப்படுகிறது. இவருடைய 'தாய்மை வெள்ளம்' இலங்கையில் நடந்த கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைக் கூறுகிறது. நாதஸ்வரக் கலைஞனின் கலைப்பித்தையும் காதலையும் அவன் வாழ்க்கையின் மேடு பள்ளங்களையும் வெளிப்படுத்திய நவீனமே 'விதியின் கை'. இவருடைய சிறுகதையான 'எதிரொலி' அக்கால சமூகத்தின் வாழ்க்கைநிலைகளை எடுத்துரைக்கும் சிறுகதையாகவும் அமைகின்றது. சமூக ஏகாபத்திய சுரண்டல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த தமிழருவி சண்முகசுந்தரம் அவை தொடர்பான விடயங்களைத் தம் சிறுகதைகளின் வாயிலாகவும் பதிவு செய்தார். அதேசமயம் சமூக வாழ்வில் புரையேறிப்போன நடத்தைவாத முறைகளையும் தம் சிறுகதைகளின் வாயிலாகவும் காட்சிப்படுத்துகின்றார்.

## நாவல்கள்:

பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலப்பகுதியில் சிறுகதை முயற்சிகளை மேற்கொண்டிருந்த அவர் புனைகதையின் மற்றொரு வடிவமான நாவல் எழுதும் முயற்சியிலும் ஈடுபடத் தொடங்கினார். இவர் எழுதிய 'மீனாட்சி' (சுதந்திரன்), 'ஆசை ஏணி' (சுதந்திரன்- 20.06.1954), 'நாகமணி', 'விதியின் கை' (நடுங்கியது), 'அணையாவிளக்கு' (கையெழுத்துப்பிரதி) முதலான நாவல்கள் இவருக்கு பெயரையும் புகழையும் ஈட்டித் தந்தன. சுதந்திரன் செய்தியேட்டில் தொடர் நவீனமாக 'மீனாட்சி'யை 10.05.1953 - 14.6.1953 வரை ஆறு தொடர்களாக வெளியிட்டார். இதனை வெளியிட்டதன் மூலம் அவர் நாவலாசிரியராகவும் அறிமுகமானார். ஒரு தோட்டத்தொழிலாளர் வர்க்கப் பெண்ணின் சோதனை நிறைந்த வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் இந்நாவல் மாற்றம் ஒன்றை நாடி நிற்கும் சமூகத்தின் கதை ஆகும். சுதந்திரனில் தொடர் நவீனமாக வெளிவந்த 'ஆசை ஏணி' 20.06.1954 தொடக்கம் 17.04.1955 வரை நாற்பத்து நான்கு தொடர்களாக வெளிவந்தது.

## நடைச்சித்திரங்கள்:

சண்முகசுந்தரம் மாஸ்டர் எவ்வாறான உலகத்தைக் காண விளைந்தாரோ அவ்வாறான உலகில் நேர்ச்சிந்தனையும் மனித நேயமும் காருண்யமும் கொண்ட ஜீவனுள்ள மனிதர்களை ஆதாரமாகக் கொண்டு தன் நடைச்சித்திரங்களை ஆக்கினார். இருபதாம் நூற்றாண்டில் என்.ஆர். கோவிந்தராஜன், வ. ராமசாமி முதலானோர் தன்னோடு வாழ்ந்த, தன் நினைவில் நின்ற சில மனிதர்களைக்



கொண்டு நடைச்சித்திரங்களாகத் தீட்ட சண்முகசுந்தரம் மாஸ்டரோ நாட்டில் நடக்கும் அநியாயங்களை வெளிச்சம் போட்டுக்காட்டவும் கூறவும் மனித மனங்களில் நல்ல சிந் தனைகளை வளர்க்கவும் நீதி, நியாயங்களை எடுத்துரைக் கவும் முறையற்ற மனித நடத்தைவாத முறைகளை அங்கத மாகவும் பூடகமாகவும் கூறவும் நடைச்சித்திரங்களை எழுதினார். இலங்கையில் இத்தகைய முயற்சியில் அ.செ. முருகானந்தன், சானா, நீலாவணன் முதலியோரும் மலைய கத்தில் இருந்து க.ப. லிங்கதாசன், அல்அஸுமத் முதலான வர்களும் ஈடுபட்டிருந்தனர். பிற்காலத்தில் தேடல் சஞ்சி கையில் வித்தக பண்டிதரின் நடைச்சித்திரங்களும் வெளிவந் திருந்தன. இச்சித்திரங்கள் அங்கதவுணர்வின் வெளிப்பாடு களாய் அமைந்திருந்தன.

## தமிழருவி சண்முகசுந்தரமும் பொதுப்பணியும்:

தமிழருவி சண்முகசுந்தரம் கட்டுரை, நாடகம், நாவல், சிறுகதை, பதிப்பு முயற்சி எனத் தன்வட்டத்தைச் சுருக்கிக் கொள்ளாது மன்றங்களை உருவாக்கி தமிழ்ப்பணி செய்தவ ராகவும் காணப்பட்டார். 1970-ஆம் ஆண்டு அறிவினை பரந் தளவில் விருத்தி செய்யும் வகையில் 'இலங்கை அறிவி யக்கம்' என்ற பெயரில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, வாசகர் மத்தியில் நல்லிலக்கி யத்தைக் கொண்டு செல்லவேண்டும் என்ற நோக்கில் உரு வாக்கப்பட்ட அமைப்பே 'தமிழ் கதைஞர் வட்டம்'. 1974-ஆம் ஆண்டு இதன் தலைமை பொறுப்பை ஏற்று இவ்வமைப்பைப் பயனுள்ள வகையில் நடத்திச் சென்ற பெருமை தசம் அவர் களைச் சாரும். அத்தோடு கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர் களின் நூல்களைச் அச்சில் கொண்டு வருவதற்கென வேல் அமுதனால் உருவாக்கப்பட்ட அமைப்பே வேல் வெளியீட் டகம். தமிழ் மக்கள் மனதில் திருக்குறளை வளர்க்கவேண்டும் என அயராது உழைத்தவராகவும் தமிழருவி சண்முகசுந்தரம் காணப்பட்டார். தமிழ் மக்களின் பண்பாட்டு ஊற்று என்பது தேவாரங்களிலும் திருக்குறளிலுமே காணப்படுகின்றது என்பதை உணர்ந்து அதனை வளர்க்க வாழ்நாளினை அர்ப் பணித்தவராகவும் தமிழருவி காணப்படுகின்றார். வள்ளுவர் மாமன்றத்தில் இணைந்து கொண்டு திருக்குறளை மக்கள் மத்திக்கு எடுத்துச் சென்ற பெருமையும் இவரையே சாரும். பொருளாதார மறுமலர்ச்சிக்கு அத்திவாரமாக விளங்கும் கூட்டுறவு துறையிலும் அதிக அக்கறை காட்டிய ஒருவராக சண்முகசுந்தரம் அவர்கள் காணப்பட்டார். தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனையின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிய ஒருவராக விளங்கினார். புகழ் பெற்ற குழந்தை மருத் துவரான கெங்கம்மாள் அவர்களை இணுவில் வைத்தியசா லையில் இருந்து தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசா லைக்கு அழைத்து வந்தவரும் இவரே. அதன் செயற்படு உறுப்பினர்களில் ஒருவராக இருந்து இவராற்றிய சேவைகள் அளப்பெரியன. கூட்டுறவுத்துறை நலிவடைந்த காலத்தில் அதனை விட்டு நீங்காது அதனோடு கூட இருந்து அதனைக் காத்தவர்களில் இவரும் ஒருவர். வட்டுக்கோட்டை அரிமாக் கழக (Lion Club) உறுப்பினராகவும் மாவிட்டபுர அரிமாக்கழக அங்கத்தவராகவும் இருந்து மானுட சேவை புரிந்து மக்களின் நன்மதிப்பையும் பெற்றார்.

கணீர் என்ற குரல்வளம் கொண்டவர் சண்முகசுந்தரம் அவர்கள் வானொலியில் சைவ நற்சிந்தனைகளை வழங் கினார். சைவத்தோடு தமிழையும் இணைத்து வழங்கிய நற் சிந்தனைகள் கேட்போருக்கு நன்மை பயப்பனவாய் அமைந்தன. சிவநெறிக் கழகப் புரவலராய் இருந்தும் இவர் அரும்பணி புரிந்துள்ளார். மக்கள் கலைகளை வானொலிக்கு கொண்டு போன ஒருவராகவும் இவர் காணப்படுகின்றார். பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி, ஒலிபரப்புப் பணிப்பாளர் திரு.சி.வி. இராசசுந்தரம் ஆகியோரின் பணிப்பின் பேரில் 'மக்கள் கலையும் மறுமலர்ச்சிப் பாதையும்' என்னும் தலைப்பில் இலங்கை வானெலியில் இவராற்றிய உரை கிராமியக் கலைகள் குறித்து யாவரையும் சிந்திக்க வைத்தது.

1985-ஆம் ஆண்டு சிவநெறிக் கழகம் நடத்திய இராஜராஜ சோழன் முடிசூடிய ஆயிரம் ஆண்டு விழாவில் கலந்து சிறப் பித்ததோடு நில்லாது அங்கு பேசவந்த பேச்சாளர்களை நெறிப்படுத்தி அவ்விழாவைத் திறமையுடன் நடத்தியும் கொடுத்தார். தமிழ்ஒளி சண்முகசுந்தரம் அவர்களது பேட்டிகள் ஆழமானவை, அவருடைய அறிவினைப் புலப்ப டுத்துவனவாய் அமைந்தன. பண்பாட்டு மரபினைப் பேணுவ தாயும் இலக்கியச்சுவை நிறைந்தனவாயும் அமைந்துள்ள அப்பேட்டிகள் ஆவணமாக்கப்படவேண்டியவை. ஒருமுறை வானெலியிலே 'கலைக்கோலம்' நிகழ்ச்சிக்கென இவருடைய நேர்காணலைக் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை ஒலிப் பதிவு செய்திருந்தார். அதில் காலனித்துவ காலத்தில் மங்கிச் சிதைவடைந்துபோன எமது பண்பாட்டு கலை மரபுகள் மீட்கப் படவேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தி இருந்தார்.

## நாடக இலக்கியமும் தமிழருவியும்:

ஈழத் தமிழர் வாழ்வில் நீண்ட காலமாகப் பயிலப்பட்டு வந்த நாடகம் ஆரம்பத்தில் நாட்டுக்கூத்து வடிவிலேயே காணப் பட்டது. ஆரம்ப காலத்தில் ஈழத்தில் கிராமிய நாடகங்களை நாட்டுக்கூத்து என்றே வழங்கும் மரபு காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகளில் நாடகக் கலையினைப் பல்கலைக்கழக மட்டத்திலுள்ளோரும் ஆத ரிக்கத் தொடங்கினர். அக்காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராய் விளங்கிய பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி, க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோர் நாடகத்துக்கும் முக்கிய இடங் கொடுத்தனர். இக்காலப்பகுதியில் இவர்களின் தொடர் பினால் தம்மை நிலைப்படுத்திக் கொண்ட சண்முகசுந்தரம் அவர்கள் நாடகங்கள் பலவற்றையும் எழுதினார்.

பாடசாலையில் கற்கின்ற காலத்திலேயே ஆக்க இலக்கி யத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்த சண்முகசுந்தரம் பழைய வரலாற்றுச் சம்பவங்களுக்குப் புத்துருவம் கொடுத்தார். பண் டைத்தமிழரின் வாழ்வுமுறையை மண்ணோடு இணைத்து தேசியக் கண்ணோட்டத்துடன் கூடிய யதார்த்த நாடகங் களைப் படைத்தார். செவிவழிச் செய்திகளையும் யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்படும் சம்பவங்களை அடிப்ப டையாகக் கொண்டு 'வாழ்வு பெற்ற வல்லி', 'இறுதிமூச்சு' முதலான நாடகங்களை எழுதியமையால் அவை குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நாடகங்களாகக் காணப்படுகின்றன. சோழர் காலப் பிரிவிலே தமிழகத்தில் ஆலயங்களின் வரலாறுகளை நாடகங்களாய் யாத்து ஆடும் மரபு இருந்து வந்துள்ளமைக்கு ஆதாரமாய் 'பூம்புலியூர்' நாடகம் விளங்குகின்றது. அதுபோல ஈழத்தின் பாரம்பரியப் பெருமை வாய்ந்ததாக

விளங்கும் தலங்களுள் ஒன்றாய்த் திகழும் மாவிட்டபுரம் கந்த சுவாமிகோவில் வரலாற்றை நாடக வடிவில் வெளிப்படுத்தும் நூலே ‘வாழ்வு பெற்ற வல்லி’ ஆகும். மாவட்டபுரத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாடகம் குன்மநோயால் வாடிய சோழ இளவரசி மாருதிகபுரவீகவல்லி அந்நோய் நீங் கியதும் கந்தசுவாமியாருக்கு கோயில் கட்டுவதை விளக்கி நிற்கிறது.

யாழ்ப்பாண வைபவமாலையிற் கூறப்பட்ட பூதத்தம்பியின் வரலாற்றை துன்பியல் நாடகமாகப் படைத்தார் சண்முகசுந் தரம். யே.வி. செல்லையா இந்த நாடகத்தை ஆங்கிலத்தில் எழுதி மேடையேற்ற தமிழில் இந்நாடகத்தை சண்முகசுந்தரம் எழுதி மேடையேற்றினார். இவருக்கு முன்னரே கனகசபைப் பிள்ளை இதனை நாடகமாக எழுதினார். ‘பூதத்தம்பி விலாசம்’ எனும் நாடகத்தில் பூதத்தம்பி போர்த்துக்கேயரிடம் உத்தியோகத்தை இரந்து பெறுவதாக இருக்க அதனை இந் நாடகத்தில் மாற்றி அமைத்தவராக சண்முகசுந்தரம் காணப் படுகின்றார். M.D. இராகவனின் ‘Karava of Ceylon’ (இலங்கை கராவ) நூலை ஆதாரமாகக்கொண்டே இந்நாடகத்தில் அந்த ராசிப்பாத்திரத்தைச் சண்முகசுந்தரம் படைத்தார். பூதத்தம்பி விலாசம் சாதிப் பேச்சு வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட அறிவொளி சண்முகசுந்தரத்தின் இந்நா டகம் அதனைத் தவிர்த்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் சண்முக சுந்தரம் மாஸ்டருக்கும் இடையிலான உறவுநிலை மாண வனுக்கும் ஆசிரியருக்கும் இடையிலான உறவுநிலையைத் தாண்டி அதனிலும் மேலானது. பேராசிரியர் சங்கிலி மன்னனின் வரலாற்றை எழுத முற்படும்போது அவரோடு கூட விருந்து உதவியவர் சண்முகசுந்தரம் மாஸ்டர். நாடகத் துக்கான தரவுகள், குறிப்புகளை வரைந்து கொடுத்தவர். இந் நாடகத்தில் இவர் பெற்ற அனுபவங்களே இறுதிமூச்சு நாடகமாக வடிவம் பெற்றது. தமிழினம் இலங்கை அரசால் ஓரங்கட்டப்பட்ட நிலையில் இனக்கலவரம் பூதாகரமாய் வெடித்த சூழலில் தமிழினத்தின் தொன்மையை வெளிக் கொண்டு வரவேண்டும் என்ற நிலையும் இவருக்கிருந்தது. அவ்வகையில் சங்கிலி மன்னனின் புதல்வன் பரராஜசே கரனை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு இவரால் எழுதப் பட்ட நாடகமே ‘இறுதி மூச்சு’. சங்கிலி செகராசசேகரன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட காலத்தில் அவனைத் தொலைக்க அவன் தமையனான பரதிருபனும் அவனுடைய பிரதானிகளான அப்பாமுதலி, காக்கைவன்னியன் ஆகியோர் செய்த சூழ்ச்சிகளையும் அவர்களின் துரோகத்தாற் சங்கி லியன் பறங்கியரால் பிடிக்கப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்ட தையும் அதன் பின்னர் போர்த்துகேயரை ஒழிக்க பரராஜசே கரன் மக்களோடு மக்களாக சேர்ந்து போராடுவதையும் இந் நாடகம் விளக்கி நிற்கிறது.

இவரின் ‘குலமகள்’ என்ற நாடகம் 25.9.55 இன்று தினகரனில் வெளிவந்தது. சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களையும் நோக்கில் எழுதப்பட்ட இந்நாடகம் பின்னர் மகாஜனக் கல்லூரி மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது. இவருடைய ‘நான் யார்’ மரண விசாரணைக்கு உதவியாக இருந்த சுத்திக ரிப்புத் தொழிலாளியைப் பிரதான பாத்திரமாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகமாகும். ‘இளைப்பாறிய இளையதம்பி’ என்ற நாடகம் வறுமைநிலை எய்திய ஆசிரியரின் நைந்துபோன வாழ்க்கை நிலையைத் துல்லியமாக வெளிப்ப டுத்தி நின்றது. புகழ்பெற்ற நாடக ஆசிரியரான இப்சனின் நாடகமொன்றைப் ‘பெண் பாவை’ என்ற தலைப்பில் தேவன் ஆசிரியருடன் இணைந்து மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.

நாடகங்களை எழுதுவதோடு நில்லாது நாடகம் தொடர்பான உரைகளையும் அவ்வப் போது நிகழ்த்தி வந்துள்ளார். 09.6.61 அன்று மயிலிட்டிக் கிராமக் கலை மடல் வளர்ச்சிக் கழக ஆதரவில் இடம் பெற்ற இலக்கிய விழாவில் ‘ஈழத்தில் நாடக வளர்ச்சி’ என்றதலைப்பில் பேசினார். ஆரம்ப நாடகங்கள் குறித்தான நோக்குகளையும் போக்குகளையும் அறிய இவ்வுரை உதவுகிறது. 03.10.62 அன்று இலங்கைக் கலைக் கழக ஆதரவில் குரும்பசிட்டி சன்மார்க்க நாடகமன்றம் அளித்த நவராத்திரிக்காலக் கலைவிழாவில் ‘அரிச்சந்திர நாடகம்’ குறித்த உரை பலரையும் சிந்திக்கவும் செயற்படவும் வைத்தது. அரிச்சந்திர மகாராசாவின் கதையைக் கூறும் இந் நாடகம் மக்களை நல்வழிப்படுத்துவதை மட்டும் பிரதிபலிக் காமல் நடைமுறை வாழ்வின் மேடு பள்ளங்களையும் சித்தி ரித்தது. மகாஜனக் கல்லூரியில் கற்பிக்கின்ற காலப்பகு தியில் நடிகமணி வைரமுத்துவின் மயானகாண்டத்தை தானே டிக்கட் அடித்துக் கொடுத்து பல தடவைகள் மேடையேற்றிய பெருமையும் தசம் அவர்களைச் சாரும். 24.2.68 அன்று இலங்கை சாகித்திய மண்டலத் தமிழ் நாடகக்குழுவும் யாழ்ப் பாணப் பிரதேசக் கலைமன்றமும் இணைந்து நடத்திய ‘நாடகக் கருத்தரங்கம்’ ஆய்வுபூர்வமாக நாடகத்தை அணுகு வதற்கு துணைநின்றது. இக்கருத்தரங்கில் தமிழருவி சண்மு கசுந்தரம் யாவரும் தொடாத பக்கத்தை தொட்டுப் பேசினார். ‘தமிழ் நாடக வளர்ச்சியில் மொழிபெயர்ப்பும் தழுவலும்’ என்னும் உரை தமிழில் வெளிவந்த தழுவல் நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள் குறித்த பார்வையாக இல்லாது ஈழத்தில் எழுந்த மொழிபெயர்ப்பு நாடகங்கள் குறித்த விரிந்த பார்வையாகவும் இருந்தது. 20.8.75 அன்று இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகக்குழு நடத்திய தமிழ் நாடகக் கருத்தரங்கத்தில் ‘மரபுவழி நாடகங்கள்’ குறித்தும் இவர் பேசிய பேச்சுகள் அவருக்கு நாடகங்கள் குறித்து இருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டுகின்றது.

பேராசிரியர் வித்தியானந்தன், முதன் முதலாகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையினால் எழுதப்பட்ட ‘நாட்டவன் நகர வாழ்க்கை’ என்ற சமூக நாடகத்தைக் கொழும்புப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தயாரித்தளித்தபோது, அவருக்கு உறு துணையாக நின்று செயற்பட்டவர் சண்முகசுந் தரம். நாட்டுக்கூத்து, கரகம், காவடி கோலாட்டம், கும்மி, வசந்தன் பாட்டு ஆகிய பொதுமக்கள் கலைகள்குறித்துப் பேரசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் எழுதுவதற்கேற்ற வகையில், அவற்றை ஒலிப்பதிவு நாடாவில் செவ்வனே ஒலிப் பதிவு செய்து கொடுத்தவரும் சண்முகசுந்தரம் அவர்களே. பேராசிரியருக்கும் தமிழருவிக்கும் ஏற்பட்ட கலைத்தொடர்பு அதன் பின் வளர்ச்சிபெற்று, விரிவடைந்தது.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களால் நடாத்தப்பட்ட கூத்துப் போட்டிகள், நாடக எழுத்துப் போட்டி கள், கருத்தரங் குகள் முதலியவற்றிலும் முழுமனதுடன் ஈடுபட்டு உழைத்தார். வித்தியானந்தன் அவர்களால் நடத்தப்பட்ட கருத்தரங்குகள் பலவற்றிலும் பங்குபற்றினார். அதுமாத்திர மன்றி நாடகப் போட்டிகள் பலவற்றின் தெரிவுகளையும் பேரா சிரியருடன் இணைந்து நடத்தி, நாடகக் கலைஞர் பலரை அறி முகப்படுத்தினார். இவ்வகையில் நடிகமணி வி.வி.

வைரமுத்து, கரகக் கலைஞர் சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் கலையுலக வளர்ச்சியிலும் தமிழருவி சண்முகசுந்தரம் அவர்களுக்கு பெரும்பங்குண்டு. வித்தியானந்தன் அவர்கள் பல்கலைக்கழக மாணவரைக் கொண்டு அரங்கேற்றிய கூத்து நாடகங்களுக்கும் பலவகைகளில் சண்முகசுந்தரம் மாஸ்டர் உதவி செய்தார். இலக்கிய வட்டத்தினர் சார்பில் 'ஈழத்து மரபுவழி நாடகங்கள்' பற்றிய ஆய்வுக் கட்டுரையொன்றினையும் சண்முகசுந்தரம் மாஸ்டர் படித்தார்.

இ. சிவானந்தன் எழுதிய 'இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம்' என்ற நூல் முழுமை பெறுவற்கு தம்மட்டில் உதவிகள் பலவற்றையும் சண்முகசுந்தரம் மாஸ்டர் செய்துள்ளார் என்பதை அவருடைய பதிவுகள் உணர்த்தி நிற்கின்றன. 'உடையார் மிடுக்கு' நாடகம் முதன்முறையாக அரங்கேறியமை தொடர்பான தகவல்களையும் இடாக்குத்தர் சின்னையா அரங்கேற்றிய 'சிவானந்த முதலியார்' நாடகம் குறித்தான தகவல்களையும் சண்முகசுந்தரம் அவர்களுடைய கட்டுரைகள் விளக்கி நிற்கின்றன.

1974-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் நடத்த முனைந்தபோது சண்முகசுந்தரம் மாஸ்டர் அதற்கு உறுதுணையாக இருந்தார். கலை நிகழ்ச்சிகள் பலவற்றை ஒழுங்கு செய்து நடத்துவதற்கும், தமிழர்களின் பாரம்பரியக் கலைகள் மேடையேறுவதற்கும் ஊர்வலத்தின்போது தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களுடன் கூடிய ஊர்த்திகள் செல்வதற்கும் அளவில்லாத பேராதரவினை வழங்கினார்.

**ஈழத்தில் எழுந்த பண்டைத்தமிழ் இலக்கியங்களுக்கு புத்துயிர் அளித்த த. சண்முகசுந்தரம் அவர்கள் தாம் வாழ்ந்த இலக்கியங்கள், கட்டுரைகள் சிலவற்றையும் படித்து அவற்றின் பொருள்மரபு குறித்தும் தர்கித்துமுள்ளார். முன்னைய நூல்களை ஆதாரங்காட்டி அவற்றிற்கு கருத்து விளக்கங்களையும் கொடுத்துள்ளார்.**

## கட்டுரைகள்:

சண்முகசுந்தரம் அவர்களின் கட்டுரைகளும் அவரது வேட்கையைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. ஆங்கிலக் கல்வியின் எழுச்சியால் திண்ணை மரபுக்கல்வி அழிந்து வரும் நிலையில் திண்ணைப் பள்ளிக்கூட மரபை எடுத்து விளக்கும் வகையில் வெளிவந்த கட்டுரையே 'கல்வியும் மரபும்'. இவருடைய 'ஆரியமும் தமிழும்' என்ற கட்டுரை மொழிக்கலப்பற்ற தூய தமிழ்மொழி பிரயோகத்தால் தமிழ்மொழி நின்று நிலைத்திருக்கும் தன்மையை கொண்டிருக்குமா? என்பதையும் மொழிக்கலப்பினால் ஆங்கிலம், கிரேக்கம், உரோமன் மொழிகள் போன்று தமிழும் உருக்குலைந்து போய் விடுமா? என்பது குறித்தும் பேசுகிறது. 'பாவலரும் பாரதியும்' என்ற கட்டுரை பாரதிக்கும் பாவலருக்கும் இடையிலான ஒற்றுமைகளை நுண்மையாக ஆராய்கிறது. பாரதியாரின் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் ஆவேசத்தையும் உயிர்த்துடிப்பையும் பாவலருடைய கவிதைகளில் காணமுடியாது எனக்கூறும் சண்முகசுந்தரம் அவர்கள், பாவலர் ஆழ்ந்த கருத்துகளை பழகு தமிழில் யாப்பு பிறழாது முன்வைக்கக் கூடியவர் எனக் குறிப்பிடுவார். புலமைக்குரல்கள் தலைப்பாகைகள் பேசின என்ற கட்டுரை பாக்குநீரணைக்கு அப்பால் இருந்து வெளிப்படும் பாரதியின் குரலையும் பாக்கு நீரணைக்கு இப்பால் இருந்து பேசும் பாவலரின் குரலையும் பதிவு செய்கின்றது. இங்கு புலமைக் குரல் புதுமையின் எழுச்சியாகவும் அடக்குமுறைக்கெதிரான ஆவேசத்தின் குரலாகவும் கட்டுரை எங்கும் ஒலிக்கின்றன. ஆரம்பகாலக் கட்டுரையான 'உமர்கயாமின் பாடல்கள்' (தினகரன் 25.3.56 - 1.4.56) கட்டுரை உமர்கயாம் பாடல்களில் காணப்பட்ட தெளிந்த தத்துவ ஞானத்தை வெளிப்படுத்துகிறது. வரலாற்றில் சாசனங்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தை 24.4.74 கலைக்கண் பத்திரிகையில் எழுதப்பட்ட 'சாசனங்கள்' கட்டுரையும் எடுத்துரைக்கிறது.

தனி ஆளுமைகள் குறித்த நூல்களை எழுதிய சண்முகசுந்தரம் அவர்கள் ஈழத்து ஆளுமைகள் குறித்த பதிவுகளைக் கட்டுரையாகவும் வெளிப்படுத்தினார். அவ்வகையில், கலையரசர் சொர்ணலிங்கம் அவர்கள் நாடகத்துக்கு ஆற்றிய பணியை 'நாடகக் கலையைத் தெய்வமாக பூசித்த கலையரசர் சொர்ணலிங்கம்' (தினகரன் 22.2.80) என்ற கட்டுரையும் மாயவித்தைக்கலையான ஓவியக்கலைக்கு அமரசேகரா ஆற்றிய பணியை 'அரசு வாயில் முதலியார் அமரசேகரா' (வீரகோரி 27 3.85) என்ற கட்டுரையும் காந்தியுடன் தொடர்பு கொண்டு பழகிய தொண்டரான பி. துரைரட்ணம் அவர்களது கடந்தகால நினைவுகளை 'மண்ணை மணக்க வைத்த அண்ணல் காந்தி' (வீரகேசரி, 18.11.84) என்ற கட்டுரையும் எடுத்துரைக்கின்றன. தனிநாயக அடிகளாரின் ஆளுமை குறித்து இவரெழுதிய 'தவத்திரு தனிநாயக அடிகளார் பெற்ற முதுமுனைவர் பட்டம்' (தினகரன், 26.5.84), 'தமிழ்த் தூதுவர் தனிநாயக அடிகளார்' என்னும் இரண்டு கட்டுரைகளும் அடிகளார் மீது இவர் கொண்ட மதிப்பினையும் அடிகளார் தமிழ்மொழிக்கு ஆற்றிய பங்களிப்பினையும் விளக்கி நிற்கின்றன. 'பண்டிதமணியின் பார்வையில் ஈழத்துத் தமிழ்ப் புலவர்' என்ற கட்டுரை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இளமைப்பிராயத்திலும் அவருடைய கல்விப் பராயத்திலும் அவருடைய வாழ்வோடு பின்னிப்பிணைந்து தொடர்புபட்ட புலவர்களின் பெருமைகளைக் கூறிநிற்கிறது. திருநெல்வேலி ஈரப்பலாவடி இலக்கியப் பூம்பந்தலில் அவரோடு வந்து கூடி உரையாடுபவருக்கூடாகவும் அவருடைய ஆசிரியர் கலாசாலை நண்பர்களுக்கூடாகவும் சோசுந்தரப்புலவர் குறித்த பண்டிதமணியின் பார்வைக்கூடாகவும் ஈழத்துப் புலவர் பாரம்பரியத்தை இக்கட்டுரையில் சண்முகசுந்தரம் அவர்கள் வெளிப்படுத்துகின்றார்.

கலைகளை மதித்து வாழ்ந்த சண்முகசுந்தரம் அவர்களுடைய விருப்பத்துக்குரிய நாடகக் கலைஞரன வைரமுத்து குறித்து எழுதிய 'நடிகமணி வி.வி. வைரமுத்து' (தினகரன், 3.4.84 - 10.4.84) என்ற கட்டுரை, வைரமுத்து அவர்களின் கலையாளுமைகளை உலகுக்கு அறியத் தருகின்றது. இவரெழுதிய 'நாவலரின் ஞானகுரு யார்? பண்டிதமணி தந்துள்ள அரிய ஆராய்ச்சிக்குறிப்பு' (12.10.1980) என்ற கட்டுரை வைத்தீஸ்வரத்தில் இருந்து அருள்மழை பொழியும் தட்சணா

மூர்த்தியே நாவலரின் ஞானகுரு என்பதை அகம் மற்றும் புறச் சான்றுகளின் ஊடாக பண்டிதமணி நிறுவுவதை எடுத்துரைக்கின்றது. 'இலக்கியத்திறனாய்வுப் புலவர் செல்வநாயகம்' (ஈழ முரசு. 29.9.85), 'தெய்வப்பணி புரிந்த ஐயா சரவணமுத்து' (வீர கேசரி, 12.8.85), 'கலையரசும் கலையருவியும்' (ஈழமுரசு, 28.7.85), ஈழத்து நாடகவரலாற்றில் கலையருவி கணபதிப்பிள்ளையும் கலைமாமணி வித்தியானந்தனும் (ஈழமுரசு, 19.1.86), 'மாட்டு வண்டிச் சவாரிக்குப் பொறுப்பாக இருந்த இளைய தம்பி', 'பாவன்மை கொண்ட புலவர்மணி' (ஈழநாடு, 11.12.84) முதலான கட்டுரைகள் ஈழத்தின் இலக்கியத்துக்கும் கலைப் பாரம்பரியத்துக்கும் பங்களிப்புச் செய்த ஆளுமைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. 'சங்கமம்' இதழில் வெளிவந்த மலையருவி மகாலிங்கசிவம் கட்டுரை அவருடைய குணப் பண்புகளையும் அவர் தமிழ் கற்பிக்கும் முறைமைகளையும் அறிய உதவுகின்றது. இவருடைய 'தமிழ்ப் பித்துக்கள்' (வீரகேசரி, 15.1.84) என்ற கட்டுரை மகாலிங்கசிவம், நவநீதகிருஷ்ணபாரதியார், சேர்.பொன். இராமநாதன், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை போன்றோரிடையே காணப்பட்ட புலமைத்துவத்தையும் தமிழார்வத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. வித்தியானந்தன் 'பிறையன்பன்' என்ற பெயரில் முஸ்லிம்களின் இலக்கிய முயற்சிகளை ஆராய்ந்து நிற்க அவர் வழியில் அப்பணியைத் தொடர்ந்தவராக த. சண்முகசுந்தரம் காணப்படுகின்றார். கொழும்பில் நடைபெற்ற நான்காவது இஸ்லாமிய மாநாட்டில் தமிழருவியால் வாசிக்கப்பட்ட 'ஈழத்து முஸ்லிம்களின் தமிழ்ப்பணி' என்ற கட்டுரை முஸ்லிம் அறிஞர்கள் ஈழத்துக்காற்றிய பங்களிப்பை வெளிப்படுத்தி நிற்கிறது.

> **ஆன்மீக ஈடுபாடு கொண்ட சண்முகசுந்தரம் அவர்கள் வைதீக வேதாகமங்களுக்குள் முடங்கி நின்ற இறைத்துவத்தில் இருந்து சற்று விலகி, கிராமிய வழிபாடுகளுக்கு முக்கியத்துவங் கொடுத்தவர். ஆகமம் மயமாகாத ஆலயங்களைக் கண்டடைந்து அவ்வாலயங்களின் முக்கியத்துவத்தை எழுத்தில் வடித்தவர்.**

ஈழத்தில் எழுந்த பண்டைத்தமிழ் இலக்கியங்களுக்கு புத்துயிர் அளித்த த. சண்முகசுந்தரம் அவர்கள் தாம் வாழ்ந்த இலக்கியங்கள், கட்டுரைகள் சிலவற்றையும் படித்து அவற்றின் பொருள்மரபு குறித்தும் தர்கித்துமுள்ளார். முன்னைய நூல்களை ஆதாரங் காட்டி அவற்றிற்கு கருத்து விளக்கங்களையும் கொடுத்துள்ளார். திறனாய்வு அவரது பிரதான அக்கறையாக இராவிடினும் வாதப் பிரதிவாதமாகவும் சர்ச்சையாகவும் அவரது கட்டுரைகள் அமைந்துள்ளன. அவருடைய காலத்திலும் அதற்குப் பின்னரும் அவருடைய திறனாய்வு முயற்சிகளும் நூல்வடிவம் பெறவில்லை.

'மரண வீடுகளில் தேவாரம் படிக்கலாகாது' என்று பேராசிரியர் கைலாசநாதக் குருக்களால் வீரகேசரியில் எழுதப்பட்ட கட்டுரைகளுக்கு மறுப்பாகத் தேவாரம் படிக்கலாமென்பதை விளக்கும் வகையில் எட்டுக் காரணங்களைக் குறிப்பிட்டு 'திருமுறை ஓதுதல் உயிர் ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும்' என்ற தலைப்பில் 10.10.82 வெளிவந்த வீரகேசரியில் மேலும் ஒரு கட்டுரையை எழுதினார்.

அபிராமி அந்தாதியின் வேற்பிள்ளை உரையை கி.வா.ஜ அறியாரா? (ஈழநாடு, 13.5.84) என்ற கட்டுரையில் அபிராமி அந் தாதிக்கு தமிழ்நாட்டவர் உரை எழுத முன்வராத நிலையில் அதனைக் கண்ணுற்று முதன்முதலில் உரை எழுதிய உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளைதான் என்பதை அறுதியும் உறுதியுமாக நிறுவுவார் சண்முகசுந்தரம். இதனை சிவவாகீசர் கி.வா. ஜகநாதன் அறியவில்லை என்பதற்காக ம.க. வேற்பிள்ளையின் தமிழியற் பணிகளைக் குறிப்பிட்டு அதனை தெளிவுபடுத்தி அபிராமி அந்தாதிக்கு முதல் உரையை வழங்கியவர் ம.க. வேற்பிள்ளை என்பதை இக்கட்டுரையில் சண்முகசுந்தரம் மாஸ்டர் குறிப்பிடுவார்.

தெல்லிப்பழை படைப்பிலக்கிய மன்றத்தினரால் வெளியீடு செய்யப்பட்ட 'இவர்கள்' என்ற தொகுப்பின் அறிமுக உரையில் எம்.ஏ. நுஃமான் அவர்களால் விடப்பட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டி தினகரனில் 23.08.1981-இல் கட்டுரை ஒன்றை எழுதினார் சண்முகசுந்தரம். அதற்கு ஆய்வாளர் எம்.ஏ. நுஃமான் 06.09.1981-இல் விளக்கவுரையை எழுதினார். அதற்கான பதிலுரையை மென்னுணர்வுத்தளத்தில் சண்முகசுந்தரம் மாஸ்டர் எழுதினார். அதில் அவர் சுட்டிக்காட்டிய விடயங்கள் சண்முகசுந்தரம் மாஸ்டரின் பண்புகளை அறிய உதவுகின்றன.

## நாட்டார் இலக்கியமும் தமிழருவியும்:

ஈழத்து இலக்கியத்தில் நாட்டார் இலக்கியத்தை சமூகம் அங்கீகரிக்கா நிலையில் அதனைப் பாதுகாக்க முனைந்தவராகச் சண்முகசுந்தரம் அவர்கள் காணப்படுகின்றார். 1975-ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திற்கு இட மாற்றம் பெற்றுச் சென்ற காலகட்டத்தில் அங்குள்ள கலைகளையும் மக்களையும் அறியும் வாய்ப்புகளையும் பெற்றார். முல்லைத்தீவுப் பகுதியின் கலைப் பாரம்பரியத்தையும் அதனைக் கட்டிக்காத்த மரபுவழிக் கலைஞர்களையும் கவனத்துக்கு கொண்டு வரும் வகையில் அயராது உழைத்தார். முன்னவர் விட்டுச் சென்ற கலைப் பாரம்பரியத்தை எதிர்காலச் சந்ததியினர் அறிந்திடும் வகையிலே தன் எழுத்தாற்றலை வெளிப்படுத்தினார். இத்தகைய முயற்சிகளின் விளைவாக இப்பிரதேசம் சார்ந்த ஆக்கங்களான 'வன்னி வள நாட்டின் புதுக்குடியிருப்புக் கூத்தும் மரபும்', 'வன்னி நாய்ச்சிமார் மான்மியம்' என்பவை வெளிவந்தன. வன்னிப் பிரதேசத்தில் சண்முகசுந்தரம் அவர்கள் கடமையிலிருந்த வேளையில் வன்னி வளநாட்டுக் கலை மரபினை வெளிப்படுத்தும் முயற்சியாக ஒரு கலை விழாவை நடத்த வேண்டிய தேவை இருந்தமையால் இலங்கைக்கலாசாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியுடன் தொடர்பு கொண்டார். அதற்கிணங்கவே புதுக்குடியிருப்புக் கல்லூரி அதிபர் திரு. செபநாயகம், கிராம சபைத்தலைவர் பொ. பாலசிங்கம், கல்லூரி அதிபர் மகாலிங்கம், ஆசிரியர் திரு. சரவணபவன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கலைவிழாவை 1975-இல் நடத்தினார். அண்ணாவிமார்களிடம் இருந்த கூத்து, கரகம், காவடி, கோலாட்டம், அருவிச் சிந்து, குடவாட்டம், ஊதல் போன்ற வாழும் கலைகளை அறிந்து, இலங்கை கலாசாரப் பேரவையின் தமிழ்நாடக

அமைப்பினூடாக அவற்றை நெறிப்படுத்தி அவர்கள் அரங்கில் அவற்றை வெளிப்படுத்த உதவினார்.

மக்கள் கலையை வளர்க்க முயன்ற தமிழருவி சண்முகசுந்தரம் அவர்கள், மறுமலர்ச்சிப் பாதையில் மக்கள் கலைகள் எனும் தொடரில் குருநாதர் மான்மியம், காகப் பிள்ளையார் மான்மியம், வெற்றிலை மான்மியம், கண்ணகி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு, மாவை முருகன் காவடிப் பாட்டு, மாருதிகபுரவீக வல்லி கப்பல் பாட்டு, வள்ளி திருமண வேட்டைப்பாடல், குருவிச்சி நாய்ச்சி சலிப்பு என்பனவற்றைப் பதிப்பித்ததோடு நில்லாது, நாடகம், வன்னிவள நாட்டுக் கூத்து மரபு எனப் பழைய திசைகளை நோக்கி இளந்தலைமுறையினரைத் திரும்பிப் பார்க்கவும் வைத்தவர். காலங்காலமாக மக்களால் பாடப்பட்டு வந்த வாய்மொழிப் பாடல்களை நூல்களாக பதிப்பித்த சண்முகசுந்தரம் அதனைக் கொண்டு செல்வதற்கான ஊடகமாக வானொலியைப் பயன்படுத்தினார். வானொலியில் இவர் ஆற்றிய உரைகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன. 'யாழ்ப்பாணத்துக் கப்பற்பாட்டுக் கலை' (1979), 'யாழ்ப்பாணத்து மான்மியம்' (10.12.79), 'வெற்றிலை மான்மியம்' (9.5.81), 'ஈழத்துப் பாரம்பரியத்தில் கிராமியக் கலைகள்' (28.9.76), 'நம்நாட்டின் கிராமியக் கலைகள்' (கலந்துரையாடல் 17.8.82), 'மக்கள் கலைகள்' (16.10.73), 'மறுமலர்ச்சிப் பாதையில் கலைகளின் மறுமலர்ச்சி' (17.9,73) என்னும் தலைப்பில் இவராற்றிய உரைகள் கிராமியப் பாரம்பரியக் கலைகளை மக்களுக்கிடையே பரப்பும் வகையில் ஒலிபரப்பப்பட்டவையாகும். இவை காலத்தால் அழியாதவை. கீரிமலை வீதி ஏற்றத்திலிருந்து மாவிட்டபுரம் சந்தி வரைக்கும் நடக்கின்ற மாட்டுவண்டிச் சவாரியைச் சண்முகம்சுந்தரம் அவர்கள் கண்டு களித்தமையாலும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கிழக்கு வீதியில் இருந்து, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயிலுக்கு கிட்டத்தட்ட ஐம்பது வண்டிகள் அடியார்களை ஏற்றிச் செல்லும்போது அதில் ஏறி தானும் பயணித்த மாட்டுவண்டிச் சவாரி குறித்த விநோதமான தகவல்கள் பலவற்றை இந்நூல் எமக்களிக்கிறது. மோடன் விளையாடுகின்ற விளையாட்டை இரட்டைச்சுழி மாட்டுவண்டிச் சவாரி என்ற சொல் குறிப்பதாகக் கூறி அது குறித்து சண்முகசுந்தரம் மாஸ்டர் எழுதுகின்ற விடயங்கள் தமிழ் இலக்கியத்துக்குப் புதுமையானவை. மாட்டு வண்டிச் சவாரியை வெறுத்தவராக ஆறுமுகநாவலர் இருந்தார் எனக் கூறுவதும் தமிழ் மக்கள் அறியாத ஒன்றே. 'சவாரி மாட்டைப் பழக்கி எடுத்தலை குழந்தைப் பிள்ளையை வளர்த்து எடுப்பதைப் போன்றது' எனக் கூறும் சண்முகசுந்தரம் அவர்கள் சவாரிக்கேற்ற வகையில் நாட்டான் (யாழ்ப்பாணத்து மாடு) மற்றும் வன்னியான் (வன்னிமாடு) மாட்டினைப் பழக்கி எடுத்தலை எட்டுக் கட்டங்களாக வகுத்து இந்நநூலில் ஒப்புவிப்பார்.

பழுதில்லா சிறப்பை எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்கும் நோக்குடன் இவர் கொண்டு வந்த 'கலையும் மரபும்' தொகுப்பு ஈழத்துக்கலைஞர் நாதஸ்வர வித்துவான் நா.சோ. உருத்திராபதி, சிற்பக்கலாநிதி சா. பெரியசாமி, சிற்பக் கலைஞானி செ. சுப்பிரமணியம், சிவநாதக் கலைமணி சீ. சிதம்பரப்பிள்ளை, கரகக்கலைமாமணி மு. ஐயாத்துரை ஆகிய ஐவருடன் நடத்திய நேர்காணலாகும். கலைஞர்களின் ஆத்மாவின் பிரதிபலிப்பே இந்நூலாகும். கோயில்களைச் சார்ந்து சமூக அமைப்பு இயங்கிய நிலையிலே மரபுக்கலைகள் உச்சம் பெற்றிருந்தது என்பதை இந்நேர்காணல் விளக்கி நிற்கிறது.

யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தில் தவில், நாதசுரக் கலைகளில் சிறந்து விளங்கிய கலைஞர்களின் அன்றைய நிலையையும் அவர்களின் மேதாவித்தனத்தையும் கச்சேரிகளில் அவர்கள் கையாண்ட நுட்பத்தையும் ஒப்பமாகவும் உணர்வுபூர்வமாகவும் வெளிப்படுத்தும் நூலே 'யாழ்ப்பாணத்து இசைவேளாளர்'. சண்முகசுந்தரம் அவர்கள் இந்நூலின் பதிப்புரையில் கூறுவதுபோல் இந்நூலானது இசையாளரின் குடும்ப வரலாறோ கிராம வரலாறோ அன்று. இந்நூல் முருகனின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த மாவை முருகனுக்கு கொடிமரம் எழுப்பிய சங்கரப்பிள்ளையின் மகன் ச. விசுவநாதன் எனப்படும் முதலாலியாப்பிள்ளையின் கொடையையும் பேசிநிற்கிறது. அதேசமயம் இந்நூல் நாதஸ்வரம், தவில் சேவகம் பற்றி ஆய்வாகவும் காணப்படுகிறது. மரபுவழி நின்று குலப்பெருமையைக் காத்த இசைக்கலைஞர்கள் நாதஸ்வரம், தவில் போன்ற கலைகளுடன் நின்றுவிடாது வாய்ப்பாட்டு, மத்தளம், நடனம், நாடகம், இசை அமைத்தல், கெஞ்சிரா, வீணை, வயலின் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கியதையும் ஆய்வு செய்கிறது. ஈழத்தின் இசைப் பாரம்பரியத்தின் தொன்மையையும் அதன் தொடர்ச்சியையும் விளக்கி நிற்கும் நூலே இசையும் மரபும்'. காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் நா.சோ. பக்கிரிசாமி கூறிய செய்திகளுடன் ஆரம்பமாகும் இந்நூல் யாழ்ப்பாண இசைமரபு குறித்த செய்திகளையும் பண்ணிசை பற்றிய தகவல்களையும் பண்டை ஈழத் தமிழரின் இசைக்கலை குறித்த வரலாற்றையும் புராணபடலம் ஓதும் ஓதுவார்களின் வாழ்வையும் விளக்கி நிற்கிறது.

இசைகுறித்த கட்டுரைகள் பலவற்றையும் எழுதியவராகச் சண்முகசுந்தரம் மாஸ்டர் காணப்படுகின்றார். 'காருக்குறிச்சியின் மருமகப் பிள்ளை' (வீரகேசரி, 29.5.83) என்ற கட்டுரையில் தவிற்கலைஞர் தட்சணாமூர்த்தியைப் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 'யாழ்ப்பாணத்து வில்வித்துவப் பரம்பரை' (ஈழமுரசு, 18.8,85), 'அகில பாரத விருது பெற்ற யாழ்ப்பாணப் பரம்பரையின் தவில் வித்துவான் இலங்கைமான் சண்முகசுந்தரம்' (ஈழமுரசு, 15.12.85) போன்ற கட்டுரைகள் ஈழத்துக் கலைஞரின் கலைத்தொண்டுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. 'தமிழிசை இலங்கையிலும் வளர வேண்டும்' (வீரகேசரி, 16.1.83) என்ற கட்டுரையில் பாவலர் துரையப்பாபிள்ளையால் வளர்க்கப்பட்ட இசைவடிவங்கள் பற்றிக் கூறிய சண்முகசுந்தரம் 'ஈழத்துப் பாரம்பரியத்தில் இசை' (வானொலி - 12.11.77) என்ற கட்டுரையில் ஈழத்து இசைக்கலை மரபையும் எடுத்துரைக்கிறார்.

## பதிப்பு முயற்சிகள்:

இறங்கணியவளை குருநாதர் மான்மியம், காகப்பிள்ளையார் மான்மியம், வன்னி நாச்சிமார் மான்மியம், வெற்றிலை மான்மியம் ஆகிய மான்மியங்களைப் பதிப்பித்த சண்முகசுந்தரம் அவர்கள் அவை குறித்து விரிவான குறிப்புகளையும் எழுதியிருந்தார். 'மான்மியம்' என்னும் சொல் 'தல மகிமையைக் கூறும் நூல் எனப் பொருள்படும். கோயிலில் எழுந்தருளும் கடவுளரின் புகழைப் பாடும் நோக்கில் மான்மியங்கள் எழுதப்பட்டன. இதனால் ஈழத்தில் காலத்திற்குக் காலம் அதிகளவான கோயில் மான்மியங்கள் எழுந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் மனதில் தாமே ஊற்றெடுத்துப் பாடுவதாக இம்மான்மியப் பாடல்கள் காணப்படுகின்றன. இக்கலைக்குப் புத்துயிரளித்தவராகச் சண்முகசுந்தரம் காணப்படுகின்றார்.

பண்டைத்தமிழ் நூல்களில் மாத்திரமன்றி கிராமிய மக்களிடம் காணப்பட்ட பண்பாட்டு அம்சங்களிலும் வான் சிறப்பு பெறும் முக்கியத்துவத்தை அறிந்து மழை இரங்கிப் பாடல்களையும்

வெளியிட்ட பெருமை இவரைச் சாரும். கட்டுவன் வீரபத்திரர் வசந்தன், மாரியம்மன் மழை இரங்கிப் பாடல், மாருதப்புர வல்லி பாடல், கொடும்பாவிபாட்டு என்ற அடிப்படையில் மழை இரங்கிப்பாடல்கள் ஈழத்தில் வழக்கில் இருந்தவாற்றை சண்முகசுந்தரம் மாஸ்டர் இந்நூலில் தெளிவுபடுத்துவார்.

சண்முகசுந்தரம் அவர்களின் 'மாவை முருகன் காவடிபாட்டு' என்ற நூல் காவடி கலைகளின் ஆரம்ப கால வரலாற்றை விளக்கி நிற்பதுடன் காவடி பழக்கி, காவடி எடுத்து, காவடி இறக்குவது வரையும் கூறிநிற்கிறது. தசம் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட 'வீணியவரை கண்ணகி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு' என்ற நூல் வைகாசி விசாக நாளிலே நடைபெறும் குளிர்த்தி குறித்தும் கூறுகிறது. மாருதபுரவீக வல்லி கப்பற்பாட்டு என்ற நூல் கடலிலே தொழில் புரிகின்ற மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும் எமது இசைப் பாரம்பரியம் குறித்த தகவல்களையும் வழங்கி நிற்கிறது.

இவர் பதிப்பித்த பிறிதொரு நூலான 'வள்ளி திருமண வேட்டைத் திருவிழாப் பாடல்' யாழ்ப்பாணத்து முருகன் கோயில்களில் 'வேட்டைத் திருவிழா'வின்போது படிக்கப்படுகின்ற கதையாக உள்ளது. முருகக் கடவுள் வேட்டைக்குச் சென்று வள்ளியைத் தினைப்புலத்தில் கண்டு அன்பு கொண்டு திருமணம் புரிவதை உணர்த்தும் இக்கதை இத்திருவிழாவில் படிக்கப்படுவது வழக்கம். திருமணம் புரிந்த இவர் இளைப்பாறி பின்னர் வள்ளிஅம்மையுடன் கோயிலுக்குள் எழுந்தருளும் வண்ணம் வருவார். இவ்விருவரும் கோயில் பிரதான வாயிலை அடைய தெய்வானை அம்மையார் கதவை அடைத்துப் போடுவார். அப்போது கோயில் உட்பகுதியில் ஒருவரும் வெளிப்பகுதியில் ஒருவருமாக நின்று இப்பாடலைப் படிப்பர். வெளியே நிற்பவர் முருகன் கூற்றையும், உள்ளே நிற்பவர் தெய்வானை கூற்றையும் படிப்பர் ஈற்றில் தெய்வானை கதவைத் திறந்து விடுவார். மீண்டும் முருகன் வள்ளி தெய்வானை சமேதராக இருந்து அன்பருக்கு அருள் சுரப்பார். இதுவே வேட்டைத் திருவிழாவின் பொருள். வழக்கில் வழங்கப்பட்ட இக்கதையினை அச்சுவாகனம் ஏற்றியவர்களில் ஒருவர் சண்முகசுந்தரம் மாஸ்டர் ஆவார்.

ஆன்மீக ஈடுபாடு கொண்ட சண்முகசுந்தரம் அவர்கள் வைதீக வேதாகமங்களுக்குள் முடங்கி நின்ற இறைத்துவத்தில் இருந்து சற்று விலகி, கிராமிய வழிபாடுகளுக்கு முக்கியத்துவங் கொடுத்தவர். ஆகமம் மயமாகாத ஆலயங்களைக் கண்டடைந்து அவ்வாலயங்களின் முக்கியத்துவத்தை எழுத்தில் வடித்தவர். இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த உண்மை மனிதர்களின் உள்ளத்தில் தோன்றும் உள்ளத்தின் ஒளியை நிலைபேறுடைய வாழ்வின் ஆன்மீக ஒளியாகக் கண்டவர். சித்தத்தை சிவத்துள் அடக்கி பேரறிவு படைத்த ஈழத்துச் சித்தர்களின் மகாவாக்கியங்களை புதிய கண்கொண்டு பார்த்தவர். கலை வாழ்வில் ஈடுபட்டு இறை பணி செய்த வீர சைவர்களின் வாழ்வை நாளைய தலைமுறையினரிடம் புத்துயிர்ப்புடன் கையளித்தவர்.

07.03.1982 தொடக்கம் தினகரன் வாரமஞ்சரி ஏட்டில் வெளிவந்த ஈழத்துச் சித்தர் சிந்தனை என்ற கட்டுரைத் தொடரின் முழுமையான வடிவமே 'ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து' என்ற நூலாகும். ஈழத்துச் சித்தர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களைக் கோவைப்படுத்தி அவர்கள் உதிர்ந்த நன்மொழிகளை ஆன்மீகக் கண்கொண்டு விளக்கும் நூலாக 'ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து' காணப்படுகிறது. செல்லப்பாசுவாமிகள், தாடிச்சித்தர், ஊமைச்சித்தர், குடைச் சித்தர், கூச்சாமியார், சிரட்டைச்சாமியார், வேலுச்சாமியார், சாது தங்கம்மை, யோகர்சுவாமிகள் முதலானவர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களை விளக்கும் இந்நூல் அவர்கள் எமக்கு போதித்துச்சென்ற மகாவாக்கியங்கள் எவை என்பதை எடுத்துக்காட்டி அது சொல்லும் விடயங்களை காரண, காரியங்களுடன் விளக்கி நிற்கிறது. 'ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து' என்ற நூலினை எழுதிய சண்முகசுந்தரம் அவர்கள் 'யாழ்ப்பாண வீரசைவர்', 'சிவனே போற்றி குகனே போற்றி' ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். வேதாகமத்தால் மறைக்கப்பட்ட வீரசைவர்களின் வரலாற்றை வெளிக்கொண்டு வந்த 'யாழ்ப்பாணத்து வீரசைவர்' என்ற நூல் காலத்தால் அழியாதது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வீரசைவர் மரபு மறைக்கப்பட்டதையும் அதன் பின்னர் பிராமணர்களை முக்கியத்துவப்படுத்தி சைவமதம் இந்து மதமானதையும் இந்நூல் பேசிச் செல்கிறது. சங்கரர் வகுத்த சண்மதப் பிரிவுக்குள் மதவறிவற்று சைவர்கள் செல்வதன் ஆபத்தைக் கூறும் இந்நூல் யாழ்ப்பாணத்து வீரசைவரின் சைவத் தொண்டு, கலைத்தொண்டு சமூகத்தொண்டு முதலானவற்றையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

தனக்கென வாழாது பிறர்க்குரியவராய் வாழ்ந்தவரும் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்தவருமான தமிழருவி சண்முகசுந்தரம் தாம் வாழ்ந்த காலத்திலும் மங்கா ஒளியாகத் திகழ்ந்தவர். குலமரபால் உயர்ந்து ஒழுக்கத்தாற் சிறந்து சிவாயநம என்று சிந்தித்து, வாழ்வியல் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்த இவர் கீரிமலை பற்றி ஆய்வுகளை மேற்கொண்ட நிலையிலே இறைவனடி சேர்ந்தார். 'பீரம் பேணிற் பாரம் தாங்கும்' என்னும் முதுமொழிக்கு இலக்கணப் புருடராக வாழ்ந்த சண்முகசுந்தரம் அவர்கள் இறந்த பின்னும் நந்தாவிளக்காய் இற்றை வரை நின்று நிலைபெற்று நிற்கிறார். ஒரு தேசிய இனத்தின் எழுச்சியை, தம் உரிமைக் காகப் போராடும் மக்களின் உணர்ச்சியை, பண்டைத் தமிழர்களின் பெருமையை உலகறியச் செய்த தமிழருவி த. சண்முகசுந்தரம் அவர்கள் மக்களால் கவனிக்கப்படாத, கவனிக்க மறந்த கலை இலக்கிய ஆளுமைகள் குறித்து எழுதியும் அவர்களை நேர்காணல் செய்தும் ஆவணப்படுத்திய அக் கைங்கரியத்தை ஈழத்துக் கலையுலகு என்றும் நினைவில் வைத்திருக்கும். இலக்கியத்துறையில் சிறுகதை, நாவல், நாடகம், கலை இலக்கியம், வாழ்க்கை வரலாறு, நேர்காணல், சமயம், நடைச்சித்திரம், நூலாய்வு, ஆராய்ச்சிக் கட்டுரை என அவர் தொட்டுத் துலங்கிய பக்கங்கள் காலமுள்ள வரைக்கும் அவர் புகழைக் கூறிநிற்கும். இருபத்துநான்கு நூல்களை இனிதுறக் கையளித்த மக்கள் கலை ஆய்வாளன் தமிழருவி, அறிவொளி, தம்பு சண்முகசுந்தரம் அவர்கள் தன்னெறியில் பிறழாது தனக்கென ஒரு தனித்துவமான பாதையை வகுத்து வழிகாட்டியவர். குறிப்பாக ஈழத்து நாட்டார் கலை இலக்கியத்துக்கு ஆற்றிய ஆக்கபூர்வமான அவரது பணிகள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அழியாத இடத்தை அவருக்கு வழங்கியது. அவர் பதித்துச் சென்ற தமிழியல் தடங்கள் ஈழத்தமிழ் இலக்கிய உலகுக்கு கலங்கரை விளக்காய் இருந்து என்றும் வழிகாட்டும்.



ramesh.s@thaiveedu.com



tg.theeban@gmail.com

# காத்திருக்க நியாயமில்லை

**– கிருங்கை சேதுபதி –**

‘நான் ஒரு ஸ்ரீவைஷ்ணவன்; வைதிக ஆசாரங்களில் தவறாத குடும்பத்திலே பிறந்தவன். ஜாதியென்றும் மதமென்றும் பிரிவு செய்யும் கொடுமையிலே கொக்கரிக்கும் சமூகக்காற்றைச் சுவாசித்தவன். பாரதியாருக்கு ஜாதியில்லை; சமயமில்லை; வரம்பில்லை; வழியில்லை. அவர் வைத்தது சட்டம்; போனது வழி. குடும்பத்திலே அவர் ராஜா. அவர் உருட்டலும் மிரட்டலும் குடும்பத்தைக் கதிகலங்கச் செய்யும். அடுத்த நிமிஷத்தில் நாய்க்குட்டிபோல் பணிந்து விடுவார். அவரோடு என் வாழ்க்கை இணைந்து நின்றது எனக்கே ஆச்சரியத்தை உண்டாக்குகிறது.’

இவ்வாறு அவர் சொன்னார். அவர் வேறு யாருமல்ல; குவளைக் கிருஷ்ணமாசாரியார்தாம்; குவளைக் கண்ணன் என்ற பெயரால் பாரதியார் தமிழ்ப் பாட்டிலே பதித்துவைத்த பெரியார் அவர்.

பெரியவரென்று சொல்லும்போது அவருடைய உருவப் பெருமை, உள்ளப் பெருமை எல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. வாழ்க்கையில் சாரமற்று யமனோடு போராடிக் கொண்டிருந்த கடைசிக் காலத்திலே அவர் பேசிய பேச்சு, பாரதியாரைப் பற்றியதுதான்.

இப்படிச் சொல்பவர் உ.வே. சாமிநாதையரின் மாணாக்கர் கி.வா. ஜகந்நாதன்.

யார் சொன்னார் என்பதும், யாரிடம் சொன்னார் என்பதும், யாரைப் பற்றிச் சொன்னார் என்பதும், எப்போது சொன்னார் என்பதும் இங்கு இன்றியமையாதவையாகிவிடுகின்றன. காரணம் காலத்தால் நிகழ்ந்த கருத்து மாற்றங்கள், அந்தக் காலத்தோடு முடிந்து விடாமல், காலகாலத்திற்கும் நிலைத்து நிற்கின்றவையாக இருக்கின்றன என்பதுதான்.

அப்படிக் காலத்தை முன்கூட்டியே கணித்து, தன் காலத்தில் வருங்காலத்திற்கான வாழ்வியல் நெறிகளை வகுத்தளித்தவர் பாரதி. அதைவிடவும் கடைப்பிடிக்க வைத்து நடைமுறைப்படுத்தியவர் என்பதுதான் சிறப்பு.

•

குவளைக் கிருஷ்ணமாச்சாரியாரை, குவளைக் கண்ணன் ஆக்கியதில் இருந்தே பாரதியின் பார்வைக்கூர்மை தெற்றென விளக்கமாகிறது. கிருஷ்ணமாச்சாரியார் என்கிற பெயரில் பளிச்சிடும் ஸ்ரீவைஷ்ணவ மரபும், வைதிகப் பிடிப்பும், ஜாதி, மத அடை யாளமும் கண்ணன் என்கிற பெயரில் காணாதுபோய், எல்லாருக்கும் பொதுப்பெயராக நிலைபெறுகிற தன்மையைப் பார்க்கலாம். ஸ்ரீகிருஷ்ணனாகச் சமய உலகில் அறியப்பெற்ற திருமாலை, கண்ணன் என்ற மானுடப் பெயராக, அனைத்து மக்களும் அறிந்திருக்கும் பொதுப்

பெயராக, பாரதி அடையாளப்படுத்திப் பாடிய பாடல்கள், ஆழ்வார்கள் மரபில் அமைந்திருந்தாலும், அவை புத்தம்பு தியவை. யாவர்க்கும் பொதுவானவை. மானுடத்துள் துலங் கும் மனிதத்துவத்தை முன்னிறுத்துபவை.

கண்ணன் பாட்டு எனத் தனித்துப் பாடிய பாரதியின் கவிதை களையும், கண்ணன் பிறப்பு, கண்ணன் வரவு, கண்ணன் துதி உள்ளிட்ட பாடல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். அவற்றுள்ளும் இந்த அடையாளங்கள் பொதிந்திருப்பது அழகு.

•

வெகுசாதாரணமான மக்கள் தமிழில் மிக அசாதாரணமான மாற்றங்களைச் செய்வதில் மாயக்கண்ணனைவிடவும் மகிமை வாய்ந்தவர் பாரதி. கண்ணனுக்குக் குழல் என்றால், பாரதிக்கு எழுதுகோல். கண்ணனுக்குச் சக்கரம் ஆயுதம் என்றால், பார திக்குப் பத்திரிகை ஆயுதம். அதனால்தான்,

***ஆயுதம் செய்வோம் - நல்ல***
***காயிதம் செய்வோம்'***

என்று அவர் பாட நேர்ந்தது. காயிதத்திற்கு முன் ஒட்டாய், அடைமொழியாய், பாரதி தந்த 'நல்ல' என்பதற்குத் தரம் மிகுந்த தாள் ('High-quality paper' அல்லது 'Superior quality paper') என்பது பொருளன்று. அது காயிதத்தின் தரத்தைக் குறிப்பதைவிடவும், அதன்மீது நிகழ்த்தப்பெற்ற காரியத்தின் அடிப்படையில் சொல்லப்படுவது. தரம் மிகுந்த தாள்களில் தரம் தாழ்ந்த கருத்துகள் பரிமாறப்பட்ட காலத் தில், எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துகளை முன்வைத்து, அச் சாக்கம் செய்யப்பெற்ற நல்ல காயிதமாக, பாரதி அதனை அமைத்துக் கொண்டமையினால், அது ஆயுதமாயிற்று.

மரக்கூழால் தயாரிக்கப்பெற்ற தாள்தான். அதன்மீது கரு'மை' ஏந்திய எழுத்துகள் பொறிக்கப்பெற்ற பிறகு, அது செய்தித் தாளாக, பத்திரிகையின் பக்கமாக அமைந்த பிறகு, வாளி னும் கூரிய ஆயுதமாக, - எடுப்பார் கரங்களில் அல்ல - இத யங்களில் நிலைத்திருக்கும் வல்லாயுதமாக வடிவெடுத்துவி டுகிறது. அது துருப்பிடிக்கும் இரும்பினால் ஆன ஆயுதம் கூட அல்ல, எக்காலத்திலும் மங்காத பொன்னெழுத்து களைத் தாங்கிய நல்லாயுதம் என்பதனால், 'நல்ல காயிதம்' என்று பாரதியின் பாடலால் விளக்கம் ஆகிறது.

தங்கம் தான் மாத்திரம் ஒளிர்வதாக அமையாது, தன்னைச் சார்ந்த உலோகங்களையும் தன்வயமாக்கிவிடுகிறது. இது உலோகத்தின் இயல்பு. உள்ளத்திற்கும் தங்கம் உவமை யாக்கப்படுவது இலக்கிய மரபு. பாரதியாரை, 'தங்கமானவன்' என்று தாங்கிப் பிடித்துக் கொண்டாடியவர் குள்ளச்சாமி. எப்போதும் தன்மையிழக்காத உலோகம் தங்கம் என்றால், எந்தச் சூழலிலும் தன்னை இழக்காத கொள்கை உடையவர் பாரதி என்று பொருள்.

சுடச் சுடரும் இயல்புடைய பொன்னை, தவத்திற்கு உரு என்று அடையாளப்படுத்துகிறது திருக்குறள்.

கனன்றெழும் அக்கினிக்குஞ்சு அணையாத வரைக்கும் பொன் தானே. அது தன்னை எரித்துச் செய்யும் தவத்தால் ஒளிர்வது. அந்தத்

***தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா - நின்னைத்***
***தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்நலாலா***

என்று பாரதி பாடியது எரிகிற கொள்ளியில் கையை இட்டுச் சுட்டுக் கொண்டு பெறுகிற வெற்றனுபவம் சார்ந்ததாகாது. என்றும் தணியாது தன்னுள் நின்று எரியும் சுதந்திரக் கனல். அதுதான் பாரதியை, 'தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்' என்று வீரத் தழலின் முன் கூத்தாடச் செய்தது.

'எங்கள் வேள்விக் கூடமிதில் ஏறுதே தீ தீ' என்று பாடிய பாரதியின் வேள்விக்கூடம் வாழ்வியல் கூடமல்லவா? அதில் சக தோழர்களாய் நின்றவர்களைத் தேவர்களாய் மாற்றிய குருநாதர் பாரதியார். 'இங்கு அமரர் சங்கம் தோன்றும்' என்று உறுதிபட உரைத்த பாரதியின் பாசறையில் உருவான குவ ளைக்கண்ணன், பார்வையிலே சேவகனாகத் தெரிந்தாலும் பண்பிலே தெய்வமாக விளங்கியவர். அவரை, அவ்வண்ணம் ஆக்கிய பெருமாள் பாரதி. அவர் சந்நிதியில், குவளைக் கண்ணன் பெற்ற தரிசனம் அதியற்புதம். இல்லையென்றால், எத்தனையோ ஆண்டுகளாக, பாரம்பரியமாகத் தாங்கிவந்த வைதீகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, வெகு இயல்பாக மானு டத்தைத் தாங்கிக் கொள்ள முடியுமா?

ஒப்புக்குச் சொல்லி, ஊருக்கு முன்பு தன்னைப் புரட்சிக் காரனாக நிறுத்திக் கொண்டவர் அல்லர் பாரதியார். தமக் குள்ளும் படிந்திருந்த அந்த யுக மாசினைப் படீரென்று போக்கிக் கொள்ள பாரதியாராலும் முடியவில்லை. திரும்பத் திரும்பக் கொள்கை நெருப்பில் தன்னைப் புடம் போட்டுக் கொண்டு சுடர்ந்தவர் பாரதி. முணுமுணுக்கும் மந்திரமாக வேதத்தைக் கருதாமல், தன்னைப் புனரமைக்கும் ஆற்றல் வாய்ந்ததாக அதனை மாற்றிக்கொண்ட அழகினை, அவர் தம் வேதரிஷிகளின் கவிதையிலும் அதன் சாரமாய் வளர்ந்த வசன கவிதையிலும் ('அடபோடா வைதீகம்' என்று கந்தன் கயிறு தன்னை நோக்கிச் சொல்லுவதான 'காற்று' கவிதை) அடையாளம் காணலாம். ஏன் தமிழச்சாதி கவிதையிலும் பாரதி அதனைத் தந்திருக்கிறார்.

தன்னைத் தவநெருப்பில் புடம்போட்டுக்கொண்ட பாரதி, பின் னர் தம் குடும்பத்தாரையும் அந்நெருப்பில் இட்டுச் சுடரச் செய்ததோடு, தன்னைச் சார்ந்தவர்களையும் இந்த வேள்வி யில் இணைத்திருக்கிறார். அந்த தவம் அன்புத் தவம் அறிவுத் தவம். அதுவே ஆற்றல் மிகுந்த தவமாக ஆகியது. அதன் பிரகாசத்தில், குவளைக் கண்ணனும் கனகலிங்கமும் பாரதியின் பார்வையில் சீடர்களாக ஒன்றி நிற்கிறார்கள்.

•

இங்கே இன்னொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பாரதி காலத்திலும் சரி, காந்தியுகத்திலும் சரி, ஏன் விடுதலை பெற்ற பிறகும் கூட, ஹரிஜனமக்களைத் தமது இல்லத்திற்கு அழைத்து வந்து உணவு உண்ண வைப்பதில் துணிந்த பலராலும், அவர்கள் இல்லத்தில் சென்று அவர்கள் சமைத் ததை உண்கிற பக்குவத்தைப் பெற இயலாத நிலை. அந்த அளவிற்குச் சாதியம் மனிதர்களுக்குள் ஊடுருவி ஒன்றி நிலைத்திருக்கும் நாட்டில், முற்று முழுக்கச் சாதியத்தை உதறித் தள்ளிவிட்டுச் சமநிலைச் சமுதாயத்தை ஆக்க முயன்று சாதித்தும் காட்டியவர் பாரதி. அதன் உயிர்ச்சாட்சி யமாக விளங்கிய பாரதியன்பர்களில் தலையாய சீடர், குவளைக் கண்ணன். அந்தப் படிநிலை மாற்றங்களை, பாரதி எவ்வாறு தனக்குள் ஏற்படுத்தினார் என்பதைத்தான், அவர், கி.வா. ஜகந்நாதனிடம் எடுத்துரைத்திருக்கிறார். எப்போது?

பாரதி மறைந்து சில ஆண்டுகள் முடிந்து, பாரதியுகம் தமிழ கத்தில் தழைத்து நின்ற காலத்தில், கரகரத்த குரலில், அவர் சொல்கிறார்.

‘பாரதியார் என்னை முதலியார்கள் வீட்டிலெல்லாம் சாப் பிடச் சொல்வார். முதலில் நான் மறுத்தேன். எங்கள் வீட்டுக் குத் தெரிந்தால் தலைபோய் விடுமென்று சொன்னேன். நாளாக நாளாகப் பாரதியாருடைய பழக்கம் சிறிது நேரம் அவரைப் பிரிந்திருப்பதுகூடப் பெரிய துன்பமென்று தோன்றச் செய்து விட்டது. அதனால் சில ராத்திரிகளில் மாதா கோவில் வீதியி லுள்ள லோகநாத முதலியார் வீட்டில் அவரோடு சாப்பிட்டி ருக்கிறேன்.’

‘உங்கள் வீட்டுக்கு இந்த விஷயம் தெரியாமலே இருந்ததா?’ என்று நான் கேட்டேன்.

‘குறிப்பாகத் தெரியும், தெரிந்து என்னை என்ன செய்ய முடி யும்? என்னை ஒரு ‘தத்தாரி’ என்று நினைத்துவிட்டார்கள். பாரதியாரையே அப்படி நினைத்தவர்கள் எவ்வளவு பேர்? அவருடைய தோழனுக்கு மாத்திரம் அந்தக் கௌரவம் வருவது கூடாதா?’

இராமன் குகனைத் தோழமையாகக் கொண்ட கதை, இந்த நாட்டில் பல காலம் நிலைத்து நின்றாலும், இந்தப் பக்குவம் அவனைத் தெய்வமாய்த் துதிக்கும் பலருக்கும் வந்தபா டில்லையே. ஆனால், தன் காலத்தில் வரவைத்த பெருமை பாரதியாருக்கு உண்டு. தன்னளவில் மட்டும் சீர்திருத்தத்தை நிறுத்திக் கொள்ளாமல், தாயகமெங்கும் இப்பண்பைச் செயற் படுத்திக் காட்டிய பாரதி, எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் ஒன்றியிருந்து உணர்த்தியிருக்கிறார் என்பதை மேலும் விரிக் கிறார் குவளைக் கண்ணன்.

‘புதுச்சேரியிலே வீராசாமி பிள்ளைத் தோப்பு என்ற ஒரு பெரிய தோப்பு இருக்கிறது; நாலு ஐந்து ஏக்கர் பூமி விஸ்தீரண முள்ளது. அங்கே ஒரு குளமும் பங்களாவும் உண்டு. பாரதி யார் அடிக்கடி அந்த இடத்திற்குப் போய் உல்லாசமாக இருப்பதுண்டு. ஒரு நாள் சில நண்பர்களுடன் சேர்ந்து காலை யில் அங்கே போனார். நானும் போயிருந்தேன். அந்தக் குளத்திலே ஸ்நானம் செய்தோம். சாப்பாட்டையும் முதலி யார் வீட்டிலிருந்து அங்கே வருவித்துவிட்டார். எங்கள் எல் லோருக்கும் சேர்த்து வருவித்தார்.’

‘நான் முதலியார் வீட்டில் ராத்திரி வேளையில் சாப்பிடுவது உண்டு. ஆனால் அப்போது அவ்வளவுபேருக்கு நடுவில் அந்த உணவைச் சாப்பிடுவதற்குச் சிறிது லஜ்ஜையாக இருந் தது: ‘கிருஷ்ணா, நீ சாப்பிடத்தான் வேண்டும் வேண்டும்’ என்றார் பாரதியார்; ‘வேளாளன் கொடுக்கிற அரிசி உதவும்; சோறு உதவாதா?’ என்று கேள்வி கேட்க ஆரம்பித்துவிட் டார். எனக்கு அவரோடு வாய் கொடுக்கத் தைரியம் இல்லை; பேசாமல் நானும் சாப்பிட்டேன்.’

இந்த லஜ்ஜை உண்ட உணவு செரித்த பிறகு ஒன்றுமில்லாது போயிற்று. அதுவரை அவர் கொண்ட ஜாதிய உணர்வு பாரதி யின் தோழமையால் நில்லாது நீங்கியது.

•

இளம் பருவமுதலே இவருடன் பழகியிருந்த ரா. கனகலிங் கம், இவரிடம் நிகழ்ந்த மாற்றத்தை அழகாகத் தனது ‘என் குருநாதர்’ நூலில் சொல்கிறார்.

‘பாரதியார் வீட்டில் என்னைக் கண்டுவிட்டால், ‘கனகலிங்கம்! கனகலிங்கம்!’ என்று புன்சிரிப்புடன் அன்போடு அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொள்வார். ஈசுவரன் தருமராஜா கோவில் வீதியில், 10-ஆவது எண்ணுள்ள வீட்டில் பாரதியார் குடியிருந்தபோது குவளைக்கண்ணனை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு, பள்ளியில் படிக்கும்போது காட்டிவந்த வைதி கமெல்லாம் பாரதியாரின் அன்பைப் பெற்ற பின் எங்கே போய் ஒளிந்துகொண்டதோ தெரியவில்லை’

மாசுமறுவற்ற தங்கமாகக் குவளைக் கண்ணனை, பாரதி ஆக்கியது அற்புதம் என்றால், அந்தப் பக்குவத்திற்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டது, குவளைக் கண்ணனுக் குக் கிட்டிய பேறு.

காலத்தால் பாரதியும் குவளைக்கண்ணனும் காணாது போனார்கள் என்றாலும் அவர்கள் வாழ்வு காலம் கடந்து நிற்கும் என்பதற்கு குவளைக் கண்ணன் - பாரதி உரையா டலாக வரும் பின்வரும் செய்தியே சான்று.

‘நாம் இன்னும் நானூறு வருடங்களுக்குப் பின்னாலே தோன்ற வேண்டியவர்கள். முன்னாலேயே தோன்றிவிட்டோம். என்ன செய்வது!’ ஒரு சமயம் நான் அவரை ஒரு கேள்வி கேட்ட தற்குப் பாரதியார் இவ்வாறு கூறினார்:

‘ஐயா, பாரதியாரே! உங்கள் கொள்கைகள் கருத்துகள் எல் லாம் எனக்குத் திருப்திகரமாக இருக்கின்றன. நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்வதும், நான் சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்வதும் நமக்குள் இயல்பாக இருக்கிறது. நிற்க; ஜனங்களில் பலர் நாம் தப்பிதமான கொள்கைளை வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்களே, அதற்கென்ன சொல் லுகிறீர்கள்?’ என்று கேட்டேன்.

‘நாம் இப்போது சொல்லுபவைகளையெல்லாம் நானூறு வரு டங்கள் கழித்து உலகம் ஒப்புக்கொள்ளும்’ என்றார். அவர் இவ்வாறு சொல்லி (1938-இல்) 25 வருஷ காலந்தான் ஆகி றது! என்கிறார் குவளைக் கண்ணன்.

1913-இல் பாரதி சொன்னதாகக் குவளைக் கண்ணன் 1938-இல் சொன்னதை, 2025-இல் எண்ணிப் பார்க்கிறோம்.

காலத்தைப் பின்னுக்கு இழுத்துக் காலாவதியாக்கும் பிற் போக்குச் செயல்களுக்கெல்லாம் சவுக்கடி கொடுக்கும் குவளைக் கண்ணனைத் தோழமையாகக் கொண்ட பாரதி யின் கணக்குப்படி, இன்னும், 288 ஆண்டுகள் இருக்கின்றன.

கலிமுற்றுமுன்பே, கிருதயுகத்தினை நிறுவ விழைந்த பார திக்கும் துணை நின்ற பாரதியர்களுக்கும் இந்தக் காத்தி ருப்பு எதற்கு?

***ஞாலம் கருதினும் கைகூடும் காலம்***
***கருதி இடத்தாற் செயின்***

என்கிறார் திருவள்ளுவர்.

கருதுவோர் நெஞ்சில் விடுதலைக் கனப்பேற்றும் கவிஞரின் சீடர் இவ்விருவர் என்கிற நிலை மாறி எண்ணற்றோர் வர வேண்டும் என்பதே விழைவு.



sethupathi@thaiveedu.com



# ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா:
## இலங்கை மகாவம்சத்துடனான தொடர்பு?

என். சரவணன்

இலங்கையின் மகாவம்சம் இலங்கைக்கு வெளியில், குறிப்பாக சில ஆசிய நாடுகளில் மொழிபெயர்ப்புப் பிரதிகளாகக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது. இதுவரை பாளி, சமஸ்கிருதம், சிங்களம், லத்தீன், ஆங்கிலம், ஜேர்மன், ஹிந்தி, நேபாளம், குஜராத்தி, பெங்காலி, கம்போடிய, சியாமிஸ், ரஷ்ய, தமிழ் போன்ற மொழிகளில் இப்பிரதிகள் இருப்பதை இதுவரை அடையாளம் காண முடிந்திருக்கிறது. இதற்கு மேலும் கூட இருக்கலாம்.

இலங்கையில் மாநாம தேரரால் பாளி மொழியில் எழுதப்பட்ட முதலாவது தொகுதியே இவ்வாறு உலகெங்கும் காணப்படுகிறது. ஆனால் மூலப்பிரதிக்கும் அவற்றுக்கும் இடையில் வித்தியாசங்கள் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அந்த வரிசையில் மலாய் மொழியில் ஒரு மகாவம்சம் ‘ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா’ (Hikayat Merong Mahawangsa) என்கிற ஒன்றைப் பற்றி அறிந்துகொள்வோம்.

ஏனையவற்றில் இருந்து இந்தப் பிரதி பெரிதும் வேறுபடுகிறது. முழுக் கதையும் வேறானதாக இருக்கிறது. இலங்கை மகாவம்சத்தின் பிரதியல்ல இது என்று அவர்களே கூறவும் செய்கிறார்கள். அதேவேளை இலங்கைக்கும் இந்த ‘மகாவங்க்சா’ பிரதிக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தையும், மலாய் வரலாற்றுடன் இப்பிரதி கொண்டிருக்கிற முக்கியத்துவத்தையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

ஏனைய மகாவம்சப் பிரதிகள் அனைத்தும் பௌத்த வரலாற்றுக் காவியமாக பேணப்பட்டிருக்கிற போதும் இது மலேசிய நாட்டில் ஜாவி என்கிற மொழியில் காணப்படுகிறது. ஜாவி மொழிக்கு தனித்துவமான எழுத்து வடிவம்

கிடையாது. அரபு எழுத்துகளையே ஜாவி மொழிக்கான எழுத்துகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அண்டைய நாடுகளான இந்தோனேசியா, புருனை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் ஜாவி மொழி பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

'ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா' அரபு எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கிறது எனும்போது அரபு எழுத்தின் ஒலி வடிவத்தில் ஜாவி மொழியில் இது எழுதப்பட்டிருக்கிறது என்று புரிந்துகொள்ளவேண்டும்.

மலாய் இராச்சியத்தின் 'கெடா' (Kedah) என்பது மலாய் தீபகற்பத்தில் உள்ள ஒரு பண்டைய இராச்சியம். தென்கிழக்கு ஆசியாவின் பழைமையான நாகரிகத்தின் இருப்பிடமாக அறியப்படுகிற இந்த நாடு ஒரு இந்து - பௌத்த இராச்சியமாக இருந்தது. இது பின்னர் 12-ஆம் நூற்றாண்டில் ஒரு முஸ்லிம் சுல்தானின் கைகளுக்கு மாறியது. சோழ, சியாம் போன்ற பேரரசுகளின் செல்வாக்கின் கீழ் ஆழப்பட்ட ஒரு காலம் இருந்தது. இன்று, கெடா மலேசியாவின் பழமையான ஒரு மாநிலமாக விளங்குகிறது.

மலாய் இலக்கியப் பாரம்பரியத்தில் ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா (Hikayat Merong Mahawangsa - HMM) என்பது ஒரு முக்கிய இடம் வகிக்கும் படைப்பாகும். இலங்கை மகாவம்சத்துக்கு இருக்கிற இலக்கியப் புகழ் இதற்குமுண்டு. ஏராளமான நூல்கள், ஆய்வுகள், உபகதைகள் பற்றிய தனித்தனியான இலக்கிய நூல்கள், திரைப்படங்கள், நாடகங்கள், தொலைக் காட்சித் தொடர்கள், ஆவணப்படங்கள் போன்றவற்றை இணையத்தளங்கள் எங்கும் காணலாம்.

கெடா சுல்தானகத்தின் (Kedah Sultanate) வரலாற்றையும், அதன் மன்னர்களின் வம்சாவளியையும் விவரிக்கும் இலங்கையின் மகாவம்சத்துக்கு நிகரான ஒரு வரலாற்றுக் காவியமாகும். இது பொதுவாக 'கெடா வரலாற்றுக் குறிப்புகள்' (Kedah Annals) என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் காவியம், வரலாற்று உண்மைகளையும், தொன்மங்களையும் (myths), உள்ளூர் நாடோடிக் கதைகளையும், இஸ்லாமியக் கூறுகளையும் ஒருங்கே கலந்து கொடுக்கிறது. ஹிகாயத்தின் மூலக்கரு, தொன்மையான மலாய் கலாசாரத்தின் மதிப்புகளையும், பண்பாடுகளையும், உயர்ந்த ஒழுக்கங்களையும் பிரதிபலிக்கும் ஒரு வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகிறது. இதன் உள்ளடக்கம், ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தின் நிர்வாகம், கலாசாரத்தையும் சிந்தனையின் வளர்ச்சியையும் உள்ளடக்கியுள்ளது.

## ஹிகாயத்தின் உருவாக்கமும், காலமும்:

ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா ஒரு பாரம்பரியமான வரலாற்று ஆவணமாகக் கருதப்பட்டாலும், அறிஞர்கள் இதன் காலத்தையும், நம்பகத்தன்மையையும் குறித்து நீண்ட காலமாக விவாதித்து வருகின்றனர். 1612-ஆம் ஆண்டின் மலாய் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து (மலாய் அன்னல்ஸ் - Malay Annals) சில பகுதிகளை அப்படியே நகலெடுத்த ஒரு முன்னுரையும் கெடா சுல்தான்களின் பட்டியலைக் கொண்ட ஒரு முடிவுரையும் இல்லையெனில், இந்த நூல் ஒருபோதும் 'கெடா வரலாற்றுக் குறிப்புகள்' என்று அழைக்கப்பட்டு, ஒரு பண்பாட்டு வரலாற்றுப் படைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்காது என்று ஆர்.ஓ. வின்ஸ்டெட் (R.O. Winstedt) போன்றோர் விமர்சித்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற மூலப்பிரதிகளின் (Manuscripts) பற்றாக்குறை, அவற்றின் நவீனத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், இந்த ஹிகாயத் சமீபத்திய காலங்களில்தான் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் இந்த நூல் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த நூலின் காலப்பதிவு, 15-ஆம் அல்லது 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுவதற்கான எந்தச் சான்றுகளும் இல்லை என்று வின்ஸ்டெட் கூறுகிறார்.

தற்போது கிடைக்கப்பெற்ற மிகப்பழைமையான அச்சுப் பிரதியான ஜாவி எழுத்து வடிவிலான நூல், 1898-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் நாள் முஹம்மது யூசோஃப் நசிருதீன் என்பவரால் நகலெடுக்கப்பட்டது என்று நம்பப்படுகிறது. இந்தப் பிரதியில், பத்தி பிரிப்புகளில் (paragraph divisions), காற்புள்ளிகள் (commas) அல்லது நிறுத்தற்குறிகள் (full stops) எதுவும் பயன்படுத்தப்படவில்லை. சுல்தான்களின் வம்சாவளிக் குறிப்பில், இறுதியாகப் பெயரிடப்பட்ட சுல்தான் அஹ்மத் தாஜுடீன் ஹலீம் ஷா, 1806 முதல் 1845 வரை வாழ்ந்தவர். அதன்படி இந்த ஹிகாயத்தின் தொகுப்புக் காலம் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுடன் ஒத்துப்போவதைக் காட்டுகிறது.

ஹிகாயத்தின் ஆசிரியர் யார் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. இரண்டாம் சுல்தான் முசஃபர் ஷாவின் மகனான சுல்தான் மத்ஸாம் ஷாவின் (Sultan Maadzam Shah) காலத்தில், மலாய் மன்னர்களின் ஆட்சிக் காலத்தையும், மரபுகளையும் குறித்து எழுதுமாறு தனக்குக் கட்டளையிடப்பட்டதாக ஆசிரியர் முன்னுரையில் கூறுகிறார்.

## ஹிகாயத் – சாராம்சம்:

ஹிகாயத் மெரோங் மகாவங்க்சாவின் உள்ளடக்கமானது புராண மரபுகளையும், இந்தியக் காவியங்களையும், இஸ்லாமிய கதாநாயகர்களையும் உள்ளடக்கி உள்ளூர் நாட்டுப்புறக் கதைகளின் கலவையாகத் தொடங்குகிறது.

ரோம் (Byzantium), சீனா போன்ற மாபெரும் பேரரசுகளின் கலவை மிகுந்த பாரம்பரியங்களுடன் ஹிகாயத் தொடங்குகிறது. விஷ்ணுவின் வாகனமாகவும் 'பறவைகளின் ராஜா' வாகவும் கருதப்படும் கருடா (Geroda or Roc) பற்றிய குறிப்புகளை இதில் காணலாம். இந்தக் காவியத்தின்படி, கருடன், விலங்கு உலகின் ராஜாவான நபிகள் சுலைமானுடன் (Prophet Solomon) ஒரு சவால் விடுகிறான். ரோமின் இளவரசரையும், சீனாவின் இளவரசியையும் திருமணம் செய்வதிலிருந்து தன்னால் தடுக்க முடியும் என்று கருடன் சபதம் செய்கிறான்.

கருடன், சீனாவின் இளவரசியையும் அவளது வயதான பணிப்பெண்ணையும் லங்காபுரிக்கு (இலங்காவாரி தீவுகள் எனக் குறிப்பிடுவது இலங்கையை) கடத்திச் செல்கிறது. ரோம இளவரசன் பயணம் செய்த கடற்படையைத் தன் சிறகுகளின் பலத்தால் மூழ்கடித்து, இளவரசனையும் அவனது தோழனான மெரோங் மகாவங்க்சாவையும் பிரித்து விடுகிறது கருடன்.

மெரோங் மகாவங்க்சா உயிர்தப்பி, நாட்டை அடைந்து, புலாவ் ஸ்ரீயை (Pulau Sri) எதிர்கொள்வதற்காக லங்காசுகா

(Langkasuka) என்ற ராஜ்ஜியத்தை நிறுவுகிறான். லங்காசுகா என்ற பெயர் ‘அழகிய நிலம்’ அல்லது ‘மகிழ்ச்சி’ என்ற பொருள்படும் சமஸ்கிருத வார்த்தைகளில் இருந்து வந்திருக் கலாம்.

இறுதியில், சுலைமான் நபி தலையிட்டு, இளவரசனையும் இளவரசியையும் ஒன்றிணைத்து, அவர்களை சீனாவிற்குத் திருமணத்திற்காக அனுப்பி வைக்கிறார். மெரோங் மகா வங்க்சா, தன் மகனான மெரோங் மகாபொதிசத் (Marong Mahapodisat) என்ப வருக்குக் கெடா சாமின் துரான் (Kedah Zamin Turan) என்று பெயரிடப்பட்ட ராஜ்ஜியத்தை ஒப்படைத் துவிட்டு, ரோமுக்குத் திரும்பிச் செல்கிறான்.

## மகாவங்க்சா வம்சாவளியின் தொடக்கம்:

மெரோங் மகாபொதிசத், தன் ராஜ்ஜியத்தை தன் மகன்க ளுக்குப் பிரித்துக் கொடுத்ததாக ஹிகாயத் கூறுகிறது. மூத்த மகன் சயாம் நாட்டின் அரசன் ஆகிறான். இரண்டாவது மகன், இந்திர சக்தி (Indra Sakti) என்ற தீவில் விழுந்த வெள்ளிக் கணை மூலம் பேராக் நாட்டின் ஆட்சியாளன் ஆகிறான். நான்காவது மகனான ஸ்ரீ மகாவங்க்சா (Sri Mahawangsa) கெடா சிம்மாசனத்தைப் பெறுகிறான்.

ஸ்ரீ மகாவங்க்சா, லங்காசுகாவிலிருந்து செருகும் (Serukum) என்ற இடத்திற்குத் தலைநகரை மாற்றினான், ஏனெனில் லங்காசுகா கடலிலிருந்து வெகு தொலைவில் இருந்தது.

ஸ்ரீ மகாவங்க்சாவின் மகன், ஸ்ரீ இந்திர வங்க்சா, ஒரு அரக்கன் (demon/gergasi) மகளை மணந்ததால், ஸ்ரீ மகாவங்க்சா சோகத்தில் இறந்துவிடுகிறார். ஸ்ரீ இந்திர வங்க்சாவின் மகனே ஓங் மகா பெரிதா தெரியா (Ong Maha Perita Deria) ஆவார். இவரே ‘பல்லுள்ள ராஜா’ (Raja Bersiong) என்று அழைக்கப் படும் ‘பெர்சியோங்’ கொடுங்கோலன்.

ராஜா பெர்சியோங், முதலில் சமைத்த கீரையில் தற்செய லாகச் சேர்ந்திருந்த மனித இரத்தத்தின் சுவையை விரும்பி யதால், பின்னர் தண்டனைக்குரிய குற்றவாளிகளின் இரத்தத் தையும், இறுதியில் நிரபராதிகளின் இரத்தத்தையும் குடிக்கத் தொடங்கினான். இவனது கொடுமைகளால், அமைச்சர்கள் கிளர்ச்சிசெய்து, அரண்மனையைத் தாக்குகிறார்கள். அரண் மனைப் பெண்கள், பீரங்கிகளில் வெடிமருந்தை மட்டும் நிரப் பியபோதும் பீரங்கிக் குண்டுகளை வீசுவதைத் தவிர்த்ததால், ராஜா பெர்சியோங் தப்பிச் சென்று மறைந்து விடுகிறான்.

மறைந்திருந்த ராஜா பெர்சியோங்கின் மகனான ராஜா பிரா ஓங் மகாபுதிசத், ஒரு புனித யானையால் கண்டுபிடிக்கப் பட்டு, புதிய ஆட்சியாளராக முடிசூட்டப்பட்டான். இலங் கையின் மகாவம்சத்தில் தலைமறைவாக வாழ்ந்து வந்த துட் டகைமுனுவைத் தேடிவந்த புனித யானை மாலையிட்டு முடி சூட்டியதையும் நினைவு கொள்ளலாம். இவருக்குப் பின் வந்த அவரது மகன் ராஜா பிரா ஓங் மகாவங்க்சா (Raja Phra Ong Mahawangsa) ஆட்சியிலமர்ந்தபோதும் அவன் மதுபோ தைக்கு அடிமையாகி இருந்தான்.

இந்தச் சமயத்தில், பக்தியுள்ள ஷேக் அப்துல்லா யமானி (Shaikh Abdullah Yamani) பாக்தாத்தில் இருந்து வந்து, ராஜா பிரா ஓங் மகாவங்க்சாவையும், அவரது மக்களையும் இஸ்லாத்தைத் தழுவச் செய்தார். அரசர் சுல்தான் முசஃபர் ஷா (Sultan Muzaffar Shah) என்ற இஸ்லாமியப் பெயர் ராஜாவுக்கு சூட்டப்பட்டது. கெடா இஸ்லாமிய மாநிலமாக மாறியதைக் கேள்வியுற்று, ஆச்சே சுல்தானும், ஷேக் நூருதீனும் (Sirat al-Mustakim, Bab a'n-nikah ஆகிய இரண்டு மத நூல்களை) கெடாவிற்கு செல்கிறார்கள்.

ஹிகாயத்தின் பல கதைகள் புனைகதைகளாகக் கருதப்பட் டாலும், அது குறிப்பிடும் பல இடங்களும், காலங்களும் உண்மையான வரலாற்றுக் குறிப்புகளுக்கு நிகராக உள்ளன.

ஹிகாயத் குறிப்பிடும் லங்காசுகா, குணோங் ஜெராயின் (Gunong Jerai) அடிவாரத்தில் அல்லது புஜாங் பள்ளத்தாக்கில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. புஜாங் பள்ளத்தாக் கானது இந்தியா, மத்தியக் கிழக்கு, சீனா ஆகிய நாடுகளுக்கு பயணிக்கும் வர்த்தகர்களுக்கும், கடற்பயணிகளுக்கும் ஒரு முக் கியமான நுழைவுத் துறைமுகமாகவும், தங்குமிடமாகவும் இருந்தது.

தொல்லியல் ஆய்வுகள், பொ.ஆ.பி. 4-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய பழைமையான கல்வெட்டுகளை புஜாங் பள்ளத் தாக்கில் (Bukit Meriam, Seberang Perai) கண்டறிந்துள்ளன. ஹிகாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புலாவ் ஸ்ரீ (Pulau Sri) என்பது குணோங் ஜெராய் (Guong Jerai) என்று மாறிவிட்டது. இந்த இடம், பண்டைய மாலுமிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்திருக்கிறது.

ஹிகாயத்தில் ஏழு முஸ்லிம் அல்லாத ஆட்சியாளர்களின் பெயர்கள் உள்ளன, இவர்கள் சயாமிய-சமஸ்கிருதப் பட்டங் களைக் கொண்டிருந்தனர். இது 13-ஆம் நூற்றாண்டின் போர் களுக்குப் பிறகு சயாமிய மேலாதிக்கத்துக்கு (Siamese suzerainty) சான்றாகிறது. ஹிகாயத்தின் இந்த வரலாற்றுப் பகுதி பொதுவாகச் சரியான காலவரிசைப்படி இருப்பதாகக் குவாரிச் வேல்ஸ் (H.G. Quaritch Wales) நிறுவுகிறார். ராஜா மகா ப்ரிட் துரியா (ராஜா பெர்சியோங்) ஆட்சி செய்த காலம், சுமார் 1385-1415 ஆக இருக்கலாம்.

ராஜா பெர்சியோங்கின் கதைக் கருவானது, 14-ஆம் நூற் றாண்டில் சுமாத்ராவில் ஆதித்யவர்மன் (Adityavarman) போன்ற மன்னர்கள் கடைப்பிடித்த பைரவர் வழிபாட்டுக் (Bhairava cult) கொள்கையின் திரிந்த வடிவமாக இருக் கலாம். இந்த வழிபாடு இரத்தம் குடிக்கும் சடங்குகளை உள் ளடக்கியதால், அது கொடுங்கோலனின் ‘பல்’ (fang) கதையாக ஹிகாயத்தில் மாற்றப்பட்டுள்ளது.

இஸ்லாமியச் சுல்தானாக மாறிய ராஜா பிரா ஓங் மகாவங்க் சாவின் பெயர் சுல்தான் முசஃபர் ஷா என்று மாறியது. கெடா இஸ்லாத்திற்கு மாறிய ஆண்டு பொ.ஆ.பி. 1474. என்று பொதுவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் மகாவம்ச ஒப்புமை:

ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா (HMM)-வும் இலங்கையின் மகாவம்சமும் (Mahavamsa - MV) ஆகியவை இந்தியப் பண்பாட்டுத் தளத்திலிருந்து பிறந்திருந்தாலும், அவை தமக்கான தனித்துவமான பண்பாட்டு வரலாற்றுத் தன்மையைக் கொண்டிருக்கின்றன.

கெடா, பொ.ஆ.பி. 1-ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்தியப் பெருங்கடல் வர்த்தகப் பாதையில் ஒரு முக்கியமான மையமாக இருந்தது. இந்திய மாலுமிகளும், வர்த்தகர்களும்

இந்தியப் பெருங்கடலைக் கடந்து, மலாய் தீபகற்பத்தின் மேற்கு கடற்கரையிலோ இலங்கையிலோ (Ceylon) உள்ள துறைமுகங்களைத் தொட்டு, சீனாவுக்குச் செல்வது வழக்கம்.

மகாவம்சம், இலங்கையை மட்டுமன்றி தெற்காசிய - தென்கிழக்காசிய பௌத்த வரலாற்றையும் பதிவு செய்வதோடு, இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அரச வம்சங்கள் குறித்தும் குறிப்பிடுகிறது. குறிப்பாக, 11-ஆம் நூற்றாண்டு சோழர் படையெடுப்புகள் விஜயப் பேரரசைத் தாக்கியபோது, கெடா (Kadaram) முக்கிய இலக்காக இருந்தது.

மகாவம்சம், சூலவம்சம் (Culavamsa) ஆகிய இலங்கை வரலாற்று நூல்கள், 13-ஆம் நூற்றாண்டில் தாமிரலிங்கா (தற்போதைய தெற்கு தாய்லாந்து / வடக்கு மலேசியா பகுதி) மன்னரான சந்திரபானு (King Candrabhanu) இலங்கையைத் தாக்கி ஆட்சி செய்தது பற்றியும் குறிப்பிடுகின்றன. சந்திரபானு ஒரு 'ஜாவக' (ஜாவா) (Javaka - தென்கிழக்கு ஆசியர்களைக் குறிக்கும் பொதுவான சொல்) மன்னன் என்று மகாவம்சத்தில் விவரிக்கப்படுகிறார்.

வரலாற்றாளர் குவாரிச் வேல்ஸ், பொ.ஆ.பி. 1271-இல் சந்திரபானுவின் இரண்டாவது இலங்கைப் படையெடுப்பிற்கு, கெடா (லங்காசுகா) ஒரு தளமாக இருந்திருக்கலாம் என்று கருதுகிறார். ஏனெனில் இலங்கையைத் தாக்க மேற்குக் கடற்கரையில் ஒரு துறைமுகம் அவசியமாகிறது. இந்த காலகட்டத்தில்தான் லங்காசுகா, முந்தைய சைலேந்திரப் பேரரசின் தலைநகரான கடாரம் என்ற பெயரைத் தனதாக்கிக் கொண்டிருக்கலாம்.

எனவே, ஹிகாயத், மகாவம்சம் ஆகியவை நேரடியாக இலக்கிய ரீதியாக இணைக்கப்படவில்லை என்றாலும், அவை 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையிலான இந்தியப் பெருங்கடலின் அரசியல், பண்பாட்டு, வர்த்தகப் பிணைப்பை பதிவு செய்துள்ளன. கெடா, இலங்கையுடனும் இந்தியத் துணைக் கண்டத்துடனும் பௌத்த மதத்தை (தேரவாத பௌத்தம்) பரப்பும் வழியில் பிணைக்கப்பட்டிருந்திருக்கிறது.

## மகாவங்க்சா – மகாவம்சம் : புராணத் தொன்மங்களில் ஒப்புமைகள் (Mythical Parallels):

அம்சம் ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா (HMM) மகாவம்சம் (MV)

நாயகர் மெரோங் மகாவங்க்சா, அலெக்சாண்டர் (இஸ்கந்தர் சுல்கர்னைன்) வம்சாவளியைச் சேர்ந்தவர். விஜயன் (Prince Vijaya), சிங்கபாஹுʺவின் மகன், புத்தரின் தீர்க்கதரிசனத் தின்படி இலங்கையை நிறுவியவர்.

தொன்மச் சவால் கருடா என்ற தெய்வீகப் பறவையின் தாக்குதல், மெரோங்கின் பயணத்தைத் திசை திருப்பியது. விஜயன் இலங்கையை அடையும்போது உள்ளூர் இயக்கர்களையும் (Yakkhas - அரக்கர்கள்) அரக்கிகளையும் அடக்கி நாட்டை மனிதகுலத்திற்குத் தூய்மைப்படுத்துகிறான்.

நோக்கம் வம்சாவளியை மகிமைப்படுத்துவது, கெடாவின் பண்டைய இந்து-பௌத்தப் பாரம்பரியத்தை மாற்றி இஸ்லாமிய அரசிற்கு legitimacy வழங்குவது. பௌத்தத்தை நிலைநாட்டுவது, சிங்கள அரசர்களின் நீதியை உறுதிப்படுத்துவது.

| அம்சம் | ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா (HMM) | மகாவம்சம் (MV) |
|---|---|---|
| நாயகர் | மெரோங் மகாவங்க்சா, அலெக்சாண்டர் (இஸ்கந்தர் சுல்கர்னைன்) வம்சாவளியைச் சேர்ந்தவர். | விஜயன் (Prince Vijaya), சிங்கபாஹுʺவின் மகன், புத்தரின் தீர்க்கதரிசனத்தின்படி இலங்கையை நிறுவியவர். |
| தொன்மச் சவால் | கருடா என்ற தெய்வீகப் பறவையின் தாக்குதல், மெரோங்கின் பயணத்தைத் திசை திருப்பியது. | விஜயன் இலங்கையை அடையும்போது உள்ளூர் இயக்கர்களையும் (Yakkhas - அரக்கர்கள்) அரக்கிகளையும் அடக்கி நாட்டை மனிதகுலத்திற்குத் தூய்மைப்படுத்துகிறான். |
| நோக்கம் | வம்சாவளியை மகிமைப்படுத்துவது, கெடாவின் பண்டைய இந்து-பௌத்தப் பாரம்பரியத்தை மாற்றி இஸ்லாமிய அரசிற்கு legitimacy வழங்குவது. | பௌத்தத்தை நிலைநாட்டுவது, சிங்கள அரசர்களின் நீதியை உறுதிப்படுத்துவது. |

HMM-இல் கருடாவின் பங்கு, விஷ்ணுவின் வாகனமாக இந்தியப் புராணங்களில் இருந்து நேரடியாகப் பெறப்பட்ட வடிவமாகக் கொள்ளலாம். அதேசமயம், விஜயனின் வருகைக் கதை, ராமாயண பாத்திரக் கதைகளின் (நாடு கடத்தல், கடல் கடந்த பயணம், அரக்கர்களுடன் சண்டையிடுதல்) நெடி அடிக்கிறது. இரண்டு காவியங்களுமே, வெளிநாட்டு அல்லது தெய்வீக வம்சாவளியைக் கொண்ட ஒரு நாயகனை, உள்ளூர் நாகரிகத்தை நிறுவ ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன.

## மகா – வம்ச: பொருள் விளக்கம்:

'மஹாவம்ச' (இலங்கை) மற்றும் 'மஹாவங்க்சா' (மலாயா) ஆகிய இரு சொற்களும் ஒரே அடிப்படை சம்ஸ்கிருத மூலத்திலிருந்து வந்தவை. 'மஹா' என்றால் 'பெரிய' அல்லது 'மகா' என்று பொருள், மற்றும் 'வம்ச' என்றால் 'வம்சம்,' 'பரம்பரை,' அல்லது 'காலவரிசை' என்று பொருள். ஆகையால், இவ்விரு சொற்களும் 'மகா வம்சம்' அல்லது 'பெரும் பரம்பரை' என்ற கருத்தைக் குறிக்கின்றன. சம்ஸ்கிருத மொழியின் பரவலான கலாசார, மதத் தாக்கத்தினால் தென் - தென்கிழக்கு ஆசிய மொழிகளில் இந்த சொற்கள் வேரூன்றியுள்ளன.

இருப்பினும், இந்த சொற்கள் ஒரே மூலத்தைக் கொண்டிருந்தாலும், அவை குறிக்கும் வரலாற்றுப் பதிவுகளும், புவியியல் பின்னணியும் முற்றிலும் வேறுபட்டவை. இலங்கை 'மஹாவம்ச' என்பது பாலி மொழியில் எழுதப்பட்ட இலங்கையின் ஒரு முக்கிய பௌத்த வரலாற்று நூலாகும். மலாயாவின் 'ஹிகாயத் மெரோங் மஹாவங்க்சா' என்பது கெடா சுல்தானகத்தின் தோற்றத்தையும், அதன் அரச பரம்பரையைப் பற்றிய கதைகளையும் விரிக்கிறது. எனவே, சொற்களின் வேர் ஒன்றாக இருந்தாலும், அவற்றின் பயன்பாடு மற்றும் வரலாற்றுப் பின்னணி தனித்துவமானவை.

## வரலாற்றுத் துல்லியம் – இலக்கியப் பெறுமதி:

மகாவம்சம் (பொ.ஆ.பி. 5-ஆம் நூற்றாண்டு பாலி நூல்) ஒரு வரலாற்றுச் சரித்திரமாகவும், தர்மத்தைப் போதிக்கும் ஒரு கருவியாகவும் உருவாக்கப்பட்டது. இது அசோகரின் பௌத்தப் பணி போன்ற வரலாற்று நிகழ்வுகளின் காலவரிசையை, கல்வெட்டுச் சான்றுகளுடன் உறுதிப்படுத்துகிறது.

ஆனால் ஹிகாயத் என்பது (18-ஆம் நூற்றாண்டு மலாய் நூல்) பெரும்பாலும் புனைகதை மற்றும் இலக்கியப் புனைவுகளைக் கொண்ட ஒரு காவியக் காதல் கதையாகும். இது வரலாற்றின் 'மெல்லிய நினைவுகளையே' (verifiable memories) கொண்டுள்ளது. உதாரணமாக, ராஜா பெர்சியோங்கின் கதை. 13-14-ஆம் நூற்றாண்டுகளில் கெடா அல்லது சுமத்ராவில் இருந்த கொடூரமான பைரவர் வழிபாட்டு நடைமுறைகளின் ஒரு நினைவாக இது இருக்கலாம்.




ஹிகாயத்தில் அரசரின் வம்சாவளியையும் ஆட்சியதிகாரத்தையும் வலியுறுத்துவது மட்டுமின்றி, மலாய் பாரம்பரியச் சமூகத்தின் பல்வேறு விழுமியங்களும், அறிவார்ந்த கூறுகளும் பிரதிபலிக்கின்றன.

ராஜா அடில் ராஜா திசம்பாஹ், ராஜா ஜாலீம் ராஜா திசங்கா (Raja Adil Raja Disembah, Raja Zalim Raja Disanggah - நியாயமான அரசனுக்குச் சேவை செய், அநீதியான அரசனை எதிர்த்துப் போராடு) என்ற பாரம்பரியக் கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. மன்னர்கள் பொறுமையுடனும், இரக்கத்துடனும், நீதியுடனும் இருக்க வேண்டும். குற்றவாளிகள்கூட மரண தண்டனைக்கு முன் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும் என்கிறது.

அமைச்சர்கள், அரியணை காலியாக இருந்தபோதும், தாங்கள் அரசராக முயலாமல், உண்மையான வாரிசைக் கண்டுபிடிக்க சயாம் மன்னரின் உதவியை நாடினர், இது ஆட்சியாளரிடம் மக்கள் கொண்டிருந்த பிரிக்கப்படாத விசுவாசத்தை (undivided loyalty) காட்டுகிறது.

ஹிகாயத்தில் காணப்படும் தொழில்நுட்பக் குறிப்புகள், கடற்பயணம், கட்டுமானம், இராணுவத் துறைகளில் அக்காலச் சமூகத்தின் அறிவை சுட்டுகின்றன. மெரோங் மகாவங்க்சா, ரோமின் இளவரசனுடன் சீனாவுக்குப் பயணம் செய்ய, அவரது கடற்படைக்கு இரண்டு பெரிய கப்பல்களும், ஒன்பது சிறு படகுகளும் (voyages) பாதுகாப்பாகப் பயணித்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, இராணுவ உபகரணங்களான அம்புகள், வில், பீரங்கிகள் (blunderbusses - ஹிகாயத்தில் பிற்காலச் சேர்க்கை என்றாலும்) பற்றிய குறிப்புகள் உள்ளன. ராஜா ஒங் மகா பெரிதா தேரியாவின் இராணுவ ஆடைகளும் அலங்காரங்களும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

## இந்து – பௌத்த செல்வாக்கும் இஸ்லாமிய மாற்றமும்:

ஹிகாயத், இந்து-பௌத்தக் கொள்கைகளிலிருந்து இஸ்லாமிய மரபுக்கு கெடா மாறியதன் பரிமாற்ற நிகழ்வை பதிவு செய்கிற காவியமாக இருக்கிறது. ராஜா பெர்சியோங்கின் கொடுங்கோன்மைக் கதை Malevolence), இறுதியில் ஷேக் அப்துல்லாவின் வருகை, இஸ்லாத்தைத் தழுவுவதன் மூலம் இந்து - பௌத்த செல்வாக்கு முடிவுக்கு வருகிறது (Benevolence). இஸ்லாமியச் சகோதரத்துவத்தின் அடையாளமாக, ஆச்சே சுல்தான், கெடா சுல்தானுக்கு சிராத்துல்-முஸ்தகிம், பாபுன்-நிக்காஹ் ஆகிய நூல்களைப் பரிசளித்திருக்கிறார். இது இஸ்லாமிய ஆட்சியின் அடித்தளத்தையும், இஸ்லாமிய அறிவின் முக்கியத்துவத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது.

ஹிகாயத் மெரோங் மகாவங்க்சா ஒரு புனைகதை வடிவில் இருந்தாலும், இது கெடாவின் பாரம்பரியச் சமூகத்தின் ஆழமான வேர்களையும், இந்திய மயமாக்கலின் (Indianization) தாக்கத்தையும், இஸ்லாத்திற்கு மாறியதின் விளைவுகளையும் பரிசீலிக்க வழிவகுத்துள்ளது.

இந்தக் காவியம், கெடாவை ஒருபோதும் தனிமைப்படுத்தப்பட்ட ராஜ்ஜியமாகப் பார்க்காமல், ரோம், சீனா, இந்தியா, இலங்கை, சயாம், ஆச்சே போன்ற சர்வதேச சக்திகளின் பெருங்கடல் வலையமைப்பின் ஒரு பகுதியாகவே பார்க்கிறது. இதன் மூலக்கருவானது, பண்டைய மலாய் ஆட்சியாளர்கள் பின்பற்றிய இராஜதந்திர, வெளியுறவுக் கொள்கைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. உலகின் பொருளாதார, அரசியல் சக்தி சமன்பாடு மாறும்போதெல்லாம், ஒரு பலமான தேசம் செழிக்க, இத்தகைய இராஜதந்திர உறவுகள் அவசியம் என்ற செய்தியை ஹிகாயத் இன்றும் தாங்கி நிற்கிறது.

**உசாத்துணை:**


- Winstedt, R. O. 'The Kedah Annals.' Journal of the Malayan Branch of the Royal Asiatic Society, Vol. 16, No. 2 (131) (December 1938), pp. 31-35. (This source critically discusses HMM's value as serious history, confirms its title as Kedah Annals, and notes the borrowing of its preface from the Malay Annals of 1612 A.D.)
- Quaritch Wales, H. G. 'Archaeological Researches on Ancient Indian Colonization in Malaya.' Journal of the Malayan Branch of the Royal Asiatic Society, Vol. 18, No. 1 (136) (February 1940)




sarawanan.n@thaiveedu.com

# புறநிலையும் அகநிலையும்

ஆங்கில மூலம் ■ ஜயதேவ உயன்கொட

தமிழில் ■ கந்தையா சண்முகலிங்கம்

புறநிலையும் அகநிலையும் பற்றிய அறிவாராய்ச்சியியல் விவாதங்களோடு தொடர்புடைய பல விவாதங்கள் சமூக விஞ்ஞானங்களின் பிற துறைகளில் இடம்பெற்றன. இவ்வாறான விவாதங்களில் 'அமைப்பு எதிர் செயலி' (Structure vs Agency) என்னும் விவாதம் முக்கியமானது. இவ்விவாதத்தில் அமைப்பியல் வாதிகள் எனும் சிந்தனைப் பள்ளியினர் பங்குகொண்டனர். அமைப்பியல்வாதம் (Structuralism), செயல்வாதம் (Functionalism) என்னும் இரு கோட்பாடு சமூகவியலிலும் மானிடவியலிலும் 20-ஆம் நூற்றாண்டில் முக்கியம் பெற்றன. அல்தூசர் என்னும் பிரான்சு தேசத்து மார்க்சியவியலாளர் அமைப்பியல் மார்க்சியத்தை முன்வைத்தார். இக்கோட்பாடுகளின் ஊடாக இடம்பெற்ற 'அமைப்பு எதிர் செயலி' விவாதம் பற்றியும், அவ்விவாதத்திற்கும் புறநிலையும், அகநிலையும் என்னும் அறிவாராய்ச்சியல் பிரச்சினைக்கும் இடையிலான தொடர்பு பற்றியும் ஜயதேவ உயன்கொட கூறியிருக்கும் கருத்துகளை அடுத்து நோக்குவோம்.

## அமைப்பும் செயலியும்:

1970-களிலும் 1980-களிலும் சமூகவியலிலும் மானிடவியலிலும் அமைப்பியல்வாதம், செயல்வாதம் என்னும் இரு கோட்பாடுகள் மிகுந்த செல்வாக்கு உடையனவாய் இருந்தன. சமூகவியல், மானிடவியல், அரசியல் விஞ்ஞானம் ஆகிய துறைகள் சார்ந்த ஆய்வுகளில் அமைப்பியல்வாதமும், செயல்வாதமும் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தின.

சமூகவியல் அமைப்பியல் வாதத்தை கிளாட் லெவி-ஸ்ட்றாஸ் (Claude Levi-Strauss) (1908 - 2009) என்பவர் முன்வைத்தார். அமெரிக்காவில் முன்னணியில் விளங்கிய சமூகவியலாளரான ரல்கொட் பார்சன்ஸ் (Talcott Parsons) என்பவர் செயல்வாத சமூகவியலின் (Functionalist Sociology) அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிக் கூறி, செயல்வாத சமூகவியல் பள்ளியைத் தொடக்கி வைத்தார். 1970-களிலும், 1980-களிலும் லூயி அல்தூசர் (Louis Althusser) (1918 - 1990) என்னும் பிரஞ்சு தேசத்து மார்க்சியவியலாளர் மார்க்சிய சமூகக் கோட்பாட்டை அமைப்பியல் முறையில் விளக்கம் செய்தார். அவரது விளக்கம் ஆங்கிலத்தில் 'Structural Interpretaion' என அழைக்கப்படும். லெவி-ஸ்ட்றாஸ், ரல்கொட் பார்சன்ஸ், லூயி அல்தூசர் ஆகிய மூவரும் சமூக உலகம் (Social World) பற்றிய விளக்கத்திற்கு அமைப்புகள் (Structures) என்னும் அகத்திற்குப் புறத்தே உள்ள கட்டமைப்புகளிற்கு முதன்மையளித்தனர். செயலி (Agency)

tg.theeban@gmail.com



அல்லது மனித நடவடிக்கைகள் (Human Actions) அமைப்புகள் விதிக்கும் எல்லைகளுக்குள், அவற்றின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டன வாய் நடைபெறுகின்றன என அமைப்பியல் வாத விளக்கம் அமைந்தது. தனி நபர்களின் அரசியல் சமூக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அமைப்புகளுக்கு உள்ளது. ஆகையால், அமைப்புகளை சமூக விஞ்ஞானங்களின் பகுப்பாய்வுக்குரிய முதன்மை அலகாக (Primary Unit of Analysis) கொள்ளவேண்டும் என அமைப்பியலாளர் கூறு வர். அமைப்புகள், புறநிலையானவை; அவை சமூகத்தில் மனிதச் செயலிகளின் நடவடிக்கைகளுக்கு அப்பால் சுதந்திரமான இருப்பை உடையன என்ற கருத்தை அமைப்பியலாளர் அழுத்திக் கூறுவர்.

சமூக உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றிய நேர்மாறான சித்திரத்தை செயலி நோக்குமுறை (Agency Approach) முன்வைப்பதைக் காணலாம்.

சமூக செயல்முறைகளில் மனிதர்கள் அல்லது மனிதச் செயலிகள் (Human Actors) பிரதான கூறாக அமைந்திருப்பதைச் சமூகவியல் ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. மனிதர்களே தமது செயல்களின் ஊடாகச் சமூக உலகத்தை உருவாக்குகிறார்கள். ஆகையால் முகவர் அல்லது செயலி (Agent or Agency) சமூகக் கட்டமைப்புகளை (Social Structures) விட முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. சமூகக் கட்டமைப்புகள் முகவர் அல்லது செயலிக்கு அடுத்த இரண்டாம் நிலை விடயமாக அமைகிறது. இந்த நோக்கின்படி சமூகக் கட்டமைப்புகள் மேற்தோற்ற அமைப்புகள் (Epiphenomenal) எனக் கருதப்படுகின்றன. மனிதச் செயலியை இலக்கணத்தில் கூறப்படும் எழுவாய் (Subject) என்ற பொருளில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எழுவாய் ஒரு செயலைச் செய்பவர் என்ற பொருளை உடையது. (உதாரணம்: அவள் படிக்கிறாள், அவள் பாடசாலைக்குப் போகிறாள் என்ற வாக்கியங்களில் எழுவாய் செயலைச் செய்பவராக அமைவதைக் காண்க.) சமூக உலகத்தில் செயலாற்றுபவர் செயலியாவர். செயலிகள் சமூக உலகைக் கட்டமைப்பவர்களாகவும், அதனை மாற்றுபவர்களாகவும் உள்ளனர் (Acts and Builds, Alters or Changes the world). இந்நோக்கு முறைப்படி செயலி செயலூக்கம் மிகுந்த பாத்திரத்தை வகிப்பதாக கருதப்படுகிறது. ஆகையால் சமூகப் பகுப்பாய்வு எழுவாய் ஆகிய செயலிக்கு கோட்பாட்டு முதன்மையை (Theoretical Primacy) வழங்க வேண்டும். சமூகப் பகுப்பாய்வில் அமைப்புகள் செயலிக்கு அடுத்த இரண்டாம் நிலைக்கூறாகவே பார்க்கப்படுகிறது. தோற்றப்பாட்டியல் (Phenomenology), பொருள்கோடலியல் (Hermeneutics), இனவியல்முறையியல் (Ethnomethodology) ஆகிய கோட்பாடுகளும் சமூகச் செயலிகளுக்கு முதன்மையளிக்கும் கோட்பாடுகளாகும். அவை சமூக உலகை மனிதச் செயலிகளே உருவாக்குகிறார்கள் அல்லது கட்டமைக்கிறார்கள் என்று கூறுகின்றன. இதனால் அவை 'Constructionism' என்ற கருத்தை உடையவை எனக் கூறுப்படும். இவற்றின் நோக்கினை சமூக உலகம் பற்றிய 'அகநிலை' நோக்கு (Subjectivist Perspective of the Social World) எனவும் அழைப்பர்.



Louis Althusser



Claude Levi-Strauss



Talcott Parsons

இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

- அமைப்பு எதிர் செயலி (Structure vs Agency) என்னும் விவாதம் சமூக விஞ்ஞானங்களின் பல துறைகளோடு தொடர்புடைய விவாதமாகும்.
- சமூகச் செயல்முறையில் அமைப்புகள் (Structures) தீர்மானகரமான முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்ற கருத்தை வலியுறுத்தும் கோட்பாடுகளான அமைப்பியல்வாதம் (Structuralism) செயல்வாதம் (Functionalsim) ஆகியன 1970-களிலும் 1980-களிலும் அறிவுலகில் மிகுந்த செல்வாக்கை உடையனவாக இருந்தன.
- லெவி-ஸ்ட்றாஸ், ரல்கொட் பார்ச்சன்ஸ், லூயி அல்தூசர் என்போர் அமைப்பியல் வாதம், செயல்வாதம் என்னும் சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்த முக்கியமான சிந்தனையாளர்களாவர்.
- சமூக உலகம் (Social World) பற்றிய விளக்கத்திற்கு மனித அகத்திற்கு வெளியே புறநிலை இருப்புடைய கட்டமைப்புகள் முதன்மையானவை; அவை தனி நபர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவை; ஆகையால் சமூக விஞ்ஞானங்களின் பகுப்பாய்வுக்குரிய முதன்மை அலகாக (Primary Unit of Analysis) கட்டமைப்புகள் விளங்குகின்றன. ஆய்வாளர்கள் மனிதச் செயலியை (Human Agency) விடச் சமூகக் கட்டமைப்புகளுக்கே முதன்மை அளிக்கவேண்டும் என அமைப்பியல்வாதிகள் கூறினர்.
- மேற்கூறிய அமைப்பியல் விளக்கத்திற்கு மாறானதாகச் சமூக ஆய்வுகள் தொடர்பான செயலி நோக்குமுறை (Agency Approach) விளங்குகிறது. இந்நோக்குமுறை சமூக உலகத்தைப் புரிந்துகொள்வதில் மனித நடவடிக்கைகளின் (Human Actions) பங்கினை முதன்மைப்படுத்துகிறது.
- தோற்றப்பாட்டியல், பொருள்கோடலியல், இனவியல்முறையியல் ஆகிய சிந்தனைப் பள்ளிகள் சமூக ஆய்வில் மனிதச் செயலிக்கும் மனித அகநிலைக்கும் (Subjectivity) முதன்மையளித்துள்ளன.



shanmugalingam@thaiveedu.com




# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

## இதுவரை...

- ஈழத்து வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தின் உண்மைத் தன்மை ஆராயப்படுகிறது.
- மகாவம்சத்தின் முதல் நான்கு அத்தியாயங்களிலும் கூறப்படும் வடநாட்டு அரச பின்னணி, பௌத்த மதமும், அதன் பிரிவுகளும் ஏற்படுவதற்கான பின்புலத்தை விளக்குவதாய், இந் நூலுக்கு முகவுரையாக அமைந்திருக்கின்றன.
- அசோகன் முடிசூடிக் கொண்டபோது புத்தர் நிர்வாணம் அடைந்து 218 ஆண்டுகள் ஆகிவிட்டன. அசோகனே பௌத்த மத வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட மன்னனாவான்.
- தேரவாத மரபு, முதல் 100 ஆண்டுகளில் ஒன்றாகவும் ஒன்றுபட்டதாகவும் இருந்தது. அதன் பின் பிற தர்மக் கோட்பாடுகள் எழுந்தன.
- மகாவம்சத்தின் 5-ஆம் அத்தியாயம் மூன்றாம் மகாசபையுடன் முற்றுப் பெற்றது.
- அசோகச் சக்கரவர்த்தியின் (பொ.ஆ.மு. 3-ஆம் நூற்.) கிர்னார் இரண்டாம் பாறைக் கல்வெட்டு வாசகங்களில், ஈழம் ‘தம்பபரணி’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

  அசோகன் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மட்டுமல்லாது, சுதந்திரமாக இருந்த நாடுகளான சோழ, பாண்டிய, சத்தியபுத்திர (அதியமான் நெடுமான் அஞ்சி) சேர, தாமரபரணி (ஈழம்) முதலிய நாடுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படவேண்டும் என்று இக்கல்வெட்டு வாசகம் குறிப்பிடுகிறது.

  எனவே, அசோகன் காலத்தில், அதாவது பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் பௌத்தம் பரப்புவதற்கான முயற்சி நடைபெற்றிருக்கிறது.

விஜயனுக்கும் யட்சிணியான குவன்னாவுக்கும் பிறந்த பிள்ளைகளின் வழித் தோன்றல்களே புலிந்தர்கள்.

- விஜயனின் பிறப்புப் பற்றிக் குறிப்பிடும் கதை இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டியது. விஜயன் சிங்கத்திற்கும் இளவரசி ஒருத்திக்கும் பிறந்த மகனாக அறியப்படுகிறான். அவன் பிறப்பில் ஒரு சிங்கத்தின் பங்கு உண்டு என்பது கவனிக்கத்தக்கது. இது சாத்தியமா? இது நடைமுறைச் சாத்தியமாக இல்லாதிருந்தாலும் இன்று வரை, இலங்கையின் வரலாற்றுச் சின்னங்களில் இந்தச் சிங்கம் ஆட்சி பெற்றிருக்கிறது. இது மகாவம்சம் கூறும் கதைகளின் தாக்கமா? சிந்திக்கவேண்டியது.
- விஜயனின் பிறப்பிடம் பற்றிக் கருத்து வேறுபாடு காணப்பட்டாலும், அதாவது சிங்கபுர என்பது வங்காளம், அசாம் அல்லது ஒரிஸ்ஸாவாக இருக்கலாம் என்று கருதப்பட்டாலும் தற்போது ஆய்வாளர் மத்தியில் அவன் பிறப்பிடம் ‘ஒரிஸ்ஸா’ என்பதில் ஓர் ஒருமைப்பாடு காணப்படுகிறது.
- மகாவம்சம் இலங்கையின் பழங்குடி மக்கள் பற்றி அதிகம் பேசவில்லை. விஜயன் இலங்கைக்கு வருவதுடன்தான் இலங்கை வரலாறு தொடங்குகிறது. இலங்கையின் முதல் மன்னனாக இவன் கூறப்படுகிறான். விஜயன் இலங்கைக்கு வரும்போதே இலங்கையில் இனக்குழுக்கள் இருந்தமை பற்றி மகாவம்சம் கூறுகிறது. விஜயனின் முதலாவது போர் ஓர் இனக்குழுவினருடன்தான் நடைபெற்றிருக்கிறது என்பது பற்றி மகாவம்சம் 7-ஆம் அத்தியாயம் கூறுகிறது.



தொடர்கிறது...

## மகாவம்சம் - எட்டாம் அத்தியாயம்:

விஜயனுக்கு மகன் இல்லாத காரணத்தால் அவனது சகோதரன் சுமிதனின் மகன் பாண்டு வசுதேவன் அரசனாக நியமிக்கப்பட்டான். அவன், சாக்கிய அமிதோதனின் மகனான சாக்கிய பாண்டு என்னும் வடஇந்திய மன்னன் மகளான பத்ர காஞ்சனா என்பவளை மணந்தான். அரசி பத்துப் பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றாள். மூத்தவன் அபயன், இளையவள் சித்திரா.

‘இவள் பிள்ளைகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மாமன்மாரைக் கொல்வார்கள்’ என்று சாஸ்திரீகர்கள் கூறினர்.

இது, நமது ‘கிருஷ்ணன், ஹம்சன்’ கதை போல இருக்கிறது.

உரிய காலத்தில் சித்திரா சிறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டாள். அவளது சிறை வாயில், மன்னன் படுக்கை அறை ஊடாகவே அமைக்கப்பட்டிருந்தது. சித்திரா, மனிதர்களைப் பித்துப் பிடிக்க வைக்கும் அழகி. இதனால் அவள் ‘உன்மத்த சித்ரா’ என்று அழைக்கப்பட்டாள்.

பத்ர காஞ்சனாவின் சகோதரர்களில் ஒருவனைத் தவிர ஏனையோர் இந்தியாவிலிருந்து இலங்கையை வந்தடைந்தனர். இவர்கள் அரசன் அனுமதியுடன் தாம் விரும்பிய இடங்களில் தங்கி வாழ்ந்தனர். அவரவர் வாழ்ந்த இடங்கள், அவரவர் பெயரால் ‘விஜித கிராமம்’, ‘திகாயு’, ‘ரோஹணா’ என்று அழைக்கப்பட்டன.

இலங்கை அரசன் பாண்டு வசுதேவன், தன் மூத்த மகனை உபராஜனாகப் பட்டம் சூட்டினான்.

திககாமனி என்னும் திகாயுவின் மகன் சித்திராவைப் பற்றிக் கேள்வியுற்று அவளிடம் ஆசைகொண்டு உபதீச கிராமத்தை அடைந்தான். அரசன், அவனை உபராஜனுடன் இணைந்து பணிபுரிய நியமித்தான். ஒரு நாள், சித்திரா, பலகணி வழியாக அவனைக் கண்டாள். அவன் தன் மாமன் மகன் என அறிந்தாள். அவன் மேல் தான் கொண்ட விருப்பத்தைப் பணிப்பெண்ணுடன் பகிர்ந்து கொண்டாள்.

பணிப்பெண்ணின் உதவியுடன் காமினி இரவு நேரத்தில் நாலேணி வழியாக மேலே ஏறி, யன்னலை உடைத்து அறைக்குள் நுழைந்து அவளுடன் கூடியிருந்தான். அவன், இப்படி அடிக்கடி வந்து போனான். அந்த அறைக்கு வேறு பாதை இல்லாத காரணத்தால் அவனை யாரும் காணவில்லை. சித்திரா கர்ப்பவதியானாள். மன்னன் காதுக்கு விடயம் எடுத்துச் செல்லப்பட்டது. மன்னனும் மக்களும் கலந்து, காமினியையும் தம்முடன் இணைத்துக் கொள்ள முடிவு செய்து அவனைச் சித்திராவுக்கு மணம் முடித்து வைக்கத் தீர்மானித்தனர்.

ஆண் குழந்தை பிறந்தால் கொன்று விடுவதாகக் கூறி அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். குழந்தை பிரசவிக்கும் நேரத்தில் காமினியின் பணியாட்களாக சித்தன் என்னும் இடையனும் காலவேலன் என்னும் அடிமையும் இருந்தனர். சந்தேகத்தின் பேரில் இவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். அவர்கள், யட்சர்களாக மறுபிறவி எடுத்து கருவில் இருந்த குழந்தையைக் காத்து வந்தனர்.

### பாண்டு அபயன்:

சித்திரா, பணிப்பெண்ணின் உதவியுடன் பிரசவம் நெருங்கும் மற்றொரு பெண்ணைக் கண்டறிந்தாள். சித்திராவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. பணிப்பெண் குழந்தையைக் கூடையில் வைத்து, இன்னல்களைக் கடந்து துவார மண்டலத்துக்குக் கொண்டு சென்றாள். ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி குழந்தையை ஒப்படைத்தாள். மற்றப் பெண்ணுக்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தைகள் இடம் மாறின.

சித்ராவுக்குப் பெண் குழந்தை பிறந்தது கேட்டு இராஜகுமாரர்கள் திருப்திப்பட்டனர். ஆண் குழந்தைக்குத் தாத்தா பெயருடன் மூத்த மாமன் பெயரை இணைத்து பாண்டு அபயன் என்று பெயரிட்டனர். பாண்டு அபயன் பிறந்தபோது முப்பது வருடம் அரசாண்ட இலங்கை அரசன் பாண்டு வசுதேவன் இறந்தான்.

ஆண் குழந்தைக்கு ஏழு வயதானபோது அவனது இருப்பு மாமன்மாருக்குத் தெரியவந்தது. மாமன்மார், ஒரு குறிப்பிட்ட குளக்கரையில் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகளைக் கொல்லுமாறு ஆட்களை ஏவினர்.

குளத்து நீரில் ஒரு மரம் இருந்தது. அம்மரத்தில் இருந்த பொந்து, நீரின் அடியில் காணப்பட்டதால் அது பற்றிப் பாண்டு அபயனைத் தவிர யாருக்கும் தெரியாது. பாண்டு அபயன் விளையாடும்போது அப்பொந்தினுள் நீண்ட நேரம் ஒழிந்திருந்து வெளிவருவான். இராசகுமாரர்களின் ஆட்கள் வந்தபோதும் பாண்டு அபயன் தன் உடைகளையும் கொண்டு அப்பொந்தினுள் நுழைந்து மறைந்துகொண்டான். பாண்டு அபயனைக் கொல்ல வந்தவர்கள் ஆடைகளையும் சிறுவர்களையும் எண்ணிச் சரிபார்த்துக்கொண்டு அவர்களைக் கொன்று மன்னனிடம் சிறுவர்கள் அனைவரும் கொல்லப்பட்ட தகவலைத் தெரிவித்தார்கள். அரசனின் ஆட்கள் சென்றபின் பாண்டு அபயன் வீட்டிற்குச் (அவனது வளர்ப்புத் தந்தை) சென்றான். பன்னிரண்டு வயது வரை அங்கு வாழ்ந்தான்.

மீண்டும், மருமகன் உயிருடன் இருப்பதை மாமன்மார் அறிந்து, இடையர்கள் அனைவரையும் கொல்லும்படி ஆட்களை அனுப்பினர். இடையர்களிடம் மான் ஒன்று அகப்பட்டிருந்தது. மானைச் சுடுவதற்காக நெருப்பு எடுத்து வரும்படி பாண்டு அபயனை ஊருக்குள் அனுப்பினார்கள். வீடு சென்ற பாண்டு அபயன், வளர்ப்புத் தந்தையின் மகனிடம், தன் கால் புண்ணாகி இருப்பதால் நீ நெருப்பை இடையர்களிடம் எடுத்துச் செல். உனக்கு வாட்டிய இறைச்சி கிடைக்கும் என்று கூறி அவனை நெருப்புடன் அனுப்பி வைத்தான். இடையர்களைக் கொல்ல வந்தவர்கள், வந்த வேலையை முடித்துக்கொண்டு, மாமன்மாரிடம் செய்தி சொன்னார்கள்.

பாண்டு அபயனுக்குப் 16 வயதாயிற்று. அப்போது பாண்டு அபயன் உயிரோடு இருக்கும் செய்தி மாமன்மாருக்குத் தெரியவந்தது. பாண்டு அபயனின் பெற்ற தாய், பாண்டு அபயனைப் பாதுகாப்பான இடத்திற்கு இட்டுச் செல்லும்படி வளர்ப்புத் தந்தையிடம் கேட்டு, பணமும் அனுப்பினாள். வளர்ப்புத் தந்தை இத்தகவலைப் பாண்டு அபயனுக்கு அறியத்தந்து, அவனை ஒரு அடிமையுடன் பண்டுலகா மக என்னும் கிராமத்தில் வசித்த, பண்டுலா என்னும் பணக்காரப் பிராமணன் ஒருவனிடம் அனுப்பினான். பண்டுலா வேதம் கற்றவன்.

பண்டுலா, பாண்டு அபயனிடம் 'நீ அரசனாகி எழுபது வருடம் ஆட்சி செய்வாய். எனவே அதற்குரிய கலைகளைக் கற்றுக்கொள்' என்று கூறி அவனும் அவன் மகனும் பாண்டு அபயனுக்கு அவற்றைக் கற்பித்தனர், அவனும் விரைவில் கற்றுக்கொண்டான். அவர், படை திரட்டுவதற்காக நூறாயிரம் பணம் கொடுத்தார். 500 பேர் படையில் சேர்க்கப்பட்டதும், 'யார் கை பட்டதும் இலைகள் தங்கமாகின்றனவோ அவளை உன் ராணியாகவும் என் மகன் சந்தனை அரசகுருவாகவும் கொள்' என்று கூறினார். இளவரசனான பாண்டு அபயனும் படையுடன் புறப்பட்டான். வழியில் மேலும் 700 படை வீரர்களையும் பொருட்களையும் திரட்டிக்கொண்டான்.

பாண்டு அபயனின் மாமன்மாரில் ஒருவனான கிரிகண்ட சிவன், பாண்டு வசுதேவனால் அளிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து வரி பெற்று வந்தான். இவன் மகள் பாலி என்னும் இளவரசி, பேரழகி. அவள் தொட்டது பொன்னாகும். அதனால் பாலி, சுவர்ணபாலி என்னும் பெயர் பெற்றாள். அவளை, பாண்டு அபயன் சந்திக்கிறான், காதல் கொள்கிறான். அவள் எல்லோருக்கும் உணவளிக்கும்போது, உணவுப் பாத்திரத்தில் உணவு குறையவே இல்லை. பாண்டு அபயன், அவளைத் தன் வாகனத்தில் தூக்கிச் சென்றான்.



இது அமுதசுரபியின் கதை போல உள்ளதா? இதிகாசங்கள், புராணங்களில் சில சம்பவங்கள் மீண்டும் மீண்டும் எடுத்து வரப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

போர் மூண்டது. பாண்டு அபயனின் இருப்பை அறிந்த மாமன்மார், தூமராக மலையில் படைவீடு அமைத்து அவனுடன் போரிட்டனர். பாண்டு அபயன், மாமன்மாரைத் தோற்கடித்து அவர்களின் படைவீட்டைக் கைப்பற்றி இரண்டு வருடம் தன்னிடம் வைத்திருந்தான். பாண்டு அபயனது முன்னேற்றத்தைக் கண்ட அரசன், பாண்டு அபயனது ஆதிக்கத்தைக் கங்கையின் மறு கரையுடன் வைத்திருக்கும்படி கேட்டுக் கடிதம் எழுதினான். மாமன்மார் கோபப்பட்டனர். இதனால் அரசன் ஆட்சிப் பொறுப்பை மாமன்மாரிடம் கொடுத்தான். தீசன் என்பவன் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான்.

அபயன் உபதீச கிராமத்திலிருந்துகொண்டு அரசனாக இருபது வருட காலம் ஆட்சி செய்தான்.

தூமராக மலைப் பிரதேசத்தில் தும்பரியங்கானா என்னும் தடாகத்துக்கு அருகே சேதியா என்னும் பெயருடைய யக்சினி ஒருத்தி பெண்குதிரை வடிவில் திரிந்தாள். அபயன் அந்த குதிரையாக உருமாறிய யக்சினியுடன் போரிட்டு அடக்கிக் கொல்ல முயன்றான். 'உனக்கு நாட்டை வென்று தருகிறேன். என்னைக் கொல்லாதே' என்று யக்சினி கேட்டதற்கு இணங்க அவளைக் கொல்லாது விட்டு, அவள் மூக்கில் துளையிட்டு கயிற்றால் கட்டினான். அவன் சென்ற இடமெல்லாம் குதிரையும் தொடர்ந்தது.

நமக்குச் சூர்ப்பனகையின் கதை நினைவுக்கு வருவது இயல்பே, அரக்கர் உருமாறித் திரிவது, மூக்கு அறுபடுவது - இவை கதையின் தேவைக்காகப் பயன்படுத்தப்படுவதாக உணர்கிறோம்.

அபயன் தூமராக மலையில் நான்கு ஆண்டுகள் வசித்தான். பின், அரிதமலைக்கு வந்து போர் புரிவதற்காக ஏழு ஆண்டுகள் காத்திருந்தான். அபயன், யக்சினிக் குதிரையில் ஏறித் தந்திரமாக மாமன்மாருடன் போரிட்டு அவர்களைக் கொன்று வெற்றிவாகை சூடினான். போரில் வென்ற பாண்டு அபயன், தன் பெரிய மாமன் அனுரா வசித்த இடத்திற்குச் சென்றான். அந்த இடம் இரு அனுராதர்களுக்கு வீடாக அமைந்ததால், அனுராதபுரம் என்று அழைக்கப்பட்டது. மூத்த மாமன் அவனுக்குச் சாதகமாக இருந்தமையால் அபயன் அவனைக் கொல்லவில்லை.

பாண்டு அபயன் ஸ்வர்ணபாலியைப் பட்டத்து அரசியாகக் கொண்டு பட்டாபிசேகம் சூட்டிக்கொண்டான். நகர முன்னேற்றத்திற்காக அரிய முயற்சிகளில் ஈடுபட்டான், நகர பாதுகாவலன் ஆனான். ஆழமான குளம் தோண்டி நீர் நிரப்பினான். அவனது பட்டாபிசேகத்திற்கு அந்த வாவியிலிருந்து நீர் எடுக்கப்பட்டதால் அவ்வாவி, அபயவாபி என்று அழைக்கப்பட்டது.

பாண்டு அபயன், பொதுக் கல்லறை, கொலைக்களம், மேற்றிசை ராணிகள் ஆலயம், வேசவனத்து ஆலமரம், யோனர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம், மகாயக்ஞசாலை ஆகியவற்றை அமைத்தான். நகரைச் சுத்தம் செய்வித்தான். இச்செயற்பாடுகளைச் செய்வதற்காக கல்லறைக்கு வடமேற்கே ஒரு கிராமத்தை ஏற்படுத்தினான். சண்டாள கிராமத்திற்கு வடகிழக்கில் சண்டாளர்களுக்காகத் தனியான ஒரு கல்லறை அமைத்தான். வேடுவர்களுக்கான குடிசைகள் வரிசையாகக் கட்டினான்.

மேலும் வடக்கே காமனிவாவி வரை துறவிகளுக்கான ஒரு மடம் அமைக்கப்பட்டது.

அப்பிரதேசத்தில் பல்வேறு மதப்பிரிவுகளைச் சேர்ந்த துறவிகளும் வாழ்ந்தனர்.

மாறுபட்ட கொள்கையுடைய ஐந்நூறு குடும்பங்கள் வசித்தன.

காமினி வாவியின் இக்கரையில், ஊரூராகச் சென்று இரந்துண்ணும் துறவிகளுக்காக ஒரு மடத்தைக் கட்டினான்.

ஆசீவகர்களுக்கும் பிராமணர்களுக்கும் தங்குமிடங்களும் நோயுற்றவர்கள் தங்கிச் சுகம் பெற ஒரு மனையும் மண்டபமும் கட்டினான்.

பாண்டு அபயன் காலத்தில் ஈழத்தில் ஆசீவகர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

சமகாலத்தில் பல்வேறு மதங்களும் ஈழத்தில் இருந்திருக்கின்றன.

பாண்டு அபயன் காலத்தில் சமயப்பொறை கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு மன்னன் மடம் கட்டி ஆதரித்திருக்கிறான்.

பட்டாபிசேகம் செய்துகொண்ட 10 ஆண்டுகளில் அத்தீவு முழுவதும் கிராம எல்லைகளை உறுதிப்படுத்தினான்.

பாண்டு அபயனுக்கும் அபயனுக்கும் இடையே பதினேழு வருட காலம் அரசன் இன்றி ஆட்சி நடந்தது.

அறிவிற் சிறந்த அரசன், பாண்டு அபயன், முப்பத்தேழு வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, அனுராதபுரத்திலிருந்து திறம்பட அரசாண்டான்.

## மூத்த சிவன்:

பாண்டு அபயனின் பின் அவனுக்கும் ஸ்வர்ணபாலிக்கும் பிறந்த மகன் மூத்த சிவன் ஆட்சிக்கு வந்தான். நாடு அமைதியாக இருந்தது. அவன் மகாமேக வனம் என்னும் ஒரு பூங்காவை அமைத்தான். மூத்த சிவன் அனுராதபுரத்திலிருந்து அறுபது ஆண்டுகள் அரசாண்டான். மூத்த சிவனுக்கு இரு பெண்களும் பத்துக் குமாரர்களும் பிறந்தார்கள். இவர்களுள் இரண்டாம் குமாரன் தேவனாம்பிரிய தீசன் குணத்திலும் அறிவிலும் சிறந்தவனாக விளங்கினான். தந்தையின் (மூத்த சிவன்) மறைவிற்குப் பின் தேவனாம்பிரிய தீசன் அரசனானான்.

## தேவனாம்பிரிய தீசன்:

தேவனாம்பிரிய தீசன் பட்டாபிசேகம் செய்துகொண்டபோது பல அற்புதங்கள் நடந்தன.

பூமிக்குக் கீழே புதையுண்டு கிடந்த புதையல்கள் தாமாகவே தரைமட்டத்திற்கு வந்தன.

இலங்கைக்கு அருகே கடலில் மூழ்கிப்போன கப்பல்களில் இருந்த அணிகலன்கள் பலவும் இயற்கையாகக் கடலிலுள்ள செல்வங்களும் கரை ஒதுங்கின.

எண்வகை முத்துக்களும் கடலுக்கு அடியிலிருந்து மேலெழுந்து வந்து கரையில் குவிந்தன.

என்று இவ்வாறு பல.

இவற்றின் உண்மைத் தன்மை ஒருபுறம் இருக்க, இவ்வாறான கதைகள் அரசர், கதாநாயகர் போன்றோர் பெருமையை மிகுத்துக் காட்டுவதற்காக இணைக்கப்படுவதை வரலாற்றில், கதைகளில் காணலாம்.

தேவனாம்பிரிய தீசனும் தர்ம அசோகனும் ஒருவரை ஒருவர் நேரில் பார்ததே இல்லை. ஆயினும் வெகு காலமாகவே அவர்கள் நண்பர்களாக இருந்தார்கள்.

எனது சிறு வயதுப் பாடப் புத்தகங்களின்படி, 'தேவனாம்பிரிய தீசன், மகிந்தனை, இன்று மிகுந்தலை மலை என்று அறியப்படும் மலையில் முதன் முதலாகச் சந்தித்தான்'.

மகிந்தன்தான் முதன் முதலில் தேவனாம்பிரிய தீசனைச் சந்தித்தான் என்னும் தகவல் கூடச் சரியானது என்று கொள்வதற்குப் பிற சான்றுகள் கிடையாது.

தேவனாம்பிரிய தீசன், தனது பிரதம மந்திரியும் மருமகனுமான மகாரிதன், ராஜகுரு, ஒரு மந்திரி, நிதிக்காப்பாளர் ஆகிய நால்வரையும் அசோகனுக்கு விலைமதிப்பற்ற பொருட்களை எடுத்துச் செல்ல நியமித்தான். அவர்கள், கப்பலில் ஏழு நாட்கள் பயணம் செய்து பாடலிபுரத்தை அடைந்து பரிசுப் பொருட்களை அசோகனிடம் அளித்தனர். மனம் மகிழ்ந்த அசோகச் சக்கரவர்த்தியும் விலை மதிப்பற்ற பொருட்களை தூதுவர்கள் மூலம் இலங்கை அரசனுக்கு அனுப்பி வைத்தான்.






அசோகனின் தூதுவர்கள், மன்னன் தமக்கிட்ட கட்டளையின் படி, ஏற்கனவே முடிசூடியிருந்த இலங்கை மன்னனுக்கு மறு பட்டாபிசேடம் செய்தனர். இவ்வாறு விசாக பௌர்ணமி அன்று தேவர்களுக்குப் பிரியமானவன் என்னும் பெயர்கொண்ட தேவனாம்பிரிய தீசன் மக்களுக்கு நன்மை செய்து வந்தான்.

### மூன்றாம் பௌத்த மகாசபையும் மதம் பரப்பலும்:

மூன்றாம் பௌத்த மகாசபை முடிந்தது. புத்த மார்க்கத் திற்கு ஒளியூட்டிய மாகாளி புத்திர தேரர், மூன்றாம் மகாசபை முடிந்த பின், பௌத்த மதத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்தித் தார். அவர், பௌத்த மதம் அடுத்துள்ள நாடுகளில் வேரூன் றப்போவதை உணர்ந்தார். எனவே, மதம் பரப்புவதற்காகப் பல்வேறு நாடுகளுக்கும் தேரர்களை அனுப்பிவைத்தார். காஷ்மீரம், காந்தாரம், மகிஷ மண்டலம், வனவாசம், அபராந் தகம் முதலிய நாடுகளுக்குத் தேரர்களை மதத் தூதுவராக அனுப்பிவைத்தார்.

மகாதேரர், மஹிந்தன், இதியர், உதியர், சம்பலர், பத்ரசாலர் ஆகிய தமது ஐந்து சீடர்களையும் 'எழில் மிகு இலங்கைத் தீவில் இனிய புத்த மதத்தை ஏற்படுத்துங்கள்' என்று அனுப் பிவைத்தார்.

அப்போது காஷ்மீரிலும் காந்தாரத்திலும் அற்புத சக்தி வாய்ந்த நாகமன்னன், அரவாலன் என்பவன், பேய் மழை பெய்தல், பயிர்களை வெள்ளத்தில் அழித்தல், காற்றில் பறத்தல்? நீர் மேல் நடத்தல் போன்ற பயங்கரமான விளை யாட்டுக்களில் ஈடுபட்டான். நாகர்கள் பயந்தார்கள். தேரர் தமது அற்புத சக்தியால் இப்பயங்கர நிகழ்ச்சிகளுக்கு முடிவு கட்டினார்.

இந்தத் தகவல்களுக்கு மாறான தகவல்களும் உண்டு. நாக மன்னன், பௌத்த மதம் தனது நாட்டில் பரவுவதை எதிர்த்து கடும் போர் புரிந்தான். ஈற்றில் எதிர்க்கமுடியாது தோல்வியை ஒப்புக்கொண்டு மதம் மாறினான்.

இதன் மேல் இமாலயத்திலுள்ள எண்பத்து நாலாயிரம் நாகர் களும் ஏராளமான கந்தர்வர்களும் யக்ஷர்களும், கும்பந்தர் களும் புத்த மார்க்கத்தைச் சேர்ந்தார்கள். புத்தரும் அவரது போதனைகளும் சங்கமும் சிறப்புடன் நிலைபெற்றன.

மஹிஷமண்டலத்தில் நாற்பதினாயிரம் பேர் தீட்சை பெற் றார்கள்.

வனவாசத்தில் அறுபதினாயிரம் பேர் மதம் மாறினர். முப்பத்து ஏழாயிரம் பேர் புத்த தீட்சை பெற்றனர். ஐந்நூறு விகாரைகள்

கட்டப்பட்டன. இவ்வாறாக பௌத்தமதம் இப்பிரதேசங்களில் தாபிக்கப்பட்டது.

மகாராஷ்டிரத்தில் எண்பத்து நாலாயிரம் பேர் விமோசன மார்க்கத்தின் பரிசை அடைந்தனர். மூவாயிரம் பேர் அவரிடம் தீட்சை பெற்றனர்.

இவ்வாறாக, பௌத்த மதம் இமாலயப் பிரதேசம் முதலாய பல்வேறு பகுதிகளிலும் பரப்பப்பட்டது.

## மகிந்தனது இலங்கை வருகை:

அசோகன் உஜ்ஜயினிக்கு வருமுன் நடந்த கதை - அவந்தி நாடு அசோகன் ஆட்சியில் இருந்தபோது ஒரு முறை அசோகன் வேதீச நகரில் தங்கினான். வேதீச நகரில் தேவி என்னும் பெயருடைய அழகி ஒருத்தியைச் சந்தித்தான். அவள் ஒரு வணிகன் மகள். அவளை அசோகன் மணந்தான். அவள் மூலமாக மகிந்தன் என்னும் மகனையும் இரு ஆண்டு களின் பின் சங்கமித்திரை என்னும் மகளையும் பெற்றான்.

மகிந்தன் துறவு மேற்கொண்டு பன்னிரண்டு ஆண்டு காலம் ஆயிற்று.

மூத்த சிவனுக்கு வயதாகிவிட்டதால் அவரது மகன் அரசனாக வேண்டும் என்னும் நிலை நிலவியது.

மகிந்தன், அவனது குருநாதராலும் புத்த சங்கத்தினராலும் இடப்பட்ட கட்டளையின் பிரகாரம் தன்னுடன் நான்கு தேரர்க ளையும் சங்கமித்திரையின் மகனையும் ஆறு அமானுஷ சக்தி படைத்த சுமணனையும் அழைத்துக்கொண்டு முதலில் தக்சிணகிரியில் உறவினர்களைச் சந்தித்தான்.

மகிந்தன், தாயாரின் ஊரான வேதீசகிரியில் தாயாரைச் சந் தித்தான். தாயார், மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்று அவ னுக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் உணவளித்து, வேதீ சகிரி விகாரை வரையிலும் உடன் வந்தாள்.

மகிந்தன் தாயாருடன் இருந்தபோது தேரர் அவ்விடம் வந்தார், 'உரிய நேரம் வந்துவிட்டது' என்று உணர்ந்தார்.

'என் தந்தையின் ஆணைப்படி நடக்கும் மகத்தான பட்டாபி சேகத்தில் மாமன்னன் தேவனாம்பிரிய தீசன் பங்கு கொள் வான். மும்மணிகளின் மதிப்பை அப்போது தூதுவர் சொல் லக் கேட்டு உணர்வான். ஆனி மாதம் உபோசத தினத்தில் மிசாக மலையில் ஏறுவான். அதே நாளில் அழகிய இலங் கைத் தீவுக்கு நாம் செல்வோம்' என்று எண்ணினான்.

இந்திரன், மகிந்தனிடம், 'இலங்கையை மாற்றப் புறப்படுங் கள். சம்புத்தராலும் இது ஏற்கனவே உங்களுக்குச் சொல்லப் பட்டிருக்கும். அங்கு உங்களுக்கு உதவுபவர்கள் நாங்க ளாக இருப்போம்' என்றான். தேவியின் சகோதரி மகளுக்கு பந்தூகன் என்றொரு மகன் இருந்தான்.

தேரர், ஆனி மாத உபோசத தினத்தில் நான்கு தேரர்களு டனும் சுமணனுடனும் பந்தூகனுடனும் விகாரையிலிருந்து வானில் எழுந்து புறப்பட்டு மிசாகமலையில் (மிகுந்தலை மலை) அம்பத்தலம் என்னும் வெளியில் வந்து இறங்கினர்.

இலங்கைப் பண்டைய வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகா வம்சம் ஆகிய இரு நூல்களிலும் மகிந்தர் இலங்கைக்குப் பயணம் செய்தது, தேவநம்பிய தீசன் என்ற மன்னனை பௌத்தனாக மதம் மாற்றியது குறித்து தகவல்கள் தரப்பட் டுள்ளன. இவை இரண்டுமே மகிந்தர் பற்றிய முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் இலங்கையில் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்தம் பரவியதைக் காட்டுகின்றன.
அசோகரின் மகன் மகிந்தன் இலங்கைக்கு வந்ததாகவும் அசோகரின் மகள் சங்கமித்தை பௌத்த துறவியாகி இலங் கைக்குப் போதி மரத்தைக் கொண்டு வந்ததாகவும் மகா வம்சம் கூறும் தகவலை அசோகர் குறிப்பிடவில்லை.
அத்துடன் சிங்களக் கலையின் தொடக்க கால ஓவியங்கள் அல்லது சிற்பங்கள் இவை பற்றிக் குறிப்பிடவில்லை. மகிந் தன் இலங்கை அரசரை மதம் மாற்றிய வரலாறே கேள்விக் குறியாகியுள்ளது.

புத்தர் பற்றிய பல ஆய்வுகள் மேற்கொண்டவரும் பல பாளி மொழி நூல்களை மொழிமாற்றம் செய்தவரும் செர்மானிய நாட்டைச் சேர்ந்தவருமான இந்தியவியலாளர் பேரா. எர்மன் ஓல்டென்பேர்க், மகிந்தரின் கதையை 'தூய கண்டுபிடிப்பு' என்று கூறியுள்ளார்.

அசோகரும் இந்தியாவின் ஆரம்ப வரலாறும் என்னும் நூலை எழுதிய வி.ஏ. சிமித், இதனை 'அபத்தம்' என்று கூறியுள்ளார்.

தன் மகன் மகிந்தனை பௌத்த மதம் பரப்புவதற்காக கோவி லுக்கு அர்ப்பணிப்பது பற்றியும் இலங்கை அரசரை மதம் மாற்றுவதில் மகிந்தனின் பங்கு பற்றியும் அசோகரின் கல் வெட்டுகளில் கூறப்படவில்லை.

தேவனாம்பிரிய தீசன் வேட்டையாடுவதற்காக நாற்பதாயிரம் பேர்களுடன் மிசாக மலையை (மிகுந்தலை மலை) அடைந் தான். தேரர்களை அவனுக்குக் காட்ட விரும்பிய மலைத் தேவன் மான் உருக்கொண்டு புதரில் நின்றிருந்தான். சாது வான அந்தப் பிராணியைக் கொல்வது சரியல்ல என்று எண் ணிய தேவனாம்பிரிய தீசன் வில்லில் நாண் பூட்டி ஒலி எழுப் பினான். மான் மலையை நோக்கி ஓடியது. (இதுவே இன்று கூறப்படும் கதை). தேவனாம்பிரிய தீசன் மானை விரட்டிச் சென்றான். மான் ஓடிச் சென்று தேரர்கள் அருகில் நின்றது. அரசன் பார்வைக்குத் தேரர் வந்ததும் மான் மறைந்துவிட்டது.

பலரைக் கண்டால் தேவநாம்பிரிய தீசன் பயந்துவிடுவான் என்று நினைத்த தேரர் தன்னை மட்டுமே அவன் காணும்படி நின்றார். அரசனும் அவரைக் கண்டு பயந்து அசைவற்று நின்றான். தேரர் தீசனை அழைத்தார், தேரர், ஆகாய வழியாக வந்தமையை அறிந்து கொண்டான் தேவனாம்பிரிய தீசன். தேரரும் தேவனாம்பிரிய தீசனும் நீண்ட நேரம் பேசிக்கொண் டார்கள்.

ஈற்றில் தேரர் அவனுக்கு குலகதிபதூபம் சித்தாந்தத்தை உபதேசித்தார். உபதேசத்தின் முடிவில் நாற்பதாயிரம் பேர் மும்மணிகளைச் சரணடைந்தனர்.

மாலையில் அரசனுக்கு உணவு கொண்டுவந்தனர். அரசன் பிக்குகளையும் உணவு அருந்தும்படி கேட்டான். அவர்களை





நகருக்கு வரும்படி கேட்டான். அதற்கு அவர்கள், நாம் இங் கேயே தங்குகிறோம் என்றனர். அரசனும் 'நாளை ரதம் அனுப் புகிறேன். வாருங்கள்' என்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

அரசன், பந்தூகனைத் தனியே அழைத்து, தேரர்கள் வந்த நோக்கம் பற்றிக் கேட்டான். அரசன், தேரரின் பெயரைக் கேட்டதும் 'இது என் பாய்க்கியம்' என்று பெருமகிழ்ச்சி அடைந்தான். பந்தூகனுக்கு அந்தக் கிராமத்து எல்லையுள் புத்த தீட்சையும் உபசம்பத தீட்சையும் செய்து வைத்தனர். அவனும் அரஹந்த நிலையை அடைந்தான்.

தேரர், தர்மத்தைப் பிரசாரம் செய்யும் நேரத்தை அறிவிக் கும்படி, சமனேர சுமணனுக்குக் கட்டளையிட்டார். 'நேரம் அறிவிக்கும் போது அது எவ்வளவு தூரம் கேட்கும்படி செய்ய வேண்டும்?' என்று அவன் கேட்டதற்கு, 'தம்மபரணி முழு வதும்' என்றார் தேரர். தம்மபரணி என்னும் பதம் அசோகனின் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### குசராத், கத்தியவாரில் கிடைத்த அசோகரது கிர்னார் இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு:

***'ஸர்வத் விஜிதே(ம்)ஹி தேவாநாம்பிர்யஸ பிர்ய தர்ஸினோ ராஞோ***
***ஏவமபி ப்ர சந்தேஸீ யதா சோடா, பாடா ஸதியபுதோ கேதளபுதோ ஆ தம்ப***
***பர்ணி அன்தியோகோ யோன ராஜா யே வாபி அன் தியகஸ் ஸாமிநோ***
***ராஜானோ ஸவத தேவனாம் பியஸ ப்ரிய (பிய) தஸினோ ராஞோ த்வே சிகீச்சா கதா***
***மனுஸ சிகிச்சா ச பஸீ சிகிச்சா ச ஔஸீதானி ச யாநி மனுசோபதானி ச***
***பஸோ ப கானி ச யத் யத் நாஸ்தி ஸர்வத்ர ஹாரா பிதானி ச ரோபா பிதானிச'***

இதன்பொருள்:
அசோகர், இக்கல்வெட்டிலும் தான் கௌதம புத்தர் எனும் தேவனுக்குப் பிரியமானவன் தேவனாம்பிரியா எனக்குறித் துள்ளார். அசோகர் தமது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டு மின்றி அண்டை நாடுகளான சேர, சோழ, பாண்டிய, சத்திய புத்திரர், கேதளபுதோ, தாமிரபரணி (இலங்கை) கிரேக்க மன்னர் இரண்டாம் ஆண்டியோகஸ் மற்றும் அவருடைய அண்டை நாடுகளுக்கும் இருவகைச் சிகிச்சைகள் அளிக்கப் படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

இதன் மூலம் அசோகன் காலத்தில் தாமரபரணி என்று அறி யப்படும் இலங்கைக்கு பௌத்த மதக் கொள்கைகள் எடுத் துச் செல்லப்பட்டிருக்கின்றன என அறிகிறோம்.

தேரர், வேண்டுகோளுக்கு இணங்க, சமனேர சுமணன், தனது அதிசய சக்தி மூலம் தம்மபாணி முழுவதும் (இலங்கை முழு வதும்) கேட்கும்படி தர்மத்தைப் பிரசாரம் செய்யும் நேரத்தை அறிவித்தான்.

அரசன், நாக சதுக்கத்தில் ஒரு பாறை மீது அமர்ந்து உணவு உட்கொண்டிருந்தான். அவனும் அந்த உரத்த அழைப்பைக் கேட்டான். என்ன நடந்தது என்று மன்னன் கேட்டதற்குத் தேரர், சம்புத்தருடைய போதனை கேட்பதற்காக நேரம் அறி விக்கப்பட்டது என்று பதிலளித்தார்.

இந்த அழைப்பைக் கேட்ட பூமிதேவர்கள் அதனை எதிரொ லித்தனர். அது படிப்படியாக பிரம்ம சொர்க்கத்தை எட்டி யது. ஏராளமான தேவர்கள் வந்து கூடினர். தேரர் அந்தக் கூட் டத்திற்குச் சமசித்த சுத்தத்தை உபதேசித்தார். எண்ணற்ற தேவர்கள் கொள்கைக்கு மாற்றப்பட்டனர். பல நாகர்களும் சுபாணர்களும் திரிசரணத்தை மேற்கொண்டனர் என்று சாரி புத்ரர் சொன்ன போது, தேவர்கள் கூடியது போலவே இப்போது மஹிந்தரிடமிருந்து அதைக் கேட்கவும் கூடினர்.

தேரர்கள் ஆகாய வழியாக நகரின் கிழக்குப் பகுதியில் வந்து இறங்கினார்கள். இங்குதான் முதல் தூபம் பின்னால் கட்டப்பட்டது. தேரர்கள் முதலில் இறங்கிய இடத்தில் கட்டப் பட்ட சேதியம் பிரதம சேதியம் என்று பெயர் பெற்றது.

மஹிந்த தேரர் வந்தபோது அரசன் மஹிந்த தேரரின் கையி லிருந்த பிட்சா பாத்திரத்தைத் தான் வாங்கிக் கொண்டு உப சரித்து வரவேற்றுப் போற்றும் முறைப்படி அவர்களுக்கு வழிகாட்டி நகரத்துக்குள் அழைத்து வந்தான். ஆசனங்கள் தயாராவதைப் பார்த்த நிமித்திகர்கள், 'பூமி இவர்களால் நிறைந்திருக்கிறது. இத் தீவில் இவர்கள் எசமானர்கள் ஆவார்கள்' என்று கூறினார்.

அரசன் தானே அவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு உணவளித்தான். உணவு உண்டு முடிந்ததும் அவர்கள் காலடியில் அமர்ந்து கொண்டு, அரசனின் தம்பியும் உபரா சனுமான மகாநாகனின் மனைவியான அனுலாவுக்குச் சொல்லி அனுப்பினான். அனுலா ஐநூறு பெண்களுடன் வந்து அவரை வணங்கிக் காணிக்கை சமர்ப்பித்து ஒரு பக்கம் ஒதுங்கி நின் றாள். தேரர், பீடவத்து, விமானவத்து, சக்க சம்புக்தம் ஆகிய வற்றை உபதேசித்தார். அது கேட்ட பெண்கள் புனிதமடை வதற்குரிய முதல் நிலையை அடைந்தனர்.

நகர மக்கள் தேரர்களைப் பார்த்தவர்களிடமிருந்து அவர்கள் பெருமைகளை அறிந்தனர். தாமும் தேரர்களைப் பார்க்க விரும்பி அரண்மனை வாயிலில் வந்து ஒன்று கூடி ஆரவாரித் தனர். தேரர் அவர்களைக் காண்பதற்காக யானை கட்டுமிடம் சுத்தரிக்கப்பட்டு, அலங்கரிக்கப்பட்டு அவர்கள் தகுதிக் கேற்ற ஆசனங்கள் தயாரிக்கப்பட்டன. மகா தேரர் மற்றத் தேரர்களுடன் அங்கு சென்று தேவதூத சித்தாந்தத்தை உப தேசித்தார். ஒன்றுகூடியிருந்த நகர மக்களில் ஆயிரம் பேர் அதைக் கேட்டு புனிதம் பெறுவதற்கான முதல் நிலையை அடைந்தனர்.

இவ்வாறாக இலங்கைத் தீவில் தேரர் குருநாதரைப் போல இலங்கையைக் காப்பதற்காக உண்மையான தர்மத்தை இரண்டு இடங்களில் அத்தீவின் மொழியிலேயே உபதேசித் தார். இவ்விதமாக உண்மையான மார்க்கம் அங்கு நிலை பெறச் செய்தார்.

## மஹிந்த தேரர் ஈழத்திற்கு பௌத்த மதத்தைக் கொண்டு வந்த வரலாறு:

இலங்கைப் பண்டைய வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகா வம்சம் ஆகிய இரு நூல்களிலும் மகிந்தர் இலங்கைக்குப் பயணம் செய்தது, தேவநம்பிய தீசன் என்ற மன்னனை பௌத்தனாக மதம் மாற்றியது குறித்து தகவல்கள் தரப்பட் டுள்ளன.

இவை இரண்டுமே மகிந்தர் பற்றிய முதன்மைச் சான்றுக ளாகக் கொள்ளப்படுகின்றன.

கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் இலங்கையில் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்தம் பரவியதைக் காட்டுகின்றன.

அசோகரின் மகன் மகிந்தன் இலங்கைக்கு வந்ததாகவும் அசோகரின் மகள் சங்கமித்தை பௌத்த துறவியாகி இலங் கைக்குப் போதி மரத்தைக் கொண்டு வந்ததாகவும் மகா வம்சம் கூறும் தகவலை அசோகர் குறிப்பிடவில்லை. அத்து டன் சிங்களக் கலையின் தொடக்க கால ஓவியங்கள் அல் லது சிற்பங்கள் இவை பற்றிக் குறிப்பிடவில்லை.

மகிந்தன் இலங்கை அரசரை மதம் மாற்றிய வரலாறே கேள் விக் குறியாகியுள்ளது.

புத்தர் பற்றிய பல ஆய்வுகள் மேற்கொண்டவரும் பல பாளி மொழி நூல்களை மொழிமாற்றம் செய்தவரும் செர்மானிய நாட்டைச் சேர்ந்தவருமான இந்தியவியலாளர் பேரா. எர்மன் ஓல்டென்பேர்க், மகிந்தரின் கதையை 'தூய கண்டுபிடிப்பு' என்று கூறியுள்ளார்.

அசோகரும் இந்தியாவின் ஆரம்ப வரலாறும் என்னும் நூலை எழுதிய வி.ஏ. சிமித், இதனை 'அபத்தம்' என்று கூறியுள்ளார்.

தன் மகன் மகிந்தனை பௌத்த மதம் பரப்புவதற்காக கோவி லுக்கு அர்ப்பணிப்பது பற்றியும் இலங்கை அரசரை மதம் மாற்றுவதில் மகிந்தனின் பங்கு பற்றியும் அசோகரின் கல் வெட்டுகளில் கூறப்படவில்லை.

வரலாற்று நூலைப் படிக்கு முன் வரலாற்று ஆசிரியரைப் படி என்று சொல்வது ஒரு வரலாற்று ஆய்வாளரின் அடிப்படை. இன, மத, மொழி, பண்பாட்டு தன்மைகளுள் அமிழ்ந்து இனம் காணமுடியாது போயிருக்கும் மனிதரின் வரலாற்று உண்மை களைப் பிரித்துப் பார்ப்பது அத்துணை இலகுவானதல்ல.

மகாவம்சம், பொ.ஆ.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட் டதாக அறியப்படுகிறது. பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்ட ளவில் பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது என் பதற்கான வலுவான சான்றுகள் உள. தேவநம்பிய தீசன் கட்டிய மகாவிகாரையில் பௌத்த பிக்குகள் கூடி, பௌத் தம் இந்தியாவில் தோன்றிப் பரவிய வரலாற்றையும் இலங் கையில் பௌத்தம் அறி முகமான வரலாற்றையும் புத்தரது வரலாறு, பௌத்த மதத்தின் தோற்றம், வளர்ச்சி முதலியவற் றையும் இணைத்து பாளி மொழியில் 'அட்டகதா' என்னும் பெயரில் நாட்டார் பாடல்கள் பாடப்பட்டுவந்தன.

அவை ஒரு கட்டத்தில் காலவரிசைப்படுத்தப்பட்டு ஒருங்கி ணைக்கப்பட்டு அட்டகதா-மகாவம்சம் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது. இந்த 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் செய்யுட்களைச் சான்றாகக் கொண்டு பொ.ஆ.பி. 4-ஆம் நூற்றாண்டில் தீபவம்சமும் பொ.ஆ.பி 6-ஆம் நூற்றாண்டில் மகாவம்சமும் தொகுக்கப்பட்டன. மகாவம்சத்தைப் பாளி மொழியில் தொகுத்தவர் மகாநாமதேரோ ஆவார்.

இலங்கையில் பௌத்த மதம் கொண்டுவரப்பட்ட வரலாறு பற்றிய ஆய்வு இத்துடன் நிறைவு பெறுகிறது.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com



tg.theeban@gmail.com

# இனப்படுகொலையின் அரசியல் - 18

# நிகழ்ந்தும் நிகழாத இனப்படுகொலை

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புகள்:**

ஏன் சில கடுமையான குற்றங்கள் நினைவுகூரப்படுகின்றன, கண்டனம் செய்யப்படுகின்றன, தண்டிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் மற்றவை மறக்கப் பட்டுத் தண்டிக்கப்படாமல் விடப்படுகின்றன? இந்தக் கேள்வி முக்கியமானது. இந்தக் கேள்வியை இந்தோனேசியாவின் கதையின் வழி ஆராய இக்கட்டுரை முயல்கிறது. இந்தோனேசியா தருகின்ற மிக முக்கியமான பாடம் அதிகாரம் முக் கியமானது என்பதாகும். வன்முறைக்குக் காரணமானவர்கள் ஆட்சியில் இருக் கும் வரை உண்மையைத் தேடுதல், நீதி, நல்லிணக்கம், இழப்பீடு மற்றும் நினை வுகூருதல் போன்ற செயல்முறைகள் நடக்க வாய்ப்பில்லை என்பதுடன் ஆட்சி அகற்றப்பட்ட பிறகும், அந்தச் செயல்முறைகளை இயக்குவது கடினமாக இருக் கும். பாதிக்கப்பட்டவர்களைக் குறை கூறுதல், பொறுப்பு பற்றிய கேள்வியிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புதல், மாற்று வரலாறுகளை முன்மொழிய அல்லது நீதியைக் கோர ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அதை எதிர்த்தல், அடக்குதல், ஆபத்தை விளைவிக்கும் வரலாற்றின் ஒரு பதிப்பைப் பரப்புவதற்கு ஆட்சி தனது நேரத்தைப் பயன்படுத்தி அது உண்மை என்று பொதுப்புத்தியில் நிறுவ முயற்சித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும். வேறு வார்த்தை களில் கூறுவதானால், மனித உரிமை மீறல்களைப் பெயரிட்டுத் தண்டிக்கும் போராட்டம் போலவே, வரலாற்றின் மீதான போராட்டமும் அதிகாரத்தை உள்ள டக்கியது. இந்தோனேசியாவின் அனுபவம், மௌனமும் செயலற்ற தன்மையும் சர்வதேசச் சூழலின் சிறப்புகளிலிருந்து உருவாகலாம் என்பதையும் அறிவுறுத்து கிறது. இது இலங்கைக்கும் பொருந்தி வருகிறது. இதனாலேயே இந்தோனேசி யாவின் கதையிலிருந்து சில பாடங்களைப் பெற்றுக் கொள்வது முக்கியமானது.

> “வன்முறைக்குக் காரணமானவர்கள் ஆட்சியில் இருக்கும் வரை உண்மையைத் தேடுதல், நீதி, நல்லிணக்கம், இழப்பீடு மற்றும் நினைவுகூருதல் போன்ற செயல்முறைகள் நடக்க வாய்ப்பில்லை என்பதுடன் ஆட்சி அகற்றப்பட்ட பிறகும், அந்தச் செயல்முறைகளை இயக்குவது கடினமாக இருக்கும்.”

சக்திவாய்ந்த அரசுகள் ஏற்றுக்கொண்ட நிலைப்பாடு, மனித உரிமைகள் தொடர் பாக நடைமுறையில் உள்ள சர்வதேச விதி முறைகள், நாடுகடந்த சிவில் சமூக வலைப்பின்னல்களின் வலிமை, மனநிலை உட்பட எல்லாம் இதில் பங்காற்றும்.

இந்தோனேசியாவின் கதை, இவற்றில் முதலாவதான சக்தி வாய்ந்த நாடுகளின் நிலைப்பாடு தெளிவானதாக இருக்கும் போது இனப்படுகொலையை நிறுவுவது மிகக் கடினமானது என்பதைக் காட்டுகிறது. மேலும் மேற்குலக நலன்கள் குற்றங்களின் வெளிப்படுத்தலை ஆதரிக்காத இடங்களில், சர்வதேச விதிமுறைகளும் சிவில் சமூக வலைப்பின்னல்களும் குறைவான விளைவையே ஏற்படுத்தும் என்ற ஏமாற்றமளிக்கும் உண்மையை எடுத்துக்காட்டுகிறது.

இவை இந்தோனேசியா விடயத்திலும் அதைப் போன்ற பிற நாடுகளின் விஷயத்தில் அறிஞர்களும் குடிமக்களும் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியை எழுப்புகின்றன. இந்தக் குற்றங்களும் இதே போன்ற குற்றங்களும் அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கவனிக்கப்படாமலும் தண்டிக்கப்படாமலும் இருக்க அனுமதித்த பயங்கரமான மௌனத்தையும் அறியாமையையும் சீர்குலைக்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். இது ஒரு சாத்தியமற்ற நம்பிக்கை போலத் தெரிந்தாலும், எதுவும் செய்யாமல் இருப்பதை விட இது மேலானது. கடந்த ஒரு நூற்றாண்டுகால இனப்படுகொலை வரலாற்றில் மேற்குலக நலன்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களித்துள்ளன. பலவற்றில் இம்மேற்குலகச் சக்திகளின் இரத்தம் தோய்ந்த கரங்கள் உள்ளன. அந்தக் கரங்களில் எமக்கான நீதியை எதிர்பார்ப்பது என்பது எவ்வளவு அபத்தமானது என்பதை வரலாறு காட்டியுள்ளது. ஆனாலும் அதேபாதையில் தான் தொடர்வது என்று முடிவெடுத்துவிட்டவர்களின் முடிவுகள் துன்பியல் நாடகமாக நிறைவடைந்துள்ளன.

### இந்தோனேசியாவின் கதை:

1965-ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 1966-ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையிலான ஆறு மாதக் காலத்தில், இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் அதன் துணை அமைப்புகளைச் சேர்ந்த சுமார் ஒரு மில்லியன் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். மேலும் ஒரு மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்டோர் குற்றச்சாட்டு ஏதும் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டனர். சிலர் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடினர். அவர்களில் பலர் சித்திரவதைகளுக்கும் பிற மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்குக்கும் உட்படுத்தப்பட்டனர். கொல்லப்பட்ட, தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைவருமே அந்த நேரத்தில் சட்டபூர்வமான அரசியல் அல்லது சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் சட்டவிரோதச் செயல்களைச் செய்யவில்லை, சட்டவிரோதமான அமைப்பில் உறுப்பினர்களாக இருக்கவில்லை. ஆனாலும் கொல்லப்பட்டார்கள், சித்திரவதைகளுக்கு ஆளானார்கள். இது ஒரு உள்நாட்டு போர் அல்ல. இருபதாம் நூற்றாண்டில் நடந்த மிகப்பெரிய, ஆனால் மிகக் குறைவாக ஆராயப்பட்ட கூட்டுக் கொலைகள், சிறைவாச நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும். இந்தத் திட்டமிட்ட வன்முறையின் விளைவுகள் பாரதூரமானவை. ஒரு வருடத்திற்குள், உலகின் மிகப்பெரிய அரசு சாராக் கம்யூனிஸ்ட் கட்சி நசுக்கப்பட்டது, மேலும், நாட்டின் பிரபலமான இடதுசாரி தேசிய வாத ஜனாதிபதி சுகர்னோ அகற்றப்பட்டார். அவர்களின் இடத்தினை, ஒரு கடுமையான கம்யூனிச எதிர்ப்பு இராணு வத் தலைமை அதிகாரத்தைக் கைப்பற்றியது. இது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இராணுவ ஆதரவுடன் நிகழ்ந்த சர்வாதிகார ஆட்சியின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்தப் படுகொலையிலிருந்து வெளிப்பட்ட புதிய ஒழுங்கு (New Order) என்று அழைக்கப்படும் அரசு, குறிப்பாகக் கிழக்கு திமோர், ஆச்சே, மேற்கு பப்புவா உள்ளிட்ட இந்தோனேசியாவின் மையப்பகுதிக்கு வெளியே உள்ள தீவுப்பகுதிகளில் கொடூரத்தை அரங்கேற்றியது. அங்கு அடுத்த சில தசாப்தங்களில் இலட்சக்கணக்கான மக்கள் அரசாங்கப் படைகளால் இறந்தனர் அல்லது கொல்லப்பட்டனர்.

> ***இந்தோனேசிய வன்முறைகளும் படுகொலைகளும் சர்வதேச அரங்கிலோ, இனப்படுகொலைகள் தொடர்பான ஆய்வுகளிலோ, வரலாற்று வரைவியலிலோ இல்லை. அவை முழுமையாக மறைக்கப்பட்டுள்ளன.***



இந்த வன்முறை இந்தோனேசியாவின் அரசியல் சமூக நிலப் பரப்பை அடிப்படை வழிகளில் மாற்றியமைத்தது. விமர்சனச் சிந்தனையையும் எதிர்ப்பையும் இல்லாமலாக்கியது. குறிப் பாக இடதுசாரிகளை முடக்கியது. அதிருப்தியுற்றாலும் தீவிரச் சகிப்புத்தன்மையுடன் இருக்கப் பழக்கியது. தீவிர இராணுவ வாதத்தின் மரபை விட்டுச் சென்றது. மிக முக்கியமாக, 1965-66 நிகழ்வுகள் கொல்லப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட் டவர்களின் குடும்பங்களையும் அவர்களுடன் தொடர்புடைய வர்களையும் அதிகாரப்பூர்வமாகக் களங்கப்படுத்தியது. இது பல மில்லியன் மக்களின் வாழ்க்கையை அழித்துவிட் டது. இப்போதும் கூட, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக - இந்தோனேசியா ஜனநாயகத்திற்கு மாறத் தொடங்கிய சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் - இந்தோனேசியச் சமூகம் அந்த நிகழ்வுகளிலிருந்து விடுபட இயலாத ஆழ மான வடுக்களைக் கொண்டுள்ளது. ஆனாலும், இவை சர்வ தேசக் கவனத்தை இன்றுவரை பெறவில்லை. இந்தோனே சிய வன்முறைகளும் படுகொலைகளும் சர்வதேச அரங் கிலோ, இனப்படுகொலைகள் தொடர்பான ஆய்வுகளிலோ, வரலாற்று வரைவியலிலோ இல்லை. அவை முழுமையாக மறைக்கப்பட்டுள்ளன. இது ஏன் நிகழ்ந்தது என்பதே இங்கு எழுகின்ற வினா.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, இந்தோனேசியாவில் நடந்த கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான படுகொலை கள் 20-ஆம் நூற்றாண்டின் மிக மோசமான படுகொலைகளில் ஒன்றாகக் கருதப்படுகின் றன. சில அறிஞர்கள் இந்தோனேசிய வன் முறையை இனப்படுகொலை என்று விவரித் துள்ளனர். இதற்குப் பொருத்தமான ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். உலக வர லாற்று நிகழ்வுகளை ஆண்டுரீதியாக வரி சைப்படுத்தும் உலக வரலாற்று வலைத் தளங்களில் 1965-ஆம் ஆண்டு நிகழ்ந்த நிகழ்வுகளில் இந்த இனப்படுகொலைகள் குறித்த எந்தவொரு குறிப்பும் இல்லை. இவை இந்தோனேசியாவில் ஒரு மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதைக் குறிப்பிடத் தவறிவிட்டன. இந்தோனேசி யாவிற்குள் கூட, 1965-66 நிகழ்வுகள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. கடந்த பத்தாண்டுகளில் தான் இது குறித்த குறைந்தபட்சக் கவனம் ஏற்பட்டுள்ளது. இரு பதாம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட ஒவ்வொரு இனப்படு கொலையையும் தொடர்ந்து வந்த சாட்சியங்கள், நினைவுக் குறிப்புகள், உண்மையைச் சொல்லுதல், தடயவியல் விசார ணைகள் இவற்றை இனப்படுகொலைகளாக நிறுவுவதற்கா கன வாய்ப்பையும் அது குறித்த சர்வதேசக் கவனத்தையும் ஈர்த்துள்ளன. இந்தோனேசியாவில் இந்தச் செயன்முறை அரிதாகவே தொடங்கியுள்ளது. மேலும், கடந்த நூற்றாண்டின் பெரும்பாலான படுகொலைக் குற்றங்கள் (இனப்படுகொலை, மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள்) ஏதோவொரு வகையில் தண்டிக்கப்பட்டுள்ளன. மாறாக, இந் தோனேசியாவில் நிகழ்த்தப்பட்ட இந்தக் குற்றங்கள் ஒரு போதும் தண்டிக்கப்படவில்லை, குறைந்தபட்சம் அவை முறையாக விசாரிக்கப்படவில்லை, சர்வதேச அமைப்பு களோ, பிற நாடுகளோ அத்தகைய நடவடிக்கைக்கு எந்தத் தீவிரமான அழைப்புகளும் விடுக்க வில்லை. சுருங்கச் சொல்லின் சர்வதேசச் சமூகம் மௌனம் காக்கிறது.

> ***“60 ஆண்டுகளுக்கும் மேலாக - இந்தோனேசியா ஜனநாயகத்திற்கு மாறத் தொடங்கிய சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் - இந்தோனேசியச் சமூகம் அந்த நிகழ்வுகளிலிருந்து விடுபட இயலாத ஆழமான வடுக்களைக் கொண்டுள்ளது.”***

இன்று இந்தோனேசியாவில் நிகழ்ந்தது குறித் துக் கவனம் குவிக்கக் கோருவோர் சில அடிப்படையான விடயங்களில் கவ னம் செலுத்த வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறார்கள். எத்தனை பேர் கொல் லப்பட்டார்கள், எத்தனை பேர் தடுத்து வைக்கப்பட்டனர்? பாதிக்கப்பட்டவர்கள் யார், அவர்கள் எப்படி இறந்தனர்?



குற்றவாளிகள் யார், அவர்களைத் தூண்டியது எது? தடுத்து வைக்கப்பட்ட இலட்சக்கணக்கானவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் என்ன நடந்தது? இந்த அடிப்படைக் கேள்விகள் - நமக்குள்ள தகவல்களில் உள்ள குறிப்பிடத் தக்க இடைவெளிகளுக்குச் சான்றாகும் - அவசரமாகப் பதிலளிக்கப்பட வேண்டும். இவை அவசரமானவை என்று அவர்கள் குறிப்பதற்குக் காரணம், காலம் செல்லச்செல்ல இந்த நிகழ்வுடன் தொடர்புடைய நம்பகமான சாட்சிகள், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை என்பன ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வரும். இந்தோனேசியாவில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மிக முக்கியமாக, பின்வரும் கேள்விகளைக் கேட்கிறது. இந்த அசாதாரண வன்முறை எப்படி, ஏன் நடந்தது? இந்தோனேசியச் சமூகத்திற்கு வன்முறையின் விளைவுகள் என்ன? இடைப்பட்ட ஆண்டுகளில் ஏன் அதைப் பற்றி மிகக் குறைவாகவே பேசப்பட்டது அல்லது செய்யப்பட்டது?

இதை விளங்கிக் கொள்ள இந்தக் கொலைகளைத் தூண்டிய காரணிகளுக்கான வரலாற்றைப் பார்ப்பது அவசியம். இந்தோனேசியச் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி (இ.க.க) முக்கியப் பாத்திரம் வகித்தது. 1950-களில் இரண்டு மில்லியன் இந்தோனேசியர்கள் கட்சியின் உத்தியோகபூர்வ உறுப்பினர்களாக இருந்தார்கள். இன்னும் பலர் கட்சியோடு இணைந்த அமைப்புகளில் உறுப்பினர்களாக இருந்தனர். 1965-இல் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்று மில்லியனுக்கும் அதிகம். சோவியத் யூனியனுக்கும், சீனாவுக்கும் அடுத்தபடியாக அதிகளவான உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியாக இது இருந்தது. 1955-ஆம் ஆண்டுத் தேர்தலில் 16 வீதமான வாக்குகளைப் பெற்று நான்காவது பெரிய கட்சியாக இது திகழ்ந்தது. ஜனநாயக மத்தியத்துவத்தை முன்னிலைப்படுத்திய ஜனாதிபதி சுகர்னோவுக்கு ஆதரவு தெரிவித்தது. இ.க.க.-யின் செல்வாக்குக் காரணமாக 1957 முன்னாள் கொலனியாதிக்கவாதிகளான டச்சுக்காரரின் வசமிருந்த நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. பல இ.க.க.-வின் தொழிற்சங்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. 1950-களின் இறுதிப்பகுதியில் மிகவும் ஒழுக்கமான, ஊழலில்லாத ஒரே கட்சியாக இ.க.க. அறியப்பட்டது. இந்தோனேசியர்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்தது. 1958-இல் அமெரிக்க ஆதரவுடன் ஒரு சதிப்புரட்சி அரங்கேறினாலும் வெற்றிபெறவில்லை. இந்நிலையில் அமெரிக்கத் துணை ஜனாதிபதியாக இருந்த ரிச்சட் நிக்சன் ‘இந்தோனேசியாவிற்கு ஜனநாயக அரசாங்கம் என்பது பொருத்தமானதல்ல’ என்று கருத்து தெரிவித்தார்.

ஒக்ரோபர் 1, 1965 அதிகாலை, ஆறு மூத்த இந்தோனேசிய இராணுவ ஜெனரல்களும் ஒரு லெப்டினன்ட்டும் செப்டம்பர் 30 இயக்கம் என்ற குழுவைச் சேர்ந்த கீழ்நிலை அதிகாரிகள் குழுவால் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டனர். அமெரிக்கச் சி.ஐ.ஏ-யின் ஆதரவு பெற்ற ‘ஜெனரல்கள் கவுன்சில்’ திட்டமிட்ட ஆட்சிக் கவிழ்ப்பைத், தடுக்கத் தாம் செயல்பட்டதாகவும், ஜனாதிபதி சுகர்னோவுக்கு விசுவாசமாக இருப்பதாகவும் அந்த இயக்கம் கூறியது. அந்தக் கூற்றுகளைப் புறக்கணித்து, மேஜர் ஜெனரல் சுகார்ட்டோ தலைமையிலான எஞ்சியிருக்கும் இராணுவத் தலைமை, இந்த இயக்கம் இ.க.க.-வால் வழிநடத்தப்படுகிறது என்று சொல்லியதோடு இ.க.க.-வை முழுமையாக அழித்து, அக்கட்சியின் மீது மிகவும் அனுதாபம் கொண்டவர் என்று அவர்கள் கருதிய ஜனாதிபதி சுகர்னோவை அதிகாரத்திலிருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியது. 1966-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சுகர்னோவின் அதிகாரம் கடுமையாகக் குறைக்கப்பட்டது, இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. இ.க.க உள்ளிட்ட அனைத்து இடதுசாரி அமைப்புகளும் அழிக்கப்பட்டன. மார்க்சிஸ்ட்-லெனினிச போதனைகள் முறையாகத் தடை செய்யப்பட்டன.

இடதுசாரிகள் மீதான தாக்குதலில் இராணுவத் தலைமை அரசியல், நீதித்துறை, இராணுவம் எனப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தியது. உதாரணமாக, ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடந்ததாகக் கூறப்படும் சில நாட்களுக்குள், இ.க.க ஜெனரல்களைக் கொன்றதற்காகக் குற்றம் சாட்டியது. அதிகாரத்தை வலுக்கட்டாயமாகக் கைப்பற்ற இ.க.க முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டி, துரோகிகளை ‘வேர் வரை’ நசுக்க இராணுவத்திற்கு உதவுமாறு மக்களைக் கேட்டு ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியது. இருப்பினும், மிக முக்கியமான உத்தி வன்முறை பிரச்சாரமாகும், இது நேரடி கொலை, கைது, தடுப்புக்காவல், சித்திரவதை, பாலியல் பலாத்காரம் ஆகியவற்றை உள்ளடக்கியது. அந்த வன்முறைக்குத் தனித்துவமான வடிவங்கள் இருந்தன. அவற்றை ஆழமாக நோக்கின் அதன் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலில் இராணுவத் தலைமையின் மையப் பங்கை வலுவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

கூட்டுக் கொலைகள் மற்றும் இனப்படுகொலை தொடர்பான பல வழக்குகளுக்கு முற்றிலும் மாறாக, இந்தோனேசியாவில் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் இனம், தேசியம் அல்லது மதம் காரணமாகக் குறிவைக்கப்படவில்லை. மாறாக, அவர்களின் உண்மையான அல்லது கூறப்படும் அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். மேலும், கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் சாதாரண மக்களாக - விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், தினக்கூலிகள், பள்ளி ஆசிரியர்கள், கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் - இருந்தனர். கைதுகளும் மரண தண்டனைகளும் பெரும்பாலும் இராணுவத்தாலும் காவல்துறையினராலும் செய்யப்பட்டாலும், பலவற்றை வலதுசாரி அரசியல் கட்சிகளுடன் இணைந்த ஆயுதமேந்திய பொதுமக்களும் ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தோரும் நடத்தினர். இதற்கு இராணுவத்தின் முழுமையான ஆதரவு இருந்தது.

> “ *1966-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சுகர்னோவின் அதிகாரம் கடுமையாகக் குறைக்கப்பட்டது, இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. இ.க.க உள்ளிட்ட அனைத்து இடதுசாரி அமைப்புகளும் அழிக்கப்பட்டன. மார்க்சிஸ்ட்-லெனினிச போதனைகள் முறையாகத் தடை செய்யப்பட்டன.* ”

இந்தக் கொலைகளும் கைதுகளும், சித்திரவதைகளும் இ.க.க.-வை முழுமையாக அழிக்கும் நோக்குடையது என்பது விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. 1965-ஆம் ஆண்டளவில், இ.க.க பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், கலாசாரச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பிற குழுக்களுக்கான இணைக்கப்பட்ட வெகுஜன அமைப்புகளில் 20 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் மிகவும் சக்திவாய்ந்த பிரபலமான அரசியல் கட்சியாக இது இருந்தது. ஜனாதிபதி சுகர்னோவிற்கு நெருக்கமாயும், பெய்ஜிங்குடன் அதிகரித்து வரும் நட்பு உறவுகளையும் கொண்டிருந்தது. இந்தோனேசிய ஆயுதப் படைகளுக்குள், குறிப்பாக விமானப்படையில் ஆதரவையும் கொண்டிருந்தது.

இந்தோனேசிய இராணுவத்தின் பெரும்பகுதியினரும், பல மதச்சார்பற்ற கட்சிகளும் மதக் கட்சிகளும் இ.க.க.-விற்கு எதிராக அணிவகுத்தன. இவற்றில் முக்கியமான வையாகவும் சக்திவாய்ந்தவையாகவும் இருந்த இஸ்லாமிய அறிஞர்கள் கவுன்சிலும் மதச்சார்பற்ற இந்தோனேசியத் தேசியவாதக் கட்சியின் வலதுசாரிக் குழுவும் பிரதானமானவை. இந்தக் குழுக்கள் பல விஷயங்களில் வேறுபட்டிருந்தாலும், அவர்கள் இ.க.க.-விற்கு எதிரான ஆழ்ந்த விரோதத்தைப் பகிர்ந்து கொண்டனர். சுருக்கமாகச் சொன்னால், 1965-இல், இந்தோனேசியா ஆழமாகப் பிளவுபட்டது. பெரும்பாலும் இடது-வலது (அல்லது இன்னும் துல்லியமாக, கம்யூனிஸ்ட்-கம்யூனிச எதிர்ப்பு) என்ற அச்சில் அவை இயங்கின. இந்த உட்பிளவுகள் பரந்த சர்வதேச மோதல்கள் மற்றும் கெடுபிடிப்போரின் இயங்கியலால் மேலும் தீவிரமடைந்தன. இந்தோனேசியா ஆரம்பகால அணிசேராக் கொள்கையை ஆதரிக்கும் நாடாக இருந்தபோதிலும், 1960-களின் முற்பகுதியில் இந்தோனேசியா குறிப்பிடத்தக்க அளவில் - மேற்கத்திய நாடுகளின் பார்வையில், ஆபத்தான முறையில் - இடதுபுறமாக மாறியது. உதாரணமாக, 1963 மற்றும் 1965-க்கு இடையில், ஜனாதிபதி சுகர்னோ பெய்ஜிங்குடன் அதிகளவில் நல்லுறவை நாடினார். வியட்நாமில் அமெரிக்கத் தலையீட்டிற்கு எதிராகக் கடுமையான தாக்குதல்களைத் தொடங்கினார். ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து விலகினார், மேலும் இந்தோனேசியாவைச் சுற்றி வளைத்துப் பலவீனப்படுத்தப் பிரித்தானியா உள்ளிட்ட ஏனைய ஏகாதிபத்தியச் சக்திகளால் உருவாக்கப்பட்டதாகச் சுகர்னோ கூறிய மலேசியாவின் புதிய

> “
> ***1940-களின் பிற்பகுதியிலிருந்து, அமெரிக்க அரசாங்கம் இ.க.க.-வை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும், ஜனாதிபதி சுகர்னோவைப் பலவீனப்படுத்தவோ அல்லது அகற்றவோ விடாமுயற்சியுடன் செயல்பட்டது. இந்தோனேசியாவின் 1955 தேசியத் தேர்தல்களில் கம்யூனிச எதிர்ப்பு அரசியல் கட்சிகளை மறைமுகமாக ஆதரித்தது. 1957-58-இல் அரசாங்க எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கும் ஒரு இரகசிய நடவடிக்கையைச் சி.ஐ.ஏ முன்னெடுத்தது.***
> ”



அரசுக்கு எதிராக மோதலையும் அரசியல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். இந்த எல்லாக் காரணங்களுக்காகவும், அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இந்தோனேசியாவை ஒரு பெரிய பிரச்சனையாகக் கண்டன. உண்மையில், 1965 கோடையில், இந்தோனேசியா கம்யூனிஸ்டுகளிடம் விழப்போகிறது என்று அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகள் உறுதியாக நம்பினர். ஜூலை 1965-இன் பிற்பகுதியில் சி.ஐ.ஏ இயக்குநர் அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜான்சனுக்கு இவ்வாறு எழுதினார்: ‘இந்தோனேசியா எதிர்காலத்தில் ஒரு கம்யூனிச நாடாக மாறும் போக்கில் இறங்கியுள்ளது, இந்தப் போக்கு தலைகீழாக மாற்றப்படாவிட்டால் ஆபத்து காத்திருக்கிறது’.

இத்தகைய அமெரிக்காவின் கவலைகள் புதியவை அல்ல. 1940-களின் பிற்பகுதியிலிருந்து, அமெரிக்க அரசாங்கம் இ.க.க.-வை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும், ஜனாதிபதி சுகர்னோவைப் பலவீனப்படுத்தவோ அல்லது அகற்றவோ விடாமுயற்சியுடன் செயல்பட்டது. உதாரணமாக, இந்தோனேசியாவின் 1955 தேசியத் தேர்தல்களில் கம்யூனிச எதிர்ப்பு அரசியல் கட்சிகளை மறைமுகமாக ஆதரித்தது. 1957-58-இல் அரசாங்க எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கும் ஒரு இரகசிய நடவடிக்கையைச் சி.ஐ.ஏ முன்னெடுத்தது. அந்த நடவடிக்கை தோல்வியடைந்தபோது, இராணுவத்தின் அரசியல் நிலையை வலுப்படுத்த வடிவமைக்கப்பட்ட இராணுவ உதவி மற்றும் பயிற்சித் திட்டங்களை அமெரிக்கா முன்னெடுத்தது. இந்தச் சூழ்நிலையில், அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் 1965-ஒக்ரோபருக்குப் பிறகு இடதுசாரிகள் மற்றும் சுகர்னோவுக்கு எதிரான இராணுவத்தின் பிரச்சாரத்தை வரவேற்றதில் ஆச்சரியமில்லை. இந்தப் பிரச்சாரத்திலும் அதன் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் இந்தோனேசியாவும் பிற பெரிய சக்திகளும் இராணுவத்திற்கு ஆர்வத்துடன் உதவியதில் பெரிய ஆச்சரியம் எதுவும் இருக்கமுடியாது.

அந்தக் காலகட்டத்தின் மேற்குலகின் மன நிலையைப் படம்பிடித்து, டைம்ஸ் பத்திரிகை, இ.க.கவின் அழிவையும் இராணுவத்தின் எழுச்சியையும் ‘ஆசியாவில் பல ஆண்டுகளுக்குப் பிற்கு, மேற்கத்திய நாடுகளிற்குக் கிடைத்த சிறந்த செய்தி’ என்று விவரித்தது, மேலும் இந்த விஷயத்தில் நியூயார்க் டைம்ஸ் செய்தி ‘ஆசியாவில் ஒரு விடிவின் ஒளி’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இந்த மகிழ்ச்சியான மதிப்பீடுகளுக்கான காரணத்தை அடையாளம் காண்பது கடினம்

> **இந்தோனேசியாவில் நடைபெற்ற குற்றங்களுக்கான விசாரணைகளுக்கான கோரிக்கைகள் எழும்போதெல்லாம், இது மக்களுக்கு எதிரானது என்ற கோஷம் முன்னெழுகிறது. தேசத்திற்கும் தேச நலனிற்கும் எதிரானது என்ற கதையாடல்கள் முனைப்படைகின்றன.**

அல்ல. கெடுபிடிப்போரின் பின்னணியிலும், வியட்நாமிய போர் வரவிருக்கும் பின்னணியிலும், இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று கைது செய்தது உலகின் மிகப்பெரிய வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. அது மிகவும் வெற்றிகரமான கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒன்றின் அழிவுக்குச் செலுத்த வேண்டிய ஒரு சிறிய விலையாகக் கருதப்பட்டது.

அடுத்த சில தசாப்தங்களிற்கு, அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் மேஜர் ஜெனரல் சுகார்ட்டோவின் சர்வாதிகார ஆட்சியின் உறுதியான ஆதரவாளர்களாகவே இருந்து, அதற்குப் பொருளாதார, இராணுவ உதவிகளை வழங்கினர். அதன் மோசமான மனித உரிமைகள் பதிவு குறித்த உள்நாட்டு மற்றும் சர்வதேச விமர்சனங்களை எதிர்கொண்டு அதை விசுவாசமாகப் பாதுகாத்தன. வன்முறையில் தனது சொந்தப் பங்கை மறைக்க அமெரிக்க அரசாங்கமும் அசாதாரண முயற்சிகளை மேற்கொண்டது. அதற்காகப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டன. இவை இந்தக் கொலைகளை 'ஜனநாயகத்தினதும் மனித உரிமைகளினதும் பாதுகாப்புக்குத் தேவையான செயல்கள்' என நியாயப்படுத்தின.

1998-இல் பரவலான மக்கள் போராட்டங்களுக்கு மத்தியில் சுகார்ட்டோ ராஜினாமா செய்தார். இது 1965-66 நிகழ்வுகள் குறித்து விசாரணை, அந்தக் காலகட்டத்தின் வரலாற்றை மறுபரிசீலனை செய்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு மற்றும் இழப்பீடு, நல்லிணக்கம் மற்றும் நீதி ஆகியவற்றுக்கான துடிப்பான கோரிக்கைகளைத் தூண்டியது. ஆனால் அவற்றுக்கான அரசியல் ஆர்வம் குறைவாகவே இருந்தது. 2004-ஆம் ஆண்டில், உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணையத்தை நிறுவுவதற்கான ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது, மேலும் 2012-ஆம் ஆண்டில் நாட்டின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1965-66 வன்முறை குறித்து விரிவான அறிக்கையை வெளியிட்டது, மேலும் விசாரணைகளை நடத்திப் பொறுப்பானவர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கச் சட்டமா அதிபரைக் கேட்டுக் கொண்டது. ஆனால், இந்த முயற்சிகள் அரசாங்க உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், சிவில் சமூகக் குழுக்களிடமிருந்து கோபமான எதிர்ப்பைச் சந்தித்துள்ளன. இன்றுவரை இதுதான் நிலைமை.

1965-66 வன்முறையைத் தூண்டிவிட்டு, இராணுவச் சர்வாதிகார ஆட்சியை முழுமையாக ஆதரித்த மேற்குலக நாடுகள், பல ஆண்டுகளுக்குப் பிறகும் தங்கள் பங்கு அல்லது அந்தக் குற்றங்களைத் தீர்க்க வேண்டிய அவசியம் குறித்து மௌனமாகவே உள்ளன. இதன் விளைவாக, வன்முறை தொடங்கி ஆறுபது ஆண்டுகளுக்கும் மேலாகியும், இந்தோனேசியாவில் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகள் ஏற்படவில்லை.

இனப்படுகொலை, கூட்டுக் கொலைகள் என்பவை அரசியல் நோக்கங்களுடன் செயல்படுபவர்களால் (மக்களாலும் நிறுவனங்களாலும்) தொடங்கப்பட்ட அரசியல் செயல்கள் என்ற வாதம் மிகவும் முக்கியமானது. அதாவது, இனப்படுகொலைகள் வெறுமனே நடப்பதில்லை. அவை சமூகப் பொருளாதார அல்லது கலாச்சார மோதல்களின் 'இயற்கையான' துணை விளைபொருள் அல்ல. மாறாக அரசியல், இராணுவத் தலைவர்களின் வேண்டுமென்றே திட்டமிட்டு அரங்கேற்றிய செயல்களின் விளைவாகும். கூட்டுக் கொலைகளில் மக்கள் பங்கேற்பும் இக்கொலைகளுக்கான மக்களின் உடன்பாடும் அரசியல், இராணுவத் தலைவர்களின் வழிநடத்தலாலேயே நிகழ்கிறது என்கிற உண்மையைத் திசைதிருப்ப அனுமதிக்கக் கூடாது என்பதே இந்தோனேசியா தரும் பாடமாகும்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற குற்றங்களுக்கான விசாரணைகளுக்கான கோரிக்கைகள் எழும்போதெல்லாம், இது மக்களுக்கு எதிரானது என்ற கோஷம் முன்னெழுகிறது. தேசத்திற்கும் தேச நலனிற்கும் எதிரானது என்ற கதையாடல்கள் முனைப்படைகின்றன. குற்றங்களில் இராணுவத்தின் பிரதானப் பங்கும் அதனோடு இணைந்த ஏனையோரின் பங்கும் பொதுமக்களினுடையதாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் இக்குற்றங்கள் குறித்த விசாரணைகளுக்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. இவ்வகைப்பட்ட மக்களைக் குற்றவாளிகள் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள் என்ற கதையாடல்கள் முற்றிலும் உளவியல் மற்றும் சமூக இயக்கவியலில் இருந்து கவனத்தைத் திருப்பி, கூட்டுக் கொலைகளை இயக்கும் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களின் அரசியல் செயல்களுக்கு, அவற்றை மேற்கொள்ள ஊக்கத்தையும் வழிமுறைகளையும் வழங்கும். இது கூட்டுக் கொலைகள் நடக்க அனுமதிக்கும் கட்டமைப்பு நிலைமைகளைத் தக்க வைக்க உதவுகிறது. எனவே அத்தகைய செயல்களுக்கான சட்ட, அரசியல் பொறுப்பு பற்றிய முக்கியக் கேள்வியில் நமது கவனத்தைச் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இது முன்மொழிகிறது.

இனப்படுகொலை மற்றும் மக்கள்தொகையொன்றின் மீதான வன்முறையைத் தூண்டுவதில் சித்தாந்தத்தின் முக்கியத்துவத்தையும் வரலாற்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக, வெகுஜன அரசியல், இனத் தூய்மை பற்றிய கருத்துக்கள், புரட்சிகரக் கற்பனாவாதச் சித்தாந்தங்களின் தனித்துவமான கலவையானது இருபதாம் நூற்றாண்டின் மோசமான இனப்படு கொலைகளைத் தூண்டியது என்பது வெளிப்படை. இனவெறி, தேசியவாதம் மற்றும் நவீனத்துவத்தில் வேரூன்றிய சித்தாந்தங்களின் முக்கியத்துவத்தை - அரசுக்கு ஓர் இருத்தலியல் அச்சுறுத்தல் குறித்த அச்சங்களுடன் சேர்ந்து - இனவெறியின் ஒரு தொடக்கத்தையும் இயக்கவியலையும் இனப்படுகொலை தொடர்பான ஆய்வுகள் வெளிக்காட்டியுள்ளன. அரச சித்தாந்தத்தின் முக்கியத்துவத்தை மறுக்க முடியாது என்றாலும், இந்தோனேசியாவின் கதைப் புரட்சிகரக் கற்பனாவாதம் மற்றும் இனத் தூய்மையின் முக்கியத்துவம் குறித்த கதையல்ல. இந்தோனேசியாவின் சுகர்ட்டோவின் இராணுவச் சர்வாதிகாரச் சித்தாந்தத்

தைக் கற்பனாவாதமாகவோ அல்லது புரட்சிகரமாகவோ வகைப்படுத்த முடியாது, மேலும் அது எந்த வகையிலும் இனத் தூய்மையின் கருத்துக்களில் வேரூன்றவில்லை. இராணுவத் தலைமையும் அதன் கூட்டாளிகளும் கற்பனை செய்த தேசத்திற்கு இருத்தலியல் அச்சுறுத்தல் ஒரு குறிப்பிட்ட இன அல்லது இனக்குழுவிலிருந்து வரவில்லை, மாறாக ஒரு அரசியல் குழுவிடமிருந்து அதன் சித்தாந்தத்திலிருந்து வந்தது. எனவே இ.க.கவின் சவாலுக்கான தீர்வு இனச் சுத்திகரிப்பு அல்ல என்பதால் அதை இனவழிப்பு என்று கொள்ள முடியாது என்று வாதிடுவோர் உண்டு. அவர்கள் அதைப் புரட்சிகர மாற்றம் என்று அழைப்பர். மேற்குலகும் அவர்தம் ஆதரவு சிவில் சமூகக் குழுக்களும் இன்றளவும் இந்தக் கதையாடலையே முன்வைக்கின்றன. ஆனால் அங்கு நடந்தது மரணதண்டனை, சிறைவாசம், அடக்குமுறை மற்றும் பிரச்சாரம் மூலம் எதிர்கருத்து அரசியல் வகையை அகற்றுவதாகும். எனவே, 1965-66-இல் நடந்த பரந்த வன்முறையையும், பின்னர் ஆச்சே, கிழக்கு திமோர், பப்புவா மற்றும் பிற இடங்களில் நடந்த வன்முறையையும் தூண்டியதாக ஏதேனும் ஒரு சித்தாந்தம் கூற முடியுமானால், அது அரசுக்கான இருத்தலியல் அச்சுறுத்தலாக இடதுசாரிகளைச் சித்தரித்த ஒரு கதையாடாலாகும். இது கடுமையான, வெறித்தனமான கம்யூனிச எதிர்ப்பு மற்றும் இராணுவவாதத்தின் சித்தாந்தத்தில் மையங்கொண்டிருந்தது.

இந்தக் கொலைகள் இன்றுவரை மறைக்கப்படுவதற்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது. அது கெடுபிடிப்போரின் கதை. இந்தோனேசியாவில் நிகழ்வதற்கு ஓராண்டுக்கு முன்னர் இதேபோன்றதொரு நிகழ்வு பிரேசிலில் நிகழ்ந்தது. 1964-இல் இராணுவச்சதி மூலம் இராணுவ ஜெனரல்கள் பதவிக்கு வந்தனர். இந்தச்சதிக்கு அமெரிக்கா நேரடியாக உதவியது. இது Operation Brother Sam என்று அழைக்கப்பட்டது. 21 ஆண்டுகள் மேற்குலக ஆசீர்வாதத்துடன் இராணுவச் சர்வாதிகாரம் ஆட்சியில் இருந்தது. 1964-இல் பிரேசிலிலும் 1965-இல் இந்தோனேசியாவிலும் நடந்தது, இறுதியில் வெற்றி பெற்ற பக்கத்திற்கு - அதாவது அமெரிக்காவிற்கும் தற்போது செயல்பாட்டில் உள்ள உலகப் பொருளாதார அமைப்புக்கும் - கெடுபிடிப்போரின் மிக முக்கியமான வெற்றிகளாகும். இவ்விரு நாடுகளும் சுதந்திரமாக இருந்தன. உலகின் முதலாளித்துவ, கம்யூனிச வல்லரசுகளுக்கு இடையில் எங்கோ நின்று கொண்டிருந்தன, ஆனால், 1960களின் நடுப்பகுதியில் அமெரிக்க முகாமில் தீர்க்கமாக விழுந்தன. வாஷிங்டனில் உள்ள அதிகாரிகளும் நியூயார்க்கில் உள்ள பத்திரிகையாளர்களும் அந்த நேரத்தில் இந்த நிகழ்வுகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நிச்சயமாகப் புரிந்துகொண்டனர். இப்போது உலகின் நான்காவது அதிக மக்கள்தொகை கொண்ட நாடான இந்தோனேசியா, வியட்நாம் ஒருபோதும் இருந்திருக்க முடியாததை விட மிக முக்கியமான பரிசாக இருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

வியட்நாமில் நடந்த பத்து வருட இரத்தக்களரியான போரில் செய்யத் தவறியதை, ஒரு சில மாதங்களில், அமெரிக்க வெளியுறவு நிறுவகம் இந்தோனேசியாவில் சாதித்தது. தற்போது உலகின் ஐந்தாவது அதிக மக்கள்தொகை கொண்ட நாடான பிரேசிலில் உள்ள சர்வாதிகாரம், தென் அமெரிக்காவின் மற்ற பகுதிகளை வாஷிங்டன் ஆதரவு, கம்யூனிச எதிர்ப்பு நாடுகளின் குழுவிற்குள் தள்ளுவதில் முக்கியப் பங்கு வகித்தது. இரு நாடுகளிலும், சோவியத் யூனியன் பெருமளவில் ஈடுபடவில்லை. மிகவும் அதிர்ச்சியூட்டும் விதமாக, மிக முக்கியமாக, இந்த இரண்டு நிகழ்வுகளும் இன்னும் பல நாடுகளில் ஒரு பயங்கரமான சர்வதேச அழிப்பு வலையமைப்பை உருவாக்க வழிவகுத்தன - அதாவது, பொதுமக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தல் - இன்று நாம் அனைவரும் வாழும் உலகத்தை உருவாக்குவதில் இது ஒரு அடிப்படை பங்கைக் கொண்டிருந்தது. நீங்கள் இந்தோனேசியராகவோ அல்லது இந்த தலைப்பில் நிபுணராகவோ இல்லாவிட்டால், பெரும்பாலான மக்களுக்கு இந்தோனேசியாவைப் பற்றி மிகக் குறைவாகவே தெரியும், மேலும் 1965-66-இல் அந்தத் தீவுக்கூட்ட நாட்டில் என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் தெரியாது.

கியூபா ஏவுகணை நெருக்கடி, கொரியப் போர், பொல் பொட் பற்றி சிறிதளவு அறிந்தவர்கள் அல்லது உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு (சீனா), இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு (இந்தியா), அல்லது சனத்தொகையின் அடிப்படையில் ஆறாம், ஏழாம் நாடுகளாக உள்ள பாகிஸ்தான், நைஜீரியா பற்றிய சில அடிப்படை உண்மைகளை எளிதில் வெளிப்படுத்தக்கூடியவர்கள். மத்தியில் கூட, இந்தோனேசியா நமது கூட்டுப் பொது அறிவில் ஒரு பெரிய இடைவெளியாகவே உள்ளது. சர்வதேசப் பத்திரிகையாளர்களிடையே கூட, இந்தோனேசியா உலகின் மிகப் பெரிய முஸ்லிம் பெரும்பான்மை நாடு என்பது சிலருக்கே தெரியும், 1965-இல், சோவியத் யூனியனுக்கும் சீனாவிற்கும் வெளியே உலகின் மிகப்பெரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தாயகமாக அது இருந்தது என்பது ஒருபுறம் இருந்தாலும் 1965-66 வன்முறையின் உண்மை பல தசாப்தங்களாக மறைக்கப்பட்டது. அதன் பின்னணியில் நிறுவப்பட்ட சர்வாதிகாரம் உலகிற்கு ஒரு பொய்யைச் சொன்னது. உயிர் பிழைத்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது வெளியே பேச முடியாத அளவுக்குப் பயந்தனர். உலகெங்கிலும் உள்ள வீரமிக்க இந்தோனேசிய ஆர்வலர்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள அறிஞர்களின் முயற்சிகளால் மட்டுமே இப்போது நாம் இந்தக் கதையைச் சொல்ல முடிகிறது. ஆனாலும் இன்றும் இக்கொலைகள் மறுக்கப்படுகின்றன, மறைக்கப்படுகின்றன. குறிப்பாகக் கல்விப்புல நூல்களில் கூட இவை குறித்த குறிப்புகள் தவிர்க்கப்படுகின்றன. இதற்கு ஒரு சிறந்த உதாரணத்தைப் பார்த்துவிடலாம்.

1997-ஆம் ஆண்டு ‘Century of Genocide: Critical Essays and Eyewitness Accounts’ என்ற புத்தகம் வெளியானது. இது இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இனப்படுகொலைகளைப் பற்றிய விரிவான சித்திரத்தைத் தரும் ஆய்வு நூலாகும். இனப்படுகொலைகளின் வரலாற்றைப் பதியும் முக்கியமான நூலாக இது இன்றளவும் கருதப்படுகிறது. இதில் உள்ள எல்லாக் கட்டுரைகளும் இனப்படுகொலை என்ற தலைப்பைக் கொண்டன. ருவாண்டா, புரூண்டி, பொஸ்னியா, கம்போடியா, ஆர்மேனியா, பங்களாதேஷ் என அனைத்தும் இனப்படுகொலைகளாகத் தலைப்பிடப்பட்டன. இந்தோனேசியா மட்டும் ‘இந்தோனேசியப் படுகொலைகள்’ (The Indonesian Massacres) என்று வகைப்படுத்தப்பட்டது. இதில் கவனிப்புக்குரியது யாதெனில் கொசோவோவில் நிகழ்ந்ததை இனப்படுகொலை எனக் குறிக்க முடிந்த நூலுக்கு இந்தோனேசியாவில் நிகழ்ந்ததை இனப்படுகொலை என அடையாளம் காண இயலவில்லை. மேலும் முக்கியமாக இந்தோனேசிய அரசாங்கத்தால் கிழக்குத் தீமோரில் நிகழ்த்தியதை

இனப்படுகொலை என ஒரு கட்டுரையை எழுதித் தலைப்பிட முடிந்துள்ளது. ஆனால் இந்தோனேசியாவில் நிகழ்ந்ததை இனப்படுகொலையாகக் கொள்ளவில்லை. இதில் முக்கிய மானது யாதெனில் இந்த நூலின் நான்காவது பதிப்பு Centuries of Genocide: Essays and Eyewitness Accounts என்ற சிறிது மாற்றப்பட்ட தலைப்புடன் வெளியானது. இதில் இந்தோனியா பற்றிய கட்டுரை முழுமையாக நீக்கப்பட்டது. இது ஒரு தெளிவான செய்தியைச் சொல்கிறது. நடந்தது இனப்படுகொலையா இல்லையா என்பதைக் கொல்லப்பட்டோரின் அளவோ வன்முறையின் தீவிரமோ தீர்மானிப்பதில்லை. அரசியலே தீர்மானிக்கிறது. இனப்படுகொலை சித்தாந்த எதிரிக்கு எதிராக நிகழ்த்தப்படும் போது அது நியாயமானது மட்டுமல்ல, மனித உரிமை மீறலுமல்ல. அதில் பங்களித்தவர்கள் எதற்கும் பொறுப்பு சொல்லத் தேவையில்லை.

## இனப்படுகொலையா இல்லையா:

இருபதாம் நூற்றாண்டில் ஒரு சமூக-அரசியல் குழுவிற்கு எதிரான இனப்படுகொலையின் தெளிவான நிகழ்வாக இந்தோனேசியாவில் நடந்தேறிய கொலைகள் இருந்தனவா என்பது விவாதத்திற்குரியது. இந்தக் கொலைகள் பொதுவாக இனப்படு கொலையாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லை. இந்த விலக்குக்கான காரணம் இரண்டு. முதலாவதாக, இந்தோனேசியக் கொலைகள், சமீபக் காலம் வரை, அரசு ஆதரவுடன் நடத்தப்பட்ட வன்முறையாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. அதற்குப் பதிலாக, கம்யூனிசத்தின் தீமைகளுக்கு ஒரு இயல்பான எதிர்வினையாக இந்தோனேசியச் சமூகத்திலிருந்து எழுந்த தன்னிச்சையான வன்முறையின் விளைவாக இந்தக் கொலைகள் விளக்கப்பட்டுள்ளன. முதலில் இந்தோனேசிய இராணுவத்தால் முன்வைக்கப்பட்ட இந்த விளக்கம், அமெரிக்கா, பிரித்தானியா, ஆஸ்திரேலியப் போன்ற மேற்குலக நாடுகளில் உள்ள முக்கிய ஊடகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கொலைகளுக்குப் பின்னால் உள்ள இராணுவ நிறுவனம் குறித்த இந்த மறுப்பு, கொலைகளின் பின்னணியில் ஆட்சிக்குக் வந்த மிருகத்தனமான இராணுவ ஆட்சிக்கு குறிப்பாகச் சர்வாதிகாரி ஜெனரல் சுகார்ட்டோவுக்குப் பின்னால் வெளிப்படையான ஆதரவை வழங்கின.

இரண்டாவதாக, இந்தோனேசியக் கொலைகள் வேண்டுமென்றே செய்யப்பட்ட அரசுக் கொள்கையின் விளைவாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், 1948-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் இனப்படுகொலை குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்கும் சமவாயத்தில் (இனப்படுகொலை சமவாயம்) குறிப்பிடப்பட்டுள்ளபடி, இனப்படுகொலைக்கான சட்ட வரையறையை அவை பொதுவாகப் பூர்த்தி செய்வதாகக் கருதப்படுவதில்லை. துன்புறுத்தப்பட்டவர்களின் அடையாளம் இதற்குக் காரணம். சர்வதேசச் சட்டத்தை முன்னிறுத்துகின்ற நீதியியல் மற்றும் ஒப்பீட்டு இனப்படுகொலை ஆய்வுகள் இரண்டிலும், இன, தேசிய அல்லது மதக் குழுக்களை அழிக்கும் முயற்சிகளைக் கருத்தில் கொள்ளும்போது மட்டுமே இனப்படுகொலை என்ற சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தோனேசியக் கொலைகள் இனப்படுகொலையாக உள்ளதா இல்லையா என்பது பற்றிய அறிவார்ந்த விவாதம் அதன் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்துடன் தொடர்புடைய சொற்பொருள் விவாதங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் சூழ்நிலைக்கு இது வழிவகுத்தது. இதன் விளைவாக, இந்தோனேசிய, இனப்படுகொலை அறிஞர்கள் சிலர், இந்தோனேசியக் கொலைகள் ‘சட்டப்பூர்வமாக’ இனப்படுகொலையாக இல்லை என்று முடிவு செய்துள்ளனர், குறிப்பாகக் கொலைகள் ‘அரசியல்’ மற்றும் இன அல்லது மதச் சார்பு அடிப்படையில் அல்ல என்பதால் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது. இனப்படுகொலை சமவாயத்தின் கீழ் அரசியல் குழுக்களைப் பாதுகாப்பிலிருந்து விலக்குவதற்கு எந்தச் சட்ட அல்லது தார்மீக நியாயமும் இல்லை என்று வாதிடும் சில சட்ட அறிஞர்களுடன் இந்த விளக்கம் முரண்படுகிறது.

ஆனால், இன்று புதிய தலைமுறை ஆய்வாளர்கள் இந்தோனேசியாவில் நிகழ்ந்தது இனப்படுகொலையே என்பதை ஆதாரங்களுடன் முன்வைக்கிறார்கள். இந்தோனேசியக் கொலைகள் பற்றிய தற்போதைய புரிதல்களை ஒப்பிட்டு இனப்படுகொலை ஆய்வுகளின் துறையில் மறுசீரமைப்பதன் மூலம், கொலைகள் பற்றிய ஆய்வில் ஒரு புதிய அலையை இந்தோனேசியாவின் இளைய அறிஞர்களின் ஆய்வுகள் உருவாக்கியுள்ளன. இந்தப் புதிய தலைமுறை கெடுபிடிப் போரின் நிழலுக்கு வெளியே வளர்ந்துள்ளது. உண்மையில்,



> “கொலைகளில் இருந்து தப்பியவர்கள் இன்று தங்கள் அனுபவங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்கு அதிக சுதந்திரம் பெற்றுள்ளனர். மேலும், இது உயிர் பிழைத்தவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இடையே - முன்னர் நினைத்துப் பார்க்க முடியாத - தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.”

இந்தப் புதிய புலமை அலையின் முக்கிய ஆரம்பகால ஆய்வுகள் வன்முறையை நியாயப்படுத்த முயன்ற அதிகாரப்பூர்வ இந்தோனேசியப் பிரச்சார முயற்சிகளை மட்டுமல்ல, இந்த வன்முறையை ஊக்குவிப்பதிலும் எளிதாக்குவதிலும் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் பங்கு பற்றியும் கண்டடைந்த முடிவுகள் முக்கியமானவை. இந்தோனேசியாவின் பல்வேறு பகுதிகளில் வன்முறையின் புதிய வடிவங்கள் பற்றிய ஏராளமான புதிய ஆதாரங்களையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

1998-ஆம் ஆண்டு சுகார்ட்டோவின் சர்வாதிகார ஆட்சி வீழ்ச்சியடைந்ததிலிருந்து இந்தோனேசியாவில் திறக்கப்பட்ட புதிய ஜனநாயக வெளியால் இந்தப் புதிய தலைமுறை அறிஞர்கள் ஈர்க்கப்பட்டு நேரடியாகப் பயனடைந்துள்ளனர். கொலைகளில் இருந்து தப்பியவர்கள் இன்று தங்கள் அனுபவங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்கு அதிகச் சுதந்திரம் பெற்றுள்ளனர். மேலும், இது உயிர் பிழைத்தவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இடையே - முன்னர் நினைத்துப் பார்க்க முடியாத - தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில், இந்தப் புதிய தலைமுறை அறிஞர்களின் முக்கிய உந்துதல், இந்தப் பழைய தலைமுறை அவர்களின் அனுபவங்கள் இழக்கப்படுவதற்கு முன்பே வயதாகும்போது, உயிர் பிழைத்தவர்களின் கதைகளைப் படம்பிடிப்பதாகும். குறிப்பாக வாய்மொழி வரலாற்று முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் உயிர் பிழைத்தவர்களின் கதைகளைப் பதிவுசெய்து அவற்றிலிருந்து அர்த்தங்களைப் பெற முயன்றுள்ளனர்.

சமீபத்தில், குற்றவாளிகள் கொலைகளில் எவ்வாறு பங்கேற்றனர், யாருடைய வழிகாட்டுதலின் பேரில் செயற்பட்டனர் என்பது பற்றிய விவரங்களையும் வழங்கத் தொடங்கியுள்ளனர். இந்தக் கணக்குகள், வடக்கு சுமத்ராவின் மேடனில் நடந்த கொலைகளில் தீவிரமாகப் பங்கேற்ற முன்னாள் கொலைக் குழுத் தலைவர்களின் சுய-குற்றச்சாட்டுச் சாட்சியத்தைக் கொண்ட ஜோசுவா ஓப்பன்ஹைமரின் (Joshua Oppenheimer) விருது பெற்ற திரைப்படமான ‘தி ஆக்ட் ஆஃப் கில்லிங்’ (The Act of Killing - 2012) இன் வெற்றியை அடிப்படையாகக் கொண்டவை. இந்த ஆவணப்படம், இந்தோனேசியாவின் கொலைகளை முதன்முதலாகச் சர்வதேச ரீதியாகப் பொதுவெளியின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. இந்தோனேசியக் கொலைகள் இனப்படுகொலைகளே என்ற கதையாடலை உருவாக்கவும் இந்தக் கொலைகளுக்கு மீள் அறிமுகத்தைக் கொடுக்கவும் இந்த ஆவணப்படம் மிகுந்த பங்களிப்பைச் செய்தது. இந்தப் படத்தின் தொடர்ச்சியாக ஜோசுவா ஓப்பன்ஹைமர் ‘தலுக் ஒவ் சைலன்ஸ்’ (The Look of Silence - 2014) என்ற ஆவணப்படத்தை எடுத்தார். இரண்டும் 1965-66 காலக் கொடுமைகளைத் திறமையாகப் படம்பிடித்தன. இவ்விரு படங்களிலும் பணியாற்றிய இந்தோனேசியர்களின் பெயர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. இரண்டு படங்களிலும் அவர்கள் அனாமதேயர்களாகவே அறியப்பட்டார்கள். இது இந்தோனேசியாவின் சமகால நிலவரத்தைக் காட்டும் வலிமையான செய்தியாகும்.

இந்த ஆவணப்படங்களும் இளம் தலைமுறை ஆய்வாளர்களின் ஆய்வுகளும், கொலைகளுக்குப் பின்னால் உள்ள இராணுவ நிறுவனத்தை மறுப்பதை இந்தோனேசிய அரசுக்குத் தொடர்ந்து கடினமாக்கியுள்ளன. இதற்கிடையில், இனப்படுகொலையின் போது இந்தோனேசிய இராணுவமும் அரசாங்கமும் பயன்படுத்திய தொடர்பாடல் ஆவணங்கள் இரகசியக் காப்பகங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுப் பொதுவெளிக்குக் கொணரப்பட்டது. இது கொலைகளுக்குப் பின்னால் இராணுவம் இல்லை, இக்கொலைகளை நிறுவனமயப்பட்ட முறையில் இராணுவம் நிகழ்த்தவில்லை போன்ற கட்டுக்கதைகளுக்கு முடிவு கட்டியுள்ளது. இந்த ஆவணங்கள், இராணுவத்தின் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி, ஒரு முழு மனிதக் குழுவையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் ஆதரவாளர்களையும் அழிக்கும் நோக்கில்

> “இந்தோனேசியக் கொலைகள் பற்றிய தற்போதைய புரிதல்களை ஒப்பிட்டு இனப்படுகொலை ஆய்வுகளின் துறையில் மறுசீரமைப்பதன் மூலம், கொலைகள் பற்றிய ஆய்வில் ஒரு புதிய அலையை இந்தோனேசியாவின் இளைய அறிஞர்களின் ஆய்வுகள் உருவாக்கியுள்ளன.”



வேண்டுமென்றே நாடு தழுவிய பிரச்சாரமாக இனப்படு கொலை செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கின்றன.

இந்தப் புதிய சான்றுகளும், உயிர் பிழைத்தவர்கள், குற்ற வாளிகளிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களும், கொலைகளின் பிராந்தியப் பரிமாணங்களை வலியுறுத்தும் முந்தைய ஆய்வுகளை விரிவுபடுத்த உதவியுள்ளன. தீவுக்கூட்டம் முழுவதும் வன்முறையினால் பாதிக்கப்பட்டபோது அதன் முறையான வடிவங்களை ஆராய்வதற்கும், இனப்படுகொலையின் மரபுகளுடன் இந்தோனேசியர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை ஆராய்வதற்கும் புதிய ஆய்வாளர்கள் இந்த முந்தைய ஆய்வுகளை உருவாக்கியுள்ளனர். இந்தோனேசியக் கொலைகள் பற்றி இப்போது 'தெரிந்திருக்கக்கூடிய' செய்திகள், இரண்டு விடயங்கள் குறித்தான முக்கிய மறுமதிப்பீட்டிற்கு வழிவகுத்தன.



சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த வரையறையின் படி, இனப்படுகொலைக் குற்றம் என்பது 'ஒரு தேசிய இன அல்லது மதக் குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கம்' என்று வரையறுக்கப்படுகிறது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, இது 1965-1966 கொலைகளில் பாதிக்கப்பட்டவர்கள் சமவாயத்தின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட குழுவாக உள்ளதா என்பது குறித்துக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. கொலைகளின் போது இ.க.க ஒரு அரசியல் குழுவாகக் குறிவைக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்தாலும், இது முழுக் கதையல்ல.

## நிறைவுக் குறிப்புகள்:

ரபேல் லெம்கின் 'இனப்படுகொலை' என்ற வார்த்தையை உருவாக்கி, 'பெயர் இல்லாத குற்றம்' என்று அழைக்கப்பட்டதை வரையறுத்ததிலிருந்தான எட்டுத் தசாப்தங்களில், அறிஞர்கள் இந்த வார்த்தையின் அர்த்தத்தை எதிர்த்துப் போராடியுள்ளனர். 1980-களில் இருந்து பெரும்பாலும் வரலாறு மற்றும் சட்டத்திலிருந்து பெறப்பட்ட அறிஞர்களிடையே உருவாக்கப்பட்ட இனப்படுகொலை ஆய்வுகள் துறையில், இன்று அதிகரித்து வரும் பிற துறைகளை உள்ளடக்கிய இந்தச் சொல், கேள்விக்குரியதாக மாறியுள்ளது. இதன் விளைவாக, குறிப்பிட்ட தார்மீக, அரசியல், சட்ட அல்லது கல்வித் திட்டத்திற்கு மிகவும் வசதியாகத் தோன்றும் ஒவ்வொரு முறையும் இனப்படுகொலையைப் புதிதாக வரையறுக்கும் ஒரு போக்கு உள்ளது. குறிப்பாக, இனப்படுகொலை குற்றத்திற்கான தற்போதைய சட்ட வரையறையை ஏற்றுக்கொள்ளும் அறிஞர்களுக்கும், இந்தச் சட்ட வரையறையிலிருந்து விலகிச் சமூகவியல் வார்த்தையின் பயன்பாட்டிற்கு ஆதரவாக வாதிடுபவர்களுக்கும் இடையே ஒரு பிளவு உருவாகியுள்ளது.

1948 இனப்படுகொலை சமவாயத்தில் வகுக்கப்பட்டபடி, இனப்படுகொலை குற்றத்தின் வரையறை, சமவாயத்தைப் பாதுகாக்க அவசியமான அரசியல் சமரசங்களின் விளைவாகும். இந்தச் வார்த்தையின் இந்த சட்ட வரையறை இன்று வரை நீடிக்கும் விவாதங்களினதும் கருத்து வேறுபாடுகளினதும் பொருளாகவும் இருந்து வருகிறது. இந்த விவாதங்களில் பல, இனப்படுகொலை சமவாய மாநாட்டில் விவாதிக்கப்பட்ட மனிதக் குழுக்கள், வன்முறை வகைகள் மற்றும் இனப்படுகொலை செய்யும் நோக்கத்தின் விளக்கத்தை மையமாகக் கொண்டுள்ளன. மனித வரலாறு முழுவதும் இனப்படுகொலை, வன்முறை வழக்குகளை ஆராயும் பல அறிஞர்களுக்கு, கொலனித்துவம், ஏகாதிபத்தியம், அடிமைத்தனம், தேசத்தைக் கட்டியெழுப்புதல் அல்லது இன அழிப்பு ஆகியவற்றை ஆராய்ந்த ஆய்வுகள், இந்த விவாதங்கள் மாநாட்டால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வார்த்தையின் சட்ட வரையறையிலிருந்து உருவாகின்றன, மேலும் பெரும்பாலும் 'இனப்படுகொலை' என்ற வார்த்தையை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம், பயன்படுத்துகிறோம் என்பதில் பிடிவாதமான விளக்கங்களாலும் கருத்தியல் தடைகளாலும் சிதைக்கப்படுகின்றன.

1965-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தோனேசியா முழுவதும் பரவிய கொடிய வன்முறையைக் கருத்தில் கொள்ளும்

முதலாவது, 1965-1966 நிகழ்வுகள் பற்றிய அறிவார்ந்த புரிதல்களில் உள்ள இடைவெளிகளாக அடையாளம் கண்ட கொலைகளுக்குப் பின்னால் உள்ள நிறுவனம், கொல்லப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகிய இரண்டு முக்கிய 'தீர்க்கப்படாத சிக்கல்களில்' இன்று இரண்டாவது கேள்வியை மட்டுமே இன்னும் 'தீர்க்கப்படாதது' என்று கருத முடியும். ஆனால் இனப்படுகொலை என்பதை நிறுவுவதற்கு எண்ணிக்கை என்பது பிரதானக் காரணியல்ல என்பதன் அடிப்படையில், அறிவார்ந்த புரிதல்களில் உள்ள இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது.

விமர்சனரீதியாக, இந்தோனேசியக் கொலைகள் குறித்த இந்தப் புதிய கண்ணோட்டங்கள், இனப்படுகொலையின் கூர்மையான சட்ட விளக்கங்களிலிருந்து (1948 ஐ.நா. இனப்படுகொலை சமவாயத்தின் குற்றத்தின் வரையறையின்படி) விலகி, இனப்படு கொலை நிகழ்வுகளுக்கு அடிப்படையாக இருக்கும் பரந்த சமூகவியல் செயல்முறைகளைக் கருத்தில் கொள்ள, ஒப்பீட்டு இனப்படுகொலை ஆய்வுகளில் ஒரு பொதுவான திருப்பத்தைப் பிரதிபலிக்கின்றன. இந்தத் திருப்பத்தின் ஒரு பகுதி, குறித்த ஆய்வுப்புலத்திற்குள் நீடித்த விவாதங்கள், கருத்து வேறுபாடுகள் மீதான அதிருப்தியின் விளைவாகும். இந்த விவாதங்களில் பல, மனிதக் குழுக்களின் பல முக்கிய வகைகள் (குறிப்பாக அரசியல் குழுக்கள்), வன்முறை வகைகள், அத்துடன் ஒரு மனிதக் குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்தின் விளக்கங்களில் பொதிந்துள்ள தெளிவின்மைகள், நிச்சயமற்ற தன்மைகள் ஆகியவற்றைக் குறிக்கிறது.

இருப்பினும், இந்தோனேசிய இனப்படுகொலையின் அறிஞர்கள் 1948 இனப்படுகொலை சமவாயத்தையும், சர்வதேச நீதி அமைப்பை அணுகுவதற்கு அது வழங்கும் வழிமுறையையும் கைவிட்டுவிட்டார்கள் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. இந்தோனேசியாவின் கதை குறித்த சமவாயத்தைப் பயன்படுத்துவதில் உள்ள முக்கியச் சிரமம், 1965-1966 கொலைகள் அதன் கடுமையான வரையறைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதை நிரூபிப்பதாகும்.

போது ஒரு முக்கிய விவாத வரையறை மற்றும் கருத்தியல் பிரச்சினை ஆபத்தில் உள்ளது. இந்தப் பிரச்சினை இந்தோனேசியாவில் ஒழிக்கப்பட்ட இலக்கு குழுவின் அடையாளத்துடன் தொடர்புடையது. கொலைகளால் பாதிக்கப்பட்டவர்கள் முதன்மையாக இ.க.க அல்லது அதன் பல தொடர்புடைய அமைப்புகளில் ஒன்றின் உண்மையான அல்லது உணரப்பட்ட தொடர்பின் அடிப்படையில் குறிவைக்கப்பட்டனர். ஒப்பீட்டு இனப்படுகொலை ஆய்வுகள் துறையில் உள்ள இந்தக் கருத்தியல் விவாதங்களில் பலவற்றைப் போலவே, அவர்களின் சமூக, அரசியல் தொடர்பால் வரையறுக்கப்பட்ட, பாதிக்கப்பட்டவர்களின் குழு இனப்படு கொலையின் பாதிக்கப்பட்டவர்களாக இருக்க முடியுமா? என்ற கேள்வி, இனப்படுகொலை சமவாயத்தின் குற்றத்தின் சட்ட வரையறையிலிருந்து நேரடியாகப் பெறப்படுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனப்படுகொலை என்றால் என்ன?, யார் அதைச் செய்கிறார்கள்?, பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருக்கலாம்?, இந்த வன்முறையை எவ்வாறு தடுக்கலாம்? என்பது பற்றிய சர்ச்சைக்குரிய விவாதங்கள், இந்த வார்த்தையின் தனித்துவமான தார்மீகக் கட்டாயங்களாகக் கருதப்படுவதால் இயக்கப்படுகின்றன. இந்தச் சர்ச்சைகள் மிகவும் கூர்மையானவை, மேலும் அவற்றின் சொற்கள் மிகவும் வலுவானவை, ஏனெனில் ஆபத்துகள் மிக அதிகம். பலருக்கு, இந்த வார்த்தையை நிராகரிப்பது வன்முறை நடந்ததே இல்லை என்பதை மறுக்க வழிவகுக்கும். இன்னும் மோசமாக, இனப்படுகொலை நோக்கம் மற்றும் நடவடிக்கைக்கு, வேண்டுமென்றே வன்முறையை இனப்படுகொலை என்று பெயரிடவோ அல்லது அதைத் தடுக்கத் தலையிடவோ விருப்பமின்மை, பெரும்பாலும் பெயரிடாத ஓர் எளிதான அரசியலால் இயக்கப்படுகிறது, எனவே புறக்கணிக்கப்படுகிறது. இது 'மீண்டும் ஒரு போதும் நிகழாதிருக்க' என்ற வாக்குறுதியை இன்னும் வெற்றுத்தனமாக்குகிறது.

இந்தோனேசியப் படுகொலைகள் போன்ற இனப்படுகொலை வன்முறை வழக்குகள், சமகால அறிஞர்கள் சிலர் வாதிட்டபடி, மனித வரலாற்றில் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, பெரும்பாலும் மறுக்கப்பட்ட இனப்படுகொலைகளின் நீண்ட பட்டியலுக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்தோனேசியக் கதைளைப் பொறுத்தவரை, வன்முறையின் ஒப்பீட்டு அளவு மற்றும் படுகொலைகள் நடத்தப்பட்ட தீவிரம் இருந்தபோதிலும் அவை இனப்படுகொலையாக அடையாளம் காணப்படாமைக்கு அரசியற் காரணிகளே பிரதானம் என்பது வெளிப்படை.

சில இனப்படுகொலைகள் ஏன் மற்றவற்றைவிட அதிகக் கவனத்தைப் பெறுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் நீண்ட காலமாகக் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஹோலோகாஸ்ட் விவாதத்தின் 'தனித்துவம்' இதற்கு ஓரளவு ஆதாரமாகும். பலருக்கு, இனப்படுகொலை சமவாயம் உதவியற்ற நீதித்துறை சொற்களில் அறிவார்ந்த விவாதங்களை அமைக்கிறது, குறிப்பாக வரலாற்று வழக்குகளை இனப்படுகொலைகள் அல்லாதவையாகச் சித்தரிக்கிறது, ஏனெனில் அவை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்ட ஒரு சமவாயத்தின சட்டக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கவில்லை. மற்றவர்களுக்கு, நமது பகிரப்பட்ட அட்டூழிய வரலாற்றைப் பற்றிய இந்த நியமனப் புரிதலில் சில இனப்படுகொலை வழக்குகளை மற்றவற்றுக்கு மேல் சலுகை செய்வது ஒரு 'சமநிலைப்படுத்தும் விளையாட்டை' அமைப்பதில் மட்டுமே முடிகிறது. இதன் மூலம் சில இனப்படுகொலைகள் மற்றவற்றை நினைவிலிருந்து அழிக்கும் செலவில் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன.

இன்னும் சிலருக்கு, குறிப்பிட்ட நிகழ்வுகளை இனப்படுகொலையாக வரையறுப்பதும், அந்த வார்த்தையை மற்றவர்களுக்கு மறுப்பதும் விமர்சன ரீதியான அறிவார்ந்த கவனத்தைக் கோருகிறது. இனப்படுகொலை ஆராய்ச்சியாளர்கள் இந்த வன்முறையை 'ஒற்றைப் பரிமாண மாதிரி' என்ற சட்டகத்துக்குள் பார்க்க மறுக்க வேண்டும். ஏனெனில், இச்சட்டகத்தில் குற்றவாளிகளும் பாதிக்கப்பட்டவர்களும் தனித்தனிக் குழுக்களாக மிகைப்படுத்தப்படுகிறார்கள். இது பரந்த சமூக நிகழ்வுகள் பற்றிய நமது புரிதலை மறைக்கிறது. இதற்கிடையில், உலகச் சக்திகளாலும் ஊடகங்களாலும் சில அட்டூழியங்கள் எவ்வாறு கண்டிக்கப்படுகின்றன?, மற்றவை புறக்கணிக்கப்படுகின்றன அல்லது கொண்டாடப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்காக, நோம் சோம்ஸ்கியும் எட்வேர்ட் ஹெர்மனும் 'ஆக்கபூர்வமான', 'தீங்கற்ற', 'தீய' மற்றும் 'புராண இரத்தக்களரிகள்' என்று அவர்கள் அழைப்பதை வேறுபடுத்துகிறார்கள். இது இனப்படுகொலை அரசியலில் ஊடகங்களின் பங்களிப்பை வெட்டவெளிச்சமாக்குகிறது. பார்க்க: Chomsky, N., & Herman, E. S. (2014). The Washington connection and Third World Fascism: The political economy of human rights. Illinois: Haymarket Books

இனப்படுகொலை அறிஞர்கள் பெரு வன்முறை ( Mass Violence) எவ்வாறு, ஏன் சித்தரிக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது, அங்கீகரிக்கப்படுகிறது அல்லது புறக்கணிக்கப்படுகிறது என்பதைத் தொடர்ந்து விமர்சிக்க வேண்டும். அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் கொலைகளின் விளைவாக இந்தோனேசியா, மேற்கத்திய முதலீட்டிற்கும் மேற்குல ஆதரவுக்குத் திறந்த ஒரு தெளிவான கம்யூனிச எதிர்ப்பு நாடாக 'மறுநிலைப்படுத்தப்பட்டது'. இக்கொலைகள் தென்கிழக்கு ஆசியாவில் கெடுபிடிப்போர் அரசியலின் சமநிலையை மாற்றியது. இதனால் இ.க.கவை முழுமையாக ஒழிப்பதை நியாயப்படுத்தியது. இன்னும் சரியாகச் சொல்வதானால் அவசியமாக்கியது.

இந்தோனேசிய இனப்படுகொலை அரை நூற்றாண்டுக்கு முன்பு நிகழ்ந்தது. ஆனால் இந்தக் குற்றங்கள் முறையாக விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படும்வரை அது இந்தோனேசிய அரசியலைத் தொடர்ந்துகொண்டேயிருக்கும். மேலும், இந்த இனப்படுகொலைக்கான குற்றவாளிகளுக்கு முழுமையான தண்டனையைப் பெறும்பவரை அது சர்வதேச நீதிப் பொறிமுறைகள் மீது ஒரு கறையாகவே இருக்கும். 1965-1966 கொலைகளை இனப்படுகொலை வழக்காக அங்கீகரிப்பது, வழக்கை அதன் தற்போதைய 'புற' நிலையிலிருந்து நீக்கி இந்த வன்முறை ஏன் நிகழ்ந்தது என்ற மிக முக்கியமான கேள்வியில் கவனம் செலுத்த அனுமதிக்கிறது. இந்தக் கேள்வியில் இருந்து தொடங்குவதே அவசியமானது. அதுவே இனப்படுகொலைகளின் அரசியல் பரிமாணத்தை விளங்கிக் கொள்ளப் பாலம் அமைக்கும்.



meenilankco@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

tg.theeban@gmail.com

> ***“ சீதை உடனிருக்க இராமன் நிகழ்த்திய முதற்போர் என்பதாலும், இத்தகைய பெரும் படையை இராமன் தனியே எதிர்த்துநின்று போரிட்டு வென்றான் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும், எதிரிப்படையைப் பல பாடல்களில் சிறப்பித்து விரித்துரைத்துள்ளார் என்று கருதிக்கொள்ளலாம். ”***

முன்னைய மூன்று தாய்வீடு இதழ்களில் கம்பராமாயணம், ஆரணியகாண்டத்தின் ஐந்தாவது படலமாகிய சூர்ப்பணகைப் படலத்தின் செய்திகளைக் கம்பனின் கவிநயத்தோடு சேர்த்து எடுத்துவந்திருந்தேன். இந்த இதழில் ஆறாவது படலமாகிய கரன் வதைப் படலம் தொடர்கிறது. கரன் என்பவன் இராவணனின் சிறியதாயின் மகன். தண்டகவனத்தில் சூர்ப்பணகை வசிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்ட பகுதியிலே அவளது பாதுகாவலுக்காகவும், அவள் இடுகின்ற கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவும், இராவணனால் அனுப்பிவைக்கப்பட்ட பெரிய அரக்கர் படைக்குத் தலைவனாக அவன் நியமிக்கப்பட்டிருந்தான். இராமன் மேல் ஏற்பட்ட காதலும் ஈடேறாமல், இலக்குவனால் உறுப்புகளும் சிதைக்கப்பட்டதால் ஏற்பட்ட ஆற்றமுடியாத மனநிலையிலே, ‘உங்களுக்குக் கூற்றுவனாகக் கரன் இருக்கிறான். அவனை அழைத்துவந்து உங்களை அழித்துவிடுகிறேன்’ என்று இராம இலக்குமணரிடம் வஞ்சினம் கூறிச்சென்ற சூர்ப்பணகை, கரனிடம் சென்று அவனது காலில் விழுந்து, புரண்டு, கதறலுடன் தனக்கு நடந்தவை பற்றி முறையிடுகிறாள்.

***கண்டுநோக்கரும் காரிகையாள்தனைக்***
***கொண்டுபோவன் இலங்கையர் கோக்கெனா***
***விண்டுமேல்விழுந் தேனைவெகுண்டவர்***
***துண்டமாக்கினர் மூக்கெனச் சொல்லினாள்***

கம்ப. ஆரணிய. 374

கண்டுநோக்கரும் காரிகையாள்தனை - அந்த வனத்திலே இரண்டு மனிதர்களுடன் இருந்த, பார்ப்பதற்கே அரிதான கட்டழகி ஒருத்தியை, கொண்டுபோவன் இலங்கையர் கோக்கெனா - இலங்கையர் கோன் இராவணனுக்காக எடுத்துக் கொண்டு போவதற்காக, விண்டுமேல்விழுந் தேனை- விரும்பி அவள்மேல் பாய்ந்த என்மீது, வெகுண்டு அவர் துண்டமாக்கினர் மூக்கெனச் சொல்லினாள் - சினங்கொண்டு எனது மூக்கினை அறுத்துவிட்டார்கள் என்று சொன்னாள்.

சீதையைத் தனது சக்களத்தியாகக் கருதிய சூர்ப்பணகையே, அவளைக் ‘கண்டுநோக்கரும் காரிகையாள்’ என்று கூறுகிறாள். பெண்களே கண்டுவியக்கும் அழகுடையவள் சீதை என்பதைச் சூர்ப்பணகை தனது வாயாலேயே கூறுவதாகக் கம்பர் வருணிப்பதை இங்கே காண்கிறோம். இராவணனுக்காக அந்தக் கட்டழகியைக் கவர்ந்துபோவதற்காக அவள்மீது பாய்ந்த என்னை இவ்வாறு உறுப்புகளைச் சிதைத்து அனுப்பிவிட்டார்கள் எனக் கரனிடம் சூர்ப்பணகை முறையிட்டபோது, கரன் பெருஞ்சினம் கொண்டு இராம இலக்குமணர்களுடன் போரிட்டு அவர்களை அழித்துவிட எழுகிறான். அப்பொழுது அவனது படை வீரர்கள் எதிர்வந்து இராம இலக்குமணர்களை ஒழித்துவிடும் பொறுப்பைத் தங்களிடமே விட்டுவிடுமாறு அவனிடம் வேண்டிக்கேட்டு, சூர்ப்பணகை வழிகாட்ட, இராம இலக்குமணர் இருக்குமிடம் சென்று அவர்களுடன் போர் தொடுக்கிறார்கள். இலக்குமணன் சினங்கொண்டு அவர்களுடன் போரிட எழுந்தபோது, ‘நீ இங்கே சீதைக்குக் காவலாக இருந்து அவளைப் பார்த்துக்கொள்’ என்று சொல்லிவிட்டு இராமன் தனியே சென்று அவர்களுடன் போர் புரிகிறான்.

***மரங்கள் போல்நெடுவாளொடுதோள்விழ***
***உரங்களால்அடர்ந் தார்க்குஉரவோன்விடும்***
***சரங்கள் ஓடினதைக்கஅவர்கள்தம்***
***சிரங்கள் ஓடினதீயவள் ஓடினாள்***

கம்ப. ஆரணிய. 387

மரங்கள் போல் நெடுவாளொடுதோள்விழ - நீண்ட மரங்கள் வெட்டப்பட்டு விழுவதனைப்போல அவர்கள் தாங்கியிருந்த வாள்களுடனே அவர்களது தோள்கள் துணிக்கப்பட்டு விழுந்தபின்னும், உரங்களால் அடர்ந்தார்க்கு - மார்பின் வலிமையைக் கொண்டுதாக்கிப் போர் செய்வதற்கு நெருங்கிவந்த அவர்கள்மீது, உரவோன்விடும் சரங்கள் ஓடினதைக்க - வலி




மையுடன் இராமன் எய்த அம்புகள் விரைந்து சென்றன. அச்ச ரங்கள் தைக்கவே, அவர்கள்தம் சிரங்கள் ஓடின - அவர் களது தலைகள் துணிக்கப்பட்டு விழுந்து உருண்டோடின, தீயவள் ஓடினாள் - தீயவளான சூர்ப்பணகையும் அவ்விடத்தை விட்டுஓடினாள்.

அந்த வீரர்களின் கைகள் பிடித்திருந்த வாள்களுடனே தோள் கள் துணிக்கப்பட்டு, நெடுமரங்கள்போல் வீழ்ந்தபின்னும் வலிமைமிக்க மார்புகளால் அவர்கள் தாக்கிப் போரிட இராமன் செலுத்திய அம்புகளால் அவர்கள் தலைகள் அறுப் புண்டு உருண்டோடின. அந்த வேகத்திலே சூர்ப்பணகையும் ஓடினாள் என்கிறார் கம்பர். இந்தச் செய்யுளில் வரும் சரங்கள் ஓடின, அவர்கள் தம் சிரங்கள் ஓடின, தீயவள் ஓடினாள் என் னும் கம்பரின் சொல்லாட்சியும், உவமை நயமும் நெஞ்சை அள்ளுகின்றன.

மீண்டும் கரனிடம் ஓடிவந்த சூர்ப்பணகை அவனிடம் நடந்த செய்தியைக் கூறுகிறாள். அதனைக் கேட்ட கரன் வெகுண் டெழுந்து தூடணன், திரிசிரா என்னும் முக்கிய படைத்தலை வர்களுடன் மாபெரும் படையணிகளைத் திரட்டிக்கொண்டு போர்செய்யப் புறப்படுகிறான்.

***போர்ப் பெரும்பணைபொம்மென் முழக்கமா,***
***நீர்த்தரங்கம் நெடுந்தடந் தேர்களா,***
***ஆர்த்துஎழுந்தது, இறுதியின் ஆர்கலிக்***
***கார்க்கருங்கடல் கால்கிளர்ந்துஎன்னவே***

கம்ப. ஆரணிய. 392

போர்ப் பெரும்பணைபொம்மென் முழக்கமா - போரை அறி விக்கின்ற பெரிய பேரிகையொலி பொம்மென முழங்க, நீர்த்த ரங்கம் நெடுந்தடந் தேர்களா - கடல் அலைகளாக நீண்ட தேர்ப்படைகள் அசைந்தபடி செல்ல, இறுதியின் ஆர்கலிக் கார்க் கருங்கடல் கால்கிளர்ந்து என்னவே - ஊழிக்காற் றினால் பேரொலியோடு கார்மேகம் போன்ற நிறத்தையுடைய கடல் பொங்கி மேலெழுந்தாற்போல, ஆர்த்து எழுந்தது - பேராரவாரத்தோடு கரனது சேனை போருக்கு எழுந்தது. நீர்த் தரங்கம் நெடுந்தடந் தேர்களா என்று தேர்ப்படைக்கு கடல் அலைகளை உருவகப்படுத்திய கம்பர், ஊழிக்காற்றினால் எழுந்த கருங்கடல் போல அந்தப் பெரும் போர்ப்படையணி இருந்ததாக உவமை நயத்துடன் கற்பனை செய்திருக்கின்ற சிறப்பை இந்தச் செய்யுளில் காண்கிறோம்.

பதினான்கு படைத்தலைவர்களுடன், பதினான்காயிரம் படை வீரர்களுடன் திரண்டெழுந்து சென்ற கரனின் போர்ப்படை அணியிலுள்ள வீரர்கள், படைத்தலைவர்கள், போர்க்கரு விகள் ஆகியவைபற்றி இவ்வாறு முப்பது செய்யுள்களில் கம்பர் வருணனைசெய்துபாடியிருக்கிறார். இவ்வவாறு பெரும ளவில் ஏன் கரனின் படையைப்பற்றிக் கம்பர் பாடியிருக் கின்றார் என்ற கேள்வி எழுகிறது. சீதை உடனிருக்க இராமன் நிகழ்த்திய முதற்போர் என்பதாலும், இத்தகைய பெரும் படையை இராமன் தனியே எதிர்த்து நின்று போரிட்டு வென் றான் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும், எதிரிப்படை யைப் பல பாடல்களில் சிறப்பித்து விரித்துரைத்துள்ளார் என்று கருதிக்கொள்ளலாம்.

கரனின் படைகள் புறப்பட்டபோது தோன்றிய தீயநிமித்தங் களை, அகம்பன் என்ற அறிவன் வந்துசொல்லித் தடுக்கவும் கேளாதவனாக, ஆகாயத்திலுள்ள மேகக் கூட்டங்கள் அஞ் சும்படியும், ஆர்த்தொலிக்கின்ற கடல் நடுக்கம் அடையும்ப டியும், பறவைகளும் விலங்குகளும் அஞ்சி ஓடிஒளிந்து கொள்ளும்படியும் கரன் தன்படைகளுடன் இராமன் இருக் கின்ற இடத்தை வந்துசேர்கிறான். இதனை அறிந்த இலக்கு மணன் போர்க்கோலம் கொள்ள, அவனைத் தடுத்துநிறுத்திச்

சீதைக்குக் காவலாகவைத்துவிட்டு மீண்டும் இராமன் போருக் குப் புறப்படுகிறான்.

***குழையுறுமதியம் பூத்தகொம்பினாள் குழைந்துசோரத்
தழையுறுசாலைநின்றும் தனிச்சிலைதரித்தமேரு
மழையெனமுழங்குகின்றவாளெயிற்றுஅரக்கர் காண
முழையினின்றுஎழுந்துசெல்லும் முடங்கலின் முனிந் துசென்றான்***

கம்ப. ஆரணிய. 432

குழையுறுமதியம் பூத்தகொம்பினாள் குழைந்துசோரத் - காதணிகள் அணியப்பெற்ற திங்களை மலராகக் கொண்ட தொரு பூங்கொம்பை ஒத்தவளான சீதை தளர்வுற்று வருந்திச் சோரவும், தழையுறுசாலை நின்றும் தனிச்சிலைதரித்த மேரு - தழைகளால் வேயப்பெற்ற பர்ணசாலையிலிருந்து தனது ஒப்பற்ற வில்லை ஏந்தியவனாக மேரு மலையாகிய இராமன், மழையென முழங்குகின்றவாளெயிற்று அரக்கர் காண - மழை மேகங்கள் போல் முழங்குகின்ற கூரிய பற்களையும் கொண்ட அரக்கர்கள் காணும்படி, முழையினின்று எழுந்து செல்லும் முடங்கலின் முனிந்துசென்றான் - மலைக் குகையிலிருந்து வெளிப்படுகின்ற ஆண் சிங்கத்தைப்போல மிகுந்த சினத் துடன் வெளியே வந்தான்.

இச்செய்யுளில் பல உவமை அணிநயங்களைக் கம்பர் கலந் துவைத்திருப்பதைக் காணலாம். குழை அணியப்பெற்ற திங் களைமலராகக் கொண்ட பூங்கொம்பை ஒத்தவள் சீதை என்பதில் இல்பொருள் உவமை அணி காணப்படுகிறது. தனிச்சிலை தரித்த மேரு என்று மேரு மலையை இராமனுக்கு உவமை ஆகுபெயராக வைத்துள்ளார், அரக்கர் படை மழை மேகம்போல முழங்குவதாகவும், மலைக் குகையிலிருந்து வெளிப்படுகின்ற ஆண் சிங்கத்தைப்போல இராமன் வெளிப் படுவதாகவும் இச்செய்யுளின் நான்கு அடிகளிலும் உவமை அணிநயம் நிறைந்துள்ள சிறப்பைக் காணலாம்.

சூர்ப்பணகை வெளியேவந்த இராமனைச் சுட்டிக்காட்ட, இவனை நானே கொன்றொழிப்பேனென்று வெஞ்சினம் கூறிய கரனைத் தடுத்துநிறுத்திவைத்துவிட்டு, அரக்கர் சேனை இராமனைச் சூழ்கிறது. அந்தப் படையை எதிர்த்து இராமன் தனது வில்லிலே கணைதொடுத்துப் போரிடுகிறான். இப்படலத் தின் எஞ்சியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களில் அரக்கர் படையுடன் இராமன் போர் புரிவதைக் கம்பர் சிறப்பாக வரு ணித்துப் பாடியுள்ளார். அவற்றுள் தேர்ந்தெடுத்த செய்யுள் கள் சிலவற்றையே இங்கே தருகிறேன்.



***அலைமிதந்தனகுருதியின் பெருங்கடல் அரக்கர்
தலைமிதந்தனநெடுந்தடிமிதந்தனதடக்கை
மலைமிதந்தனவாம்பரிமிதந்தனவயப்போர்ச்
சிலைமிதந்தனகொடியொடுமிதந்தனதேர்கள்***

கம்ப. ஆரணிய. 451

அலைமிதந்தனகுருதியின் பெருங்கடல் - இராமனது கணை கள் தைத்ததனால் ஏற்பட்ட அலைமிகுந்த பெருங்கடல் போன்ற குருதி வெள்ளத்தில், அரக்கர் தலைமிதந்தன - அரக்கர்க ளுடைய தலைகள் மிதந்து கொண்டிருந்தன, நெடுந்தடிமிதந் தன - நீண்ட தசைத்துண்டங்கள் மிதந்தன. தடக்கை மலை மிதந்தன - பெரியது திக்கைகளையுடைய யானைகள் மிதந்து கொண்டிருந்தன, வாம்பரிமிதந்தன - தாவிச் செல்லக் கூடிய குதிரைகள் மிதந்துகொண்டிருந்தன, வயப்போர்ச் சிலைமி தந்தன - வலிந்துவந்து போர் செய்தவர்களுடைய விற்கருவி கள் மிதந்துகொண்டிருந்தன. கொடி யொடு மிதந்தனதேர்கள் - கொடிகளோடுதேர்கள் மிதந்துகொண்டிருந்தன என்று அந்தப் போரில் அரக்கர் படைகளுக்கு ஏற்பட்ட பெருஞ் சேதத்தைக் கம்பரின் கவிநயம்மிக்க இவ்வாறான பல செய் யுள்கள் சுவைபடத் தருகின்றன. இச்செய்யுளில் மிதந்தன என்ற சொல் பலமுறை வந்து சுவைதர அமைப்பது சொற்பின் வருநிலையணி எனப்படும். இராமபாணம் எதிர்த்துவந்த படை யைத் துவம்சம் செய்ததைக் கூறும் பாடல்களில் சந்தக்கலி விருத்தத்தில் அமைந்த சில பாடல்களில் ஒன்றை இங்கே தருகின்றேன்.

***அழைத்தார்சிலர் அயர்ந்தார்சிலர் அழிந்தார்சிலர் கழிந்தார்
உழைத்தார்சிலர் உயிர்த்தார்சிலர் உருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தார்திரைக் குருதிக்கடல் குளித்தார்சிலர் கொலைவாய்
முழைத்தாரைகள் படப்பாரிடைமடிந்தார்சிலர் உடைந்தார்***

கம்ப. ஆரணிய. 462

கொலைவாய் மழைத்தாரைகள்பட - கொல்லும் தன்மை யுள்ள நுனிகளையுடைய இராமனது அம்புகள் மழைநீர்த் தாரைகளைப்போல மேல்விழுந்து தைப்பதனால், அழைத் தார்சிலர் - சிலர் தமக்கு யாராவது துணைக்கு வாருங்கள் என்று அழைத்தார்கள், அயர்ந்தார்சிலர் - சிலர் சோர்ந்து வீழ்ந்தார்கள், அழிந்தார்சிலர் கழிந்தார் - சிலர் அழிந்துபட்டார்கள், சிலர் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள், உழைத்தார் சிலர் - சிலர் காயம் பட்டு வருந்தினார்கள், உயிர்த்தார் சிலர் - சிலர் மூச்சுவிட முடியாது திணறினார்கள், உருண் டார்சிலர் புரண்டார்- சிலர் தரையிலே உருண்டுபுரண்டார் கள், குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார் - குழைந்தசேறுபோன்ற குருதிக் கடலிலே சிலர் மூழ்கிக் கொண்டிருந்தார்கள், சிலர் பாரிடைமடிந்தார் சிலர் உடைந் தார் - சிலர் தரையிலேவிழுந்து இறந்தார்கள், சிலர் நிலைத ளர்ந்து கெட்டார்கள்.

இவ்வாறு அரக்கர்படை இராம பாணத்தினால் பட்ட அவதிகளை இன்னும் பல பாடல்களிலே கம்பர் எடுத்துவருகிறார். இவ்வாறு இராமன் பொருதிக்கொண்டிருந்த வேளையில் கரனுடைய பதினான்கு படைத்தலைவர்கள் தமது படைகளுடன் இராமனைச் சுற்றிவளைக்க அவன் தொடர்ந்து போரிடுகின்றான். பதினான்கு படையணிகளும் போரில் மாண்டமையைக் கூறும் செய்யுள்களில் ஒன்று:

***தலைசிந்தினவிழிசிந்தினதழல்சிந்தினதரைமேல்***
***மலைசிந்தினபடிசிந்தினவரிசெந்துரமழைபோல்***
***சிலைசிந்தினகணைசிந்தினதிசைசிந்தினதிசையூடு***
***உலைசிந்தினபொறிசிந்தினஉயிர்சிந்தினஉடலம்***

கம்ப. ஆரணிய. 469

தலைசிந்தின - அந்தப்படையின் தலைகள் சிதறிவிழுந்தன, விழிசிந்தின தழல்சிந்தின - நெருப்புப் பொறிகளைச் சிந்திய படி அவர்களது கண்கள் சிதறி விழுந்தன, தரைமேல் மலை சிந்தினபடி சிந்தின வரிசெந்துரம் - தரையின்மேலே மலைகள் சிதறி விழுவதைப்போல முதுகிலே தவிசுகள் கட்டிய யானைகள் சிதறி விழுந்தன, மழைபோல் சிலைசிந்தின கணை சிந்தின திசைசிந்தின - இராமனது வில்லிலிருந்து மழை போலச் சொரிந்த அம்புகள் எல்லாத் திசைகளிலும் சிதறி விழுந்தன, திசையூடு உலைசிந்தினபொறிசிந்தின உயிர்சிந்தினஉடலம் - அந்தத் திசைகளிலெல்லாம் உலைக்களத்திலிருந்து நெருப்புப் பொறி சிதறுவதைப்போன்ற அவர்களது உடல்கள் உயிரைச் சிந்தி செத்துவீழ்ந்தன. இராமனது அம்பினால் படைவீரர்கள் கொன்று சிதைக்கப்பட்டதை இவ்வாறான சிறந்த சொற்கட்டுக்கொண்ட பல சந்தக்கலி விருத்தங்களால் கம்பர் பாடியிருக்கிற சிறப்பைக் காணலாம்.

***படைப்பெருந் தலைவரும் படைத்ததேர்களும்***
***உடைத்தடம் படைகளும் ஒழியஉற்றெதிர்***
***விடைத்தடர்ந்துஎதிர்ந்தவர் வீரன் வாளியால்***
***முடைத்தவெங் குருதியின் கடலில் மூழ்கினார்***

கம்ப. ஆரணிய. 470

படைப்பெருந்தலைவரும் - பெரியபடைத்தலைவர்கள் பதினான்குபேரும், படைத்ததேர்களும் - அவர்களுடைய தேர்களும், உடைத்தடம் படைகளும் ஒழிய - அவர்களுடைய போர்க் கருவிகளும் என்று இவை தவிர, எதிர் உற்று விடைத்து அடர்ந்து எதிர்ந்தவர் - இராமனின் எதிரே வந்து பெருஞ்சினத்தோடு எதிர்த்து நெருங்கிவந்தவர்கள் எல்லோரும், வீரன் வாளியால் முடைத்த வெங் குருதியின் கடலில் மூழ்கினார் - பெருவீரனான இராமனது அம்புகளினால் கொன்றழிக்கப்பட்டு முடைநாற்ற முடைய கொடிய குருதிக்கடலில் மூழ்கினார்கள் என்பது பொருள். வந்து எதிர்த்த அரக்கர்களுள் படைத்தலைவர்கள் பதினால்வர் தவிர அனைவரும் இறந்தொழிந்தார்கள். அப்படைத்தலைவர்களும், அவர்களின் தலைவனான கரனும், அவனது படையும், சூர்ப்பணகையும் என்ன ஆனார்கள் என்பதைக் கம்பனின் கவிநயத்தோடு சுவைத்து அறிய அடுத்த இதழ்வரை பொறுத்திருப்போம்.



shanmugarajah@thaiveedu.com



# தமிழ்வலை - 121

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-121 வினா

### இடமிருந்து வலம்

4 மறுமொழி

5 கூகிள் தலைமை நிறைவேற்று அதிகாரி

7 பாட்டுடைத் தலைவன்

10 பாதிப்பு

13 அம்பு எய்யும் கலை

14 வஞ்சம் தீர்

15 பாதுகாப்பாளர்

16 தொழும்பு

17 உதவி

18 புல்வகை

### மேலிருந்து கீழ்

1 கொடுத்த பொருளை அடுத்தபொழுதில் பாடும் பாட்டு

2 புளித்த பால் பானம்

3 நிலக்கடலை

6 ஒரு காட்டு விலங்கு

8 பகல் சந்தை

9 உபகரணம்

11 இலங்கையில் ஓர் ஊர்

12 சமுத்திரம்

14 ஒரு பறவை

15 ஏறத்தாழ 10 மைல் தூரம்


விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**


## தமிழ்வலை-120-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | தி | ■ | 2 ஆ | ணா | ன | ப் | 3 ப | ட் | ட |
| ல் | ■ | 4 ம | று | ■ | ■ | ■ | ல | ■ | ■ |
| லா | ■ | னை | ■ | 5 சி | 6 கை | ய | க | ம் | ■ |
| ந் | ■ | ■ | 7 பா | ■ | ய | ■ | ணி | ■ | ■ |
| 8 த | ம் | பு | த் | தே | க | மை | ■ | 9 அ | ளி |
| ர் | ■ | ■ | தி | ■ | ப் | ■ | ■ | ஃ | ■ |
| ■ | 10 க | ம் | மா | ■ | 11 ப | ட் | ட | றி | வு |
| ■ | ணை | ■ | ■ | ■ | டு | ■ | ■ | ணை | ■ |
| 12 அ | ங் | கி | டு | த | த் | 13 தி | ■ | ■ | 14 நா |
| ■ | கு | ■ | ■ | ■ | 15 து | றை | மு | க | ம் |

## தமிழ்வலை-120 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

கனகராஜா சிவகுரு, வவுனியா.
இராசாத்தி தேவதாஸ், ரொறன்ரோ.
உமா கதிர், ஏஜக்ஸ்.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
மேரி கெலன் தேவதாஸ்,நோத்யோர்க்.

### பரிசுபெறும் போட்டியாளர்

**விசுவநாதன் தாமரை,**
**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# முலையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை - 9

உலகின் பற்றற்ற உத்தம முனிவரும், கடவுளுமான பலராமன் தேடித்தேடிச் சிருஷ்டித்த கேரளத் தெருவில், கடவுளின் பிள்ளைகளெனத் தம்மைத் தாமே பிரகடனப்படுத்திய பிராமண நம்பூதிரி, வெள்ளையன் காலடியில் நசுங்கி மரணித்துக் கொண்டிருந்தான். வெள்ளையனை நம்பூதிரி அழுது தொழுது மண்டியிட்ட போதும் அவன் சற்றும் மனமிரங்க வில்லை. நம்பிக்கைத் துரோகத் திற்கான பரிசு இது என்றபடி வெள்ளையன் காலாலும், கையாலும் அவனைச் சரமாரியாக உதைத்து விட்டு அவ் விடத்தை விட்டகன்று நெடுநேரமாயிற்று.

தம்மினத்தைச் சூத்திரரென்று அழிக்கின்ற, தம் இனப் பெண்களை மானபங்கப்படுத்தி, அவர்களின் மார்பளவெடுத்து வரிவிதிக்கிற ஈனக் கொடூரவாதிகளிலொருவனான நம்பூதிரி தெருவில் சாய்ந்து கிடப்பதைப் பார்த்த சூத்திரச் சனங்கள் ஒன்றுகூடத் தொடங்கினர். தன்னினத்தை அழிப்பவனையே தொழுகிற சுரணை கெட்ட சூத்திரச் சனங்கள் அவர்கள். இப்படிச் சுரணையற்றுப் போய்த்தான் அடிமைச் சனங்கள் எங்குமிருந்தனர். தம்மை ஒடுக்குபவனையே பல்லக்கில் தூக்கி அவனுக்காக பல்லக்குச் சில்லினுள் நசிந்து உயிர்கொடுக்கின்ற பரிதாப அடிமைகளால் பூமி நிரம்பிய காலமிது.

நம்பூதிரிகளின் முக்கிய சூத்திரமான 'நசூத்ராய மதிம் தத்யா' என்பது 'சூத்திரன் படிக்கக்கூடாது!' என்கிறது. இந்த மந்திரத்தை மகிழ்வோடு சூத்திரனை ஏற்க வைத்திருப்பது பார்ப்பனியச் சாணக்கியம். பசியோடு அலறுகிற சூத்திரக் குழந்தைகளின் கண்முன்னாலேயே பசியற்ற வெற்றுச் சிலைகளுக்குப் பாலாபிசேகம் செய்து




மா. சித்திவினாயகம்

கொண்டிருந்தார்கள் நம்பூதிரிகள். அதைப் பக்தியோடு கும்பிட்டு நின்றார்கள் சூத்திரச்சனங்கள். இப்படி நம்பூதிரிகள் என்னதான் அநியாயம் செய்தாலும், அநியாயம் செய்யும் அவர்களுக்கே முண்டு கொடுத்து அவர்களையே ஆண்டவனாய்த் தொழுகிற அவலத்தில்தான் அனைத்துச் சூத்திரர்களும் இற்றைவரை இருந்தார்கள். இப்படித்தான் சூத்திரனான சம்பூகன் தலைகொய்யப்பட்ட வரலாற்றை சூத்திரரே கொண்டாடினர். அசுரர்கள் என்று சூத்திரரைக் கொல்லும் கொடூர நிகழ்வைத் தீபாவளியென சூத்திரர்களையே கொண்டாடச் செய்தார்கள். தன் இனச் சூத்திரனைக் கொன்றவனே தம் கடவுள் என்கின்றார்கள் இற்றைவரை இந்த சூத்திரர்கள்.

வெள்ளையரோடு சேர்ந்து, சூத்திரர்கள் படித்து நீதவனாக மாறினால்கூட 'ஆமாம் சாமி, எல்லாம் உங்களதும், உங்கள் கடவுளதும் பெருங்கருணையினால்தான் நான் படித்தேன்' என்று நம்பூதிரிகளின் காலடிச் சேவகர்களாகவே சூத்திரச்சாதி இன்றைக்கும் இருக்கின்றார்கள். இந்த அடிமைத்தனத்தின் உச்சத்தில்தான் ஆள்பவர்களின் அதிகாரமும் அநீதியும் இப்புவியில் அன்றும், இன்றும் அரங்கேறுகிறது.

***பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்***
***போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்!***
***பார்கொண்ட நாட்டில் பஞ்சமுமாம் என்றே***
***பேர்கொண்ட நந்தி தெரிந்து உரைத்தானே!***

இவ்வாறான பார்ப்பனர் மீதான பயபக்தி நம்பிக்கைகளில் கட்டுண்டு கிடந்தார்கள் சூத்திரர்கள்.

தலைவன் மற்றவர்களை விடவும் அதி உயர்ந்த குணங்களோடு இருத்தல் வேண்டும். ஆனால் இங்கு அத்தனை அயோக்கியத் தனமும் கொண்ட அயோக்கியர்கள்தான் நாடாளுகின்றத் தலைவர்களாக இருக்கின்றார்கள். விலங்குகள்கூட சூடு கண்ட இடத்தை விட்டு உடனேயே ஓடி விலகும். சூடு கண்ட பிறகும் தூர விலகாதவர்கள் இந்தச் சூத்திர மனிதர்கள். இந்த மனிதர்கள் பேசும் மனிதமும், அவர்களின் நியாயங்களும் விசித்திரமானவை.

'அண்ணன் தம்பிகளுக்கிடையே அடிபட்டுச் சாவது நல்லதில்லை. பார்க்கிறவன் கேவலமாகப் பேசுவானே. அதுக்கு நாம இடங்கொடுக்கப்படாது. ஒற்றுமையாய் போங்கய்யா' என்று உபதேசியாமல் அவர்களிடையே பகையை வளர்த்துக் கீதை உபதேசித்துப் பாரதப் போரை நடத்தியதே கேரளக் கடவுளான பலராமனும் அவன் தம்பி கிருஷ்ணனும்தான். குந்திக்குக் கர்ப்பமில்லாமலே தலைப் பிள்ளை சூரியன் கொடுத்தானாம் என்று பெருமை பேசி பின் கிருஷ்ணனே அவனை ஏமாற்றிக் கொல்வானாம் என்பதுதான் அங்குள்ள இறைநீதி. இதே போன்றதுதான் மேரி கதையும். கடவுள் ஆவி கொடுத்த கர்ப்பத்தோடலைந்து மேரி பெற்ற பிள்ளை சிலுவையில் மூர்க்கமாகக் கொல்லப்பட்டபோது காதுள்ளவன் கேட்காமலும், வாயுள்ளவன் பேசாதும் நின்றுவேடிக்கை பார்த்தான். இவற்றையெலாம் இவர்கள் புரியாமல் செய்கின்றார்களா? புரிந்து செய்கின்றார்களா? என்பதை எவரும் அறியவியலவில்லை.

செல்வத்தின் கொலை, நம்பூதிரியின் மரணமென தொடரும் கொடும் சம்பவங்கள் தந்த அச்சத்தின் பின் கணேசன் மிகக் கவலையாகவிருந்தான். ஒருவேளை செல்வத்தின் நண்பனான எனக்கும் இந்த விவகாரம் தெரிந்ததென நம்பூதிரிகள் நம்பினால் நம்மைச் சும்மா விடுவார்களா! அவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள்.

செம்பகத்தோடும் தம் குடும்பத்தோடும் கன்யாகுமரியூடாக இராமேஸ்வரம் நோக்கி இரவோடிரவாகப் போவதென கணேசன் முடிவெடுத்தான்.

பிறந்த இடத்தையும், வாழ்ந்த வீட்டையும் விட்டு அகதியாகப் போவது எத்துணை கொடூரம். பிறந்த மண்ணில் வாழ்ந்து, அங்கு வீசும் சுகந்தக் காற்றைச் சுவாசித்து, அங்குள்ள மரங்களிலேறி கொப்புத்தாவி, குரங்குகளோடு குரங்குகளாய் இயற்கையோடு ஒன்றிக்கிடந்த ஊரை, முன்னோர்கள் காலங்காலமாய் வாழ்ந்த ஊரைவிட்டு ஒரே நாளில் போவதென்பது பெருஞ் சாபம். சொந்த நாட்டை விட்டுப் போவதென்பது, நாம் வளர்த்த கலாசாரம், பண்பாடு, இனசனம் எல்லாவற்றையும் மூட்டை கட்டி எறிந்துவிட்டுச் செல்கிற அவலந்தான். ஊர் துறந்த அகதிக்கு அதன் பிறகு எந்தப் பண்பாடு நிலைக்கும்?

உலகத்திற்கே புரட்சி வரலாற்றை எழுதி வைத்துவிட்டுப் போயுள்ள ஈழவர் பெண்ணான நங்கேலியின் உறவினளான என் செம்பகத்தை ஓடியோடி விரும்பிக் காதலித்தவன் நான். என்னையும் அவள் விரும்பித்தான் காதலித்தாள். என்னை நம்பி வந்த அவளைக் காப்பாற்ற வேண்டும். இராமேஸ்வரம் சென்று அவள் விரும்பியபடி அங்கு மணம் செய்ய வேண்டும். கேரளத்தில் பெண்களாய்ப் பிறப்பவர்கள் பெரும் பாவிகள் என்கிற நாட்கள் அது. வெள்ளையர், நம்பூதிரிகள், அவர்களின் எடுபிடிகள் என ஆதிக்க வர்க்கம் திருமணமான பல பெண்களை, குடும்பங்களைக்கூட கண் முன்னாலேயே சீரழித்துவிடுகின்றார்கள். அதிகாரத்திலுள்ள ஆண்கள், பெண்களை சீரழித்து ஏமாற்றுகிறார்களென்பதைவிடவும் அந்நியர்களுக்கு அடிமைகளாக்கவும், வெளிநாடுகளுக்குப் பெண்களை விற்கவுமான அதிகாரத்திலும் அவர்களே இருந்தார்கள்.

'முலக்கரம்' என்று அழைக்கப்பட்ட முலைவரி என்கிற மானிட குலத்தின் மிகவும் கேடான வரிமுறை அக்காலத்தில்தான் திருவிதாங்கூரில் இருந்தது. கடவுளின் சிறுதுளி மனிதனென்றால் சூத்திரனும் சிறுதுளியா? அப்போ அவனுக்கேன் இங்கு எந்த உரிமையும் இல்லை? எந்த சாமியையும் நம்பாதவனைப் பேய்களும் பில்லி சூனியங்களும் தொட்டதே கிடையாதே, இது ஏன் இந்த மக்களுக்குப் புரிவதேயில்லை?

சூத்திரச் சனங்கள் பயபக்தியோடு இந்தப் பிரச்சினைகளுடன் சேர்ந்து இன்னலை அனுபவிக்கவே விரும்புகின்றனர். இம்மாதிரி குப்பை நம்பிக்கைகளை விட்டு விலகியிருந்தாலே பாதிப் பிரச்சினை கிடையாது. ஆனால் நம்பூதிரிகள் அதற்கு விடவே மாட்டார்கள்.

மிகப்பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட பூப்பெய்திய இளம் பெண்கள் மீது பல நூற்றாண்டுகளாக விதிக்கப்பட்ட கொடுமையான வரி முலைவரி. மார்பை மறைத்து, மேலாடை அணியாமல் மகளிரைக் கேவலமாக்கிய நாட்கள் அது, மீசை வளர்ந்த தலித் ஆண்களுக்கு மீசை வரியும் கூட அங்கு விதிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட பெண்கள் என வரையறுக்கப்பட்ட 18 சாதிகளுக்கும் இது விதிக்கப்பட்டது. இதை வசூல் செய்வதிலும் மிகவும் கடுமை காட்டப்பட்டது. நம்பூதிரிப்பார்ப்பனர்கள்தான் சூத்திரப் பெண்களின் முலை அளவைப் பார்த்து அவர்களுக்கு வரி விதித்து அவர்களைச் சீரழிக்கிற அதிகாரம் பெற்றவர்களாக இருந்தார்கள். அப்படி இந்தக்

கொடுமையை எதிர்த்து முலைவரி கேட்டவனிடம், தன் முலையையே கூர் வாளால் அரிந்து கொடுத்தவள்தான் கேரளத்து வீரப்பெண் நங்கேலி.

இந்தக் கொடூரங்களிலிருந்தும், அவமானத்திலிருந்தும் தப்பித்துத் தாம் பிறந்த இடத்தை விட்டு ஓடிக்கொண்டிருந்தனர் பெண்ணைப் பெற்றவர்கள். அதே போன்று கேரளத்திலிருந்து கன்னியா குமரி வழியாகத் தப்பித்துப் போக வழி தேடும் குடும்பம் இப்போ கணேசனது.

கணேசன், கணேசனின் தங்கை வள்ளி, தாய் மூவரும் சேர்ந்ததுதான் அவர்கள் குடும்பம். வள்ளியை முலை காட்ட நிர்ப்பந்தித்து அதைச் சாட்டாக வைத்து வன்புணரத் துடித்த நம்பூதிரிகளினதும், வெள்ளையர்களுக்கு அவளைக் கூட்டிக் கொடுக்க நின்ற அரச ஆதரவு மைனர்களினதும், கழுகுக் கண்களிலிருந்து தங்கையைக் காப்பாற்றி இராமேஸ்வரம் போக வேண்டிய தேவையும் கணேசனுக்கு இருந்தது.

விவசாயம்தான் கணேசனது குடும்பத் தொழில். விவசாயம் மிகவும் கடினமானது என்பது மட்டுமின்றி, வானம் பொய்த்தால் அதிலிருந்து அவர்களால் எந்த வருமானத்தையும் ஈட்ட முடியாது. இனி ஒரே வழி தேசம் விட்டுத் தேசம் செல்லும் அந்நியக் கப்பல் ஏற வேண்டியதுதான். கணேசன் முடிவெடுத்துவிட்டான். செம்பகமும் முலைவரிக்கெதிராகத் தன் பிரிய உறவினரான நங்கேலி தன் முலையை அறுத்தெறிந்து மாண்ட செய்திக்குப் பிறகு அங்கு இருக்க விரும்பவில்லை. தன்னை விரும்பிய கணேசனுடன் கேரளத்திலிருந்து தப்பித்து ஓடி மணம்புரிந்து குமரி வழியாக இராமேஸ்வரம் போகச் சம்மதித்திருந்தாள்.

திட்டமிட்டபடி அவர்கள் பயணத்தைத் தொடங்கிவிட்டார்கள். கன்னியாகுமரியிலுள்ள மாமன் வீட்டில் தங்கை வள்ளியையும், அம்மாவையும் விட்டுவிட்டு கணேசனும், செம்பகமும் தனித்து இலங்கை போவதாகவே திட்டம். அதன்படி கன்னியாகுமரியில் அவர்களை விட்ட பின் படாதபாடுபட்டு அவர்கள் இராமேஸ்வரம் வந்தாயிற்று.

இராமேஸ்வரத்தின் இராமநாத சுவாமி முன்னிலையில் அவன் செம்பகத்திற்கு மாங்கல்யம் சூட்டினான். செம்பகம் தன் கனவு நனவானதையெண்ணி மகிழ்வாகவிருந்தாள். தூரத்தே நின்றிருந்த சோடிக்கூளக்கடாக்களின் பேடை மனம்மகிழ்ந்து நடனமிட்டு தன் ஆண் பறவையின் நடனத்திற்கேற்ப சுற்றிச் சுற்றிவந்தது. இதேபோல்தான் கேரளக் கும்மாட்டிகளின் குதியாட்டம் இருக்கும்.

கேரளத்தின் பாலக்காடு மாவட்டத்துக் குனிசேரி கிராமத்தில் உள்ள பூக்குளங்கரை பகவதி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் திருவிழா குனிசேரி கும்மாட்டி ஆடல் திருவிழா. அத்திருவிழாக்களுக்குத் தப்பாமல் போகிற செம்பகம் பகவதியம்மாவே கூளக்கடாவாகி தன் திருமணத்தினை ஆசீர்வதித்துக் கூத்தாடுவதாக மகிழ்ந்தாள்.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



அரசனுக்கும் பூர்விகாவிற்கும் ஒரே செல்ல மகள் கார்த்திகா. அவர்களின் உலகம், மகிழ்ச்சி எல்லாமே அவள்தான். அளவற்ற அன்பில் வளர்ந்த அந்தச் சிறுமி தற்கொலைக்கு முயன்றது அவர்களைப் பாறை போலப் பிளந்தது. பேரதிர்ச்சியும் விளங்காத குழப்பமும் அவர்களை ஆட்கொண்டது. ‘இப்படி எப்படிச் சம்பவிக்க முடியும்?’ என்று வலியில் தத்தளித்த அவர்களுக்கு, உயிரை முடிக்க கார்த்திகா ஏன் நினைத்தாள் என்பது புரியாத புதிராக இருந்தது. தாய், தந்தையின் அன்பால் சூழப்பட்ட கார்த்திகா இப்படி ஒரு முடிவுக்கு வருவாள் என்று அவர்கள் கனவிலும் நினைத்ததில்லை.

குடும்ப வாழ்க்கையில் அரசனுக்கும் பூர்விகாக்கும் உரிய தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் வெவ்வேறானதாக அமைந்தமையால் இருவருக்கும் ஒருவரை ஒருவர் பிடிக்காமல் போனது, அவர்கள் வீட்டில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. திருமணமான புதிதில் பூர்விகா அன்பாக நடந்துகொண்டாள். ஆனால், நாளடைவில் இருவருக்கும் ஏற்பட்ட தொடர் சண்டைகள், ‘விவாகரத்துதான் ஒரே தீர்வு’ என்ற முடிவுக்கு அவர்களை இழுத்துச் சென்றன. நீதிமன்றத்தின் உத்தரவின்படி அவர்களின் உறவு முடிவுக்கு வந்தது. ஒரு காலத்தில் உயிராக இருந்த இருவரும் விதியின் முன் பிரிந்து சென்றனர்.



# ஒரு வீட்டில் ஐந்து பகீகநீகள்

- செ. டானியல் ஜீவா

அந்த விவாகரத்து முடிந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தன. ஆனால், அந்தப் பிரிவின் விளைவுகளால் கார்த்திகா மிகவும் பாதிக்கப்பட்டதால்தான் தற்கொலைக்கு முயன்றாள் என்பதை உணர்ந்தபோது, அவர்களின் மனம் பிளந்து போனது. 'விவாகரத்துதான் எங்கள் குழந்தையின் மனதில் ஆழமான காயத்தை ஏற்படுத்திவிட்டதோ?' என்ற வேதனையான எண்ணம் இருவரையும் துரத்தத் தொடங்கியது.

பூர்விகாவின் மனதில் எப்போதும் அவளுடைய பெற்றோர்கள் மீதான அக்கறை இருந்தது, தம்பியை வெளிநாட்டிற்கு எடுத்து விட வேண்டும், தங்கைக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற கனவுகள் எண்ணங்கள் அவள் மனதில் சுழன்று கொண்டிருந்தன. இந்தக் கனவுகளை அரசனோடு சேர்ந்து, குடும்பமாக வாழ்ந்தால் நிறைவேற்றலாம் என்று நம்பினாள்.

ஆனால், அரசன் இயல்பாகவே எதற்கும் கவலைப்படாதவன். குடும்பத்தின் எதிர்காலம் பற்றி யோசிக்கும் பழக்கமே அவனிடம் இல்லை. வாழ்க்கையில் எந்த இலட்சியமோ, திசையோ இல்லாதவனாக இருந்தான். பொருளாதார நெருக்கடி காலங்களில்கூட, எந்தக் கவலையும் இல்லாததுபோல நடந்துகொண்டான். தினமும் உழைத்து, தினம் செலவழிப்பதே வாழ்க்கை என்று அவன் நம்பினான். வெளியே செல்லும்போதுகூட, சரியாக உடை அணியாமல் செல்லும் வழக்கம் அவனிடம் இருந்தது. பூர்விகா எவ்வளவோ சொல்லியும் அவன் திருந்தவில்லை. இரவில் மது குடிப்பது அவனுக்குப் பழக்கமாகிவிட்டது. அவன் அவளுடன் கோபமாகச் சண்டையிடவில்லை என்றாலும், தனிமையில் குடித்துவிட்டு உறங்குவதில்தான் அவனுக்கு அமைதி கிடைத்தது. அவனுடைய இந்தப் பழக்கவழக்கங்களை ஒரு கட்டம் வரை பூர்விகா பொறுத்துக்கொண்டாள்.

திருமண வாழ்க்கை ஆரம்பித்த காலத்திலிருந்தே தானும் அவனும் எதிர்கொண்ட வலிகள், மௌனப் போராட்டங்கள், ஒற்றையனாய் உணர்ந்த இரவுகள் அனைத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுதான் ஒரே வழியென அவள் ஒரு கட்டத்தில் எண்ணியிருந்தாள்.

மெல்லிய உடலமைப்பும், சற்று நீண்ட மூக்கும், தடித்த உதடுகளில் மெல்லிய பிங்க் நிற கோடுகளும் சேர்ந்து, அவளது முகம் ஒரு அழகான ஓவியத்தைப் போல இருந்தது. சற்று உயரம் கொண்டவளாகவும், வெளித் தோற்றத்தில் வசீகரம் நிறைந்தவளாகவும் இருந்தாள். இறுக்கமான பேன்ட் அணியும் போது, அவளது கால்களில் உள்ள வளைவுகள் தெளிவாகக் காட்சியளிக்கும். ஆனால், அதை அவள் குறையாகக் கருதவில்லை. மாறாக, 'நான் யாழ்ப்பாணத்து சராசரி பெண்களுக்கு மேலான அழகுடையவள்,' என்று பெருமையுடன், நம்பிக்கையோடு பேசுவதை அரசன் பலமுறை கேட்டிருக்கிறான்.

எப்போதும் புன்சிரிப்போடு இருப்பவளே பூர்விகா. ஆனால், அவளது கண்களில் இருந்த பார்வை மட்டும் வெறித்தனமாக, கடிக்க காத்திருக்கும் நாய் போல தீவிரமாக இருப்பது வழக்கம். அந்த பார்வை, அரசனோடு வாழ்ந்த நாட்களில் அதிகமாக தோன்றியதாகப் பூர்விகாவே உணர்ந்திருந்தாள். அந்தக் கடுமையான பார்வையின் தொடக்க காரணம், கனடா வந்தபின் அரசனுடன் ஏற்பட்ட முரண்பாடுகளாக இருந்தாலும், பின்னர் அவர்களுக்குள் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. அத்துடன், அவளது வயிற்றில் உருவான கருவை அரசனின் தாயின் கட்டாயத்தால் அவன் முடிவெடுத்து அழித்தது. அந்த நிகழ்வு அவளுக்குள் பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. அந்த நாளிலிருந்து, அவளது பார்வையில் மென்மை இல்லாத ஒரு கசப்பு பதிந்தது. பெரும்பாலும் அந்த மனநிலையுடன் அரசன் மீது மட்டும் கடுமையாக நடந்துகொண்டாலும், பிறரிடம் அவ்வாறு இல்லாமல் இருப்பது அவளுக்குத் தெளிவாகவே தெரிந்திருந்தது.

மணமுறிவு ஏற்பட்ட போது, 'அந்த முடிவு சரியா, தவறா என்பதைக் காலமே தீர்மானிக்க வேண்டும்' என்ற மனநிலையுடன் பூர்விகா விவாகரத்தைத் தேர்ந்தெடுத்தாள். அதே நேரத்தில், 'விவாகரத்தால் ஏற்பட்ட வலிகள் ஒருநாள் தானாகவே மறைந்துவிடும்' என்ற நம்பிக்கையும் அவளுக்குள் இருந்தது.

இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை உணர்ந்ததும், அவர்கள் அந்த உண்மையை ஏற்றுக்கொண்டார்கள். இதனால் கார்த்திகாவின் மனம் சிதைந்தது.

அவர்கள் பிரிந்து செல்லும் போது, முக்கிய சொத்தான வீடு அப்போதைய சந்தை விலையின்படி மதிப்பீடு செய்யப்பட்டு, இருவருக்கும் சமமாகப் பங்கிடப்பட்டது. அந்த வீட்டுக்குரிய அரைவாசி தொகையைப் பூர்விகா கொடுத்து, அந்த வீட்டை வாங்கிக் கொண்டாள். சட்டத்தரணியின் மூலம் கொடுக்கப்பட்ட அதற்கான காசோலையை பெற்றுக்கொண்டு, அவன் தன் தாயின் வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

நீதிமன்ற உத்தரவுப்படி, அரசன் தன் மகளை வாரம் ஒரு முறை சனிக்கிழமை மட்டும் சந்திக்க அனுமதி பெற்றிருந்தான். அப்போது கார்த்திகாவுக்கு 13 வயதாக இருந்தது. விவாகரத்துக்குப் பிறகு, 11-வது வயதில் இருந்தே அவள் தந்தையிடம் இருந்த அன்பு ஓரளவாக குறைந்துவிட்டது.

அந்த 11-வது வயதில், ஒரு கடுமையான சண்டைக்குப் பிறகே அரசன் வீட்டிலிருந்து வெளியேறினான். 'வெளியேறினான்' என்பது சரியான வார்த்தையல்ல; 'வெளியேற்றப்பட்டான்' என்பதே உண்மை. அதன் பின் அரசன் எந்தக் காரணத்திற்கும் பூர்விகாவின் வீட்டுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. திருமண முறிவின் போது தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப் பட்டியலில், இந்த நிபந்தனையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அவனுடைய சந்திப்பு நாள் வந்ததும், கார்த்திகாவை அழைத்துச் செல்ல பூர்விகாவின் வீட்டிற்கு வருவான். அப்படி அவன் வரும்போது வீட்டின் வெளிப்பக்கத்தில் காரை நிறுத்தி, கார்த்திகாவை ஏற்றிக்கொண்டு செல்வதுதான் வழக்கம். அவன் வீட்டிற்கு வரும்போது, பூர்விகா உள்ளே நின்றபடியே கதவின் இடுக்கினூடாக கார்த்திகா அவளது அப்பாவின் காரில் ஏறும் வரை பார்த்துக்கொண்டிருப்பாள்.

எந்தக் காரணத்திற்கும் அரசனுடன் அவள் பேசுவதில்லை. அவசியம் ஏற்பட்டால் மட்டும் சில வார்த்தைகள் பேசுவாள். அதைவிட எதுவும் பேசுவது இல்லை. ஒரு சில நேரங்களில், கார்த்திகாவை அழைத்துச் செல்ல தாமதமாக வந்தால், அவள் முணுமுணுத்தபடி வீட்டின் முன் பக்கமாக உள்ள கத

வின் ஓரத்தில் நின்றுவிடுவாள். அந்த முணுமுணுப்பு அவனுக்குக் கேட்கும்படியாகவே அவள் நடந்து கொள்வாள். அது அவனுக்குத் தெரியும். ஆனாலும், அவன் எதையும் வெளிப்படையாகக் காட்டமாட்டான். அவன் எதையும் திருப்பிச் சொல்லாமல் போகிறான் என்றுகூட, பூர்விகா மனதளவில் ஒருநாளும் நினைத்தும் பார்த்ததில்லை...

பூர்விகாவின் தனிப்பட்ட நடவடிக்கைகளில் அவன் தலையிடுவதில்லை. 'அது அவளுடைய சுதந்திரம்' என்று விட்டுவிடுவான். பூர்விகா இவற்றுக்கெல்லாம் நேர்மாறான போக்குக் கொண்டவள். 'வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும்' என்று நம்பும் அவள், நேர்த்தியாக உடை அணிவதிலிருந்து, தன்னை அழகுபடுத்துவதிலும் மிகுந்த கவனம் செலுத்துவாள். பணத்தின் மீது எவ்வளவு கவனம் செலுத்துகிறாளோ, அதே அளவு தன்னுடைய உடல்மீதும் கவனம் கொடுப்பாள்.

இருவரும் உழைத்து சம்பாதிக்கும் வருமானம், வீட்டுக் கடன் கட்டுவதிலும், ஏனைய தேவைகளைச் சமாளிப்பதிலும் முடிந்துவிடும். கொஞ்சம் பணம் சேமிக்க முயற்சி செய்தாலும், அவளுடைய குடும்பத்தினர் தொலைபேசியில் பேசும்போது, பத்து, பதினோராவது நிமிடத்தில் 'பணம் எங்கே?', 'வெளிநாட்டுக்கு எடுத்து விட முடியுமா?' என்பது குறித்தே பேசுவார்கள். அப்படி அவர்கள் பேசும்போது, 'எப்படி பணத்தை மிச்சம் பிடித்து சேமிக்க முடியும்?' என்ற எண்ணம் பூர்விகாவுக்குள் எழும்.

கார்த்திகா தன்னுடைய தாயைப் பற்றி சொல்கின்ற குற்றச்சாட்டில் பிரதானமானது, தன்னுடைய தாய் ஒரு ஆண் நண்பரோடு திரிவது, கதைப்பது அவளுக்கு கொஞ்சமும் பிடிக்காத விஷயமாக இருந்தது. அவளுடைய தாய் தன்னுடைய ஆண் நண்பரோடு பேசிக்கொண்டு இருக்கும் போது தன்னைக் கண்டதும் பெண் நண்பர்களுடன் கதைப்பது போல பேசுவதும், இரவில் தூங்கும்போது போர்வைக்குள் செல்போனை ஒழித்து வைத்து கதைப்பதும் அவளுக்கு தெரிந்தது. அவள் பல தடவை அதைக் கண்டுபிடித்து இருந்தாள். அதை அவள் அரசனிடம் சொன்னபோது அவன் அதை பெரிதாக பொருட்படுத்தாத மாதிரி விட்டுவிட்டான். அது யாரும் இல்லை, அரசனின் நீண்டகால நண்பன் சுந்தரம்தான்.

அரசன் யாழ்ப்பாணத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்தில்தான் சுந்தரம் அவனுடன் நட்பாகப் பழகினான். ஒரே பாடசாலை ஒரே வகுப்பில் படிக்கும்போது அரசனுக்குப் பிடிக்காத பல விஷயங்கள் அவனிடம் இருப்பதை அறிந்திருந்தான். பின் கனடாவுக்கு குடிபெயர்ந்து அவனும் வந்தான். வந்த காலத்திலிருந்து அவனோடு தொடர்ந்து நட்பாக இருந்தவன், அவன் அடிக்கடி வீட்டுக்கு வரத் தொடங்கிய பின் அவனுடைய போக்கில் தவறைக் கண்டான். அதனால், அவனோடு கதை பேச்சை வைத்துக் கொள்வதை நிறுத்திக் கொண்டான். தன்னுடைய வீட்டிற்கும் வரக்கூடாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டான். ஆனால், அவன் பூர்விகாவுடன் சேர்ந்து திரிவதுடன் நில்லாது வீட்டிற்கும் தொடர்ந்து வந்தான். அதைக் கண்ட அரசனால் தன் உணர்வுகளைக்கட்டுப்படுத்த முடியவில்லை.

சுந்தரம் குறுகிய காலத்தில் மிக வசதி படைத்தவனாக மாறினான். திருமணம் செய்து மனைவியையும் இங்கு அழைத்து வந்தான். அதன்பின் அவனுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. இருவரும் உழைக்கும் பணத்தில் நிறைய சேமிக்கத் தொடங்கினார்கள். இரண்டு வீடுகளும் இரண்டு வாகனங்களும் அவர்கள் வாங்கினார்கள். அவனுடைய மனைவியும் வேலைக்கு போனாள். இருவருமே சிக்கனமாக இருந்ததால் வரும் வருமானத்தில் பெருந்தொகையைத் தங்களுக்கு தெரிந்தவர்களுக்கு வட்டிக்கு கொடுத்தனர். அதன் வழியாகவும் அவர்களுக்கு பணம் பெருகத் தொடங்கியது.

பிரிந்து வாழத் தொடங்கிய காலத்திலிருந்து அரசன் அவனுடைய அம்மாவின் வீட்டிலேயே இருக்கத் தொடங்கிவிட்டான். அம்மா இப்போது இரண்டு மாதமாக அவனைத் திரும்பவும் திருமணம் செய்யும்படி ஒரே நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். திருமணம் காலகாலத்தில் செய்ய வேண்டும் என்று அவர் சொல்லும் போதெல்லாம், அதற்கு அவன் பல்வேறு காரணங்கள் சொல்லி அதை தட்டிக்கழித்த போது, இம்முறை ஒரு முடிவை எடுத்துக்கொண்டு விடாப்பிடியாக அம்மா இருக்கிறார் என்பதை உணரக்கூடியதாக அவனுக்கு இருந்தது.

இந்த விஷய சம்பந்தமாக கார்த்திகாவிடம் அவன் சொன்னபோது கார்த்திகா சொன்னாள்: 'அப்பா, எந்த காரணத்தைக் கொண்டும் உங்களைத் திருமணம் செய்ய நான் விட மாட்டேன். உங்களுக்கும் அதிலே விருப்பம் இல்லை என்று எனக்கு தெரியும். நான் எங்கட அப்பம்மாவோட கதைப்பேன்' என்றாள். அதன்படி கார்த்திகா அவனுடைய அம்மாவுடன் கதைத்ததும் தற்காலிகமாக அதை நிறுத்தினாள். இவ்வளவு துணிச்சல் கார்த்திகாவுக்கு எங்கிருந்து வந்தது என்று அவன் ஆச்சரியப்பட்டான்.

அவன் உடலும் மனமும் சுகத்தை அனுபவிக்க தேடுவது கிடையாது என்றும் அவன் எப்போதும் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்கித் தவித்துக்கொண்டு இருப்பதாகவும் பூர்விகா நினைத்துக் கொள்வாள். அதை அவள் பல முறை அவனிடம் சொல்லியிருந்தாள். ஆனால், அவன் அதைக் கவனிக்காத போதும் அவனோடு வெளிப்படையாக அன்பைப் பகிர்வதற்கு அப்பால், அவளுடைய வாழ்க்கை அவள் மேல் பெரும் சுமையை சுமத்தி விட்டிருந்தது, கல்யாணம் செய்வதற்கும், கனடா வருவதற்கும் அவள் பெரிதாக அப்போது விரும்பவில்லை. அதை அவள் தன்னுடைய பெற்றோரிடம் சொல்லியிருந்தாள். ஆனால், தன்னுடைய குடும்பத்தை வெறுக்க கூடாது என்பதற்காகவும், குடும்பத்தின் வறுமை காரணமாகவும் அவள் இந்த முடிவுக்கு வந்தாள். 'எப்படியோ கனடா போனால் தன்னுடைய குடும்பத்தை வசதியான நிலைக்கு கொண்டு வரலாம்' என்ற நம்பிக்கையோடு அவள் இருந்தாள். வந்த காலத்திலிருந்தே அந்த நோக்கத்தை நோக்கி தன்னை நகர்த்திக் கொண்டிருந்தாள்.

பூர்விகா பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு பின் வீட்டுக்கு வந்து சமைத்து வைத்துவிட்டு சோர்ந்து போன அவருடைய வாழ்க்கையில், இரவு ஒன்று வந்தால் ஒரு பெரிய மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் உட்கார்ந்து இருப்பது போல், ஒரு மங்கிய மின்விளக்கின் பக்கத்தில் எப்போதும் இருப்பாள்.

அப்போதுதான் அவள் தொலைபேசியை கையில் எடுத்து ஏதேனும் பார்த்துக் கொண்டிருப்பாள். இது இரவு தூங்குவதற்கு முன்னால் செய்வது. இது அவளுக்கு நீண்டகால பழக்கமாகவே இருந்து வந்தது. அப்படி அவள் அந்த மெல்லிய வெளிச்சத்தில் இருப்பது, அவளுடைய உடலில் இருந்து ஒரு

வகையான உணர்ச்சியை மீட்டு நிரப்புவது போல் அவளுக்கு இருக்கும். அவளது கண்கள் வானத்தில் மிதக்கும் ஒளி நட்சத்திரம் போல் பிரகாசிக்கும். அப்போது அவளைப் பார்க்கும் போது பேரழகோடு இருப்பது போல் தோன்றும். அதுதான் அவளுக்கு அந்த நாளின் ஒரு நிம்மதியான நேரம் என்று சொல்லலாம். கொஞ்ச நேரம் தான் அவள் அப்படி அனுபவிப்பாள், அது நீடிக்காமலே தூக்கம் வந்துவிடும். அப்போது அவள் அறைக்குள் நுழைந்ததும், கட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும் அரசனின் பக்கத்தில் அவளும் படுத்துக் கொள்வாள். இரவுகள் வந்ததும், அவனை அணைத்துக்கொள்ள வேண்டும் போல அவளுக்குள் ஒரு உணர்வு எழும். ஆனால், ஒரு வகை புரியாத உணர்ச்சி அவளைத் தடுக்கச் செய்யும். ‘அவனும் நானும் ஒரே நிலைமையில் இருப்பது எப்போதும் சாத்தியமில்லை,’ என்று அவன் கூட வாழ்ந்த நாட்களில் அவள் உணர்ந்திருந்தாள்.



ஒரு கணம் அந்த நினைவுகள் மனதில் வந்து போகும்; அப்படியே அந்த ஆசைகளை ஒதுக்கி வைத்து, அமை தியாக தூங்கிவிடுவாள். அவளுடைய பல இரவுகள் இப்படித்தான் அமைதியாகக் கடந்து போயின.

அவன் அவளுடைய வீட்டை விட்டு வெளியேறிய பின்தான், அவளுடைய மன அமைதியிலும் பொருளாதார நிலையிலும் பெரும் மாற்றம் வரத் தொடங்கியது. அவள் விரும்பியவாறு வாழத் தொடங்கிய வேளையில்தான் அவனுடைய தம்பியை பிரான்ஸுக்கு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அவளிடம் சேமிப்பில் இருந்த பணத்தைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. மிகுதியாகப் பணம் தேவைப் பட்டு பணக்கஷ்டம் ஏற்பட்டபோது அவ்வப்போது சுந்தரத்திடம் 100, 200 டாலர் என்று வாங்கிக் கொண்டிருந்தவள், திடீரென அவனிடம் 40 ஆயிரம் டாலர் கேட்டபோது, அவன் வட்டிக்கு கொடுத் தான்.

அவன் கொடுக்கும் பொழுதே, ‘இது தன்னுடைய பணம் இல்லை; நண்பருடைய பணம்,’ என்றுதான் சொன்னான். ஆனால் பூர்விகாவின் மனம் அதனை நம்பவில்லை. ‘இது அவனுடைய பணம் தான்,’ என்பதை அவள் உறுதியாக நம்பினாள்.

ஏற்கனவே பல தடவை அவளுடன் கடைகளுக்குச் சென்ற போது அவள் அவனைக் கவனித்து வைத்திருந்தாள். அவனுடைய இயல்பில் கஞ்சத்தனமும் காசுப்பைத்தியமும் இருப்பதை, அவனோடு பழகிய காலத்தில் அவள் நேரில் பல தடவை பார்த்திருக்கிறாள். அவனிடம் வாங்கிய பணத்திற்கு வட்டித் தொகையாக மாதம் 800 டாலர் அவள் செலுத்தத் தொடங்கினாள். அந்தப் பணத்தை அவள் பெற்றுக்கொண்ட பின்னரே சுந்தரத்துக்கும் பூர்விகாவுக்கும் இடையில் நெருக்கமான உறவு தொடங்குகிறது.

ஆரம்பத்தில் அவ்விருவருக்கும் இடையிலான உறவு மிகவும் சந்தோஷமாகவே போய்க்கொண்டிருந்தது. அரசன் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் அவன் அடிக்கடி வருவது கார்த்திகாவுக்கு பிடிக்காத விடயமாக இருந்தது. அதனால்தான் கார்த்திகா ஒரு தனி மையை விரும்புகிறவள் போல் அவளுடைய நடவடிக்கைகள் அமைந்து விட்டிருந்தன. பின்னர் தன்னுடைய வாழ்க்கையின் போக்கை மெல்ல மெல்ல அவள் மாற்றிக் கொள்கிறாள். பள்ளிக்கூடத்துக்கு போய் வந்தால் அறைக்குள்ளேயே எப்பொழுதும் அவள் இருப்பாள். அந்த தனிமைதான் அவளை மன உளைச்சலுக்கு கொண்டு சென்று விட்டது. இது பற்றி பூர்விகாவுக்கு ஆரம்ப காலத்தில் எதுவும் தெரியவில்லை. அவள் புரிந்து கொள்ளமுடியாத நிலை யில் இருந்தாள். அந்தளவுக்கு அவ ளுக்கு வேலைப்பளு அதிகரித்தது. கார்த்திகாவின் போக்கில் ஏற்பட்ட மாற் றத்தை பின்னர்தான் அவள் அவதானிக்கத் தொடங்கினாள்.

வீட்டை விட்டு அரசனை வெளியேற்றுவதில் விடாப்பிடியாக இருந்து, பின் அவனை வெளியேற்றிய பின் இப்போது தான் தவறு செய்துவிட்டேன் என்று நினைத்து கவலை கொண்டாள். கார்த்திகாவிற்கு ஏற்பட்ட மனச் சிதைவுக்கு கார ணம் தங்களுடைய திருமண முறிவுதான் என்று பூர்விகா ஒருமுறை யோசித்தும் பார்த்தாள். அவளுக்கு இன்னொரு பக் கம் கார்த்திகாவிற்கும் அவளுடைய அப்பாவிற்குமான இடைவெளி அதிகரித்தது. இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் ஒரு யோசனை தோன்றியது. அது தான் சரியான காரணமாக இருக்கலாம் என்று அவள் உணர்ந்த போதெல்லாம் அதை சரி செய்ய முயற்சிக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

ஆனால், இடையில் வந்த அவளுடைய மீட்பரும், வட்டிக்கு பணம் கொடுப்பவரும், காதலனாக இருந்த சுந்தரத்துடன் ஏற்பட்ட நெருக்கமான உறவுதான் இத்தனை மாற்றங்களுக்கு காரணமா எனவும் அவள் யோசிக்கத் தொடங்கினாள்.

நெருக்கடியான சூழ்நிலையிலும், எந்த பிரச்சினையையும் மிக இலாவகமாகக் கடந்து செல்லும் திறமை அவளுக்கு இயல்பாகவே இருந்தது. உயர் புத்திக்கூர்மை கொண்டவளாகவும், தன்னைச் சுற்றி நடக்கும் சமூக நிகழ்வுகளை கவனித்து, புரிந்து கொள்ளும் பழக்கம் அவளுக்கு பிறப்பிலிருந்தே இருந்ததாக அவள் நம்புகிறாள்.

ஆனால் சில நாட்களாக, அவளுக்கு மிகுந்த நெருக்கடியான காலம் வந்துவிட்டது போலவே உணர்ந்தாள். பண நெருக்கடி, மன அழுத்தம் - எல்லாமே அதிகரித்தது போல அவளுக்குள் ஒரு சோர்வு ஏற்பட்டது. தொடர்ந்து பல இரவுகள் தூக்கமின்றி

கழிந்தன. வட்டிக்கு வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுக்க வேண்டியது, வீட்டுக்கான மாதக் கடனைச் செலுத்த வேண்டியது, ஏனைய தேவைகளுக்கான செலவுகள் இவை அனைத்தும் அவளை நெருக்கடிக்குள் தள்ளின. அந்த நிலையில், சுந்தரத்திற்கு மாதம் மாதம் கொடுக்க வேண்டிய வட்டிப் பணத்தை இரண்டு மாதங்கள் தவற விட்டாள். அதனால், சுந்தரம் அவளிடம் பேசும் போதும், வீட்டுக்கு வரும் போதும், அந்தப் பணம் குறித்து எச்சரிக்கையாகப் பேசத் தொடங்கினான். ஆனால் அதற்கும் சுந்தரம் நியாயம் கற்பித்துக் கொண்டிருந்தான். அதாவது, வட்டிக்கு கொடுக்கப்பட்ட பணம் தன்னுடையது அல்ல; நண்பனிடமிருந்து வாங்கிக் கொடுத்த பணம்தான் என்று அவன் சொல்லிக்கொண்டே இருந்தான். ஆனால், அவன் எத்தனை முறை சொல்லினாலும் அவள் அதை நம்பவில்லை.

ஏற்கெனவே அவன் மீது அவளுக்குள் ஒரு வெறுப்பு உருவாகி வந்திருந்தது. அதற்குக் காரணம் அவனுடைய தனிப்பட்ட நடவடிக்கைகள்தான். அவனுடன் இருக்கும் போது யாராவது தொலைபேசியில் அழைத்தால், ‘யார் உனக்கு போன் செய்கிறார்கள்?’ என்று கேட்பான். அவளுடைய செல்பேசியை எடுத்துப் பார்த்து, யார் யார் அழைத்தார்கள் என்று கவனிப்பான். சில ஆண்களின் பெயர்கள் இருந்தால், ‘அது யார்?’ என்று சந்தேகத்துடன் கேட்பான். காசு விஷயத்தில் வெளியில் போகும்போது, சுந்தரத்தின் நடத்தை பல வகையில் அவளை பாதித்தது.

வட்டிக்கு பணம் கொடுப்பவர்களை அவள் ஏற்கனவே பலரை பார்த்திருந்தாள்; அவர்கள் பணத்தில் ஆசை கொண்டிருந்தாலும், ஒரு அளவு அவர்களுக்கு மனசாட்சி இருந்தது. ஆனால் சுந்தரம் அப்படி இல்லை. அவனுக்கு முக்கியமானது காசுதான்.

அவள் இவ்வளவு சிக்கலில் இருக்கும்போதும், கொடுத்த பணத்துக்கான வட்டியை அவனுக்கு கொடுக்க முடியாமல் போனதையே பெரிய பிரச்சினையாக அவன் எடுத்துக்கொண்டான். ஒவ்வொரு நாளும் அவன் அவளுடைய வீட்டிற்கு வரும்போது, அவளுடைய பிள்ளைக்கு சாப்பாடு, சாக்லேட் போன்ற எதையும் கொண்டு வர மாட்டான். ‘கஞ்சல் கசவாரம்’ என்று அவள் மனத்திற்குள் எண்ணிக் கொள்வாள்.

தொடர்ந்து பல நாட்களாக அவனுடைய அழைப்புகளைத் திட்டமிட்டே தவிர்த்து வந்தாள். அந்தச் செயல்களால் அவன் அவள் மீது கோபம் கொண்டான். ஒரு நாள் காலை நேரத்தில் வீட்டு வாசலில் வந்து நின்றான். பூர்விகா மகளை பள்ளியில் இறக்கிவிட்டு வீட்டிற்கு திரும்பும்போது, சுந்தரம் காருக்குள் அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவளைக் கண்டதும், காரை விட்டு இறங்கி, அவளுடன் உள்ளே வீட்டுக்குள் சென்றான்.

அவள் எதுவும் பேசாமல் சோபாவில் உட்கார்ந்தாள். அவனும் உட்கார்ந்தான். எதுவுமே பேசாத ஒரு நிலை அவர்களுக்கிடையே சிறிது நேரம் இருந்தது. சில நிமிடங்கள் பேசாமல், நடமாடாமல், வெறும் ஒளியும் காற்றும் மட்டும் இடையில் நின்றது. அதை உடைக்கும் வகையில் சுந்தரம் கேட்டான்.

‘நான் எத்தனை தடவ உனக்கு போன் பண்ணினேன்? ஏன் எடுக்கல?’ ஒரு சண்டை பிடிக்கும் மனப்போக்கில் அவன் கேட்டான். அவன் கேட்கும் அந்தக் கணத்தில், அவளுக்குள் ஒரு விஷக் கோபம் சுழன்று எழுந்தது.

‘என்னை முடிச்சவனே ஒருநாளும் சந்தேகப்படவில்லை. நீ மட்டும் தான்! என் போனையே எடுத்து நோண்டிப் பார்ப்பாய்... ஆண்களின் பெயரில் எனக்கு ஏதாவது ஒரு போன் வந்து இருந்தால் அது யார் என்று ஒரு சந்தேகம் கொண்டே என்னி டம் விசாரணை நடத்துவது, எனக்கு எதுவும் தெரியாது என்று நினைச்சுக்கிட்டு நீ காட்டுகிற கூத்து கொஞ்ச நெஞ்சம் இல்லை. எல்லாத்தையும் இவ்வளவு தூரம் வரை நான் பொறுத்து இருந்ததே எனக்கு பெரிய விஷயமாக இருந்தது. உன்னுடைய போக்கு சரியில்லை. பெண்களை நீ ரொம்ப கேவலமா நடத்துற. அளவுக்கு அதிகமாக நீ என்னில் அதிகாரம் பண்ற. மனிதர்களை விட நீ பணத்தைதான் அதிகமாகப் பார்க்கிறாய், விரும்புகிறாய். உனக்கும் எனக்கும் எந்த வகையிலும் பொருந்தாது.’ என்றாள்.

பின்னர் ஏதோ தன்னுடைய வாழ்க்கையில் பெரிய தவறு ஒன்றை செய்துவிட்ட ஒரு உள்ளுணர்வு அவளுக்குள் சொல்லியது. மீண்டும் அவள் வெடித்து அழுது கொண்டு, ‘அவன், அம்மாவின் கதையை ஏற்றுக்கொண்டு... என் வயிற்றில் வளர்ந்த மூத்த பிள்ளையை அழிக்கச் சொன்னவன்தான், இல்லை என்று சொல்ல மாட்டன். ஆனால் அவன் நல்ல மனிதன் என்று எனக்கு தெரியும். அவனுடைய அம்மாவின் பிடியில இருக்கிறான். அவள்தான் அவனை ஆட்டிப்படைக்கிறாள். என்மேல் இருக்கிற கோபத்தாலே, எனக்கு எதிராக அவனை வைத்து காய் நகர்த்துகிறாள். எத்தனை முறை விளக்கினாலும், அவனுக்கு விளங்குகிறது கிடையாது. எல்லாப் பிரச்சனைகளுக்கும் அவனுடைய தாய்தான் காரணம் என்பதை அவன் புரிந்துகொள்ளவே சிரமப்படுகின்றான்.

அவனை அவன்ர அம்மாவின் கட்டுப்பாட்டிலிருந்து என் பக்கம் கொண்டு வர முடியவில்லை. என் பிள்ளையின் மீது அவன் வைத்திருக்கும் பாசம் எனக்குத் தெரியும். பிள்ளைக்கு ஏதாவது என்றால் உடனே ஓடி வருவான். பிள்ளைக்கு தேவையான எல்லாப் பொருட்களும் அவனே வாங்கித் தருவான்...’

நீ ஒரு நாளாவது ஒரு சொக்லைட் துண்டு வாங்கித் தந்த துண்டா? எந்த நேரமும் வட்டிக் காசு கணக்குப் பார்த்துக் கொண்டே இருக்கிற நீ... திடீரென்று கண்களில் கோபம் வந்தது அவளுக்கு. அவன் மீது தீராத கோபத்தோடு அவள் சொன்னாள்.

‘பணமின்றி, பொருளின்றி உழைக்கும் அவனோடு ஒப்பிட்டுப் பார்த்தால்... அவன்தான் எவ்வளவோ திறமைசாலி! எவ்வளவோ நல்லவனும் கூட. இந்த மாதக் கடைசிக்குள், நான் உன்னுடைய நாற்பதாயிரம் டாலரையும், வட்டிக்காசையும் தருகிறேன். ஸ்ரோபில் காஸ்பிற்றல் முன்னால் இருக்கிற ரிம் கொட்டன் தேத்தண்ணீக் கடைக்கு, இந்த மாதக் கடைசியில் வரும் ஞாயிற்றுக்கிழமை வா. உனக்குத் தர வேண்டிய வட்டிக் காசையும், நீ தந்த முழுப் பணத்தையும் அங்கேயே கொடுக்கிறேன். இப்ப நீ வீட்டை விட்டு வெளியே போகலாம்,’ அவன் எதுவும் பேசாமல் இருந்ததால், அவள் மீண்டும் சொன்னாள்:

‘போடா வெளியே! உனக்கும் எனக்கும் இனிமேல் எந்த

உறவும் கிடையாது.'

அவன் அமைதியாக எழுந்து, தனது கார் நின்ற இடத்தை நோக்கி நடந்து சென்றான்.

அவள் கைத்தொலைபேசியை எடுத்து, அரசனின் இலக்கத்துக்கு அழைத்தாள். மறுமுனையில் ஒருமுறை ஒலித்தவுடன் அவன் எடுத்துவிட்டான். சிறிது நேரம் அவள் எதுவும் பேசாமல் இருந்தாள். 'என்னாச்சு? உனக்கு வேலை செய்யும் இடத்தில ஏதாவது பிரச்சினை நடந்ததா? அல்லது கார்த்திகாவுக்கா? அவளுடைய பள்ளிக்கூடத்திலிருந்து போன் வந்ததா?' என்று அவன் கேட்டான்.

அவளுக்கு மனதில் ஏதோ தோன்றியது. அவள் உடைந்து அழத் தொடங்கினாள். 'பள்ளிக்கூடத்திலிருந்து போன் எதுவும் வரல. எனக்குத்தான் கொஞ்ச நாளாக உடலும் மனமும் சரியில்லாமல் இருக்குது. எனக்குத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் போல இருக்கு... கொஞ்ச நாளாக, அதையும் செய்து விடுவேன்போல பயமாக இருக்கு.

இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக கடவுளின் வெளிச்சம் கார்த்திகா மேல விழுந்து இருக்கு. அவள் இப்ப நிறையவே தேறிக்கொண்டிருக்கிறாள். முழுமையாக உடல்நலத்திலும் மனநிலையிலும் பழைய நிலைக்கு திரும்புவாள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கு. நாங்கள் சேர்ந்து வாழ்ந்தால், அப்படி நடக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறைய இருக்குதுன்னு நான் நம்புறேன்.

கடந்த காலத்தில் யார் யார் பிழை செய்தோம் என்று ஒருவர் மற்றொருவரை குறை கூறுவதை விட்டுட்டு, எல்லாவற்றையும் மறந்து... உன்னிடம் மன்றாட்டமாக கேட்கிறேன்... நாம் மீண்டும் சேர்ந்து வாழலாமா? ஒரே மூச்சில் சொல்ல வேண்டியவற்றை சொல்லி முடித்தாள்.

அரசன் தொலைபேசியில் மௌனமாக அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

'என்ன... ஒன்றும் பேசாம இருக்கீங்க?' என்று அவள் கேட்டாள். அவன் சற்றே யோசித்துவிட்டு 'உனக்கு விருப்பமா இருந்தால், நான் உன்னுடன் மீண்டும் சேர்ந்து வாழுறன். எனக்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை உன்னிடம் வைக்கிறேன். அதற்கு நீ உடன்பட்டால், நான் இப்போதே உன்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன்,' என்றான்.

மறுமுனையில், பூர்விகா தீவிரமாக யோசிக்கத் தொடங்கினாள். அவன் கேட்கப்போகும் நிபந்தனை என்னவாக இருக்கும்? தனக்கும் சுந்தரத்திற்குமான உறவைப் பற்றியதா? அல்லது தன்னுடைய குடும்பத்திற்குச் செய்த உதவியை நிறுத்தச் சொல்கிறானா? எதைக் கேட்டாலும், பிள்ளையின் எதிர்காலத்தை மனதில் கொண்டு உடன்பட வேண்டும் என்று அவள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

'என்ன சொல்லுங்க?' என்று அவள் மீண்டும் கேட்டதும், அவன் சுயநினைவுக்கு வந்தான். 'சொல்லுங்க... என்ன நிபந்தனை?'

'பெரிசா ஒன்றுமில்லை. எந்தவொரு காரணத்துக்காகவும், கார்த்திகாவை கை நீட்டி அடிக்கக்கூடாது. இதற்கு 'ஓகே' என்றால், எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை,' என்றான். அவள் நிம்மதியாக மூச்சுவிட்டாள் 'அப்படியா? நல்லதுதானே சொல்லறீங்க. இனிமேல் அவளை நான் அடிக்க மாட்டேன்,' என்றாள் அடக்கமான குரலில். சிறிது நேரம் யோசித்தவள் திடீரென்று முடிவு எடுத்தவள் போலச் சொன்னாள்: 'இன்றைக்கே இங்கு வரலாம். எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை.'

'அப்படியா, நான் இன்றைக்கே வர்றேன். என்று சொல்லி முடிப்பதற்கு முன்பே 'உங்களால் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?' என்றாள் அவள் கெஞ்சும் குரலில் கேட்டாள்.

'உனக்கு என்ன உதவி வேண்டும் என்றாலும் தயங்காமல் என்னிடம் கேள்' என்றான்.

'எனக்கு நாற்பதாயிரம் டாலர் அவசரமாக தேவைப்படுது. உங்களால் முடிஞ்சா தர முடியுமா?' அவள் சொல்லி முடிப்பதற்குள், அவன் கூறினான்: 'ஒரு பிரச்சனையும் இல்லை. நான் உனக்குத் தரேன். என்னிடம் ஒரு 'லைன் ஆஃப் கிரெடிட் கார்ட்' இருக்கு. அதில் ஒரு லட்சம் டாலர் வரையிலான லிமிட் இருக்கு. நான் இன்னும் ஒரு சதமும் எடுக்காம வைத்திருக்கிறேன். அந்த கிரெடிட் கார்டிலிருந்து எடுத்து தரேன். திரும்ப கொஞ்சம் கொஞ்சமா கட்டலாம்தானே. ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்.'

அவள் நினைத்த காரியம் இவ்வளவு எளிதாக முடியும் என்று எதிர்பார்க்கவே இல்லை. உடைந்த குரலில் சொன்னாள்: 'மிகப் பெரிய உபகாரமும்... நன்றியும்.' என்றாள். ஏதோ ஒரு யோசனை தோன்றியது அவளுக்கு. பின் அவள் கேட்டாள்: 'நான் உங்களுக்கு எவ்வளவோ கொடுமைகளைச் செய்த போதும், எல்லாவற்றையும் மறந்து என்னை ஏற்றுக்கொள்வதற்கு உங்களால் எப்படி முடிந்தது?'

அவன் சிரித்தபடி: 'அதைப்பற்றி பெரிதாக ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் நானும் நிறைய பிழைகளை விட்டிருக்கிறேன். ஒன்று மட்டும் சொல்வேன்... உன் மீது கொண்ட காதல்தான் அதற்கான முதற்காரணம்.'

அவள் மனதிற்குள் சிந்தித்தாள்: 'இவ்வளவு பெருந்தன்மை கொண்டவனா என் கணவன்?' அவள் இன்னும் பல விடயங்கள் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போது, அவன் சொன்னான்: 'இன்றைக்கு பின்னேரம் வேலை முடிந்ததும் உன்னுடைய வீட்டுக்கு வர்றேன்,' என்று சொல்லிவிட்டு, கைத்தொலைபேசியைத் துண்டித்துவிட்டான்.



danieljeeva.s@thaiveedu.com

நீ சாதாரணமா இருக்க வேண்டியதுதானே? - என்று கேட்டார் நாராயணன். தான் கேட்டது அந்தப் பெண்ணுக்கு... அதாவது தன் மருமகளுக்குப் புரிந்திருக்கும் என்று தோன்றவில்லை இவருக்கு. சாதாரணமா என்றால் எப்படிச் சொல்வது? யதார்த்தமாய் என்று சொல்லலாமா? அப்படிச் சொன்னால் பிறகு அந்த வார்த்தையை விளக்கியாக வேண்டி வரும். எளிமையாய் என்று சொல்லலாமா? அப்படிச் சொன்னால் நான் ஒண்ணும் படாடோபமா ரிச்...சா இல்லையே? என்று சொல்ல வாய்ப்பிருக்கு. சாதாரணமா என்று சாதாரணமாய்ச் சொல்லிவிட்டு இப்போது இவர் தடுமாறிக்கொண்டிருந்தார்.

அந்த சந்தோஷம் வேறே எங்கயும் கிடைக்காது, அதுக்கு ஈடே கிடையாதுப்பா - சொல்லும்போதே முகம் மலர்ந்தது மாலாவுக்கு. நல்லவேளை... அப்பா என்றாவது சொல்ல வந்திருக்கிறதே? நினைத்து சந்தோஷப்பட்டுக்கொண்டார் நாராயணன்.

இப்படிச் சொல்கிறோமே என்கிற எண்ணம் இல்லை. சொல்வது சரியா? என்ற நிதானமும் இல்லை. இதைச் சொல்லலாமா வேண்டாமா என்கிற யோசனையும் இல்லை. சொல்லியாகிவிட்டது.

அதற்காக, தான் நிதானத்தை இழக்கலாமா? அப்புறம் அந்தப் பெண்ணுக்கும் வயசாகி முதிர்ந்த தனக்கும்

# காலம்... கலிகாலம்...

## உஷாதீபன்



அப்டீன்னா? - நினைத்ததுபோலவே கேட்டது அது. கொஞ்சம் யோசித்தவர் பிறகு இப்படிச் சொன்னார்.

உன் வீடு போல... உன்னோட வீட்டுல நீ எப்டி இருப்பியோ... அது போல இங்கயும் இருக்கலாமேன்னு சொல்ல வந்தேன்... என்றார்.
எங்க வீட்டுல நான் இருந்தது போல எங்கயும் வராது.

என்னதான் வித்தியாசம்? சூழலை இறுக்கமாக்கிக் கொள்ள நாராயணன் விரும்பவில்லை. பிறகு அடுத்தடுத்த பேச்சு, சண்டை என்று வளர்ந்துவிடும் வாய்ப்புண்டு. நிதானித்தார்.

கண்டிப்பா... உங்க வீட்டுல நீ இருந்த மாதிரி நிச்சயமா வேறே எங்கயும் இருக்க முடியாது. அது யாருக்குமே சாத்தியமில்லை. அவுங்கவுங்க பிறந்த வீடுன்னா

அதுதானே பெரிசு எல்லாருக்கும்? - அரவணைத்தே பேசுவதாக எண்ணி இப்படிக் கூறினார்.

எல்லாருக்கும் பெரிசோ இல்லையோ... எனக்குப் பெரிசு!

இதென்ன சமத்தான பேச்சா என்ன? என்று தோன்றியது நாராயணனுக்கு.

உணரப்பட வேண்டியவைகளை வார்த்தைகளில் வடிக்கும்போது அதில்தான் எத்தனை செயற்கைத் தன்மை வந்து ஒட்டிக் கொள்கிறது? (அதான் தெரியுதே... அடிக்கடி அங்க ஓடுறது...) - சொல்லவில்லை... நினைத்துக் கொண்டார்.

நான் சொல்ல வந்தது அது இல்லடா கண்ணு... உங்க வீட்டுல நீ இருந்த மாதிரியே இந்தப் புகுந்த வீட்டுலயும் சுதந்திரமா, சந்தோஷமா இருக்கலாம்... இயங்கலாம்... உன்னை யாரும் எதுவும் சொல்லப் போறதில்லைன்னு சொல்ல வந்தேன்... இனிமே இதுதானே உன் வீடு... நீதான் எங்களுக்கு... நாங்கதான் உனக்கு... எல்லாம் நிறைவா இருக்கு... எதுக்கும் குறைப்பட்டுக்க எதுவுமில்லை... சந்தோஷமா இருந்திட்டுப் போவமே... எதுக்கு அநாவசியமா நேரத்தையும் பொழுதையும் கெடுத்துக்கணும்... அதத்தான் சொல்ல வந்தேன்... - பூடகமாக, சுருக்கமாகச் சொல்லித் தீர்த்துவிட்டோமோ என்றே தோன்றியது நாராயணனுக்கு.

இதையெல்லாம் அவன் சொல்ல வேண்டியது. தன் பிள்ளை குணசீலன். அவன் அவளிடம் பயப்படுகிறானோ என்று தோன்றிக்கொண்டேயிருந்தது. எதற்காகப் பயப்பட வேண்டும். சாதாரண, நடுத்தரவீட்டுப் பெண்தானே? பணக்காரக் குடும்பமில்லயே? நடுத்தரக் குடும்பத்துப் பெண் நடுத்தரமாய் இல்லாமல் குதிக்கிறாள் என்று நினைத்துவிட்டானோ? பயப்படுகிறான் என்பதை விட பேசுவதையே தவிர்க்கிறான் என்பதே சரி.

அவ அவ்வளவுதாம்ப்பா... அவளுக்குத் தெரிஞ்சதெல்லாம் வெளில போகணும், சந்தோஷமா ஊர் சுத்தணும், ஓட்டல்ல திங்கணும், இஷ்டப்பட்ட பொருட்களை வாங்கணும்... ஜாலியா இருக்கணும்... மொபைல்ல சினிமாப் பார்க்கணும்... ரிலீஸ் படங்களைத் தியேட்டர்ல போய்ப் பார்த்தாகணும்... இப்டியே பொழுதைக் கழிக்கணும்... அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். வேறே ஒண்ணும் பெரிய நாலெட்ஜ் எல்லாம் இருக்கிறதாத் தெரில. அவள் ஐ.டி. ஆபீஸ்ல அவளோட பிராஜக்ட் ஒர்க்கப் பத்தியே டீப் நாலெட்ஜ் இல்ல... நிறையத் திட்டு வாங்குவா போல்ருக்கு... வேறே ஜெனரல் நாலெட்ஜ், உலக நடப்பு, ஆட்சி, அரசியல்னு எதுவும் தெரியாது அவளுக்கு. நியூஸ் பேப்பரைப் பேருக்காவது புரட்டினாத்தானே? அதெல்லாம் சின்ன வயசிலேயிருந்து பழக்கப்படுத்தியிருக்கணும். அப்பத்தான் வரும்...

இருக்கட்டுமேப்பா... அதனாலென்ன... அவ ஐ.டி. ஆபீஸ் வேலைகளை சமாளிக்க வேண்டியது அவ பொறுப்பு... அதப்பத்தி நாம ஏன் கவலைப்படணும்?

அப்படியில்லப்பா... அவ என்னைப் போட்டு அனத்தறா. ஒர்க் ஃப்ரம் ஹோம் இருக்கச்சே... என்னை சதா சந்தேகம் கேட்டான்னா... நான் என் வேலையைப் பார்க்க வேண்டாமா? இனிமே அவ வீட்டுல இருந்து வேலை செய்கைல... நான் ஆபீஸ் தப்பிச்சுப் போயிடணும்னு இருக்கேன். என் தலவலியே பெரிய தலைவலி. பாதி இவ டியூட்டிய நானே பார்க்க வேண்டிர்க்கும் போல்ருக்கு? அப்புறம் நான் பைத்தியம் பிடிச்சு அலைய வேண்டிதான்... இது இப்டியே போச்சுன்னா கூடிய சீக்கிரம் படுக்கைல விழுந்திடுவேம்ப்பா... அது மட்டும் நிச்சயம்!

எல்லாம் போகப் போகச் சரியாப் போகும்ப்பா... கொஞ்சம் பொறுத்துக்கோ... கன்னா பின்னான்னு கற்பனை பண்ணிக்காதே! - பையனைச் சமாதானப்படுத்த ஆறுதலாய்ச் சொன்னார் நாராயணன். ஒரு பக்கம் அவன் பழியாய் ஆபீஸ் வேலையே கெதியாய்க் கிடப்பதைப் பார்க்கும்போது அவருக்கே வயிற்றைக் கலக்கியது. இத்தனை மணி நேர வேலை என்று கணக்கே கிடையாதா? நாள் பூராவுமா பார்த்திட்டே இருக்கணும்? ஆபீஸ் போய் பார்த்தாச்சு. அப்புறம் என்ன வீட்டுக்கு வந்த பின்னும்? அந்தக் கம்ப்யூட்டரை மூடித் தொலையாம சதா அதை நோண்டிக்கிட்டே இருக்கணுமா? எவனாவது எதாவது கேட்டுக்கிட்டே இருப்பான்... பதில் சொல்லிட்டே இருக்கணுமா? இந்தியாவுல இது தூங்குற நேரம்னு அவிங்களுக்குத் தெரியாதா? அதான் பன்னெண்டு மணி வரை பார்த்தாச்சே... இன்னும் என்ன ஒண்ணு ரெண்டுன்னு? மரவட்டையாய் மகன் சுருண்டு கிடப்பதைப் பார்க்கையில் இவருக்கு வயிறெரிந்தது.

எவ்வளவோ சொன்னார் குணசீலனுக்கு. சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஜாப், பாங்க்... குருப்-2 சர்வீஸ், குருப்-3 சர்வீஸ் என்று முயற்சி செய்து போய்விடு... இந்த ஐ.டி. ஃபீல்டுக்குள்ள நுழையாதே... நாளைக்கு இது என்னவாகும்னு யாராலயும் சொல்ல முடியாது... என்று ஞானதிருஷ்டியாய் எடுத்துரைத்தார். காதிலேயே வாங்கவில்லையே பயல்? இதோ... இன்று ஏ.ஐ. வந்து பயமுறுத்துகிறது. பத்துப் பேர் வேலை பார்த்த இடத்தில் மூன்று பேர் போதும் என்கிறார்கள். என்ன கதி ஆகுமோ? வெளியே சொல்ல முடியாமல் மனசுக்குள் கலங்கிக் கொண்டுதான் இருந்தார் நாராயணன். இவன் என்னடாவென்றால் வீட்டிலேயே நிம்மதியில்லாமல் கிடக்கிறானே? மத்தளத்துக்கு எல்லாப் பக்கமும் இடி என்றால்? இறைவா... இதையெல்லாம் பார்க்கிறதுக்கா நான் உசிரோட இருக்கணும்... என்னைக் கொண்டு போயிடேன்... - மானசீகமாய்க் கடவுளிடம் அவர் வேண்டாத நேரமில்லை. வயசான காலத்தில் என்ன மனச்சுமை இது?

அதாச்சும் பரவால்லப்பா... ஒவ்வொரு சனி ஞாயிறும் ஊர் சுத்தணும்னா என்ன அர்த்தம்? அம்மாதான் பக்குவமா சமைக்கிறால்ல... வீட்டு வேலைகள்ல உதவி செய்ய வேண்டாம்... செய்து போடுறத கமுக்கமா சாப்பிடலாம்ல... மாட்டாளாம்... ஃபோன் பண்ணி சாப்பாடும், டிபனும் வரவழைச்சித்தான் சாப்பிடுவாளாம்... அதுதான் பிடிக்குமாம்... அவன் எந்த எண்ணெய்ல பண்ணினானோ, எப்பப் பண்ணினானோ, பழசச் சுட வச்சுக் கொண்டாந்தானோ இல்ல புதுசோ? எதுவுமே தெரியாதே? வயித்துக்கு ஒத்துக்காததையெல்லாம் வாங்கி நிரப்புவேன்னா? குப்பைத் தொட்டியா வயிறு? பணமும் அதிகம்... உடம்புக்கும் கெடுதி... எதுக்கு அநாவசியமா காச

விரயம் பண்ணனும்... தேவைக்கு செலவு பண்ணலாம்... விரயம் பண்ணலாமா? - எது சொன்னாலும் கேட்கிறதில்லப்பா. தீவிரமா முடியாது அது இதுன்னு சொன்னோம்னா உடனே முகத்தைத் தூக்கி வச்சிட்டு மூலைல போய் முடங்கிக்கிறா! அழ ஆரம்பிக்கிறா! அவ சொல்றதுக்கு மறுப்பு சொன்னாலே பிடிக்கலப்பா? ஹிஸ்டீரியா பேஷன்டா? நாள் பூராவும் உம்மணாம் மூஞ்சியா வெறி பிடிச்சவ மாதிரி உட்கார்ந்திருக்கிறதுக்கு? சகிக்க முடிலப்பா... கல்யாணமே பண்ணியிருக்க வேண்டாம் போல்ருக்கு... நீதான் சொன்னே... இன்னும் சிலது பார்ப்போம்... அப்புறம் முடிவு பண்ணுவோம்னு... நான்தான் உன்னை அவசரப்படுத்திட்டேன்... இப்பயே போய் சம்மதம் சொல்லிட்டுவான்னு... இப்பத்தான் என் புத்திக்கே உரைக்குது...

மனசுக்குள் அழ ஆரம்பித்திருந்தார் நாராயணன். வெளியில் சொல்ல முடியாமல் தவித்தார். பையனைச் சமாதானப்படுத்துவதா அல்லது அந்தப் பெண்ணுக்கு அறிவுரை கூறுவதா?

காலையில் பதினோரு மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்தால்? அதுவே இவருக்குப் பிடிக்கவில்லை. கண்கொண்டு எதையும் பார்க்க வேண்டாம் என்று அறையே கதியாகக் கிடந்தார்.

ரெண்டாம் வகுப்புப் படிக்கும் பையனை ஆறு மணிக்கே எழுப்பி பல் தேய்த்து, குளிப்பாட்டி, யூனிபார்ம் போட்டு ஷூ மாட்டி சாப்பாடு கொடுத்து எட்டு மணிக்கு வந்து நிற்கும் ஆட்டோவில் ஏற்றி அனுப்புவது வரை எத்தனை டென்ஷன்?

பாதி வேலையை இவர் வாங்கிக் கொண்டார். நான் கொடுக்கிறேன் டிபன்... எங்கிட்ட விட்டிடு... யூனிஃபார்ம் போட்டு விடுறேன் என்று பகிர்ந்து கொண்டார். தலைக்கு எண்ணெய் தேய்த்து, சீவி, பொட்டிட்டு தயார் பண்ணி கீழே கொண்டு போய் நிறுத்தி ஆட்டோவில் ஏற்றி விடுவது வரை தனது வேலை என்று சிரமேற்கொண்டு செய்யலானார்.

அந்தந்த நாளின் விடியல் என்பதே பிரம்மப் பிரயத்தனமாய் இருந்தால்? தான் பெற்ற பிள்ளைக்கே எதுவும் செய்யாமல் இப்படி அடிச்சிப் போட்டது போல் அயர்ந்து தூங்கினால்? வீட்டில் நடக்கும் வேலைகளின் சத்தம் கூடவா ஆளை எழுப்பாது? ஒரு பிள்ளை பிறந்த பின்னும் பழையபடியே இருந்தால்?

இறைவா ஏனிந்த சோதனை? இது என்று சரியாகும்? சரியாகுமா அல்லது இப்படியேதான் தொடருமா?

யோசித்து யோசித்து ஒன்றும் தோன்றாமல் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார் நாராயணன். அநாவசியத்திற்கு வீட்டில் ஏன் சண்டை. அது அவருக்குப் பிடிக்கவில்லை. மீனாட்சியைப் போல் தானும் இயன்றவரை வீட்டு வேலைகளை இன்னும் அதிகமாகக் கையிலெடுத்துக்கொண்டு செய்து சமாளிப்பது என்கிற இறுதியை எட்டினார். அந்தப் பெண்ணாய் உணர்ந்து என்று களத்திற்குள் வருகிறதோ அதுவரை பொறுத்திருப்பது என்று முடிவு செய்துகொண்டார். காலம் எல்லாவற்றையும் மாற்றிப் போடாமலா போகும் என்று மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டார். எதையும் பொருட்படுத்தாமல் மீனாட்சி மட்டும் தன் வேலையே கதியாகக் கிடக்கிறாளே... அர்ப்பணிப்பு... அவளை மாதிரியே தானும் இருந்துவிட வேண்டியதுதான். எதற்கு பொறுமிக்கொண்டே கிடக்க வேண்டும்? தீர்வு என்று கிடைக்கிறதோ கிடைக்கட்டும். காலம் கனியாமலா போகும்?

அப்போது அந்த ஃபோன் மணி ஒலித்தது. போய் எடுத்தார். எதிர் வரிசையில் மணிவாசகன்தான் பேசினார். சம்பந்தி. என்ன சொல்லப் போகிறாரோ, ஏது நடக்கப் போகிறதோ என்றிருந்தது இவருக்கு. இந்தப் பெண் ஏதேனும் புகார் கொடுத்திருக்குமோ? எனக்கு இங்க இருக்கப் பிடிக்கலை, புறப்பட்டு வர்றேன் என்று அப்பாம்மாவை விரட்டியிருக்குமோ?

சம்பந்தி... நல்லாயிருக்கீங்களா... பேசவேயில்லையே? - அழுத்தமாய் வந்தது வார்த்தைகள்.

எங்க பேசுறதுக்கு நேரம்? அதான் கால்ல சக்கரத்தக் கட்டிட்ட மாதிரி வீட்டு வேலைகள் மென்னியைப் பிடிக்குதே! மூச்சு விட முடியலை... - நேரடியாக எதையும் சொல்ல வாய் வராமல் யதார்த்தமான பதிலைச் சொன்னார் நாராயணன்.

ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். எல்லாம் பக்குவமாச் சொல்லியனுப்பறேன்... பொறுப்பா நடந்துக்குவா எம் பொண்ணு... நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க... எனக்கு எல்லாம் தெரியும்...

என்ன சொல்றீங்க... புரியலை... - புரியாதமாதிரியே கேட்டார் நாராயணன்.

ஒரு வாரத்துக்கு மாலாவை எங்க வீட்டுக்கு அனுப்பி வையுங்க... எல்லாம் சரியாப் போயிடும்... திரும்பி வர்றபோது பாருங்க...
அப்டியா... சரி... சொல்றேன்... - தயங்கியவாறே கூறினார் நாராயணன்.

எதிர்த்திசையில் ஃபோன் வைக்கப்பட்டது.

அறையை விட்டு வெளியே வந்தார் நாராயணன்.

வாசலில் ஆட்டோ சத்தம்.

அதுக்குள்ளயும் புக் பண்ணியாச்சா? - நினைப்பதற்குள்

அப்பா... அம்மா... நான் போயிட்டு வர்றேன். ஒரு வாரத்துக்கு அங்க வரச் சொல்லியிருக்கார் அப்பா... அவர்ட்ட ஃபோன்லயே சொல்லிட்டேன்... - கூறியவாறே கையில் பேக்குடன் மாலா கிளம்பியதை வாயடைத்துப் பார்த்துக்கொண்டு நின்றனர் நாராயணனும் மீனாட்சியும். இருவருக்கும் மனசு விச்ராந்தியாய் உணர்ந்தது.



ushadeepan@thaiveedu.com

# காவியம் பாடடி பெண்ணே!



– அ. கந்தசாமி

‘இந்த மனிசன்ரை வகுப்பை பிரேக்கிக்கு முதலே வச்சிருந்தா வெட்டிக்கொண்டு கொஸ்ரலுக்குப் போய்க் குளிச்சு கொஞ்சம் ஓய்வா இருந்திருக்கலாம். இந்த வாத்தி சரியா போரடிக்கிறார். போய் அமிர்தான்சனம் அள்ளி அப்பி னாத்தான் இந்தத் தலையிடி போகும்போல.’

முன்னால் போய்க்கொண்டிருந்த பெட்டையளின்ர புலம்பல் சில அடிகள் பின்னால் வந்து கொண்டிருந்த தனஞ்செயன் செவிகளிலும் கிசுகிசுத்தது. அதே வகுப்பில் எழும்பி ஓடமுடி யாமல் நடுவில் சிக்கிக் கிடந்தவன் தனஞ்செயன்.

இந்த வாத்திமாருக்கு ஏன் மாணவர்களின் மனஓட்டம் புரிவ தில்லை?

கற்பித்தல் என்பது ஒரு தொழிலல்ல. ஓவியம் வரைவதைப் போல, கவிதை எழுதுவதைப்போல, ஒரு சுயத்தை மாணவர் உச்சியில் பதியம்வைக்கும் கலை அது.

ஆரைச் சொல்லி அழ.

அந்தப் பெண்களின் கூட்டத்துள் தனஞ்செயன் நெஞ்சுக்கு மிக நெருக்கமான அரசியும் இருந்தாள்.

அரசி சிவப்பி இல்லை. மங்கல் நிறம். அவள் அழகியா என்றால் அழகிற்கு இலக்கணம் வகுத்த பாவியள் அரசிக்கு ஒரு வரியைத் தானும் ஒதுக்கவில்லை.

ஒரு முள் முருக்கம் மரத்தின் பின்னால் ஒளிந்துகொள்ளக் கூடிய உடல்வாகு.

பிற மாணவியர் தினமும் பல்வேறு உடை அலங்காரங்களுடன் இடுப்புக்குக் கீழ் சல்லடைகளைச் சுற்றித்திரியும்போது அரசி மட்டும் சேலை அணிந்து வருவாள். அவளது மெலிந்த உடலை மூடிய சேலைகள் அவ்வேளைகளில் மட்டும் புதிய பரிமாணங்களைப் பெற்றன. அவள் என்ன மாயம் செய்வாளோ மந்திரம் போடுவாளோ? கைதேர்ந்த ஒப்பனையாளர் ஒருவர் தன் உச்சக் கற்பனையோடு சிலை ஒன்றை செதுக்கியது போன்ற சேலைச் சொருகல்கள்.

இப்படியும் சொல்லலாம். எவ்வித முன்னேற்பாடுமின்றி சேலையை காமா சோமா என்று அள்ளி சொருகி, பின், அயன் பண்ணி, சீர்செய்தது போன்ற நேர்த்தி.

அவளோ சுள்ளிச்சி.

உந்த கோழிக்காலுகளுக்கு மட்டும் கிளியோபத்திரா வின்ரை கவர்ச்சி வரப்போகுதே? அப்பிடி வெளியிலை காட் டிறதுக்கு அவவெட்டை என்ன இருக்கு?

இப்பிடி முதுகுக்குப் பின்னாலை எழும் முணுமுணுப்புகளை அரசி கண்டுகொள்வதேயில்லை.

‘எனக்கென்று இனியொருத்தன் பிறக்கப்போவதில்லை. எங் கேயாவது பிறந்திருப்பான். எந்நேரத்திலும் எதிர்ப்படுவான்’ என நினைப்பவள் அரசி.

தனஞ்செயனுக்கு சிவப்பு நிறம் என்றாலே சற்றுக் கடுப்புதான். அந்த நிறத்துக்குப் பிசாசுக்குணம் இருக்கு என்று நினைப் பவன். விடலைப் பருவத்தில் எட்டநின்று புன்னகைத்து கிட் டப்போக பேப்பே காட்டியயுதுகள் எல்லாம் சிவப்பியள்தான்.

இவனும் மாலை மங்கும் நிறந்தான். மெலிந்த உடல்வாகு. எலும்போடு இறுகி ஒட்டிக்கொண்ட சதைகள் தேவையான பகுதிகளில் திரண்டு கைகளை நீட்டி மடக்கினால் பார்ப்பவர் கண்கள் இமைக்கச் சில கணங்கள் மறக்கும்.

tg.theeban@gmail.com

செருப்பும் சப்பாத்தும் இவன் உயரத்தை ஆறடிக்குக் கீழும் மேலுமாய்க் காட்டிக்கொண்டிருக்கும்.

எண்ணெய் வைத்து மேவிப் படியப்படிய வாரி இழுத்தாலும் ஓர் ஒழுங்கில் பல படிமங்களில் முடிச்சுருள்கள் நிமிர்ந்து நின்று டோப் வைத்த முடியோ எனும் பிரமையைத் தரும். விழி களோ பூனையின் கண்களின் சாயலில். இவனை நேர்நின்று பார்ப்போர் சுருள் தலையையும் கண்களையும் பார்த்துச் சற்று தயக்கத்துடனே பேச ஆரம்பிப்பர்.

கணிதத்தில் இவன் புள்ளிகள் எப்போதும் எண்பதுக்கும் தொண்ணூறுக்கும் இடையே.

இவனோடு பேசக்காத்திருக்கும் பெண்கள் ஏராளம். கணக் கில் சந்தேகம் கேட்பதைப்போல்த்தான் நெருங்குவார்கள்.

ஒருத்தி 'நீங்கள் போட்டிருக்கிற டீசேர்ட் வடிவா இருக்கு' என்பாள். 'ஐயையோ இது மகா பழசு. கனதோயல்களை கண்டிட்டிது.' என்பான் இவன். அவள் பக்கத்தில் வால் பிடித்து நிற்பவள் 'இல்லையே எவர்கிரீனாய்த் தெரியுது' என்பாள். 'சரி நீங்கள் கண்ணாடி போடவேண்டிய காலம் வந் திட்டுது போலை.' என்பான் இவன்.

அவர்கள் முகம் நீண்டுபோகும்.

தனஞ்செயன் நெருங்கும் பெண்களோடு இப்படித்தான் பேசு வான். பேசவரும் பெண்களுக்குள் காதல் தோன்றிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பான்.

ஆனால் அரசி, ஏதோவொரு வடிவில் அவனுக்குள் உட்புகுந்து விட்டாள். இதுக்கெல்லாம் காணரகாரியம் தேடவேணும் எண் டால் காமசூத்திரம்தான் படிக்கவேணும்.

இப்படியே எல்லாப் பெட்டையளையும் 'ஓரம்போ' சொல்லி விலத்துபவன், அரசி ஓர் இதழ் சுளிப்பைத்தானும் தன்னைப் பார்த்துச் சிந்தாளா? என்ற ஏக்கத்தை ஏந்தித் திரிந்து கொண் டிருந்தான்.

சரி, அரசிக்கு இப்படி ஒரு சீவன் அவளைச் சுவாசிக்கத் தொடங்கியிருப்பது தெரியுமா?

ஒரே வகுப்பு. அரசிக்கு அவனை நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால் நான்கு விழிகளும் நேருக்கு நேராகச் சந்தித்துக் கொண்டதில்லையே.

நினைத்து வாழ்வதிலும் அவனுக்குள் ஒரு வாடா வனப்பு!

தனஞ்செயன் தன்னைப் பற்றிய நினைப்பிலும் விடும் மூச் சிலும் சுமந்து இறக்கிவைக்க ஆவுரஞ்சிக் கற்களை தேடி ஆவலாதிப்படுவது அவளுக்கு எப்படித் தெரியும்? தெரியப் படுத்துவதற்கான வழிவகைகள் இவனுக்கும் தெரிந்திருக்க வில்லை.

இந்த விவகாரங்களில் பழத்தையும் சப்பிப் பல பிரதேசங் களில் கொட்டைகளையும் துப்பிய பலரும் அவனைச் சுற்றி திரிகிறார்கள். அவர்களுக்கு முன்னால் இவன் ஒரு கோடு கீறினால் போதும்.

புல்டோசர் போகின்ற றோட்டையே போட்டுத் தருவார்கள். தனஞ்செயன் அனைத்தையும் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டான்.

அரசிக்கு சிலவேளை வேறு ஆண் உறவுகள் இருக்குமோ? பல்கலைக்கழக வட்டத்துள் இருப்பதாகத் தெரியவில்லை. ஊரில், முன்பு படித்த கல்லூரியில் யாராவது இருப்பார் களோ? இருக்கக் கூடாதெண்டு சட்டமே!

இந்த உம்மணாமூஞ்சி வாயை திறந்தால்த்தான் ஒருவழி பிறக்கும்.

ஒரு நல்லநாளில் ஜேம்ஸ்பீரிஸ் விடுதியின் றோட்டைத் தொடும் கடைசிப்படியில் இவன் கால்வைத்தபோது அரசி சில அடி கள் முன்னால் போய்க்கொண்டிருந்தாள்.

தனஞ்செயனின் மண்டைக்குள் சடுதியாய் இரண்டு கொம்பு கள் முளைத்தன.

நாலு எட்டு வைத்தால் அவளைப் பிடித்து விடலாம்.

பிடித்து?

சிரித்ததில்லை, கதைத்ததில்லை. இவன் பெயர்கூட அவ ளுக்கு தெரியுமா என்றும் தெரியவில்லை.

'இல்லை, இப்பிடியே விட்டுக்கொண்டு போகாமல் பேசிப் பார்ப்பம். உதிலை என்ன தப்பு.'

பக்கத்தில் போனபின்தான் கால் தடதடத்தது. நாக்கு அண் ணாக்கோடு ஒட்டிக் கொண்டது.

இவனைப் பார்த்ததும் அவள் புருவங்கள் உயர்ந்தன. முகம் பிரகாசம் ஆனது. சினேகமாகச் சிரித்தாள்.

தனஞ்செயனுக்கு வெயர்த்தது. அதிகாலை வெயில்தான். சுகமான குளிர் காற்று.

அவன் நெற்றியில் அரும்பிய வேர்வை இரு பக்க கன்னகதுப் புகளிலும் வரம்பு கட்டி வழியத் தொடங்கியது.

'இந்தக் குளிரிலும் உங்களுக்கு இப்பிடி வேர்த்துத்தள்ளுதே...'

இப்ப உங்களைப் பார்த்தது, கதைக்க முயற்சிக்கிறது, உங் களையே மனசுக்குள்ளை வைச்சுக்கொண்டு இவளவு நாளும் மந்திரிச்சுக்கொண்டு திரிஞ்சது எல்லாத்தின் 'இம் பல்சின்'ரை மறுதாக்க விளைவு தான் இது.' எண்டுற உண்மை யைச் சொல்ல முடியுமா?

சொல்லலாம். இதுக்கு முதல் கொஞ்சநாளாவது பேசிப்பழகி இருந்தால்...

இப்பிடியே ஊமைக் கொத்தனா நிண்டா அரசி என்ன நினைப்பாள்? முதற் கோணல் முற்றும்வரை நீளும்.

எச்சிலை மென்று விழுங்கி, செருமிக்கொண்டு பேசுவதற் கான சொற்களைத் தேடும் முயற்சியில் உத்தரித்தபோது...

அவள், 'கணிதத்திலை எல்லா டிவிசனிலும் நீங்கதான் பெஸ்ற் எண்டு கதைக்கினம். நீங்கள்...'

பொடியன் சுதாரிச்சுக் கொண்டு இயல்புக்குத் திரும்பினான்.

'உதுகளை நம்பாதேங்கோ. கதைக்க ஒண்டும் கிடைக் காதவை இப்பிடித்தான் துரும்பை தூணாக்குவினம், மண்

ணாங்கட்டியை மரகதக் கல்லெண்டு கதை விடுவினம்...'

'சரி... நான் இனி உங்களைப்பற்றி எதைக் கேள்விப்பட்டா லும் உங்களோடை கொன்போம் பண்ணீற்று பிறகு நம்புறன். அப்ப நீங்கள் கணக்கிலை அவரேச்தான்.'

அவன் திடுக்கிட்டான்.

'சீச்சீ... அப்பிடியில்லை சுமாருக்கும் நாலு விரற்கடை மேலை எண்டு வச்சுக் கொள்ளுங்கோவன்...'

'எனக்கு உது காணும். கணக்கிலை என்ரை மார்க்ஸ் நல்லா விழுந்துகொண்டு போகுது. கிழமையிலை இரண்டு மூண்டு நாளைக்கு ஹெல்ப் பண்ணுவியளா?'

வானத்து நட்சத்திரங்கள் இறங்கிவந்து அவன் இருந்த இருட் டறையை ஒளி பூக்கச் செய்தன.

'அதிலை என்ன வித் பிளஷர்' என்று சொல்லவந்தவனின் மண்டைக்குள் இருந்த இரட்டைக் கொம்பன் விழித்துக் கொண்டான்.

'எடேய் மக்குப் பிளாஸ்திரி அவசரப்படாதே. உவளுகள் எல் லாருக்குமே ஒரு பொதுப்புத்தி இருக்கு. தங்கடை காரியா யங்கள் முடியும்வரை நல்லா வழிவாளுகள். பிறகு வழி தெரு விலை கண்டாலும் காணாத மாதிரி போயிருவாளுகள்.'

மனசும் ஒத்தூதியது. ஓம்... ஓம் சீப்பாய்ப் போகப்பிடாது. கொஞ்சம் விட்டுப்பிடிப்பம். பட்சி கைக்கெட்டுற தொலைவி லைதானே நிக்குது. எங்கை பறக்கப் போகுது.

'எனக்கு சரியான டைற் ஷெடுல். யோசிச்சு சொல்லுறனே...'

'ஐயையோ... ரெண்டு கிழமையிலை மிட்டேர்ம் வருகுது... அதுக்குள்ளை... பிளீஸ்...'

அவள் பேசியதைக் கேட்காததுபோல் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு, அடடா... வித்தியாவுக்கு இப்ப வாறன் எண்டு சொன்னனான். வித்தியா ஏதோ விளங்கேல்லை எண்டு சொன்னவள். போய் சொல்லிக் குடுக்கவேணும். பிறகு சந்திப்பம். வரட்டே... பய்... சீயூ'

அவசரத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அரசி வகுப்புக்கு வந்தநாள் முதலே தனஞ்செயனைக் கவனிக்க ஆரம்பித்தவள். அவனுடைய கணித ஆற்றலும் மற்றைய பெண்களை ஒதுக்கிற லாவண்யமும் அவளை ரசிக்கத் தூண்டின. லொல்லும் புல்லுமாய்த் திரிகிற பெடி யன்களில் இருந்து இவன் வேறுபட்டவனாகத் தெரிந்தான்.

அவன் நோக்காக் கணங்களில் எல்லாம் அவனை நோக்கு பவள்தான் அரசி. இதை அவசரப்பட்டுக் காதல் என்று கட்டி யம் கூறமுடியாது. காதலை நோக்கிய படிகளில் ஒன்றாக இருக்கலாம்.

இன்று அவனாக வந்தான். பேச முயன்றான், குழப்பிவிட்டுப் போய்விட்டான்.

யார் இந்த வித்தியா?

அரசியின்ரை வகுப்பிலை இப்பிடி யாரும் இல்லை. மூளை யின்ரை இண்டு இடுக்குகளை கிண்டினாலும் அவளுக்கு பிடிபடுவதாயில்லை. தேவை இல்லாமல் ஏன் தலையைப் பிசைவான்? அவனையே பிடிச்சுக் கேட்டாப் போகுது.

ஒருவேளை அவனுக்கு வேறை யாரோடும்...? உள் மனசு உச்சியை பிராண்டிற்று. இருக்கக் கூடாது எண்டு சட்டமே.

இருக்காது. எல்லாப் பெட்டையளோடும் இப்பிடித்தானே கதைக்கிறான். அவனாப் போய் வலியப் பேசுறதில்லையே. இவளுகள்தான் பிலாச்சுளையிலை இலையான்கள் மொய்க் கிற மாதிரி.

அரசி தன்னைத் தானே தோண்டினாள். அவளுக்குள் இருந்த ஏதோவொன்று, தனஞ்செயன் வந்து பேசிய அக்க ணங்களில் விசுபரூபம் எடுத்துவிட்டது. ஓம்... அவனை எனக்குப் பிடிச்சிருக்குது. இதை இப்பிடியே மனசுக்குள்ளை பொத்தி மூடி அடைகாக்க ஏலாது.

உள்மனம் அவளை விசாரணைக் கூண்டில் ஏற்றியது.

கிழிச்சாய்... கண்ணாடியிலை உன்னைப் பாக்கிறாய்தானே. என்னத்திலை எடுப்பாய்த் தெரியிறாய்? சொல்லு பார்ப்பம்.

ஒண்டு. உன்ரை தலைமயிர் கொஞ்சம் நீட்டு... பறவா யில்லை. அதை ரசிக்க விடாமல் கெடுக்கும் ஏறு நெத்தி. கிள்ளிப் பிடிக்க ஒரு சிறங்கை சதை இல்லாத உடம்பு.

அடியேய் உன்ரை வடிவான கன்னக் கதுப்பிலை ஒரு புண் வந்து கவனிக்காமல் விட்டால் சீழ் கட்டி சினி மணக்குமே? அப்ப எங்கை போகுமெடி உன்ரை அழகு.

அழகு என்றது பராமரிப்பிலும் ஒருத்தற்ரை பார்வையிலும் விழித்திரையிலை விழுந்து இதய நாளங்களிலை ஏற்ப டுத்தும் தாக்கத்திலும்தான் தங்கியிருக்கு.

பெண்களின்ரை கொண்டையிலை தேன்சிந்தும் முல்லையும், மல்லிகையும், நீலோற்பலமும் மட்டும்தான் சூடப்படும் எண் டில்லை. பூ நாகம் சஞ்சரிக்கும் தாளம் பூவும் சொருகப்படுவ துண்டு. இந்த தாழம் பூ தான் நாட்கணக்கில் மணம் வீசிக் கொண்டிருக்கும். தாழம்பூ சூடி நாகம் தீண்டிய செய்திகள் நீ கேள்விப்பட்டதுண்டா?

நீங்கள் சொக்கி நிக்கிற வடிவுகளெல்லாம் வயது போகப் போக வத்திப் போயிடும். வாலிபத்தை உங்கடை மார்புக் கச்சிலோ, கழிசானுக்குள்ளோ பொத்தி வச்சிருக்க ஏலாது.

சரியடி ஆத்தை. அவனுக்கும் உன்னிலை ஏதோ 'இது' இருக்கிற மாதிரித்தான் தெரியுது. ஆனா கரண்டி பண்ண ஏலாது. அவனோட பேசிப்பார். ஒரு சூட்சுமம் சொல்லுறன், கேள். அவன்ரை கண்களை ஊடுருவிப் பார்த்துக் கதை. ஏனெண்டா, அவன் உதடுகள் பொய் உரைக்கலாம். கண் கள் உண்மையைக் காட்டிக் கொடுத்திடும்.



kandasamy.a@thaiveedu.com

(அன்ரன் செக்கோவ் உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர். காலம் 1860 - 1904. நாடகங்களும் சிறுகதைகளும் எழுதியவர். புகழ் பெற்ற நான்கு செவ்வியல் நாடகங்களும் பல சிறுகதை களும், குறுநாவல்களும், பயணக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவருடைய சிறுகதைகளை இலக்கிய விமர்சகர்களும் வாசகர்களும் உயர்ந்த இடத்தில் வைத்துள்ளனர். ஹென்றிக் இப்சன், ஓகஸ்ற் ஸ்றின்பேர்க் ஆகியோருடன் இவரையும் சேர்த்து நவீன நாடகத்தின் முக்கியமான மூன்று பேர்கள் என்றும் கணிக்கிறார்கள். இவர் தொழில் ரீதியாக ஒரு மருத்துவர். 'மருத்துவம் என்னுடைய சட்டரீதியான மனைவி. இலக்கியம் என் வைப்பாட்டி,' என்று ஒரு முறைசொன்னார்.

இவருடைய முக்கியமான நாடகங்கள் The Seagull, Three Sisters, The Cherry Orchard, Uncle Vanya. கலைஞரின் பங்குகேள்வி கேட்பதே அன்றி பதில் சொல்வதல்ல, என்று ஒரு முறை சொன்னார், அவருடைய சில கதைகள் புரியவில்லை என்றுகேட்டதற்கு பதிலாக.

அவருடைய தந்தை விடுதலை செய்யப்பட்ட அடிமையின் மகன். அவர் மளிகைக் கடை வைத்திருந்தார். தாய் நன்றாகக் கதைசொல்வார். நாங்கள் தந்தையிடமிருந்து திறமைகளையும் தாயிடமிருந்து ஆன்மாவையும் பெற்றோம் என்றார். தந்தை கண்டிப்பானவராக இருந்திருக்கிறார். செக்கோவ் புதுமைப்பித்தனையும் அவர் தந்தையையும் இவ்விடத்தில் நினைவில் கொண்டு வருகிறார். செக்கோவைப் போல புதுமைப்பித்தனும் இளமையிலேயே காசநோயால் பாதிக்கப்பட்டு உயிர் நீத்தார். தந்தையுடனான உறவில் விரிசல் இருந்தது.)






# லொட்டரி ரிக்கற்

– அன்ரன் செக்கோவ்

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

இவான் டிமிற்றிச் ஒரு மத்திய வகுப்பு மனிதன். அவன் தன் குடும்பத்துடன் வருடத்திற்கு பன்னிரண்டாயிரம் வருமானத்தில் வாழ்ந்துவந்தான். அவன் தன் வாழ்க்கையை நிம்மதியாகவும் மிகவும் திருப்தியாக போதும் என்ற மனதுடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் இரவுணவு உண்ட பின் சோபாவில் இருந்து அன்றைய புதினத்தாளை வாசித்துக் கொண்டிருந்தான்.

‘நான் இன்றைய புதினத்தாளைப் பார்க்க மறந்து போனேன்,’ என்றாள் மனைவி அவனிடம், மேசையைச் சுத்தம் செய்து கொண்டு.

‘பத்திரிகையில் லொட்டரி ரிக்கற் முடிவுகள் வந்திருக்கிறதா என்று பார்த்துச் சொல்லுங்கள்,’ என்றாள்.

‘ஓம், வந்திருக்கிறது. ஆனால் நீ எடுத்த ரிக்கற் காலாவதியாகவில்லையா ?’ என்றான் இவான் டிமிற்றிச்.

‘இல்லை, நான் இதைக் கடந்த செவ்வாய்க்கிழமைதான் எடுத்தேன்,’ என்றாள்.

‘என்ன இலக்கம் ?’

‘9499 வரிசையில் இலக்கம் 26.’

‘சரி... பார்க்கிறேன். 9499 ம் 26 ம்.’

இவான் டிமிற்றிச் லொட்டரி விழும் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை அற்றவன். பொதுவாக அவன் அந்த ரிக்கற் இலக்கங்களைப் பார்க்க இசைந்திருக்கமாட்டான். ஆனால் அன்று அவனுக்கு வேறொரு வேலையும் இல்லாதபடியாலும் புதினத்தாள் அவன் முன்னால் விரித்திரிந்தபடியாலும் தன் விரலை இலக்கங்கள் உள்ள பத்தியில் கீழே இழுத்துக் கொண்டு போனான். உடனடியாகவே, அவனுடைய சந்தேகத்தைக் கேலிசெய்வதுபோல மேலே இருந்து இரண்டாவது வரிசையிலேயே 9499 என்ற இலக்கம் அவன் கண்களில் பட்டது! தன் கண்களையே நம்பமுடியாமல் பத்திரிகையை தன் மடியில் நழுவவிட்டுவிட்டான். மிச்ச இலக்கங்களைப் பார்க்கவில்லை. அவனுடைய உடம்பில் யாரோ குளிர்த் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தது போலவும் அடிவயிறு இணக்கமான குளிர்ச்சியால் சில்லிட்டுச் சிலிர்த்தது போலவும் மனம் இனிமையாக இருந்தது!

‘மாஷா, 9499 இருக்கிறது!’ என்றான் வெற்றுக் குரலில்.

அவனுடைய திகைத்துப்போன பீதியடைந்த முகத்தை அவள் பார்த்து, உண்மையில் அவன் பகிடிவிடவில்லை என்பதை உணர்ந்துகொண்டாள்.

‘9499 ஆ ?’ என்று கேட்டாள், வெளிறிய முகத்துடன், கையில் மடித்து வைத்திருந்த மேசைவிரிப்பு மேசை மேல் விழ.

‘ஓம், ஓம்... உண்மையில் அது இருக்கிறது!’ என்றான்.

‘ரிக்கற்றின் இலக்கங்களுமா ?’

‘ஓ, இருக்கிறது! ரிக்கற்றின் இலக்கங்களும் இருக்கின்றன. ஒரு நிமிசம்... நில்! இல்லை, எங்கள் வரிசை இருக்கிறது! உனக்கு விளங்கிறதா...’

தன் மனைவியைப் பார்த்து இவான் டிமிற்றிச் பெரிதாக, உணர்ச்சியற்ற ஒரு சிரிப்பை உதிர்த்தான். ஒரு குழந்தைக்கு பிரகாசமான ஒரு பொருளைக் காட்டியதுபோல. மனைவியும் புன்னகைத்தாள். அவனுக்கும் அவளுக்கும் அவன் ரிக்கற்றின் வரிசையை மட்டும் சொன்னது மகிழ்ச்சியாக இருந்தது. வெற்றி பெற்ற ரிக்கற்றின் மீதி இலக்கங்களை அவன் பார்க்க முயலவில்லை. அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்து சித்திரவதை செய்வதும் ஆவல் காட்டி ஏங்க வைப்பதும் ஒருவகையான இனிமையும் புல்லரிப்பையும் தரும் விசயம் தான்!

‘எங்கள் வரிசைதான், என்றான் இவான் டிமிற்றிச், நீண்ட அமைதிக்குப் பின். ‘அப்படியென்றால் நாம் வெல்வதற்கு பெரும் சாத்தியக்கூறு இருக்கிறது. அதுவொரு சாத்தியக்கூறு தான். ஆனால் இருக்கிறது!’

‘சரி. இதோபார்.’

‘கொஞ்சம் பொறு. நான் ஏமாருவதற்கு அதிக நேரம் இருக்கிறது. அது மேலிருந்து கீழே இரண்டாவது வரிசையில் இருக்கிறது. அதனால் அதன் பரிசுத் தொகை எழுபத்தை யாயிரம். அது பணம் அல்ல. அது அதிகாரம். முதலீடு! ஒரு நிமிசத்தில் பட்டியலைப் பார்க்கிறேன், பொறு. பார் இலக்கம் 26! சரி. நாம் இதில் உண்மையில் வென்று விட்டால் என்ன நடக்கும் என்று கேட்கிறேன் ?’

கணவனும் மனைவியும் சிரிக்கத் தொடங்கினார்கள். ஒருவரை ஒருவர் அமைதியாக உறுத்துப் பார்த்துக் கொண்டார்கள். வெல்வதில் சாத்தியக்கூறு இருப்பதில் அவர்கள் திகைத்துப் போனார்கள். அந்த எழுபத்தையாயிரம் எதற்குத் தேவை, எதைவாங்கவேண்டும், எங்கே பயணம் செய்யவேண்டும் என்று அவர்கள் முன்னரே திட்டமிடவில்லை, கனவும் கண்டிருக்கவில்லை. அவர்கள் 9499 என்ற எண்களையும் 75,000 என்ற எண்களையுமே நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவற்றை கற்பனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கிடைக்க இருக்கும் மகிழ்ச்சியைப் பற்றி அவர்கள் எப்படியும் நினைக்கவில்லை.

இவான் டிமிற்றிச் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு அறையில் ஒரு மூலையிலிருந்து மற்ற மூலைக்குப் பலமுறை நடந்தான். அதன் பின் முதல் தோன்றிய எண்ணத்திலிருந்து விடுபட்டு, சற்றுக் கனவு காணத் தொடங்கினான்.

‘நாங்கள் இதில் வென்றுவிட்டோம் என்றால், அது புதியதொரு வாழ்க்கையாக அமைந்துவிடும். ரிக்கற் உன்னுடையது, ஆனால் அது என்னுடையதாக இருந்திருந்தால் முதலில் நான் அதில் இருபத்தையாயிரத்தை பண்ணை ஒன்றை வாங்கி ஒரு ஆதனத்தில் முதலிடுவேன். பத்தாயிரத்தை அதற்கான செலவுகளிலும், தளவாடங்கள் வாங்குவதிலும்... பயணத்திலும்... உள்ள கடன்களை அடைப்பதிலும்... செலவழிப்பேன். மற்ற நாற்பதாயிரத்தை வங்கியில் போட்டு வைப்பேன். அதிலிருந்து வட்டிவரும்,’ என்றான்.

‘ஓம், ஒரு பண்ணை, அது நல்ல விசயம்.’ தன் மடியில் கைகளை வைத்துக்கொண்டு நாற்காலியில் இருந்து கொண்டிருந்தாள். ‘துளா அல்லது ஒறியோல் மாநிலத்தில் அதை வாங்கலாம்... எங்களுக்கு ஒரு கோடைகால இல்லம் தேவையில்லை. அத்துடன், நாங்கள் வாங்கும் பண்ணை எப்பொழுதும் வருமானத்தையும் கொண்டுவரும்.’

அவனுடைய கற்பனையில் பல எண்ணங்கள் நெருக்கியடித் துக்கொண்டு வந்தன. ஒவ்வொன்றும் முன்னதிலும் பார்க்கக் கனிவானதாகவும் கவித்துவமானதாகவும் இருந்தது. அந்த எண்ணங்கள் எல்லாவற்றிலும் நன்றாக உணவுண்டவனாக, சாந்தமானவனாக, ஆரோக்கியமானவனாக, வெதுவெதுப் பானவனாக தன்னை உணர்ந்துகொண்டான்! ஐசைப்போல குளிர்ந்த கோடைகால சூப்பைக் குடித்த பின், சுடுமணலில், நீரோடை ஒன்றின் அருகாக, அல்லது ஒரு தோட்டத்தில் எலுமிச்சை மரத்தின் கீழ் படுத்திருந்தான்... மிக வெப்பமாக இருந்தது... அவனுடைய சின்னஞ்சிறிய மகனும் மகளும் அவனுக்குப் பக்கத்தில் தவழ்ந்தும், மணலைக் கிண்டிக் கொண்டும், புல்தரையில் லேடிபேட் வண்டுகளைப் பிடித்துக்கொண்டும் இருந்தார்கள். அவன் இனிமையான மயக்கத்தில் சிறுதுயில் கொண்டுகொண்டிருந்தான். எதையுமே சிந்திக்கவில்லை. இன்றோ நாளையோ அடுத்த நாளோ அலுவலகத்திற்குச் செல்லத் தேவையில்லை என்று நிம்மதியாகக் கிடந்தான். ஒன்றும் செய்யாமல் சும்மா கிடக்க மனமில்லாது, வைக்கோல் காயப்போட்ட வயலுக்குச் சென்றான். காட்டுக்கு காளான் பிடுங்கச் சென்றான். சிறு விவசாயிகள் வலையால் மீன் பிடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சூரியன் மறைந்தபோது ஒரு துவாயையும் சவர்க்காரத்தையும் எடுத்துக்கொண்டு குளியல் கொட்டிலுக்கு ஆறுதலாக நடந்து சென்றான். அங்கே, சாவகாசமாக உடுப்புகளைக் கழற்றிவைத்துவிட்டு, தன் நெஞ்சை கைகளால் மெதுவாகத் தடவிவிட்ட பின் தண்ணீருக்குள் இறங்கினான். நீரில் ஒளி புகா சவர்க்கார சுழல்களின் அருகாமையில், சிறிய சிறிய மீன்கள் அங்குமிங்கும் ஓடித் திரிந்தன. பச்சை நிற நீர்க்களைகள் தங்கள் தலைகளை ஆட்டின. குளித்த பின் தடித்த பால் போட்ட தேநீர் குடித்தான். பால் உருண்டைகள் உண்டான்... மாலை நடை போனான். அயலவர்களுடன் சீட்டாடினான்.

ஓம், பண்ணை ஒன்று வாங்குவது நல்லதுதான்,’ என்றாள் மனைவி. அவளும் கனவுகொண்டிருந்தாள் என்பது அவளுடைய முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

இவான் டிமிற்றிச் மழையுடன் கூடிய, குளிரான மாலைப் பொழுதுகளையும் சிசிலித் தீவில் உள்ள சென்ற் மாட்டின் கோடை காலத்தையும் இலையுதிர் காலத்தையும் கற்பனை செய்தான். அந்தப் பருவகாலத்தில் தோட்டத்திலும், ஆற்றுக்குப் பக்கத்திலும் நீண்ட நடைப்பயணத்திற்குச் செல்லவேண்டும். அப்படிப் போனால் தான் ஓய்வாக இருக்கலாம். அதன் பின் ஒரு பெரிய கிளாஸ் வொட்கா குடித்து, உப்புப் போட்ட காளானும் அல்லது மிளகு சேர்க்கப்பட்ட வெள்ளரிக்காயும் சாப்பிட்டுவிட்டு, பின் இன்னொரு பெரிய வொட்கா குடித்து... அப்போது குழந்தைகள் குசினித் தோட்டத்தில் பிடுங்கிய புதிய மண்ணுடன் கூடிய புதுவாசனையுடன் ஒரு கறற்றும், முள்ளங்கியும் கொண்டு ஓடிவருவார்கள்... பிறகு சோபாவில் நீட்டிநிமிர்ந்து படுத்திருக்கலாம். ஆறுதலாக படங்கள் போட்ட ஒரு சஞ்சிகையின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு கிடக்கலாம். அல்லது, சஞ்சிகையால் முகத்தை மூடிக்கொண்டு, சட்டையின் மேலங்கி பொத்தான்களை கழற்றிவிட்டுக் கண்ணுறங்கலாம்.

சென்ற் மாட்டினில் மேகம் சூழ்ந்த முகில் மூடிய, இருண்ட காலநிலை வந்தது. இரவும் பகலும் மழை பெய்தது. இலையற்ற மரங்கள் அழுதன. காற்று ஈரப்பதத்துடனும் குளிராகவும் இருந்தது. நாய்கள், குதிரைகள், கோழிகள், எல்லாம் நனைந்து, சோர்ந்து போய், குனிந்து நின்றன. நடப்பதற்கு ஒரு இடமும் இருக்கவில்லை. ஒரேயடியாக வெளியே போகாமல் இருக்கவேண்டியிருந்தது. சாம்பல் நிற யன்னலை பார்த்துக்கொண்டு, அறைக்குள் மேலும் கீழும் நடந்துகொண்டிருக்க வேண்டியிருந்தது. அது கவர்ச்சியற்ற தொரு காட்சி!

இவான் டிமிற்றிச் நின்று தன் மனைவியைப் பார்த்தான்.

‘நான் இப்போது வெளிநாட்டில் இருக்கவேண்டியவன், மாஷா,’ என்றான்.

இந்தப் பின் இலையுதிர் காலத்தில் வெளிநாட்டுக்குப் போய் பிரான்சின் தென்பகுதிலோ... இத்தாலியிலோ... இந்தியாவிலோ இருக்கவேண்டும்! என்று சிந்திக்கத் தொடங்கினான்.

‘நானும் வெளிநாட்டுக்குப் போக எண்ணுகிறேன்,’ என்றாள் மனைவியும். ‘ஆனால் ரிக்கெற்றின் இலக்கத்தைத் திரும்பவும் பார்க்கிறீர்களா ?’

‘பொறு, பொறு...’

அறையில் சுற்றிச் சுற்றி நடந்து சிந்தித்துக்கொண்டே இருந்தான். அந்த நேரத்தில் அவன் மனதில், அவள் உண்மையாகவேவெளிநாட்டுக்குப் போனாள் என்றால் என்ன நடக்கும் ? பெண்கள் தனியாகப் பயணம் செய்வது மகிழ்ச்சியான ஒரு விஷயம்தான். எந்த விஷயத்தையும் எளிதாக எடுக்கும் கவனமில்லாத பெண்களுடன் அதுவும் நிகழ்காலத்தில் வாழும் பெண்களுடன், பயணம் முழுவதும் பிள்ளைகளைத் தவிர வேறொன்றையும் பேசாத, எண்ணாத, ஒவ்வொரு சதத்தைப் பற்றி நினைத்து, பெருமூச்சுவிட்டு, திகைத்து நடுங்கும் பெண்களுடன் பயணம் செய்யாமல் இருப்பதே நல்லது. இவான் டிமிற்றிச் பெருந்தொகையான பொதிகள், கூடைகள், பைகளுடன் தன் மனைவி ரயிலில் போவதைப் பற்றிக் கற்பனை செய்தான். அவள் ஏதோ ஒன்றைப் பற்றி நினைத்து கவலைப்படுவாள். ரயில் பயணம் அவளுக்குத் தலையிடியைக் கொண்டுவந்திருக்கிறது என்பாள். அதிக பணத்தை செலவழித்துவிட்டாள் என்பாள்... ரயில் நிலையங்களில் சுடுதண்ணீருக்காகவும், பாணும் பட்டரும் வாங்கவும் தொடர்ந்து ஓடவேண்டியிருக்கும்... அவள் இரவுணவைச் சாப்பிடமாட்டாள். அது அங்கே அதிகம் கிடைக்காது...

‘அவள் ஒவ்வொரு சதத்திற்காகவும் என்னைக் கறுவிக் கொண்டிருப்பாள்,’ என்று நினைத்தான். மனைவியை ஓரக்

கண்ணால் பார்த்தான். லொட்டரி ரிக்கற் அவளுடையது. என்னுடையதல்ல! அதைவிட, அவள் வெளிநாட்டிற்குச் செல்வதால் என்ன பயன்? அவளுக்கு அங்கே என்ன தேவை இருக்கிறது? ஒரு ஹோட்டலில் தன்னை அடைத்துக் கொண்டு, என்னையும் தன் பார்வையிலிருந்து அகலவிடாமல் கண்காணித்துக் கொண்டிருப்பாள்... அது எனக்குத் தெரியும்!

அவன் தன் வாழ்க்கையில் முதல் முதலாகத் தன் மனைவியை நன்றாகப் பார்த்தான். வயதாகிவிட்டாள் என்றும் அழகற்ற வளாகவும் ஆகிவிட்டாள் என்றும் மனதில் எண்ணிக் கொண்டான். அத்துடன் அவள் செய்த சமையலின் மணம் அவளுடைய உடலில் முற்றாகவே தங்கிவிட்டது என்றும் நினைத்தான். அதேநேரம் தான் இன்னும் இளமையாகவும் புத்துணர்ச்சியுடனும் நலமாகவும் இருக்கிறான் என்றும் நினைத்துக்கொண்டான். இன்னொருமுறை திரும்பவும் மணம் முடிக்கக் கூடியவனாக இருக்கிறான் என்றும் நினைத்தான்.

'அவை அனைத்தும் முட்டாள்த்தனமான எண்ணங்கள்,' என்றும் எண்ணினான். 'ஆனால் அவள் ஏன் வெளிநாடு களுக்குப் போகிறாள்? அங்கே என்னத்தைக் காணப் போகிறாள், அது எனக்குப் புரியவில்லை. இருந்தும் அவள் போகவேபோகிறாள்... அது எனக்குத் தெரியும். உண்மையில் அவளுக்கு எல்லா இடமுமே ஒன்றுதான். நேப்பிள்ஸ் ஆக இருக்கலாம், கிளின் ஆக இருக்கலாம். அவள் என்னை ஒன்றும் செய்யவிடமாட்டாள். அவளில் தங்கித்தான் நான் இருக்கவேண்டியிருக்கும். ஒரு சாதாரண பெண் போல அவளுக்கும் பணம் கிடைத்தவுடன் எப்படி அதைப் பெட்டியில் பூட்டிவைத்துவிடுவாள் என்று கற்பனைசெய்து கொண்டான்... தன் உறவினரைக் கவனித்துக்கொண்டு என்னிடம் ஒவ்வொரு சதத்திற்கும் கறுவிக் கொள்வாள்.'

இவான் டிமிற்றிச் அவளுடைய உறவினரைப் பற்றி எண்ணினான். அவளுடைய அதிர்ஷ்டங்கெட்ட சகோரதரர் களும் சகோதரிகளும் மாமன்மாரும் அவள் லொட்டரியில் பணம் வென்றுவிட்டாள் என்று கேள்விப்பட்டவுடன் பிச்சைக் காரர்களைப் போலமூக்கால் அழுதுகொண்டும் பொய்யாகப் புகழ்ந்துகொண்டும், எண்ணெய் ஒழுகும் போலிப் புன்னகையுடன் தவழ்ந்துகொண்டுதங்களிடம் வருவார்கள். அதிர்ஷ்டம் கெட்ட வெறுக்கத்தக்க மனிதர்கள்! அவர்களுக்கு எதையாவது கொடுத்தால் மேலும் கேட்பார்கள். அவர்களுக்குக் கொடுக்க மறுத்தால் எங்களைச் சபிப்பார்கள், புறம்பேசுவார்கள், எங்களுக்கு எல்லா வகையான சாபமும் போடுவார்கள்.

இவான் டிமிற்றிச்சுக்கு தனது இரண்டு உறவினரைப் பற்றிய ஞாபகம் வந்தது. அவர்களின் முகங்களும் ஞாபகத்திற்கு வந்தது. அவற்றில் அவர்களிடம் முற்காலத்தில் இருந்த சார்பின்மை தெரிந்தது. இப்பொழுது அவர்களின் முகங்கள் பார்ப்பதற்கு வெறுப்பூட்டுவதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் இருந்தன.

'அவர்கள் அப்படியான நச்சுப் பாம்புகள்.' என்று நினைத்தான்.

அவனுடைய மனைவியின் முகமும் கூட வெறுக்கத்தக்க தாகவும் வெறுப்பூட்டுவதாகவும் தோன்றியது. அவளுக்கு எதிராகவும்கோபம் அவன் இதயத்தில் பொங்கியது. அவளைப் பற்றி தீய நோக்கத்துடன் மனம் எண்ணியது.

'அவளுக்கு காசைப்பற்றி ஒன்றும் தெரியாது. அதனால் அவள் கஞ்சத்தனமாக இருப்பாள். அவள் லொட்டரியை வென்றால் எனக்கு நூறு றூபிள்களைத் தந்துவிட்டு மிச்சத்தைப் பெட்டியில் பூட்டிவைத்துவிடுவாள்.'

தன் மனைவியைப் பார்த்தான். புன்சிரிப்புடன் அல்ல. வெறுப்புடன். அவள் அவனைச் சாடையாகப் பார்த்தாள். வெறுப்புடனும் கோபத்துடனும். அவளுக்கும் பகல் கனவுகள் இருந்தன. சொந்தத் திட்டங்கள் இருந்தன. சொந்தச் சிந்தனைகள் இருந்தன. அவளுடைய கணவனின் கனவுகள் எவை என்று அவளுக்குத் துல்லியமாகத் தெரியும். அவளுடைய லொட்டரிப் பணத்தை யார் முதலில் பிடுங்கிக் கொள்வார்கள் என்பதும் அவளுக்குத் தெரியும்.

'மற்றவர்களுடைய செலவில் கனவு காண்பது மிகவும் நல்ல துதான்!' அதைத்தான் அவள் கண்கள் வெளிப்படுத்தின. 'அதைச் செய்யத் துணியாதே!' எனச் சொல்ல நினைத்தாள்.

அவன் அவளுடைய பார்வையிலிருந்தே அதைப் புரிந்து கொண்டான். அவன் நெஞ்சில் திரும்பவும் வெறுப்பு கிளறத் துவங்கியது. தன் மனைவியை எரிச்சல்படவைப்பதற்காக அவளை வேகமாகப் பார்த்துவிட்டு, அவளைப் பழிவாங்கு வதற்காக நாளிதழில் நாலாம் பக்கத்தை வெற்றிப் பிரமிதத் துடன் உரத்துவாசித்தான்.

'வரிசை 9499, இலக்கம் 46! 26 அல்ல,' என்றான்.

வெறுப்பும் நம்பிக்கையும் இரண்டும் உடனடியாக மறைந்து விட்டன. இவான் டிமிற்றிச்சிக்கும் அவனுடைய மனைவிக்கும் அவர்கள் இருந்த அறைகள் இருட்டாகவும் சிறியதாகவும் கூரை தாழ்ந்ததாகவும் தெரிந்தன. அவர்கள் உண்ட இரவுணவு அவர்களுக்கு எந்த போஷாக்கையும் அளிக்காத தாகவும் வயிற்றில் பாரமாகவும் இருந்தது. மாலைப் பொழுதுகள் நீண்டதாக சலிப்பூட்டுகிறதாக இருந்தன...

'நாசமாப் போக இதன் அர்த்தமென்ன?' என்றான் இவான் டிமிற்றிச் கடுகடுத்துக் கொண்டே. 'ஒருத்தன் எங்கெல்லாம் கால் வைக்கிறானோ அங்கே பத்திரிகைத் துண்டுகளும் துணுக்குகளும். அறைகள் எந்தக் காலத்திலும் கூட்டித் துப்புரவு செய்யப்படவில்லை! அறையை விட்டு எல்லோரும் வெளியேற வேண்டியிருக்கும் என்னுடைய ஆன்மாவை மீளாநரகம் எடுத்துக் கொள்ளட்டும்! முதலாவதாகக் காணும் புல்லிமரத்தில் நான் தூங்கிச் சாகப் போகிறேன்!'

*(புல்லிமரம் - அஸ்பன் மரம் - பலஆன்மீகக் குறியீடுகளைக் குறிப்பது)*



mahalingam.k@thaiveedu.com

# ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

## இணையவழிக் கலந்துரையாடல்

தலைப்பு

## நமது அன்றாடத் தமிழ் மொழிப் பயன்பாட்டில் திருத்திக்கொள்ளப்படவேண்டிய பிழைகள்



உரை நிகழ்த்துபவர்

**பேராசிரியர் இல. சுந்தரம்**

**21 நவம்பர் 2025**
வெள்ளிக்கிழமை

கனடா (ரொறன்ரோ)
இரவு
8:00-10:00
மணி

**22 நவம்பர் 2025**
சனிக்கிழமை

இங்கிலாந்து (இலண்டன்)
காலை
1:00-3:00
மணி

இலங்கை
இந்தியா
காலை
6:30-8:30
மணி

அவுஸ்திரேலியா (சிட்னி)
காலை
12:00-2:00
மணி

+1 (416) 822 - 6316
www.torontotamilsangam.ca
torontotamilsangam@gmail.com

zoom
ID: 84 77 72 57 16 2
Passcode: 55 42 68

# வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
# VASANTHAM TAMIL WELLNESS CENTRE

*PRESENTS*

## சமூக உளவளம் பேணும் தொடர் - 103
## Psychosocial Educational Series-103

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

**03 November 2025 (Monday)**
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 11:00 pm - 1:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

**Zoom ID: 918 584 6813**
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588



## சிறுவர் உளத்தைப் பண்படுத்துவோம்
## Mental Health Concerns with Tamil Children

**Vibusha Krishnantharajah**
Supporting Adolescent Mental Health

## சமூகநீதி பற்றிய கல்விக்கான உதவித்திட்டம்
## Scholarships to Study in Social Justice



**Janaki Balakrishnan, M.A.Sc., P.Eng.**
Retired Professional Engineer and Community and Former Political Activist



**Yuwetha Srithathaathirreyanesan, Bsc in IT**
Managing Director
Yuthies Designers (PVT) LTD

ஒவ்வொரு முதலாம் மூன்றாம் திங்கட்கிழமைகளில் எங்களுடைய சூம் தொடரில் இணைந்துகொள்ளுங்கள்

**Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!**

Join us via zoom: CLICK HERE or go to link below in the email



Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பளவுச் சேவை வழங்கப்படும்

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

*We've Moved*
*Our New Address*

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK



MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
RMG
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR SUPER VISA
100% REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
Life 100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE MORTGAGE INC.
Rambo Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9855
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity, Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Patricia Peter BBM
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE MORTGAGE INC.
Kethes Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

